வெள்ளிக்கிழமையில் குளித்து தூயவுடை யணிந்து பள்ளியில் போய் குத்பா தொழுகயின் துடங்கி நாள் ஒன்றுக்கு 200-தரம் ஓதினால் வலுப்பமாகிய எந்த கருமத்தை நாடி ஓதினாலே அக்கருமம் ஹாஸிலாகும். இன்னும் 4441 தரம் நாள் ஒன்றிக்கு ஓதி இப்படி 40 நாள் ஓதி முடித்து அப்பால் முன் சொன்ன முறைப்போல் செய்து குத்பா தொழுதபின் நல்ல நிய்யத்தோடு 200 தரம் ஓதினால் ஹாஜத்து நிறைவேறும். கல்குக ளெல்லாம் வசப்படுவார்கள், அதின் ஷர்த்துகளில் ஏதேனும் பிணகினால் அமல் பணாதாய்விடும்.

4-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்மாகிறது அய்யூபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இதை ஓதுவது கொண்டு பாரக்காகவும் 3 முவக்கல் வெளியா யிற்று. அதாவது அரிகியால், ஸைபதூயால், ஹமயியால் ஆக இம்மூன்றுமாம்.

பிரயோஜனங்களாவது.

ஹாஜத்து நிறைவேறல், முஹப்பத்து உண்டாகுதல், யாதா மொருவன் கெட்டகுணம் கெட்ட நடவடிக்கை உடையவனு யிருந்து அதை நீக்கி நன்னடத்தையிலாக நாடுகில் இந்த இஸ்மை குங்குமம் கஸ்தூரி கொண்டு வெள்ளைபட்டுத் துண்டில் எழுதி அவன் பேரும் அவன் தாய் பேரும் கூடஎழுதி அவன் இருக்கும் தலத்தில் புதைக்கவும் அல்லது மதிலில் மறைக்கவும், இடமும் எழுதகிறவனும் அப்புரவுடன் இருப்பது ஷர்த்து, அல்லாவிடில் ஹலாக்கை பயப்படவும். ஆனதால் ஷர்த்துகளோடும் செய்தால்,

கெட்ட குணம், கெட்ட நடவடிக்கை எல்லாம் நீங்கி நற்குணம் நன்னடவடிக்கைகளை அல்லாஹுத் தஆலா பதலாக்கி வைப்பான்.

இன்னும் ஒவ்வொரு இராவில் 13000 தரம் 40 நாள் ஷர்த்தோடும் கூடி ஓதினால் ஹாலுடைய நாவு கொண்டு எல்லா வஸ்துகளும் அவனோடு பேசும். சிர்றுகளின் பேரில் உதயமாய்ப் பார்ப்பான். இனி மக்ஷூக்கு முஹப்பத்தாக இருந்தால் உடையும், ஜடலமும் திப்புரவாய் வலதுகையில் எழுதி அந்த மஹ்பூபின் முதுகில் கைபடும் படியாய் முஆனகா செய்தால் உடனே முஹப்பத்தாவான். எவரையும் பிரிந்துபாருன், குஷ்ட முதலிய ரோகஸ்தனைப் பார்த்தால் அது தீரும் (இன்ஷா அல்லாஹு.)

5-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்மாகிறது நபி கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இதை ஓதினதால் 3 மூவக்கல் வெளியாயிற்று. அதுகளாவது ரீஷியால், திக்ரியால், கத்பக், என்னும் இம்மூன்றுமாம்.

பிரயோஜனங்களாவது.

ஹாஜத்து நிறைவேறல், செத்தகல்பு பிழைத்தல், வியாதிகள் தீருதல் உண்டாம், வியாழக்கிழமை பொழுது உதயமாகுகின்ற நேரம் முஷ்தரியுடைய வக்தில் துடங்கி நாள் ஒன்றிற்கு 1041 தரம் ஓதிவந்தால், துனியாவுடைய கருமம் தீனுடைய கருமங்களெல்லாம் தொரப்பிடியாக்கி கொடுக்கப்படும். யாதொருவன் கடினநஸல் கொண்டு வைத்தியர்களால் மருத்துவம் செய்ய மாட்டாங்கியாய் விட்டால் இந்த இஸ்மை சீன் தேசங்களிலுள்ள கருப்பு ஒன்று மில்லாத புஞ்சானில் குங்குமம் கஸ்தூரி கொண்டு எழுதி கரைத்து குடிப்பி வித்தால் ஜல்தியில் சுவாத்யமாகும். இனி சுவாத்தியமுடையவன் குடித்தால் ஒருக்காலும் நஸல் கொள்வான் என்கிலும் நியத்து உண்மையும் கல்பில் இஃதிகாதும் ஷர்த்தாயிருக்கும். இனி கல்பு உண்மையைக் கொண்டு இதை ஓதினால் ஒருகாலமும் மிடிமையாக மாட்டான். நெஞ்சு இட்டுமை யாகாது. வாணுள் நெடிகமாகும். (பிஇதுனில்லாஹித் தஆலா) இந்த தல்வத்துடையவன் ஹயாத்துடைய சிற்றின் பேரில் உதையமாய்

பார்ப்பான், அதற்காகத்தான் தஸ்வத்துல் அஹ்றாயிய்யத்து என்று பேர் வைக்கப்பட்டிருக்கிறது.

6-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்மாகிறது (நபிஈசா அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடை உதவும் கருமம் லாஹிரிலும் பாத்தினிலும் தரிப்பட்டது. அதன் மூவக்கலாத்து வெளியாயிற்று. அதுகளாவது, ஸதகு, அஹ்ஸனு துக்மஷ்ஷீரு, பத்யாஉ இக்ராஉமாம்.

பிரயோஜனங்களாவது.

கல்பு தரிப்படுதல் வாக்கு வாளிருகுதல் பஜ்ருக்கும் இஷாவுக்கும் பின்னாலே நாள்தோறும் 41-தரம் ஓதிவருகிறது நல்லது. யாதொரு வஸ்து திருடப்பட்டால் அல்லது இழக்கப் பட்டு போனால் ஷம்ஸு என்ற சூரியன் ஹமலென்ற மேஷராசியில் இருக்குமே அந்த மாதத்தில் சனிக்கிழமை இரவில் 120 தரம் ஓதி ரீத்திரைச் செய்தால் அந்த வஸ்து இருக்கின்ற இடத்தை காண்பான். எடுத்தவனையும் அறிவான் அல்லது எடுத்தவன் வந்து இன்ன இடத்தில் கண்டேன் என்பான். இவ்விஸ்முடன் 'அகத்து அஃலா அஹூஜமீஅன் பிஹைறது. லாயக்திரு, அன்யம்ஷிய அஸ்யலீருத' என்றோதினால் போன முதல் கண்டுக் கொள்வான். பழுதாகாது. இவ்விஸ்ம் இருக்கிற வீட்டில் கள்ளன் புகுதான், இனி தண்ணீர் அன்னம் படாத புதிய செம்பு பாத்திரத்தில் தப்புராவாய் மணம்பூசி புகத்வாசம் போட்டு இரும்பு ஊசியால் மூன்று தாயிருக்கீச்சி ஒவ்வொரு தாயிருவின் பேரில் இவ்விஸ்மை கல்பு ஹுளூரு இருந்து 1,099 விடுத்தம் ஓதியூதினால் அத்தட்டம் உஷாம்பும். தயமுக ஓதி யூதிக்கொண்டிருந்தால் அத்தட்டம் தானேயிருந்த இடத்தை விட்டெழும்பி திருடப்பட்டு பதுங்கிய இடத்தை வந்து காண்பிக்கும். தோண்டி எடுத்துக் கொள்வாய். இனி யாதொருவனுக்கு பாடம் மறதியுண்டாய் இருந்தால் நாள் ஒன்றுக்கு 27 தரம் பஜிருடைய சுன்னத்துக்கும் பருளுக்கும் இடையில் ஓதிவந்தால் அல்லாஹுத் தஆலா அவனுடைய கல்பை சிக்கலாடிய கண்ணாடியைப் போல் இல்முகளின் ஒளிவு களின் வகையைக் கொண்டு துலக்கமாக்கி விப்பான். இனியா

தொருவன் இரவு பகல் அடங்கலிலும் நாள் ஒன்றிற்கு 21000 தரம் 4 வருடம் ஓதினானேயானால் மட்டு வருத்தப்படாத புறத்தால் அதுவுடைய தமருத்தென்ற பலாபலன்கள் உண்டாம். எங்கிலும் ஆக்கத்த இஸ்திகாதின் ஷர்த்துக் கொண்டாயிருக்கும். முறுஷிதுடைய உத்திரவாகிறது அவனுக்கு நேர்வழி காட்டி விக்கிறதா யிருக்கும்.

7-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்மாகிறது இதரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக் குள்ளதாயிருக்கும்.

பிரயோஜனங்களாவது.

யாதொருவனுக்கு பாத்திலான பிக்ரும் பாவிதான கியாலாத் துகளும் உண்டாயிருந்து, மனிதர்களுக் கிடையில் தாழ்மை பெற்றவனு யிருந்தால் இந்த இஸ்மை தாயிமா யோதி வந்தால் அதை விட்டும் கலாசு பெறுவான். இனி ராஜா அல்லது பகைவ னுடைய புறத்தில் நின்றும் பயம் உண்டாயிருந்தால் அனுகு கோத்தில் குளித்து எவரோடும் பேசாமல் அனுகுத் தொழுதபின் (50) தரம் தாயிமா யோதிவந்தால் பகைவனை அடக்கியாள்வான். ராஜனும் பொருந்தி கிருபைசெய்வான். இப்படி தாயிமாயோதி வந்தால் விஷ்று குபாடம் பாம்பு, தேள் முதலிய அர்ளிஸமாவியான ஆபத்த டங்களைவிட்டும் அச்சம் தீர்வான். இனி யாதொருவன் பஜ்ருக்கும் அஸ்ருக்கும் பின்னாலே முன்னூத்தருபது விடுத்தம் நேமமாய் ஓதிவந்தால் ஆலமடங்கலும் வழிப்பட்டு வசப்படும். எங்கிலும் அதினுடைய அஸ்றூர்களை ஒருவருக்கும் வெளிப்படுத்தி விடாமல் மறைத்துக்கொள்வான். 95000 வெளமுக்கு ஓதினால் கஷ்பு வெளியாகும்.

8-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்மாகிறது எஹ்யா அலைஹிஸ்ஸலாமுக் குள்ளதா யிருக்கும்.

பிரயோஜனங்களாவது.

தீனில்பாதம் தரிபடுகிறதற்காக 3044 விடுத்தம் ஓதி பின்பு சஜ்தாச் செய்து பிழைபொருக்க தேடினால் கபூலாகும். கல்பிலே

ஹக்கல்லாதது ஊஷாடக்கூடாது. இனி யாதொரு ராஜதனம் நீங்காதிருக்க நாடினால் கலப்பற்ற வெள்ளியினாலுள்ள மோதிரத்தில் ஷம்ஸுடைய உதயத்தில் இந்த இஸ்மை கொத்தி கையில் அணிந்து கொண்டால் அது இருக்குமளவும் நீங்காது, பதவியால் மேலாவான், துப்புரவாக யிருந்து செய்வது ஷர்த்து. இனி அப்படி நீங்கிப்போனால் இதை அல்லாஹுத் தஆலா முகத்தை நாடி அதுவுடைய தரீகுபடிக்கு ஓதிவந்தால் அது கிடைக்கும். உன்னை தொட்டாவது உன் ஸாஹிபை தொட்டாவது 3 நாள் நோன்பு பிடித்து நாள் ஒன்றுக்கு 300 தரம் ஓதிவந்தால் நாட்டம் நிறைவேறும், துஆ கபூலாகும்.

9-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்முக்கு நபி றாயா அலைஹிஸ்ஸலாமா யிருக்கும். அவர்களுக்கு இதின் சபபால் தாய் மாமி சகோதரிமகளுடைய சூரத்து வெளியாயிற்று.

பிரயோஜனங்களாவது.

யாதாமொருவன், வினு, விவாத்து, கள்குடி, வட்டிதின்னுதல் போற்கொற்ற ஹறுமான சியலின்பேரில் தரிபட்டு நீங்காதவனு யிருந்தால் 3 நாளைக்கு நோன்பு பிடித்து ஜலாலீ ஜமாலீயாகிய ஹைவானுத்தை நீக்கி நாள் ஒன்றுக்கு முஷ்தரியுடைய ஸா அத்திலே 1,000 தரம் ஓதினுனேயானால் அல்லாஹுத் தஆலா அவனை பேணிகலப்பற்ற தௌபாவை நிஸ்கு கொடுப்பான். இனி யாதொரு புருஷன் பெண்சாதிக் கிடையில் தீராத சண்டை சல்லியமுண்டாய் ஒன்றும் வழிவராதிருந்தால் இந்த தலைவத்து உடையவன் இந்த இஸ்மை புஞ்சானிலெழுதி கரைத்து அவ்விருவருக்கும் குடிப்பிவித்தால் மருருதல் முஹப்பத்துண்டாகும். இன்னும் இதை மான் தோலில் கஸ்தூரியும் குங்குமப்பூவும் கொண்டெழுதி கரைத்து போராடிக்கொண்டிருக்கிற இருவருக்கும் குடிப்பிவித்தால் முஹப்பத்தாவார்கள். பிணக்கும் வணக்கும் நீங்கும். ஆனால் இந்த தலைவத்துடையவன் ஷறஹிலுள்ள அதாபுகள், தொழுகை, ஸகாத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய ஹக்குகளை இருத்தவனும் நப்சு அம்மாறுவை விலக்கினவராயும் ஆயிருந்தால்

இப்படிக்கொத்த கருமங்களை நடத்திவிக்கிறதுக்கு பாத்திரவானு யிருப்பதுக்கு ஏதொரு ஷக்கில்லை. நாள் ஒன்றுக்கு 9,000 விடுத்தம் 27 நாள் ஓதினால் ரூஹானிய்யத்தாகிய ஆலத்துடைய இன்பத்தை நின்று கொடுக்கப்படும். அவனை பார்த்தநோயாளிக்கு நோய் தீரும். சிறையாளி கலாஸு பெறுவான்.

10-வது இஸ்ம் ஜமாலீ.

இதற்கு நபி அர்மியா அலைஹிஸ்ஸலாம். இதுக்கொண்டு மலக்குகள் அவர்களுக்கு வசப்பட்டார்கள்.

பிரயோஜனங்களாவது.

இந்த இஸ்மை 12,000 விடுத்தம் ஓதினால் பலங்காணும். இனி பகைவர் ஹலதுக்காரனுடைய நாவு கட்ட நாடினால் தெளிவான காரீயத்தின் தகட்டில் 3 களஞ்சி பலகை செய்து இந்த இஸ்மை அதில்நகாஷ் அடைத்து இதை 1001-தரம் அதின்பேரில் ஓதியூதி பச்சைமீன் வயற்றில் வைத்து ஈரமான பூமியில் கபுறுகளுக்கிடையில் புதைக்கவும், எதிரிகளின் அஸ்மாக்களும் அதினோடே எழுதவும் நாவுகள் தீங்கைக் கொண்டு நாடாது. (இன்ஷா அல்லா.) இனி நாள் 1-க்கு 41000-விடுத்தம் 40-நாள் ஓதினால் அல்லாஹுடைய ஆலம் வெளியாகும், நாடிய ஹாஜத்து நிறைவேறும் இன்னுமொரு ரிவாயத்தில் ஹைவானியத்தை தவிர்ந்து மணமான உடையணிந்து 40-நாளைக்கு நாள் ஒன்றுக்கு 340-தரம் ஓதினால் அதினுடைய காதிம்களும் இராஜனும் வந்து இவனுக்கு பணிவிடை உதவி செய்வதின்பேரில் அருதிமானம் செய்துகொடுப்பார்கள். ஹைவானீ விலக்குவது ஷர்த்து, இதுகூட்டினால் திட்டமாய் தங்கடமுண்டாம். இனி ஆதமுடைய மக்களும் சகல கல்லும் வெளிபட நாடினால் நாள் ஒன்றிற்கு 4500-விடுத்தம் 71-நாள் ஷரத்தோடும் கூடி தரீகுத் தவ்வத்துக் கொண்டு ஓதினால் ஆலம் அனைத்தும் வழிப்படும்.

11-வது இஸ்ம் ஜமாலீ.

இதுக்கு நபிஸாலிஹு அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது

இந்த இஸ்மை நாள் ஒன்றுக்கு 7000-தரம் 7-நாள் ஓதினால் ஹாஜத்து கைகூடும். யாதொருவனுக்கு பிருதி கடனுண்டாய் அது

தீர்வதற்கு எவ்வழியாலும் இடமில்லாதிருந்தால் இந்த இஸ்மை க்ஷேமமாய் ஓதிவந்தால் அதில் குறைந்தபக்ஷம் 360-தரம் மிகுந்தது 10,000-தரம் இம்முறையாய் க்ஷேமமா யோதிவந்தால் அல்லாஹுத் தஆலா அவனுடைய கடனை தீர்த்து ஷுக்குறு செய்கிற வாழ்வுகாரர் களில் நின்றுமாக்கிவிப்பான் ஆனால் இதையாருக்கும் அறிவிக்காமல் பேணிக்கொள்வது வாஜிபு. இந்ததுஆவில் ராஜதனத்தை எத்தி விக்கிறபதவி இருக்கிறது. அதற்காகத்தான் 'தலைவத்துல் கபீ ரிய்யது' என்று இதற்கு பேர்வைக்கப்பட்டது. வளர்பிறையில் தொடுத்து நாள் ஒன்றிற்கு 21,000 தரம் பஜருக்கு பின்னாலே தொடுத்து பாதிபகலளவும் மக்ரிபுக்கு பின்னாலே நின்றும் பாதி இரவளவும் காயிமா யோதினால் கல்வத்து அதலத்துக் கொண்டு தலைவத்து வழியா யோதினால் சுல்தான் முதலிய தவுலத்துடையவர் சகலரும் வழிப்படுவார்கள்.

12-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்முக்கு நபியாபீது அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது

இந்த இஸ்மை நாளொன்றிற்கு 12000-விடுத்தம் 7-நாள் ஓதினால் ஹாஜத்து நிறைவேறும். ஸிஹ்று, கண்திஷ்டி குஷ்டம் இவைகள் தீர ஏழு உலோகத்தில் நின்றும் செய்யப்பட்ட மோதிரத்தில் இந்த இஸ்மை துப்புரவாக இருந்து நக்ஷு செய்து தப்புறவுடன் அணிந்துக் கொண்டால் சகல வியாதியைத் தொட்டும் காக்கப்படும். அதைபுத்தன்பேரில் கட்டினால் பயித்தியம் நீங்கும். நாள் ஒன்றிற்க்கு 10000-தரம் F8-நாள் தடர்ச்சியாய் ஓதினால் அருவாஹுகளும் முஜற்றத்தான் நபுசுகளும் வெளியாகும். அது களையும் கௌகபுல் ஸையாறுவையும் கௌகபுல் ஸவாபிதையும் தன்கண்ணால் காண்பான். பறுதைல் முஃமின் உண்டாகும்.

13-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்முக்கு நபிஸாம் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது

இன்ச ஜின்னு இரண்டையும் வசப்படுத்தி விக்கிறதற்கு மாஸ்தையில் 9-ம் நாளில் அல்லது 12-ம் நாளில் சனிக்கிழமை ஷுஹறுடைய ஸாஅத்தில் தொடுத்து நாள் ஒன்றுக்கு 15000-தரம்

40-நாள் ஓதினால் அவ்விரண்டும் ஹாஸிலாகும். இனி யாராகிலு மொருவன் புதன்கிழமை தினம் குளித்து முழுகி துப்புரவாகிய புடவை யுடுத்து தனித்த வீட்டிலிருந்து 1051-தரம் ஓதினால் 7-அறுவாஹ் வந்து வெளியாகும். பசிந்த உடையணிந்து துருக்கி களைப்போல் தலையில் இராஜகிரீடம் அணிந்து முகங்கள் சந்திரனைப் போலும் அதினால் மதில்கள் பிரகாசிக்கும் அவர்கள்வந்தால் எழும்பி நின்று ஏதும் பேசாமல் தொனியா யோதுவான். அப்பால் உன் நாட்டமென்ன வென்றுக் கேட்பார்கள் அப்போது எவ்விடத்தில் எந்தஹாலிலும் நீங்களெனக்கு உதவிசெய்யவேணு மென்று சொல்வான். அப்போது பறவையின் முட்டைப்போல பசிந்த கத்துடைய ஓர்கணையாழி ஒன்றுக்கொடுப்பார்கள். அதை வாங்கி இரண்டு கண்ணிலும் ஒத்திக்கொண்டு அவ்விஸ்மை படித்துக் கேட்பான். படித்துக் கொடுப்பார்கள். அப்பால் மரியாதித்து போகுங் களென்பான். போய்விடுவார்கள். அக்கணை யாழியை எவருக்கும் காண்பிக்காமல் துப்புரவாய் வைத்துக் கொள்வான். ஹாஜத்துகளுள்ள நேரம் அந்த இஸ்மை 7-தரம் ஓதினால் ஹாஸிலுவார்கள். அவ்விஸ்மால் பொழுது வசப்படும். இன்னும் அநேக அஜுருகளும் உண்டாம்.

14-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்முக்கு நபீ மூசா அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

றிஸ்கு விஸ்தீர்னமாகிறதற்கு இந்த இஸ்மை நாளொன்றிற்கு 12000 தரம் 12 நாளைக்கு ஓதவும். இனியாதொருவன் வாழ்வை ஆதரித்துக் கொண்டிருந்தால் இந்த இஸ்மை மான்தோலில் குங்குமம் கஸ்தூரி பன்னீர் கொண்டெழுதி தன் வீட்டுமேல் வாசப்படியில் புதைத்து வைத்து பின்பு இரண்டு றக்அத்து தொழுவான். பாத்திஹாவுக்கு பின்னாலே சூரத்து வள்ளுஹாவை 3 விடுத்தம் இரண்டு றக்கத்திலும் ஓதுவான். பின்பு சஜ்தில் தரித்து இந்த இஸ்மை 50 விடுத்தம் ஓதுவான். அவன் நாடிய ஹாஜத்து நிறைவேறும். மண்ணைத்தொட்டாலும் பொன்னாகும். இனியாதா மொருவன் இந்த இஸ்மை நிரப்பமான ஒருவருஷம் நாளடங் கலிலும் இரவில் பாதியும் பகலில் பாதியுமாக நாள் ஒன்றுக்கு 7000

தரம் ஓதினால் அவுலியாக்களில் நின்றுமாவான். இதற்கு 'தலீவத்து அத்தாயிய்யா' என்றும் பேர். ஏனெனில் தவுலத்தையும் வாணாள் நெடுக்கத்தையும் பிழைப் பொருக்குதலையும் றஹ்மத்தையும், ஆகிறத்துடைய நிஃமத்தையும், றப்புடைய லிகாவையும் தஜல்லியாத்தையும் கொடுக்கும் (இன்ஷா அல்லாஹு).

15-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்முக்கு நபி லூத்து அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

இந்த இஸ்மை ஓத நாடுகில் நீர்கரை யடுத்து ஓடைதலம், மலை, செடி வனாந்திரங்களை தெரிந்துக்கொள்வது வேணுமாயிருக்கும். இனி பகைவனை ஹலாக்காக்கிறதற்கு செவ்வாய்க்கிழமை பிர்றீகுடைய சாஅத்தில் பொழுது கிளம்புகிற நேரம் இரண்டு றக்அத்து தொழுது மூந்தின றக்அத்தில், பாத்திஹாவுக்குப்பின், அலம்தர கைபாவை 25 தரமும், இரண்டாம் றக்அத்தில், தப்பத்ய தாவும் ஓதி தொழுதபின்பு இந்த இஸ்மை நாள் ஒன்றுக்கு 10700 தரம் 40 நாள் ஓதினால் சகல பகைவரும் சக்கன்றியே தட்டுண்டு போவார்கள். ஆனால் ஷர்ஹின்படிக்கு சுத்தம் அநியாயம் செய்து இருக்கவேண்டும். அப்படி யல்லாதிருக்கில் இவ்வினை அவனளவிலேயே மீளும். இன்னும் இந்த இஸ்மை யோதினால் இரவு காலத்தில் அன்பியாக்களுடைய அர்வாஹுகள் வெளியாய் எட்டு காணி காத்தளவில் கொண்டுபோய் அநேக அற்புதங்களாகிய முஃஜிஜாத்துகளை காண்பான். அதுக்கப்பாலே லாமகான் என்ற பதவியை தவிர வேரில்லையே அப்படிக்கொத்த மகாமளவில் எத்துவான். இச் சிறியதான றிஸாலாவில் அவைகளை விரித்துப்பேச இடம் படாததால் இதை விபரிக்கவில்லை. இன்னும் யாதொரு மனிதன் அநியாயக்காரன் கையிலாவது, சிறையிலாவது அகப்பட்டிருந்தால் இந்த இஸ்மை நாள் ஒன்றுக்கு 1000 தரம் 'ஓதினால் கலாஸ் பெருவான்.

16-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்முக்கு நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம்

பிரயோஜனங்களாவது.

எதிரிகளின் நாவடக்க நாடினால் 40 நாளைக்கு தலீவத்துடைய பாதையின்பேரில் ஓதினால் கண், நாவு, கை அகல் அனைத்தும் கட்டும். தனித்து இஃதிகாபிருந்து கிரப்பமான ஒரு வருடம்

ஓதினால் கைபுடைய ஆலத்தை தறப்பிடியாக்கி கொடுக்கப்படும். அந்த 40 நாளைக்குள் 7 அடையாளம் வெளியாகும். அதென்ன வென்றால் துஷ்டமிருகங்கள், பறவைகள், பாம்பு, தேள்களின் கோலத்தில் அமளியாகிய கோலங்களில் ஜின்னுகள் வெளியாகும் அதுகளுக்கெல்லாம் அஞ்சாதிருக்கில் சத்தியாகும். அஞ்சினவன் தஞ்சவான், அநேக புதுமையுண்டாம் அமலால் தெரிவாம்.

17-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்மு நபி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாமுக்குள்ளது பிரயோஜனங்களாவது.

யாதொருவனுக்கு மிகுதி கடனுண்டாயிருந்து அக்கடனை தீர்க்க மாட்டாமலாய் விட்டால் இந்த இஸ்மை எண்ணம் கணக்கின்றியே மிகுதமாய் போதினால் கடந்தீரும், இலாபமுண்டு. மக்கள் பிச்சளம் அதிகமாகும் இனி நாளொன்றுக்கு 7,000 தரம் 99 நாள் வீர்தாக ஓதினால் யாதொருவரளவிலும் ஹாஜத்தாகாதே வாழ்வுகாரனாவான். இல்முல் கீமியாவை பெற்றுக்கொள்வான். இனி பாதைவழி தப்பினவன் 90 தரம் ஓதினால் பாதை நேர்வழி பெறுவான். இன்னும் யாதொருவன் கருமங்கள் ஹால்கள் தெரி கூடுதல் குலைந்தவனாய் இருந்தால் இந்த இஸ்மை நாள் ஒன்றுக்கு 99 விடுத்தம் ஓதிவக்தானுமேல் அல்லாஹுத் தஆலா கூட்டத்தை சேர்த்து பிரிவினையை தட்டிவித்து சரிபாடாக்கி வைப்பான். சங்கை பெற்றவனாவான்.

18-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்மு நபி ஹூது அலைஹிஸ்ஸலாமுக்குள்ளது. பிரயோஜனங்களாவது.

இதை வெள்ளை பட்டுத் துண்டிலெழுதி சரக்குடன் வைத்தால் ஏதொரு ஆபத்து அண்டாது. இனி ஸபருடைய சாக்கில் வைத்தால் கள்ளர் திருடுவதைவிட்டும் அச்சந்தீருதலாம். மையுத்துடன் வைத்தால் பேதலியாது, கஃபாவுடைய போர்வைத் துண்டில் குங்குமம் கஸ்தூரிகொண்டு எழுதி மையித்துடைய நெஞ்சில் வைத்தால் கரையான் தின்னுதே சலாமத்துப்பெறுவான். அதாபு செய்யப்

படாது, குங்குமம் கஸ்தூரிகொண்டு கடுதாசியில் எழுதி வலது கெண்டைக்கையில் கட்டினால் நிருத வெண்குஷ்டம் தீரும். ஸபர் போகிறதை நிறுத்திவிட நாடுகில் இதை மான்தோலில் குங்குமம கஸ்தூரி கொண்டெழுதி அவன் வீட்டில் மேல்சுவரில் புதைக்கவும். பின்பு 30 நாளைக்கு நாளொன்றுக்கு 48 தரம் ஓதவும். ஸபருடைய எண்ணம் பாத்திலாகும். இனி இப்படிப்போலேதான் ஸபர் ஸலாமத்தை நாடினவன் அவ்விஸ்மை இரண்டும் கண்டத்திலெழுதி சரக்குடன் வைத்துக் கொண்டால் ஸபருக்கு காவலாயும் சரக்குக்கு பேணுதலாயும் அல்லாஹுத் தஆலாவாயிருப்பான். சில நேரங்களில் இதின் மூவக்கலாத்துகள் வாயலில் வந்து முனாபிறுகளைப் போல நின்றுக்கொண்டு இன்னுரை காணவந்தோமென்பார்கள். தனதுபில் இளுரைப் போலாவான்.

19-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்ம் யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குள்ளது.

பிரயோஜனங்களாவது.

யாதொருவன் ஸபர்போய் மறைந்து இருக்குமிடம் தெரியாதிருந்தால் இதை 9000 விடுத்தம் ஓதினால் வந்து சேர்வான். இன்னும் தப்பிய பயலும் காணாத பொருளும் மீண்டுவரும். அல்லது இதை 5000 விடுத்தம் ஓதிமுடிந்தபின் இரண்டு றக்அத்து பாத்திஹாவுக்குப் பின்னாலே ஆயத்துல் குருசியும் இக்லாசும் பத்து பத்து தரம் ஓதி தொழுது சலாம் வாங்கி பின்பு நூறு தரம் ஸலவாத்து சொல்லி தலையை உயர்த்தி இந்த இஸ்மை 1000-தரம் ஓதி பின்பு கடுதாசியில் குங்குமம் கஸ்தூரி கொண்டு எழுதி தலையணையின் கீழாலே வைத்து அதின் பேரில் நித்திரைக் கொண்டால் கனவில் வந்து விஷைகளம் அறிவிப்பான் ஜல்தியில் பதிவந்து சேர்வான்.

20-வது இஸ்ம் ஜமாலீ

இந்த இஸ்முக்கு நபியாகிறது ஆதம் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

கல்குகள் அருவாஹுகள் வசப்படுகிறதை நாடினால் நாள் ஒன்றுக்கு 7000 விடுத்தம் 40 நாள் ஓதவும். இதற்கு ‘ தல்வத்துத்

றஹீமிய்யது’ என்று பேர். ஆலம் உல்வி ஸுப்லியிலுள்ள அர்வாஹெல்லாம் இவனளவில் முகம்வைத்து உதவி செய்வார்கள். இனி யாதாமொருவன் நாள் ஒன்றுக்கு 390 தரம் ஒவ்வொரு தரம் துவக்கமும் கடைசியும் நபியுல்லா பேரில் ஸலவாத்து சொல்லி யோதினால் அவன் சிறைபாளியாயிருந்தால் விடுதலாம். இனி கடனாளியாயிருந்தால் கடன் இருபடும். நஷலாளியாயிருக்கில் சுவாத்தியமாம், மிடுமையாளியாயிருக்கில் வாழ்வுக்காரனாவான், பசியாளியாயிருக்கில் பசிதீரும், தாகித்திருக்கில் தாகம்தீரும், தாழ்மையாயிருக்கில் மேன்மையாவான் கப்பலிலிருக்கில் ஆள் தலைவிட்டும் கவாசு பெருவான், பெண்டில்லாதிருக்கில் விவாகமுண்டாகும், பிள்ளை இல்லாதிருக்கில் பிள்ளையுண்டாம், பகைதனம் உண்டாயிருக்கில் முஹப்பத்துண்டாம், பகிலனுயிருக்கில் கொடையாளியாவான் அநியாயத்தில் அகப்பட்டவனுயிருக்கில் உதவியுடையவனுவான் ஒடுக்கத்து பேருண்டாகும்.

21-வது இஸ்ம் ஜமாலி

இதுக்கு நபிதாவூத்து அலைஹிஸ்ஸலாம் அவர்களும் சுல்தான் இஸ்கந்தருமா யிருக்கும்.

பிரயோஜனங்களாவது.

யாதொருவனுடைய அஜாயிபுகளை காணநாடுகில் 12 நாள் நோன்பு பிடித்து நாள் ஒன்றுக்கு 2025 விடுத்தம் 20 நாள் ஓதினால் கைபுடைய ஆலம் வெளியாகும். பகைவர் சிதரியோட நாடுகில், அச்சேனைக்கு அரசனுடைய குதிரையின் காலடி மண்ணை எடுத்து இவ்விஸ்மை 7000 விடுத்தம் ஓதியூதி அப்பாலெழும்பி நின்றுக் கொண்டு அவ்வரசனையும் அச்சேனையையும் கூர்க்க சினமாய் கருதிப்பார்த்து அத்திசையில் அம்மண்ணை எறியவும். அவன் சொல்லவும் பறக்கத்து ஷமலகும் வஷதத்தது ஜம்அகும் என்றுச் சொல்லி சப்தம் கேட்கும் படிக்கு கைகொட்டவும். பின்பு ஓதலைக் கொண்டு பராக்காகவும் விரண்டோடுவார்கள். இன்னும் நாள் ஒன்றுக்கு 7000 தரம் 41 நாள் ஓதி முடிந்தபின் ராத்துல்ஜும்ஆவை ஓதினால் ஆலம் உல்வி சுபுலி என்று மேலோகம் கீழ்லோகத்திலுள்ள அர்வாஹுகளெல்லாம் வசப்படும்.

22-வது இஸ்ம் ஜமாலீ

இதற்கு நபிஹாரூன் அலைஹிஸ்ஸலாமும்.
கிளுறு அலைஹிஸ்ஸலாமுமாம்.

பிரயோஜனங்களாவது.

நான் ஒன்றுக்கு 4444 விடுத்தம் 99 நாள் ஓதினால் லதுன்னியான இல்மும், கைபுடைய இல்மின் கஷ்பும் உண்டாகும். நாள் ஒன்றுக்கு தொண்ணூற்றொன்பது விடுத்தம் 40 நாள் ஓதினால் இல்முஹிக்மத்துடைய அறிவுகள் கல்பில் நின்றும் நாவின் பேரில் வெளியாய் ஒளித்தோடும்.

23-வது இஸ்ம் ஜமாலீ

இந்த இஸ்முக்கு நபி தானியால் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது

நாள் ஒன்றுக்கு 1001 விடுத்தம் தாயிமாய் ஓதி வந்தால் துன்யாவின் தவுலத்தும் ஆகிறத்தின் தவுலத்தும் ஸஆதத்தும் உண்டாகும். இனி நாலுலக்ஷத்தி இருபத்தி நாலாயிரம் விடுத்தம் ஓதினால் இலாஹிய்யத் தாகிய அஸ்றார்களும் இல்ஹாமத்தும் உண்டாகும்.

24-வது இஸ்ம் ஜமாலி.

இந்த இஸ்முக்கு நபீ இல்யாசு அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

இதை தாயிமா யோதிவந்தால் ஆதமுடைய மக்கள் அனைவரும் உவப்பாயிருப்பார்கள். யாதொருவன் பேரில் உவர்தும் இவன் அவனை உவக்காதிருக்கில் யாதொரு மணம் அல்லது தின்வஸ்துவின் பேரில் 1000-தரம் ஓதியூதி முகக்க தின்னக்கொடுத்தால் அவனை இவனாக ஆக்குவான். அவ்விருவினைக்கும் இடமில்லாதிருக்கில் ஒரு கடிதத்தில் எழுதி உயர்ந்த தலத்தில் நிற்கிற கடினகாத்தால் உசம்புகின்ற மரத்தில் கட்டினால் அது இரண்டும் மஃஷூக்கின் கல்பை வசப்படுத்தும். இதும்போது புகர்போட்டுக்கொண்டு ஓதவும். இனி காயிபாய் மறைந்திருப்பவனை வருவிக்க நாடில் அந்த நிய்யத்துக்கொண்டு 7000-தரம் ஓதவும் வந்து சேர்வான். இனி

பின்னை பேர்வருத்தமானால் இதை எழுதி இடது புறத்தில் கட்டவும் பேர் லேசாகும். இந்த துஆவை ஓதுதல் நாள் ஒன்றுக்கு லக்ஷத்தி ஐம்பதினாயிரம் விடுத்தம் 50-நாள் ஓதவும், இனி நாள் ஒன்றுக்கு 3000-தாம் வீர்தா யோதிவந்தால் இரண்டு ஆலமும் அவனளவில் முகம்வைக்கும் இல்முத் தெளஹீது ஹாஸிலாகும். 'அனல்லைக்கு' என்று இத்தியாரில்லாதே சொல்வான். இதற்கு தஸ்பத்துல் ஹலீமிய்யத்து என்று பேர் சொல்லப்படும்.

25-வது இஸ்ம் ஜலாலி.

இந்த இஸ்முக்கு நபி ஸகரியா அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

யாதொருவனுக்கு பொருள்களெல்லாம் போய் அரும் சிரமுதலாய் தரிபாடில்லாதிருக்கில் நாள்தோறும் பஜருக்கும் அஸருக்கும் பின் 301-தாம் விடாமலோதி வந்தால் கொஞ்ச காலத்துக்குள் அல்லாஹுத் தஆலா இவனை வாழ்வுக்காரனாக்கி வைப்பான். இனி ஒரு லக்ஷந்தாம் ஓதினால் அவனுடைய கல்பு ஹகாயிகுக்கு கண்ணாடியாம். இனி ஸஹ்துரோத்தில் 300-தாம் ஓதிவந்தால் மூராது அடங்கலும் ஹாஸிலாகும், பகைவர்கள் தட்டுண்டு போவார்கள்.

26-வது இஸ்ம் ஜலாலீ ஜமாலீ இதற்கிடையில் முஷ்த்தரிக்.

இந்த இஸ்முக்கு நபி தாவூது அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

இந்த இஸ்முக்கு மக்தனுல் அத்தாயா என்று பெயர். இதை 20-நாளையில் இரண்டு லக்ஷம் தாம் ஓதினால் மிகுதி வாழ்வுண்டாகும். களிப்புக்கடங்காத பொருள் கிட்டும். தஜ்அத்துல் இஸ்ம் நீக்கும். முகர்றறை நீக்கி ஹற்பு ஒன்றுக்காயிரம் விகிதம் ஓதினால் இருலோகரும் புகழுவார்கள். இனி 'இன்ன ஜஅல்னுபி அஸ்னுகிஹிம்' என்கிற ஆயத்தை 'யுப்சிருன்' மட்டும் இத்துடன் சேர்த்து 360-தாம் ஓதினால் ஷக்கன்றியே பகைவர்மீது ஜெயம்பெறுவான், அன்னியருடைய தஸ்வத்திலும் அதாச் செய்கிறதாயிருக்கும்.

67925

27-வது இஸ்ம் ஜமாலீ.

இதற்கு நபி ஷுஐபு அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

இந்த இஸ்மை யாதொருவன் நாளொன்றுக்கு 3200-தரம் 25-நாள் ஓதினால் வாழ்வுக்காரனாவான். என்கிலும் ஓதும்போது கல்வத்தில் கிபுலாவை நோக்கிக்கொள்ளவும். தமது வசப்படவேண்டுமானால் அதை நோக்கி நாள் ஒன்றுக்கு பதினாயிரம் விடுத்தம் 14-நாள் ஓதி ஒவ்வொரு விடுத்தமும் 'யாகமரு அஜிப்தாயியல்லா' என்று சொல்லவும். ஓதல் கிரப்பமானால் வாலிபனுடைய ரூபத்தில் அது இறங்கி முஆனகாசெய்து உன் ஹாஜத்து என்ன வென்று கேட்டு வழிப்படும்.

28-வது இஸ்ம் ஜலாலி.

இதற்கு நபி யூஷவு அலைஹிஸ்ஸலாம்

பிரயோஜனங்களாவது

இதின் காசியத்து பிருதியுண்டும். நஷலாக்கிவித்தல் நஷல் தீர்த்தல், ஸபர்ஸலாமத் தாக்குதல், கடன்தீருதல், பேறுலேசாகுதல், சிறையைவிட்டும் கலாசுபெறுதல், இதுகள் போலாம். புத்திர சம்பத்துண்டாகவென்றால் இதைமிருதமா யோதியும் ஜிமாயினிடத்திலும் மிருதமாயோதுகில் ஸாலிஹான குழந்தை யுண்டாகும். இனி யாதொருவனை ஆஷிக்காக்கிவைக்க நாடுகில் குங்குமம் கஸ்தூரி கொண்டு வெள்ளை காகிதத்தில் எழுதி அவன் வீட்டின் மதிலில் புதைத்து பின்பு நாள் ஒன்றுக்கு 25-தரம் அத்திசையை நோக்கி ஓதவும். ஆஷிகாவான். அதுருஷ்தரிகள் இருக்கிலும் மிகைப்பு, ஜலாலும் கஹ்றுமாகி யிருக்கும். ஆனதால் எதிரியை மடக்கல், முடக்கல், மடிக்கல், அடக்கல் இதுகளுக்கு அனுகூலமாயிருக்கும். இந்த இஸ்மை இஸ்ருயீல் அலைஹிஸ்ஸலாமுடைய நெத்தியில் எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு 360-காவலியத்து உண்டும். நாள் ஒன்றுக்கு 9000-விடுத்தம் 30-நாள் ஓதவும். இதை எழுதி இருவர் பேரும் எழுதி கருங்காகத்தின் வாயில் வைத்து தைத்து புதைத்தால் பிரிவினை யுண்டாகும்.

29-வது இஸ்ம் ஜமாலி.

இதற்கு நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது

இந்த இஸ்மை நாளொன்றுக்கு 1000-விடுத்தம் 21-நாள் ஓதினால் இருபதியிலும் தறஜாவால் மேன்மையுண்டாம். அநியாயக்காரனிடம் ஒருஅமானிதம் சிக்கிக் கொண்டால் 7-நாள் நோன்பு பிடித்து நாள்தோறும் கபருகளை போய் சியாரத்துச்செய்து 3-றக்அத்து முந்தினதில் பாத்திஹாவுக்குபின் 'இன்னா அஞ்சல்னா' இரண்டாவது றக்அத்தில் 'இதா ஜல்வஸிலத்து' மூன்றும்றக்அத்தில் 'வல்அஸ்ரி' ஓதி தொழுது பின்பு இதை 125-விடுத்தம் ஓதினால் அல்லாஹுத் தஆலா அதை கொடுக்கச் செய்வான். இனி நாள் ஒன்றுக்கு 7000 விடுத்தம் 27-நாள் ஓதினால் கைபுடைய அஸ்றார்கள் வெளியாகும்.

30-வது இஸ்ம் ஜாலலி.

இந்த இஸ்முக்கு நபி யூசுபு அலைஹிஸ்ஸலாம்

பிரயோஜனங்களாவது

இந்த இஸ்மை பிர்தீருடைய ஸாஅத்தில் 1000-விடுத்தம் ஓதினால் சூனியாட்டம் செய்கிற ஷைத்தான் அடக்கலும் வழிப்படும். இதுபோல் பகைவரும் தீரும். 'அதாரிதை' வசப்படுத்த 60-நாளில் 6-லக்ஷந்தரம் ஓதினால் ஹக்குடைய விபாத்துக்கொண்டு வண்ணிப்பு பெறுவான். ஷரஹின் ஹத்தை பேணிக்கொள்ளவும்.

31-வது இஸ்ம் ஜமாலீ.

இதற்கு நபி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது

யாதொருவன் மேன்மையாக அல்லது சாம்ந்தியாக நாடுகில் இந்த இஸ்மை நாள் ஒன்றுக்கு 10000-விடுத்தம் ஒருமாதத்தில் மூன்று லக்ஷம் ஓதினால் நாடியது உண்டாகும். யாதொருவன் மனிதருக்கிடையில் மேன்மையுடையவனா யிருக்க நாடுகில் இந்த இஸ்மை தாயிமா யோதினால் ரிஸ்கு விஸ்தாரணமாகும். இதுரு

அலைஹிஸ்ஸலாமுடைய ரிஸ்கு கொண்டு இல்லை கொடுக்கப்படும். இனி ஸாஹிருகளை வசப்படுத்த வேணுமானால் ஷஃபான் மாதத்துடைய துவக்கத்தில் தொடுத்து நாளொன்றுக்கு 5000-விடுத்த மோதினால் கடைசி நாளில் அது ஒரு அழகிய மனிதருடைய சூரத்தில் வந்து ஸாஹிருய் வீணைபோற்கொற்றசங்கீத யேத்தனங்களால் இவன் மயங்கும்படி கீதம்செய்வார்கள். இவன்மயங்காதிருக்கவும். அப்பால் முட்டைப்போல் ஒரு வஸ்துவை கொடுத்து நீ அழைத்த போது வருவேன் என்று வஅதா என்னும் உறுதி செய்து கொடுத்துப் போகும். (இன்ஷா அல்லா)

32-வது இஸ்ம் ஜமாலீ, ஜலாலீ.

இந்த இஸ்முக்கு நபி யூனுசு அலைஹிஸ்ஸலாம் பிரயோஜனங்களாவது.

யாதொருவன் ஒருவனுக்கு தாழ்மையாயிருந்து அவனுக்கு மேலாக இருக்கநாடினால் வளர்பிறையில் ஞாயிறு புதனில் நோன்பு பிடித்து முழுகி குளித்து துப்புரவான பிடவையணிந்து புகை போட்டு கல்புஹாஜருடைய நாள் ஒன்றுக்கு 1700-விடுத்தம் 7-நாள் ஓதினால் அவனுக்கு மேலாவான். மாஷா அல்லாஹ், முஷ்தரீ வசப்பட 5-நாளில் 1000-விடுத்தம் ஓதவும். முகம் அழகாகிய ஷெய்குடைய சூரத்துக்கொண்டு ஹாஜிருகி இவனுக்கு வஅதாசெய்து கொடுக்கும்.

33-வது இஸ்ம் ஜமாலீ, ஜலாலீ

இந்த இஸ்முக்கு நபி ஷீத்து அலைஹிஸ்ஸலாம். பிரயோஜனங்களாவது.

இந்த காவியத்து சுலைமான் நபியுடைய ராஜதனம் உண்டாகுதல். நாள் ஒன்றுக்கு 10000-விடுத்தம் 40-நாள் ஓதினால் இன்சு, ஜின்னு முதலிய சகல சல்கும் வசப்படும். ஒரு தண்டில் 15-தரம் எழுதி அழித்து ஒரு தலை வலிக்காரனுக்கு குடிப்பிவித்தால் அதவேயில்லாமல் போய்விடும். இதைப்போல் வியாதியடங்கலும் தீர்க்கும்,

தலீவத்துடைய பாதையின்படிக்கு ஐந்து வருஷம் ஓதினல் சலீமான் அலைஹிஸ்ஸலாமுடைய ராஜதனம் வரும். ஆலம் ஷகீறிலும், ஆலம் கபீர் ஆகிய கல்கடங்களும் அவனுடைய ஏவலுக்கும் தானாலேயாம்.

34-வது இஸ்ம் ஜமாலீ.

இதற்கு நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது

இந்த இஸ்மை நாளொன்றுக்கு 15000-விடுத்தம் 25 நாள் ஓதினல் இஹ்யாவுடைய மருத்தபாவை பெற்றுக் கொள்வான். மைவித்து இவன் சமக்கிறதுகொண்டு ஹயாத்தாகும். ஏதொரு ஷக்கில்லே. யாதொருவனை கொல்லும்படி ஏவப்பட்டால் இந்த தலீவத்துடையவன் அந்த திசையை நோக்கி 77-விடுத்தம் ஓதியூதினல் பகைவர் எவ்வளவு பிருதமாயிருக்கிலும் சரியே அது விடுதலாம். இனி நாளொன்றுக்கு 6000-மாக 85-நாள் ஓதினல் நபுசுடையபகுவும் ரூஹுடைய பகாவும்வாஜிபுல் வுஜூதுடைய ஹகீகத்துடைய அஸ்ருரு கஷ்பாகிறது முண்டாம்.

35-வது இஸ்ம் ஜலாலி.

இந்த இஸ்முக்கு நபி இஸ்ஹாகு அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

நாள் ஒன்றுக்கு 3044-விடுத்தம் 21-நாள் ஓதினல் அல்லா ஹூத் தஆலா எதிரிகளையெல்லாம் தட்டிவிப்பான். இனி நாள் ஒன்றுக்கு 16,000-விடுத்தம் 40-நாள் ஓதினல் காட்டமடுக்களும் நிறை வேறும். இனி துன்யாவுடைய கருமமும் ஆகிரத்துடைய கருமமும் இந்த இஸ்மைக்கொண்டு கொழுவின தாயிருக்கும். ஆனதால் அவ்விரண்டுடைய கருமத்தில் நின்றும் எதை குறித்து அல்லா இடத்தில் கேட்டாலும் உடனே ஹாவிலாகும்.

36-வது இஸ்ம் ஜமாலீ

இதற்கு நபி நபிய்யினு நபிய்யுல் அன்பியா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

பிரயோஜனங்களாவது

இந்த இஸ்மை தாயிமா யோதிவந்தால் ஆலத்துக்கு மக்பூலா யிருப்பான். நாள் ஒன்றுக்கு 20,000-விடுத்தம் 25-நாள் ஓதினால் சஹல் வசப்படும்.

37-வது இஸ்ம் ஜமாலீ.

இந்த இஸ்முக்கு நபி மீளவும் நபிய்யுனு ஸல்லல்லாஹு. அலைஹிவஸல்லம்.

பிரயோஜனங்களாவது.

யாதொரு சுல்தான் அமீர் அநியாயக்காரன் இவன் மிதில் கோபம் வாங்கானியம் வைத்திருந்தால் நாளொன்றுக்கு 2041-விடுத்தம் 40-நாள் ஓதினால் அல்லாஹுத் தஆலா அவனுடைய கல்பில் இரக்கத்தை கொடுத்து கிருபையாயிடுவார்கள். இதை மையத்துடைய கபனில் எழுதிகபுரில் வைத்தால் அவனுடைய கபுரை சொர்க்கத்துப் பூங்காவனத்தில் நின்றுமாக்கி வைப்பான். மூக்கர் நகீருடைய சுவால் இலேசாகும்படிக்கு றஹுமத்துடைய மலக்கு துணையாயிருப்பார், ஜடலம் அறியாதிருக்கும்.

38-வது இஸ்ம் ஜலாலி.

இதற்கு நபி இபுறாஹீம் ஹக்குமான் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

மேலான பதவியுண்டாக நாள் ஒன்றுக்கு 1000-விடுத்தம் 16-நாள் ஓதவும். இனி நாள் ஒன்றுக்கு 4000-விடுத்தம் 40-நாள் ஓதினால் இருபதியிலும் சிரேஷ்டத்தனம் பெறுவான். பிர்திரு

வசப்பட 40-நாள் ஓதவும். அது இரக்ஷெவக்து ஒப்புக்கொடுக்கும். பெரும்பாவமெனும் கடலில் முழ்கினவன் இதை மிருதமாயோதினால் கரை பெறுவான்.

39-வது இஸ்ம் ஜமாலி.

இதற்கு நபி ஹாபீல் அலைஹிஸ்ஸலாம்.

பிரயோஜனங்களாவது.

ஹாஸிதீன்கள் பகைவர்கள் வசப்பட நாடுகில் நாளொன்றுக்கு இரவு பகல் 1099-விடுத்தம் ஓதினால் வசப்படுவார்கள். இனி தன்பாலைக்கொண்டு சாட்டப்பட்ட மலக்கை வசப்படுத்த நாளொன்றுக்கு ஒன்றாக்காயிரம் விதம் ஓதிவந்தால் ஷெய்குடைய ரூபத்தில் மூவக்லாத்துக்களுடன் வந்து ஹாஜிருவார்கள். இனி 7-நாள் நோன்புபிடித்து 7-நிறம்கொண்ட பட்டுக்கயற்றில் 7-முடிப்பு முடித்து ஒவ்வொருமுடிப்பிலும் 'யாமஃஷரில் ஜின்னிவல் இன்ஸி சல்தான் அழவும்' இங்கைக்கொண்டு பேசினவனுடைய நாவைக் கட்டுகிற நிய்யத்துக்கொண்டு ஓதியூதி முடித்து ஒரு சீசாவில் போட்டு கெட்டியாய் முத்திரையிட்டு பூமியில் புதைத்துவிட்டால் பகைவர்கள் இவனை குறித்து ஏதும் பேசார்கள்.

40- து இஸ்ம் ஜலாலி.

இதற்கு நபி சொந்தமாக நபிய்யுனா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

பிரயோஜனங்களாவது.

நாட்டம் எத்துறல் நாவடக்கம் உண்டாம். நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஹிறாமலை பொதும்பிலிருக்கும்போது ஓதினார்கள். அதின் மூலக்கல் வெளியாயிற்று. இனி தொழுகைகடக்களின் பின்னாலே 100-விடுத்தம் 40-நாள் ஓதினுனில் மறைவானகருமம் வெளியாம். நாட்டம் ஹாஸிலாகும். இனி பகலில் 10,000-இரவில் 5000-ஆக நாள் ஒன்றுக்கு 15,000-விடுத்தம் 99-நாள் ஓதினால் அஜாயிபு, கஜூபாயிப அன்வாருகள் வெளியாகும். இனி நாகத்

றுள்ளமட்டும் தாயிமா யோதிவந்தால் கல்குகளுடைய நாவுகள் இவனை நிந்தைக் கொண்டும் நாடாதே கட்டுதலாம். இவனளவில் சகலரும் ஹாஜத்தாவார்கள்.

41-வது இஸ்ம் ஜமாலி.

இந்த இஸ்மாகிறதை சில நுஸ்காகளில் காணப்படவில்லை. ஆகிலும் சுபிமார்கள் இதை ஓதுவதைக்கொண்டு சொர்தமாகிய காவியத்தை பெற்றிருக்கிறார்கள்.

பிரயோஜனங்களாவது.

சிறைச்சாலையிலாவது அனியாயக்காரன் கையிலாவது அகப்பட்டுக்கொண்டவன் இந்த இஸ்மை நாளொன்றுக்கு 99-விடுத்தம் ஓதிவந்தால் கலாசு பெறுவான். இனி பகலில் 7000-இரவில் 5000-விடுத்தம் கிரப்பமாக ஒரு வருஷம் ஓதினானகில் பதினெண்ணாயிரம் ஆலங்களுடைய ஸர்றுத்தில் நின்றும் ஒவ்வொரு ஸர்றத்துடைய ஹகீகத்தும் வெளியாம். இந்த ஆலங்களிலுள்ள கைறு ஷர்று முதலிய அஹ்வால்களையும் அறிவான். வானுல் பத்தத்தபோது இன்ஜுயில் அஹ்லுஹில்லலாம் வந்து ஸலாம் சொல்லி, மக்பூதே துன்யாவிலுள்ள உன்னுடைய நசிபு கிரப்பமாய் விட்டது. அர்வாஹுடைய ஆலத்தில் மூகம் வையும். நாம் உமக்கு துணையாய் வருகிறேன், என்றுச் சொல்வார்கள். இனி நாளொன்றுக்கு 40-விடுத்தம் ஓதினுல் செய்யிதுல் அன்பியாவாகிய செய்யிதுனு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய சிறப்பான முகத்தின் ஜமாலை சஹுதைச் செய்வான். வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

அஸ்மாஉல் இலாமின் பிரயோஜனம் முற்றுப் பெற்றது.

இதுவரை சொல்லிவந்த பிரயோஜனங்களுக்குடைய இன்முகளை மறுபுறத்திலிருந்து எழுதப்பட்டிருக்கிறது.

இந்த இஸ்மின் பிரயோஜனங்களை இதற்கு முன்னில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதை பார்த்து விளங்கிக் கொள்வீர்களாகவும்.

1-வது இஸ்ம் ஜமாலி.

سُبْحَانَكَ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ يَا رَبَّ كُلِّ شَيْءٍ
وَوَارِثَهُ وَرَازِقَهُ وَرَاحِمَهُ

சுபுஹானக லாஇலாஹ இல்லா அந்த யாறப்ப குல்லிஷையின் வவாரிஸஹு வறாஸிகஹூ வறாஹிமஹு.

2-வது இஸ்ம் ஜமாலி.

يَا إِلٰهَ الْآلِهَةِ الرَّفِيعَ جَلَالُهُ

யாஇலாஹல் ஆலிஹத்திர்ரபீஅ ஜலாலுஹு.

3-வது இஸ்ம் ஜமாலி.

يَا اللّٰهُ الْمَحْمُودُ فِي كُلِّ فِعَالِهِ

யாஅல்லாஹுல் மஹ்மூதுபீகுல்லி பிஆலிஹி.

4-வது இஸ்ம் ஜமாலி.

يَارَحْمٰنُ كُلِّ شَيْءٍ وَّرَاحِمَهُ

யாறஹ்மான குல்லிஷையின் வறாஹிமஹு.

5-வது இஸ்ம் ஜமாலி.

يَاحَيُّ حِيْنَ لَاحَيَّ فِيْ دَيْمُوْمَةِ مُلْكِهٖ وَبَقَائِهٖ

யாஹய்யு ஹீன லாஹய்ய பீதை மூமத்தி
முல்கிஹி வபகாயிஹி.

6-வது இஸ்ம் ஜமாலி.

يَاقَيُّوْمُ فَلَا يَفُوْتُ شَيْءٌ مِنْ عِلْمِهٖ وَلَا يَؤُوْدُهٗ

யாகய்யூமு பலாயபூத்து ஷைஉன்மின்
இல்மிஹி வலா யஊதுஹு.

7-வது இஸ்ம் ஜமாலி.

يَاوَاحِدُ الْبَاقِيْ اَوَّلَ كُلِّ شَيْءٍ وَّاٰخِرَهٗ

யாவாஹிதுல் பாகீ அவ்வல் குல்லிஷை
இன்வஆகிறஹு.

8-வது இஸ்ம் ஜமாலீ.

يَا دَائِمُ بِلَا فَنَاءٍ وَّلَا زَوَالَ لِمُلْكِهٖ وَبَقَائِهٖ

யாதாயிமு பிலாபனாயின் வலா
ஸவால லிமுல்கிஹி வபகாயிஹி.

9-வது இஸ்ம் ஜமாலீ.

يَا صَمَدُ مِنْ غَيْرِ شِبْهٍ فَلَا شَيْءَ كَمِثْلِهٖ

யாஸமது மின் கைரிஷிப்ஹின்
பலாஷைஉன் கமிஸ்லிஹி

10-வது இஸ்ம் ஜமாலீ.

يَا بَارُّ فَلَا شَيْءٌ كُفُوَهُ يُدَانِيهِ وَلَا إِمْكَانُ لِوَصْفِهٖ

யாபார்ரு பலாஷைஉன் குபுஉஹு
யுதானீஹி வலா இம்கானுன் லிவஸ்பிஹி

11-வது இஸ்ம் ஜமாலீ.

يَا كَبِيرُ أَنْتَ اللّٰهُ الَّذِيْ لَا تَهْتَدِيْ الْعُقُوْلُ لِوَصْفِ عَظَمَتِهٖ

யாகபீரு அந்தல்லாஹுல்லதீ லாதஹ்த
தீல் உகூலு லிவஸ்பி அல்மத்திஹி.

12-வது இஸ்ம் ஜமாலீ.

يَا بَارِئَ النُّفُوسِ بِلَا مِثَالٍ خَلَا مِنْ غَيْرِهٖ

யாபாரி அன்னுபூஸி பிலாமிதாலின்
கலாமின் கைறிஹி.

13-வது இஸ்ம் ஜமாலீ.

يَا زَاكِي الطَّاهِرُ مِنْ كُلِّ اٰفَةٍ بِقُدْسِهٖ

யாஸாக்கியத் தாஹிறு மின்குல்லி
ஆபத்தின் பிகுத்ஸிஹி.

14-வது இஸ்ம் ஜமாலீ.

يَا كَافِي الْمُوَسِّعُ لِمَا خَلَقَ مِنْ عَطَايَا فَضْلِهٖ

யாகாபியல் மூஸிஉ லிமாகலகமின்
அத்தாயா பல்லிஹி.

15-வது இஸ்ம் ஜமாலீ.

يَا نَقِيًّا مِنْ كُلِّ جَوْرٍ لَمْ يَرْضَهُ وَلَمْ يُخَالِطْهُ فِعَالُهٗ

யானகிய்யன் மின்குல்லி ஜௌரின் லம்யர்
லஹு வலம்யுகாலித்ஹு பிஆலுஹு.

16-வது இஸ்ம் ஜமாலி.

يَاحَنَّانُ أَنْتَ الَّذِيْ وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَّعِلْمًا

யாஹன்னானு அந்தல்லதீ வஸிஃத்த குல்ல
ஷைஇன் றஹ்மத்தன் வஇல்மன்.

17-வது இஸ்ம் ஜமாலி.

يَامَنَّانُ ذَا الْاِحْسَانِ قَدْ عَمَّ كُلَّ الْخَلَائِقِ مَنُّهٗ

யாமன்னானு தல்இஹ்ஸானி கத் அம்ம குல்லல்
கலாயிகி மன்னுஹூ

18-வது இஸ்ம் ஜமாலி.

يَادَيَّانَ الْعِبَادِ كُلٌّ يَّقُوْمُ خَاضِعًا لِّرَهْبَتِهٖ وَرَغْبَتِهٖ

யாதய்யானல் இபாதிகுல்லுன் யகூமுகாலி அன்
லிறஹ்பத்திஹி வறக்பத்திஹி.

19-வது இஸ்ம் ஜமாலி.

يَاخَالِقَ مَنْ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ كُلٌّ اِلَيْهِ مَعَادُهٗ

யாகாலிகு மன் பிஸ்ஸமா வாத்தி வல் அர்லி,
குல்லுன் இலைஹி முஆதுஹூ,

20-வது இஸ்ம் ஜமாலி

يَا رَحِيمَ كُلِّ صَرِيخٍ وَمَكْرُوبٍ وَغِيَاثَهُ وَمَعَاذَهُ

யாறஹீம குல்லிஸரீஹின் வமக்றூபின் வகியா
தஹூ வமஆதஹூ.

21-வது இஸ்ம் ஜமாலி.

يَا تَامُّ فَلَا تَصِفُ الْأَلْسُنُ كُلَّ جَلَالِهِ وَمُلْكِهِ وَعِزِّهِ

யாதாம்மு பலாதஸிபுல் அல்ஸுனு குல்ல
ஜலாலிஹி வமுல்கிஹி வஇஸ்ஸிஹி.

22-வது இஸ்ம் ஜமாலி

يَا مُبْدِعَ الْبَدَائِعِ لَمْ يَبْغِ فِي إِنْشَائِهَا عَوْنًا مِنْ خَلْقِهِ

யாமுப்திஅல் பதாயி இலம்யப்கி பீஇன் ஷாயிஹா
அவ்னன்மின் கல்கிஹி.

23-வது இஸ்ம் ஜமாலி

يَا عَلَّامَ الْغُيُوبِ فَلَا يَفُوتُ شَيْءٌ مِنْ حِفْظِهِ

யாஅல்லாமல் குயூபிபலா யபூது ஷையஉன்
மின் ஹிப்லிஹி.

24 வது இஸ்ம் ஜமாலி

يَا حَلِيمُ ذَا الْأَنَاةِ فَلَا يُعَادِلُهُ شَيْءٌ مِنْ خَلْقِهِ

யாஹலிமு ஸல் அனாத்தி பலாயு ஆதிலுஹூ
ஷைஉன் மின் கல்கிஹி.

25-வது இஸ்ம் ஜமாலி.

يَا مُعِيدُ مَا أَفْنَاهُ إِذَا بَرَزَ الْخَلَائِقُ لِدَعْوَتِهِ مِنْ مَخَافَتِهِ

யாமுயீதமா அப்னாஹூ இஸாப்றஸல்கலா
யிகு லிதஃவத்திஹிமின் மகாபதிஹி.

26-வது இஸ்ம் ஜமாலி.

يَا حَمِيدَ الْفِعَالِ ذَا الْمَنِّ عَلَى جَمِيعِ خَلْقِهِ بِلُطْفِهِ

யாஹமீதல்ப ஆலிஸல்மன்னி அலா ஜமீஇ கல்
கிஹி பிலுத்பிஹி.

27-வது இஸ்ம் ஜமாலி.

يَا عَزِيزُ الْمَنِيعُ الْغَالِبُ عَلَى جَمِيعِ أَمْرِهِ فَلَا شَيْءَ يُعَادِلُهُ

யா அஸீஸுல் மனீஉல் காலிபு அலாஜமீஇ
அம்ரிஹி பலாஷைஉன் யுஆதிலுஹூ

28-வது இஸ்ம் ஜமாலீ.

يَا قَاهِرًا ذَا الْبَطْشِ الشَّدِيدِ اَنْتَ الَّذِي لَا يُطَاقُ انْتِقَامُهُ

யாகாஹிறுஸல் பத்ஷிஷ் ஷதீதி
அந்தல்லஸீ லாயுதாகுன் தகாமுஹு.

29வது இஸ்ம் ஜமாலீ.

يَا قَرِيبُ الْمُتَعَالِي فَوْقَ كُلِّ شَيْءٍ عُلُوُّ ارْتِفَاعِهِ

யாகரீபுல் முத்தஆலி பவ்க
குல்லிஷையின் உலுவ்வுர்திபாஇஹி.

30-வது இஸ்ம் ஜமாலீ.

يَا مُذِلَّ كُلِّ جَبَّارٍ بِقَهْرِ عَزِيزِ سُلْطَانِهِ

யமுஸில்ல குல்லி ஜப்பாரின் பிகஹ்ரின்
அஸீஸி சுல்த்தானிஹி.

31-வது இஸ்ம் ஜமாலீ.

يَا نُورَ كُلِّ شَيْءٍ وَّهُدَاهُ اَنْتَ الَّذِي فَلَقَ الظُّلُمَاتِ نُورُهُ

யாநூற குல்லி ஷையின் வஹுதாஹு
அந்தல்லஸீ பலக்த்தல்ழுலு மாத்திபி நூரிஹி.

32-வது இஸ்ம் ஜமாலி

يَاعَالِي الشَّامِخُ فَوْقَ كُلِّ شَيْءٍ عُلُوُّ ارْتِفَاعِهِ

யாஆலியஷ்ஷாமிகு பௌககுல்லி
ஷைஇன் உலுவ்வுர்த்தி பாஇஹி.

33-வது இஸ்ம் ஜமாலி, ஜலாலி.

يَاقُدُّوسُ الطَّاهِرُ مِنْ كُلِّ سُوءٍ فَلَا شَيْءَ يُعَادُهُ مِنْ جَمِيعِ خَلْقِهِ بِلُطْفِهِ

யாகுத்தூசுத் தாஹிறு மின்குல்லி சூஇன்பலா
ஷைஉன் யுஆதுஹூ மின்ஜமீஇ
கல்கிஹி பிலுதபிஹி.

34-வது இஸ்ம் ஜமாலி

يَامُبْدِئَ الْبَرَايَا وَمُعِيدَهَا بَعْدَ فَنَائِهَا بِقُدْرَتِهِ

யா முப்தி அல்பறாயா வமுயீதஹா பஃத்
பனாயிஹா பிகுத்றத்திஹி.

35-வது இஸ்ம் ஜமாலி

يَاجَلِيلُ الْمُتَكَبِّرُ عَلَى كُلِّ شَيْءٍ فَالْعَدْلُ أَمْرُهُ وَالصِّدْقُ وَعْدُهُ

யாஜலீலுல் முதகப்பிறு அலாகுல்லி ஷையின்
பல் அத்லு அம்றுஹூ வஸ்ஸித்கு வஃதஹூ.

36-வது இஸ்ம் ஜமாலி.

يَا مَحْمُودُ فَلَا يَبْلُغُ الْأَوْهَامُ كُلَّ ثَنَائِهِ وَمَجْدِهِ

யா மஹ்மூது பலாயப்லுகுல் அவ்ஹாமு
குல்ல ஸனாயிஹி வமஜ்திஹீ

37-வது இஸ்ம் ஜமாலி

يَا كَرِيمُ الْعَفُوُّ ذَا الْعَدْلِ أَنْتَ الَّذِي مَلَأَ كُلَّ شَيْءٍ عَدْلُهُ

யாகரீமல் அப்வி தல் அத்லி அந்தல்லதி
மலஅ குல்ல ஷையின் அத்லஹூ.

38-வது இஸ்ம் ஜமாலி

يَا عَظِيمُ ذَا الثَّنَاءِ الْفَاخِرِ وَالْعِزِّ وَالْمَجْدِ وَالْكِبْرِيَاءِ فَلَا يَذِلُّ عِزُّهُ

யா அளீமு தஸ்ஸனாயில் பாகிறிவல் இஸ்ஸி
வல்மஜ்தி வல்கிப்ரியாஇ பலாய
தில்லு இஸ்ஸுஹூ

39 வது இஸ்ம் ஜமாலி.

يَا قَرِيبُ الْمُجِيبُ الْمُدَانِي دُونَ كُلِّ شَيْءٍ قُرْبُهُ

யாகரீபுல் முஜீபுல் முதானீ தூனகுல்லி
ஷையின் குர்புஹூ.

40-வது இஸ்ம் ஜமாலீ

يَا عَجِيبَ الصَّنَائِعِ فَلَا تَنْطِقُ الْأَلْسُنُ بِكُلِّ آلَائِهِ وَثَنَائِهِ وَنَعْمَائِهِ

யா அஜீபஸ்ஸனாயிஇ பலாதந்திகுல அல்சுனு
பிகுல்லி ஆலாஇஹி வதனாஇஹி வநஃமாயிஹி

41-வது இஸ்ம் ஜலாலீ

يَا غِيَاثِي عِنْدَ كُلِّ كُرْبَةٍ وَمُجِيبِي عِنْدَ كُلِّ دَعْوَةٍ وَمَعَاذِي عِنْدَ
كُلِّ شِدَّةٍ وَيَا رَجَائِي حِينَ تَنْقَطِعُ حِيلَتِي،

யாகியாதீ இந்த குல்லி குருபத்தின்

வமுஜீபீ இந்த குல்லி தஃவத்தின் வம

ஆதி இந்த குல்லி சித்ததின் வயாறஜாஹீன

தன்கத்திஉ ஹிலதீ.

வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.



இந்த இடைமுக்குப் பேர் காச்சலுக்குடைய தல்லமு என்று சொல்லப்படும். இதை ஒரு துண்டிலெழுதி தலைக்கு தாளாகவேவைக்கவும். காச்சல் உடனே மாறும்.....................

கண் திருஷ்டி மாறு கிறதற்கு இந்த இஸ்மை எழுதி கட்டவும்.................

الوكيل	ونعم	الله	حسبنا
معطي	محيط	سابق	عزيز
عالم	مهلك	واحد	مانع
باقي	معبود	مميت	محيي

இஸ்முகளின் ஷர்த்து.

யாதொருவன் இஸ்ம் அஸ்மாக்கள் ஓதவேணுமென்று நாடுகில் முதலாவது தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ்ஜு முதலாகிய பறுலான இபாதாத்துகளை களாவில்லாமலிருந்தும் சுன்னத்தான அமல்களும் செய்யவேணும். இன்னும் ஹஸது, கெடுப்பு, கோபம், பகீல், ஷஹ்வானிய்யா முதலிய கெட்ட-துகளை விட்டும் கல்பை அப்புறவாக்கிவித்தும் அந்தந்த இஸ்முகளுக்குச் சொல்லிய ஷர்த்துகளோடு அவ்வகையில் காமிலான முறுஷிதுடைய உத்திரவு வாங்கியும் ஓதவேண்டும். இன்னும ஹலாலான ஒஜீபனம் முக்கியமான ஷர்த்தாயிருக்கும். ஏனெனில் ஹறாமான ஒருபிடி ஒஜீவனம் ஒருவனுடைய அகத்துள்ளிருக்கில் அவனுடைய துஆ அறவே கபூலாகாதென்று ஹதீதில் வந்திருக்கிறது. இனி ஒருவன் பேரில் கெடுதியை நாடி ஓதுகிறதற்கு ஷர்இன்படி அவனைக் கொண்டு அநியாயமுண்டாயிருக்க வேணும். அப்படி அல்லாதிருக்கில் அவ்வினை அவனளவில் மீளும். ஆனதால் அதுகளை நோட்டமிட்டு ஓதவேண்டியது அவசியம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஹயாதுல் ஹைவான்.

இது உயிர்ப்பிராணிகளாகிய ஜெந்துக்களின் குணகுணங்களை பயான் செய்வது.

அவைகளாவது.

உயிர்ப்பிராணிகளில் சிலதுகளுக்கு காசியத்துகளும் அதை பற்றிய, அநேக ஹதீதுகளும் குஷ்டம். மேகம், இருமல், காசம், பெருவயறு, நீரிழிவு, பக்கவாதம் முதலான கடினமான பெரிய வியாதிகளுக்கும் எலி, பாம்பு, தேள், கட்வாகாலி முதலான கடி விஷங்களுக்கும் மலடர்களுக்கு கற்பமுண்டாகிறதற்கும், தாது விர்த்தி, போகசக்திகளுக்கும், இன்னும் அநேக விதமான சில்லறை வியாதிகளுக்கும், ஒவ்வொரு வஸ்துவினால் பரிகாரம் சொல்லப் படுகிறது.

யானையின் பயான்.

யானையாகிறது ஹிந்துதேசத்திலகப்படும். அது அஞ்சு வயது சென்றால் புணரும். இரண்டு வருஷம் ஹமலாயிருக்கும். குட்டி போட்டதின் பின் 3-வருஷம்வரை ஆண்புணர அடுக்காது. அதற்கு ஒட்டகையைபோல் கடினமான ஹஸைதண்டும், சிலபோது மாவுத்தனை ஹஸைதுவைத்து கொன்றுவிடும். அதின்நாவு பிறட்டப் பட்டதாயிருக்கும், அப்படி அல்லாதிருக்கில் அதின் கர்மையின் கடிஷால் வார்த்தை மொழியும், அதின் மார்பு இன்சானைப்போலே நெஞ்சிலாயிருக்கும், அதினுடைய் வீரப்பல் மிகவும் பெருக்கும், அதன் கிரை 100-மன் வரை இருக்கும், அதுமிகவும் பாரமாக இருப்பதுடன் மிகவும் மெல்லினமாய் காலடி சப்திக்காமல் நடப் பதற்குதிராணியுண்டு, சிலகால் ஒரு இன்சானின் புறமாலே நடந்து போம். அவன் அதை அறியான், இன்னும் மாவுதனிடத்தில் வசப் பட்டுதானால் மிகுபாரமாகிய கனமான வேலைகளெல்லாம் மனிதர்கள் செய்கிறதுபோல் செய்கிறதற்கு திராணியுண்டு. இது மிருகி

வயதுக்கு ஜீவித்திருக்கும். ஹகீம் அர்ஸ்தூ சொல்லுகிறார்கள், ஒரு யானை 400-வயதுக்கு ஜீவித்திருந்ததென்றும், ஆனால் தேள் பல்லியை கண்டு சாகுமாபோலே இது பூனையைக்கண்டு அஞ்சும் பயப்படும் (புலியாகிறது சாவலைக்கண்டு பயப்படும்.) ஷாக்யின்படி மஸ்ஹூறுன் சொல்படி அதைத்தின்னுகிறது ஹறும்.

பிரயோஜனங்களாவது.

யானையின் காதிலுள்ள ஊத்தையை யாதொருவனுக்கு குடிப்பித்தால் 7-நாளைக்கு நித்திரையைவிட்டும் விழிக்கமாட்டான். அதன் பித்தை வெண்குஷ்டத்தில் பூசி 3-நாளைக்கு விட்டுவைத்தால் அதை போக்கிவிடும். அதின் எலும்பை குழைந்தைகளின் கழுத்தில் கட்டினால் மூஷல்வலியை விலக்கும். அதின் தந்தத்தை ஏதொரு மரத்தின் பேரில் கட்டப்பட்டால் அவ்வருடத்தில் காய் விடாது. ஏதொரு மரம் முந்திரிகை பயிர்பச்சை முதலானதுகளுக்கு அதன் எலும்பைக்கொண்டு புகையிட்டால் அதில்புழுபூச்சி அண்டாது, மூட்டையுள்ள வீட்டில்அதை புகைத்தால் மூட்டைகள் மாண்டும்போம், அதன் தந்தத்தை இளைத்த பொடியை நாளொன்றுக்கு 2-திர்ஹத்திடை தண்ணீரும் தேனும் கூட்டி குடித்தால் பாடம் பிலமாகும். இனி அதை 7-நாளைக்கு மலடியான பெண்பிள்ளை குடித்து பின்பு ஜிமாஉ செய்தாளானால் கெர்ப்பமாவாள், சாம் கண்டவனுக்கு அதன்தோல் துண்டை கட்டினால் உடனே கண்டிக்கும். அதன் விட்டையை கரித்து பொடித்து தேனில் மத்தித்து மூடி உதிர்ந்த கண்ணிமையில் தேய்த்தால் மூடி முளைக்கும், அதின் மூத்திரத்தை யாதொரு பெண்பிள்ளை அதை அறியாதவளாய் குடித்து பின் ஜிமாஉ செய்யப்படுவாளே யானல் கெர்ப்பமாவாள். அதன் விட்டையை கட்டிக்கொண்டவள் அது இருக்குமளவும் கெர்ப்பமாகாள், அதன் தோலை புகைத்தால் மூல முளையை நீக்கும். (இன்ஷா அல்லா).

புலியின் பயான்.

புலியாகிறது அநேக வகையுண்டு. ஒரு ஒட்டை செடுக்கம் கறுப்பு கொம்பு முளைத்திருப்பதுமுண்டு. அது ஹைவான்களில் மிகவும் சிறப்புடையது. அதனிடத்தில் தைரியமும் கானத்தனமும்

சங்கையுமுண்டு. அதின் உதரியத்தில் நின்று முன்னது, கருமங்களில் பின்னிடையாமல் முன்னேறுகிறது. இனி அதின் கோழைத்தனத்தில் நின்றுமுள்ளது, சாவலுடைய சப்தம், பூனை, வெங்கலத்தோசை இதுகளில் நின்றும் திடுக்கிடுகிறதும் நெருப்பை கண்டால் ஹைறுறுகிறதும். இனி அதின் சங்கையில் நின்று முன்னது கடின பசியாயிடினும் ஹைறுக்காறியை அடுக்காதிருப்பது. இனி அது 1000 வயதுக்கு ஜீவித்திருக்கும். அதற்கடையாளம் பல்லு விழுந்திருக்கிறது. அது எவ்வேளையும் சுரம் பிடிக்கப் பட்டதாயிருக்கும். அதற்கு சற்று நூஹ் அலைஹிஸ்ஸலாம் கப்பலில் கல்குகள் இதுடன் இருக்கப்பயந்ததால் இதின் பேரில் காச்சலை அல்லாஹுத் தஆலா சாட்டினான். இதுதான்பூமியில் முதலாவது இறங்கிய காச்சல். அப்பால் எலி மிடை செய்தபோது புலியை தும்மச் செய்தான். அதில் நின்றும் பூனை புறப்பட்டது. உடனே எலி பதுங்கிவிட்டது.

ஹிக்காயத்து.

ஓர் புலியானது கிழமாகிவிட்டது. அதனால் நடக்கவும் அலையவும், தாகத்தில்லாமலும் வேட்டையாட ஹிக்மத்தில்லாமலும் பட்டினியாய் சாவுகிறதாயிருந்தது. அப்போது யோசித்தது. நாமிதற்கு எதையாவது வேட்டையாடி தின்னவேணுமென்று யோசித்து வியாதியஸ்த னென்பதாய் வேடம் பூண்டுக்கொண்டு ஒரு மலைப்பொதும்பினுள்ளிருக்க அப்போது காட்டிலுள்ள மற்ற மிருகங்களெல்லாம் இதை நலம் வினவுகிறதற்காய் வரத்தொடர்ந்தது. எந்த மிருகம் இதனருகே வந்ததோ அதை பிடித்தடித்து வயிற்றை நிறப்பிக் கொண்டிருந்தது. ஒரு நாளையதினம் ஒரு நரியானது அதை கண்டு மினக வந்து பொதும்பை விட்டும் வெளியே நின்றுக் கொண்டு, எஜமானே உங்களுடைய சவுக்கியம் எப்படியிருக்கிறதென்று கேட்க, புலிசொல்லும், எல்லோரைப்போலவும் உள்ளே வராமல் ஏன் வெளியே நிற்கிறாய் என்றபோது, நரி சொல்லும், நாம் அகத்து நின்றபோதிலும் நம்முடைய தெரிசனையில் தங்களை முழுதிலும் கண்டவனாகத் தானிருக்கிறேன். ஆனாலும் தங்களின் சமீபமாய் இந்த பொதும்பினுள் வந்தவர்கள் மீள்வார்களென்பதில் நான் சந்தேகிக்கிறேன். ஆகையால் தூரத்திலிருந்தே என்னுடைய சலாம் உண்டாவதாகவுமென்று சொல்லிவிட்டு போய்விட்டது.

இதன் கருத்தாவது:—புத்திமானாகிறவன் தனக்கு பகைவனிடத்தில் எப்பவும் தப்பித்தே யிருப்பான் அவனைக்கொண்டு எந்தக்கருமத்திலும் ஆசை வையான்.

ஹதீது.

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், புலியில் நின்றும் விரண்டோடுமாபோல் குஷ்டரோகக்காரனில் நின்றும் விரண்டோடும். ஹுக்மின்படி புலியை தின்னுகிறது ஹறாம்.

பிரயோஜனங்களாவது.

புலியின் கொழுப்பை ஜடலத்தில் தளமிட்டால் மற்றும் துஷ்ட மிருகங்கள் கிட்டவும் அண்டாது, பேன் பத்தாது. அதன் தோல் துண்டை புளூக்குக்கு முன்னுள்ள முஷல்வலிக்கு கட்டினால் குணமாம். அதை பிடவையுடன் வைத்தால் அதைகறையன் அண்டாது. அதன் கொழுப்பை இரண்டு காலிலும் கையிலும் பூசினால் குளிர்ச்சியினால் தோஷிப்பை தணிக்கும். அதன் வாலை அணிந்தவனிடத்தில் மகரும் ஷீலாவும் செல்லாது. அதின் தோலில் உட்கார்ந்து வந்தால் மூலத்தை கண்டிக்கும். நெற்றியின் கொழுப்பை பன்னீர் பூ பெண்ணையில் உருக்கி முகத்தில் தடவினால் ராஜவசியம் லோகவசியம், அதன் பித்தை கண்ணில் அஞ்சனமிட்டால் பார்வை கூர்மையாம். அதை தேனில் மத்தித்து கண்டமாலையில் தடவினால் நீங்கிவிடும். புலியின் சப்தம் கேட்ட முதலை மரித்து விடும் (வல்லாஹு அஃலம்.)

கரடியின் பயான்.

கரடியாகிறது துஷ்டமிருகங்களில் நின்று முள்ளது. அது புணர்ச்சியை நாடினால் ஆணும் பெண்ணும் தனித்த விடத்தில் செல்லும், பூமியில் சாய்ந்து படுத்து புணரும். அதின் ஷஹவத்தின் கொடூரத்தால் மனிதனையும் மருவ அழைக்கும். அதனை படிக்கிற கூர்மையும் அதற்குண்டும், என்றாலும் நற்கருமத்திற்காக அதை கொண்டும் நத்துதல் வைக்கக்கூடாது.

ஹிக்காயத்து.

ஓர் மலைப்பாம்பானது கறடியை கவ்விக்கொண்டு குகையுள் புகுத போகும்போது கறடியானது மிகவும் கூக்குரலிட்டு பயந்து கதறியதை ஒரு மனிதன் கண்டு கறடியின் பேரில் இரக்கம்வந்து பாம்பைவிட்டும் கறடியை தப்பித்து விட்டான். அப்போது கறடிக்கு இந்த மனிதன் பேரில் மிகவும் சந்தோஷமாய் இவனின் பின்னாலேயே தொடர்ந்துவிட்டது. அப்போது இவனதை தன்னைப் போலவே பாவித்து வளர்த்துக்கொண்டு வந்தான். அதுவும் இவனை மிகவும் பாதுகாக்கிறதுடன் இவன் சயினிக்கிறதாயிருந்தால் அது விழித்திருந்து இவன் விழிக்கும் வரையில் பாரா கொடுக்கிறது வழக்கமாயிருந்தது. ஒரு நாளையதினம் ஒரு மனிதன் இதைக் கண்டு இவனிடத்தில் கேட்பான், நீ உண்மை சொல்லவேணும் உனக்கு இந்த கறடியின் பேரில் என்ன நிலைபாடிருக்கிறதென்று கேட்கும்போது, இவன் நடந்த கைபியத்துகளெல்லாம் சொல்லி சொல்லுவான், அதனுடைய உயிரைக் காப்பாற்றின காரணத்தால் நம்மை நத்துதல் கொண்டிருக்கிறதென்று சொன்னான். இதை கேட்ட மனிதன் சொல்வான், ஓ புத்தி கெட்ட மனிதா, இந்த ஹைவானைக் கொண்டு நீ நலவின் பேரில் ஆசை கொள்ளாதே, இப்பவே உன்னை விட்டும் தூராக்கிவிடு யென்று சொன்னதை கேட்கவே, இவனுக்கு மிகவும் கோபம் வந்து அவனுடைய நஸீஹத்தை தூஷணித்தான். அப்பவே அவன் தன் காரியமாய் போய்விட்டான். அப்படியிருக்க ஒருநாளையதினம் இவன் காட்டில் படுத்தூங்கினான், அப்போது கறடியானது இவனின் சமீபமாய் காவல் காத்துக்கொண்டு ஈயோட்டிக் கொண்டிருந்தது. அப்போது ஓர் ஈயானது இவனின் தலையின்பேரி லுட்கார்ந்தது, இதுவும் பலவிடுத்தம் ஓட்டியும் மீள மீள உட்கார்ந்து கொண்டிருந்ததை பார்க்கவும் அதிக கோபமாகி ஓர் பெரிய கல்லை யெடுத்து ஈயின் பேரிலடித்தது, அந்த அடியானது இவனின் தலையில் விழுந்து தலை நுறுங்கி மிறந்து விட்டான்.

ஆகவே, கருத்தாவது:—புத்திமானாகிறவன் மூடத்தனமான பகுத்தறிவில்லாத துஷ்மனைக் கொண்டு எப்பவும் சிநேகிக்க மாட்டான். நல்லுபதேசங்களை எவர்களில் நின்று கேட்டபோதிலும் அபகரித்து அதைக்கொண்டு கோட்டமிட்டு நடப்பான். ஏனுள்

இன்சானாகிறவன் தன்னுடைய ஜயில் நின்றும் தான் மறந்தவனா யிருக்கிறான்; ஆனதால் அன்னியனுடைய வசியத்தில் நின்றும் தன்னுடைய நலவு தீங்கை தெரிந்துக் கொள்வான்.

பாயிதா.

இமாம் இப்னுஜவ்ஸீ அத்கியா வென்னும் கிதாபில் பேசிவருகிறார், ஒரு மனிதன் புலியைக்கண்டு விரண்டோடினான். தவறுதலாய் கிணற்றில் விழுந்திட்டான், அப்புலியும் அதில் விழுந்தது. அக்கிணற்றிலும் ஒரு கறடி யுண்டாயிருந்தது. அப்போது நீ எத்தனைநாளாய் இவ்விடத்திலிருக்கிறா யென்று கறடியைப் பார்த்து புலி கேட்டபோது சொல்லும், 3-நாளா யிருக்கிறேன். என்னை பசி கொல்லுகிறது, யென்றபோது புலி சொல்லும் நாமிருவரும் இவனைத்தின்று வயறு நிரப்புவோ மென்றது. அப்போது கறடி சொல்லும், மறுபடியும் நமக்கு பசி வந்தால் நாமென்ன செய்கிறது. ஆனால் நம்முடைய யோசனை யாகிறது நாம் உன்னை யாதொரு தீங்கும் செய்யமாட்டோம், நீ எங்களை இதைவிட்டும் வெளிப்படுத்த வேணுமென்று நாமிருவரும் இவனுக்கு சத்தியஞ் செய்து கொடுக்கவேணும். ஏனெனில் அது விஷயத்தில் நம்மைக்காண தத்துவமுடையவ னென்று கறடி சொல்லிற்று. அந்தப்படி இரண்டும் ஒத்து இவனுக்கு சத்தியஞ் செய்து கொடுத்தது. இவன் அந்த பரிவு களில் காலைவைத்து பேரிகலாசானான். அவ்விரண்டையும் கலாசாக்கி வித்தான்

இதின் கருத்தாவது:—புத்திமானாகிறவன் தன்னுடைய வல்ல ஒரு கருமங்கள் அடக்கலிலும் நற்கருமத்தை விட்டிடமாட்டான். தன்னுடைய ஷஹ்வத்தையும் தயரப்படமாட்டான். மீளவும் அவனுக்கு அதில் ஹலாக்குண்டா யிருந்தால் ஆறுபுதல்செய்கிறதை அறவே விட்டிடமாட்டான். எனினும் அக்கருமத்தின் ஒடுக்கத்தை நோட்டமிட்டு நற்கருத்தை பிடித்துக்கொள்வான். ஹூக்யின்படி கறடியை தின்னுகிறது ஹறாம்.

பிரயோஜனங்களாவது.

கறடியின் விரப்பல்லை முலைப்பாலில் போட்டு குழந்தைக்கு புகட்டினால் இலேசாய் பல் முளைக்கும். அதின் கொழுப்பை வெண்

குஷ்டத்தில் பூசினுல் அதை நீக்கும். அதின் வலது கண்ணைபிட வைதண்டில் வைத்து கெண்டைக்கையில் கட்டிக்கொண்டால் யாதொரு துஷ்டமிருகங்களை கண்டும் பயப்படான். இன்னும் தீராத சுரங்களும் தீரும். அதின் பித்தில் இரண்டு மண்சாடியை தேனும் வென்னீரும் கூட்டி குடித்தால் மூலவியாதியை நீக்கும், காத்துகளை கண்டிக்கும். இனி அதின் பித்தை யாதொருவன் வலது தொடையில் கட்டிக்கொண்டு ஜிமாஉ செய்தால் நாடியமட்டும் புணருவான். யாதொரு சங்கடமும் செய்யாது. அதின் இரத்தத்தை கண்ணில் அஞ்சன மிட்டால் கண்ணிமைமுடி முளைக்கிறதை விலக்கும். அதை பிடுங்கியபின் செய்தால் முடி முளையாது. அதின் கொழுப்பை சிறு குழந்தைகளின் மீதில் தேய்த்தால் தீங்கு அடங்கலுக்கும் காவலா யிருக்கும். அதைமூல முளையுள்ள வைத்தால் பலன் கொடுக்கும். அதின் வலது கண்ணை உலர்த்தி குழந்தைகளுக்கு கட்டினுல் உறக்கத்தில் திடுக்கிடாது. அதன் தோல் துண்டை கெட்டகுணமுள்ள குழந்தைக்குக் கட்டினுல் அது நீங்கி நற்குணமுண்டாம். (இன்ஷா அல்லா.)

ஒட்டகத்தின் பயான்.

ஒட்டகையாகிறது விலங்கினங்களில் அதைக்காணகைகுனைதை அல்லாஹுத் தஆலா, படைக்கவில்லை. சுமந்தால் கனதியை சுமக்கும், நடந்தால் மிருதுவே நடக்கும், கறந்தால் தாகத்தைத்தீர்க்கும், அறுத்தால் வயிற்றை நிறப்பும். கடலுக்கு வாகனம் கப்பலாயிருப்பதுபோல் இதைகரைக்கு வாகனமாக்கினுன். கரையில் தண்ணீர் குறைந்திருப்பதால் பத்துநாளளவும் தாகத்தின் பேரில் அதற்கு சபூறை உண்டாக்கினுன். இன்னும் ஹைவான்களில் இது பத்தினித்தனமுடையது, தாய்மீதும் சகோதரி மீதும் புணராது. அதற்கு பித்தில்லை. ஆனதால் தாகத்தின்பேரில்மிகுதி சபூர் செய்கிறது. அதின் ஈரலின் பித்தைபோல் ஒரு வஸ்து உண்டும், அதை கண்ணில் தீட்டினுல் கண்ணிருளை போக்கிவிடும்.

ஹனக்பியின் படி அதை தின்னுகிறதுஹலால், அது கொண்டு இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு இடத்தில் ஒழு முறியும். மற்ற மூவரிடத்திலும் ஒழு முறியாது.

பிரயோஜனங்களாவது.

ஒட்டகையின் இறச்சியை தின்றால் தாதை எழுப்பி வைக்கும். அதன் முடியை கரித்து ஓடுகிற இரத்தத்தில் தூவினால் அதை நிறுத்தும். ஆண் ஒட்டகத்தின் மூத்திரத்தை லாகிரிகொண்டவன் குடித்தால் அப்பவே தெளிச்சல் பெறுவான். அதன் கெண்டக்காலின் மூளையை பஞ்சிலாவது முடியிலாவது வைட்டி ஹைறலு தப்புறவானபின் 3-நாளைக்கு அபத்தன் வைத்திருந்து அப்பால் ஜிமாஉ செய்தால் கர்ப்பமுண்டாம், மலடியா யிருந்தாலும்சரியே

குதிரையின் பயான்.

குதிரையாகிறது ஹஜின் யென்றும் அத்தீகு வென்றும் இரண்டு வகையுண்டு. அதில் அத்தீகு என்பது தாயும் தகப்பனும் அறபியா யிருக்குமே அதுவாயிருக்கும்.

ஹதீது.

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், குதிரையுடையவனையும் குதிரை நிற்கிற வீட்டையும் ஷைத்தான் அடுக்கமாட்டான். இன்னும் அதினுடைய முன்னெற்றி ரோமத்தில் கியாம நாளளவும் கைறை கட்டப்பட்டதாயிருக்கும். இன்னும் மலாயிக்கத்துகளாகிறது வீண் விளையாட்டுடைய தலத்தில் ஹாஜிறாக மாட்டார்கள், குதிரை பந்தயத்திடத்திலும் பெண்சாதியுடன் புருஷன் விளையாடுகிறது இடத்திலுமே ஒழிய வென்று ஹதீது வந்திருக்கிறது.

ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறகு முளைத்த குதிரையுண்டாயிருந்தது. அதுதெளிவான தண்ணீரில் என்றும் குடியாது, ஏனெனில் அதில் தன்னுடைய சுரூபத்தை காணும் அதனால் திடுக்கிடும், கலங்கிய தண்ணீரில் அதைகாணமாட்டாது.

அபூதாவூதை தொட்டும் றிவாயத்து வருகிறது, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், யாதொரு அறபி குதிரையாவது எல்லா நாளிலும் இரண்டு துஆவைக்கொண்டு உத்திரவு கொடுக்கப்பட்டே ஒழிய இல்லை, அதாவது ‘அல்லா

ஹும்ம கமா கல்வல்தனீமன் கவ்வல்தனீ பஜ அலனீ மின் அஹப் பமாலிஹி இலைஹி' யென்றதாயிருக்கும். குதிரையில் துஆ கபூலாகிறது முண்டு, துஆ கபூலாகாதது முண்டும். குதிரையாகிறது 90-வயதுக்கு ஜீவித்திருக்கும், மனிதரைப்போலே மனுமும்காணும்.

ஹுக்மின்படி அதைதின்னுகிறது ஹனபீ நஹிமஹால்லா இடத்தில் மாத்திரம் ஹறாம், மற்ற மூவர்களிடத்திலும் ஹலால்.

பிரயோஜனங்களாவது.

அறபி குதிரையின் தசையாகிறது வாய்வுகளை கண்டிக்கும். அதன் பல்லை குழந்தைகளுக்கு கட்டினால் யாதொரு வருத்தம் மன்றியே பல் முளைக்கும். அதனுடைய வேர்வையை குழந்தையின் அடி வயிற்றிலும் கம்முக் கூட்டிலும் பூசினால் முடிமுளையாது. அவ்வேர்வை துஷ்ட மிருகங்களுக்கும் பாம்புகளுக்கும் கொல்லு மெனத்தக்க நஞ்சாயிருக்கும், அதன் குளம்பின் சாம்பலைத்தான் எண்ணையில் கலந்து கண்டமாலையில் தடவினால் அதை சுத்தப் படுத்தும். அதின் பாலை யாதொரு பெண்பிள்ளைக்கு அதன் பாலென்றறியாமலிருக்கிற ஹாலில் குடிப்பித்து அப்பாலே புருஷனோடு ஜிமாஉ செய்தால் கெர்ப்பமுண்டாம். (இன்ஷா அல்லா) அதை தேனுடன் கலந்து குடித்தவனை புணறுதல் மிகவும் இன் பத்தை கொடுக்கும். அதன் வால்முடியை பிடுங்கி வீட்டுவாசலில் வைத்தால் அது கட்டப்பட்டிருக்கும் காலமெல்லாம் அவ்வீட்டித மூட்டைபுகுதாது. அதன் விட்டையை உலர்த்தி பொடித்து காயங் களின் பேரில் தூவினால் இரத்த ஓட்டத்தை நிறுத்தும். அதை கண்ணில் அஞ்சன மிட்டால் இடையூறுகிய வெள்ளையை நீக்கும், அதை புகைபிடித்தால் பிள்ளையை வயிற்றை விட்டும் வெளியாக்கி விக்கும். அதன் குளம்பை புகைத்தால் பிள்ளையையும் தடிப்புண்ட நஞ்ச கொடியையும் வெளியாக்கி வைக்கும் (இன்ஷா அல்லா.)

கடல் குதிரை.

கடல் குதிரையாகிறது மின்று நிலத்திலிருக்கிறது. முன் னெற்றிரோமம் குதிரையைபோலும், இருகாலும் மாட்டைப்

போலும், வால் பன்றிவால் போலுமிருக்கும். கரையில் வந்து பயிர்களில் மேயும். மனிதர் மனிதரல்லாததையும் சிலகால் கொல்லும். ஹுக்மின்படி அதைதின்கிறது ஹலால்.

கழுதையின் பயான்.

கழுதையாகிறது தன் இனமில்லாததின்பேரில் பொரிச்சலுக்கு விழும், ஹைவான்களில் தன் இனமில்லாததின் பேரில் பொரிச்சல் விழுகிறது, கழுதையும் குதிரையும் அல்லாது வேறில்லை. கழுதை 30-மாதம் சென்றால் பொரிச்சலுக்கு விழும். ஹுக்மின்படி அதை தின்னுகிறது ஹறாம்.

பிரயோஜனங்களாவது.

கழுதையின் காதிலுள்ள ரத்தத்தை குடிப்பிலாவது மற்றொன்றிலாவது சேர்த்து அருந்தினவன் போதமற்றவனாய் ஓரே உறக்கமாய் உறங்குவான். அது புணரும் போது அதின் வால் முடியை பிடுங்கி தொடையில் கட்டிக்கொண்டு ஜிமாஉ செய்தால் தாதை விர்த்திக்கும். அதன் வாலில் கல்லை கட்டினால் ஓலமிடாது. அதன் கால்கொலும்பில் நின்றும் மோதிரம் செய்து இட்டுக்கொண்டால் முஷல்வலி நீக்கும் அதன் நெற்றிதோலை குழந்தைகளுக்கு கட்டினால் திடுக்கம் நீங்கும். அதன் விட்டையில் சிர்க்காவை தெளித்து நாசியில் முகர்ந்தால் பொன்னி மூக்குடைகிறதை நிறுத்தும். கட்டுவக்காலி கொட்டப்பட்டவன் கழுதையின்பேரில் பின் புறத்தை பார்க்கமுகம்வைத்தேறி இருந்தானேயானால் அவ்விஷம் அதனளவில் இறங்கிவிடும் சவமாத்தியம். இன்னும் இதுபோலே தான் அதன் காதில் போய் என்னை இன்ன தலத்தில் தேள் கொட்டி விட்டதென்று சொன்னாலும் வலிநீங்கும். அதன் மூளையை மைத்தான் எண்ணெயில் கூட்டி தலையின் பேரில் தளமிட்டால் முடிசெடுகமாம். அதன் நரலை சுட்டு சிர்க்காவி லூறப்போட்டு தின்றால் முணல் வலியை தணிக்கும். அதன் பாலைதகறில் தளமிட்டால் தாதை எழுப்பி வைக்கும். அதன் சப்தம் நாயை சாக முடுக்கும் படி தங்கடம் செய்யும். (இன்ஷா அல்லா.)

எருமை மாட்டின் பயான்.

எருமையாகிறது தைரியமும் நீரமுமுடையது. அப்படி இருப்பதுடன் மிகவும் திடுக்கமுடையது. கொசுக்கடித்தால் மிரண்டோடும், தண்ணீரில் சாடும். அதன் காலியத்தும் ஹூக்மும் பசுவைப் போலாம், எங்கிலும் அதன் தலையை தின்ருல்பேன் பத்தும், இனி அதன் மூளையிலொரு புழுவுண்டும். அதை கட்டினவனுக்கு உறக்கம் பிடியாது.

பசு மாட்டின் பயான்.

பசுமாடாகிறது கடினபிலமுடைய ஒருஹைவான். அல்லாஹுத் தஆலா அதை படைத்தான் இன்சான் பிரயோசனம் பெறுவதற்காக. அது பலவகையுண்டும். அதில் கின்றமுன்னது தான் எருமையாகிறது ஆனால் எருமை மிகுதி பாலுடையது. இனி இது ஆனையின் ஆசையாலும் மிரண்டோடும்.

ஹூக்மின்படி அதைதின்னுவதும் அதன் பாலைக் குடிப்பதும் இன்மாஉ கொண்டு ஹலால்.

ஹதீது.

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானுர்கள், பசுவின் பாலையும், நெய்யையும் பத்திப் பிடித்துக்கொள்ளுங்கள், அதன் கறியை பயந்துக்கொள்ளுங்கள். ஏனெனில் அதன் நெய்யும் பாலும் மருந்தாயிருக்கும். அதன் கறிதஷலா யிருக்குமென்று திருவுளமானுர்கள்.

பிரயோஜனங்களாவது.

பசுவின் கொழுப்பை சிவந்த அரிதாரத்துடன் வீட்டில் புகைத்தால் அதிலுள்ள பாம்பு தேளு முதலிய சகல விஷஜெந்துக்களும் ஓடிப்போம். அதை பூசிய பாத்திரத்தில் செல்லுகள் வந்து கூடும். அதின் கொம்பை அணுக்கி வஜீபணத்தில் சேர்த்துக் கொண்டால் நாலாமுறை காச்சலும் தீரும். அதை குடித்தால் தாகத்தை எழுப்பும். அதன் இரத்தம், ஒழிறு இரத்தத்தை நிறுத்தும்.

அதன் பித்தும் வெங்காயத் தண்ணீரும் கூட்டி மூலமுளையில் தடவினுல் அதன் வலியை ஒடுக்கும், குணம் கொடுக்கும். அதை திரேகத்திலுள்ள கரும்புள்ளிகளில் தேய்த்தால் அதை நீக்கும். அதைதேனுடன் கலந்து கண்ணில் அஞ்சன மிட்டால் கண்ணிருளை மாற்றும், இனி அதுடன் தேனும், பொரிகாரமும், குமுட்டிக் காய்சதையும் கூட்டி அண்டியில் தேய்த்தால் குணமாம். அறஸ்து சொல்லுகிருர், கறுத்த பசுவின் பித்தைக்கொண்டு கண்ணில் அஞ்சனமிட்டால் அது பார்வையை கூர்மை யாக்கும். கைமாச சொல்லுகிருர் பசுவின் தண்ணைகளைந்து அதன் தண்ணீரைக் கொண்டு கடிதத்தில் எழுதினுல் பகலில் எழுத்து வெளி யாகாது. இரவில் வாசிக்கலாம். பசுவின் மூடிகளை கரித்துக் குடித்தால் பல்லுவலியை கேட்கும், இருமலுண்டாயிருந்தால் பழைய இரும்பாணியை பழுக்கக் காச்சி கறந்தபாலில் புகுத்து வெறுவயற்றில் குடித்தால் அது சவாத்தியமாம். மூன்று நாள் வெறுவயற்றில் பாலை கறந்தவுடன் குடித்தால் முகத்திலுள்ள மஞ்சணிப்பை மாற்றும். கட்டிப்போட்டு நீனிபோட்டு கறக்கிற பாலைவிட மேய்ந்து வருகிறதின் பால் மேலாயிருக்கும். பாலைக் குடித்தபின் கனமான வஸ்துவை தின்னக்கூடாது, உடனே உறங்கவும் கூடாது. பசுவின் வெண்ணையை குழந்தைகளின் பிருகளில் தேய்த்தால் லேசாய் பல்முளைக்கும், கோழி கொழுப்பும் அது போலாம். (இன்ஷா அல்லா.)

பசுவின் கன்றின் பிரயோஜனம்.

கஸ்வினி இமாம் சொல்லுகிருர், அதின் கிடையை உதிர்த்தி கரித்து குடித்தால் ஜிமாஉ மிருதமாக்கிவைக்கும். புதுமையை காண்கிறவரைக்கும் அதன் கோஷத்தை உலர்த்திப் பொடித்து சூரணித்து ஒரு திர்ஹத்திடை கொண்டால் ஏலாதவிழுவலை கன்னிஸ்திரீயை கன்னியழிவிக்கச்செய்யும். அச்சூரணத்தை நீம்பறஷ்த்து முட்டையில் போட்டு அருந்திகுல் போகத்தை அதிகமாக்கி வைக்கும் புதுமைகாண்பான். (இன்ஷா அல்லா.)

காளைமாட்டின் பிரயோஜனம்.

காளைமாடாகிறது பசுவின் ஆணுயிருக்கும். அது பொலிர் திரக்கியபின் பேய்ந்த மூத்திரத்தின் மண்ணை எடுத்து கோஷத்தில்

பூசி புணர்ந்தால் தாதை எழுப்பிவிக்கும். அதன் ஊத்தாம் பெட்டியை உலர்த்தி பொடித்து சிர்க்காவும் குளிர்ந்த தண்ணீரும் கூட்டி விரிப்பில் மூத்திரம் பேய்கிறவனுக்கு குடிப்பாட்டினால் குணமாம். அதன் நீரைக்கொண்டு இரும்பிலெழுதினால் வாசிக்கலாம். அது நடக்காமல் நின்றால் அதன் விதையை கட்டினால் சீக்கிரமாய் நடக்கும். (இன்ஷா அல்லா.)

காட்டு மாட்டின் பயான்.

காட்டு மாடாகிறது நாலுவகையுண்டு. அதடங்கலும் கோடை காலத்தில் தண்ணீரைக் கண்டால் குடிக்கும், இல்லாவிட்டால் சபூர் செய்துகொள்ளும். அதற்குப் பதிலாக காற்றை முகக்கிறது கொண்டு கனுஅத்து செய்துக்கொள்ளும். அதடங்லே தின்னுகிறது ஹலால்.

தண்ணீர் மாட்டின் பயான்.

தண்ணீர் மாடு கடலில் நின்றும் வெளியாய் கரையில் பயிரை மேயும். அதன் விட்டையாகிறது அன்பருயிருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (வல்லாஹு அஃலம்) மனிதர்கள் சொல்லுகிறர்கள், அன்பருகிறது கடலின் ஆழியிலுள்ள ஒரு பூண்டாயிருக்கு மென்று. அது விஸ்ஹத்தாக யிருக்குமேயானால் இந்த மாட்டின் விட்டையாயிருக்கும். அன்பர் மூளைக்கும், கல்புக்கும், ஐயறிவுக்கும் பிரயோஜனம் கொடுக்கும்.

தும்பயாட்டின் பயான்.

(தும்பையாடாகிறது) அதற்கும் பாலைக்கும் பகையுண்டும் அது மிகுந்த பொறுமையுடையது.

ஹதீது.

உமறு றலியல்லாஹு அன்ஹுவை தொட்டும் றிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், என்னுடைய உம்மத்துபேரில் ஒரு ஜமான்

வரும் அதிலே புகஹாக்கள் ஒருவருக்கொருவர் ஹஸது வைப்பார்கள், இன்னும் ஒன்றுக்கொன்று பொருமையும் வைப்பார்கள், தம்பையாடு பொருமை வைக்குமாபோலே என்று திருவுளமானார்கள்.

தௌறாத்து வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது, தாடி நெடுகமாயிருக்கிறது உன்னை மருட்டவேண்டாம். ஏனெனில் தம்பையாட்டுக்கும் தாடியிருக்கத்தான் செய்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது.

ஹிக்காயத்து.

ஹஜ்ஜாஜிப்னி யூசுபு உடைய தாயார் பாரிஅத்து யென்பவள் அதபுக்கு ஹகீமாகிய ஹார்து கல்தாஉடைய மனைவியாயிருந்தாள். ஒரு நாள் சஹறுவக்த்தில் அவள் பல்குத்தி கொண்டிருக்கக் கண்டு தலாகு சொல்லிவிட்டார். அவள் ஏன் என்று கேட்டதற்கு, சொல்வார், நீ சஹறு வக்தில் பல்குத்தினையே, இன்னேரம் நீ ஓஜி பனம் தின்னுகிற வளாயிருந்தால் நீ வயற்று செல்லியாயிருப்பாய், அல்லது இராத்திரி தின்கிறதினுள்ள வஸ்தும் பல்லிடுக்கி லிருந்ததாயிருந்தால் நீ அருவருப்பானவளா யிருப்பாய், ஆனதாலென்றார். அதற்கவள் அவ்விரண்டு மில்லை, நான் உலுவின் பின்வாக்கு செய்ததில் அதினுடைய துண்டு பல்லிடுக்கில் புகுந்திருந்தது, அதை குத்தினேனென்றாள். பின்பு யூசுபுப்னுல் ஹகம் என்பவருக்கு வாக்குப்பட்டு ஹஜ்ஜா இபுனு யூசுபை பெற்றாள். அவன் பிறந்த போது மிகவும் நிறம் கெட்டவனும், துபுரில்லாதவனும், பிறந்தான், பின்பு துபுறு துளைத்தார்கள். 3-நாள்வரையும் பால் குடித்தானில்லை. ஒரு ஷைத்தான் ஹார்திபுனு கல்தா உடைய ரூபத்தில் வந்து சொல்வான், தம்பையாட்டை அறுத்து அதின் இரத்தத்தை கொழுகுவாயில் தேய்த்து கரும்பாம்பை அறுத்து அதன் இரத்தத்தை வாயிலும் விட்டு, மூகத்தில் 3-நாள் தேயுங்கள், பால்குடிக்குமென்றான். அந்தப்படி செய்தார்கள், பால்குடித்தான். ஆனதால் இரத்தத்தை ஓட்டுகிறதை விட்டும் சபுறு செய்யாதவனும், எனக்கு அதைக்காண இன்பமான வஸ்துவும் வேறில்லை யென்று சொல்லுகிறவனுமா யிருந்தான். அவன் படையில் வெட்டினதை தவிர கட்டிவைத்து வெட்டினபேர்களை கணக்குப்

பார்த்ததில் லக்ஷத்து இருபதினாயிரம் பேர்களை வெத்திவிட்டது. அவனுடைய சிறைசாலையில் 50,000 ஆண் பிள்ளைகளும் 30,000 பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். அதில் நின்றும் 16,000-பேர்கள் நிர்மாணியமான பேர்கள், ஆண் பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் ஒரே தலத்தில் சிறையில் போடுகிற வனுயிருந்தான். சிறைசாலைக்கு மேல் மூகடில்லாத தாயிருந்தது. அவன் செத்தபின் சிறைசாலையை பார்த்ததில் 33,000-பேர்கள் ஏதும் குற்றமில்லாதவர்கள் உண்டா யிருந்தார்கள். அவன் தன்னுடைய கணக்கனிடத்தில் நாம் எத்தனை பேர்களை வெட்டிருப்போமென்று கேட்டான். கணக்கன் 30,000-பேரென்று சொன்னான். அவன் இறாகுதேசத்தில் 20-வருஷம் பட்டத்துக்கிருந்தான். 53-வயதில் செத்தான். அவன் ஜும்ஆநாளில் வாகனத்தி லேரிபோகும் போது இரச்சல் கேட்டது. இதென்ன இரச்சலென்று கேட்கவும் சிறையிலுள்ளவர்கள் பசியையும், அதாபையும், குறித்து சப்தம் போடுகிறார்களென்று சொல்லப் பட்டது. அதற்கவன் அக்கோணத்தளவில் திரும்பி பார்த்து மாலிகு அலைஹிஸ்ஸலாம் நகரவாதிகளைப் பார்த்துச் சொல்லுகிறதுபோல் சொன்னான், அந்தஜும்ஆ போக மறுஜும்ஆ தொழுகிலை இதுகொண்டும், இதுபோல் கொற்ற கருமங்களைக் கொண்டும் உலமாக்களில் சிலர் அவனைக்காபிறாக்கினார்கள் (மஆதல்லா.)

தம்மையாட்டின் பிரயோஜனங்களாவது.

தம்பையாட்டின் நாடியை நாளாமுறை சரக்களுக்கும், மண்டைகுத்துக்கும், கட்டிலுல் குணமாம். அதனீரலை பிளந்து வலி யுள்ள காதில் புழியகுணமாம். அதன்கரண்டையை தணுக்கி குடுப்ல் கலக்கி குடித்தால் நாறை எழுப்பும், அதன் மூத்திரத்தை நன்றாய் கொதிக்க வைத்து சர்க்கரை கலந்து வங்கில் தனமிட அதை நீக்கும். அதன் விட்டையை மிருதமாய் அழுகிறபிள்ளையி னுடைய தலையின் தாளாவேலைக்க குணமாம். (இன்ஷா அல்லா.)

செம்மறியாட்டின் பயான்.

செம்மறியாடாகிறது ஆட்டில் நின்று முடியுடையது. (ஹனபியின்படி அதைத் தின்றுகிறது இஜ்மாஉ கொண்டு ஹலால்.)

பிரயோஜனங்களாவது

செம்மறியாட்டின் தசை கரும்பித்தத்தை நீக்கும், மனியை அதிகமாக்கும், நஞ்சுகளை கனிக்கும்.

மானின் பயான்.

மானானது 8-வகையாயிருக்கும். ஒருவகை கலப்பற்ற வெள்ளையாயிருக்கும், அது மணல்களில் குடியிருக்கும், இன்னொரு வகை சிவப்பாயிருக்கும், கழுத்து கட்டையாயிருக்கும், உயர்ந்த தலங்களில் மருவியிருக்கும். இன்னொருவகை கால்களும், கழுத்து நீண்டும், வயறு வெளுத்துமிருக்கும், இப்படி பலவகையுண்டு, அது களெல்லாம் பார்வை கூர்மையாயிருக்கும். (ஹுக்மின்படி அதன் வகை அடங்கலையும் தின்னுகிறது ஹலால்.)

பிரயோஜனங்களாவது.

மானின் கொம்பை இழைத்து வீட்டில் புகைத்தால் புழு பூச்சிகளை ஓட்டிவிக்கும். அதன் பித்தை வலியுள்ள காதில் ஒழிக்கினால் வலியை நீக்கும். அதன் விட்டையையும், தோலையையும் கரித்து பொடித்து ஒஜிபனத்திலிட்டு குழந்தைகளுக்கு தின்னக் கொடுத்தால் கூர்மையுடையதாகவும், நாகரிகமுடையதாகவும், ஹாபிலாகவும், உண்டாகும். அதனுடைய கஸ்தூரியானது பார்வையை பிலமாக்கி வைக்கும். கல்லையும் மூலையும் இடப்படுத்தும். கண்வெள்ளையை நீக்கும், நஞ்சுகளுக்கு அமிழ்தமா யிருக்கும் எக்கிலும் முகத்தில் மஞ்சனிப்பை வருத்திவைக்கும். அதை ஒஜிபனத்தில் புழங்கினால் வாய் நாற்றத்தை வருத்திவிக்கும். இன்னும் ராஸீ இமாம் சொல்லுகிறார்கள், அதன் கறியானது சூடும் வறட்சியுமாம், அதன் குட்டியின் மாமிசமானது குன்மத் துக்கும் பக்கவாதத்துக்கும் பிரயோஜனம் கொடுக்கும். மானின் கோரோஜனையும் ஊர்க்குருவியின் இரத்தமும் சிவந்த கெந்தகமும் கூட்டி பயித்தியக் காரனுக்கும், கண்டமாலைக் காரனுக்கும், 8-நாள் தொடர்ச்சியாக நசியம் புழிந்தால் சுத்தப்படுத்தும். அதின் ரோமத் தைக்கரித்து நீரடைப்புள்ளவனுக்கு குடிப்பிவித்து புகையும் பிடித் தால் அதை சுவாத்தியமாக்கும். அதன் தோலைக் கொண்டு

போத்தியவன் பாம்பு தேளுகளைக் கொண்டு பயப்படான். பேறு வருத்தமானவளுக்கு பெண்மானின் பித்தை குடிப்பிவித்தால் அப்பவே குழந்தையும் கஞ்சம் கொடியும் வெளிப்படும். ஒற்றையான அல்லது கூட்டப்பட்ட கஞ்சை குடித்தவன், மானின் பித்தை காணொன்றுக்கு இரண்டு திர்ஹத்திடை மூன்று நாள் தயருய் குடித்தால் அதை விட்டும் சலாமத்தபெறுவான். யாதொரு பெண்பிள்ளை உவக்ககாடுகில் புருவுடைய இரத்தத்தை தகரில் பூசி புணரவும், இதற்கு மாத்து மானின் பித்தை பூசவும், (இன்ஷா அல்லா.)

முயலின் பயான்.

(முயலானது) இருகாதும் கெட்டையாயும், இருகையும் கட்டையாயுமிருக்கும். கால்களின் பின்புறத்தின்பேரில் நடக்கும். அதன் ஆணின்கோஷம் இருபகுப்பாயும் அதிலொருபகுப்பு எலும்பாயும் மற்றொரு பகுப்பு சவ்வாயுமிருக்கும். ஒருவருஷம் ஆணாகவும் ஒருவருஷம் பெண்ணாகவும் இருக்கும். குளிகரியும் அதுபோலாம். 'கர்பத்து காமில்' என்கிற கிதாபில் இபுனுல் அதீது சொல்லுகிறார், நமக்கு அசல்பாகத்தில் சபியா என்ற ஒரு பெண்பிள்ளை உண்டாயிருந்தாள். 15-வயதுக்கு பிறகு ஆணின்கோஷமும் தாடியுமுளைத்து பத்தம் தகறும், ஒன்றாய் உண்டாயிருந்தது. (சபுஹானல்லா) இனி முசலாகிறது ஒற்றைதான் பொத்தியும், மற்றதன் முழித்தும் தூங்கும். கண்ணிவைத்து பிடிப்பவன் முழித்துகிடக்கு சென்று என்னுவான்.

பாயிதா.

உயிர்ப்பிராணிகளில் சின்னும் வைஷலாகிறது, பெண்பிள்ளை, முள்ளப்பன்றி, வவ்வால், முசல், நாய் இவ்வைந்துமாம். (ஹராக் மின்படி எல்லா இமாம்களிடத்திலும் மூராவத்தின் ஹைதுதா ஹலால்.)

பிரயோஜனங்களாவது

முயலின் சதண்டைக்காலை கட்டினவனுக்கு விஷமும் கண்திண்டியும் அண்டாது. இரண்டு வைபைத்து பகலின் பாலில் இரண்டரிசிபிடை மூளைசேர்த்துக் குடித்தால் முடி நரையாது.

அதன் ஆணுடைய கோழுஜனேயை குடித்தவள் ஆண்பிள்ளை பெறுவாள். பெண்ணானால் பெண்பிள்ளை பெறுவாள். அதன் மூளையை இரண்டரிசியிடை கர்ப்பூரத்துடன் மத்தித்து குடித்தவனை உவந்தவர்களே அல்லாது, யாரும் காணார். அது லோகவசியம் பெண்வசியமாம். அதன் இரத்தத்தை குடித்தவள் கெர்ப்பமாகாள். அதை பத்துகளில் பூசினால் அதை மாத்திரிக்கும். அதன் மூளையை தின்றும் அபத்தில் தடவியும் புணர்ந்தால் கெர்ப்பமுண்டாம். அதன் பித்தை செய்யில் குழைத்து மூளைப்பாலில் மத்தித்து கண்ணில் தீட்டினால் கண்ணிலுள்ள வெள்ளையை போக்கிவிடும், சிலைநீக்கும். அதன் தசையை விரிப்பில் மோருகிறவன் தின்றுவந்தால் அதை நிறுத்தும். அதின் புழுக்கையை வென்னீர் பரையில் புகைத்தால் அதை முகர்ந்தவன் அடங்கலுக்கும் காற்றுப்பரியும், அடக்கயேலாது. அதன் புழுக்கையை புள்ளிகளில் பூசினால் போக்கிவிடும். சட்டிப்பல் வலித்ததானால் அதன் சட்டிப்பல்லை கட்டினால் வலிபொடுங்கும். (இன்ஷா அல்லா.)

வரிமுயலின் பயான்.

(வரிமுயலாகிறது) அது முயலைப்போலே ஒரு வருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவும் இருக்கும். ஆணாயிருக்கிற காலங்களில் பிள்ளையை கொடுக்கும், பெண்ணாயிருக்கிற காலங்களில் உண்டாய் பெறும். இதுவும் ஓநாயைப்போலே ஒரு நஷ்டமிருகமாயும், மனிதருடைய தசையை உவந்து கப்றுகளைதோண்டி தின்னுகிறதாயுமிருக்கும். உறங்குகிற மனிதனை வயத்தைநகேறி இரத்தத்தை குடிக்கும். (ஷாக்யின்படி அதைத் தின்னுகிறது ஹலால்)

பிரயோஜனங்களாவது.

(வரிமுயலாகிறது) காந்தம் இரும்பை எழுப்புவதுபோலே அதுவாகிறது நாய்களை இழுத்துக்கொள்ளும். அதெப்படியென்றால் நிலவுடைய பிரகில் நாயாகிறது மேல்முகட்டில் நின்றால் பூமியில் நாயுடைய நிழலை இதுசவட்டும்; அது கீழேவிழுந்திடும். இது அதை பிடித்துத் தின்னும். வரிமுயலுடைய கொழுப்பை திரேகத்தில் தேய்த்துக் கொண்டால் நாயாகிறது யாதொரு

தங்கடமும் செய்யாது. அதன் பித்தை உலர்த்தி குடித்த பெண் பிள்ளை ஜிமாஉ முனிவான், ஷஹ்வத்து விழுந்திடும். அதன் தொலியை அல்லது நாவை வைத்துக்கொண்டால் நாய்குலையாது. அதன் பித்தை கண்ணி லஞ்சனமிட்டால் கண்ணிருளையும், நீர் வடிதலையும் போக்கும், பார்வையை கூர்மையாக்கும். அதன் வலது கண்ணைக்களைந்து 7-நாள் சிர்க்காவிலூரப்போட்டு எடுத்து மோதிர வட்டின் தானாலே புதைத்து அணிந்துக்கொண்டவன் யாதொரு விஷத்தையும், கண் திஸ்டியையும், பயப்படான். யாதொருவனுக்கு விஷஜுர அண்டி யிருந்தால் அம்மோதிரத்தை தண்ணீரில் கழுகி குடிப்பிவித்தால் விஷஜுர முறிந்து விலகிவிடும். சசல் கொண்ட குழந்தைக்கு அதன் பிடரிமுடியை 7-நாள் புகைபிடித்தால் நோய் நீங்கும். அதன் இரத்தத்தை குடித்தால் வண்வாச நீங்கும். (இன்ஷா அல்லா)

முள்ளம் பன்றியின் பயான்.

(முள்ளம் பன்றியாகிறது) சிலவூரில் எலியுடைய கத்திலும், சிலவூரில் நாயுடைய கத்திலுவாயிருக்கும். அதற்கு பசிவந்தால் முந்திரிகை மரத்தில் தலைகீழாய் ஏறி குலைகளை பறித்தெரியும். அப்பால் கீழே யிறங்கி வேண்டாமட்டும் தின்னும். மீதியில் கிடந்த புறளும், அதுகளெல்லாம் இதன் முள்ளில்தைத்துக் கொள்ளும், அதைக் குட்டிகளுக்கு கொண்டுப்போய்க்கொடுக்கும், அது பாம்புகளைத் தின்னுகிறது கொண்டு அவேட்கைபூட்டப் பட்டது, தின்றால் தங்கடம் செய்யாது. அது இதைக்கொத்தி விட்டால் லகீதர் பர்கீயை தின்னும், சுவாத்தியமாய்விடும். அதன் வாயிலே 5-பல்லுண்டும், அது இராவிலே ஒழிய வெளிப்படாது. (ஹுக்மின்படி அதைத்தின்னுகிறது ஹலால்)

பிரயோஜனங்களாவது.

அதன் பித்தை கண்ணில் தீட்டினல் கண்வெள்ளை மாறும், அதை குடித்தால் கருங்குஷ்டத்தை நீக்கும். அதின் இரத்தத்தை நாய் கடிவாயில் தேய்த்தால் விஷமொடுக்கும். அதின் வலதுகையின் நகங்களை புகைப் பிடித்தால் காச்சல் நீக்கும். (இன்ஷா அல்லா).

நாயின் பயான்

நாயானது நடைபுழக்கமும் நிறைவேற்றதலு முடைய ஹைவான். காராகோட்டி காணும், ஹைலாகும், அறுபது நாள் சூலாயிருக்கும், ஒரு வருஷத்தில் புணரும், ஒரு நாயை பலநாயும் புணர்ந்தால் ஒவ்வொன்றின் ஒப்புமுண்டும். கறியைக்காணவும் விடக்கையுலக்கும், நஜீசதின்னும், தன்னுடைய நாயனை காக்கும். அவன் மறைவிலும், ஹாஜிரிலும் நினைப்பிலும், மறதியிலும், முழிப்பிலும், உறக்கத்திலும் அவனுடைய ஹுர்மத்தை பேணிக் கொள்ளும். ஹைவான்களில் மிகவும் முழிப்புடையதாயிருக்கும்.

ஹிக்காயத்து.

சில ஜனங்கள் கூடி ஓர் இடத்திற்கு போனார்கள். அதிலொரு மனிதன் பின்னின்ற ஒருவனுடைய பெண்ஜாதியை அவனின் வீட்டில் ஸினா செய்தான். அந்த வீட்டிலுள்ள நாய் அவ்விரு வரையும் கடித்து கொன்று போட்டது. அப்பால் அவ்வீட்டுடை யான் மீண்டு வந்து பார்க்கவும், அவ்விருவரும் இன்னுயால் செத்துக் கிடக்கக்கண்டு சிலபைத்துகள் சொன்னார்கள். அதன் பொருளாவது, இந்நாயானது நம்முடைய பொருப்பையும் உறுதி மானத்தையும் விடாமல் பேணிக் காக்கிறதாக யிருந்தது. இந்த தோழனுகிறவன் நமக்கு சதிமானியம் செய்திட்டானே, ஆனதால் இந்த தோழன் என்னுடைய ஹுர்மத்தை கிழித்திட்டானே, அப்புதுமைக்கு நானென்ன சொல்வேன். இந்த நாய் எப்படி பேணிக்கொண்டது அப்புதுமைக்கு நானென்ன சொல்வேன் என்று சொன்னார்.

இனி நாயானதற்கு கல்பு என்ற ஓர் வியாதி தொடும். அப்போது அதன் குணமானது பயித்தியத்தை போலவாயிருக்கும். அதற்கடையாளம் இரண்டு கண்ணும் சிவந்துவிடும், வாயாலும், நாசியாலும் நீர் வடியும். இப்படிப்போல் பல சேஷ்டைகளுண்டும் அந்த வேளையில் அது கடித்த வஸ்துகளெல்லாம் மறித்துவிடும், இன்சானைத்தவிர. ஏனெனில் இன்சானானவன் அதற்கு மருந்து செய்வான். அதனால் சலாமத்துப் பெறுவான்.

ஹிக்காயத்து.

அஸ்மதிப்னு ஸாப்பல் றலியல்லாஹு அன்ஹு ஒரு மனி தரிடத்தின் முப்மொழி வாக்கிய ஹதீதுகளுண்டா யிருக்கிற

தென்று கேள்விப்பட்டு அவரளவில் புறப்பட்டுப்போனார்கள். அவர்கள் நாய்க்கு நீர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் சலாம் சொன்னார்கள், அதற்கு புறத்திவிட்டு மறுபடியும் அதற்குத் நீர் கொடுத்து கொண்டிருந்தார்கள். அது தீர்ந்த பின் இவர்களை பார்த்து நான் உம்மளவில் முன்னேக்கவில்லையென்று மனதிலெண்ண முண்டோ, அபுஸ்ஸஊதி அஃறாஜ, தொட்டும் எனக்கறிவித்தார், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள், யாதொருவன் தன்னை ஆதரவு வைத்தவனுடைய ஆதரவை முறித்திட்டானேயானால் அல்லாஹு தஆலா கியாமத்து நாளையில் அவனுடைய ஆதரவை முறித்துவிடுவான். ஆதலால் அவன் சொர்க்கத்தில் புகுதமாட்டானென்றறிந்திருக்கிறது. ஆதலால் இந்த பூமியாகிறது, நாயுடைய பூமியில்லை. இந்த நாயானது பிறவிடத்திலிருந்து நம்மை நாடி வந்திருக்கிறது. இதினுடைய ஆதரவை நாம் தறித்து விட்டோமேயானால், அல்லாஹுத் தஆலா கியாமத்து நாளையில் நம்முடைய ஆதரவை தறித்து விடுவானென்று பயந்து, அதற்கு நீர் ஊட்டிவித்தேன் என்றார்கள். அப்போது அஹமது றலியல்லாஹு அன்ஹு இந்த ஒருஹதீதே எனக்கு போதுமென்று சொல்லிவிட்டு மீண்டு வந்து விட்டார்கள். (றலியல்லாஹு அன்ஹுமா.)

பாயிதா.

அஸ்ஹாபுல் கஹபுடைய கித்மீரென்ற நாயும், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமுடைய ஆடும், ஸாலிஹு அலைஹிஸ்ஸலாமுடைய ஒட்டகையும், உஸைறு அலைஹிஸ்ஸலாமுடைய கழுதையும், நபிய்யினா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய புறுக்கென்ற குதிரையும், சொர்க்கம்புகுதும், வேறல்ல.

முப்ஷாதத்தைனாரீ றஹிமஹுல்லாஹுத் தஆலா வீட்டை விட்டும் வெளிப்புறப் பட்டார்கள். அவர்களைக்கண்டு ஒருநாய் குலைத்தது. அவர்கள் லாயிலாஹஇல்லல்லாஹ் என்றார்கள். அப்பவே அந்நாய் ஊளையை நிறுத்திக்கொண்டு போய்விட்டது.

ஹுக்மின்படி நாய்வகை அடங்கலையும் தின்னுகிறது ஹறாம், நரியைத்தவிர. தொழுகிறவன் முன்னாலே நாய் நடந்து போனால், இமாம் அஹ்மதிப்னி ஹன்பல் இடத்தில் தொழுகைபாத்திலாம்.

பிரயோஜனங்களாவது.

நாயின் தலை கொழுப்பை மேலிட்டிருக்கும், ஆட்டுக்கறி அதற்கு மாத்தமாயிருக்கும். கருநாயின் நாவை கையில் வைத்துக் கொண்டால் நாய் குலையாது. ஒரு நாயின் காதிலுள்ள ஊத்தையை கையில் வைத்துக் கொண்டால் அந்நாயுள்பட எல்லாநாயும் வசப்பட்டு வழிப்படும். அதன் பல்லை குழந்தைக்கு கட்டினால், வருத்தமின்றியே பல்முளைக்கும். அதன் வீரப்பல்லை கல்பு என்ற பயித்தியங்கொண்ட பேநாய் கடிக்குக் கட்டினால் வலியொடுங்கும். அதை சுமந்தவனை நாய்குலையாது அதன் கோஷத்தை உலர்த்தி தடையில் கட்டிக்கொண்டால் தாதை எழுப்பும். யாதொருவனுக்கு கடினமானகுன்மவலி யுண்டாயிருந்தால் உறங்குகிற நாயை எழுப்பி விட்டு அத்தலத்தில் மூத்திரம் பெய்யவும் அப்பவே வலி நீங்கிவிடும். அந்நாய் செத்துவிடும். அதன் வீரப்பல்லை உறக்கத்தில் வாய் புலம்பலுக்கு கட்ட குணமாகும். அதன் பாலை ரோமத்தில் தேய்த்தால் அதைப்போக்கிவிடும், அதை தண்ணீருடன் கலந்து குடித்தால் அப்பவே இருமல் நிற்கும், அதை பறுக்களில் தேய்த்தால் அதைப் போக்கிவிடும். கருநாயின் முடியை முஷல்வலிக்கு கட்டினால் உடனே கண்டிக்கும். அதன்பாலை குடிக்குதல் கொல்லுகின்ற நஞ்சுக்கு பிரயோசனம் கொடுக்கும், இன்னும் பிள்ளையையும் நஞ்சுக்கொடியையும் வெளிப்படுத்தும். அதைக் கண்ணுக்கு அஞ்சனமிட்டால் அவ்விரவடங்கலும் மூழித்துக்கொண்டிருப்பான். அதன் விட்டையை பொடித்து கொத்தமல்லி தண்ணீரில் குழைத்து வீக்கத்தில் தேய்த்தால் குணமாகும். இதன் ரோமத்தை வெண்புள்ளி கரும்புள்ளி வெள்ளைகளில் புகைப்பிடித்தால் அதின் நிறத்தைபேதகப்படுத்தும். அதின் பித்தை மதில்களில் பூசினால் அவ்வீட்டில் துக்கம் வியாகுலம் புகுதாது. (வல்லாஹு அஃலம்.)

ஓநாயின் பயான்

ஓநாயாகிறது துஷ்டமிருகங்களி லொன்றாயிருக்கும். அது ஒருகண் உறங்கியும், மற்றொருகண்ணைக்கொண்டு தன்னைக்காத்துக்கொள்ளுகின்ற ஜீவான்களில் நின்றுமுள்ளது.

லத்தீபா

யூசுபு அலைஹிஸ்ஸலாமும், யஃகூபு அலைஹிஸ்ஸலாமும் ஒன்றுசேர்ந்தபோது ஓநாய்வந்து சோபனம் சொல்லிற்று. அப்போது யாகூப் அலைஹிஸ்ஸலாம், அந்த ஓநாயைப் பார்த்து யூசுபுடைய செய்தி முன் உனக்கு தெரிந்திருக்குமா வென்றார்கள், அது அறிவேனென்றது. நீயேன் எனக்கு அறிவிக்கவில்லை என்று கேட்டார்கள். அது சொல்லும், கோபை பயந்து சொல்ல வில்லை யென்றது. இன்னுமொரு நியாயத்தில் ஒரு ஓநாயைக் கொண்டுவந்து விட்டார்கள். அதை பார்த்து நீ தானா யூசுபை தின்றாயென்று கேட்டதற்கு நான் உங்கள் ஆட்டுக் கடைக்குளாலே வரமாட்டேன், அப்படியிருக்க உங்கள் பிள்ளையை எப்படித் தின்பேன் யென்றது. நல்லது ஹயாத்தா யிருக்கிறா என்று கேட்டார்கள். அது ஓமென்றது எவ்விடத்தி லிருக்கிறார் என்று சேட்டதற்கு ஜிபுரீலிடத்தில் கேளுங்க ளென்றது, அவரெனக்கு சொல்லுகிறா ரில்லையென்றார்கள். ஆனால் நான் எப்படிச் சொல்வேனென்று சொல்லிவிட்டது. (ஹாக்கின்படி அறைத்தின்னுகிறது ஹராம்.)

பிரயோஜனங்களாவது

ஓநாயின் தோலை புருக்கூட்டில் வைத்தால் அதை நோவிக்கிற பூனைப் போலான வல்லதொன்றும் முடுகாது. அதன் வலது கண்ணை கட்டிக்கொண்டவன் கள்ளனையும் யாதொரு துஷ்ட மிருகத்தையும் பயப்படான். இதன் இரத்தத்தை ஜாதிக்காய் எண்ணையுடன் லேகித்து செவிடுள்ள காதிலொழுக்கினால் அதை நீக்கும். அதின் பல்லும், கண்ணும், தோலியும் சுமந்துக் கொண்டால் வழக்கு வெல்லும். அதன் பித்தை தேனிலாவது தண்ணீரிலாவது கலந்து தண்டில்பூசி அப்பவே ஜிமாஉ செய்தால் அவளவனை எப்பவும் கடினமாயுவப்பாள். அதன் விட்டையை புகைத்த தலத்தில் எலி முடுகாது. அதன் தோலில் உட்கார்ந்து வந்தால் குன்மம் தொடாது. அதன் விட்டையை குன்மமுள்ளவன் குடித்தால் அதை நீக்கும். அதன் பித்தும் தேனும் கூட்டி ஒரு திர்ஹத்திடையில் மூன்றி லிரண்டு பங்காயினும் திரேகத்தில் தேய்த்தால் நீங்காத ஜுரம்போகும். அதன் தோலில் நின்றுமொரு

கொட்டு உண்டுபண்ணி மற்றும் கொட்டுகளுக்கிடையில் இதை அடித்தால் அதுகளெல்லாம் இறிந்துபோகும். அதன் பித்தும் தேனும் கூட்டி கண்ணி லஞ்சனமிட்டால் கண்ணிருளையும், பார்வையின் பிலக்கேட்டையும் போக்கிவைக்கும். அதன் வாலை யாதொரு பேரைச்சொல்லி முடிந்தால் ஒருவரும் அவனை புணர சக்திபெறார். அதன் இரத்தம் காயங்களை உலர்த்தும், அதன் பித்தும் கழுகின் பித்தும் சண்பகயெண்ணையும் கூட்டி தண்டில் பூசினால் தாதை எழுப்பும். (இன்ஷா அல்லா)

நரியின்பயான்.

நரியாகிறது இராவிலோலையிடும். அதன் சப்தம் குழந்தையின் சப்தத்தை போலாயிருக்கும். சாவல் இதற்கு மிகவும் அஞ்சம். இது மரத்தின் மேலிருந்து அது இதின் தானாலே நின்றம் அதை கண்டால் சாவல் அடித்து கீழே விழுந்திடும். (ஹுக்மின்படி நரியாகிறது வீரப்பல் கைக்கொண்டு அடர்ந்தேறுவதால் அதைத் தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

நரியின் காலிருக்க வீட்டில் வழக்குண்டாகும். அதன் தசை பயித்தியத்துக்கும், மாதக்கடைசியில் குறக்கூடாய் வந்த முஷல் வலிக்கும் பிரயோஜனம் கொடுக்கும். அதன் வலது கண்ணை கட்டினால் கண் திருஷ்டி தொடாது. அதன் தாமரைக்காயைக் கட்டினால் துஷ்ட மிருகங்களைவிட்டும் அச்சம் தீர்வான். (இன்ஷா அல்லா.)

குழி நரியின் பயான்.

குழிநரியாகிறது மக்கும் சதிமானியமும் கோழைத்தனமும் பிலகேடுமுடைய ஒரு துஷ்ட மிருகமாயிருக்கும். அதன் ஹீலாவில் நின்றுமுள்ளது, செத்ததுபோலே வயறூதி கால்களை உயர்த்திக் கொண்டு கிடக்கும். யாதொரு பிராணி அது செத்ததென்றெண்ணி கிட்டபோனால் அதைபாய்ந்து பிடித்துத் தின்னும். இந்த ஹீலாக்கள் நாயிடத்தில் செல்லாது.

அஜீபா புதுமையாகிறது

அல்லாஹுத் தஆலா நின்று வகுத்திருப்பதின் புதுமையி லுள்ளது, ஓநாயாகிறது குழிநரியை வேட்டையாடித் தின்னும். குழிநரியானது முள்ளம்பன்றியை பிடித்துத் தின்னும். முள்ளம் பன்றி அப்ஐ யென்ற பாம்பை பிடித்துத் தின்னும். அப்பாம்பா கிறது வர்க்குருவியை பிடித்துத் தின்னும். வர்க்குருவியாகிறது வெட்டுக்கிளியை பிடித்துத் தின்னும். வெட்டுக்கிளியாகிறது வண்டுகளின் குஞ்சுகளை தேடிப்பிடித்துத்தின்னும். வண்டுகளா கிறது தேன்குளவியை பிடித்துத் தின்னும். தேன்குளவியாகிறது ஈயை பிடித்துத் தின்னும். ஈயாகிறது கொசுவை பிடித்துத் தின்னும். (வல்லாஹு அஃலம்.)

ஹிக்காயத்து.

இஸ்கியா வென்னும் கிதாபில் வருகிறது:—ஒருபுலி, குழிநரி, ஓநாய் இம்மூன்றும் சேர்ந்து ஒரு கழுதை, மான், முயல், இம் மூன்றையும் வேட்டையாடி ஒரு தலத்திலிருந்து பங்குபோட தொடுத்தது. புலி ஓநாயைப்பார்த்து நீ பங்கு போடென்று சொல்லிற்று. ஓநாய் சொல்லும் கருமம் வெட்டவெளிச்சமாய் தெரிந்தா யிருக்கிறது. அதென்னவானால் கழுதையாகிறது உமக்கும் முசலாகிறது குழிநரிக்கும், மானாகிறது எனக்குமென்று சொல்லிற்று. உடனே புலி அதை ஓரடி அடித்து தலையை விழுத்தாட்டி விட்டது. பின்பு குழிநரியை பார்த்து சொல்லும், அவன் பங்குபோட தெரியாதபடையன் அவனும் ஒழிந்தான். அபூமுஆவியாவே நீர் வாரும் பங்கிடு மென்றது. அப்போது குழிநரி சொல்லும், ஓப் அபல் ஹாரித கருமம் வெட்டவெளிச்ச மாகத் தானிருக்கிறது. அதென்னவென்றால், கழுதை உமக்கு காலைநேரத்தின் தண்ணீர் குடிக்கும், மானாகிறது மாலைநேரத்து ஒஜீபனத்திற்கும், முயல் அவ்விரண்டுக்கும் யிடையிலுள்ள நேரத்திற்காயிருக்கும், என்றபோது புலிசொல்லும். இப்படிக் கொற்றத்தீர்ப்பு நீர் எங்கே படித்தீரென்று கேட்டதற்கு, நரி சொல்லும், உடலைவிட்டும் தரித்துக்கிடக்கிற ஓநாயின் தலை படித்துத்தந்ததென்று சொல்லிற்று.

ஆகையால் புத்திமானாகிறவன் தானல்லாதவனைக் கொண்டும் தாரணைப் பிடிப்பானோ அவனாயிருக்கும். (ஹுக்மின்படி இமாம் ஷாபிஈ மாலிகீ இருவரிடத்திலும் அதைத் தின்னுகிறது ஹலால், மற்ற இருவரிடத்திலும் ஹறாம்.)

பிரயோஜனங்களாவது

குழிநரியின்பல்லை குழந்தைக்குக் கட்டினால் உறக்கத்தில் திடுக்கிடாது. அதன் பித்தை முஷல்வலியனுடைய நாசியில் ஊதினால் நீங்கும், ஒருபோதும் மீளாது. அதன் தலையைப் புறாக் கூட்டில் வைத்தால் எல்லாமோடிவிடும். அதன் தலை லக்வாவுக்கும், பக்கவாதத்துக்கும், கருக்குஷ்டத்திற்கும், பிரயோஜனம் கொடுக்கும். அதன் கொழுப்பை உருக்கி சூலையில்தேய்க்க அப்பவே கொடுக்கும் வலிநீங்கும். அதன்விரையை குழந்தைக்குக் கட்டினால் நோவன்றியே பல்முளைக்கும். அதனிரத்தத்தை நட்டத் தலையான குழந்தையின் தலையில் பூசினால் முடிமுளைக்கும். அதைத் தன்னிடம் வைத்துக் கொண்டவனிடத்தில் ஹீலாக்காரனுடைய தந்திரம்செல்லாது. அதன் வீரப்பல்லை முஷல்வலிக்கு கட்ட குணமாகும். அதனுடைய இரண்டு மாங்காயையும் கையில் வைத்துக்கொண்டால் நாய் குலையாது. அதன்காதை கழுத்தி லுள்ள கண்டமாலையில்கட்ட அதை நீக்கும். அதன் கொழுப்பை யுருக்கி வலியுள்ள காதிலொழுக்கினால் குணமாகும். அதன் கோஷத்தை தலையில் கட்டினால் ஒருதலைவலி நீங்கும். இராவில் திடுக்கிட்டழுகிற பிள்ளைகளுக்குக் கட்டினால் திடுக்கம் நீங்கும். வீரப்பல்லும் அதுபோலாம். அதன் விட்டையை நுணுக்கி பன்னீர்ப்பூ வெண்ணெயில் குழப்பி தண்டில் பூசி புணர்ந்தால் காடியமட்டும் ஜிமாஉ செய்வான். (இன்ஷா அல்லா.)

குரங்கின் பயான்.

குரங்கானது கூர்மையும், பற்றும் உடைய ஜீவனா யிருக்கும். கடைகளிலிருந்து வியாபாரம் செய்யும், செருப்பு தைக்கும், கடுதாசிமடிக்கும். அதனிடத்தில் ஊர்தண்டும், இன்சானைப்போலே சிரிக்கும், நடக்கும், பிள்ளைகளை சுமக்கும்,

கையால் மணியை விழுத்தாட்டும். ஒரு சூலில் 10, 12-குட்டி போடும். பெண்பேரில் மிகவும் கார்மானமுடையதா யிருக்கும். யாதொருவன் காலையில 10-காலைக்கு குரங்கின் முகத்தில் முழித்தால் சந்தோஷமுண்டாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இச்சொல்லில் வெளிரங்கமான கத்தா உண்டாயிருக்கிறது. (ஷாக் மின்படி அதைத் தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

குரங்கின் தசையாகிறது காய் தசையைப்போலாம்; என்கிலும் அதிலும் கெட்டதாம். அதன் பல்லை யாதொரு இன்சானுக்கு கட்டினால் அவனை உறக்க மிகையாது, இரவில் திடுக்கம்தொடாது. அதன் மாமிசத்தை தின்றால் குஷ்டத்தை விலக்கும். அதன் தோலை ஒருமரத்தில் கட்டினால் குளிரானுள்ள தங்கடத்தை தட்டும். அதனி ரத்தத்தை சூட்டுடனே குடித்தவன் அப்பவே ஊமையாய்விடுவான் அதன் ரோமத்தை உறங்குகிறவனுடைய தலைக்குக்கிழ் வைத்திட் டால் அமளியாகிய கனவுகளைக் காண்பான். (இன்ஷா அல்லா) குரங்காகிறது நஞ்சூட்டப்பட்டது. ஒஜீபனத்தக்கண்டால் பயந்து சப்தமிடும்.

பன்றியின் பயான்

பன்றியாகிறது அறியப்பட்ட ஹைவான், போகத்தால் மிருந்தது, பெண் நடக்கும்போது ஆண் புணரும், அப்படியே சில மையில் நடக்கும், அதை அறியாதவர் அதின் நடக்கையை கண்ட வர்கள் 6-காலுடைய ஹைவானு முண்டோவென் றென்னுவார் கள். ஆறுமாதத்தில் புணரும் கெர்ப்பமாம், 20-குட்டியீனும். 15-வயது சென்றால் பேரில்லை. பாம்புகளைத் தின்னும், அதன் நஞ்சு யாதொரு நஷ்டமும் செய்யாது. அதைக் கழுதையின் முதுகில் வைத்துக்கட்டி அக்கழுதை நீருட்டால் பன்றிமறித்துவிடும். அதினுடைய மேனியில் உறிக்கப்பட்ட தோலில்லை, இன்சானைப் போலவாம். அது நஸல் கொண்டால் நண்டைத் தின்னும், நஸல் நீக்கும். (அதுஐன் நஜீசாயிருக்கும்) அதன் விலையும் ஹறாம், உணவும் ஹறாம்.

பிரயோஜனங்களாவது.

பன்றியின் ஈரலைத் தின்றாலும் குடித்தாலும் பாம்பு முதல் கொண்டு சகல விஷமும் சங்கடம் செய்யாது. அதின் எலும்பை கரித்து பொடித்து குடித்தால் மூலவியாதியை நீக்கும்.

பூனையின் பயான்

பூனையாகிறது புலியின் தும்மலில் நின்றும் படைக்கப்பட்டதாயிருக்கும்.

ஹதீது

ஒரு மனிதன் நின்றுக்கொண்டு தண்ணீர் குடித்தார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அதைகண்டு உடனே பூனை தண்ணீர் குடிக்க உனக்கு சந்தோஷமாமோ வென்றார்கள். அதற்கவர் இல்லை என்றார். அப்போதவர்கள் திடனாக ஷைத்தான் உன்னுடனே தண்ணீர் குடித்திட்டானென்றார்கள். (ஹுக்மின்படி அதைத் தின்னுகிறது ஹறாம்).

அதன் பிரயோஜனங்களாவது, பின்னுலெழுதும் வெருகு பூனைக்கு ஒற்றுமையா யிருக்கும்.

வெருகு பூனையின் பயான்.

வெருகு பூனையாகிறது வழிப்பாட்டுடைய மருகுதலாகிய ஒரு ஹைவான், எலியைத் தட்டிவிக்கிறதற்காக அல்லாஹுத் தஆலா அதைப்படைத்தான். அது நீருட்டால் அதை மறைத்துவிடும், எலி அவ்வாசங்கண்டால் ஓடாததுக்காக. வருஷத்தில் இரண்டுதரம் ஹமலாகும். ஹமலின் காலம் 50-நாளாம் இன்சானைப் போலே கொட்டாவி விடும். முகம் கழுகும், கையால் புழுக்கும். புனுகு பூனையும் அதிலொரு வகையாம் அதன் கம்முகூட்டுக்கும் தடைக்கும், தானாலே புனுகை காணப்படும்.

பாயிதா.

நூஹ் அலைஹிஸ்ஸலாம் உடைய கப்பலிலிருந்தவர்கள் எலியின் நின்றும் நோவினையை முறையிட்டபோது புலியின் நெற்றியை தடவினார்கள், அது தும்மியது அதில்நின்றும் பூனைவெளிப்பட்ட போது எலி பதுங்கிவிட்டது. ஆனதால் பூனையாகிறது புலியைப் போலாயிருக்கின்றது (ஹுக்மின்படி பூனையைத் தின்னுகிறது ஹறாம்).

பிரயோஜனங்களாவது.

கரும்பூனையின் கறியைத் தின்னுகிறவனுக்கு ஸிஹ்று பலியாது, அதனிரலை பெரும்பாட்டுடையவனுக்கு கட்டினால் இரத்தத்தை நிறுத்தும். அதனிரண்டு கண்ணையு முலர்த்தி புகைப்பிடித்தவன் யாதொரு ஞானத்தையும் தேடமாட்டான், கற்பிக்கப்பட்டே ஒழிய. அதன் பித்தை கண்ணிலிட்டவன் இரவில் பகலில் காண்பது போல் காண்பான். அதனிரத்தத்தை தண்டில் பூசிக்கொண்டு புணர்ந்தால் மிகவு முவப்பான். அதை கருக்குஷ்டகாரனுக்கு குடிப்பிவித்தால் பிரயோஜனம் கொடுக்கும். அதன் விட்டையை புகைத்தால் நஞ்சுக் கொடிவிழும். கரும்பூனை பித்தும் கருங்கோழி பித்தும் உலர்த்தி பொடித்து சுருமாவில் கலந்து அஞ்சனமிட்டுக் கொண்டால் ஜாஞானிகளைக் காண்பான், இவனுக்கு பணிவிடை செய்வார்கள். கரும்பூனை பித்தில் அரை திர்ஹத்திடை யெடுத்து சண்பக எண்ணையில் மத்தித்து லக்வாஉடையவனுக்கு நஸ்ய மிட்டால் அதை நீக்கும். (இன்ஷா அல்லா.)

உடும்பின் பயான்.

உடும்பாகிறது அரணிப்பாகிய பூமியில் வீடுண்டாக்கிகுடியிருக்கும். அது 700-வயதுக்கு ஜீவித்திருக்கும். தண்ணீரின் பேரில் சப்குண்டும், 40-நாளைக்கு ஒரு துளிர் நீருடும், 70-முட்டையிடும், கண்கூசதலாம் வெளிப்படும். பொழுதை எதிர்த்துப்பார்த்துக் கொண்டிருக்கும், அதனால் பார்வை கூர்மையாம். பொழுதின் சூட்டால் பலநிறங்கொள்ளும், அதற்கு பல் விழாது, பல்லெல்லாம் ஒரேதுண்டாயிருக்கும். அதன் ஆணுக்கு இரண்டு கோஷமும்

பெண்ணுக்கு இரண்டு பர்ஜுமுண்டு, அதன் நாவும் வாலும் பாம்பைப் போலவாம். (ஹூக்மின்படி உடும்பைத்தின்னுகிறது ஹலால்)

பிரயோஜனங்களாவது.

யாதொரு இன்சானுடைய இரண்டு காலுக்கிடையில் நின்றும் உடும்பு நடந்துபோய் விட்டதானால் அதன்பின் ஜிமாஉ செய்வதின் பேரில் தத்துவம் பெறமாட்டான். அதைத் தின்னுகிறவன் நெடுங் காலத்துக்கு நவனமாகான். அதன் கரண்டையை குதிரையின் முகத்தில் கட்டினால் யாதொரு குதிரையும் அதைநமுர்ந்தாது. அதன் கல்லைத் தின்றால் நெஞ்சு துடிப்பும் சலிப்பும் போம். அதன் கொழுப்பை உருக்கி தண்டில் பூசினால் ஸஹ்வத்தை எழுப்பும். அதன் தோலை வாளுக்கு உறையிட்டால் படையின்பேரில் நீர முண்டாகும். அதன் தோலில் பாத்திரம் செய்து அதில் தேனை வைத்து அதை கொழுகித்தின்றால் ஸஹவத்தையும் குவ்வத்தையும் எழுப்பும். அதன் மலத்தை வெண்குஷ்டம் பத்தில் தேய்த்தால் அதை நீக்கும். கண்ணில் தீட்டினால் நீர் வடிதலையும் வெள்ளையையும் போக்கும். (இன்ஷா அல்லா.)

கீரிப்பிள்ளையின் பயான்.

கீரிப்பிள்ளையாகிறது மிருதுவான ஒரு ஹைவான். எலிக்கும் அதற்கும் பகையுண்டு. எலியின் பொந்தில் புகுந்து அதை வெளிப் படுத்திவிடும். இன்னும் முதலைக்கும் பகையுண்டு. அதன் வயிற்றுள் புகுந்து குடலை தின்னும். இன்னும் பாம்புக்கும் பகையுண்டு. அதை கொன்றுவிடும். இனி இதற்கு நலல் கொண்டால் கோழி முட்டையை தின்னும். நலல் நீங்கும். அதனிறமும் உரோமமும் ஊர்களுக்குதக்கபடி பலவிதமாயிருக்கும். அதன் குணத்திலே வெள்ளி தங்கத்தை திருடுதலுண்டும் எலியைப்போலவே.

ஹிக்காயத்து.

ஒருமனிதன் கீரிப்பிள்ளையில் நின்றும் ஒரு குட்டியை பிடித்து பாத்திரத்தின் தானாலே கட்டிவைத்திருந்தான்: அதன் தாய்வந்து

பார்த்துவிட்டு திரும்பிப்போய் ஒரு தங்ககாசை வாயில் கொண்டு வந்து அதை எடுத்துக்கொண்டு அப்பிள்ளையை அவிழ்த்துவிட தேடுமென்ற பான்மையாய் அவன் முன்னாலே வைத்தது. அவன் அவிழ்த்து விடவில்லை. மறுபடியும் திரும்பிப்போய் ஒருகாசை கொண்டுவந்து வைத்தது. அப்பவும் அவிழ்த்து விடவில்லை இப்படியே 5-காசு கொண்டு வந்து வைத்தது. அப்பவும் அவிழ்த்து விடவில்லை. ஆனதால் மறுபடியும் போய் ஒரு பிடவைதுண்டைக் கொண்டு வந்து என்னிடத்திலிருந்த காசு இவ்வளவுதான் இனிமேலில்லையென்று சொல்லுகின்ற பான்மையாய் நின்றது. அப்பவும் அவிழ்த்துவிடவில்லை. அதனால் அந்த தங்கக்காசை எடுக்க விரைந்தபோது இவன் காசை கொண்டுபோய் விடுமென்று பயந்துகுட்டியை அவிழ்த்துவிட்டான். அது அழைத்துக்கொண்டு போய்விட்டது. ஹுக்மின்படி அதை தின்னுவது ஹறாம்.

பிரயோஜனங்களாவது

கிரிப்பிள்ளையின் மூளையை கண்ணில் தீட்டினால் கண்ணிருளை நீக்கும். அதை உலர்த்தி சிர்க்காவுடன் குடித்தால் மூஷல்வலியை விலக்கும். அதன் தசையை உருப்புகளின் வலிக்கு ஒற்றடம் கொடுக்க வலிநீங்கும். அதன் கொழுப்பை பல்லில் தேய்த்தால் அதிக சீக்கிரத்தில் பல்முளைக்கும். அதன் பித்தை சூடாயிருக்கையில் குடித்தால் அப்பவே கொல்லிப்போடும். அதனிரத்தத்தை கண்டமாலையில் தேய்த்தால் அதை உடைத்துவிடும். அதனிரத்தமும் எலியினிரத்தமும் ஒன்றாய் கலந்து யாதொரு வீட்டில் தெளித்துவிட்டால் வழக்குண்டாகும், இப்படிப்போலே தான் அவ்விரண்டு ஜந்துக்களையும் ஒன்றாய் ஒருவீட்டில் புதைத்தாலும் வழக்கும் வம்புமுண்டாம். அதன் மலத்தை காயத்தின் பேரில் தளமிட்டால் இரத்தத்தை நிறுத்தும், அதனிரண்டுகை மணிகட்டையும் யாதொரு பெண்பிள்ளைக்குக் கட்டினால் அதிருக்குமளவும் கர்ப்பமாகாள் (வல்லாஹு அஃலம்.)

பாம்பின் பயான்.

பாம்பானது பலவகையுண்டு. அதிலொருவகை பாம்பானது ஒடுங்கிய கழுத்தும், அகலமாகிய தலையுமாயிருக்கும். அதன் பெயர் அப்ஜயென்று சொல்லப்படும். கருப்பு புள்ளியும், வெள்ளை

புள்ளியுமுண்டு, அது மிகவும் கெட்டது, விஷத்தால் மிககொடூரமானது. ஒரு பிள்ளையின் காலில் கொத்திவிட்டதேயானால் அப்பிள்ளையின் தலை விஷத்தின் கொடூரத்தால் அற்று விழுந்திடும். அது 1000-வயதுக்கு ஜீவித்திருக்கும், அப்பால் கண்மறையும். அதனுல் தல்பாஞ்சு என்னும் மரத்தை வெகு துலையில் தேடிப் போய் அம்மரத்தில் கண்ணை தேய்க்கும், கண்வெளிச்சமாகும். அதன் வாலை தரித்தால் உடனே முளைத்துவிடும். அதன் விரப் பல்லை பிடிங்கினுல் 3-நாளைக்குப்பின் முளைத்துவிடும். அதைத் துண்டித்தால் 3-நாள்வரை துடித்துக்கொண்டே கிடக்கும். அது இன்சானுக்கு மிகவும் பகையானது. காட்டுமாடானது அதைக் கெட்டதீனுக தின்றுவிடும்.

ஹிக்காயத்து.

ஒரு ஒட்டகை குட்டிக்குப் பால் கொடுத்துக்கொண்டு நின்றது. அதனுநட்டில் இப்பாம்பு கடித்திட்டது. அத்தாய்க்கு முன்னே அக்குட்டி மரித்துவிட்டது.

ததிம்மா.

இப்னுல் ஜவ்வஸீ பேசிவருகிறார், நிஸாறிப்னு மு அத்துக்கு வபாத்து அடுத்தபோது தம்முடைய முதல்களை தம்முடைய மக்கள், முலறு றபீஆ அயாது அன்மாறு இந்த நால்வருக்கும் பங்கிட்டு சொல்வார், சிவந்த தோலில் நின்றுமுள்ள இந்த குப்பாவும் அதுபோல் கொத்த முதலும் முலறுக்கென்றும், இந்த கருத்த கூடாரமும் அதற்கொப்பான முதலும் றபீஆவுக்கென்றும், இந்த காநிமும் அதற்கொப்பானதும் அயாதுக்கென்றும், இந்த காசப்பையும் இந்த மஜ்லீசும் அன்மாறுக்கென்றும். இதில் உங்களுக்கு பிசகுதலுண்டானுல் அப்ஐபிப்னு அப்பில் ஜுர்ஹமீ இடத்தில் போய்க் கேட்டுக் கொள்ளுங்களென்று வசியத்துச் செய்தார். அப்பால் அவர் மௌத்தான பின் பங்கிடுவதில் கிலாபுண்டாய் நஜுறுன் பட்டணத்துக்கு அரசான அப்ஐ இராஜ விடத்தில் போகும்போது வழியில் வைக்கோலை மேயப்பட்டிருக்கக்கண்டு முலறு சொல்வார், இந்த வைக்கோலை மேய்ந்த ஒட்டகை ஒற்றைக்கண் பொட்டையென்றார். அப்போது றபீஆ சொல்வார், ஒற்றைக்கால் ருனென்றார், அயாதுசொல்வார், வால்

கூனையென்றார், அன்மார்சொல்வார், அது விரண்டோடியது வென்றார். இப்படிச் சொல்லிக்கொண்டு கொஞ்சதூரம் போகவும், ஒரு மனிதன் வந்து ஒரு ஒட்டகையை போகக் கண்டீர்களோவென்று கேட்கவும், இந்நால்வரும் முன்சொன்ன குறிப்பை சொல்லி அப்படியிருக்குமோவென்று கேட்டார்கள். அவன் ஓமென்று சொல்லியும் என் ஒட்டகையின் அடையாளங்களை நீங்கள் சொன்னபடியால் அதற்கு நீங்களே உத்திரவாதி யென்றான்; இவர்கள் நாங்கள் காணவில்லை யென்று பிரமாணம் சொல்லியும் அவன் கேளாமல் அவர்களைப்பற்றிப் பிடித்து நடந்து ஜெறான் தேசத்து அப்ஜ இராஜனிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர் தர்யாபத்து செய்து காணாமல் எப்படி அடையாளம் சொன்னீர்களென்று கேட்டதற்கு மூலறு சொல்வார், ஒருபுறமே மேய்ந்திருந்தது, அதனால் ஒற்றைக்கண் பொட்டையென்றேனென்றார். றபீஉ சொன்னார், அதன் ஒற்றைக்கையூன்றிய அற்சோடிருந்தது, அதனால் ஒரு கால் சொண்டி யென்றே னென்றார். அபாது சொல்லுவார், அதன் பிட்டை சேதமாய் விழுந்திருந்தது, வாலுண்டானால் அசைத்துவிடும், அதனால்வால் கூனையென்றே னென்றார். அன்மார்சொல்வார், கருண்டபூண்டை தின்று அப்பால் அதைக்கடந்துமற்ற விடம் சென்று அதிலும் பிருதுவானதை தின்றிருந்தது. அதனால் அது விரண்டோடிய தென்றேனென்றார். அது கேட்டு அப்ஜ இராஜன் ஒட்டகைகாரனுக்கு உன்னுடைய ஒட்டகையை அவர்கள் அபகரிக்கவில்லை யென்று தீர்ப்புச்செய்தார். பின்பு இராஜன் அந்நால்வருக்கும் விருந்துசெய்தார். உண்டபின் மூலறுசொன்னார், இன்றைப்போல் நல்ல கள் நான்காணவில்லை எங்கிலும் கப்றுதலத்தில் நின்ற மரத்தின் கள்ளென்றார். றபீஉ சொன்னார், இன்றைப்போல் தசையை நான்காணவில்லை, எங்கிலும் நாய்ப்பாலூட்டி வளர்த்தகறியென்றார். அபாது சொல்வார் இந்த இராஜன் நல்லமனிதன்தான் எங்கிலும் அவர் தன் தகப்பனுக்கு பிறந்தவரல்லவென்றார். அன்மாறு சொல்வார், இன்றைப்போல் நல்ல ரொட்டி நான் காணவில்லை. எங்கிலும் அதுஹைறுக்காரி சுட்ட ரொட்டியென்றார். இதுகளையெல்லாம் கேட்டு நின்ற சேவகன் அப்ஜ இராஜனிடத்திற்போய் சொன்னான். அதை இராஜன் தர்யாபத்து செய்யவும், குடிப்புக்காரன் சொன்னான். உங்கள் தகப்பனார் நட்டின மரத்தின்கள்ளு அதைக்காண நல்ல

கன்று நம்மிடத்திலில்லை அதைக்கொடுத்தே னென்றான். ஆடு மேய்ச்சி சொன்னான் காய்ப்பாலூட்டி வளர்த்த ஆடுதான் நல்லதா யிருந்தது, அதைக்கொடுத்தே னென்றான். பின்புதமது வீட்டில் புகுந்து மாக்குளைத்த வெள்ளாட்டியிடத்தில் கேட்கவும் ஹைஹலா யிருக்கிறதாய்ச் சொன்னாள், பின்புதாயிடத்தில் போய்க்கேட்ட தற்கு உன் தகப்பனுக்கு பிள்ளையில்லா திருந்தது, இவ்வாழ்வு அகன்று விடுமென்று நம்மில் வந்திருந்தவனோடு புணர்ந்துன்னை பெற்றே னென்றாள். அவர் புதுமையாய் இக்காலவரிடத்திலும் அதைத் தொட்டும் கேட்கும்படிக்கு ஓாளனுப்பி கேட்டதற்கு மூலது சொல்லுவார், கன்னைக்குடித்தால் தாக்கம் நீங்கும். இக்கன்னை குடிக்கவும் தூக்கம் கொண்டேன். ஆனதால் கப்றில் நின்றமரத்தின் கன்னென்றே னென்றார். நபிஆ சொல்லுவார், ஆடுமுதல் எல்லா கறிக்கும் கொழுப்பு மேலிட்டிருக்கும், நாயைத்தவிர. இக்கறி அதுபோ லிருந்தபடியால் அப்படிச் சொன்னேனென்றார். அயாது சொல்வார், இவர் நம்முடனிருந்து போசிக்கவில்லை இவரின் தகப்பனுடைய நடைபிடி அப்படியல்ல. ஆனதால் இவர் அவருக்கு பிறந்தவரில்லையென்றே னென்றார் அன்மாறு சொல்வார் ரொட்டியை திபிட்டில் சவனும் இது அப்படியல்ல. ஆனதால் ஹைஹுக்காரி சுட்டதென்றே னென்றார் இதைக்கேட்டவன் அப்ஜவுக்குச் சொல்லவும், இவர்கள் ஷைத்தானு யிருக்கிறார் களென்று சொல்லிக்கொண்டு அவர்களிடத்தில்வந்து நீங்கள் வந்ததென்னவென்று கேட்டுத் தீர்ப்புச் சொன்னார். சிவப்புகுப்பா வென்றது, தங்கக்காசும் ஒட்டகைகளும் மூலறுக்கும், கருத்த கூடாரமென்பது குதிரைகள் அது நபிஆவுக்கும், காதிமென்பது மற்றும் விலங்கினங்களும் வெள்ளையும் கருப்புமுள்ள குதிரைகளும், அபாதுக்கும், வீடும் நிலங்களும், அன்மாறுக்கென்றும் தீர்ப்புச் செய்தார். அக்காலவரில் நபிஆவும் மூலறும் முஸீபின் மற்ற இருவரும் காபிர்

நட்டுவாக்காலியின் பயான்

நாட்டுவாக்காலியாகிறது சிறியதான ஒரு விஷஜந்து. அதற்கு எட்டுகாலுண்டும், அதன் கருமத்தின் புதுமையிலுன்னது மையத்தையும் நித்திரை செய்கிறவனையும் முடுகமாட்டாது, உசம்

பிறிலே ஒழிய. சிலகால் அது பாம்பை கொட்டிகொன்று விடும். அது ஒன்றைக்கொன்று கொட்டினாலும் செத்துவிடும். இது பாம்பைக் கொட்டினால் அது இதைஉடனே தின்றால்பிழைக்கும், இல்லாவிடில் மரிக்கும். இது யானையையும், ஒட்டகையையும் சில கால் கொட்டிக் கொன்றுவிடும். இன்சானைக் கொட்டினால் பயத்தால் மிகவும் விரண்டோடும். காட்டுவாக்காலியும், பாம்பும் நூஹ் அலைஹிஸ்ஸலாமிடத்தில் எங்களைக் கப்பலில் ஏற்றிக்கொள்ளுங்கள். உங்களைத் திக்று செய்தவர்களை நாங்கள் தங்கடஞ் செய்யமாட்டோமென்று வஃதா செய்து கொடுத்தது.

பாயிதா

ஸஃதுபுனல் முஸைய்யபு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், யாதொருவன் காலைநேரமும் மாலைநேரமும் ஸலாமுன் அலா நூஹின் பில் ஆலமீன் என்று ஓதுவானேயானால், கட்டுவாக்காலியும், பாம்பும் அவனைத் தங்கடஞ் செய்யாது என்று சொன்னார்கள்-

கரீபா.

ஷைகு யாபிஈ றஹிமஹுல்லா உடைய தாரீகில்சொல்லப் பட்டிருக்கிறது. முன்னுள்ள இராஜாக்களிலொருவருக்கு ஜோசியஞ் சொல்லுகிற நஜூமிகள் வந்து சொன்னார்கள், இந்தவருஷம் இன்னமாதம் இன்ன தேதி இன்ன சஅத்தில் கட்டுவாக்காலி கடித்து மரிப்பாயென்று ஜோசியஞ் சொன்னார்கள். அதுபோல அந்த நாளும் சாஅத்தும் வந்தபோது குளித்துமுழுகி சிலிவார்த்து அபத்தை மறைக்கத் தக்கதன்றியே மற்றும் பிடவைகளெல்லாம் களைந்து விட்டு குதிரையிலேறி கடலுக்குள்போய் நின்றான். அப்படி யிருக்கவும் குதிரையாகிறது ஒரு தும்மல் தும்மினது அதன் நாசியில் நின்றுமொரு காட்டுவாக்காலி புறப்பட்டு அவனைக் கொட்டியது. அதனால் மௌத்தாய் விட்டான்.

றிவாயத்து.

மஃறூபுல் கர்கீ றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் றிவாயத்து வருகிறது, தன் னானில் பிஸ்ரீ றலியல்லாஹு அன்ஹு ஒருபோதில் பிடவையை கழுகிறதற்காக வெளிப்பட்டார்கள்.

அப்போது பாரமான ஒரு கட்டுவாக்காலி இவர்களை நோக்கிவரக் கண்டு திடுக்கிட்டு அல்லாவைக்கொண்டு காவல்தேடினார்கள். அவன் காத்துக்கொண்டான். பின்பு அது நீலாத்துக்கு வந்தது. அப்போதொரு தவளை தண்ணீரில் நின்றும் வெளிப்பட்டது. அதன் முதுகில் இதுயேறிக்கொள்ளவும் அப்பால்தவளை தண்ணீரிலிறங்கி அக்கரைக்குப்போய் உயரே ஏறிற்று. துன்னூன் றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், நானும் தண்ணீரிலிறங்கி அக்கரைக்குப்போய் அதைத்தொடர்ந்து நடந்தேன். அவ்விடத்தில் பெரிதான ஒரு ஆல விருக்ஷம் நிற்கிறது. அதன் தாளாலே முகவரை கீறுத வெண்மை யான ஒரு வாலிபன் லாகிரியுண்டு போதமற்றவனாய்க் கிடந்து றங்கினான். அப்போது நான் சொன்னேன் லாகுவ்வத்த இல்லா பில்லா, ஓய்கட்டுவாக்காலியே இக்கரைக்கு இவ்வாலிபனைக் கொட்டுவதற்காகவா நீ வந்தாயென்று சொல்லிக்கொண்டு நிற்கவும், அப்போது தின்னீனென்ற பாம்பானது அவ்வாலிபனைக்கொத்து வதற்காய் முன்னோக்கிவந்தது. அப்போது இந்த கட்டுவாக்காலி யானது பார்த்து அப்பாம்பின் சிரசில் கொட்டிக் கொன்றுவிட்டு மீண்டும் அத்தவளையின் முதுகில் ஏறிக்கொள்ளவும், அத்தவளை யானது ஆற்றிலிறங்கி அக்கரையில் கொண்டுவந்து விட்டது. அப்போது துன்னூனில் மிஸ்ரீ றஹிமஹுல்லா இதை பைத்தாகச் சொன்னார்கள்.

இருளிலே உண்டாகிய தீங்கடங்கலைவிட்டும், வலுப்பமான நாயன் அவனை பேணிக்கொண்டதாயிருக்கிற ஹாலிலே உறங்குகிற மனிதனே, அவனில் நின்றும் நிஃமத்துகளுடைய பாயிதாக்கள் உன்னிடத்தில் வந்துக் கொண்டிருக்கிறதே, அப்படிக்கொற்ற இராஜனாகிய நாயனைவிட்டும் கண்கள் எப்படி உறங்கு மென்று சொல்லவும், அவ்வாலிபன் உடனே முழித்தான். இச்சேதியை அவனுக்கறிவித்தார்கள். உடனே தௌப்பாச்செய்து மீண்டான்.

மஸ்அலா.

தொழுகையில் பாம்புக் கொத்திவிட்டால் தொழுகை பாத்திலாம். இனி கட்டுவாக்காலி, தேள் கொத்திவிட்டால் தொழுகை பாத்திலாகாது. ஏனெனில் பாம்பாகிறது ஜடலத்தின் தொலியின் வெளியில் நஞ்சை ஊற்றும். தேளாகிறது சரீரத்தின் உள்ளாலே புகுத்திவித்திடும். ஆனதால் நஜீசைவிட்டும் உள்ளே கழுவுதல் வாஜிபல்ல.

பிரயோஜனங்களாவது.

கட்டுவாக்காலி யாகிறது பல்லியை கண்டால் அப்பவே செத்து விழுந்து விடுமென்று ஐஜூல் கவாஸ் என்னும் கித்தாபில் சொல்லப்பட்டிருக்கிறது. இனி அதைக் கரித்து வீட்டில்புகைத்தால் அதிலுள்ள மற்றும் கட்டுவாக்காலிகளெல்லாம் ஓடிப்போய்விடும். இனி கட்டுவாக்காலியை ஸைத்தூன் எண்ணெயில் வெந்து கட்டுவாக்காலியின் கடிவாயில் வைத்தால் வலியொடுங்கும். பிறைபிறக்க 3-நாளைக்கு முற்பட ஒரு கட்டுவாக்காலியை பிடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் ஸைத்தூன் எண்ணெயை விட்டு அதன் சத்தெல்லாம் அவ்வெண்ணெயெடுத்துக் கொள்ளுமளவும் அதன் வாயை அடைத்து வைத்திருந்து அப்பால் எண்ணெயை யெடுத்து இரண்டு தொடைவலி முதுகுவலிக்கு பூசினால் பிரயோஜனம் கொடுக்கும். கட்டுவாக்காலியை பசுவின் நெய்யில் சமைத்து அது கொட்டிய தலத்தில் பூசினால் அப்பவே வலிநீங்கும். அதை புது பாத்திரத்தில் வைத்து வாயைமூடி அடுப்பில் வைத்து தீயைமூட்டி யெரித்து கரித்து அச்சாம்பலை யெடுத்து கல்லடைப் புள்ளவனுக்கு குடிப்பிவித்தால் கல்லை உடைத்து குணப்படுத்தும் அதன் கொடுக்கெனும் முள்ளை ஒரு இன்சானுடைய பிடவையில் குத்திட்டால் அதை நீக்குமளவும் அவன் நசலாளியாகவே யிருப்பான். தேளை யிடித்து அது கொட்டின கடிவாயில் வைத்தால் விஷத்தை போக்குவிக்கும், அது விழுந்த தண்ணீரை அறியாமல் குடித்துவிட்டால் தேகமெல்லாம், புண்களாய் வெடிக்கும். இமாம ருமியீயும் கஸ்பீனியும் சொல்லுகிறார்கள், உத்ருஜ் பழத்தின் விறையை ஒரு களஞ்சி யெடுத்து நன்றாய் இடித்துக் குடித்தால் தேள் கடி விஷத்தை கேட்குமென்றும், பாம்பு பாம்பல்லாத பலவிஷத்தையும் கேட்குமென்றும் சொல்லுகிறார்கள். ஸைத்தூன் மரத்து வேரை தேள் கொட்டினவனுக்கு கட்டினால் அப்பவே விஷம் நீங்குமென்று அஜாயிபுல் மலகூத்தில் வருகிறது. மாதுளம் சொம்பை போட்டு புகைத்தால் அதுகளை போக்கிவிடும். முள்ளங்கியை அதன் பொந்தின் வாயில் வைத்தாலது வெளியில் வர ஏலாது. இனிசோம்பானியுடைய உமிழ்நீராகிறது பாம்பு, தேள்களை கொல்லுமென்றும் வருகிறது. அதுபோலேதான் மிஷாஜ் சூடானவனுடைய தம்பலுமென்று முன்தகயில் வருகிறது. இனி பக்கவாதம், பழைய சாம் உள்ளவர்களை தேள் கட்டுவாக்காலி கொட்டினால் உடனே நீங்கும்.

இன்னும் கருந்தேளைச் சுட்டச்சாம்பலை சிர்க்காவில் குழைத்து வெண்குஷ்டத்தில் வைத்தால் அது நீங்கும். கோதும்பை நொய்யை தண்ணீரில் வெந்து தேள் கடிவாயில் வைத்தாலும் முள்ளங்கியை இடித்து பாம்பு தேள் கடிவாயில் வைத்தாலது நீங்கு மென்று ஸாதுல் முஸாபிரீனில் வருகிறது. ஸைத்தூன் இலையை தேள் கடிக்கு கட்ட உடனே நீங்கும். (இன்ஷா அல்லா.)

எலியின் பயான்

எலியாகிறது புவைலிகு என்று பேர்வைக்கப்பட்டது. ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஓரிரவில் முழித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு எலியானது விளக்கின் திரியை இழுத்துக்கொண்டுபோய் அவர்களுடைய முஸல்லாவை கரித்துப் போட்டது. அதைக்கொன்றார்கள், கொல்லும்படி யேவவும் செய்தார்கள். (ஹுக்மின்படி அதன் வகை அடங்கலையும் தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

எலியின் தலையை கித்தான் புடவை துண்டில் முடிந்து கடி சாகிய ஒரு தலைவலிக்கு கட்டினால் நீங்கும். முசல்வலிக்கும் பிரயோஜனங்கொடுக்கும். அதன் கண்ணை தொப்பியில் வைத்துக் கொண்டால் நடைலேசாம். நாய் அல்லது ஓநாயுடைய விட்டையை வீட்டில் புகைத்தால் எலிகளெல்லாம் ஓடிப்போய்விடும். புறாவின் எச்சத்தை மாவுடன் குழைத்து அதை எலிமுதல் எந்த ஒரு உயிர் பிராணி தின்றாலும் இறந்துபோம். ஒட்டகையின் கெண்டைக்காலை மாவுப்போலிடித்து தண்ணீரில் குழப்பி எலிபொந்தில் சொரிந்தால் அதுகளை சாவடிக்கும். ஒரு எலியைப் பிடித்து வாலைதரித்து நடு வீட்டில் புதைத்து வைத்தால் அது இருக்குமளவும் அவ்வீட்டில் எலி புகுதாது. கருத்த கோவேறு கழுதையின் குழம்பை புகைத்தால் எலிவோடிப்போம். அதன் கண்ணைக்கட்டினால் நீறுத காச்சல் தீரும். எலியின் வாலை கழுதைத்தோலில் வைத்து பட்டுப்பிடவை துண்டில் பொதித்து இடதுகையில் கட்டிக்கொண்டால் ராஜாக்களிடத்தில் ஹாஜத்துகள் நிறைவேற்றப்படும். அதின் மூத்திரம் கடுதாசியிலுள்ள எழுத்துகளை களைத்துபோம். (இன்ஷா அல்லா)

பாம்பு, தேள்போல்கொற்ற விஷ ஜந்துக்களின் பயான்.

பாம்பானது பலவகையுண்டு. அதில் நக்ஷா வென்றது ஒரு வகை, அது கருப்பு பொட்டும் வெள்ளை பொட்டு முடையது. இன்னு மதிலொரு வகை ரோமங்களும் கொண்டது, இன்னுமொரு வகை கொம்பு முளைத்திருக்கும். ஷுஜாஉ வென்ற ஒருவகையுண்டு, அற்பது வென்ற ஒருவகையுண்டு. இது எல்லாப் பாம்புகளையும் தின்னும். இன்னும் அவில்லத்து என்ற ஒருவகை, அது மிகவும் பாரமானது. அதன் முகம் இன்சானுடைய முகத்தை போலாயிருக்கும். வருஷத்தில் சின்னம் ஆயிரங்களான வருஷம் சென்றாலும் அப்படியா யிருக்கும். அதன் காவலியத்து பார்க்கிறதால் கொன்றுவிடும். இன்னும் ஸில்லீ யென்றொரு வகையுண்டு. அது நடந்து போனவண்டெல்லாம் கரிந்துபோம். அதிலிருக்கும் பொந்துக்கும் சூனாலே பூண்டொன்றும் முளையாது. அதற்கும் நேராலே யாதொரு பறவை பறந்துபோனால் அடித்துகீழே விழுந்துவிடும். யாதொருஜனவானுவது அதற்கு அடுத்தாமையாக நடக்காது, அது அப்பவே செத்தே ஒழியும். யாதொருமனிதன் மற்றதின் பேரில் வெகு தலையில் நின்றும் அதன் பார்வை விழுந்தால் அப்பவே மௌத்தாம். அது கொத்தினால் அப்பவேசாவுண்டாம். ஒருமனிதன் குதிரையின் மேலே இருந்துக்கொண்டு வல்லயத்தால் அப்பாம்பை குத்தினால் அவனும் அக்குதிரையும் அப்பவே மடிவார்கள். இது துர்க்கிதேசத்தில் மிகுதமாயுண்டு.

இன்னும் பாம்பிலொரு வகையுண்டு. அதன் பார்வை ஒரு இன்சானின் பேரில் விழுந்தால் அப்பவே சாவான். அதன் பெயர் நாஸிர். இன்னும் அதிலொரு வகையுண்டு. அதன் சப்தத்தைக் கேட்டாலும் செத்துவிடுவான். ஹைய்யத்தென்னும் பாம்பானது 1000-வயதுக்கு ஜீவித்திருக்கும், 30-முட்டையிடும், அதனுடைய விலாத்தட்டெலும்புடைய எண்ணத்தின்படிக்கு வருஷத்துகோர் தடவைசட்டை களட்டும். அதை கட்டுவக்காலி கொட்டினால் தரித்துவிடும். பாம்புகளுக்கு புணர்ச்சியை அறியபடவில்லை, எக்கிறு மொன்றேடொன்று பிணுதலாக பின்னுதலே தவிர, இரண்டாய் பிளக்கப்பட்ட நாவுண்டு, புலியைப்போலே குஞ்சை விழுங்கிவிடும்.

இன்னும் பாம்பாகிறது 3-வகையாயிருக்கும். அதிலொன்றுக்கு மருந்துமில்லை, மாற்றுமில்லை, அதேதென்றால், ஷுஃபானென்றும், அப்ஜ யென்றும் சொல்லப்பட்டதைப்போலும் ஹிந்திலுள்ள பாம்பைப்போலும், இன்னொருவகை மருந்து பலிக்கும், இன்னொரு வகை அவ்விரண்டுமில்லை, அது கொல்லுகிறதெல்லாம் பயம் திடுக்கத்தின் வாசித்தாவைக் கொண்டே அல்லாது வேறில்லை.

ஹிக்காயத்து.

ஒரு மனிதன் ஒரு மரத்தின் தாளாலே கிடந்துறங்கினான். ஒரு பாம்பாகிறது அம்மரத்திலிருந்திறங்கி அம்மனிதனின் தலையில் கொத்திவிட்டது. உடனே கண் சிவந்தவனாய் விழித்து தலையைச் சொரிந்தான், அப்பாம்பு போய்விட்டது. ஆனதால் யாரையும் காணவில்லை. அதைக்கொண்டு சந்தேகமுமாகவில்லை. மறுபடியும் படுத்துறங்கினான். சிலகாலஞ் சென்றபின் அதை பார்த்திருந்த ஒருமனிதன் சொன்னான், இன்ன மரத்தின் தாளாலே இன்னநாள் படுத்திருந்தாயே அப்போதேன் முழித்தாய் தெரியுமாவென்று கேட்டான். அவன் நானறியேனென்றான். இவன் சொல்லுவான் ஒரு பாம்பானது இறங்கி உன் தலையில் கொத்திவிட்டதென்றான். அப்பவே திடுக்கிட்டு அஞ்சினான், அதனால் மௌத்தாய்விட்டான்.

பாயிதா.

காலிதப்னு வலீது றலியல்லாஹு அன்ஹு ஷாம் தேசத்துச் சண்டையில் ஹைறத்து என்னுமூரில் வெள்ளைக் கோட்டையிடத்தில் வளைந்திருக்கும்போது உங்களிலொரு புத்திசாலியை அனுப்புங்களென்று சொல்லவும், அப்துல் மஸீஹிப்னு அம்றுஎன்பவனை அனுப்பினார். அவனுக்கு 350-வயதுக்கதிகமுண்டு. அவனோடிவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அவன் கையிலொரு சிஸா வைத்துக் கொண்டிருந்தான். இதென்ன வஸ்தென்று கேட்கவும், உடனே கொல்லுகின்ற நஞ்சென்றான். என்ன செய்யவென்று கேட்டதற்கு சொல்லுவான், எனக்கும் என் கௌமுக்கும் இவ்வூராருக்கும் உம்மிடத்தில் கைரைப் பெற்றுக்கொண்டால் சபூல் செய்துக்கொள்வேன். இல்லாவிட்டால்

இதைத்தின்று செத்துப்போவேனென்றான். அப்போது காலிது றலியல்லாஹு அன்ஹு அதைக் கொடுமென்று வாங்கித் தங்கள் உள்ளங்கையில் விட்டுக்கொண்டு இதை,

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்
பிஸ்மில்லா ஹி வபில்லா ஹி பிஸ்மில்
லா ஹி றப்பில் அர்லி வஸ்ஸமா பி
பிஸ்மில்லா ஹில்லதீ லாயலுற்று மஅ
இஸ்மிஹி ஷைஉன் பில்அர்லி வலா
பிஸ்ஸமாஇ வஹுவஸ்ஸமீஉல் அலீம்

என்றோதிக் கொண்டு அதைக்குடித்து விட்டார்கள். அதன் மேல் தண்ணீர் குடித்தார்கள், நாடியைக்கொண்டு நெஞ்சிலடித்து வேர்வையாய் கொப்பளித்து நீங்கிவிட்டது. அப்போது அப்துல் மஸீஹ் என்பவன் தன் கூட்டத்தாரிடத்தில் போய் இதை தெரியப்படுத்தி மேலைக்கு அவர்களின் கருமம் வருப்பமாம், ஆனதால் சமாதானமாக்கி கொள்ளுங்க ளென்றான். 80,000 திரஹத்தின் பேரில் சல்ஹாக்கிக் கொண்டார்கள். (றலியல்லாஹு அன்ஹு)

அபுத்தர் தாயீ றலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்து அவர்களின் வெள்ளாட்டி, நீர் எந்தயினத்தில் நின்றுமுள்ளவரென்று கேட்டாள். அதற்கவர்கள் நானும் உன்னைப்போலே ஆதமீதா னென்றார். அவள் சொல்வாள் நீங்கள் எப்படி ஆதமீயா யிருப்பீர். நான் உங்களுக்கு 40-நாளாக நஞ்சை வஜீபனமாக்கி வைக்கிறேன். அது உங்களை யாதொரு தங்கடமும் செய்யவில்லையே யென்றாள். அதற்கவர்கள் சொன்னார்கள், நீ அறிய வில்லையா. அல்லாஹுத் தஆலாவை திக்று செய்தவர்களை யாதொரு வஸ்துவும் தங்கடஞ் செய்யாது, நானுகிறது அல்லாஹுத் தஆலாவை அவனுடைய இஸ்முல் அஃலமைக் கொண்டு திக்று செய்கிறவனாக யிருக்கிறே னென்றார்கள். அதென்ன இஸ்மென்று கேட்டாள். அதற்குச் சொன்னார்கள்.

பிஸ்மில்ல ஹில்லதீ லயலுர்று
மஅஸ்மிஹி ஷைஉன் பில் அர்லி
வலாபிஸ்ஸமா இ வஹுவஸ்ஸமீ
உல் அலீம்.

என்றதா யிருக்குமென்றார்கள். பின்பு நீ என் அப்படி கஞ்சைத் தந்தாயென்றார்கள். உங்கள் பேரிலுள்ள கோபத்துக்காக வென்றாள். அதற்கவர்கள் அல்லா முகத்துக்காக நீயோகிறது ஹுர்றாயிருக்கும், நீ செய்ததும் உனக்கு ஹலாலென்று சொல்லி உருமைக்கு விட்டிட்டார்கள். (றலியல்லாஹு அன்ஹு.)

அஜீபா.

அல்லாஹு சுபுஹானஹுவத் தஆலா அறுஷை அதனுடைய பொறுப்பதின் பேரில் படைத்தபோது அது தன்னைப் பெறுப்பமாய்க்கண்டது, அதனையொரு பாம்பைக்கொண்டு அதற்கு சவடியிட்டான், அதற்கு 70,000-இறகுண்டும், ஒவ்வொரு இறகில் 70,000 துவ்வலும் ஒவ்வொரு துவ்வலில் 70,000 முகமும் ஒவ்வொரு முகத்தில் 70,000-வாயும் ஒவ்வொரு வாயில்70,000 நாவுமுண்டு, அந்த நாவுகளில் நின்றும், நாளடங்கலுக்கும், மழை துளிகளுடைய யெண்ணம் மரங்களினிலைகளினெண்ணம், கல்லு மணல்கள் துனியா வுடைய நாள்கள் மலாயிக்கத்துகள் இவ்வளவுடைய எண்ணங்களின் படிக்கு தஸ்பீஹ் செய்யுதல் புறப்படும் அப்பாம்பு அறுஷின் பேரில் சுத்திற்று, அதினுடைய அரைவாசிக்குத் தான் அறுசு கண்டது அவ்விடத்தில் அறுசாகிறது தாக்ஷிகொண்டது.

பின்பு சூரியனை அதினுடைய வலுப்பத்தின் கதரின் பேரில் படைத்தபோது அது தன்னை பெரிதாய்க்கண்டு பெருமையடித்தது. அதனால் மேகத்தைப்படைத்து அதினுடையபிரகாசத்தை மறைக்கிறது கொண்டு அடக்கி யாண்டான், அதனாலது தன்னுடைய மாட்டாங்கிதனத்தை யறிந்தது.

பின்பு சந்திரனை அதிருக்கிற கதறின் பேரில் படைத்தபோது அதுதன்னைப் பெரிதாய்க் கண்டது, அதனாலதை தேய்கிறது கொண்டு சோதித்தான். அப்போதது தன்னுடைய மாட்டாங்கி தனத்தை யறிந்தது.

இன்னும் சொர்க்கத்தை படைத்தபோது அது தன்னை மனமாய்க்கண்டு பெருமைக் கொண்டது. அதனால் ஆதம் அலைஹிஸ்ஸலாமை அதிலே புகுதச்செய்து அவர்கள் அவனுடைய யேவலுக்கு மறதியாய் மாறுசெய்யவும் செய்தான். அப்போதது தன்னுடைய மாட்டாங்கி தனமென்றதை யறிந்தது.

இன்னும் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு மலக்குகள் சஜுதா செய்த நேரத்தில் தங்கள் கபுஸளவிலே பார்த்ததால் கோதம்பை தின்னுகிறது கொண்டு அவர்களை சோதித்தான்.

இன்னும் அல்லாஹுத் தஆலா பூமியை படைத்தபோது அது பெறுமைக் கொண்ட படியால் தரிபாடாகிய மலைகளைக் கொண்டு அதை அடக்கியாண்டான்.

மலைகள் பெருமைக் கொண்டதால், அதை இரும்பைக் கொண்டு அடக்கி யாண்டான். அது எப்படிக்கொத்த கல்லையும் தரித்துவிடும்.

இனி இரும்பு பெருமைக் கொண்டதால், அதை நெருப்பைக் கொண்டு அடக்கினான்.

பின்பு நெருப்பு பெருமைக் கொண்டதால் அதைத் தண்ணீரைக்கொண்டு அடக்கச் செய்தான்.

பின்பு தண்ணீர் பெருமைக்கொண்டதால், அதைமேகத்தைக் கொண்டு அடக்கியாண்டான். அது அதை இடமும்வலமுமாய் சிதறி விடும்.

மேகம் பெருமைக் கொண்டதால், அதைக்காற்றைக் கொண்டடக்கினான், எடுவாலும் படுவாலும் அந்த காற்றுகிறது கொண்டு செல்லும்.

காற்றுப் பெருமைக் கொண்டபோது மனிதனைக் கொண்டு அடக்கினான். அவனுகிறது வீடுகளைக் கொண்டும் காற்றைவிட்டும் விலகிக் கொள்வான்.

மனிதன் பெருமைக் கொண்டபோது அவனை மௌத்தைக் கொண்டடக்கினான்.

மௌத்து பெருமைக் கொண்டபோது அதைக் கியாமத்து நாளையிலே சொர்க்கத்துக்கும் நரகத்துக் கிடையிலே போட்டு அறுக்கிறது கொண்டு அடக்கி யாண்டான். அதை அறுக்கிறது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், இன்னமொரு சொல்லில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமாயிருக்கும்.

பாயிதா.

அஜாயிபுல்மக்லூக்காத்தில் வருகிறது, தௌாசிப்பூண்டாகிறது என்று அனூசர்வான் ராஜாஉடைய காலத்திலுண்டானதே தவிர அதற்கு முன்னாலே கிடையாது. அதன் சபபாவது அவர் ஒருபோது தனது அதிகாரசிம்மாதனத்தில் வழக்கு நீதம்கேட்டுக்கொண்டிருக்கும்போது பர்ரமாகிய ஒருபாம்பானது அவருடைய கட்டிலின் தாளாலேவந்து புகுந்தது. அதை மனிதர்கள் அடிக்கப்போனார்கள். அப்போதவர் சொல்லுவார், அதுவாகிறது ஒரு அநியாயத்திலகப்பட்டதாய் நான் யெண்ணுகிறேன். நீங்களடிக்கவேண்டாமென்று சொல்லி விலக்கிவிட்டு தமது ஏவலாளர்களி லொருவரை அதின் பிரமாலே தொடர்ந்து போகச் செய்தார். அது முன்னமேயும் அதன் பின்னாலே அவன் தொடர்ந்து போகவும் அப்பாம்பானது ஒரு கிணற்றின் வாயைசுற்றி அதினுள்ளே யிறங்கி மறுபடியும் வெளியே கிளம்பி வந்தது. அப்போதவன் கிணற்றுள் பார்த்தான். கிணற்றினுழத்திலொரு பாம்பு செத்துக் கிடக்கிறது. ஒரு கருந்தேளாகிறது அதன் முதுகிலிருக்கிறது. அதைக்கண்டு தனது வல்லயத்தை நீட்டி அத்தேளைக் குத்தியெடுத்து இராஜா யிடத்தில் கொண்டு வந்து காண்பித்து அச்செய்தியையும் அறிவித்தான். பின்பு மறுவருடம் அந்த நாள் வந்தபோது அந்த பாம்புவந்து இராஜன் முன்னாலே நின்றுக்கொண்டு கருப்பாகிப ஒரு வித்தை தன் வாயில் நின்று மெறிந்தது. இராஜனதையெடுத்து மூளைப்பி வித்தார். அவராகிறது, மிகவும் ஜலதோஷ முடையவராகவும் மூளையில் வலியுள்ளவராகவும் யிருந்தார். ஆனதால் அப்பூண்டை அவர் மூகந்தார். அந்த ஜலதோஷநோய் அவரைவிட்டும் நீங்கி விட்டது.

பாயிதா.

ஹில்யதுல் அவுலியா வென்னும் கிதாபில் வருகிறது முஹம்மதிப்னு ஹாமைரு என்பவர் பகலில் நோன்பு பிடிக்கிறவராகவும் இரவில் முழித்து வணங்குகிறவராகவும் வறவு உடையவராகவும் இருந்தார். அவர் கண்ணிவைத்து வேட்டையாடுகிறது கொண்டு பலாய்ப் பிடிக்கப்பட்டவராகவும் இருந்தார். ஒருநாள் வேட்டைக்காக வெளிப்பட்டு நடக்கும்போது ஒரு பாம்புவந்து குறுக்கிட்டு சொல்லும், ஓய் முஹம்மதிப்னு ஹாமைரே, என்னை

நீர் காத்துக்கொள்ளும். அல்லாஹுத் தஆலா உம்மைக் காத்துக் கொள்வான் பென்றது. யாரைவிட்டும் கார்க்கவென்று கேட்டதற்கு எனக்கு அநியாயஞ் செய்யுமென்னத்தக்க பகைவனை விட்டு மென்றது. அவனெங்கே பென்று கேட்டதற்கு பின்னாலே வருகிரு னென்றது. நீ யெந்த உம்மத்து பென்றார். நான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய உம்மத்து என்றபோது நல்லதென்று பரிவட்டத்தைத் திறந்து அதிலுள்ளிருந்துக்கொள் ளென்றார். அவன் கண்டுக்கொள்வானே என்றது, அப்படியானுல் சட்டையை நீக்கி என்பிடவைக்கும் வயற்றுக்குமிடையில் புகுந்துக் கொள்ளென்றார். அப்பவும் என் பகைவன் கண்டுக்கொள்ளுவான் என்றது. இனி நானென்ன செய்வேனென்றார், அது சொல்லும் நீர் நலவை செய்ய நாடியமனிதராயிருந்தால் உம்முடைய வாயை திறந்துக்கொள்ளும் நானதில் புகுந்துக் கொள்வேனென்றது, என்னைக் கொன்று விடுவாயென்று பயப்படுகிறே னென்றார். அப்போது சொல்லும் அல்லாபேரி லாணையாக நானுன்னைக் கொல்லமாட்டேன். அல்லாஹுத் தஆலாவும் அவனுடைய மலாயிக் கத்துகளும் அன்பியாக்களும் அர்ஷைசுமந்த மலக்குகளும் அது கொண்டு ஷாஹிதாயிருக்கும். நானும்மைக் கொல்ல மாட்டே னென்று சத்தியஞ் செய்து கொடுத்தது. அதனுல் வாயைத் திறந்தார் அது உள்ளே புகுந்துக்கொண்டு அவர் நடந்துபோகும் போது ஒரு மனிதன் கையில் வீரவாள் பிடித்தவராய் என்னிடம் வந்து குறுக்கிட்டு, ஓய் முஹம்மதே யென்றார். நான் எதைநாடுகிறீ ரென்றேன். அவர் என்னுடைய பகைவனைக் கண்டீரோயென்றார், அதாரென்றேன், ஒரு பாம்பென்றார். நான் இல்லையென்றேன். நான் இல்லையென்று சொன்னதற்காக 100-தரம் இஸ்திக்பாறு செய்தேன். பின்பு கொஞ்சதூரம் போகவும் அப்பானது என்னுடைய வாயில்நின்றும் தலையை வெளிப்படுத்தி என் பகைவன் போய்விட்டானு பாருமென்றது. நான் பிரிந்துபார்த்தேன், ஒரு வரையும் காணவில்லை. ஆனதால் நீ வெளியில் வரவேணுமென்றுல் வந்துவிடுயென்றேன். அப்போது அதுசொல்லும், ஓய் முஹம்மதே இந்த ஊரில் நீராகிறது இரண்டாலொரு மருமத்தை தெரிந்துக் கொள்ளும். அதென்னவானுல் ஒன்றிருக்கில் உன்னுடைய ஈரலை தரித்துவிடுவேன். அல்லது உம்முடைய கல்பிலே ஊதித்தமரிட்டு ரூஹில்லாதே உம்மை விட்டு விடுவேனென்றது. அப்போதவர்

சொல்வார், யாசுபுஹானல்லா இதென்ன புதுமைகாண். நீர் செய்த அர்திமானம் எங்கே? சத்தியம் எங்கே? இவ்வளவு அற்பநோத்துக்குள் நீ மறந்திட்டாயா, சத்தியத்தை முரித்திட்டாயா, வென்று சொன்னார். அப்போது அப்பாம்புசொல்லும், ஓய் முஹம்மதே உம்மைக்காண முழுமடையனை நான் காணவில்லை. ஏனென்றால் உம்முடைய தகப்பனார் ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கும் எனக்கு மிடையிலே உண்டாகிய பகைத்தனத்தை நீர் மாந்திட்டீரோ, அவரைச்சொர்க்கத்தைவிட்டும் வெளிப்படுத்தி வைத்ததானல்லவா. ஆனாலே நலவானகாரியத்தை அதற்கு பாத்திரவானல்லாதவனுடனே செய்கிறதின் பேரில் பாதுவஸ்து உம்மைச் சமத்தாட்டி வைத்திட்டபுதுமையென்னவென்று நான் ஆச்சரியப்படுகிறேனென்று சொல்லிற்று. அப்போதவர்சொல்லுவார், நல்லது இப்போது என்னைக் கொல்லத்தான் உனக்குவேண்டுமோ வென்று கேட்கவும், அதுவேண்டும்தானென்றது. அப்போது சொல்வார் நல்லது கொஞ்சம்பொறுத்துக் கொள், இந்தமலைக்கும் தாளாலேபோய் என்னபுசக்கு ஓரிடத்தை தேடிக் கொள்ளட்டுமென்றார். நல்லது அப்படிச்செய்துக் கொள்ளுமென்றது. அப்பாலவர் யாதொரு ஹீலாவை விட்டும் நற்றுதல் கெட்டவராய் அம்மலையைநாடி நடக்கும்போது வானத்தளவில் பார்வையை உயர்த்தி அண்ணாந்து பார்த்துச் சொல்வார்.

யாலத்தீபு யாலத்தீபு உல்த்துப்பீ
பிஹுத்துபிகல் கபிய்யி யாலத்தீபு
யாகதிறு அன் அஹுக பில்குத்ற
தில்லதீ இஸ்த்தவைத்த பிஹா அலல்
அர்ஷி பலமயல்லமில் அர்ஷுஹு
ஜன முஸ்த்த கர்றுக மின்ஹுஹு
யா ஹலீமு யா அலீமு யா அலிய்யு
யா அலீமு யா ஹய்யு யாகய்யூமு
யா அல்லாஹுஹு இல்லாமா கபைத்தனீ
ஷர்ற ஹாதியில் ஹய்யத்தி

என்றோதிக் கொண்டு கொஞ்சதூரம் நடந்தார். அப்போது நூபடையும் வாடைமணமும் தளதளத்த முகமுடைய ஒரு மனிதர் வந்து சலாம் சொன்னார். இவர் புறத்திச்சொன்னார்.

அப்போதவர் கேட்பார், யாதுகாரணம் உம்முடைய முகம் பேதலித்தவராகவும் ஜடலம் மனம் சோர்ந்து தழும்புகிறவராகவும் உம்மைக் காண்கிறேனே அதென்னவென்று கேட்கவும், என்னை உநியாயஞ்செய்யுமெனத்தக்க பகைவனில் நின்றுமாயிருக்கு மென்றார். அவனெங்கே யென்றுகேட்கவும், என்னகத்துள்ளே யென்றார். வாயைத் திறவுமென்றார் இவர் திறந்தார், பசிர்தணைத்து னிலையைப் போவான ஒருவஸ்துவை வாயில்வைத்து விழுங்கு மென்றார். இவர் விழுங்கினார், விழுங்கி கொஞ்சநேர செல்ல வில்லை, வயறுகிறது வலித்து இரைந்து அப்பாம்பு வயத்துள் செத்து துண்டு துண்டாய் வயற்றால் வெளியில்வந்து விழுந்தது. பயம் நீங்கி விட்டது. உடனே அம்மனிதனை பிடித்துக்கொண்டு யெனதுடைப்பிறப்பானவரே நீர் யார்? அல்லாஹூத் தஆலா உம்மைக் கொண்டு எனக்கு உபகாரஞ் செய்திட்டான் யென்று கேட்கவும், அவர் சிரித்துக்கொண்டு என்னை நீர் அறியமாட்டீரோவென்க, இவர் அறியேனென்றார். அப்போது சொல்வார் உமக்கும் இப்பாம்புக்கும் இடையிலே நடக்கும் கருமம் நடந்து இந்த துஆவைக் கொண்டு நீர் துஆ கேட்டபோது ஏழுவானத்திலுள்ள மலாயிக்கத்துகளும் அல்லாஹூத் தஆலா அளவில் முறைப்பாடு செய்தார்கள். அப்போது அல்லாஹூத் தஆலா என்னை சொர்க்கத்தில் போய் தூபாவென்னும் விருக்ஷத்தில் நின்றும் ஒருபசிந்த இலையை பரித்து எனதடியார் முஹம்மதிப்னுஹூமைறு அளவில் கொண்டு போய் கொடுமென்றான். என்பேராகிறது மஃறூபு, நான் தரிபடும் தலம் 4-ம் வானத்திலுமா யிருக்குமென்றார். பின்னுஞ்சொல்வார், ஓய் முஹம்மதிப்னுஹூமைறே நீருகிறது நலவான கருமத்தை செய்கிறதைபற்றி பிடித்துக்கொள்ளும். ஏனெனில் அதுவாகிறது தீங்கான சாவைக் காத்துக் கொள்ளும் அந்த நலைவ ஏற்கப்பட்டவன் அதை பழுதாக்கிவைத்தாலும் சரியே அல்லாஹூத் தஆலா விடத்தில் அது ஒருபோதும் பழுதாக்கமாட்டாதென்றார்.

பாயிதா.

தேள்கட்டுவாக்காலி கொட்டப்பட்டதற்கு பிரயோஜனமாகிய சோதித்தறியப்பட்ட பாயிதாக்களில் நின்று முள்ள ஓர் மந்திரிப் பாகிறது, மந்திரிக்கிறவன் அது கொட்டப்பட்டவனைப் பார்த்து உருப்பில் எந்த தலத்தில் வலியிருக்கிறதென்று கேட்டு, அந்

தலத்தின் மேல்புறத்தில் கத்தியின் பிற்புறத்தை வைத்து இந்த அஸீமத்தை ஓதிக்கொண்டு அத்தலத்தின் கீழ்புறத்தளவில் இழுத்துக்கொண்டே யிருப்பான். அக்கீழ்புறத்தில் அவ்விஷம் யிறங்குகிற வரையிலும் அப்படியே ஓதிக்கொண்டும் தேய்த்துக் கொண்டுமிருப்பான். அது இறங்கினபின் அத்தலத்தை வலி தீருமளவும் வாயால் சூப்புவான். (முஜர்றபு) அந்த அஸீமத்தாவது.

ஸலாமுன் அலா னூஹின் பில் ஆலமீன்.
வஅலா முஹம்மதின் பில் முர்ஸலீன்.
மின் ஹாமிலாத்தி ஸ்ஸும்மி அஜ்மஈன்.
லாதாப்பத்துன் பைனஸ்ஸமாஇ வல் அர்லி.
இல்லா வறப்பீ ஆகிதுன் பினுவியத்திஹா.
அஜ்மஈன் கதாலிக யஜ்ஸீ இபாதஹுல்.
முஹ்ஸினீன் இன்ன றப்பீ அலா ஸிறாத்தின்.
முஸ்த்தகீம் நூஹு நூஹு நூஹு கால.
லஹும் நூஹு மன்தகறனீ பலா தல்தகூஹு.
இன்ன றப்பீ பிகுல்லி ஷைஇன் அலீம்.
வஸல்லல்லாஹு அலா ஸையிதினா முஹம்மதின்.
வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்.

இன்னும் முற்படுத்தப்பட்ட உலமாக்களி லொருவர் சொன்னார். யாதொருவன் இரவி னுடைய துவர்க்கத்திலும், பகலுடைய துவர்க்கத்திலும் 'அகத்து பிஸான் ஹையத்திவஸ் பானல் அக்றபி வயதஸ்ஸாரிகி பிகௌலி அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் றஸூலுல்லா' யென்றோதினால் பாம்பு, தேள், திருடர்களை விட்டும் அச்சம் தீருவானென்று சொன்னார்கள்.

ஹதீது.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், யாதொருவன் பாம்பைக் கொன்றானேயானால் ஒரு முஷ்ரிக்கான காபிரைக் கொன்றதுபோலாயிருக்கும். யாதொருவன் மோதிரத்தை அணிந்தானேயானால் அதை உதறித் தட்டிக்கொள்ளவும். யாதொருவன் தன் விரிப்பளவில் ஓதினானேயானால் அதை உதறிக்கொள்ளவும். இன்னுமொரு றிவாயத்தில் யாதொருவன்

பாம்பை அதனுடைய ஒடுக்கத்தை பயந்து அடிக்காமல் விட்டிட்டானேயானால் அவன் நம்மில் நின்றுமுள்ளவனல்ல. இனியா தொருவன் பல்லியைக் கொன்றானேயானால் அவனுக்கு ஒரு நன்மையுண்டு. யாதொருவன் பல்லியை முதலடியில் கொன்றானேயானல் அவனுக்கு 70-நன்மையுண்டு. இன்னும் 3-தரம் அச்சம் பூட்டிவைத்ததின் பின்னாலே பாம்பைக் கொல்லுகிறதுகொண்டு ஏவினார்கள். 3-நாளென்றும் 3-தர மென்றும் உலமாக்களுக் கிடையில் கிலாபு வந்திருக்கிறது.

இன்னும் அலைதல்காயாவென்னும் கிதாபில் அப்துர் றஹ்மானிப்னு அபீ யலீலாவைத் தொட்டும் றிவாயத்து வருகிறது. நபீல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், குடியிருக்கும் பாம்பு வந்துதேயானால் நீங்கள் சொல்லுங்கள் நூஹு அலைஹிஸ்ஸலாமுடைய அர்திமானத்தைக்கொண்டும், சுலைமான் அலைஹிஸ்ஸலா முடைய அர்தி மானத்தைக்கொண்டும் உன்னிடத்தில் நாங்கள் கேட்கிறோம். நீ எங்களை நோவினைச்செய்யாதேயென்று சொல்லுங்கள். அது மறுபடியும் மீண்டு வந்ததேயானால் அதைக் கொன்றுவிடுங்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் முஸ்லிமாகிய ஜின்னுகளும் பாம்பினுடைய வேடம் பூண்டுவரும். அதை அச்சம் பூட்டியதின் பின் மீண்டுவந்தால் அது ஷைத்தானு யிருக்கும். அதைக் கொன்றுவிடுங்களென்று வந்திருக்கிறது.

இன்னும் பாம்பு, தேள், எலி, கடிநாய், காகம், பருந்து, காடி, புலி, ஓநாய், வரிபுலி, கழுகு, செல்லு, வண்டு, மூட்டை இவைகளெல்லாம் கொல்லுகிறது சுன்னத்தான ஜெந்துகளில் நின்றுமுள்ளதென்று றவுளாஎன்னும் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது.

(ஹதீதின்படி பாம்புகளைத் தின்னுகிறது ஹறாம்.) அது போலேதான் அதனுடைய தசையில் நின்றும் செய்யப்பட்ட அவிழ்தத்தை தின்னுகிறதும் ஹறாம். கடலில் அதன் ரூபத்தின் பேரிலிருக்கிற மீன் ஹலால்.

பிரயோஜனங்களாவது.

பாம்பின் விரப்பல்லை உயிரோடேயிருக்கையில் களைந்து தீராத காச்சலுக்குக் கட்டினல் குணமாகும். அதை பல்வலிக்கு கட்டினல் வலிநீங்கும். அதன் கறியைசமைத்த சாற் பார்வையை பலமாக்கி வைக்கும், அதன் சட்டையை புடவையுடனே வைத்தால் அந்து விழாது, அதைச்சுட்டு மணமான வைத்தூனெண்ணெயில் குழைத்து பல்வலித்து ஓட்டை விழுந்த பல்லில் நிரப்பி வைத்தால் சுத்தப் படுத்தும். அதையும், தலையையும் அரைத்து முடி முளையாத வியாதியின் பேரில் தேய்த்தால் முடிமுளைக்கும். அதன்முட்டையை பூறும் 'சிர்காவும் கூட்டியிடித்து புதியவெண் குஷ்டத்தில் பூசினல் அதை நீக்கும். அதன் சட்டையை 3-பேரீத்தம் பழத்துடன் குழைத்து பருவுள்ளவர்கள் தின்றால் அதைப் போக்கிவைக்கும், அல்லாதவர்கள் தின்றால் ஒருக்காலும் வராது. அதன் கல்லை கட்டினல் கடின காச்சலும் தீரும். (இன்ஷா அல்லா)

ஆனையிராஞ்சிப் புள்ளுவின் பயான்.

ஆனையிராஞ்சிப்புள்ளாகிறது வெண்மையான ஓர் புள்ளா யிருக்கும், யானைகளை இராஞ்சிக் கொண்டுபோம், முந்தியகாலத் திலுண்டாயிருந்தது. ஒரு மணவரை பெண்ணைத் தூக்கிக் கொண்டு போய்விட்டது. ஆனதால் ஹன்லலதின்னபிய்யி அலைஹிஸ் ஸலாம் பத்துஆ செய்தார்கள். அல்லாஹுத் தஆலா கத்தல் இஸ்திவா உக்கும் புறமாலே பஹிறுல் மூஹீதுடைய தீவில் நின்றும் ஒருதீவனவில் எடுத்தெறிந்து விட்டான். அது பறக்கும் போது இடியுடைய சப்தம்போலே இறகின் சப்தம் கேட்கும், 2000 வருடத்திற்கு ஜீவித்திருக்கும், 500-வயது சென்றால் புணர்ச்சி செய்யும்.

தீமுழுங்கி பக்ஷியின் பயான்.

தீமுழுங்கி பக்ஷியாகிறது கதருசரியாகிய நெடுகமான முட்டையிடும், அதை மூன்றுப் பாகிக்கும். ஒரு பாகத்தைக்

குஞ்சு பொரிக்கும், மற்றொரு பங்கை தனக்கு நீனுக்கிக்கொள்ளும் பின்னொரு பங்கை திறந்து வைத்து விடும். அது புழுக்கும் அதை குஞ்சுக்கு இரையாக்கிவிடும். இனி 2-காலுடைய ஜந்துகளடங்கலும் ஒரு காலொடிந்தால் மற்றொன்றைக் கொண்டு உதவி தேடிக் கொள்ளும் இதைத்தவிர. இது அவ்விடத்திலேயே கிடக்கும். பசியால் மரணிக்கும். ஹைவான்களில் கேளாததும் ஒருகாலும் தண்ணீர் குடியாததும் இது ஒன்றே. இதற்கு மூளையில்லை. உடும்பும் அது போலாம், எங்கிலும் கேட்கும். அதன் மடதனத்தனத்திலுள்ளது மற்றொன்றின் முட்டையைக் கண்டாலதை காக்கும். தன் முட்டையை விட்டிடும். இன்னும் வேடனைக் கண்டால் மணலில் முகத்தை புகுத்திக் கொண்டு நாம் மறைந்துக் கொண்டோமென்று நிச்சயித்துக் கொள்ளும். குழந்தைகளின் காதிலுள்ள வாளி முத்து முதலானதைக் கண்டால் ஆய்ந்துக் கொண்டுபோய் விடும். அது நெருப்பைத்தின்னும், அது செமைத்துவிடும்.

பாயிதா.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் பூலோகத்திலிறங்கின போது மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் கோதுமைக் கொண்டுவந்து கொடுத்து இது உமக்கும் உமக்கு பின்னாலே உம்முடைய மக்களுக்கும் ரிஸ்காயிருக்கும். ஆதலால் எழும்பி விதைத்து பயிர்செய்யுமென்றார். அக்காலத்தில் அதுவாகிறது தீமுழுங்கிப் பக்ஷியின் முட்டையுடைய கதரிலா யிருந்தது. இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாமுடைய காலமளவும் அப்படியே யிருந்தது. அப்பால் மனிதர்கள் அல்லாவைக் கொண்டு குபுறுசெய்த ஸபபினால் கோழி முட்டையுடைய கதரிலும் பின்பு புறாமுட்டை யளவிலும் பின்பு இலந்தங்கொட்டை யளவிலும், உஸைறு நபிகாலத்தில் கடலை யளவிலும் சிறுத்துகுறைந்து போய்விட்டது. இன்றளவும் அது இருக்கின்ற கத்றளவுமா யிருக்கின்றது. ஹுக்மின்படி அதைத் தின்னுகிறது இஜ்மாஉ கொண்டு ஹலால்.

பிரயோஜனங்களாவது.

தீமுழுங்கி பக்ஷியின் பித்தாகிறது கொல்லுகின்ற நஞ்சாயிருக்கும். அது தின்ற இரும்பில் பின்னும் கத்தி வாள்போல் கொற்ற ஆயுதங்கள் செய்தால் அதுடையான் ஒருகாலும் வெட்டுக்குச் சலியான்.

செம்பருந்தின் பயான்.

செம்பருந்தாகிறது பறவையினங்களில் மிகவுந்தனிவானது. அது புணருங்காலத்தில் சப்தமிடும், அதின் சபபாவது சுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய காலத்தில் ஒருபருந்துகுஞ்சு பொரித்தது. அதன் தகப்பன் அப்பிள்ளை எனக்குள்ள தில்லையென்று சொல்லி அதை அவர்களிடத்தில் முறையிடவும், அவர்கள் கேட்டதற்கு இதுகாட்டில் செடுகத்திரியும், ஆனதால் எனக்குத் தானுண்டான தென்பதற்கு என்ன முகாந்திர மென்று கேட்டது. அப்போது அந்த குஞ்சைக்கொண்டுவரச்சொல்லி பார்த்து அது உன்னைப் போலவே யிருக்கிறது. உன் குஞ்சுதானென்று தீர்ப்பு செய்து, அத்தாய்க்கு சொன்னார்கள், இனி அது புணருங்காலத்தில் எல்லாருக்கும் நீ ஷாஹிதுவை யென்றார்கள். ஆனதால் அது பறவைகளை நோக்கி நீங்களறியுங்கள், என்னை புணருகிறான். நீங்கள் இதற்கு ஷாஹிதென்று சப்தம்போடும். அது ஒருவருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவு மாயிருக்கும் (ஹுக்மின்படி அதைத்தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது

அதன் பித்தை நிழலிலுலர்த்திப் பளிங்குப் பாத்திரத்திலூர போட்டு வைத்து யாதொரு விஷஜெந்து கடித்த கடிவாயிலும் ஒழுக்கிக் கடித்த புறத்துக்கு மாறான புறத்திலும் கண்ணிலும் அஞ்சன மிட்டால் விஷமிறங்கிவிடும். அதன் பித்தை நறுக்கி பாம்பின் புடையில் தூவினால் மாண்டுப்போம். அதை உயிருடன் கட்டி வைத்த வீட்டில் பாம்பு, தேள் புகுதாது (இன்ஷா அல்லா.)

காகத்தின் பயான்.

காகமாகிறது பலவகையுண்டு. அவைகளெல்லாம் ஜிமாயி னிடத்தில் இன்ஸானைப் போலாயிருக்கும். அவ்வேளையில் மனிதனை விட்டும் மறையத்தேடுகிறது அதன் குணத்தில் ன்று முன்னதா யிருக்கும்.

ஹதீது.

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள் பெண் பிள்ளைகளில் சாலிஹான பெண் பிள்ளையாகிறது 100-காகங்களுக் கிடையில் ஒரு குறுபுல் அலைமைப்போலா யிருக்கு மென்று திருவுளமானார்கள். குறுபுல் அலைமென்கிற காகமாகிறது ஒற்றைக்கால் வெளுத்ததென்றும் சுண்டும் இரண்டுகாலும் சிவப்பான தென்றும் இரண்டிரகும் வெளுப்பான தென்று பல விதமாய் பயான் செய்யப்பட்டிருக்கிறது.

அஜீபா.

கஸ்வீனி இமாம் றிவாயத்துச் செய்தார்கள் உந்துலீஸ்காட்டில் மலைமேலொரு கோவிலுண்டு. அதன்மேல் பெரிதாயொரு குப்பா யிருக்கிறது. அதிலொரு காகமிருக்கிறது. அக்கோவிலின் எதிரி லொரு பள்ளியிருக்கிறது. அது துஆ கபூலாக்கப்பட்டது. அதில் வருகிற மூஸ்லிமான பேர்களுக்கு விருந்து கொடுக்கிறதை கிஸ்லீஸான்கள் சர்த்திட்டிருந்தார்கள். அதிலொருவர் வந்தால் அக்காகம் தலையை நீட்டியொரு சப்தமிடும் இருவர்வந்தா லிரண்டு சப்தமிடும். இப்படி எத்தனைபேர்கள் வருவார்களோ அத்தனை சப்தம்போடுகிறது அந்த இனத்தின்படிக்கு அவர்கள் விருந்து கொண்டுவந்து கொடுக்கிறது. இப்படியே நடந்துவந்தது. அதற்குத் தீன் இன்னவிடத்திலென்று யாருமறியார்.

அபுல் பறஜில் மஆபி சொன்னார்கள் காலீ அபுல் ஹசன் இடத்தில் நாங்கள் போயிருக்கிற வழக்கம்போலே ஒருநாள்போய் வாசலிலிருந்தோம். ஒரு அஃறூபியும் ஒரு ஹாஜத்தைக் குறித்து வந்திருந்தார். அப்போது ஒரு காகமாகிறது அவ்வீட்டிலுள்ள பேரீத்தம்பழத்தின் மரத்தில்வந்து விழுந்து ஒருசப்தம் போட்டது. அப்பால் பறந்து போய்விட்டது. அப்போதந்த அஃறூபி சொல்வார், இந்த வீட்டுக்குடையவன் எழுநாளைக்குப் பின்னால் மௌத்தாவான் என்று சொல்லுகிறதென்றார். அவரை நாங்கள் விரட்டினோம், அவர் எழும்பி போய்விட்டார். அப்பால் காலியார் கூட்டுபிடுகிறாரென்று உத்திரவு வந்தது, நாங்கள்போய்ப் பார்க்கவும் அவருடைய நிறம் பேதலித்தவருய்க்கண்டு செய்தி என்னவென்று கேட்டோம். அதற்கு சொல்லுவார், இன்றிரவில் உறக்கத்தில்

ஒருவரைக்கண்டேன். அவர் சொன்னார். அதினால் என்னெஞ்சு விட்டுமையா யிருக்கிறதென்று சொன்னார். நாங்கள் துஆசெய்து கொண்டு வந்து விட்டோம். அன்றுமுதல் ஏழாவது நாளில் மௌத்தாய் விட்டார்கள்.

உமையதிப்னு அபிஸ்ஸல்த்து என்பவன் குடிப்பு குடித்துக் கொண்டிருக்கும்போது ஒரு காகம்வந்து ஒரு சப்தம் போட்டது. அதைப்பார்த்து உன்வாயில் மண்விழட்டும் என்று உமையா சொன்னான். மறுதாமும் ஒரு சப்தம் போட்டது. அதற்கும் உன்வாயில் மண்விழட்டு மென்றான். பின்பு அங்கு சுற்றி யிருந்தவர்களைப் பார்த்து இந்த காகம் என்ன சொல்லுகிறதென்று நீங்களறிவீர்களா? அதுசொல்லுகிறது, நீ இந்த குடிப்பைக் குடித்து மௌத்தாவாய் அதற்கடையாளம் நான் இன்ன இடத்திற்குப் போய் ஒரு எலும்பைத்தின்று மௌத்தாவேனென்று சொல்லுகிறதென்றான். அப்பவே அக்காகம்போய் ஒருஎலும்பைத்தின்று இறந்துவிட்டது. உமையா அக்குடிப்பை குடித்தான். அங்கேயே இறந்தான். (ஹாக்மின்படி காகத்தை தின்னுகிறது ஹறாம், நீர்காகம் ஹலால்.)

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், காகம், பருந்து, எலி, பாம்பு, கடிநாய் இவ்வைந்தையும் கொன்றவன் பேரில் குற்றமில்லை யென்றார்கள்.

சையிதினா உமர் றலியல்லாஹு அன்ஹு ஒருபோதில் சிலரோடிருக்கும்போது, ஒருமனிதன் தன் மகனுடன் வரக்கண்டு கேட்டார்கள், இந்தபிள்ளை உன்னைக்கொண்டு ஒப்பாயிருக்கிறதைக் காணவும் ஒரு காகத்தைக்கொண்டு மிகவும் ஒப்பாகிய ஒருகாகத்தை நான் காணவில்லை என்றார்கள். அப்போதவர் சொல்வார், யா அமீருல் மூமினீனே அந்தப் பிள்ளையை அதின் தாய் பெறவில்லை, அவள் மையத்தாயிருக்கிற ஹாலிலே ஒழியவென்றார். அப்போது சையிதினா உமர் றலியல்லாஹு அன்ஹு எழும்பி செவ்வையா யிருந்துக் கொண்டு அது செய்தியை சொல்லுமென்றார்கள். அப்போதவர் சொல்லுவார், நான் சபரில் புறப்பட்டேன். அவள் கெர்ப்பமா யிருந்தாள். அவள் சொன்னாள், நான் சுமை சுமந்தவளாக என்னை விட்டு போகிறீர்களே என்றாள். அதற்கு நான் சொன்னேன், உன்னுடைய வயத்திலிருப்பதை அல்லாஹுத் தஆலா இடத்தில்

அமானிதம் வைத்துவிட்டேனென்று சொல்லி சபர் புறப்பட்டு போய்விட்டேன். சிலவருஷங்களாக சபர் செய்துவிட்டு மீண்டு வந்து பார்க்கவும், என்வீட்டின் வாயல் அடைக்கப்பட்டிருந்தது. அவளெங்கே யென்று விசாரித்ததில் இறந்துபோனு ளென்றூர்கள். ஆதலால் கைசேதமாக அல்லாபேரில் சகூர் செய்து கொண்டு அவளுடைய கபறளவில் போய் அழுதுவிட்டு என்னுடைய இனத்தார்களிடத்தில் வந்திருந்தேன். அப்படி யிருக்கும்போதில் கபருகளுக்கிடையில் நின்றும் ஒரு நெருப்பு எனக்குத் தெரிந்தது. அதென்ன நெருப்பென்று என்னுடைய இனத்தார்களிடத்தில் கேட்டதற்கு இன்னுளுடைய கபரில் எல்லாயிரவிலும் இப்படி நெருப்பைக் காணுகிறே மென்றூர்கள். நான் சொல்வேன் அவளாகிறது நோன்பு பிடிக்கிறவளாகவும். இரவில் முழித்து வணங்குகிறவளாகவும், பத்தினியாகவு மிருந்தாளே, ஆனதால் போய்ப் பார்ப்போம் வாருங்களென்று நடந்து போனேம். எல்லாரையும் தூரத்தில் நிறுத்திவிட்டு நான்கபறிடத்தில் போய்ப் பார்த்தேன். கபுருகிறது பிளந்திருக்கிறது. அவள் எழும்பி யிருக்கிறுள், இப்பிள்ளை அவளுக்கும் சூளாலே சுற்றித்திரிந்துக் கொண்டிருக்கிறது. அப்போது அறியாபுறத்தில் நின்றெரு சப்த முண்டாயிற்று. ஓய் தன்னுடைய றப்பிடத்தில் அமானிதப் பொருளை ஈடுவைத்தவரே, உம்முடைய அமானத்தை யெடுத்துக் கொள்ளுமென்று சப்தம் கேட்டது. இனனும் இப்படிப்போல் அதின் தாயையுங்கூட ஈடுவைத்தால் அவளையும் நீர் பெற்றுக் கொள்வீர் என்ற சப்தமுண்டாயிற்று.

பிரயோஜனங்களாவது

காகத்தின் சுண்டை யாதொரு இன்சாவின் பேரில் கட்டினல் கண்திஷ்டியை விட்டும் பேணிக்கொள்ளும். அதின் தாமரைக்காலை கட்டினல் இஷ்கை எழுப்பிவைக்கும், அதின் இரத்தத்தை சாராயத் துடன் ஒரு இன்சானுக்குக் குடிப்பிவித்தால் அதை மூனிவான், அதின்பின் அதைக் குடிக்கிறதளவில் மீளமாட்டான. அதின் இரத் தத்தை உலர்த்தி மூலத்தில் விறப்பிவைத்தால் அதை நீக்கும், அதின்கல்பையும், தலையையு முந்திரிகை சாராயத்தில் போட்டு வைத்துக் குடிப்பிவித்தால் குடித்தவன் குடிப்பிவித்தவனை மிகவும் உவப்புவைப்பான். காகமாகிறது நாலுவகையுண்டும். இரண்டுகருப்

பானது, 2-வெண்மையானது, திரேகம் மிருதுவான வெள்ளையாகிய தாரமுடையது மயில்நிறக் கருப்பானது, இதுகளில் தாரமுடையதை சுட்டுத்தின்றால் குன்ம வியாதியை போக்குவிக்கும். அதின் பித்தை சூனியஞ் செய்யப்பட்டவனுடைய திரேகத்தில் தளமிட்டால் வஸிஹ்ற முறியும். கருங்காகத்தை தூவலுடன் சிர்க்காவிலே முக்கிவைத்து அப்பாலதை உலர்த்தி அதின் தூவல்களை தலுக்கி உரோமங்களில் தடவினால் அதை கருப்பாக்கிவைக்கும். ஜஹாலீனென்று பேர்வைக்கப்பட்ட போர்காகத்தின் எச்சத்தை கண்டமாலையில் வைத்தால் அதை நீக்கும். அதை பிடவை துண்டில் வைத்து புலூகெத்தாத குழந்தைக்குக்கட்டினால் தாயிமாகிய இருமலுக்கு பிரயோஜனங் கொடுக்கும், அதை தரித்துவிடும். காகத்தின் பித்தும் சாவலின் பித்தும் சரியிடை யெடுத்து அவ்விரண்டுக்கும் சரியிடை புகைபடாத தேனுஞ் சேர்த்து கண்ணில் அஞ்சனமிட்டால் கண்ணிருளையும், கண்புகைச்சலையும் போக்கும். காகத்துக்கும் ஆந்தைக்கு மிடையில் பகைத்தனமுண்டும். காகம், ஆந்தையின் முட்டையை இரவிலெடுத்து தின்னும். கருங்காகத்தை பிடித்து கரித்து பொடித்து ஸைத்தூன் எண்ணெயில் குழைத்து நீக்கப்பட்ட முடியிலும் இன்னும் முடியில்லாதலத்தில் தேய்த்தால் முடி முளைக்கும். இனி கருங்காகத்தை அறுத்து ஒரு பாத்திரத்திலிட்டு அதின் வாய்க்கு சீலமன் செய்து குப்பைக்குழியில் நாற்பத்தொரு நாள் புதைத்திருந்து அப்பாலெடுத்தால் அதிலே வெள்ளையும் கருப்புமான புழுக்களுண்டாயிருக்கும். அதுகளை சாகுமளவும் ஒரு தட்டத்தில் போட்டு வைத்தபின்பு ஒவ்வொரு நிறத்தில் நின்றும் மும்மூன்று புழுவெடுத்து பச்சையாக ஷீரஜா யென்ற யெண்ணெயிலரைத்து வெண்குஷ்டக்காரனுக்கு நாசியில் நவியமிட்டு திரேகத்திலும் தேய்த்தால் சுவாத்தியமாகும். அல்லாஹுத் தஆலா உத்திரவுகொண்டு, ஷை அந்த எண்ணெய்கருத்த முடியில்பட்டால் அது ஒரு காலமும் வெளுக்காது. அந்த வெள்ளை புழுக்களில் ஒன்றையாவது ஷை எண்ணெயில் அரைத்து யாதொருவன் குடித்தால் உரோமமெல்லாம் உதிர்ந்துபோம், ஒருகாலமும் முடி முளையாது. அதின் பித்தை பாதம் எண்ணெயில் மத்தித்து குடித்தால் நசலத்து என்னும் ஜலதோஷம் நீங்கும். அல்லாஹுத் தஆலா உத்திரவுகொண்டு என்றது.

ஆந்தையின் பயான்.

ஆந்தையாகிறது பலவகையுண்டும். அதயனைத்தும் தனித்திருக்கிறதை விருப்பங் கொண்டிருக்கும். அதின் பெண் தன்னை அழகாய்க்கண்டு கண்திஷ்டி பிடிங்குமென்று இரவிலே ஒழிய வெளியில் வராது!

ஹிக்காயத்து.

இராஜா மஸ்ஊனுகிறவர், ஒருநாள் மாளிகையி லுதயமாய் பார்க்கவும், ஒருமனிதன் கரிதுண்டாலே அம்மாளிகையின் சுவரி லெழுதிக்கொண்டு நிற்கக்கண்டு, காதிமைவிட்டு கூட்டிவரச்சொன்னார்கள். அவன்போய் பார்க்கவும் அதிலொரு பைத்து யெழுதியிருந்தது. அதன் பொருள் மாளிகை ஒன்றிலே மூதேவித்தனமும்பழிப்பும் சேகரமாக்கப்படும், உன்னுடைய தூண்களிலே எப்பொழுதும் ஆந்தை கூடுவேற்றும். அப்படி கூடுவேற்றுகிற நாள் எனக்குச் சந்தோஷமாய்விடும் என்று யெழுதியிருக்கக்கண்டு கூட்டிக் கொண்டுபோய் இராஜா யிடத்தில்விட்டு அங்கே எழுதி யிருந்தபைத்தையும் சொன்னான். அவர் கேட்டதற்கு அம்மனிதன் சொன்னான். இந்த மாளிகையும் கஜானு முதலும் அநேக மிருக்கிறது. எனக்கு மிகவும் பசியும் மிடுமையுமுண்டாயிருந்தது, நாம் பசியாயிருக்க இம்மாளிகை வளர்ந்தேறி யிருப்பதாலென்னபாயிதா. இது கருபாயிருந்தால் ஒரு கம்பு யிரும்பாணியேதையும் விற்றுப் பசியாறிக் கொள்ளலாமே யென்றெண்ணினேன். ஆனால் புலவர் சொல்லியிருக்கிறது இராஜா அறிவீர்களாவென்று சொன்னான். அவர் அதென்னவென்று கேட்டதற்கு சொன்னான், ஒரு மனிதனுடைய தவுலத்திலே மற்றொரு மனிதனுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லாதிருக்கில் அந்த தவுலத்து மங்கி போகிறதை அவன் ஆதரவுவைப்பான். அதை ஒவ்வாதே முனிந்ததற்காக இல்லை யென்கிலும் அது அல்லாததை ஆதரவு வைப்பான். அது நீங்கிப்போக ஆசைவைப்பான் என்று சொன்னாரென்றார். இதைக் கேட்டபோது அவனுக்கு 100-தங்கக்காசு கொடுத்தார். இம்மாளிகை பரிபாலனமாயிருக்கும் சாலமெல்லாம் வருடத்துக் கொருதடவை யிப்படியே 100-100 தங்கக்காசு தருகிறேனென்று சொன்னார். (ஹுக்மின்படி அதின் வகையடங்களும் தின்னுகிறது ஹறாமும்.)

பிரயோஜனங்களாவது.

ஆந்தையை அறுத்தால் ஒரு கண் மூடியும் மற்றொரு கண் திறந்து மிருக்கும். அந்த திறந்தகண்ணை மோதிரவட்டின்றனாலே வைத்தணிந்தவன் அதிருக்குமளவும் உறங்கான், மற்றொன்றுக்கு இதின் மாற்றமுண்டும். அதை யறியவேண்டுமானால் அதைத் தண்ணீரில் போட்டால் விழித்தகண் மிதக்கும் மூடியகண் தாழும், அதின் கல்லை உறங்குகிறவளின் இடது கையில் வைத்தால் அன்றையில் செய்ததெல்லாம் மொழிவாள். அதின் பித்தை கண்ணில் தீட்டினல் கண்ணிருளை நீக்கும், பெரியபெண் ஆந்தையின் கல்லை கனைந்து ஓநாயின் தோலில் பொதிந்துக் கெண்டைக்கையில் கட்டிக் கொண்டவன், கள்ளர்களைவிட்டும் விஷஜெந்துக்களைவிட்டும் அச்சந்தீர்வான், மனிதனிலொருவருக்கும் பயப்படான். அதன் கொழுப்பை யுருக்கி கண்ணில் தீட்டினல் இரவில் வெத்தலத்தில் புகுந்தாலோ அத்தலம்பிரகாசிக்கும். அது 2-முட்டையிடும், ஒன்று பொறிக்கும், மற்றொன்று பொறியாது. இதனைவைத்தா லறியலாம்.

கழுகின் பயான்.

கழுகானது பறவைகளுக்கு நாயகமாயிருக்கும், நெடுங்காலம் ஜீவித்திருக்கும். ஒருசொல்படி 1000 வருடத்திற்கு ஜீவித்திருக்குமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ராஜாளியும், கழுகும், சாவலைப் போலே புணரும். இதில் ஆண்பெண்ணைப்பார்க்கிறது கொண்டு முட்டையிடும். பார்வை கூர்மையானது, 400-காத தூலையில் நின்றும் விடக்கைக்காணும் வாடையையும் அதுபோலவே எற்கும் எங்கிலும், மணத்தையேத்தால் இறந்துவிடும். ஒரு நாளைக்குள் மஷ்ரிகில் நின்றும் மக்ரிபளவும் பறக்கும்.

ஹதீது.

அலி றழியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானூர்கள், என்னிடம் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் சொன்னூர்கள், முஹம்மதே! வஸ்துக்களுக்கும் சையிதுண்டு. மனிதர்களுக்கு சையிதாகிறது ஆதம் அலைஹிஸ்ஸலாம், ஆதமுடைய

மக்களுக்கு சையிது நீங்கள், ரூமுக்கு சையிது ஸுஹைபு, பாரிஸுக்கு சையிது ஸல்மான், ஹபஷிக்கு சையிது பிலால், மரங்களுக்கு சையிது இலந்தை, பறவைகளுக்கு சையிது கழுகு, மாதங்களுக்கு சையிது றமலான், நாள்களுக்கு சையிது ஜும்ஆ, பாஷைகளுக்கு சையிது அறப், அறப்பாஷைக்கு சையிது குர்ஆன், குர்ஆனுக்கு சையிதாகிறது சூறத்துல்பகறு வென்றார்கள். ஹுக்மின்படி கழுகைத் தின்னுகிறது ஹறாம்.

பிரயோஜனங்களாவது.

கழுகின் கல்பை ஓநாயின் தோலில் பொதிந்து ஒரு இன்சானின் பேரில் கட்டினால் அவனை யாவரும் உவக்கப்பட்டவனாகவும் ராஜன் ராஜனல்லாத வனிடத்திலும் ஹாஜத்தை கற்பிக்கப் பட்டவனாகவு மாயிருப்பான். யாதொரு துஷ்டமிருகமும், அவனைத் தங்கடஞ்செய்யாது. யாதொரு பெண்பிள்ளைக்கு கர்ப்ப வருத்த மானால் அதன் தூவலை அவளுக்கு தானாலே வைத்தால் ஜல்தியில் குழந்தை பிறக்கும். அதன் எலும்பில் நின்ற பெரிய தாகிய எலும்பை இராஜாக்களுக்கு பணிவிடை செய்கிறவன் கட்டிக் கொண்டால் அவனை யாதொரு கோபமன்றியே உவப்பார்கள். அதன் கெண்டைக்காலின் பின்னடியைகுலைநோய் விக்கலுக்கு இடதுக்கு இடதும், வலதுக்கு வலதும் கட்டினால் அதை நீக்கும். அதன் தூவலை யாதொரு வீட்டில் புகைத்தால் அதிலுள்ள புழு பூச்சி களெல்லா மோடிப்போகும், யாதொன்றும் மிராது. அதனீரலைசுட்டுக் கரித்துக்குடித்தால்தாதுக்கு வலுப்பமான பிரயோஜனங்கொடுக்கும். அதன் முட்டையை நன்றாய்க்கலக்கி 3-நாளைக்கு கோஷத்தில் பூசினால் புதுமை யாகப்பட்ட குவ்வதுண்டாம். அதன் பித்தை குளிர்ந்த ஜலத்துடன் கண்ணில் சுருமாவைப்போல் தீட்டி அதின் சூழாலே தேய்த்து இப்படி 7-நாள் செய்து வந்தால் கண்ணில் நீர் வடிதலை நீக்கும். அதன்மேல் மொரசை கழுத்தில் கட்டியவனை யாதொரு விஷஜெந்துக்களும் அண்டாது. அதன் வலது இறகை தசைதுவலுடனே வெடுத்து மாய்ந்து புள்ளுமவரை கடாரத்தி விட்டு சமைத்தபின் உயர்ந்த தலத்தில் கொண்டுபோய் ஓராளு யர்த்தி பூமியிலடித்து விட்டு அதன் புகை உன்பேரில் சாராதே யோடிவிடு, அப்பால் மீண்டு வந்து அதிலிரண்டு பெரிய வெறும்

புண்டு. அதையெடுத்து தண்ணீரி லெறிந்தா லொன்று தாழும். அதை நீ எடுத்துக்கொண்டு காடியவர்களில் புஜத்தில் தடவினால் அவர்களுன்னை தொடர்வார்கள்.

மயிலின் பயான்.

மயிலாகிறது புதுமையான அழகிய சிறகுகளுடையது, தன்னில் பெருமையும் தற்குணத்தில் பத்தினிதனமுமுடையது. மூன்று வயதில் முட்டையிடும். ஒரு தடவையில் 12-முட்டையிடும். றபீஉ காலத்தில் புணரும், கரீபு காலத்தில் முடிகழியும், மரங்களைப் போல மரங்களிலே தழைத்தால் அதற்கு முடிமுளைக்கும்.

ஹிக்காயத்து.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் முந்திரிகை செடியை நட்டின போது இப்லீஸ் வந்து ஒரு மயிலை யறுத்து இரத்தத்தை மூட்டில் விட்டான். அது குடித்தபின்பு தழுத்தபோது குரங்கை யறுத்து இரத்தத்தை விட்டான். அதையும் குடித்தது. பின்பு காய்த்தபோது புலியை அறுத்து இரத்தத்தை விட்டான்; அதையும் குடித்தது. பின்பு கனிந்த போது பன்றியை யறுத்து இரத்தத்தை விட்டான் அதையும் குடித்தது. ஆனதாலிதற்காகத்தான் அதன் கள்ளைக் குடித்தவனுக்கு இந்த 4-ஜெந்து களுடைய குணமும் மேலிடும். அதாவது அதைக் குடித்த துவக்கத்தில் மயிலைப்போல் தன் சுபுளை அழகாய்க்கண்டு பெருமையடிக்கிறதும் லாகிரி தொடுத்த போது குரங்கைப்போல் குதித்து விளையாடுகிறதும் லாகிரி பிலமானால் புலியைப்போலே குணங்கொள்ளுகிறதும் வின்சியல் செய்கிறதும், லாகிரி தீர்ந்தால் பன்றியைப்போலே சுருங்கிப்போய்க் கிடந்து உறங்குகிறதும், ஆக இந்நான்குமாம். (ஹாக்கின்படி மயிலைத்தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

மயிலாகிறது நஞ்சுட்டப்பட்ட ஓஜீபனத்தைக் கண்டால் அல்லது அதன் வாடையை யெத்தினாலும் இறகை விரித்துச் சந்தோஷங்கொண்டாடும். அதன் பித்தைசிர்க்காவுடன் குடித்தால் புழுப்பூச்சி முதலிய விஷத்தன்மை நீக்கும். ஹகீமாக்கள் சொல்லு

கிறார்கள், அதைக் குடித்தால் பைத்திய முண்டாமென்று. அதன் எச்சத்தைக் கரும்பாறையில் தேய்த்தாலதை கனைந்துவிடும். அதனெலும்பை கரித்துப் பொடித்து மூக்கருப்பில் தேய்த்தாலதை நீக்கும். இன்ஷா அல்லா.

பாயிதா பக்ஷிகளின் திக்றுகள்.

கஅபுல் அஹ்பார் றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறது, ஹுத்ஹுதென்கிற பறவை சொல்லும் கலாயிரங்கிவிட்டுதானுல் பார்வைகுருடாய் விடுமென்று, கஸ்புடைய திவாயத்தில் கிருபை செய்யமாட்டானே அந்த ஒருவனுக்குக் கிருபை செய்யப்படாதென்று சொல்லுமென்று வருகிறது. இனி மணிப்புறா சொல்லும், இந்த கல்குகளை படைக்கப்படாமலாயிருக்க வேண்டியதே, அப்படி அவர்களை படைக்கப்பட்ட நோத்திலே யாதுக்காக அவர்களைப் படைக்கப்பட்டதென றவர்கள் அறிந்திருக்க வேண்டியதே, எதற்காக அவர்களை படைக்கப்பட்டதென்று அவர்கள் அறிந்த நேரத்திலே அவர்கள் அறிந்ததைக்கொண்டு அமல் செய்தவர்களா யிருக்க வேண்டியதே யென்று சொல்லிற்று. இனி ஸாறதென்னும் பக்ஷி சொல்லும் 'ஸுப்ஹான றப்பியில் அஃலா மில்அஸமா இஹிவ அற்லிஹி' என்று சொல்லும். இனி நண்டுசொல்லும், 'யிஸ்தக்பிரு யாமுத்தனிபீன்' என்று சொல்லும், இனி திதவி என்கிற பறவை சொல்லும் 'குல்லுஹைய்யின் மய்யிதன் வகுல்லு ஜதீதின்பாலின்' எஃனீ, உயிரான வஸ்தடங்களும் மையித்தாயிருக்கும். புதிதான வஸ்தடங்களும், உக்கி யிறந்து போகிறதா யிருக்கு மென்று சொல்லிற்று. இனி பழந்தின்னும் வௌவால் சொல்லும் கைரை முற்படுத்தி வையுங்கள், அதை அல்லாஹுத தஆலாயிடத்தில் கண்டுக்கொள்வீர் களென்று. இனி வருஷான் பக்ஷி சொல்லும், மௌத்துக்காக மக்களைப் பெறுங்கள், பாழுண்டுபோக கட்டிடங்களை கட்டுங்களென்று. இனி மயில் சொல்லும், நீ வழிப்பட்டது போல வழிப்படப் படுவாயென்று. இனி புறா சொல்லும் நாவடக்கலைக்கொண்டும் திக்று செய்யப்பட்ட எனது நாயன் துய்தானவனென்று. இனி செம்பருந்து சப்தமிட்டால் சொல்லும் மனிதர்களை விட்டும் தூரமாயிருக்குதல் ராஹத்தாயிருக்கும். இனி ஒரு சொல்லின்படி பெரிய வௌவால் சப்தமிட்டால் ஸூரத்து பாத்திஹாவை ஓதும்,

‘வலல்லாலீன்’ என்கிறதைத காரி ஓதுகிறது போல் நீட்டிச்சொல்லும். பாலியென்ற இராஜ பக்ஷி சொல்லும் ‘சுப்ஹானறப்பீ வபீ ஹம்திஹீ’ யென்று. இனி கும்றீ யென்கின்ற பக்ஷி சொல்லும் ‘சுபுஹான றப்பியல் அஃலா’ வென்று, இன்னமொரு சொல்லில் பாகரீமென்று சொல்லுமென்று வருகிறது. இனி காகமாகிறது ஆயம் வாங்குகிறவனை லஃனத்துச் செய்யும். இனி கருடன் சொல்லும், ‘குல்லு ஷைஇன் ஹாலிகுன் இல்லல்லாஹு’ என்று. இனி காடைச் சொல்லும், ‘மன்ஸகத்தஸலிம’ வாய் மூடினவன் சலாமத்து பெற்றேனென்று. இனிகிளிசொல்லும் ‘வைலுன் லிமன் கானத்துன்யா அக்பறஹம்மிஹீ’ என்று. இனி ஸெறாரு சொல்லும் ‘அல்லாஹும்ம இன்னீ அஃ அலுக்க றிஸ்க பௌமின் பியவுமின் பாறஸ்லாகி’ யென்று. இனி கன்பாத்தியென்னும் புரு சொல்லும் ‘அல்லாஹும்மல் அன்முப்கிலீ முஹம்மதின் வ ஆலி முஹம்மதின்’ யென்று. இனி சாவல் சொல்லும் ‘உதுருல்லாஹ யாகாபிலீன்’ யென்று. இனி கழுகு சொல்லும் ‘யப்பன ஆதம்திஷ் மாஷில்தப இன்னக மையித்தன்’யென்று. குதிரையாகிறது இருவகை படையும் சந்தித்தால் சொல்லும் ‘ஸுப்பூஹான் குத்துசுன் றப்புல் மலாயிகத்திவர்றூஹ்’ யென்று. இனி கழுதையாகிறது ஆயம் வாங்குறவனையும் அந்த தொழிலையும் லஃனத்து செய்யுமென்று. இனி தவளையாகிறது ‘ஸுப்ஹான றப்பியல் அஃலா’ வென்று சொல்லும். வல்ஹம்து லில்லா.

கோழியின் பயான்.

கோழியாகிறது எந்த துஷ்டமிருகத்தை கண்டாலும் பயப்படாது. குள்ளநரி ஒன்றுக்குப் பயப்படும். இது மேலே நிற்கையில் அது கீழே நடந்தால் பயந்து கீழே அடித்துக்கொண்டு விழுந்துவிடும். இருபது நாள் சூலாயிருக்கும். ஒரு நாளில் இரண்டு தடவை முட்டையிடுவதுண்டு. அதன் வெள்ளைக்கருவில் நின்றும் குஞ்சை படைக்கப்படும், மஞ்சள்கரு அதற்கு உணவாயிருக்கும், மனியில் நின்றும் பிள்ளையை படைத்து ஹைறு இரத்தம் அதற்கு உணவாக் கப்பட்டது போல்.

ஹதீது

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஏவினார்கள், வாழ்வுக் காரரை ஆடு வளர்க்கும். மிடுமையானரை கோழி வளர்க்கும் படிக்கும்.

ஹிக்காயத்து.

இப்னு அஸாகிர் றஹிமஹுல்லா தாரீக்கென்னும் கிதாபில் பேசிவருகிறார்கள், சுலைமானிப்னு அப்தில் மலிகி றஹிமஹுல்லாஹுத் தஆலா அவர்களாகிறது மிகவும் தீன் தின்கிறவர்களாக இருந்தார்கள். ஒரு நாள் காலமே பசியாறினார்கள். சுடப்பட்ட நாற்பது கோழியும், நாற்பது முட்டையும், எண்பது மாங்காயும் அதின் கொழுப்புடனே இன்னும் 80-ரொட்டியும் தின்றுபோட்டு மறுபடியும் மனிதர்களுடனே கூடியும் புசித்தார்கள். இன்னும் ஒருபோதில் தங்களுடைய தோட்டத்துக்குப் போனார்கள். அத் தோட்டக்காரனைக் கனிவர்க்கங்களில் பணமான கனிகளைப்பறித்து குவித்துவைக்க செய்திருந்தார்கள். தாங்களும் தோழர்களுமாய்ப் போய் எல்லாரும் தின்று தீர்ந்தபின் தாங்கள் தனியேயிருந்து மிகவும் கொடியமான தீனாக தின்றார்கள். பின்பு சுடப்பட்ட ஒரு ஆடு தின்றார்கள். பின்பு கனிவர்க்கங்கள் கணக்கற தின்றார்கள். பின்பு ஒரு மனிதன் உள்ளிலிருக்க தகுமான ஒரு ஜாடி நிரம்பச் செய்யும் சவிசென்ற சஞ்சியும் சர்க்கரையும் நிறைப்பிவைத்து இருந்தது. அதடங்கலும் தின்றார்கள். பின்பு கோபதனைடைய வீட்டில்போனார்கள். யாதொன்றும் குறைவின்றியே திரும்பி விருந்து தின்றார்கள். இன்னும் ஒரு தடவை ஹஜ்ஜுசெய்து விட்டு தாயிபுக்குவந்தார்கள். எழுநூறு மாதுளம்பழமும் ஆட்டுக் குட்டியும் ஆறுகோழியும் தின்றார்கள். பின்பு மூர்திரிக்கை பழம் மரக்காலளவு கணக்கில் தின்றார்கள். இன்னும் சொல்லப்பட்டிருக்கிறது, அவர்களுடைய மரண மவுத்துக்கு சபபாவது ஒரு தடவை நானூறு முட்டையும் எண்ணூறு அத்திப்பழமும் கொழுப்புடனே நானூறு மாங்காயும் இருபது கோழியும் தின்றார்கள். அதினால் அவர்கள் மவுத்தானது செமியாகுணத்தை கொண்டிருந்தது. அல்லாவுடைய றஹ்மத்து அவர்கள் பேரில் உண்டாவதாகவும், (றஹ்மதுல்லாஹி அலைஹி.)

ஹிக்காயத்து.

செய்யிதி நஷ்ஷைகு அப்துல்காதிறுல் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு இடத்தில் ஒரு பெண்பிள்ளை தன் மகனைக் கொண்டு வந்துவிட்டு சொல்வாள், நாயகமே என்னுடைய இந்த மகனுடைய கல்பு உங்களைக்கொண்டே கொழுக்கிக்கொண்டிருக்கிறது. தாங்கள் அவனை ஒப்புக்கொள்ளுங்க ளென்றாள். அவர்கள் கபூல் செய்துக்கொண்டார்கள் அப்பிள்ளை தங்களுடன் தரீக்கின்படிக்கு நடத்தி முஜாஹதா தெண்டிக்கிறது கொண்டு ஏவி அப்படி நடந்து வரவும், ஒரு நாள் அந்தப் பெண்பிள்ளை தன் மகனிடத்தில் போனாள். போய் பார்க்கவும் பசியினாலும் முழிப்பினாலும் நிறம்பஞ்சனித்து மிகவும் மெலிந்தவராய் தொலி கோதம்பின் ரொட்டித்துண்டு தின்கிறார். பின்பு ஷைகுனா றலியல்லாஹு அன்ஹு யிடத்தில் போனாள். அவர்களின் முன்பாக ஒரு பாண்டத்தில் அவர்கள் தின்ற கோழிகறியினுடைய எலும்புகள் போட்டு வைத்திருக்கக்கண்டு சொல்வாள், நாயகமே நீங்கள் கோழிகறி தின்கிறீர்கள், என் மகன் தொலி கோதம்பின் ரொட்டித் துண்டைத் தின்கிறான் என்றாள். அப்போதவர்கள் அந்த எலும்புகளின் பேரில் தங்களுடைய கையைவைத்து உக்கிய எலும்புக்குயிர் கொடுத்தெழுப்புகின்ற நாயன் அல்லாஹுத் தஆலாவுடைய உத்தரங்கொண்டு எழும்பென்றார்கள். உடனே அவயவங்கள் சரியான கோழியாகஎழும்பி சப்தமிட்டுக்கொண்டு நின்றது. அப்போது நாயகம்சொன்னார்கள், உன் மகனும் இப்படிபோல் ஆனால் அவனுடினதெல்லாம் தின்றுக் கொள்ளட்டு மென்றார்கள். றலியல்லாஹு அன்ஹுவறலு அன்னு.

ஹிக்காயத்து.

இப்னு கல்லிகான் பேசிவருகிறார், மூத்தியபேர்களில் நின்றும் ஒரு மனிதன் தன்முன் சுடப்பட்ட கோழியை வைத்து தன் பெண்சாதியுடன் தின்று கொண்டிருந்தார். அப்போது ஒரு மிஸ்கீன் வந்து ஸுவால் செய்தார். கொடாமல் துரத்திவிட்டான். அவன் பாக்கியவனா யிருந்தான். அப்பால் அவனுக்கும் அவன் பெண்சாதிக்கு மிடையில் சல்லியமுண்டாய் அவன் தலாகாய் விட்டான். அவனுடைய முதல்கள் எல்லாம் போய்விட்டது.

அப்பால் அவள் இன்னுமொரு புருஷனுக்கு கலியாணஞ்செய்து ஒரு பொழுது அவன் சுடப்பட்ட கோழி தின்றுக்கொண்டிருக்கும் போது ஒரு மிஸ்கீன் வந்து சுவால்செய்யவும், அவனைப்பார்த்து இக்கறியை அவனுக்கு கொடு என்றான். அவள் எடுத்துக் கொடுத்தாள். அவனை பார்க்கவும் தன்னுடைய மூந்திய புருஷனாயிருக்கக் கண்டு இந்த இரண்டாம் புருஷனுக்கு அறிவித்தாள். அப்போதவன் சொல்வான், அல்லாவினுணை அந்த மூந்தியமிஸ்கீன் நானாயிருக்கும். அல்லாஹுத் தஆலா எனக்கு நிஃமத்தை தந்தான். அவன் அவனை சுக்கூறு செய்யாததால் அவனை முடைமைக்கு பாத்திரமாக்கிவைத்தான் என்றான். (ஹுக்மின்படி அதைத் தின்னுகிறது ஹலால்.)

பிரயோஜனங்களாவது.

கோழிக் கறியாகிறது சமமான சூடுடையதாயிருக்கும். வாலிபக்கோழிக் கறியாகிறது அகலையும் மணியையும் அதிகப் படுத்தும். சததத்தை தெளிவாக்கும். கோழியின் மூளையை தேள் கடிவாயில் வைத்தால் விஷத்தைப் போக்கும். கஸ்வனீ இமாம் சொல்லுகிறார்கள், கோழியை பச்சை சருள்ளியும் ஒருபிடி எள்ளும்போட்டு அது நல்லவெர்ந்து அக்கறியையும் தின்று அப்பாணத்தைக் குடித்தால் ஷஹ்வத்தையும், சுவ்வத்தையும், அதிகப்படுத்தும். அவரல்லாதவர் சொல்லுகிறார், கோழிக் கறியை சர்வகாலமும் தின்று வந்தால் மூலத்தையும் சூல நோயையும் வருத்திவிக்கும் என்று சொல்லுகிறார். இது திப்புடைய இல்மை அறியாதவருடைய சொல்லாயிருக்கும். அதின் இரைப் பெட்டியில் ஒரு கல்லுண்டும். அதை முஷல் வலிக்கு கட்டினால் குணமாம். இன்னும் குவ்வத்தை எழுப்பும், நீங்குடைய கண்ணை தட்டிவைக்கும். இன்னும் அதை குழந்தைகளின் தலைக்கு தானாலே வைத்தால் உறக்கத்தில் திடுக்கிடாது. கருங் கோழி எச்சத்தை வாசலில் சேர்த்து வைத்தால் வழக்குண்டாம். கருத்த கோழியின் பித்தை கலத்தில் பூசி புணர்ந்தால் நாடிய மட்டும் கூடுதல்கிட்டும். இவனைப்போலவனையும் காணான். இன்னுமதை புதிய கூசிலிட்டு மண்ணோடோ எப்போதும் போராடிக்கொண்டே யிருப்பவனுடைய விருப்பின் தானாலே புதைத்து வைத்தால் அப்பவே இணங்கிக்கொள்வான். கருப்பு

கடிசான கரும்கோழியின் இரண்டு கண்ணும் கரும்பூனையின் இரண்டு கண்ணும் உலர்த்தி நுணுக்கி கண்ணில் தீட்டிக் கொண்டால் ரூஹானிகளைக் காண்பான். இவன் கேட்டதற்கு ஜவாபு சொல்லும். (வல்லாஹு அஃலம்.)

தாராக்கோழியின் பயான்.

தாராக் கோழியாகிறது சூடும், வரக்ஷியும் மிகுதமானதாயிருக்கும், கடத்தைப் பிறப்பிக்கும்.

பிரயோஜனங்களாவது.

யாதொருவன் அதன் விதையைச் சுட்டு தின்று அப்பவே ஜிமாஉ செய்தால் கெர்ப்பமுண்டாம். அதனுள்ளிருக்கிற கல்லை உரைத்து பேதிப்போகிறவன் குடித்தால் அப்பவே சுவாத்தியமாம். அதன்நாவை தாயிமாய் தின்றுவந்தால் தக்குரீரை குணப்படுத்தும்.

சாவலின் பயான்.

சாவலாகிறது அதன் குணத்திலுள்ளது, தன் பிள்ளையின் பேரில் போராசைக் கொள்ளாது, ஒரே பெண்சாதியை மருகு தலாக்கிக்கொள்ளாது, அன்பியாக்களுடைய நற்குணமும் அதற்குண்டும், மிகுதி திக்றுசெய்யும், கண்ணுறங்கும், கல்புறங்காது, வக்துகளை யறியும்.

ஹதீது.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். வெள்ளைச் சாவலாகிறது எனக்குத் தோழனாயிருக்கும். இன்னும் என்னுடைய தோழர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமுக்கும் தோழனாயிருக்குமென்றும், அது தன்னுடைய விட்டையும், சூழாவுள்ள பதினாறு விட்டையும் காத்துக்கொள்ளுமென்றும். இன்னும் திருவுளமானார்கள், நீங்கள் சாவலுடைய சப்தத்தை கேட்டீர்களானால் அல்லாஹுத் தஆலாயிடத்தில் அவனுடைய வரிசையில் நின்றும் கேட்டுக்கொள்ளுங்கள். ஏனெனில், அது ஒரு மலக்கைக்

கண்டதா யிருக்கும். இனி கழுதையுடைய ஊளையிடுதலைக் கேட்டீர்களானால் ஷைத்தானை விட்டும் அல்லாவைக்கொண்டு காவல் தேடிக் கொள்ளுங்கள். ஏனெனில் அது ஷைத்தானைக் கண்டதா யிருக்கும்.

இன்னும் அர்ஷுக்கும் தாளாலே, இரத்தினங்களால் இறகுள்ள ஒருச்சாவல் உண்டாயிருக்கிறது. எல்லா ஸஹர்நேரத்திலும் அது பாங்குசொல்லும். அந்தச்சப்தம வானலோகரும் பூலோகரும் கேட்பார்கள். இன்ஸும் ஜின்னும் தவிர புவிலோகத்திலுள்ள சாவல்களெல்லாம் அந்தச் சப்தம் கேட்டுதான் சப்தம் போடுமென்றும் இனியாதாமொருவன் வெள்ளைச் சாவலை அறுத்தானேயானால் அவனுடைய குடும்பக்கிளையிலும் முதலிலும் முகம் குப்புறப் போடப்படுகிறவனாக எக்காலமுமா யிருப்பான் என்றார் (ஹாக்மின் படி சாவலைத் தின்கிறது ஹலால்.)

பிரயோஜனங்களாவது:

முட்டையிடாத கோழிக்குஞ்சும் இரக்கையைத் தட்டி கூவாத சாவல் குஞ்சும் மனிதர்களடங்கலுக்கும் நேர்பாடானதா யிருக்கும். இனி அதினிரத்தமாவது அல்லது மூளையாவது புழுப்பூச்சிகள் முதலாகிய விஷஜெந்துக்களின் கடிவிஷத்திற்குப் பூசினால் கடிவிஷம் நீங்கிவிடும். இனி அதனிரத்தத்தைக் கண்ணில் அஞ்சனமிட்டால் கண்களிலுள்ள வெள்ளையை போக்கிக் கண்ணொளி யுண்டாகும். இனி அதின் புவ்வைக்கரித்து பாம்பிருப்புகளில் மோருகிறவர்களுக்குக் குடிப்பாட்டினால் குணமாகும். இனி அதின் நெற்றியிலும் பூவிலும் வெண்ணையை தேய்த்தால் சப்தம் போடாது. இனி அதினுடைய இரண்டிறகின் அருகிலுமிரண்டெலும்புண்டு. அதில் வலது றக்கையி னெலும்பைவிடா ஜுரத்துக்கும், இடது றக்கையி னெலும்பை நாலாமுறை காய்ச்சலுக்குந் கட்டினால் குணமாம். இவ்விரண்டையும் சேர்த்து விலங்கினங்களுக்குக் கட்டினால் வேலைகளுக்கு பலமுண்டாம். இனி அதின் விறையைசுட்டு கெர்ப்பந்தரிக்காத பெண்களுக்கு ஹைலாகித் தப்புரவாகிறதற்கு முன்பாக மூன்றநாளைக்குத் தின்ற புருஷனிடம் சேர்ந்தால் கெர்ப்பமாவாள். இனி போகத்தை நாடினவன் அதை கடுதாசியில் வைத்து இதை கெண்டைக்காயில் கட்டிக்கொண்டால் புதுமையாகிய கடினபோகத்தை விளைக்கும். அவிழ்த்தால் போகம்

ஒடுங்கும். வெள்ளை அல்லது செஞ்சாவலுடைய பூவை பயித்தியக்காரனுக்குப் புகைபிடித்தால் புதுமையான பிரயோசனம் கொடுக்கும், பயித்தியம் நீங்கும். இனி அதின் பித்தை செம்மறி ஆட்டின் சால்னுவில் கலந்து வெறும்வயற்றில் குடித்தால் மறதிகளை போக்கி மறந்ததை வருத்திவைக்கும். இனி அதின் இரத்தத்தை தேனில் கலந்து நெருப்பில் சூடாக்கி தண்டில் பூசினால் தண்டை வலுவிக்கும், தாதுவையும் எழுப்பிவைக்கும். இனி அதின் விரையை போர்சாவலுக்கு கட்டினால் ஒருசாவலும் இதை மிகைக்காது.

புறுவின் பயான்.

புறுவாகிறது களத்தில் தாராமுடைய ஒரு பறவை, அது பல வகையாம். ஆயிரங்காதவழியில் நின்றும் தூதுகொண்டுபோம். ஒருநாளில் மூவாயிரங்காதவழி பறந்துபோம். வீடுகளை மருகுதலா யிருக்கும், இரண்டு முட்டையிடும். ஒன்று ஆண் ஒன்று பெண் பிறக்கும். ஹைவான்களில் ஜிமாபினிடத்தில பெண்ணை ஆண் முந்துகிறது, இன்சானும் புறுவும் தவிரவேறில்லை ஒருமாதத்தில் புணரும், பதினாலுநாள் சூலாயிருக்கும். அதைக்கொண்டு விளையாடுதல் லூத்து நபிகௌமுகளின் அமலாயிருக்கும். யாதொருவன் அதைக்கொண்டு விளையாடினானேயானால் மிடிமையை அனுபவித்தே ஒழிய சாகமாட்டான். (ஹாக்கின்படி அதினுடைய வகைபடக்களும் ஹலால்.)

பிரயோஜனங்களாவது.

புறுவுக்கு முடுகுதலாய் அல்லது அதற்கசல் பாகமாய் அல்லது அது இருக்கும் வீட்டில் குடியிருந்தவன் லெக்வா பக்கவாதம் முதலிய கடின வியாதிகள் குணமாம். அதன் இரத்தத்தை சூட்டோடே அஞ்சனமிட்டால் கண்ணிருளையும் காயத்தையும் நீக்கும். அதின் எச்சத்தை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அதில் நீர் சுரப்புள்ளவன் இருந்தால் சுத்தமாகும். அது தசைமணியையும் இரத்தத்தையும் அதிகப்படுத்தும் அதை உயிரோடே பிளந்து சூட்டோடே தேளகடிவாயில் வைத்தால் அப்பவே குணமாகும். அதின் எச்சத்தைப் போட்டு கருமாறியானவனுக்கு புகைபிடித்

தால் உடனே பிள்ளைபெறும், நஞ்சுவிழும். அதைத் தேள்கடி வாயில் வைத்தால் விஷ மிறங்கும். (வல்லாஹு அஃலம்.)

காடையின் பயான்.

காடையாகிறது புருவின் போலாம். அதைத் தின்னுகிறது ஹலால்.

பிரயோஜனங்களாவது.

காடை யெலும்பை கரித்து சாம்பலையெடுத்து லைதூன் எண்ணெயில் காச்சி கொதிக்கவைத்து மொட்டைதலையில் ரோமம் உதிர்ந்துபோகிற வியாதிகளுக்கும் முடிமுளைக்கிறதற்கும் தலையில் தேய்த்தால் ரோமம் முளைக்கும். இனி அதின் இறைச்சி செதிக்கு கிறது வருத்தமாம். இனி அதின் தலையை எடுத்துக் காயவைத்து சேத்தான் பிடவையில் வைத்து பொதிந்து நித்திரைசெய்யும் பெண்களின் தொடையில் கட்டினால் தன்னிலுள்ள யெண்ணத்தையும் செய்த செயல்களையும் அறிவிப்பாள். அப்பால் பேச்சில் கலந்தால் அதை அவிழ்த்து பெறிந்துவிடவும். இனி அதின் கொழுப்பை யுருக்கிச் சீழும் புழுவுமுள்ள காதிலூத்தினால் காதுவலி சொஸ்தப்படும். இது அதின் ஆண் பெண் இரண்டின் வயிற்றை பிளந்தெடுத்துச் சமைத்துத் தைலத்தை எடுத்து சீசாவி லடைத்து யாதொரு மனிதர்களின் பேரில் அவர்களுக்குத் தெரியாமல் தேய்த்தால் அவர்கள் ரொம்பவும் பிரியப்படுவார்கள். மிகுதி முஹப்பத்துண்டாம்.

மரங்கொத்தியென்னும் கொண்டைக் காளாக்ஷிபறவையின் பயான்.

கொண்டைக்காளாக்ஷி பறவையாகிறது சுலைமான் அலைஹிஸ் ஸலாமுடைய தூதர்களில் ஒன்றுமாயிருக்கும். அது தபீறைத்தலே அதினுடைய அலகில் வாடை வீச்சமுடையது. பார்வையில் கூர்மையானது. அது பூமிக்கும் தானாமேலயுள்ள தண்ணீரைக் காணும், ஒரு மனிதன் பனிவையும் விருப்பதை காணுமிந்த

போலாம். அது நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாமை விட்டும் மறைந்ததின் சபபாவது அவர்கள் பைத்துல் முகத்திஸ் பள்ளி கட்டி தீர்ந்தபின் மக்கத்துக்குப் போக நாடினார்கள். இன்ஸ, ஜின்னு, ஷைத்தான் பறவை விருக்ஷிபான மிருகங்கள் முதலானதுகளில் நின்றும் நூறுகாதவழி தலைதூரம்வரை நிறம்புதலான தலங்களை தங்களுடன் சேகரித்துக்கொண்டு காற்றுவாகனத்திலேறி ஹறத்தில் வந்து அல்லாஹுத் தஆலா நாடிய காலமளவும் அவ்விடந்தறித்து யிருந்தார்கள். நாளொன்றிற்கு மக்காவில் 5,000-ஒட்டகை 5000-காளை மாடு 20,000-ஆடுகள் இவ்வளவு மறுப்பார்கள். அப்பால் ஹஜ்ஜு தீர்ந்தபின் ஸுபுஹில் மக்காவை விட்டும் புறப்பட்டு எமன்பதியை நாடி நடந்து மத்தியானம் ஸன்ஆவுயென்கிற ஊரில் வந்தார்கள். அது ஒருமாசத்து பயணம் அவ்விடம் தலம் பொருந்திய அழகிய நாடாயிருக்கக் கண்டு அவ்விடத்தி லிறங்கினார்கள். இறங்கி தொழுது காலைநேரம் பசியாருவதற்காக, அப்போது ஹுத்ஹுத் தென்னும் கொண்டைக் காளாஞ்சி பறவையை தண்ணீர் பார்ப்பதற்காக அனுப்பினார்கள். அந்தப் பறவையாகிறது அந்தர லோகத்தளவி லுயர்ந்து துன்யாவின் நெடுக்கம் அகலத்திலும் இடமும் வலமும் பறந்து பார்த்தது. பல்கீஸுக்குள்ள பூங்காவனத்தைக் கண்டு அவ்விடத்தனில் சாயவும் எமனிலுள்ள ஒரு ஹுத்ஹுதை கண்டது. அது இதைபார்த்து ஓய் எஃபிரே எவ்விடத்திலிருந்து வருகிறுயென்று கேட்கவும், அதற்கு இந்தப் பறவை நான் சுலைமான் அலைஹிஸ்ஸலாமுடனே ஷாமில் நின்றும் வருகிறேன் என்று அவர்களுடைய வர்ணிப்பையும் ஆளுகையின் பிரபல்யத்தையும் சொல்லவும், அதுகேட்டு அந்தப்பறவையும் அவ்விடத்து பல்கீஸு ராஜாவுடைய ஆளுகையின் பெருப்பத்தையும் சொல்லியது. இதை கூட்டிக் கொண்டுபோய் அவ்விடத்திலுள்ள பிரபல்யத்தையும் காட்டியது. பிறகு இந்தப்பறவை அதுகளை யெல்லாம் பார்த்துக் கொண்டு அலைநுக்குப் பின்னால் வந்தது. அப்போது சுலைமான் அலைஹிஸ்ஸலாம் இந்தப் பறவையின் மீதில் கோபமாகி இதைப் பிடித்து அதாபு செய்யக் கையை நீட்டவும், அது சொல்லும், அல்லாவுடைய நபியே நீங்கள் அவனுடைய சந்நிதானத்தில் தரிபடுகிறதை நினைத்துக்கொள்ளுமென்று சொன்னபோது அவர்கள் திடுக்கிட்டு அஞ்சி அத்தை

தொட்டும் பொறுத்துக் கொண்டு அப்பால் நடந்த வர்த்தமானங்களையெல்லாம் சொல்லியது. இது தப்சீரிலும் கசஸுகளிலும் விரிவாய் வருகிறது. பார்த்துக் கொள்வீர்களாக (ஹுக்மின்படி அதைத் தின்னுவது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

இதின் தூவலை வீட்டில் புகைத்தால் விஷஜெந்துக்களெல்லாம் ஓடிப்போகும். இனி மறதியுள்ளவனுக்கு அதின் கண்ணைக் கட்டினால் மறந்ததை நினைப்பான். இனி கல்பைசுட்டு ஸதாபு இலையுடனே தின்றாலும் பாடமும் கூர்மையும் உண்டாகும். இனி அதில் 10-பறவை பிடித்து இறகுகளை பிடுங்கி யாதொரு வீடு கடைகளில் வைத்திட்டால் அந்தயிடம் பாழுண்டுபோகும். ஒருக் காலமும் பரிபாலனமாகாது. இனி அதின் நகத்தை குழந்தைகளுக்குக் கட்டினால் கண்திருஷ்டி அணுகாது. அது யிருக்கும் காலமெல்லாம் ஆபியத்தா யிருக்கும். இனி அதின் கூண்டின் மண்ணை சிறைச்சாலையில் வைத்திட்டால் அப்பவே அதிலுள்ளவர்களெல்லாம் வெளிப்படுவார்கள். இனி அதன் தோலை சுமந்துகொண்டவன் எதிரியை மிகைத்துக் கொள்வான். வழக்கு வெல்வான். அறுக்கப்பட்டதை சமூலத்துடனே யாதொரு வீட்டில் தூக்கி வைத்தால் அவ் வீட்டுடையாருக்கு ஷிஹ்று அணுகாது. இனி அதின் பூவை பயித்தியக்காரனுக்கு புகைபிடித்தால் சுகமாகும். இனி அதின் தசையை ஜிமாவை விட்டும் கட்டப்பட்டவனுக்கு புகைவிட்டால் கட்டவிழும். இனி இடது இறகை கரித்து சாம்பலை வழியில் தூவினால் நீ நாடினவர் அதை மிதித்தால் உன் பேரில் முஹப்பத்து வைப்பார்கள்.

கிளிகளின் பயான்.

கிளியானது பசுமைநிறமும், வெள்ளை, சாம்பல் நிறமும் இப்படி மூநுவகையுண்டும். அதின் அழகுக்கும் நாகரீகத்துக்கும் ஆகவேண்டி இராஜாக்கள் வைத்து வளர்க்கிறார்கள். அதிலொரு வகை குர்ஆன் ஓதும். தமகஷரீ இமாம் சொன்னார்கள், கிளி சொல்லும் கேடாகிறது துன்யாவே அவனுடைய நாட்டமா யிருக்குமே அந்த ஒருவனுக்கா யிருக்கும். (ஹுக்மின்படி அதைத் தின்னுவது அஸஹ்ஹான சொல்லின்படிக்கு ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

அதினுடைய நாவைத் தின்றால் நாகரீகமாய்ப் பேசுவான். அதின் இரத்தத்தை யுலர்த்தி பொடித்து இரு தோழருக்கும் இடையில் தடவினால் பகைமை யுண்டாகும்.

பெரிய வௌவாலின் பயான்.

பெரிய வௌவாலானது உயர்ந்த தலங்களில் வீடு கட்டியிருக்கும். இடியில்னின்றும் சாகமுடுகும். அதின்கண் மறைந்து போனால் ஐனு ஷம்ஸா என்கிற மாத்தில் தன் முகத்தைப்புரட்டும் அதினால் கண் வெளிச்சமாம். இன்னுமொரு சொல்லின்படி அந்த மாத்தினிலையைத் தின்னும், அதினால் கண் குணமாகும். (ஹாக்மின்படி அதின்வகை யடங்கலையும் தின்னுகிறது ஹறும்)

பிரயோஜனங்களாவது.

அதின் கண்ணை யெடுத்து பிடவை துண்டில் வைத்துக் கட்டிலின் காலில் கட்டினால் கட்டிலில் ஏறினவன் உறங்கான். இனி அதை உலர்த்தி நறுக்கி மண்ணெண்ணையில் சேர்த்து குடித்தவள் குடிப்பித்தவனை யுவப்பாள். இனி அதை நறுக்கி லைதூன் எண்ணையில் குழப்பி வயறு நொந்தவளுக்குத் தொப்புளில் தேய்த்தால் பேறு லேசாகும். இனி அதின் கல்லை உலர்த்தி பொடித்து குடிப்பில் கலந்து குடித்தால் நாதையெழுப்பும். இனி அதின் இரத்தத்தை ஒரு பெண்பிள்ளை அறியாதே குடித்துவிட்டால் ஜிமாவுடைய ஷஹ்வத்து நின்றுபோகும். இனி அதை உச்சியில் தேய்த்தால் மிசாஜின் பேதத்தினால் உண்டான தலைவலி நீங்கும். இனி அதின் பித்தை குடித்தால் வெள்ளையான முடியைக் கருப்பாக்கிவைக்கும், ஆனால் அதை குடித்தபின் வாய்நிறம்பப் பாலைக்குடிக்கவேண்டும். இல்லாவிட்டால் பல் கறுத்துவிடும். இனி அதின் தசையைத் தின்றால் முழிப்புண்டும், இனி கூட்டில் பூசியிருக்கின்ற களிமண்ணை யெடுத்து தண்ணீரில் கலக்கிக் குடித்தால் சிறுநீரை பெருக்கும்.

சிறிய வௌவாலின் பயான்.

சிறிய வௌவாலாகிறது இருள் தலங்களில் மக்ரிபுக்குப் பின்னும் இஷாவுக்கு முன்னும் காணப்படும். பகலிலும் சந்திரன் ஒளியிலும் அது பார்க்காது. ஆனதால் இருளும் ஒளியும் இல்லாத நேரமாகிய குருபுடைய அந்தி நேரத்தில் இரைதேட வெளிப்படும். அந்நேரம் ஈக்களானது தனக்கிரையாகிய இரத்தங்களை தேடிப்புறப்படும். அவைகளை இது பிடித்துத் தின்னும். நிஸ்கு தேடிவந்தவொன்றை மற்றொன்று தனக்கு நிஸ்காக பிடித்துக்கொள்ளும். (பலாப் ஞானல் ஹகீம்) இனி அதற்கிரண்டு தன்யமும் இரண்டு காதும் பற்களும் இரண்டு விரையும் சொண்டுமுண்டும். இன்ஸானைப் போலேசிரிக்கும், ஹைலாகும் துப்புறவாக்கும். நாற்காலுடைய மிலங்கினங்கள் போலே மோளும். பிள்ளைக்குப் பால்கொடுக்கும். அதற்கு இறகில்லை. அதை நஸாறுக்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் இடத்தில் எலும்பில்லாத பறவை வேண்டுமென்றுக் கேட்டார்கள். அதற்காக அல்லாஹுத் தஆலா உத்தரவுகொண்டு அவர்களிதைப் படைத்தார்கள். ஆனதால் எல்லாப் பறவைகளும் அதற்குப்பகையாயிருக்கும். சதையைத்தின்னுகிறபறவைகள் இதைபிடித்துதின்னும். அதைத் தின்னாதது இதைக் கொல்லும். இதற்காகத்தான் அது இரவு காலத்திலேயேயொழியவெளிப்படாது. இன்னும் ஈஸா அலைஹின்ஸலாம், இதைத்தவிர வேறொன்றையும் படைக்கவில்லை. ஆனதால் மனிதர்கள் பார்த்துக் கொண்டு நிற்கும் போதெல்லாம் பறக்கும், அவர்கள் கண்ணைவிட்டும் மறைந்தால் செத்து விழுந்திடும். காலிக்குடைய செயலைவிட்டும் கல்குடைய செயலை தெரிவாகிறதற்காக இன்னும் பாம்பு காற்று, தண்ணீர், பொழுது இந்நான்கும் இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாமிடத்தில் முறையிட்டதும் இதுபோய் மன்லஹுத்து அறிவித்ததும் அதினால் அந்நாலும் வற்மம் கூறியதும், அதற்க்காக அல்லாஹுத்தஆலா இதற்குப் புகல் சொல்லிதேற்றியதும், ஜவாஹிறுல்ஹிகம் யென்னும் கிதாபில் விரிவாக பேசிவரப்படுகிறது. அதில் பார்த்துக்கொள்ளவும். இன்னும் உயிர் பிராணிகளில் தானல்லாததைதூக்கி சுமக்குகிறது, இந்த வௌவால், குரங்கு, இன்ஸான் இம் மூன்றையும் தவிர வேறில்லை. இன்னும் அது மிகுந்த நேரத்தில ஆகாசத்தில் பறக்கும் போதில் புணரும். பிள்ளைக்கும் பால்கொடுக்கும். கழுகிலும் மிகுந்த வயதுக்கு ஜீவித்திருக்கும்.

ஹாபிளுப்னி அஷாகிர் றிவாயத்துச் செய்தார்கள்:—ஒரு மனிதன் இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அளவில் சில மஸ்அலாகேட்டு கடுதாசியெழுதினான். அதாவது ஒரு வஸ்துவுக்கு இரத்தமில்லை தசையுமில்லை பழக்கப்பேசினது. அதென்ன வஸ்து? இன்னுமொரு வஸ்துவுக்கு இரத்தமில்லை. தசையுமில்லை விரைந்து நடந்தது. அதென்ன வஸ்து? இன்னுமொரு வஸ்து, அதற்கு இரத்தமில்லை, தசையுமில்லை அது மூச்சுவிட்டது. இன்னும் இரண்டு வஸ்தானது அதற்கு தசையுமில்லை இரத்தமுமில்லை, அவ்விரண்டும் எதிர் மொழியில் பேசப்பட்டது ஜவாபு சொல்லிற்று, இன்னுமொரு தூதன் அல்லாஹுத் தஆலா அதை அனுப்பி விட்டான். அது ஜின்னில் நின்று மாயிருக்கவில்லை. மனிதரில் நின்று மாயிருக்கவில்லை. மலாயிகத்துகளில் நின்றுமாயிருக்கவில்லை. அத்தூது என்னது? இன்னும் ஒரு நபுஸு மௌத்தாயிற்று. அதுகொண்டு அதல்லாத நபுஸு ஜீவித்திருந்தது. அதென்ன நபுஸு இனி மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு அவர்களின் தாயார் அவர்களைக் கடலில் எறிகிறதற்கு முன்னாலே எத்தனை நாள் பால் கொடுத்தாள்? எந்தக் கடலில் எந்த நாள் எறிந்தாள்? இன்னும் ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய தேகம் எவ்வளவுகாலமாய் ஜீவித்திருந்தார்கள்? அவர்களுக்கு வசியாயிருந்தார்? இனி முட்டையிடாமலே ஹலாகும். அப்படிக் கொற்ற பறவை என்ன? இப்படிக்கெல்லாம் கேட்டு எழுதினான். அதற்கு அவர்கள் ஜவாபு எழுதிச் சொன்னார்கள், ஒன்றாவது நரகமாயிக்கும், அது சொல்லும் 'ஹல்மின் மசீது' இன்னும் அதிகமுண்டோவென்று. இரண்டாவதானது மூஸா அலைஹிஸ்ஸலாமுடைய அஸாவாயிருக்கும், மூன்றாவதானது ஸுப்ஹாயிருக்கும், நாலாவதானது வானம் பூமியுமாயிருக்கும், 'காலதா அதைனா தாயின்' நாங்கள் உனக்கு வழிப்பட்டவர்களாக வந்திட்டோம் என்று அவ்விரண்டும் எதிர் மொழி பேசியது, ஐந்தாவது அதென்ற தாமிறது ஆதமுடைய மகனளவிலே அல்லாஹுத் தஆலா அனுப்பியகாகமாயிருக்கும். ஆறாவது அல்லாஹுத் தஆலா குர்ஆனிலே சொல்லியிருக்கின்ற பொன்னிறக் காளை மாடாயிருக்கும். மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு அவர்கள் தாயார் கடலில் எறிகிறதற்குமுன் மூனுமாதம் பால் கொடுத்தாள், பஹ்றுல் கல்தூமென்னும் கடலில் ஜும்ஆ நாளையில் அவர்களை எறியப்பட்டது, ஆதம் அலை

ஹிஸ்லாமுடைய நெடுகமாகிறது அறபது முழமாயிருக்கும். அவர்கள் ஆயிரம் வருஷம் ஜீவித்திருந்தார்கள். அறபது வருஷத்தைதவிர அவர்கள் வசிபத்தாகிறது ஷிது அலைஹிஸ்ஸலாமாயிருந்தார்கள், அப்பறவையாகிறது ஈஸா அலைஹிஸ்ஸலாம் சமைத்தாதினார்கள், அப்படிக்கொத்த வெளவாலென்ற பறவையாயிருக்கும் (ஹூக்மின்படி அதைத் தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

தலைக்காணி உள்ளில் வெளவாலின் தலையைவைத்து அந்த தலைக்காணிமேல் தலை வைத்தவன் தூங்கான், அதில் தலையை யிரும்பு அல்லது செம்பு பாண்டத்தில் போட்டு லைதூன் யெண்ணெயில் பல தரமும் விட்டு தசையுண்ணும்படி வேகவைத்து எண்ணெயை வடித்து குளை, பழையபக்கவாதம், பிடிப்புக்குச் சரீரத்திலுள்ள வலியடங்கலுக்கும் பூசக் குணமாம். யாதொரு வீட்டில் அதை அறுத்து அதின் கல்பை எடுத்து கரித்தால் அவ்வீட்டில் பாம்பு கட்டுவாக்காலி புகுதாது. அதின் கழுத்தை கட்டினவன் கட்டுவாக்காலியை விட்டும் அச்சந்தீர்வான். அதனுடைய பித்தை பேறு வருத்தமானவளுக்கு அபத்தில் தேய்த்தால் அக்கோமே பிள்ளை பெறும். வெளவாலை சதைமாயும்படி சமைத்துத் தண்டில் பூசினால் தக்குரீரைவிட்டும் அச்சந்தீர்வான். அதைச் சமைத்த சாதத்தில் பக்கவாதக்காரன் இருந்தால் அவ்வியாதி அற்றுவிடும். அதின் எச்சத்தை வெண்புள்ளி கரும்புள்ளிகளில் தேய்த்தால் அது மங்கும். இனி கழுக்கூட்டு முடியை பிடுங்கிப்போட்டு அதனிரத்தமும் பாலும் சரியிடையாகக் கூட்டிப் பூசினால் முடிமுளையாது. அதைக் குழந்தைகளுடைய அடிவயற்றில் புளூதுக்கு முன்னாலே தேய்த்தால் முடிமுளையாது.

ஓர் ஊர்வனமென்னும் வில்வத்தானின் பயான்.

இந்த வில்வத்தான் என்பது சிறிதான ஒரு ஊர்வனம். அதன் வாடை நிரம்பவும் மணமானது. நெருப்பில் புகுதும். நஷ்டஞ் செய்யாது. அதன் கொழுப்பை உடம்பில் தேய்த்துக்

கொண்டு நெருப்பில் புகுந்தால் யாதொரு சங்கடமுஞ் செய்யாது. ஷாஹீன் இராஜாளி, ஸகரு ஷில்வத்தான் குருவி, இதில் 4-வகையுண்டும். (ஹுக்மின்படி அதுகளைத் தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

அதின் மூளையை பத்துகளில் பூசினால் அதை நீக்கும்.

ஊர்க்குருவியின் பயான்.

ஊர்க்குருவியாகிறது சுற்றித்திரியுதல் குடிபதியை மருவி யிருக்குதலென இரண்டு வகையுண்டும். ஒரு பட்டணத் துள்ளோர் பயணம் போய்விடின் அதுவும் போய்விடும். அவர்கள் மீண்டுவந்தால் அதுவும் மீண்டு வந்துவிடும். மாத்தானை பயந்து மேல்முகட்டுக்கும் தாளாலே கூடுவைத்துக் குடியிருக்கும். அது குதித்துப் பாயுமேயல்லாது நடக்க அறியாது. மிகுதி புணர்ச்சி செய்யும். சிலகால் ஒரு சாஅத்தில் 100-தரம் புணரும். இதற்காகத்தான் அதற்கு ஆயுசு குறைவு. ஓர்வயதுக்குமேல் காஸியில் ஜீவித்திராது. அதற்கும் கழுதைக்கும் இடையில் பகையுண்டும்.

ஹிக்காயத்து.

ஒருவேடன் ஒருநாளையதினம் குருவி பிடிப்பதற்காய் வலையை விரித்திருந்தான். அதிலொரு குருவி அகப்பட்டது. அதைக் கையில் பிடித்துக்கொண்டு ஸபஹ் செய்வதற்காக எத்தனித்தான். அப்போது அக்குருவி சொல்லும், ஓய் மனிதா நீ இதைப்போல் எவ்வளவு ஆடு கோழி அதுபோற்கொற்றது தின்றிருப்பீர், அதுகளிலெல்லாம் உம்முடைய வயறு நிரம்பாதது நான் ஒரு சிறிய பறவையைக் கொண்டா உம்முடைய வயறு நிரம்பப் போகிறது, எங்கிலும் நீர் என்னை விட்டிடுவதாய் வார்த்தைப்பாடு செய்தீரானால் நானுமக்கு மூன்றுபதேசம் சொல்லுகிறேன். அதாகிறது உமக்கெப்போதும் பிரயோஜனங் கொடுத்துக்கொண்டே யிருக்கும். ஆனால் ஒன்று உமது கையிலிருந்தே சொல்வேன், அந்த உபதேசத்திலுமக்கு சந்தேகமில்லாமல் பிரயோஜனமிருக்கிற தென்று தெரிந்தால் நீர் நம்மை விட்டுவிடவேணும். 2-வது

உபதேசம் எதிர் சுவரின்பேரி லுட்கார்ந்து சொல்வேன், 3-வது உபதேசம் மரத்தின் கொம்பின்பேரி லுட்கார்ந்து சொல்வேன் என்றது. வேடன் இதை ஆலோசித்ததில் இதைத்தின்னுவதில் நமக்கென்ன பிரயோஜனம், அதினுபதேசத்தைக் கேட்டுக் கொள்வதே நல்லமென்று நினைத்து, ஓய் பறவையே உம்முடைய உபதேசத்தைச் சொல்லும் என்றான். அப்போது முதலாவதாக பறவை சொல்லும் ஒருகாரியம் உம்மால் முடியவில்லாததை அதைச் செலுத்திவிட வேண்டுமென்பதில் உறுதி கொள்ளாதே யென்று சொல்லவே வேடனுடைய மனதில் இது பிரயோஜனம் கொடுக்கப்பட்டதென்பதில் சந்தேகமில்லையென்று அத்தாக்ஷியாகி நீ உண்மை சொன்னாயென்று அதைக் கையை விட்டும் போகவிட்டுச் சொன்னான். நல்லது 2-வது உபதேசம் சொல்லென்றான், அது பறந்து மதிலின்பேரி லுட்கார்ந்துக்கொண்டு சொல்லத் தொடங்கியது.

ஒரு காரியம் செல்படியாகி விட்டதின்பின் அது சென்றதைக் கொண்டு வியாகூலப்படாதே யென்று சொல்லவே, வேடன் நீ சந்தேகமில்லாமல் உண்மைச் சொன்னாய் 3-வது உபதேசம் சொல்லென்றான். அப்போது குருவியானது சிரித்துக்கொண்டு சொல்லும் ஆ ஆ கைசேதமே நீ இரம்பவும் துர்ப்பாக்கிய முடையவன், ஏதோ என்னுடைய தந்திரத்தின்பேரில் அகப்பட்டுக்கொண்டாய் என்னுடைய வயிற்றில், 12-திர்ஹத்திடை யுடைய முத்தொன் றிருக்கிறது எங்கிலும் என்னை அறுத்து விடுவீரானால் உமக்குக் கிடைத்திருக்கும். உம்முடைய பிடி பிடி காலங்களுக்கெல்லாம் போதுமானதா யிருக்கும். ஆனால் எந்த வஸ்துவும் எவனுடைய நசீபிலில்லையோ அது எவ்விதத்திலும் ஒருபோதும் கிடைக்கப் போகிறதேயில்லை. வேடன் இதைக் கேட்கவே இரம்பப் பரிதாபப்பட்டு, தன் விரலைக் கடித்துக்கொண்டு சொல்லத் தொடங்கினான். நான் இரம்பவும் புத்தியில்லாத மூடன் எப்படியோ இச்சிறிய பறவையுடைய தந்திரத்தி லகப்பட்டு கிடைப்ப தரிதாகிய இந்த முத்தை யிழந்தேனென்று கைசேதப் படுவதைக்கண்டு ஓய் மனிதா என்னுபதேசத்தை மறந்து விட்டாயா, சென்ற காரியத்தின்பேரில் வியாகூலப்படாதே, எனக்கு உம்முடைய புத்தியின்பேரில் வியாகூலமா யிருக்கிறது. நீயிவ்வளவு அறியவில்லையா, இப்போது நான் 4-திர்ஹத்திடை

இல்லாதிருந்தால் என்வயற்றுள் 12-திர்ஹத்திடை முத்து எவ்விதமிருக்கக்கூடும், இன்னும் நான் சொல்லவில்லையா, ஏலாத காரியத்தின்பேரில் அபேட்சை வையாதே யென்று சொன்னதை மறந்திட்டீரோ வென்று சொல்லவே, வேடன் தன்னுடைய மூடபுத்தியின் பேரில் நம்முடைய புத்திதான் மூடத்தனமென்று நினைத்து நல்லது இன்னொரு நல்லுபதேசம் சொல்லென்றான். அப்போது குருவியானது இரண்டு உபதேசத்தின் பேரில் அமல் செய்யாதவனுக்கு மூன்றாவது சொல்வது வீணென்று சொல்லிக் கொண்டு பறந்துவிட்டது. (ஹுக்கின்படி அதைத் தின்னுகிறது ஹலால்.)

பிரயோஜனங்களாவது.

அதின் தசையாகிறது குடும்பரக்ஷியுமாம். அதைத்தின்னுதல் மணியை அதிகமாக்கிவைக்கும். அதின் மூளையும் சதாப்பிலைத் தண்ணீரும் தேனுங்கூட்டி வெறும்வயற்றில் குடித்தால் மூலவியாதியின் வலியைக் கேட்கும். இனி அதின் எச்சத்தை இன்சானுடைய வாய்க்குவளை நீரில் கூட்டி பருவுகளில் பூசினால் அதை நீக்கும், அதின் மூளையை ஷீராஜா என்னும் எண்ணெயிலுருக்கிச் சாராயம் குடிக்கிறதை உவந்து இருப்பானே யவனுக்கு குடிப்பாட்டினால் பின்புசாராயம் குடியான். இனி அதை யறுத்த இரத்தத்தை அச்சென்னும் பருப்பின் மாவில்விட்டு உண்டை செய்துலர்த்தி வைத்துக்கொண்டு புசித்தால் குவ்வத்தை எழுப்பிவிக்கும். இனி அதிலோர் உருண்டையை எடுத்து ஜைத்தூன் எண்ணெயில்கலந்து கோஷத்தில் பூசிப்பூசிபைச் சவட்டாதிருந்துக் கொள்ளவும், பிறகு ஜிமாஉ செய்தால் நாடியமட்டுக்கும் ஜிமாஉ செய்வான். இனி இரண்டுவிதையும் எடுத்து ஒரு பிடவைத் துண்டில் வைத்துப் புகையில் உலர்த்தி தலையில் கட்டிக்கொண்டால் இவன் நாடிய மட்டும் ஜிமாஉகிட்டும். அதன் எச்சத்தை அஞ்சனமிட்டால் கண் வெள்ளையை நீக்கும்.

ஹிக்காயத்து.

இமாம் ஷாபியீ றஹிமஹுல்லாஹு சொன்னார்கள், 4-வஸ்து ஜிமாவை அதிகப்படுத்தும், அதாவது ஊர்க்குருவியைத் தின்னுவதும், பெரிய இத்ரீபல் தின்னுவதும், புஸ்துகுலைத் தின்னுவதும்

பாதம் விதைத்தின்னுவதும் என்றும், இன்னும் 4-வஸ்துவும் அகலே அதிகப்படுத்தவும், அதாவது வீண்பேச்சை விடுகிறதும், மிஸ்வாக்கைபுழங்குகிறதும், ஸாலிஹான பேர்களுடனிருப்பதும், படித்தபடி அமல்செய்கிறதும் என்றும், இனி 4-வஸ்தும் சரீரத்தைப்பலப்படுத்தும், அதாவது மாமிஸத்தை தின்னுவதும், மணமானதை முகர்வதும், குலைன்றியே மிகுதமாய்க் குளிப்பதும், கித்தான் பிடவை உடுப்பதும் என்றும், இனி 4-வஸ்துவும் சரீரத்தைப் பலவீனப்படுத்தும், அதாவது ஜிமாஉ மிகுப்பதும் துக்கத்தை மிகுதமாக்குவதும், வெறும்வயற்றி லதிகமாய்த் தண்ணீர் குடிப்பதும், புளிப்பை மிகுதமாய்த் தின்னுவதும் என்றும் சொன்னார்கள்.

ஜிமாஉ அதிகஞ்செய்து எப்போதுந் தாயிமாக்கிக்கொண்டால் உடம்பில் சொறிச்சலையும். பார்வையில் குறைவும் குவ்வத்தில் பலக்கேடு முண்டாகும், ஜல்தியில் முடி நரைக்கும், இருந்து எழும்ப ஏலாமையுண்டாக்கும், நீர்ப்பாண்டம் பலக்கேடு, தொலிதடிப்பு நீர்சுருக்கு, கல்லடைப்பு முதலிய பலரோகங்களு முண்டாகும். யாதொருவன் எக்காலமும் தன் சிறுநீரில் உமிழ்ந்து வந்தால் முதுகந்தண்டு வலியைவிட்டும் அச்சந்தீர்வான்.

இனி கஸ்வீனி இமாம் அப்கருத்து ஹகீமைத்தொட்டும் றிவாயத்துச் செய்தார், ஜிமாவுக்குப் பின்னுலையும் சூடான ஒஜிபனம் தின்றபின்னும், மதுரமாகிய அல்வாபோல் கொற்றவை தின்றபின்னும் வருத்தத்தின் பின்னடியிலும் குளிர்ந்தத் தண்ணீரை குடிப்பது மக்ருஹு என்றும், இதுமிகுதம் தங்கடத்தை வருத்துமென்றுஞ் சொன்னார்கள்.

கொசுவினுடைய பயான்.

கொசுவாகிறது படைக்கோலத்தில் யானையைப் போலாம், எங்கிலும் உறுப்புகளால் அதிலும் அதிகமாயிருக்கும். ஏனெனில தற்கு, நாலுகால், இதற்கு ஆறுகால். இன்னும் இதற்குநாலு இறகும் அதிக மாயுண்டாயிருக்கிறது. அதினுடைய தும்பிக்கை படைத்திருக்கும். இதினுடைய தும்பிக்கை புள்ளளவும் துவார முடையதா யிருக்கும். அதுக்கொண்டு ஜடலத்தில் ஊன்றினுச்

இரத்தத்தை உள்ளளவில் இழுத்துக்கொள்ளும். இனிமனிதன் ஜடலத்திலிருந்தால் வேர்வைப் புறப்படுகிற துவாரங்களிலூன்றி இரத்தத்தை யுருஞ்சும். சிலகால் ஒட்டகை முதலானவைதைக் கொன்று விடும்.

ஹதீது.

நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானூர்கள்:— துன்யாவாகிறது அல்லாஹுத் தஆலா இடத்திலே ஒரு கொசுவின் ஒற்றை இறகுக்காவது சமானமாயிருக்குமேயானல் காபிருக்கு ஒரு மிடர்தண்ணீரையாவது அதில் நின்றும் புகட்டிவிக்க மாட்டா னென்றூர்.

தேன் வண்டுவின் பயான்.

அர்ஸதூ சொல்லுகிறர்கள். தேன்வண்டாகிறது 9-வகையா யிருக்கும் என்றும், தேன் பலவிதமாக விதற்பமாயிருப்பது, அவ்வகைகளின் விதற்பமும், மேயுந்தலங்களின் விதற்பமுங் கொண்டதா யிருக்கும்.

பிரயோஜனங்களாவது.

தண்ணீரும் நெருப்பும் படாதத்தேனை கஸ்தூரியுடன் சேர்த்துக் கண்ணில் அஞ்சனமிட்டால் கண்ணில் தண்ணீர் இறங்குகிறதை நீக்கும். அதைத் தேகத்தில் தளமிட்டால் பேன்களைக் கொல்லும். அதைக் கொழுகித் தின்றால் பேயாய்க்கடிக்கு உபயோகமாகும். தேகத்திலுள்ள மாசிகளை நரம்புகளின் வழியாயிழுத்து பரிசுத்தப்படுத்தும். விஷங்களை யறுக்கும். நீரடைப்பு, கல்லடைப்பு, பக்கவாதம். இவைகளுக்குப் பிரயோஜனப்படும். நாதை எழுப்பி விக்கும். நீர் தாரையிலுள்ள புண்களை யாற்றும், தாகத்தை யடக்கும். காடி, உப்பு, சுண்ணும்பு இவைகளில் சேர்த்தும் கட்டிகளில் பூசினல் அதை யுடைக்கும். ஹிமாயின் பின்னடியில் தண்ணீரும் தேனும் சேர்த்துக்குடித்தால் கொதுகொதுத்த குருக்கெலும்பை வலுக்கப்பண்ணும், தீயில்வெந்த கஞ்சிபோலான சட்டவஸ்து தேகத்தில் கவிழ்ந்திட்டால் உடனே பூசினல் யாதொரு பழுதன்றியே பரிசுத்தப்படுத்தும். இனி தோயாவினைத்தப்பேர்

களுக்கு தண்ணீரில் கலந்துக் குடித்தால் திரேகம் வலுக்கும். இனி பேதிக்கண்டால் தண்ணீரில் கலந்து குடித்தால் பேதிநிற்கும். (இன்ஷா அல்லாஹு) அதை செற்றியில் பூசினால் ஒரு தலை வலியைக் கேட்கும். நோயாளிக்குத் தேனீக்கான கைருனவஸ்து ஒன்றுமில்லை, இனி பிள்ளை பெற்றவளுக்கு பேரீச்சபழத்தைக்கான கைருனவஸ்து ஒன்றுமில்லையென்றும் ஹதீது வந்திருக்கிறது.

பீ வண்டின் பயான்.

பீ வண்டுக்கும் தேளுக்கும் இடையில் இஷ்டமுண்டு.

பிரயோஜனங்களாவது.

அதன் தலைகளையெடுத்து புறாவின்கூட்டில் வைத்தால் புறாக்கள் எல்லாம் அதில் வந்துக் கூடும். அதினுள்ளிருக்கிற சரத்தை கண்ணில் அஞ்சனமிட்டால் பார்வைக்கூர்மையாகும், கண்ணிருளைப் போக்கும், கண்வெள்ளையை நீக்கும் கண்ணில் நீர்வடிதலைப் போக்கும். இனி அவ்வண்டை பிச்சுத்தேள் கடிவாயில் வைத்தால் அவ்விஷம் நீங்கும். அதைக் கரித்து சாம்பலை காயங்களில் தூவினால் சத்தமாகும். இனி ஒருமனிதன் தெரியாமல் அதைவிழுங்கிவிட்டால் உடனே அவனைக் கொன்றுவிடும். (ஆபல்லாஹு மினல் ஹலாகத்தி.)

செள்ளுப்பூச்சியின் பயான்.

செள்ளுப்பூச்சி யாகிறது முதலாவது மண்ணில் நின்று முண்டாகும். ஒட்டியேறவும் இருள் தலங்களிலுண்டாகும். அதின் அதிகாரமாவது, குளிர்காலத்தில் கடைசியிலும் கோடைக்காலத்தின் துவக்கத்திலுமாயிருக்கும். முட்டையிட்டு குஞ்சுவெளியாகும். அது யானையுடைய ரூபத்தைப்போலே யிருக்கும். கடிக்கின்ற வீரப் பல்லும், நீளுகின்ற தும்பிக்கையும் அதற்குண்டு மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹூக்மின்படி அதைத்தின்னுவது ஹறாம்.

ஹிக்காயத்து.

ஒரு மனிதன் செள்ளுப்பூச்சியை யேசினார், அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கேட்டு அதை நீர்

பேசவேண்டாம். அது ஒரு நபியை பஜ்ரு தொழுகைக்காக முழிப்பாக்கி வைத்ததென்று நபிராயகம் சொன்னார்கள்.

பிரயோஜனங்களாவது.

கொட்டி ரோகினைச் செய்கிறதுதான்.

வெட்டுக்கிளியின் பயான்.

வெட்டுக்கிளியாகிறது அதற்கு ஆறுகாலுண்டும். ஜப்ரென்னும் வம்புத்தனமுடைய பத்து ஹைவான்களுடைய படைக்கோல மதிலுண்டும், அதாவது குதிரையின் முகம், யானையின் இரண்டுக் கண், காளைமாட்டின் கழுத்து, கடமானின் இரண்டு கொம்பு புலியின் நெஞ்சு, நட்டுவாக் காலியின் வயறு, கழுகுடைய இரண்டிறகு ஒட்டகையி னிரண்டுதொடை, நீமுழுக்கி பக்ஷியுடைய இரண்டு கால், பாம்புடைய வால்

ஹதீது.

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் முன்பாக ஒரு வெட்டுக்கிளி வந்து விழுந்தது. அதனிறகில், நாங்களாகிறது அல்லாஹுத் தஆலாவுடைய பெரும் படைப் பாயிருக்கும். எங்களுக்குத் தொண்ணூத்தொன்பது முட்டையுண்டாயிருக்கிறது. நூறுமுட்டை நிறப்பமாயுண்டா யிருக்குமானால் இந்தத் துன்யா அடங்கலையும் அதிலுள்ள வஸ்து களையும் நாங்கள் தின்றுப்போடுவோமென்று அபருனி பாஷையில் எழுதப்பட்டிருந்தது. அதினால் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இதுகள் ஹலாக்காகும்படி துஆ செய்தார்கள். ஜிபுரில் அலைஹிஸ்ஸலாம் வந்து அதில் சிலதில் கபூல் செய்யப்பட்டதென்றார்கள்.

ஹதீது.

அல்லாஹுத் தஆலா ஆயிரம் உம்மத்தைப் படைத்தான். அதில் நின்றும் அறுநூறு உம்மத்து கடலிலும், நானூறு உம்மத்து கரையிலுமா மென்று சொல்லப் பட்டிருக்கிறது. (ஹாக்கின்படி அறைத்தின்னுவது ஹலால்)

பிரயோஜனங்களாவது.

யாதொரு இன்சானுக்கு அதைப் புகைபிடித்தால் நீர்சுரப்பு மாறும், அதின் முட்டையை முகத்திலுள்ள கருப்பில் தேய்த்தால் அதை நீக்கும்.

மூட்டையின் பயான்.

மூட்டையாகிறது சூடாகிய இரத்தத்தில் நின்றும் புறப்படும். மனிதன் வாடை எத்தினபோதே வந்துச்சாடும். அதற்கு இரத்தமில்லை, அதிலேயுள்ள இரத்தமாகிறது மனிதரில் நின்றும் குடித்ததாயிருக்கும். (ஹுக்மின்படி அதைத் தின்னுகிறது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

அதற்கு மாத்து பிஹ்லபு வித்தைக்கொண்டும், அல்லது அட்டை, அல்லது ஆனைத்தந்தம், அல்லது எருமைத்தோல் இவைகளி லொன்றைக் கொண்டாவது வீட்டில் புகைபிடித்தால் மூட்டைகள் விலகிப்போம்,

---

பேனின் பயான்.

பேனாகிறது உடலம், பிடவை, தூவல்முடி இவைகளைத் தொடுமென்னத்தக்க வேர்வை ஊத்தையில் நின்றுமுண்டாகும். சில மனிதருடைய தபிஅத் எவ்வளவு வெடிப்புசெய்து மணம் பூசினாலும பேனே பத்தும். அதின் தபிஅத் சிவந்த முடியில் சிவப்பாயும் கறுப்புமுடி வெள்ளைமுடியில் கறுப்பு வெள்ளையாயுமிருக்கும். கோழி, புறா, குரங்கு இதுகளுக்கும் பேன்பிடிக்கும். (ஹுக்மின்படி அதைத் தின்னுவது இஜ்மாயின்படி ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

(பேனாகிறது) குஷ்டரோகக் காரரைத்தவிர மற்றவர்களுடைய பிடவையில் பத்தும். அதை உயிரோடே விடுவது மறதியை வருத்திவிக்கும். இன்னது மதுபோலேதான் ஒலிதின்னுவதை

தின்னுவதும், கட்டுண்ட தண்ணீரில் சிறுநீருக் கிருப்பதும், பிலிலை தின்னுவதும், புளிப்பு மாதுளம்பழம் தின்னுவதும், கபரிலுள்ள பலகைகளை வாசிப்பதும், இரண்டு பெண்பிள்ளைகளுக் கிடையில் நடப்பதும், கழுவில் கிடப்பவனைப் பார்ப்பதும், பச்சை கொத்தமல்லித் தின்னுவதும், சூடாகிய ரொட்டியைத் தின்னுவதும், கருப்புச் செருப்பு போடுவதும் இவைகளெல்லாம் மறதியை வருத்திவிக்கும். கருமங்களில் நின்றுமுள்ளது. இனி ஹல்வாவைத் தின்னுவதும், தேனைக் குடிப்பதும், ஆறின ரொட்டியைத் தின்னுவதும், இதுகளெல்லாம் புத்திக் கூர்மையை யுண்டாக்கும். இனி யாதொரு பெண்பிள்ளை ஹமலா யிருப்பது ஆணோ பெண்ணோ வென்றறிய நாடுகில், ஒரு பேனை யெடுத்து ஒரு மனிதன் கையில் வைத்து அவளின் பாலை அதில் கறந்து விடச் சொல்லவும். அப்போது அந்தப்பேன் அப்பாலை விட்டு வெளிப்பட்டால் அது பெண்ணென்றும், வெளிப்படா விட்டால் ஆணென்றும் அறிந்துக்கொள்ளவும். இனி யாதொரு மனிதனுக்கு நீர்ச் சுறப்புண்டானால் தன் ஐடலத்தில் நின்றும் ஒரு பேனையெடுத்து கோஷத்தின் துவாரத்தில் விடவும், அந்நேரமே நீரிறங்கும். சிர்க்காவும் கடல் தண்ணீரும் கூட்டி மேனியை கழுகினால் பேன்களைக் கொன்றுவிடும். சூர்தும் எண்ணையை தேய்த்தால் பேன் மாளும். பின்பு பிடியாது.

எறும்பின் பயான்.

(எறும்பாகிறது) ஒன்றுக்கொன்று புணராது. எக்கிலும் சிறிதாகிய ஒரு வஸ்து பூமியில் விழும். அது வளர்மையாய் முட்டையாகும் அதில் நின்றும் பிறக்கும். அதற்கு திங்கை தேடுவதில் ஹீலாவுண்டும். மழைகாலத்துக்காக கோடைகாலத்தில் ஜீவனத்தைத் தேடிச் சேர்த்துக்கொள்ளும். வித்து முளைப்பதை பயந்தால் ஒவ்வொரு வித்தை இரண்டாய் பிளந்து போடும், கொத்தமல்லியைத் தவிர. அதை நாலாய்ப் பிளக்கும். ஏனெனில் அது ஒவ்வொரு பிளப்பும் முளைக்குமென்று அறிந்திருப்பதால் ஈரத்தால் பூத்துப்போவதை பயந்தால் பூமியின் வெளியில் கொண்டுவந்து பரப்பிப் போட்டுவைக்கும். அதில் மிகுந்தது இரவில் சந்திரனின் பிரகாசத்தில் போடும். ஜீவனத்தை

சேர்த்துக் கட்டுகிறது இன்னான், எறும்பு, எலி, அக் அக் இன்னான்கு ஹைவானுமே யொழிய வேறில்லை என்றும் வந்திருக்கிறது. இனி அதற்கு ஆறுகாலுண்டு. அந்தக்கால்களால் பூமியைத் தோண்டி பட்டணங்கள் உண்டாக்கிக் கொள்ளும்.

மழைத்தண்ணீர் செல்லாத தட்டு தட்டுகளாகவும், ஒரு வருக்குமேல் ஒரு வராகவும் கட்டிக்கொள்ளும். தானியங்களின் பேரில்நாத்தை பயந்ததற்காக தன்னுடைய ஜடலத்தின் கனத்திலும் ஒட்டிக்கு ரெட்டியும் அதிலு மதிகம் சுமப்பது எறும்பைத்தவிர வேறொரு ஜெந்துமில்லை. சிலநாள் பேரிச்சம்பழத்தின் கொட்டையும் வருத்தப்பட்டு சுமக்கும். அதைக்கொண்டு அது பிரயோஜனம் பெறமாட்டாததா யிருக்கிறதுடனே அதேனால் அவ்வளவு அவேட்கைக் கொண்டிருப்பதற்காக அது சில வருஷங்களுடைய ஒஜீ பணத்தை அது சேகரஞ்செய்யும். அதற்கு வாழ் நாள் ஒரு வயதைக் காண மிருதமில்லை. இன்னும் அதிலொரு வகை சுலை மானி யென்றும் இன்னுமொருவகை புலி, எறும்பென்று மூன்டு. அதின் முப்புறமாகிய முகம் புலியின் முகம் போலும் அதின் பின் புறமானது எறும்பைப் போலுமாம்.

ஹதீது.

மூசா அலைஹிஸ்ஸலாம் கேட்டார்கள், நாயனே ஓர் வூருடையவர்களை அவர்கள் செய்தபாவத்தினால் அதாபு செய்கிறாய். அவர்களின் உனக்கு வழிப்படத்தக்க பாவஞ்செய்யாத நல்லடியார்களும் இருக்கிறார்களே யென்று கேட்டார்கள். அதற்காக அவர்கள் பேரில் கடிசான சூட்டை சாட்டிவித்தான். அவர்கள் காத்தாருவதற்காக ஒரு மரத்தின் தாளாலே நிழலில் போய்ஒதுங்கி நித்திரைக் கொண்டார்கள். அவ்விடத்தில் எறும்பு பட்டணம் உண்டாயிருந்தது. அவர்களுக்கு தூக்கம் மிகைத்தபோது ஓர் எறும்பானது அவர்களைக் கடித்தது. அவர்கள் அதைக்காலால் தேய்த்துக் கொன்று போட்டார்கள். அவ்வீடுகளையும் நெருப்பால் சுட்டுக் கரித்துப் போட்டார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா இதைக் கொண்டு அறிவித்தான், கடித்ததொன்றும் நீர் அனைத்தையும் கொன்றீரேயென்றார். ஆனதால் அல்லாஹுத் தஆலா வஹியறிவித்தான். அவனில் நின்றுமுள்ளவேதனையாகிறது அவனுக்கு வழிப்பட்ட நல்லடியாரையும் வழிப்படாத பாவியையும், அடைய

வளையத்தான் செய்யும். எங்கிலும் அவ்வேதனை யானது வழிப்பட்ட நல்லடியாருக்கு றஹ்மத்தாகவும், அப்புறவாகவும், பரக்கத்தாகவுமா யிருக்கும். வழிப்படாதப் பாவிகளுக்கு நிக்காகவும், வேதனையாகவும், அதாபாகவுமாயிருக்கும். நெருப்பில் கரித்து அதாபுசெய்கிறது அவர்களுக்கு ஜாயிதா யிருந்தது. அல்லாஹுத் தஆலா அவர்களை வம்பித்தது, ஒன்றுக்கு மிருதத்தை கரித்ததின் பேரிலே அல்லாது கரித்ததின் பேரிலல்ல. நமது மார்க்கத்தில் ஜாயிதல்லை ஹறாம். ஏனெனில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், யாதொரு ஹைவானையும் நெருப்பால் கரிப்பதை விட்டும் விலக்கினார்கள், ஆனால் பழிக்குப் பதில் ப்ழிவாங்குவதிலேயே யொழியவேறில்லை.

பிரயோஜனங்களாவது.

அதின் முட்டையை எடுத்து உடைத்து ஜடலத்தில் தேய்த்தால் அத்தலத்தில் முடிமுளையாது. அதை ஒருகூட்டத் தாருக்கிடையில் தூவினால் பிரிவு பிரிவாய் பிரிந்துப்போவார்கள். அதில் ஒரு திர்ஹத்திடை யாதொருவனுக்கு குடிப்பிவித்தா லவனுடைய கீழ்புறத்தை உடைய தனம் பெறுவான். (எலீனி) மிருதமாய் காத்திரங்கும். அடக்கமுடியாது. அதின் வழியாகிற தவாரத்தை சாணியாலடைத்தால் அங்கே தரித்திருக்காதே யோடிவிடும். அதைக் காந்தகக்கல்லா லடைத்தால் மாண்டுபோம். கீலை யொழுக்கினும் அதுபோலவே மாறும். கெந்தகத்தை இடித்து அதில்தூவினால் ஹலாக்காய்ப்போகும். ஹைறுக்காரியின் பிடவைத்துண்டை யாதொரு வஸ்துவினுளாலே வைத்தால் அதை எறும்பு மூடகாது. நெடுகமாகிய 7-எறும்பை யெடுத்து சீசாவிலடைத்து அதனுடன் சண்பக எண்ணையை நிறைத்து அதின் வாயையடைத்து ஓரிரவும் பகலும் குப்பைதலத்தில் புதைத்து அப்பாலதை யெடுத்து அந்த எண்ணையைத் தெளித்து கோஷத்திலும், அதின் மேலாலுள்ள தலத்திலும் பூசினால் தாதை எழுப்பிவிக்கும், வேலை யிருக்கும், சந்தோஷம் காண்பான்.

நூலாம்பூச்சியின் பயான்.

நூலாம்பூச்சியாகிறது எட்டுக் காலும், ஆறு கண்ணும் அதற்குண்டாம். துவர்க்கத்தில் சிறிய புழுப்போல் பிறக்கும். மூன்று நாளைக்குள் ஊரத்து நிறப்பமாய்ப் பூச்சியாய்விடும்.

ஹிக்காயத்து.

செய்யிதினா அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் றிவாயத்து வருகிறது, அவர்கள் திருவுளமானார்கள். உங்களுடைய வீடுகளை நூலாம் பூச்சியுடைய நூல்களைவிட்டும் துப்புரவாக்கிக் கொள்ளுங்கள். ஏனுனுலதை வீட்டில் விட்டு வைக்கிறது மிடுமையை வருத்திவிக்குமென்றார்.

முன்னுள்ள காலத்தில் ஒரு பெண்பிள்ளை ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். தன்னுடைய வேலைக்காரனை விட்டு நெருப்புக் கொளுத்திக்கொண்டு வாவென்றாள். அவன் வெளிப் புறப்படவும், வாசலில் ஒரு சுவால் செய்கிறமனிதன் நின்றான். அவனிவனைப் பார்த்து இந்தப் பெண்பிள்ளை என்னகுழந்தையைப் பெற்றாளென்று கேட்டான். அதற்கு இவன் பெண் குழந்தை யென்றுச் சொன்னான். அப்போதவன் சொல்லுவான், அந்தக் குழந்தை மௌத்தாக மாட்டாது, நூறு ஆண் பிள்ளைகளைக் கொண்டு அழிச்சாட்டியஞ் செய்கிறவரைக்கும், (ஸினா)சினா செய்கிறவரைக்கும். இன்னும் தன்னுடைய கூலிக்காரனுக்கு வாழ்க்கப்படுவாள். அவள் மௌத்தாகிறது நூலாம்பூச்சியைக் கொண்டாயிருக்கும் மென்றான். அப்போதிவன் எண்ணினான் இது நூறு பேர்களைக்கொண்டு அழிச்சாட்டியஞ் செய்தபின் நாமிவளை கலியாணஞ் செய்கிறதா வென்றும், நமக்கது சரியல்ல வென்றும், நாமிதைக் கொன்றுப் போட வேணு மென்று சொல்லிக்கொண்டு இல்லுள் புகுந்து கத்தியை எடுத்து அக் குழந்தையின் வயிற்றைப் பிளந்து ஒருபாலில் எறிந்துவிட்டு வெளிப்பட்டுக் கப்பலிலேறி யோடிப்போய் விட்டான். பின்பு தாய் போய் குழந்தையைத் தேடியெடுத்து வயிற்றைத் தைத்து, மருந்து போட் டாற்றி சுத்தமாக்கினாள். அது வளர்ந்து அக்காலத்து பெண்களுக் கெல்லா மிது நிரம்ப அழகும் வடிவு சவுந்தரியமுள்ளதாயிருந்தது. பின்பு பாலிகாகி 18-பிராயத்

தன் ஓர் கடல் கரையிலுள்ள ஊரில்போய் தாசித்தொழிலைச்செய்து நாள் கழித்துக் கொண்டிருந்தாள். அவளிப்படியிருக்க அந்தக் கூலிக்காரன் ஓர் தேசம்போய்க் கனமுதலும் சம்பாதித்துக் கொண்டு புறப்பட்டு அக்கடல் கரையிலுள்ள ஊரில்வந்து சேர்ந்து அவ்விடத்திலொரு கிழவியிடத்தில்போய் எனக்கு அழகாகிய ஒரு பெண் பேசிக்கொண்டு வாவென்றான். அவள் சொல்வாள் இவ்விடத்தில் ஒரு பெண்ணிருக்கிறாள். இக்காலத்தில் அவளைப்போல் அழகியவர்கள் எங்குமில்லை, அப்படிக்கொத்த அழகுள்ளவள் எங்கிலும் கொஞ்சம் கெட்டச்செயலவளிடத்தில் உண்டுமென்றாள். அப்போது அந்த மனிதன் சொன்னான், அந்தப்பெண்ணைக் கூட்டிக்கொண்டு வாவென்றான். அந்தக் கிழவி அவளிடத்தில் போய் இவ்வரலாற்றைச் சொல்லவும், அவள் சொல்வாள், நல்லது நான் அச்செயலைவிட்டும் தவுபாச்செய்து மீண்டு விட்டேன் என்றாள். அம்மொழியைக்கேட்டு கிழவி அதற்குத்தக்கபடி சொல்லி சம்மதமாக்கி, இருவருக்கும் கலியாணஞ் செய்துவித்தாள். இவர்கள் இரண்டுபேரும் வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள். ஒரு தினத்திலவரவர் பூர்வ வரலாற்றைப் பேசிக் கொண்டிருந்ததில் அவன் அச்சோசியன் சொன்னதைசொன்னான். உடனே இவள் நான்தானென்றாள். தன்வயற்றையும் திறந்துக் காட்டினாள். பின்பு சொன்னாள் நான் அழிச்சாட்டியம்செய்யத்தான் செய்தேன். நூறுபேரென்றும், அதிகமென்றும் குறைவென்றும் நானறியேன் என்றாள். அப்போதவன் சொல்வான் உன்னுடைய மௌத்தின் சபபாவது நூலாம் பூச்சிக் கடிக்கிறதுக்கொண்டா யிருக்குமென்று அறிவித்துயிருக்கிறான் என்று சொல்லிவிட்டு, அதற்காக காட்டில் மூத்தவெளியில் ஒரு மேடை செய்து துவாரமில்லாமல் ஒரு பங்களாகட்டி அதில் வைத்திருந்தான். ஒருநாளைய தினம் ஒருநூலாம் பூச்சியாகிறது அம்மேடையின் முகட்டில் வந்திருந்தது. அப்போதவன் சொன்னான் இதுதான் உன்னைக்கடித்துக் கொல்லுகிற பூச்சியென்று சொல்லியதைக் கீழே தள்ளினான். அப்போதவள், இதுதானா என்னைக் கடித்துக் கொல்லுகிறது. இது என்னைத் தவிர வேறு எவரையும் கொல்லாதென்று சொல்லிக்கொண்டு எழும்பிப்போய்த் தன்னுடைய காலின் பெருவிரலாலதை மிதித்தாள். உடனே அது கடித்தது. அவ்விஷம் கல்பிலே காலுக்கறுத்து அதினாலே மௌத்தாய் விட்டாள். அம்மேடையும் தமரில்லாப் பங்களாவும் தக்கிரைத்

தட்டி வைத்ததில்லை. ஆனதால் அல்லாஹுத் தஆலா குறஆனிலேசொன்னான், நீங்கள் எங்கேயிருந்தாலும் உங்களை மௌத்து எத்திக்கொள்ளும். அறணிப்பாய கோட்டைக்குள் தமரில்லாமல் கருங்கல்லினால் கட்டிக்கொண்டு புகுந்திருந்தாலும் சரியே மௌத்து விடமாட்டாது, வந்து பிடித்துக்கொள்ளும்.

ஹதீது.

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒவ்வொரு வித்தடங்களின் பேரிலு மதைதின்பவனுடைய நாமம் தரித்திருக்கிறது. இன்னும் ஒவ்வொரு பெண்பிள்ளை படங்களின் பேரிலும் அவளை நிக்காஹு செய்கிறவனுடைய பேருண்டாயிருக்கிறது வென்றார். (ஹாக்கின்படி அதைத் தின்னுகிறது ஹறாம்) அது அருவருப்பாயிருக்கிறதற்காக வேண்டி ஹறாமாக்கப்பட்டது.

பிரயோஜனங்களாவது.

நூலாம் பூச்சியின் நூலை ஈரமாகிய காயங்களில் மேனியின் வெளியில் வைத்தால் வலியன்றியே குணமாகும், ஓடுகிற இரத்தத்தின் பேரில் வைத்தால் அதை நிறுத்தும். பேதகமான வெள்ளியின் பேரில் தேய்த்தால் ஊத்தைப் போக்கிவிடும். ஒழிஞ்சவீட்டிலுள்ள நூலையெடுத்து புகைப்பிடித்தால் சுரம் காய்ச்சல் நீக்கும்.

பாயிதா.

மூன்று பேர்கள்பேரில் நூலாம்பூச்சி நூல்வீசி மறைத்தது 1-வது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மலைப்பொதும்பி லிருக்கும்போது 2-வது அப்துல்லாஹிப்னு அனீஸ் றலியல்லாஹு அன்ஹுவை காலிதில்ஹுதலிய்யை வெட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மனுப்பி வைத்தார்கள். அவர்கள் அவன் தலையைவெட்டி வைத்துக்கொண்டு எதிரிகளுக்குப் பயந்து ஒரு மலைப்பொதும்பில் புகுந்து இருந்தார்கள். அப்போதும் அந்நூலாம்பூச்சி அவர்கள்மேல், நூல்வீசி மறைத்து வைத்தது. எதிரிகள் கண்ணுக்குத் தெரியாமல் வந்துத் தேடிப் பார்த்துப் போய்விட்டார்கள். பிறகு அவர்கள் அதில் 18-நாள் வரைக்கும் அம்மலைப் பொதும்பில் மறைந்திருந்து வந்தார்கள். இனி 3-வதுசெய்பிநுறூஹானைசன் றலியல்லாஹு அன்ஹுடைய

புத்திரர் அலியவர்கள் மகன் சைது றலியல்லாஹு அன்ஹு அவர்களை உர்யானாக கழுவில் போடப்பட்டிருந்தது. அப்போது இப்பூசியானது அவர்களின் அவ்றத்தின்பேரிலும் நூல்நூத்து விசியது. அவர்களை 4-வருஷம் கழுவில் போட்டிருந்தது. கிப்லாவை மாரிமூகம் திருப்பிவைப்பார்கள். அக்கம்பு கிப்லாவுக்கு நேராகவே திரும்பி நிற்கிறது. இப்படியே இருந்தது. அப்பால் அவர்களையும் அக்கம்பையும் நெருப்பில் கரித்து விட்டார்கள் (றஹ மதுல்லாஹி ஆலிஹிவனபஸிஹு பிடலூமிஹி.)

இன்னும் தாவூது அலைஹிஸ்ஸலாமை ஜாலூத்து ராஜன் தேடின நேரத்திலும், அவர்கள்பேரிலும் நூல்நூற்று மறைத்து வைத்தது.

இராஜாளியின் பயான்.

(இராஜாளி) என்பது ஐவகையி லொன்றாயிருக்கும். (ஹறாக் மின்படி அதைத் தின்னுகிறது ஹறாம்.

பிரயோஜனங்களாவது.

அதன் பித்தைக் கண்ணிலஞ்சனமிட்டால் நீர் வடிகிறதை மாற்றும், அதின் எச்சத்தை ஜலத்தில் கலக்கி பெண்பிள்ளை குடித்தால் கெர்பத்துக்கு உதவியாயிருக்கும், மலடாயிருக்கினும் சரியே.

முதலையின் பயான்.

முதலையாவது உடும்பின் ரூபத்துப்போலாயிருக்கும், புதுமையானது வாய்விஸ்தீரணமானது. அதற்கு மேலே 20 பல்லும் கீழே 40-பல்லும் அதுகளுக்கிடையில் வட்டமாகிய சிறிய பற்களுமுண்டாயிருக்கும். இன்னும் நெடுகமான நாவும் ஆமையுடைய முதுகைப் போலுமான முதுகும், நெடுகமான வாலும், நான்கு காலு முண்டு. இது மிஸ்றுடைய நீலாத்திலே மிகுதமுண்டு. ஹிந்தஸ்தான் கடலிலு முண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜிமாவை நாடினால் ஆணும் பெண்ணுங்கரையில் கரையேறும். பெண்

மல்லாந்துகிடக்கும். ஆண் மேலாய்ப் புணரும். அதுதீர்ந்தால் புரட்டி விடும். ஏனெனில் கைகால்கள் கட்டையானதால் தன்னாலே புரள ஏலாது. அப்படி புரட்டாமல் கிடந்துவிட்டால் அப்படியேகிடையில் முட்டையிடும். அதில் நின்றும் தண்ணீரில் விழுந்தது முதலையாகவும், கரையிலிருந்துவிட்டது சகங்கூழுகவுமாகிவிடும். இனி முதலையின் கருமத்திலுள்ளது குளிர்காலம் நான்குமாதமும் தண்ணீருள்ளே மறைந்து கிடக்கும். கடல்நாய்அதற்குப் பகையாயிருக்கும். அது உறங்கினால் வாயைப் பிளந்திருக்கும். அப்போது இந்த நாய் கழிமண்ணிற் புரண்டு காய்ந்துக்கொண்டு அதின் வாயில் புகுந்து குடலைத்தின்று வயற்றின் மடிப்பைக் குடைந்துக் கொன்றுப் போட்டு வெளியில் வந்துவிடும். இப்படித்தான் கிரிப்பிள்ளையுஞ் செய்யும். இன்னும் வருகிறது, அதற்கு 60-பல்லும் 60-நரம்புமுண்டு, 60-தரம்புணர்ச்சிச்செய்யும் 60-முட்டையிடும். 60-வயது ஜீவித்திருக்குமென்று வருகிறது. இனி இதற்கு மலபாதையில்லை. ஆனால் வாயாலேதான் மலபாதையாகும். அதினால் வாயில் புழு உண்டாகி வேதனைச்செய்யும். அதனால்தான் கரையில் வந்து வாயைப் பிளந்துக்கொண்டிருக்கும். கத்காதுயென்ற ஓர் பறவை இரைத் தேடிவரும். அதின் வாயிற் புகுந்துப் புழுக்களைத்தின்னும் இதற்கு ராஹத்துண்டாகும். அப்போது அதைத்தின்ன நாடி வாயை மூடும். அதினிறகிலல்லது சிரசில் முள்ளு முளைத்திருக்கும். அதுவாயில் தைக்கும். அது வாயைபுழக்கும், அதுகள் ஓடிப் போகும், இதற்காத்தான் ஓர்உவமை முதலைக்குக் கூலிக்கொடுத்தது போல் கூலிக்கொடுப்பானுவும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (ஹுக்மின்படி அதைத் தின்னுவது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

அதின் கண்ணைக் கண்வலிக்குவலதுக்குவலதும், இடதுக்கு இடதுங்கட்டினலப்பவே சுவாத்தியமாகும். இனி அதின கொழுப்பை மெழுகுடனுருக்கித் திரியாக்கியிரவில விளக்கெரித்தால் தவளைகள் சப்தமிடாது. இனி அதின கொழுப்பை வலியுள்ள காதிலொழுக்கினால் குணமாகும். இனி அதைத் தா மாய் ஒழுக்கினால் செவிடுக்குப் பிரயோஜனங் கொடுக்கும். இனி அதின் பித்தைக் கண்ணில் அஞ்சன மிட்டால் கண்ணிலுள்ள வெள்ளையைப் போக்கும். இனி அதின் வலது பாகத்திலுள்ள ஒருபல்லை காலில்

கட்டிக்கொண்டால் ஜிமாஉ அதிகமாகும். இனி அதின் ஈரலைமூஷல் வலிக்குப் புகைப்பிடித்தாலது நீங்கிப்போகும். இனி அதின் தோலித்துண்டைப் போர்கொடாவின் நெற்றியில் கட்டினால் மிகைத் பிக்கொள்ளும் இனி அதின் கொழுப்பைக் காச்சல்காரனுக்குத் தேய்த்தாலக்காச்சல் குணமாகும். இனி அதினீரலைப்பயித்தியக் காரனுக்குப் புகைப்பிடித்தால் பயித்தியம் நீங்கும்

ஆமையின் பயான்.

கரையிலுள்ள ஆமையானது கரையில் முட்டையிடும். அதின் கீழ்பால் சூடில்லாததால் முட்டையைக்கார்க்காது, ஆதலால் அதனளவில் பார்த்துக்கொண்டேயிருக்கும். அதனால் குஞ்சுப் பிறக்கும். இது இப்படியானால் காலிகாகிய அல்லாஹுத்தஆலா தன்னுடைய முகேபினுகிய அப்தளவில் கிருபைக்கொண்டுப் பார்த்தால் கருமம் எப்படியாயிருக்கும். நாளொன்றுக்கு 360-தரம் பார்ப்பானென்று ஹதீதில் வந்திருக்கிறது. சிலகால் அது பாம்பின்வாலைப் பிடிக்கும், அதின் தலைத்தெரிக்கும், அது பாம்பைதின்கிறதுகொண்டு அவழ்க்கைப்போடப்பட்டதாயிருக்கும். அதின் ஆணுக்கு இரண்டு கோஷமும், பெண்ணுக்கு இரண்டு அபமும் உண்டு. இனி கடலிலுள்ள ஆமையானது இரண்டுவகையுண்டு, ஒவ்வொன்றும் ஒரு ஒட்டகை சுமை அளவும் பருக்கும். அதின் ஆண் பெண்ணை ஜிமாவுக்கு அழைத்தாலப்பெண் அதற்கு வழிபடாது. அதினுலது வாயில் ஒரு பூண்டைக் கொண்டுவரும் அப்பூண்டின் குணமாவது அதை வைத்திருந்தவனுக்கு யாவரும் வழிப்படுவார்கள். அதைக் கொண்டுவந்தவுடன் அப்பெண்ணமை வழிப்படும் (ஹுக்மின்படி அதைத் தின்னலது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

அதனிரத்தத்தை கைகால்களில் தேய்த்தா லுறுப்புகளின் வலிகளைக்கண்டிக்கும். அதினிரச்சியைத் தின்றாலு மதுபோலாம். வலித்த உறுப்பிலதில் கின்றம் அதற்கு நேரான உறுப்பைக் கட்டினாலும் வலியொடுங்கும். இனி அதின் முதுகு ஓட்டில்நின்று மூடி செய்துக் கொடாரத்தை மூடினாலதிலிருக்கும் காலமெல்லாம் அது கெடியாது.

சகங்கூரென்றமீனின் பயான்.

(அதைத் தின்னுவது ஹலால்.) முதலையில் நின்றும் பிறக்கிறது முண்டு. ஆனதால் அது ஹறாம், இனி நாதுக்கு மிகவு மனுகூலமா யிருக்கும்.

ஸமகுமீனின் பயான்.

நீர்வாழ் ஜெந்து. அது அநேக வகையுண்டு, இனி அதின் பெருப்பத்தால் அதின் துவக்கமும் கடைசியும் எத்திக் கொள்ளப்படாததும் இன்னும் அதின் சிறுப்பத்தால் கண்ணில் காணப்படாதது மிதுண்டாம். புணர்ச்சியாலும் பிறப்பதுமுண்டு புணர்ச்சியன்றியே மண்ணில் நின்றும், மணலில் நின்றும் பிறப்பது முண்டு. அதின் முட்டை வெள்ளைக்கரு மஞ்சள் கருவன்றியே ஓரே நிறமாயிருக்கும். (ஹுக்மின்படி மீன் அடங்கலும் ஸபஹன்றியே தின்னுவது ஹலால்.)

ஜேல்.

மீனுக்கு மலமில்லை, குதிரைக்கு ஈரலில்லை, ஒட்டகைக்குப் பித்தில்லை, நீமூழ்கிப் பக்ஷிக்கு மூளையில்லையென்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

பிரயோஜனங்களாவது.

பச்சையாகிய மீனை ஈரமாகிய உள்ளியுடன் சேர்த்து சுட்டுத் தின்றால் குவ்வத்தை எழுப்பிவிக்கும். மணியை அதிகப்படுத்தும் சூட்டோடே தின்றால். இனி லாகிரி கொண்டவன் மீனை முகர்ந்தால் தெளிச்சலுண்டாகும். இனி மீனின் பித்தும், கடல் ஆமையின் பித்தும் ஒன்றாய்க் கலந்து கடிதத்தில் இரும்புகலங் கொண்டு எழுதினால் இராவில் தங்கத்தைப்போல் காணப்படும். அதின் பித்தைக் குடித்தால் நெஞ்சுத் துடிப்புமாறும்.

மீன்களின் பயான்.

நூன் என்பது மீனுக்குப்பேர். துன்னூன் என்பது யூனுச நபிக்குப் பேர். ஏனெனில் அவர்களை மீன் முழுங்கினது, அதின்

வயற்றி லிருந்துகொண்டு 'வன்லா இலாஹ இல்லா அந்த சுபுஹானக்க இன்னீ குந்து மினல்லாலி மீன்' என்று கூப்பிட்டார்கள். அல்லாஹுத் தஆலா அதைக் கபூல்செய்து ஏழு ஸாஅத்தில் மூன்றுநாள் அல்லது ஏழுநாள் அல்லது பதினுலுநாள் நாற்பதுநாள் என்று அவர்களதின் வயற்றில் தறிபட்டிருந்ததைக் குறித்துப் பல சொல் வந்திருக்கிறது, அப்பா லவர்களை வெளியாக்கினுன்.

பாயிதா.

ரூமுக்கு அரசன் மஆவியா றலியல்லாஹு அன்ஹு அவர்களளவிலே சில மஸ்அலாவைத் தொட்டும் கேட்டுக் கடுதாசி எழுதினுன், அதாவது (அப்ளலான) கலாமென்ன, அதற்கு இரண்டாவதென்ன? மூன்ருவது நாலாவது ஐந்தாவதென்ன? அல்லாஹுத் தஆலா இடத்தில்கல்குகளில் மிகவும் சங்கையானவர்யார்? இன்னும் பெண்பிள்ளைகளில் அல்லாயிடத்தில் மிகவும் சங்கையானவர் யார்? இன்னும் கல்குகளில்நின்னும் நான்குபேர்கள், அவர்களுக்கு ரூஹுண்டும் கொர்ப்பக் குவளரையிலே தரித்துப் பிறக்கவில்லை அவர்களார்? இன்னும் கபுரு கபுருடையவரைக் கொண்டு நடந்தது அந்த கபரேது, மஜர்றத்து எனபதென்ன? கவுசென்பதென்ன? ஒரு தலமிருக்கிறது, அத்தலத்தில் பொழுதுமுகங் கண்டது, அதற்கு முன்னும் அதற்குபின்னும் பொழுதுமுகங் காணவில்லை, அது எந்ததலம் என்று கேட்டு கடுதாசிஎழுதினுன். அதை மஆவியா றலியல்லாஹு அன்ஹு வாங்கிவாசித்தபோது நாசமாய் போவான் எழுதியிருக்கிருனே, இதற்கு ஜவாபு எனக்குத்தெரிய வில்லையே எனமுர்கள். அப்போது இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுவுக்கு இதைக் குறித்து எழுதுங்களென்று மற்றும் பேர்கள் சொன்ஞர்கள். அந்தப்படிக்கு அவர்களுக்கு எழுதவும், அவர்கள் ஜவாபு எழுதினுர்கள், அப்ளலான கலாமாகிறது 'லாஇலாஹ இல்லல்லாஹு' என்கிற இக்லாஸுடைய கலிமாவாயிருக்கும். யாதொரு அமலும் அதுகொண்டே ஒழிய கபூல் செய்யப்படாது. அதை யடுத்ததாகிறது லாத்துல ஹக்காகிய 'சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி' என்றதாயிருக்கும். இனி அதை யடுத்ததாகிறது 'அல்ஹம்து லில்லாஹி' என்ற சொல்லான ஷுக்குடைய கலிமாவாயிருக்கும். பின்பு அதை அடுத்ததாகிறது

‘அல்லாஹு அக்பர்’ என்றதாயிருக்கும். இனி ஐந்தாவதாகிறது ‘லாஹௌல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹி’ என்றதாயிருக்கும். அல்லா யிடத்தில் கல்குகளில் மிகவும் சங்கையானவனாகிறது ஆதம் அலைஹிஸ்ஸலாமா யிருக்கும். அல்லாஹுத் தஆலா தன்னுடைய கைக்கொண்டு அவர்களைப் படைத்து அஸ்மாக்க ளடங்கலையும் அவர்களுக்குப் படித்துக்கொடுத்தான். இனி பெண்களில் மிகவும் சங்கையானவர்களாகிறவர் மர்யமா யிருக்கும். தனது அபத்தை பேணிக்கொண்டனர். அல்லாஹுத் தஆலா தன்னுடைய ரூஹில் நின்றும் அதிலே ஊதினான். கெர்ப்பத்தில் தரிப்படாதே ரூஹுடைய நால்வருமாகிறது ஆதம், ஹவ்வா, ஸாலிஹு அலைஹிஸ்ஸலா முடைய ஒட்டகை, இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாமுக்கு பித்யா வாகப்பட்ட ஆடு, ஆக இந்நான்குமாம். இன்னுமொரு சொல்லின்படி மூஸா அலைஹிஸ்ஸலா முடைய ஆஸாவை எறிந்த நேரத்திலே பாம்பாயிருந்ததே, அதுவுமாமென்று சொல்லப் பட்டிருக்கிறது. கபுருடையோரைக் கொண்டு நடந்த கபுருகிறது யூனுசு அலைஹிஸ்ஸலாம் அவர்களை முழுங்கின மீனாயிருக்கும் மஜர்றத்து என்பதாகிறது வானத்துடைய வாசலாயிருக்கும் கௌசென்ற மில்லாகிறது நூஹு அலைஹிஸ்ஸலாம் உடைய கௌமுக்குப் பின்னாலே பூலோகத்திலுள்ள பேர்கள் தண்ணீரில் ஆழ்ந்து ஹலாக்காகிறதை விட்டு மச்சம் தீர்தலா யிருக்கும் பொழுது அதின்பேரிலே கிளம்பியதற்கு முன்னும் பின்னும் அதின்பேரில் கிளம்பவில்லை. அப்படிக்கொற்ற தலமாகிறது, பனீ இஸ்ரயீல் கூட்டத்தார்களுக்காக கடல் பிளந்துக்கொடுத்தது. அந்தத் தலமா யிருக்கும் என்று, இந்தப்படி ஜவாபு எழுதி மஆவியா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அனுப்பவும், அவர்களதை ரூம் அரசனுக்கு அனுப்பினார்கள். அவனதை வாசித்துப் பார்த்துச் சொல்வான், திடனாக நான் அறிந்திருக்கின்றேன். மஆவியாவாகிறது இந்த மஸ்அலாவுக்கு ஜவாபு சொல்ல அறியமாட்டார். இந்த ஜவாபு சொல்லியது நபிப் பட்டத்தை யுடைய வீட்டில்நின்றும் ஒரு மனிதர் சொல்லியதே தவிர வேறில்லையென்று சொன்னான்.

நண்டின் பயான்.

நண்டு அதற்குப்பேர் நீர் தேளென்றும் சொல்லப்படும். அது நீர்வாழும் ஜெந்து, கரையிலும் குடியிருக்கும். அதற்கிரண்டு கண்ணும் தோளிலே யிருக்கும். வாய் நெஞ்சிலே யிருக்கும். அதற்கு எட்டுக் காலுண்டு, ஒருப்புறத்தால் நடக்கும். நீரையும், காற்றையுமொன்றாயுறிஞ்சும். வருஷத்தில் ஆறுதடவை சட்டை கழற்றும். (ஹனக்பின்படி அதைத் தின்னுவது ஹறாம்.)

பிரயோஜனங்களாவது.

நண்டைத் தின்னுதல் முதுகுவலியைக் கேட்கும், வலுவைக் கொடுக்கும். இனி அதின் தலையை யாதொருவன்பேரில் தேய்வு பிறையில் கட்டினால் அவன் உறங்கமாட்டான். இனி வளர் பிறையில் கட்டினால் உறங்குவான். இனி நண்டைக் கரித்து எப்படிக்கொத்த மூலத்துக்கும் அதை நிறப்பிவைத்தால் சுத்தப் படுத்தும். இனியதின் கால்களைக் கனியுள்ள மரத்தில் கட்டினால் யாதும் நோயன்றியே உதிர்ந்துபோகும். நண்டாகிறது பாம்புக் கடிக்குப் பிரயோஜனம் கொடுக்கும்.

தவளையின் பயான்.

தவளையாகிறது அநேக வகையுண்டு. தண்ணீரில் நின்றும் வீச்சமுடையதுகளில் நின்றும் உண்டாகும், புணர்ச்சியாலும் அதல்லாததாலும் பிறக்கும். மிகுதி மழைக்கு பின்னடியிலு முண்டாகும், மேகத்தில் நின்றும் விழுந்ததோவென்று எண்ணப் படுகிற வரைக்கும், மழைக்கும் காற்றுக்கும் பின்னடியில் மேல் முகட்டின் முதலாய் மிகுதமாய்க் காணப்படும். அது அப்படி யல்ல எங்கிலும் அந்த ஸாஅத்தில் மண்ணுடைய தபீஅத்தில் நின்றும் அல்லாஹுத் தஆலா படைக்கிறதா யிருக்கும். அதற்கு எலும்பில்லை, அது சப்தம் போடவென்றால் கீழ் மூரசைத் தண்ணீரி லாக்கிக்கொள்ளும். மேல் மூரசைத் தண்ணீரின் வெளியிலாக்கிக் கொள்ளும். பாம்பாகிறது அதின் சப்தத்தின் தலீல் கொண்டுப் போய் அதைப் பிடித்துத்தின்னும்.

பாயிதா.

ஸுப்பான் றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். அல்லாஹுத் தஆலாவை வணங்குவதில் தவளையைக்காண பிருதமாய்த் திக்று செய்வது ஒரு வஸ்துவுமில்லை யென்றார்.

தாவூது அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள், கல்குகளில் நின்றும் ஒருவரும் தஸ்பீஹு செய்யவில்லை. அப்படிக்கொத்த தஸ்பீஹா ஒறது நாம் இன்றிரவில் அல்லாஹுத் தஆலாவை தஸ்பீஹுசெய்வேன் என்று, அப்போதவர்களின் வீட்டிலுள்ள டெக்கில் நின்றும் ஒரு தவளைச் சொல்லும், ஓய் தாவூதே உம்முடைய தஸ்பீஹைக்கொண்டு அல்லாஹு தஆலாவின் பேரில் நீர் பெருமை யடிக்கிறீரோ. 70-வருஷமாக என்னுடைய நாவு அல்லாஹுத் தஆலாவுடைய திக்ரைவிட்டும் ஓட்டி உலரவில்லை என்றது. இன்னும் 10-நாளாக நான் ஒன்றும் தின்னவுமில்லை குடிக்கவுமில்லை இரண்டு கலிமாவைக் கொண்டு பருக்காயிருக்கிறதற்காக என்றது. அதென்னவென்று கேட்டதற்குச் சொல்லும் அவ்விரண்டு கலிமா வாகிறது 'யாமூஸப்பஹன் பிகுல்லி லிசானின் வமத்கூறன் பிகுல்லிம காலின்' இவ்விரண்டுமாம் என்றது.

ரிவாயத்து.

அனஸ றலியல்லாஹு அன்ஹுவைத்தொட்டும் ரிவாயத்து வருகிறது, தாவூது அலைஹிஸ்ஸலாம் அல்லாஹுத் தஆலாவை நாம் புகழ்ந்ததிலும் அதிகம் ஒருவரும் புகழார்களென்றெண்ணினார்கள். அப்போது ஒரு மலக்கு இறங்கி மிஹறாபி லிருந்துக் கொண்டு, ஓய்தாவூதே! இந்தக்குளத்தில் கிடக்கிறதவளை எதைக் கொண்டு சப்தம் போடுகிறது நீர் விளங்கிப்பாரும் என்றார். அப்போது அவர்கள் காது தாழ்த்திக் கேட்டார்கள். அது சொல்லிற்று 'ஸுப்ஹானக வபிஹம்திக முன்தஹா இல்மிக' என்று சொல்லிற்று.

அலிறலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், யூனுசு அலைஹிஸ்ஸலாமுடைய காலத்தி லொருதவளை யுண்டாயிருந்தது. அதற்கு நாலாயிரம் வயதைக்காண அதிகவயதுள்ளது. தஸ்பீஹை விட்டும் சடையவில்லை. அப்போது யூனுசு அலைஹிஸ்ஸலாம்

கேட்டார்கள், நாயனே! அது என்னச் சொல்லி தஸ்பீஹு செய்கிறதுவென்று கேட்டதற்கு சொன்னான், ஸுப்ஹானக அரு ஆபமன்காலஹா மின்கல்பிக்க வசுபுஹானக்க மதா இல்மிக வஅறவஜ்ஹிக்க வஸினத்த அர்ஷிக்க வமிதாத கலிமாத்திக என்று சொல்லுகிறது என்றார்.

இப்னுசினா சொல்லுகிறார், ஒரு வருஷத்தில் தவளைகள் மிகுந்து ஆதத்தைக் காணவும் அதிகமாயிற்றானால் அதின்பின்னடியில் உபா விஜயமாகும் என்றார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், தவளைகளைக் கொல்லாதேயுங்கள். ஏனெனில் அது சப்தம் யிடுகிறதாகிறது தஸ்பீஹாயிருக்கும் என்றார். (ஹூக்மின்படி அதைக்கொல்லுவதை விட்டும் விலக்கவந்ததற்காக அதைத் தின்னுவது ஹறாம்.)

இன்னும் அது சாவுகிறதுகொண்டு தண்ணீரை நஜீசாக்கி வைத்திடும் புகஹாக்களிலொருவர் சொன்னார், தவளையை ஹறுமாக்கப்பட்டதெல்லாம் ஏனெனில் வானம் பூமியைப் படைக்கு முன்னாலே அல்லாஹுத் தஆலாவுடைய அர்ஷு அதின் பேரிலாயிருந்ததே அப்படிக்கொத்த தண்ணீரிலே அது அல்லாஹுத் தஆலாவுக்கு அலைபாகமாயிருந்ததே ஆனதற்காகத்தான் என்றார்.

பிரயோஜனங்களாவது.

தவளையின் கொழுப்பை பற்களில் வைத்தால் வலியன்றியே அதைக் களைந்துவிடும். கரையின் தவளையின் எலும்பைக் கிடாரவாயில் வைத்தால் கொதியாது. இனி அதின் காலை ருலை வலியுள்ளவனுக்கு கட்டினால் வலிநீக்கும். இனி யாதொரு பெண்பிள்ளை தண்ணீரிலுள்ள தவளையைப் பிடித்து வாயைப் பிளந்து மூன்று தரம் துப்பி அதைத் தண்ணீரில் விட்டு விட்டால் ஹமலாவாள். இன்னுமொரு சொல்லில் ஹமலாகாளென்றும் சொல்லப்படுகிறது. இரண்டையும் சோதித்தறிந்துக் கொள்ளவும். அதை ஒடித்து சிலவிஷகடிவாயில் வைத்தால் அப்பவே குணமாக்கி வைக்கும். இனி அதினுடைய காவியத்தின் புதுமையில் நின்று மூள்ளது அதன் தலையிலிருந்து கீழளவும் இரண்டாய் பிளந்து யாதொரு பெண்பிள்ளை அதைப்பார்த்துக் கொண்டிருந்தாளாகில் அவளுடைய ஷஹவத்து மிகைக்கும். ஆண்பிள்ளையளவில் சாயுதல்

மிருதமாம். இனி அதின் நாவை தூக்குகிற பெண்பிள்ளை பேரில் கட்டினால் முழிப்பில் செய்த செயலெல்லாம் பேசிக்கொண்டுக் கிடப்பாள். இனி நாவை ரொட்டியிலிட்டு களவைக்கொண்டு சந்தேகமாக்கப் பட்டவனுக்குத் தின்னக் கொடுத்தால் அந்த களவு எடுத்தவன், எடுத்தேன் என்று ஒத்துக் கொள்வான். இனி அதின் இரத்தத்தை முடியைப் பிடுங்கி அத்தலத்தில் தேய்த்தால் ஒருகாலமும் முடி முளையாது. அதை முகத்தில் தேய்த்தால் மனிதரெல்லாம் உவப்பார்கள். அதை மிருங்கில் வைத்தால் யாதொரு வருத்தமன்றியே பல்விழும். இனி அதைத் தாம்பாளத்தில் விளக்கை வைத்து தண்ணீரின் மேல் வைத்திட்டால் அதுகள் வாய் மூடிக்கொள்ளும் சப்தமிடாது. தவளையைப் பிடித்து உள்ளிலுள்ள வையெல்லாம் நீக்கி எறிந்து விட்டு உலர்த்தி இடித்து நஞ்சுண்டவனுக்கு குடிப்பிவித்தால் அதைப்போக்கி சுவாத்தியமாக்கி வைக்கும். (இன்ஷா அல்லாஹுத் தஆலா.)

அட்டையின் பயான்.

அட்டையென்பது தண்ணீரிலுண்டாகின்றது. சிவப்பு அல்லது கருப்பாகிய ஒரு பூச்சி. அது சரீரத்தில் கொழுகி இரத்தத்தைக் குடிக்கும். இரத்தக்கூராலுண்டாகி வலிகளுக்கும் தொண்டைக்கும் மருந்தாயிருக்கும். இன்னும் ஹதீதில் வருகிறது மருந்தில் கைமுன தாகிறது, அட்டையும் கொம்புவைத் திருஞ்சுவதுமாம் என்றும் வருகிறது. (ஷாஃபின்படி அதைத் தின்னுவது ஹறாம்.) அதை விலைக்கு விற்குதல் ஜாயிஸ், அதிலே பிரயோஜனம் உண்டாயிருக்கிறதற்காக.

பிரயோஜனங்களாவது.

அட்டையானது துஷ்ட இரத்தங்களைக்குடிக்கும். ஆனதால் கொம்புவைத் திருஞ்சுவதின் பதவியிலாயிருக்கும். சிலகால் அது தண்ணீரிலுண்டா யிருக்கும் இன்ஸானைதைக் குடிப்பான். அது தொண்டையில் கடித்துக்கொள்ளும். அப்போ ததைவெளியாக்கி வைக்கிறதற்கு வழியாகிறது, குழிநரியின் முடியைப்போட்டு புகைப்பிடிக்கவும். அப்புகைபட்டவுடனே அது விழுந்துவிடும்.

இன்னும் ஒட்டகை குளம்பைப்போட்டும் புகைப்பிடித்தாலும் விழுந்து விடும்.

கஸ்வீனி இமாம் சொல்லுகிறார்கள், தொண்டைகுழியில் அட்டை நின்றால் கள்ளின் சிர்க்காவும் மொச்சைக்கொட்டையிலுள்ள வண்டு ஒரு திர்ஹத்திடைச்சேர்த்து வாயில்வைத்து கற்கரச்செய்தால் விழுந்துப் போகுமென்றும். யாதொருஉருப்பில் இரத்தத்தை வெளிப்படுத்த ஹாக்மாக்கள்காடுகில் அப்பூச்சியைக் களிமண்ணில் எடுத்து அத்தலத்தில் விடுகிறார்கள், அதுகடித்து இரத்தத்தை குடிக்கிறது. அது விழவென்றால் உப்புதண்ணீரை தெளிக்கிறார்கள். அது விழுந்து விடுகிறது என்றும். இனி அதை வீட்டில் புகைத்தால் மூட்டைக் கொசுக்கள் போய்விடும். இனி பதை ஒரு சீசாவில் சாவுமளவு மடைத்து வைத்து அப்பாலதை பொடித்து உரோமத்தைப் பிடுங்கிய தலத்தில் தேய்த்தால் ஒருக் காலமும் முடிமுளையாது. இன்னும் சோதித்தறியப்பட்ட பாயிதாக்களில் நின்று முள்ளது, ஆறுவிகளிலும் ஈரமானசேறுதலங்களிலும் கிடக்கின்ற பெரிதான அட்டைகளைப் பிடித்து மணமானதைதான் எண்ணெயில் வாய்ப்போட்டு வைத்து சிர்காவைவிட்டு களிம்பு போலரைத்து ஆட்டு மூடியில் பொதிந்துமூல முளையில் வைத்துக் கட்டினால் நீங்கும். அதை ஈரத்தோடே பிடித்துத் தண்டில் தளமிட்டால் யாதொரு வலியன்றியே பருக்கும்.

மனிதர்களின் பயான்.

மனிதன் என்பது ஆலத்தில் ஓர் வகையாயிருக்கும்.

பிரயோஜனங்களாவது.

ஹகீம் ஜாலினூஸ் சொன்னார்கள், மனிதனுடைய முடியை கரித்து பன்னீர் தண்ணீரில் கலந்து கரிமாரியான நேரத்தில் அவளின் தலையில் வைத்தால் பேறு லேசாகும். இனி மனிதனின் மணியை வெண்குஷ்டம் படர்தாமரையில் தேய்க்கக்குணமாகும். இனி மனிதன் உமினீர் பாம்புக்கு நஞ்சாம். அதின் வாயில் மூன்றுதரம் உமிழ்ந்திட்டா லப்பவே இறந்துப்போகும். இனி மனிதனுடைய எண்ணெயை காத்துடைய இரவில் விளக்கிலூற்றி

எரித்தால் காற்று ஒடுங்கும். இனி பெண்பிள்ளையுடைய முடியை அதின் நெடுகத்தோடே கடலில் அம்முடி கரையி லொதுங்காத புறத்தில் எறிந்து விட்டால் அது தண்ணீர் பாம்பாய்விடும். இனி வருஷத் துவர்க்கத்தில் விழுகின்ற பல்லைக் கட்டிக்கொண்டவள் கெர்ப்பமாகாள். இனி மனிதன் பித்தை அஞ்சனமிட்டால் கண்ணி லுள்ள வெள்ளையை மாற்றும். இன்னும் சீரைப் பாம்பையுலர்த்திப் பொடித்து அஞ்சன மிட்டாலும் கண் வெள்ளையை மாற்றும். இனி உலர்ந்த மலத்தைப் பொடித்து வடித்து சிர்க்காவும் குளவித் தேனும் விட்டுக் குழைத்து குஷ்டத்தில் தேய்த்தால் அது நீங்கும். (பிஇது னில்லாஹி) இனி மனிதன் முடியை சிர்காவில் நனைத்து நாய்க் கடிவாயில் வைத்தால் சவாத்திய மாகும். இனி ஹைது புடவைத் துண்டை கப்பலின் பின் புறத்தில் கட்டி வைத்தால் அதில் காற்று புகுதாது. இனி பிறந்தப் பிள்ளையின் காட்டுப் பீலை உலர்த்திப் பொடித்து அஞ்சன மிட்டாலும் கண் வெள்ளையை நீக்கும். இனி பிள்ளைகளின் சுல்பத்து தொலியை உலர்த்திதுணுக்கி கஸ்தூரியும் பன்னீரும் கலந்து இரு குஷ்டத்திற்கும் குடிப்பிவித்தால் அந்த மட்டில் நின்று விடும். இனி இரண்டு கையும் காலும் ஒழுவி அதையும் குடித்தவன் மிகுதிமுஹப்பத்தாவான். இனி, சட்டை கமிஸ் இதுகளின் தண்ணீரை அறியாதே குடிப்பிக்கப் பட்டவன் மிகவும் முஹப்பத்தாயிருப்பான். இனி லக்வா, பக்க வாதம் தொட்டவனுக்கு கருப்பியுடைய மூளைப்பாலும் சன்பக எண்ணையும் சேர்த்துப் பெரிய மனிதனுக்கு ஒரு கைறூது அல்லது மிஷ்யூமிடையும் சிறுப்பிள்ளைக்கு ஒரு செல்லிடையும் நசியம் பிழிந்தால் நீக்கும். (பிஇது னில்லாஹி தஆலா) இனிபெண்களை பிறர் முகோதிருக்க நாடுமில் அவளின் கொண்டைச் சிவுதலை கரித்து சாம்பலாக்கி அதை உன் கோஷத்தின் தலையில் வைத்து அவளோடு ஜிமாவு செய்தால் அதற்குப் பின் ஒரு வரையும் விரும்பாள். உன்னைப்போலே ஒருவரையும் காணமாட்டாள். இனி இதுவாமிறத புதுமையாகப்பட்ட முஜறபாகிய சிர்றுயிருக்கும். ஆண்பிள்ளையுடைய மணியையும் இரசமும் ஒன்றுப்ச் சேர்த்து கலந்து லக்வாவுடையவனுக்கு 3-நாள் துடரூக நசியம் பிழிந்தால் அது நீக்கும். இனி புளூக்கில்லாத பிள்ளையுடையநீரை எடுத்துக் கொதிக்கவைத்து அதில் ஆட்டு முடியை முக்கி கண்ணில் வலியும் சிவப்புமுடைய கண்ணில் ஒத்திலுல் சுத்தமாகும். இனி மனிதன்

மணியைச் சுட்டோடே வெண்குஷ்டத்தில் பூசினல் அதின் நிறத்தைப் பேதகமாக்கிவைக்கும். இனி கருத்த பெண்ணுடைய மூலைப்பாலையும் குங்குமப்பூவும் சபர்சல் பழச்சதை தண்ணீரும் கூட்டி மத்தித்து வலியிடி பூவுள்ள கண்ணில் ஒழுக்கினல் அதை குணமாக்கும். ஸ்தன்யம் நிலையில் நிற்காதினல் முதலாவதுள்ள ஹைறலை எடுத்து ஸ்தன்யத்தின் தலையில் தளமிட்டால் ஸ்தன்யம் சாயாமலே நிலையில் நிற்கும். இனி சூடாகிய பச்சையான ஹைறலை கண்ணில் பூசினல் சிகப்பு வலிபொட்டுமாறும். இனி ஜலபா வென்னும் வித்தை நுணுக்கி தண்ணீரில் குழைத்து ஸ்தன்யத்தில் பூசினல் அறவே பால் இல்லாமல் வற்றிப்போகும். இனி கும்மட்டிக் காயை இடித்து லைதூன் எண்ணெயில் குழைத்து ஆட்டு முடியை ஒரு குச்சியில் சுற்றி அதிலே முக்கி ஸ்தன்யத்தின் தலையில் தளமிட்டால் பால் சுரக்கும்.

பாயிதா.

முகம் அழகாகிய சிறப்பிள்ளைப் போலே ஒரு சொருபஞ் செய்து பெண்பிள்ளைக்கு எதிராலே அவள் காணும் படிக்கு வைத்து ஜிமாவு செய்தால் பிருந்த உறுப்புகளிலே அந்த சொரூபத்துக்கு ஒப்பான குழந்தை பிறக்கும். இனி சட்டிபல் வலித்தால் பிணத்தினுடைய சட்டிப்பல்லைக் கட்டினல் குணமாகும். இனி இன்னானுடைய உமிழ் நீரை எதுவும் புசிக்கா முன் எச்சல் வாயுடன் விஷக்கடிவாயிலும் புண்ணிகளிலும் தளமிட்டால் குணமாகும். இனி மூலைப்பாலை பதேனுடன் கலந்துக் குடித்தால் ஊத்தாம் பெட்டியிலுள்ள கல்லுகளைப் போக்கி விக்கும். இனி இன்சானுடைய மூத்திரத்தைப் பேநாய் கடிவாயில் வைத்தால் மிருதமான பலன் கொடுக்கும். இனி நாய் கடிக்கப்பட்டவன் சிறப்பாகிய இன்சானுடைய இரத்தத்தை குடித்தால் அப்பவே அது குணமாய் விடும். இனி தரித்தரகங்களை கரித்துக் குடிப்பிவித்தால் மிகவும் மூஹப்பத் தண்டாம். இனி இன்சானின் சிறு நீரை குடிக்கிறது நஞ்சடைய விஷ ஜெந்து அடங்கலுக்கும் பிரயோஜனங் கொடுக்கும். யாதொரு காயமுண்டான நேரத்தில் ஒரு மனிதன் அக்காயத்தின்பேரில் சிறுநீர் செய்தால் அப்பவே இரத்த ஓட்டத்தை நிறுத்தி சுவாத்தியங் கொடுக்கும். இனி நோம் பாளியின் குவளையை காதிலொழுக்கினல் காதிலுள்ள புழுவெல்லாம்

வெளிப்படும். இனி பிள்ளை பிறந்தவுடன் தரிக்கிற கொப்பு தண்டை மோதிரத்தின் மூக்காலிக்குள்ளே வைத்து கையிலிட்டுக் கொண்டால் கூலஞ்சுவென்ற குன்மவியாதியைக் குணமாக்கும். இனி தலைப்பிள்ளையுடைய பல்லை தங்கம் அல்லது வெள்ளியுடைய மூக்காலிக்குள்ளே வைத்து அதை அணிந்தவனுக்கு குன்மவியாதி அறவே தொடாது. இனி யாதொருத்தி தன்னுடைய தலைப்பிள்ளை பெற்ற நிபாசு இரத்தத்தை தன் திரேகம் அடங்கலிலும் தளமிட்டுக் கொண்டால் அவன் ஜீவித்திருக்கும் காலமெல்லாம் ஹமலாகாள். இனி சிறு பிள்ளைகளுக்கு முதலாவது விழுகிற பல்லை பூமியில் விழுமுன் எடுத்து மோதிரத்தின் வட்டின் தானாலே வைத்து கொழுகிக் கொண்டவள் ஹமலாகாள். இனி 20- வயதை எத்தாத பிள்ளையின் மூத்திரத்தை வெங்குஷ்டக்காரன் குடித்தால் வியாதி தீரும். இனி ஹைஹு இரத்தத்தை பேராயின் கடிவாயில் தேய்த்தால் சுவாத்தியமாக்கி வைக்கும். இனி கன்னி அழிகிற வளுடைய இரத்தத்தை கன்னி அழிகிற நேரத்தில் எடுத்து ஸ்தனத்தில் பூசினால் பருக்காது.

கர்ப்பத்தின் கருத்தறிய.

யாதொரு பெண்பிள்ளைக்குக் கர்ப்பம் உண்டா அல்லது மலடியா வென்றறிய நாடினால் வெள்ளுள்ளியை இடித்து பஞ்சில் வைத்து அபத்தில் 7-நாஹத்துமட்டும் வைத்திருந்து அப்பால் அவள் வாயில் நின்று இவ்வுள்ளியின் வாடையடித்தால் மருந்து செய்வதுக்கொண்டு கர்ப்பமாவாள். அல்லாவிட்டால் இல்லை யென்று அறியவும். இனி வயிற்றில் யிருப்பது ஆணு, பெண்ணு வென்றறிய வேண்டுமாகில் அவளின் நடையை ஆருய்ந்து பார்க்கவும். நடையில் வலதுகாலை முன்னெடுத்து வைத்தால் ஆண் என்றும், இடதுகாலை முன்னெடுத்து வைத்தால் பெண் என்றும் அறிந்துக்கொள்ளவும்.

இனி உறங்குகிறவன் மூகத்தில் கபுரின் மண்ணைத் தூவினால் அது இருக்குமளவும், மூழிக்கமாட்டான். இனி இன்ஸானின் இரத்தத்தை சைதூன் எண்ணையுடன் கலந்து இரும்புவிளக்கில் விட்டெரித்தால் அவ்விட்டி உள்ளவர்களையெல்லாம் மூள்ளம்

பன்றியைப்போல் காண்பாய், இன்ஸானின், எறும்பைக் கட்டினால் காலாமுறை காச்சலும் குணமாகும்.

ஹிக்காயத்து.

இபுநு அதிய்யா சொல்லுகிறார், குர்ஆன் மக்லூக்கல்ல என்கிறதின் பேரில் தலீலாகிறது குர்ஆனில் 54-ம் தலத்தில் அதைத் திக்றுசெய்தால் அதில் கல்கு என்கிற லப்லுகொண்டு சரியாய் சொல்லவுமில்லை, ஜாடையாக சொல்லவுமில்லை. இனி இன்ஸானை 18-ம் தலத்தில் திக்றுச்செய்தான் அதில் அவன் கல்கூ என்று நல்லாய்ச் சொன்னான். காளி அபூபக்கர் சொன்னார், அல்லாஹுத் தஆலாவுக்கு இன்ஸானைக் காணவும் மிகவும் அழகான கல்குமில்லை. அவன் தனக்குள்ள ஏழுவகை சிபத்தும் இன்ஸானுக்குக் கொடுத்தான் என்றார்.

இன்னும் அவர் சொன்னார், மூஸப்னு ஈசல் ஹாஷிமிய்யி என்பவர் தமது பெண்ஜாதியை மிகவும் மூஹப்பத்து வைத்திருந்தார். ஒருபோது அவளைப் பார்த்துச் சொன்னார், நீயாகிறது சந்திரனைக் காணவும் மிகவும் அழகியவளாய் இருக்கவில்லையானால் நீயாகிறது மூன்று தலாகானவளாயிருப்பாயென்று சொன்னார். அவள் இவரைவிட்டும் திரைப்போட்டுக் கொண்டு அன்றிரவில் சஞ்சலத்தோடு இராதரித்துக் காலையில் எழும்பி மன்ஸூருமிடத்தில் போய்ச் சொன்னாள். அவர்கள் உலமாக்களெல்லோரையும் அழைத்துக் கேட்டதில் எல்லோரும் தலாகைக் கொண்டு ஹுக்கும் செய்தார்கள். அதிலொருவர் தலாகு ஆகவில்லையென்றார், ஏனென்றால் அல்லாஹுத் தஆலா குர்ஆனில் திருவுளமானான், செல்வர் தலாக்கிவிக்கிறத்துடைய மிகவும் அழகிலே நாம் இன்ஸானைப் படைத்தோமென்று. அப்போது மன்ஸூர் நீர் சொன்னதுதான் சரியென்று சொல்லி அவருக்கு வெகுமதிகொடுத்து அவளையும் புருஷனோடே சேர்த்து வைத்தார்.

தண்ணீர் மனிதன்.

தண்ணீர் மனிதனென்கிறது மனிதனைப்போலவிருக்கும். எங்கிலும் அவனுக்கு வாலுண்டு. ஒரு இராஜாவுக்குத் தண்ணீர் மனிதனை ஹதியாவாக்கி வைக்கப்பட்டது. அதின் ஹாலை

அறிவதற்காக ஒருபெண்ணை கலியாணஞ்செய்து கொடுத்தார். அதிலொரு பிள்ளைபிறந்தது. அந்தப்பிள்ளை தாய் தகப்பன் இருவருடைய பேச்சுமறிந்து பேசுகிறதாயிருந்தது, அதனிடத்தில் உன்தகப்பன் மனிதரைக்கண்டு சிரிப்பது எதற்காக வென்று கேட்டதற்கு அப்பிள்ளை சொல்லும் எல்லாஹைவானுக்கும் வால் தானாலேயா யிருக்கும். இந்த சவுருகளுக்கு வால் முகத்தி லிருக்கிற தென்று தாடியைப் பார்த்து சிரிக்கிறதெனச் சொல்லிற்று.

தண்ணீர் பெண்களாகிறது ரூம்தேசத்து கடலிலிருக்கிற பெண்களைப்போலே உரோமங்களும், ஸ்தன்யமும், அபமும் உண்டு. மிகவுமழகாயிருக்கும். அவர்களினத்தில் ஆணுமுண்டு, அவர்களுக்கு விளையாட்டும், சிரிப்பும், விளங்காத பேச்சும் உண்டு.

ஹிக்காயத்து.

கடலோடிகளி லொருவரைத் தொட்டும் பேசப்படுகிறது, ஒரு கப்பலோட்டிப் போகிறபோது காற்று கடிசாய் அருவிகளும் தருக்களுமுடைய ஓர் தீவில் கொண்டுபோய் எறிந்துவிட்டது. அக்கரையி லிரங்கி யிருக்கவும், இரவானபோது விளையாட்டு சிரிப்புடைய அரவங்கேட்டுக் கொண்டிருந்தது. ஆனதால் சிலபேர்கள் கரையில் ஒரு கோணத்தில்போய் ஒளித்திருந்தார்கள். ஷை இரவானபோது தண்ணீர்பெண்கள் வழக்கம்போலே வெளிப் பட்டார்கள். இவர்களவர்கள்மீதில் குதித்துப் பாய்ந்து இரண்டு பெண்களைப் பிடித்தார்கள். பிறகு இரண்டுபேர் அப்பெண்களை கலியாணஞ் செய்து சிலநாள் வைத்திருந்து ஒரு மனிதன் ஒரு பெண்ணை கடலில் விட்டுவிட்டார். மற்றொரு மனிதன் சிலகாலம் கார்த்து வைத்திருந்து சந்திரனைப் போல் ஒருபிள்ளை பிறந்தது. அப்பால் காற்றுமார்க்கமாய் கப்பலேறி நடக்கும் போது அப்பெண்ணை யவிழ்த்து விட்டார். அப்பெண் கடலில் சாடிப்போய் விட்டாள். அம்மனிதன் கைசே தப்பட்டார். சிலநாள் சென்றபின் அப்பெண் கடலில் வெளிப் பட்டு கப்பலையடுத்து புருஷனுக்கு சிப்பிகளை கப்பலில் எறிந்தான். அவன் அதிலுள்ள முத்துகளையும் இரத்தினங்களையும் உடைத்து வித்துப் பேர்போன கச்சவடக்காரராய் விட்டார்.

ஹுக்மின்படி ஸைதப்னலைஃ தின் றலியல்லாஹு இடத்தில் கடல் மனிதனைத் தின்னுகிறதைத் தொட்டும் கேட்கப்பட்டதற்கு ஒரு மூகத்தின் பேரிலாவது தின்னப்படாதென்று சொன்னார்கள் (அல்லாஹு அஃலம்.)

ஊன்றுக்கோலென்ற ஆஸாவின் பயான்

ஆஸாவை ஊன்றிப்பிடித்து நடக்குதலாகிறது அன்பியாக்களுடைய குணத்தில் நின்றுமாயிருக்கும். நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். ஆஸாவை ஊன்றி நடக்கிறவர்களுடைய அடையாளம் முஃமீனானவர்களுடைய செயலும், அன்பியாக் களுடைய சுன்னத்தாகவுமிருக்கும். இன்னும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அதின்பேரில் ஊன்றி நடக்கிறவர்களாகவு மிருந்தார்கள். இனி யாதொருவன் ஆஸாவுடனே சபர் புறப்பட்டானேயானால் அல்லாஹுத் தஆலா அவனைத் தங்கடஞ் செய்யுமெனத்தக்க துஷ்ட மிருகங்களை விட்டும், பகைவராகிய திருடனை விட்டும் பாம்பு தேள்போல் கொற்ற விஷ ஜெந்துகளடங்கலை விட்டும் அச்சம் தீர்த்துவைப்பான். அவன் தன் இல்லிடத்தளவில் மீண்டு வருகிறமட்டும் இன்னும் 77-மலக்குகளும், அவனுடனே யிருப்பார்கள் என்று. இனி ஹஸன் பஸரீறலி யல்லாஹு அன்ஹு சொன்னார்கள், ஆஸாவுக்கு 8-கர்மமுண்டா யிருக்கிறது. அதாவது அன்பியாக்களுடைய சுன்னத்து, ஸாலி ஹீன்களுடைய சினத்து பகைவர்பேரில் ஆயுதபாணி, பிலக்கே டருக்கு உதவியாயிருக்குதல், அதைவைத்திருப்பவனில் நின்றும் ஷைத்தான் விரண்டோடுதல், கெட்டவன் பயப்படுதல் தாழ்ச்சி செய்புதல் தொழுகைக்கு கிபுலாவாயிருக்குதல், அவன் மாட்டாங்கி யானால் குவ்வத்தாயிருக்குதல் என்றும். இன்னும் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள், யாதாமொருவன் 40-வயது எற்றி ஆஸாபிடிக்கவில்லையானால் அவனை பெருமையில் நின்றும் ஏற்றி எண்ணப்படு மென்றார்.

நூதனபடைப்புகள்.

(ரிவாயத் வந்திருக்கிறது) அல்லாஹுத் தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாமை படைக்கிறதற்கு முன்னாலே பூலோகத்தில்

18-உம்மத்தைப் படைத்தான், பலவிதமான கோலத்தின்பேரில். அதில் 1-வது கூட்டம் இறகு முளைத்தாகவும், 2-வது கூட்டம் அவர்களின் உடலமாகிறது புலியைபோலும், தலையாகிறது பறவையைப்போலுமாம், உரோமங்களும், வால்களும் அவர்களுக்குண்டு அவர்களின் பேச்சு மெல்லிய இரைச்சலா யிருக்கும் 3-வதுகூட்டம் இரண்டு முகமுண்டு, முன்னாலொருமுகம் பின்னாலொருமுகமிருந்த கால்களுமுண்டு, 4-வது கூட்டம் திரேகத்தில் ஒருபாகம் இன்சானைப்போல ஒருகையும் ஒருகாலுமுண்டு, மற்றொரு பாகம் வேறொரு கோலத்தின்பேரிலா யிருக்கும் 5-வது கூட்டம் அவர்கள் முகம் ஆத்மியைப்போலும் முதுகாகிறது ஆமைபோலுமாயிருக்கும் தலையில் கொம்புமுண்டு அவர்களின் பேச்சு நாய்குலைப்பைப்போலா யிருக்கும் 6-வது கூட்டம் வெள்ளை உரோமங்களுண்டு, மாட்டைப் போலே வாலுமுண்டு 7-வது கூட்டம் வெளியா யிருக்கின்ற வீரப் பல்லும் நெடுகமான காதுகளுமுண்டு இந்த உம்மத்தாகிறது ஒன்றுக் கொன்று புணர்ந்து பெற்று பெருகி 120-உம்மத்தானது. ஆனாலோ இன்சானைக்காணவும் மிகவும் அழகாகிய அப்ளலாகிய உம்மத்தை அல்லாஹுத் தஆலாபடைக்கவேயில்லை. உமரிப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு திருவுளமானார்கள், அல்லாஹுத் தஆலா ஆயிரத்திருபது உம்மத்தை படைத்தான். அதில்நின்றும் அறுநூறு உம்மத்து கடலிலும் நானூற்றிருபது உம்மத்து கரையிலுமா யிருக்குமென்று. தஹ்பதுல் அஹ்பாப் என்றகிதாபில் வருகிறது, 8-வது சூதானி யென்னும் ஒருதேசத்தில் ஒரு உம்மத்துகளிருக்கிறார்கள். அவர்களுக்குத் தலையில்லை என்று. 9-வது கூட்டம் மக்ரிபு தேசத்தில் ஆதமுடைய மக்களில் நின்றும் ஒரு உம்மத்துகளிருக்கிறார்கள். அவர்களடங்கலும் பெண்பிள்ளைகளாயிருக்கும். அந்த பூமியில் ஆண்பிள்ளைகள் ஜீவித்திருக்கிறதில்லை அந்த பெண்பிள்ளை களிடத்தில் ஒரு தண்ணீரிருக்கிறது. அந்தத் தண்ணீரில் அவர்கள் புகுதுவார்கள். அதில் நின்றும் கர்ப்பமாவார்கள். அவர்கள் ஒவ்வொருவர்களும் பெண்பிள்ளையே பெறுவார்களே தவிர ஆண்பிள்ளைப் பெறுகிறதில்லை. அந்த உம்மத்துக்குத் தலையில்லை. அவர்களுக்குக் கண்கள் தோள்புஜத்தின் பேரிலும் வாயாகிறது நெஞ்சின் பேரிலுமாயிருக்கும். அவர்களாகிறது விலங்கினங்கள்போலே மிருதமானவர்களாயிருக்கும். மற்ற எல்லாப் படைப்புகளின் ஒப்பும் இன்ஸானில் நின்றுமாயிருக்கிறது. அதற்காகத்தான் அல்லாஹுத்

தஆலா கல்குகள் அடங்கலையும் இன்ஸானுக்கு வசப்படுத்திக் கொடுத்தான். இன்பங்களடங்கலையும் இன்ஸானிலே சேகரமாக்கி வைத்தான். இன்னும் அவனுடைய ஆயத்துகளின் நின்றும் மட்டில டங்காத ஆயத்துகளை அவனிலாக்கினான்.

யாஜூஜ் வமாஜூஜின் பயான்

இவர்களாகிறவர்கள் நூஹு அலைஹிஸ்ஸலாமுடைய மகன் யாபிதுடைய மக்களில்நின்றுமா யிருக்கும். நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், யாஜூஜ் வமாஜூ ஜாகிறது வனுப்பமான ஒரு உம்மத்தாயிருக்கும். அவர்களிலொருவன் சாகிறதில்லை, தன் முதுகந்தண்டில் நின்றும் 1000-பிள்ளைகளைக் கண்டேயொழிய என்றும், இனி அவர்களாகிறது மூன்று வகையா யிருக்கும். அதிலொருவகை 120 முழ நெடுகம், அதில் குறைந்தும் கூடியுமிருக்கும். இன்னும் அலிறலியல்லாஹுவைத்தொட்டும் ரிவாயத்து வருகிறது, அவர்களுக்குப் பறவை யுடைய நகங்களும் துஷ்ட மிருகங்களுடைய வீரப் பல்லும் புரு வுடைய கெக்கரிக்குதலும் விலங்கினங்களுடைய புணர்ச்சியு முண்டு. சூட்டையுங் குளிரையும் காக்குமென்னத்தக்க உரோமங் களுமுண்டு. அவர்கள் பூமியில் நடந்தால் அவர்களில் முந்தின வன் ஷாம் தேசத்தைக்கொண்டும் கடைசியானவன் குருசான் தேசத்தைக்கொண்டுமா யிருப்பார்கள். நடந்துபோகிற வஸ்த டங்கலையும் தின்பார்கள். அவர்களில் செத்தவரையும் அவர்களே தின்பார்கள். இன்னு மவர்களில் ஒரு வகை. அவர்களுக்குப் பெரிதான இரண்டு செவியுண்டு. அதில் ஒன்றைக்கொண்டுப் போர்வையாய் போத்தியும், மற்றொன்றை விரிப்பாய்க் கீழே விரித்துக் கொள்வார்கள். அவர்களில் முந்தினவன் ஷாமிலும், பிந்தினவன் குருசானிலுமா யிருப்பான். யானை, பன்றி முதலான ஜெந்துக்களுக்கருகே நடக்கமாட்டார்கள், அதுகளைத் தின்றே யொழிய. பஷ்ரிக்குடைய ஆறுருவிகளின் தண்ணீரையும் தைரிய்யா வென்னும் சிறகடல் தண்ணீரையும் குடிப்பார்கள். மக்கா, மதினா, பைத்துல் முகத்திஸ் இம்மூன்று ஸ்தலத்துக்குப் போகாமலே அல்லாஹுத் தஆலா விலக்கி விட்டான். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமிடத்தில் 'அவர்களுக்குத் தக

வத்தை ஏற்றி வித்தீர்களோ வென்று கேட்கப்பட்ட போது, மிஃறாஜுடைய இரவில் அவர்களை யழைத்தேன், ஜவாபுசொன்னார்களில்லை. ஆதலால் அவர்கள் நரகத்துடையவர்களா யிருக்குமென்றார்கள். இன்னும் கியாமத்துநாளில் அல்லாஹுத் தஆலா ஆதமைக் கூப்பிட்டு நரகத்துக்குரிய கல்கை நரகத்துக் கனுப்பி வையுமென்று சொல்லுவான். அப்போதவர்கள் நரகத்துக்குரியோர் எவ்வளவென்றுக் கேட்பார்கள். அதற்கவன் சொல்லுவான், ஓராயிரத்தில் நின்றும் தொளாயிரத்தி தொண்ணூத் தொன்பது பேர்கள் நரகத்துக்கும் ஒன்று சொர்க்கத்துக்குமா யிருக்குமென்று சொல்வா னென்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். இது கேட்டு அஸ்ஹாபிமார்க ளெல்லாம் மிகவும் வருத்தமுற்று அவ்வொருவர் நம்மவர்களில் யாராயிருக்குமென்று சஞ்சலப்படவும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சொல்லுவார்கள், நன்மாராயம் பெற்றுக் கொள்ளுங்கள், அது அப்படியல்ல. யாஜூஜ் மாஜூஜ் கூட்டத்தில் நின்றும் தொளாயிரத்தி தொண்ணூத்தொன்பதும் உங்களில் நின்றும் ஒருவருமா யிருக்கு மென்றார்கள். அது கேட்டு சஹாபாக்கள் சந்தோஷமானார்கள். இன்னுமொருபோதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முகஞ்சி வந்தவர்களாய்த் திடுக்க முடையவர்களாய் லா இலாஹா இல்லல்லாஹு தீங்கில் நின்றும் கேடாகிறது அரபிகளுக்கா யிருக்கும். யாஜூஜ் மாஜூஜ்வுடைய அடைப்பாகிறது திறக்கிறது மூடுகிவிட்டது. இப்படிப்போலே யென்று தங்களுடைய சிறப்பாகிய பெருவிரலையும் அதற்கு அடுத்த விரலையும் வளையமிட்டுக் காட்டிச் சொன்னார்கள். அப்போது ஜைனபு றலியல்லாஹு அன்ஹுமா கேட்பார்கள், அல்லாவுடைய றசூலே நம்மவர்களிலே சாலிஹான பேர்களுமிருக்க நாம் ஹலாக்காகுவோமா என்றார்கள். அதற்கு கெட்டது மிகுத்ததானா லென்றார்கள். ஆனதால் கெட்டதற்கு பொருள் கெட்ட செயலாகிய பாவங்களும், சினவும், சினவுடைய மக்களென்றும் தப்ஸீர் செய்யப்பட்டிருக்கிறது. ஆனதால் அதின் முறாதாவது அவைகள் மிகைத்தால் சாலிஹான பேர்கள் உண்டாயிருந்தாலும் சரியே அனைவரையும் அடையவளையுமென்னத்தக்க ஹலாக்கு உண்டாமென்றதா யிருக்கும். ஆதம் அலைஹிஸ்ஸலாம் காருக்கோட்டிகண்ட மணிபூமியின் மண்ணோடுகலந்து அவர்கள்

கை சேதப்பட்டார்கள். அதனால் அதில்நின்றும் யாஜூஜ் வமாஜூஜ் கூட்டத்தைப் படைக்கப்பட்டதென்று கஷ்புடைய றிவாயத்தில் வந்திருக்கிறது. ஆனால் அன்பியாக்களுக் காருக்கோட்டி இல்லையென்கிற தலீல்கொண்டு இச்சொல் தட்டப்பட்டுவிட்டது. அவர்கள் யாபிதுவுடைய மக்களில் நின்றுமாகவே யிருக்கும். இன்னுமொரு சொல்லில் அவர்களாகிறது ஹவ்வா வென்றியே ஆதமுடைய மகனில் நின்றுமாயிருக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படிக்கு அவர்கள் நமக்குத் தகப்பனொன்றாகிய சகோதர்களில் நின்றுமா யிருப்பார்கள். இனி அவர்களாகிறது சுல்தான் ஸிக்கந்தர் துல்கர்னைன் அடைத்த அடைப்புக்கும் பிறகு அடைப்பட்டிருக்கிறார்கள். நாள்தோறும் அதைத் துளைப்பார்கள். அல்லாஹுத் தஆலா அதை முன்போலே மீள்வித்திடுவான். அல்லாஹுத் தஆலா நாடிய நாள் வந்தால் நாளைய தினம் நாம் திறந்து விடுவோம் இன்ஷா அல்லா, என்று அவனுடைய உதிப்பினைக்கொண்டு சொல்வார்கள். அதனால் வெளிப்படுவார்கள். அப்பால் அவர்கள் கழுத்துத் தொண்டை குழியில் புழுக்களைக்கொண்டும் ஹலாக்காகுவார்கள். (ஹயினனல்லாஹு.)

எஹ்மூர் என்னும் ஓர் மிருகத்தின் பயான்.

எஹ்மூர் என்பது வெருள்கூடியான ஓர் மிருகம். அதற்கு வீரவாள் போலான நெடுகமான இரண்டு கொம்புண்டு. ஜவ்ஹரீ இமாம் சொன்னார்கள், இதுவாகிறது காட்டுக்கழுதையென்று.

ஹதீது.

இல்மைத்தேடிப் படிக்கின்ற ஓர் மனிதன் தமது ஊரைவிட்டுப் புறப்பட்டு நடந்துப் போகும்போது வழியில் ஒருவன் துணைப் பட்டான். ஆக இருவரும் நடந்துப் போகும்போது அவ்வூரை அடுக்கவும் அந்த மனிதன் சொல்லுவான் நாமிருவரும் வழித் தோழரானபடியால் நம்மிருவருக்கும் ஒருவர்பேரில் மற்றொருவருக்கு ஹக்குண்டாயிருக்கிறது. ஆனதால் நானாகிறது நின்னில்

நின்றமுள்ளவன். உம்மிடத்திலே எனக்கொரு ஹாஜத்துண்டா யிருக்கிறதென்றான். அதற்கு மற்றொரு மனிதன் அதென்ன ஹாஜத்தென்றுக் கேட்கவும், சொல்லுவான், இன்ன தலத்தில் நீ போனால் அவ்விடத்தில் கோழிகளும் சாவலும், ஒரு கிழவி யிடத்தில் நிற்கிறது. அது யாருடையதென்று தந்திரமாய் விசாரித்து அச்சாவலைக் கிரயத்திற்கு வாங்கி அதை நீ அறுத்துப் போடுவதுதான் என்னுடைய ஹாஜத்தென்றுச் சொன்னான். அப்போதவர் சொல்வார் எனக்கும் உம்மிடத்தில் ஒரு ஹாஜத் துண்டா யிருக்கிறதென்றார். அதென்னவென்று கேட்கவும் சொல்லுவார், யாதொரு இன்ஸானுக்கு ஜின்னுப் பிடித்துக் கொண்டால் அதற்கு என்ன மருந்துவஞ்செய்கிறதென்று கேட்கவும் சொல்லுவார், எஹ்மூருடைய தோலில் நின்றும் ஒரு ஓட்டையளவு துண்டெடுத்து ஜின்னு பிடித்தவனுடைய கையின் இரண்டு பெருவிரலையும் ஒன்றாய்ப் பிடித்து நன்றாய்க்கட்டி சதாபிலைத் தண்ணீரில் நின்றும் நாலுசொட்டு வலது காதிலும் மூன்று சொட்டு இடது காதிலும் விட்டால் ஜின்னு போய்விடும். மறுபடியும் வராதென்றான். அந்தப்படிக்கு அவராகிறவர் அவ் விடத்திற்குப்போய் அச்சாவலை விலைக்கு வாங்கினார். அப்போது அவன் தூரத்தில் நின்றுக்கொண்டு அதை அறுத்துப் போடென்று இஷாருச் செய்தான். அதைக்கண்டு இவர் அச்சாவலை அறுத்து விட்டார். அறுத்தவுடனே சிலபேர்கள் ஆணும் பெண்ணுமா யோடிவந்து இவரை அடித்து நீ ஸிஹ்று செய்கிற மனிதன் என்றார்கள். இவர் நான் ஸிஹ்று செய்கிறவனில்லையென்றார். அதற் கவர்கள் சொன்னார்கள். இந்த சாவலையறுத்த நேரமே எங்களில் ஒரு பெண்பிள்ளைக்கு ஜின்பிடித்துக் கொண்டதென்றார்கள். அப்போதிவர் எஹ்மூருடைய தோலைவாங்கி அவளின் இரண்டு பெருவிரலிலும் கட்டி சதாப்பிலைத் தண்ணீரை இருகாதிலும் விட்டார்கள். அப்போதந்த ஜின்னுகிறது என் நபுசின்பேரில் கேடாகவா நான் உனக்குப் படிப்பிவித்தேனென்று சொல்லி அடித்துக் கீழே விழுந்து இறந்தான். அப்பவே சுத்தமாய்விட்டது. அப்பால் அப்பெண்பிள்ளைக்கு ஷைத்தான் ஜின் மீண்டும் வரவில்லை.

ஹிக்காயத்து.

ஹைவானடக்கலும் தற்குணைக்கொண்டே தீர்தும், இன் ஸானையும் குரங்கையுந் தவிர. இனி குதிரைக்குப் பல்லுக்குத்தியில்லை,

ஒட்டகைக்குப் பித்தில்லை. லிவாத்துக்கொண்டு சந்தேகம் என்னப்பட்ட ஹைவானுகிறது பன்றி, கழுதை, வெருகுப்பூனை இம்மூன்றுமாம். இரவில் பிரகாசிக்கிற கண்களாகிறது, புலி, வரிப்புலி, அப்ஜ என்ற பாம்பு, வெருகுப்பூனை இக்கான்கின் கண்களுமாம். ஒஜீபனத்தை தக்கரியம் செய்து கொள்ளுகிற பிராணிகளாகிறது இன்ஸான், எலி, காகம், தேள், குளவி, எறும்பு இவ்வாறுமாம். இனி ஹைலாகிற ஹைவான்களாகிறது இன்ஸான், குதிரை, நாய், முயல், முள்ளம்பன்றி, சிறுவௌவ்வால் இவ்வாறுமாம், இன்னும் குஆது என்கிற மீனும் அதுபோலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (வல்லாஹு அஃலம்.)

ஹைவானின் பயான் முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

தாதுவின் குணக்குறிகள்.

சிறப்பு வஜுப்பமுள்ள அல்லாஹு சுபுஹானஹுவத்தஆலா ஹைவானுத்தென்ற உயிர்ப் பிராணிகள், பூலோகத்தின் கண் பசாவாக்கித் தரிபாடாக்கி வைக்கிறதை நாடினபோது அது கொண்டு ஒன்றுக்கொன்று பிணைந்து புணர்ந்து பெற்றுப் பெருகுமே அப்படிக்கொத்த உறுப்புக்களே அதுகளுடக்களுக்கும் படைத்தான். இன்னும் அதுகொண்டு இன்பமுண்டாகுமே அப்படிக்கொத்த கரீதிய்யத்தான குவ்வத்தையும் அவைகளிலே முறக்கப்பென்னும் சேர்மான மாக்கிவைத்தான். இன்னும் அவ்வுறுப்புக்களே புழுங்குமென்னத்தக்க நப்ஸனிலே அதை புழுங்குவதையும் உவப்பாக்கி வைத்தான். இன்னும் அல்லாஹுத்தஆலா நாடியதளவும் அதை பிரியாதே அப்படிக்கொத்த சேர்தாபிணையாகிய வஜுப்பமாகிய இன்பத்தையும் ஜிமாவிலே ஆக்கி வைத்தான். மனிதர் ஜிமாஐ பொருத்தக் கெட்டு அதினால் பெற்றுப் பெருகுதல் முறிந்து நின்று போகாதிருப்பதற்காக வேண்டி வஹுவல் ஹகீமுல் அலீம், இனி அப்படி பிச்சளம் பெருகுதல் ஆண் பெண் என்றும் இரண்டு உயிர் பிராணியளவில் ஹாஜத்தானதாகவுமாயிருந்தபோது அவ்விரண்டாலொன்றுக்கு

மணியை ஒப்புக்கொள்வதற் கிணக்கமாகிய உறுப்புக்களையும் மற்றொன்றுக்கு மணியை அகத்தே எரிக்கிறதற் கிணக்கமாகிய உறுப்புக்களையும் ஆக்கினன். இன்னும் எல்லாம் ஒவ்வொரு உறுப்புக்கும் தமியிய்யத்தான செயல்களை ஆக்கியபோது கோஷமென்ற ஆண் குறியிலும் தமியிய்யத்தான செயலை முறக்கப்பாக்கி வித்தான். அதென்னவானால் இன்ஸானுகிறது ஜிமாவை நாடி அதைக் கல்பில் உறுப்பித்தபோது கல்பில் நின்றும் கோஷலைக் கொண்டு சேர்க்கிருக்கு மென்னத் தக்க நரம்புகளின் வழியாச்சதி முட்டாய் ஒரு காற்றெழும்பி பொள்ளையுள்ள கோஷனளவில் வந்துசாடி அதனின் சவ்வுகளிலே வந்து புகுதம். அப்போது சவ்வாகிறது வதிதடித்து உயர்க்தெழும்பி அதை எதற்காக படைக்கப்பட்டதோ அக்கருமத்தை அது செய்து முடிக்கும்.

ஒரு கிலில் சொல்லப்படுகிறது, கோஷனுகிறது சவ்வுகளில் நின்றும் நரம்புகளில் நின்றும் கட்டிடம்போல் சமைத்தெடுக்கப் பட்டிருக்கிறது. இன்னும் ஹாஜத்தினிடையில் புகையால் நிரப்புகிறதற்காகவேண்டி, பொள்ளையானதாக ஆனதென்ன அடிவயற்றின் பேரிலுள்ள எலும்பில் நின்றும் மூளைத்தெழும்பி இருக்கின்றது. இன்னும் அதின் அஸ்திவாரத்துடனே ஓர் பையுண்டாயிருக்கிறது. அப்பையானது இரண்டு விதையிலும் பிறக்கு மென்னத் தக்க மணியை தவிர உள்ள மணியை பிறப்பிவைக்கும். அதன் பிரயோஜனமாகிறது, சகதின் தமறில் நீர் நடக்கும்போது அதின் எரிக்குதலையும் கூர்மையையும் தட்டி வைக்கிறதற்காக வேண்டி அத்தமறிலே கொஞ்சங் கொஞ்சமாய் சொறிகிறதாயிருக்கும். ஆனபோதே அதுவாகிறது யாதொரு உருப்புக்கு ஆபத்தனுகாதிருக்கும்படிக்கு தேய்க்குக்கின்ற எண்ணையுடைய பதவியிலாயிருக்கும். இதற்காகத்தான் யாதொரு இன்ஸான் ஜிமாவு அதிகப்படுத்துவானேயானால் அவனுக்கு நீர்ச்சுருக்கு உண்டாகும். அம்மணிப்பற்றற்று போகிறபடியால், இனி கோஷத்திற்கு இரண்டு பிரயோஜன முண்டாயிருக்கின்றது. 1-வது நாலும் நாம்புகளிலும் இரண்டு மாங்காயிலுள்ள மேல் மிச்சமான தண்ணீர்களை வெளிப்படுத்தி வைக்கிறது 2-வது கெர்ப்ப அறையிலே அதின் கெடுக்கத்திலே மணியை ஏத்திவைக்கிறதுமாயிருக்கும். அதெப்படியெனில் அந்த இரண்டு விதைக்கும் நாலில் நின்றும் சில பாதைகளும் மூளையில் நின்றும் சில பாதைகளும்

கல்பில் நின்றும் சில பாதைகளும் உண்டாயிருக்கின்றன. ஆனதால் ஈரலில் நின்றும் மிருதமான இரத்தங்களும், கல்பில் நின்றும் ஹைவானியத்தான குவ்வத்தும், மூளையில் நின்றும் ஹிஸ்ஸுல் ஹறகத்துடைய குவத்தும் அவ்விதைகளிலே போய் சேரும். ஈரலில் நின்றும் சேருகின்ற இரத்தத்தை அது தனது தபீவு நிறத்தளவில் திருப்பிக்கொள்ளும். அது வெள்ளைபாய்விடும். தனக்கொப்பியதை தான் உணவாக்கிக்கொள்ளும். அப்படியல்லாதது மணியாய்விடும். அதின் சூடு கடினமானால் அத்தலம் வலிக்கும். அதனால் ஈரலில் நின்றும் அத்துடன் சேர்ந்திருக்கின்ற நரம்புகள் மிருதமான இரத்தத்தை கல்பில் நின்றும் மிருதமான காற்றையும் இழுத்துக்கொள்ளும். அதனால் கோஷனாகிறது அப்புகையைக் கொண்டு ஷகித்தினித்து உயர்ந்து நின்றும் தன்னிலுள்ள கனிவை தேய்த்தால் சூடுக் கொண்டு வழிப்படுத்தி வைக்கிறதற்காக அடத்தில் புகுத்தல் தேய்த்தலளவிலே ஆசிக்கும். அவ்வுசுப்புதல் ஹறாத்தென்ற சூட்டை யெழுப்பி உடல மடங்கலிலும் கொதிப்பேறச் செய்யும். உறுப்புகள் உசம்பில் எலும்பு, ஐவ்வு, தசை, கொழுப்பு, நரம்புகள், முதலிய முதஷாபஹதான உறுப்புகள் அடங்கலில் நின்றும் இரத்தினமான சத்துக்களை இழுத்துக் கொள்ளும். இனி மூளையிலே மணிகூடினால் இரண்டு காதுக்கும் பிறமாலேயுள்ள நரம்புகளின் வழியாய் முதுகெலும்பின் மூளையிலிறங்கி அப்பாலிரண்டு மாங்காயிலும் இறங்கி பின்பு இரண்டு விதைகளிலு மிறங்கிவிடும். அதில் நின்று கோஷத்தின் வழியாய் வெளிப்படும். ஆனால் நீர் நடக்கும் பாதையில் நின்றுமல்ல எங்கிலும் அது தவிர வேறே ஒரு பாதை யிருக்கின்றது. அதின் வழியாய் வெளிப்படும். அது கொண்டு அக்கழிவு அவிழும். அவ்விடத்தில் மிருதமான இன்பதைக் காணப்படும். ஆகவே கோஷத்தை உசுப்பும் குவ்வத்து வருகிற தெல்லாம் கல்பில் நின்றுமேயாம். அதென்னவெனில் கல்பாகிறது ஹைவானிய்யத்தான ரூஹை உடல மடக்கலளவிலும் அனுப்பிவிக்கும். மணியாகிறது மூளையில் முன்னேக்கி வரும் ஈரலில் நின்றும் ஷஹுவத்து முன்னேக்கும். இன்னும் மூளையில் நின்றும் ஐவ்வளவிலே உசுப்புதல் ஐயறிவுடைய குவ்வத்தும் கல்பில் நின்றும் கிசை நாடிகளிலே நாடி ஹயாத்துடைய குவ்வத்துச் செல்லுமாப் போலே இரண்டு விதையில் நின்றும்

ஜடலமடங்கலனைத்திலும் ஆணிலே ஆண்மைத் தலத்துக்கும், பெண்ணிலே பெண்மை தலத்துக்குச் சபபாயிருக்கிறதே அப்படிக் கொற்ற குவ்வத்துச் சேரும். அவ்விதை இரண்டும் ஜடலத்துக்கு ஹஜூரத் தென்ற சூட்டையும், குவ்வத்தையும் உடுத்தாட்டி வைக்கிற படியால் அவ்விரண்டும் இவ்வினம் பகாவா யிருப்பதற்குச் சமமாயிருக்கும். இதனுலறியப்படுகிறது புணர்ச்சியின் பேரில் குவ்வத்துண்டாகிற தெல்லாம் அவ்விரண்டும் சபபாயிருக்கிறதி னுடைய கதறின் படிக்கே மணியாகிறது மிருதுவாயும், கடித்த தாயும், குறைந்ததாயும் மிகுத்ததாயு மிருக்கும். இனி அது அப்படியாக யிருக்கிறதுடனே அவைாவுர்ற கசென்ற இராஜக் கருவிகளாகிய உறுப்புகளும் சூட்டிலும், குளுமையிலும் சமமா யிருக்கவும் வேண்டும். ஏனென்றால் மூளையாகிறது ஜவ்வை அதனளவில் இருத்தி வைக்கும். அது ரூஹ்ஸா ஹைகத்துடைய குவ்வத்தைக் கொடுக்கும். கல்பாகிறது கரீஜிய்யதாகிய ஹஜூரத் தென்ற தேகச் சூட்டையும் உள்கல் நிறம்புகின்ற காற்றையும் அதனளவில் இருத்தி வைக்கும். ஈரலாகிறது உண்டியின் அடிமூடு அதைக் கொண்டு சேர்த்திருக்கு மென்னத்தக்க நரம்புகளை இருத்தி வைக்கிறது. ஆகையால் இந்த உறுப்புகளில் இன்னும் யாதொரு உறுப்புகளுக்காவது மிசாஜின் பேதகத்தில் பசாது இடையூறுப் நேரிட்டதாகில் சகருடைய குவ்வத்து பிலங்கெட்டு அதினுடைய செயல் குறைந்து விடும். ஆனதால் அவைகளின் குறியையும், பரிகாரத்தையும் இதனடியில் சொல்லப்படுகிறது.

இருதயத்தின் பலயீனத்தாலுள்ள தாது நஷ்டங்களாவது.

இருதய கமலத்தின் பலயீனத்தாலுள்ள தாதுநஷ்டக் குறியாவது:—இருவரும் ஜிமாவுக் கெத்தனித்த இருகுறியும் ஒன்றோடொன்று சந்திக்கும் போது சுக்கிலம் வெளியாய்விடும்.

பரிகாரமாவது.

அதற்குக் கொத்தமல்லி இலைச்சாற்றில் கற்கண்டு சேர்த்து காலையில் குடித்து வந்தாலும், இரண்டு பணயிடை மூத்தை

பன்னீரி லரைத்து மேற்படிச் சாற்றில் கலந்து கற்கண்டு சேர்த்து குடித்து வந்தாலும் இன்னும் இருதயத்துக்குப் பலம் கொடுக்கின்ற பதார்த்தங்களை புசித்து வந்தாலும் கல்புக்கு பலமுண்டாகி தாது நஷ்டம் நீங்கும்.

தலைமூளையின் பலயீனத்தா லுண்டாகும் தாது நஷ்டங்களாவது.

தலைமூளையின் பலயீனத்தால் தாது சக்தி குறையுமாகில் தாது விர்த்தியுண்டா யிருந்தாலும், ஜிமாவின் விருப்பம் அற்றே யிருக்கும். சில வேளையில் விருப்ப மிருந்தாலும் அதிசீக்கிரத்தில் விந்து வெளியாய் விடும்.

பரிகாரமாவது.

ஆட்டு தலை மூளையை பசுவின் நெய்யிலாவது, பாதுமை நெய்யிலாவது பொரித்து நித்தியம் புசித்து வருவதுடன் பாதம் நெய்யை நித்தியம் சிரசில் பூசி வந்தாலும், தலைமூளைக்கு வன்மைத் தருகின்ற வஸ்துக்களை புசித்து வந்தாலும், அதின் குரோதம் நீங்கி தாது நஷ்டம் தீர்ந்து நற்குண முண்டாகும்.

ஈரலின்பலயீனத்தா லுண்டாகும் தாது நஷ்டங்களாவது.

ஈரலின் பலயீனத்தால் சக்கில சக்தி குறையுமாகில் அதிக விரைவில் இந்திரம் வெளிப்படும். அன்றியும் சம்போகமான வுடனே இருந்த விடத்தை விட்டும் எழுந்திருக்க திராணியற்றுப் போகும்.

பரிகாரமாவது.

காரட்டு கிழங்கை நெருப்பில் வாட்டி சார்பிழிந்து கற்கண்டுச் சேர்த்து குடித்தாலும் அல்லது அக்கிழங்கை எந்தவித கறிகளி

லாவது சேர்த்துப் பலகாரங்களிலாவது, தித்திப்பாகவாவது செய்து தின்றாலும், புலாவு, பச்சடி இவைகளை புசித்து வந்தாலும் ஈரலுக்கு பலம் கொடுக்கிற வஸ்துக்களை சேர்த்து வந்தாலும், இதனடியிற் கண்ட லேகியத்தை தின்று வந்தாலும், ஈரலுக்குபல முண்டாகித் தாதுநஷ்டம் நீங்கும்.

மஅஜூன்.

காரட்டுவிரை சேர் அரை வெங்காயம் விரை சேர் கால் ஜாதிக்காய், இரும்பு, இலவங்கப் பட்டை, வால்மிளகு, சுக்கு, திப்பிலிமிளகு வகைக்குத் தோலா 1, இதுகளை தேன்விட்டு லேகியஞ் செய்து தின்று வரவேண்டும்.

இரண்டு விதையின் பலயீனத்தா லுண்டாகும் தாது நஷ்டங்களாவது.

இரண்டு விதையின் பலயீனத்தால் சுக்கில சக்தி குறையு மாகில் சம்போகத்துக்கு எத்தனிக்கும் போது பயங்கரமான ஓர் சப்தம் தற்செயலாய் காதில் விழக்கேட்டு பயந்து சோர்வடைந்து போகும்.

பரிகாரமாவது.

சிவாதாளு, சிபத்தாளு இவ்விரண்டையும் சமானமாய் எடுத்து ஜலத்தில் கழுவி நிழலில் உலர்த்தி நெய்யில் வறுத்து தேனில் கலந்து நித்தியம் ஒரு விராகனிடையாய் நாற்பது நாள் தின்று வந்தாலும், இன்னும் விதைக்கு வலுவைக் கொடுக்கும். வஸ்துக் களைச் சேர்த்து வந்தாலும், அதற்கு பலமுண்டாகி தாதுநஷ்டம் நீங்கும்.

நரம்புகளின் பலயீனத்தா லுண்டாகும் தாது நஷ்டங்களாவது.

நரம்புகளின் பலயீனத்தால் சுக்கிலசக்தி குறையுமாகில் ஆண் குறி கோணி அரைமுறைப்பாய் இருப்பதுமன்றி பெரும்பாலும்

இலேபன மில்லாமலே இருக்கும். சக்திலம் அதிகமாய் நீர்த்தம் வெளுத்த மிருக்கும். ஆண்குறி அடிசிறுத்தம் நுனி பருத்தும் இருக்கும்.

பரிகாரமாவது.

அக்கருவை பொடித்து ஷண்பக எண்ணெயில் கலந்து முள்ளங்கி விரைய எண்ணெயி லெரித்து நித்தியம் ஆண்குறியில் பூசி தேய்த்து வந்தால் நரம்புகளுக்கு பலமுண்டாகி தாது நஷ்டம் தீரும். ஆனதால் யாவரும் தங்கள் தங்களுடைய தேகத்தின் கூறறிந்து வியாதியின் குணமறிந்து அதற்கு ஆகுமான பதார்த் தங்களை கூட்டியும் ஆகாத பதார்த்தங்களை நீக்கியும் சுகம்பெற்றுக் கொள்வீர் களாகவும்.

இனி இராஜக் கருவிகளான உறுப்பு களுக்கு ஆகுமான பதார்த்தங்களும் ஆகாதபதார்த்தங்களும் பின்னால் எழுதப் பட்டிருக்கிறது.

தாதுபுஷ்டிக்கு அதிசயக்குளிகை.

மிளகு, எள்ளு, கஞ்சா இவைகளை சரியிடை யெடுத்து வெந்தயம் வேகாததுமாய் வறுத்து கல்வத்திலிட்டு தேன்விட்டு மைபோலரைத்து காட்டுயிலந்தக்காய்பிரமாணம் குளிகைசெய்து மாலையில் படுக்கைக்கு நாழிமணிநேரம் முன்னதாய் ஒரு குளிகை தின்று உடனே ஆழாக்கு பால்சாப்பிட வேண்டியது. புளிப்பும் தண்ணீரும் கூடாது. இஷ்டம் போல் போகிக்கலாம்.

வீரிய கட்டுக்கு அடைக்கலாங் குருவி

அடைக்கலாங்குருவி 5-கொண்டுவந்து அறுத்து வயிற்றைக் கீறி பிச்சிமுதலான அசுத்தமெல்லாம் எடுத்து விட்டு அவரை பிரமாணம் அபினி, சலாம்மிசிரி, தாலம்கான் கருவாப்பட்டை, ஜாதிக்காய், சபேத்முசலி, சியாமுசலி வகைக்கு விராகனிடை

1-இப்படி ஐந்து குருவிக்கும் வயிற்றில் போட்டு தைத்து ஒரு குருவிக்கு தலா நெய்யாக 5-தலா நெய்விட்டு பொன்னிறமாக வறுத்து கல்வத்திலிட்டு எலும்பு நீக்கி கொஞ்சங் கொஞ்சமாய் தேன்விட்டு மைபோலரைத்து காலைமாலை சுண்டக்காய்விதம் சாப்பிடவும். காலையில் காரசாரத்துடன் போஜனம் செய்யலாம். மாலையில் பால்சாதம் சாப்பிடவேண்டியது.

தாதுபுஷ்டிக்குப் பேரீச்சம்பழம்

நீர்முள்ளிவிதை விராகனிடை ($2\frac{3}{4}$) அபினி விராகனிடை ($\frac{1}{4}$) இதை பேரீச்சம் பழத்திற்குள்ளே வைத்து சாப்பிடவும். இப்படி காலை மாலை 5, 7-நாள் சாப்பிடவும்.

தாதுபெருக்க வெங்காய உபயோகம்

வெள்ளை வெங்காயம் அறிந்து நெய்யில் வறுத்து சாப்பிடவும். இப்படி வேளைக்கு ஒரு வெங்காயமாக இருவேளையும் இருபது நாள் கொள்ளவும்.

முக்கிய கவனிப்பு.

இந்த தாதுநஷ்டிக்குரிய முக்கியமான காரணங்களும் அதற்கரிதாகிய வேண்டுமான தாதுபுஷ்டிபரிகாரங்களும், நம்முடைய மிப்தாஹுல்லலாத் பீபிலாஹின்னிஸாஹ் என்னும் புத்தகத்தில் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆனதால் இதில் சுருக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானவர்கள் அதில் பார்த்துப் பலன் பெறுவது நன்று.

தாதுவின் குணக்குறிகள் முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அவயவங்களின் துடிப்புகளால் அறியக்கூடிய

து டி நூ ல்.

உச்சித் துடித்தால் கெட்டுமையைவிட்டும் ஈடேற்றம் பெறு வதுண்டாம். இனி கல்தானில் நின்றும் பயமிருந்தால் அச்சத் தோடு இருக்கவும். அதினால் பொருள்களில் நஷ்டமுண்டாம். பெண்களுக்கானால், கலியாணம் முடிப்பதுண்டாம். அதினால் விஸ்திரணமாகிய கைறைப் பெறுவான்.

தலையின் வலது பாகம் துடித்தால் பொருத்தக்கேடான கருமமும் சலிப்பு முண்டாகும். புருசகள் சொல்கிறார்கள் சபற் போய் சலாமத்தால் மீண்டு வருவானென்றார்.

இடது புறம் துடிக்குமானால் மேன்மையும் சிறப்பும் பெற்றுக் கொள்வான்.

நெற்றித் துடித்தால் சந்தோஷமும் நல்மாருபமுண்டாகும்.

வலது புறம் துடிக்கு மானால் முதலிலும் பறக்கத்துடன் கைறுண்டாகும்.

இடது புறம் நெற்றி துடித்தால் வாழ்நாள் நெடுக்கத்தின் பேரிலும் இரணம் விஸ்திரணமாகுதல் நிற்பாகம் செழிச்செழிப் பாகவு மிருக்கிறதின் பேரில் அறிவித்தலாம்.

நெற்றியடங்கலும் துடிக்குமாகில்சிறப்பையும் மேன்மையையும் முண்டாக்கும்.

வலது பொய்கண் துடித்தால் சந்தோஷமும் ஒரு கவுலில் நின்றும் முதலுமுண்டாகும்.

இடது பொய்கண் துடித்தால் தேகப்பாடு உண்டாகும். அது தீர்ந்து சந்தோஷ முண்டாகும்.

வலது புருவம் துடித்தால் மேன்மையும் மனிதர்களுக்கிடையில் மேன்மையான பதவியுமுண்டாகும்.

இடது புருவம் துடித்தால் உறவோடு வழக்குண்டாய் அதினால் பொருள்களில் சேதமுண்டாகும்.

இரண்டு புருவமும் துடித்தால் தலைமைத்தனம் உண்டாகும்.

வலதுகண் மேல் இமை துடித்தால் துக்கமுண்டாகி நீங்கும்.

கீழ்இமை துடித்தால் சலிப்புண்டாகும்.

வலதுகண் துடித்தால் மேன்மை உண்டாகும்; வழக்குண்டாகும் எதிரியோடு போராடி ஜெயம் பெறுவான்.

அதின் பிற்புறம் அல்லது முழுதும் துடித்தால் தலைமைத்தனம் உண்டாகும்.

இடதுகண் மேல்இமை துடித்தால் ஸபர்போய் இருப்பவன் மீண்டுவருவான், அது கொண்டாகும்.

அதின் கீழ்இமை துடிக்குமாகில் கைநுண்டாகும்.

வலது சென்னி துடித்தால் ஓரிடத்தை விட்டும் மறுவிடத்திற்குப் போவதாம்.

இடது சென்னி துடித்தால் கல்பில் நீங்காத எண்ணங்கள் உண்டாகும்.

வலது காது துடித்தால் கைநுண்டாகும்.

இடதுகாது துடித்தால் அறியாபுறத்தால் இரணமுண்டாகும்.

இஸ்லாந்தர் சொல்லுகிறார்கள் வலது நாசியின்உள் துடித்தால் துக்கத்தைவிட்டும் மீகுஷியுண்டாகும்.

அதின் பக்கம் துடித்தால் ஹாஜத்து அடங்கலும் கைக்கூடும்.

இடது புறம் துடித்தால் கவலை தீரும்.

மூக்கு முழுதும் துடித்தால் மறைவாய் ஸபர் போனவனின் புறத்தால் முதலில் வாழ்வுண்டாகும்.

மேலுதடு துடித்தால் வழக்குண்டாகும். பின்பு சல்ஹுண்டாகும்.

கீழுதடு துடித்தால் ஸபர் போனவன் வருவான்.

இரண்டுதடும் மொத்தமாய் துடித்தால் எதிரி இணக்கமாவான்.

நாவு துடித்தால் ஒரு தலைமையானவனோடு வழக்குண்டாகி சங்கடமுண்டாகும்.

நாடி துடித்தால் சல்லியமுண்டாம்.

வலது கழுத்து துடித்தால் துக்கம், நஷ்டமுண்டாகும்.

இடது கழுத்து துடித்தால் முதலும், வாழ்வுண்டாகும்.

கழுத்து அடங்கலும் துடித்தால் பலாய் உண்டாகும். (நவூது பில்லா.)

இரு புயமும் துடித்தால் மிகுதி கைருண்டாகும்.

வலது கம்முக்கூடு துடித்தால் துக்கமுண்டாகும்.

இடது கம்முக்கூடு துடித்தால் கைருண்டாகும்.

வலது கெண்டக்கை துடித்தால் தலையில் வலியுண்டாகும்

இடது கெண்டக்கை துடித்தால் ஒருத்தரோடு வழக்குண்டாகி சந்தோஷமுண்டாகும்.

வலது முட்டிக்கை துடித்தால் நோயுண்டாகும்.

இடது முட்டிக்கை துடித்தால் ஜெயமுண்டாகும்.

வலது உள்ளங்கை துடித்தால் ஒரு துட்டு முதலானதை எடுக்கிறது கொண்டு இராஜா புரத்தால் வருத்தமுண்டாகும்.

இடது உள்ளங்கை துடித்தால் தலைமைத் தனமுண்டாகும்.

வலது கொடுக்கை துடித்தால் ஸபர் போனவன் வருவான்.

இடது கொடுக்கை துடித்தால் வெற்றியுண்டாகும்.

வலதுகை பெருவிரல் துடித்தால் சுல்தானில் நின்றும் சங்கையுண்டாகும்.

கலிமாவிரல் துடித்தால் அவனைத்தொட்டும் ஒரு செய்தி உண்டாகி இரணமுண்டாகும்.

நடுவிரல் அடித்தால் நாட்டம் வெத்தும், ருஷிகள் சொல்லு கிறார்கள் வழக்குண்டாகு மென்றும்.

அதை யடுத்தவிரல் அடித்தால் மனிதர்களுக் கிடையில் சாலிஹானவனாவான்.

சின்ன விரல் அடித்தால் கைறுண்டாம், தோழன் மவுத்தாகி அழுகையுண்டாம்.

இஸ்கந்தர் சொல்லுகிறார்கள், இடது கையிலுள்ள பெருவிரல் அடித்தால் ஹலாலான முதலுண்டாகு மென்றும், இராஜாவிலும் மனிதரில் நின்றும் மேன்மை உண்டாகுமென்றும். ருஷிகள் சொல்லுகிறார்கள், கலிமாவிரல் அடித்தால் களவுண்டாகி கிட்டும்.

நடுவிரல் அடித்தால் கடினமான வழக்குண்டாகும்.

அதையடுத்தவிரல் அடித்தால் மிருதி கைறுண்டாகும். தோழன் புறத்தால் சலிப்புண்டா மென்று புருசகள் சொல்லுகிறார்கள்.

சின்னவிரல் அடித்தால் சலிப்புண்டாகி நீங்கும்.

கையடக்கலும் அடித்தால் பிரதேசம் ஸபர்போவான்.

நெஞ்சு அடித்தால் சலிப்புண்டாகும், நோயாளியால் கத்துதல் கெடுவான், ருஷிகள் அஜல் முடுகுமென்றும் சொல்லுகிறார்கள்.

வலது சகனம் அடித்தால் இரணமுண்டாகும், பெண்பிள்ளை யானால் நிகாஹன்றி இன்னானைச் சேர்வாள்.

இடது சகனம் அடித்தால் நலைலுண்டாய் தீரும், ஆனத்து அடித்தால், கலியாணஞ்செய்து ஆண்பிள்ளை மிருதம் பெறுவாள்.

வலது தொடை அடித்தால் நிஃமத்தும் சந்தோஷமும் உண்டாகும்.

இடது தொடை அடித்தால் வழக்குண்டாகி வெற்றி பெறுவான், புருசகள் சொல்லுகிறார்கள்.

ஸபர் போவான் அவனின் முதல் பழுதாமென்றார்.

வலது முட்டி அடித்தால் சலிப்பான பேச்சு கேள்விப்படுவான்.

இடது முட்டி அடித்தால் சந்தோஷமுண்டாகும்.

வலது கெண்டைக்கால் துடித்தால் கையில்லாத முதல்கிட்டும்.

இடது கெண்டைக்கால் துடித்தால் வாணாள் நெடுகமாகும்.

இஸ்கந்தர் சொல்லுகிறார், வலது பாதம் துடித்தால் பொருள் சேதமுண்டாம், மிடுமையாவான்.

இடது பாதம் துடித்தால் மேன்மையும் பெருமையுமுண்டாம். புருசுகள் சொல்லுகிறார்கள், தூரமான ஸபர் போவானென்று. ரூமிகள் சொல்லுகிறார்கள். ஒருதலத்தில் நின்றும் சந்தோஷமான வஸ்துக்கிட்டும், துக்கம் நீங்குமென்றார்.

வலதுகால் பெருவிரல் துடித்தால், தூர சபர்போனவன் மீண்டு வருவான், அதுக்கொண்டு சந்தோஷம் பெறுவான்.

அதை அடுத்தவிரல் துடித்தால் தொழிலில் நின்றும் விஸ்திரணமாகிய றிஸ்குண்டாகும்.

நடுவிரல் துடித்தால் தீங்குண்டாகும், பின்பு சுகமுண்டாகும்.
அதை யடுத்தவிரல் துடித்தால் கேடான பேச்சை சொல்லப் படுவான்.

சின்னவிரல் துடித்தால் தலைமையுண்டாம்.

இடதுகால் பெருவிரல் துடித்தால் தோழமை அதிகமாகும்.

அதற்கடுத்த விரல் துடித்தால் ஒரு தலத்தில் நின்றும் கொள்ளை வாழ்வுண்டாம். அவன் மிடுமையாளியாய் இருந்தால் மிடுமை பதிகமாகும் புருசுகள் சொல்லுகிறார்கள், முதலில் கஷ்டமுண்டாமென்றார்.

நடுவிரல் துடித்தால் கடின கஸலுண்டாகும், வாழ்நாள் நெடுகமாகும்.

அதற்கடுத்த விரல் துடித்தால் முதல் சேதமாகும்வரை தக்க வழக்குண்டாகும்.

சின்ன விரல் துடித்தால் இரணம் வரும், அதை ஹசது தொடும்.

கால்விரல்கள் அடங்கலும் துடித்தால் அறியாப்புறத்தில் நின்றும் ஹலாலான றிஸ்குண்டாகும். (பிஇது னில்லாஹுத் தஆலா.)

துடிநூல் முற்றிற்று.

பாபத்தாஷ்

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

மனாமின் பயான்.

மனாமின் தகுதிகள்.

மனாமுடைய தஃபீரில் இல்மூதான் ஆலம் உண்டானது முதல் துவக்கமாய் உண்டானது. ஏனெனில் நபிமார்களுக்கும், றசூல் மார்களுக்கும் அல்லாஹுத் தஆலா மனாமிலறிவிப்பதையே வஹியாகவும் நபிபட்டமாகவும் இருந்தபடியால், நபிமார்களும் றசூல் மார்களும் மனாமையே தலீலாயெடுத்து அமல்செய்கிறவர்களா யிருந்தார் களென்றும், நம்முடைய நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு முன்னுள்ள இல்மு களில் மனாமுடைய தஃபீரின் இல்மைக்காண சிறப்புடைய இல்மு களில்லை யென்றும் செய்குனா அப்துல்கனீ நாபலஸீபோலொத்த வர்கள் சொல்லுகிறார்கள்.

இன்னும் அல்லாஹுத் தஆலா குர்ஆனில் முஃமினானவர் களுக்குத் துனியாவிலும், ஆகிரத்திலும், நல்லசோபனமுண்டு மென்று சொன்னதை தப்சிருடைய இமாம்களில் சிலர் துனியாவில் நல்சோபன மென்பது ஒரு மனிதன் தான்காண்கிற அல்லது தனக்கு அறிவிக்கப்படுகிற மனாமென்றும் ஆகிறத்தில் அல்லாஹுத் தஆலாவின் திருக்காட்சியென்றும் சொல்லுகிறார்கள். இன்னும் யூசுபு அலைஹிஸ்ஸலாமவர்களுடைய விஷயத்திலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய விஷயத்திலும், மற்றும் நபிமார்களுடைய விஷயத்திலும் குர்ஆனில்தானே மனா முடைய சங்கதிளனேகம் வந்திருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், யாராகிலுமொருவன் சாலிஹான மனாம் உண்மையென்று ஈமான் கொள்ளாதவன் அல்லாஹு தஆலாவைக் கொண்டும், ஒடுக்கத்து நாளுண்டு மென்பதுகொண்டும், ஈமான் கொள்ளாதவனென்று திருவுளமானார்கள். இன்னும் ஹதிதில் வந்திருக்கிறது மார்க்க மாக்கிலைக்கும் நபிபட்டம் போய்விட்டது. மனாமின் புறத்தால்

நல்மாறுப மறிவிப்பது தரிபட்டிருக்கிறதென்றும் இன்னும் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அபூபக்கரினின் ஸித்திகு றலியல்லாஹு அன்ஹு இன்னும் மற்றும் அஸ்ஹாபிகளைத் தொட்டும், மனு முடைய விஷயங்களில் அனேகம் ஹதீது வந்திருக்கிறது. இன்னும் பாரவான் களான ஔலியாக்களைத் தொட்டும், உலமாக்களைத் தொட்டும், மனுமுடைய தக்பீர் ஹக்கான தென்று அனேக தலீல் வந்திருப்பது தவிர பரிசோதித்தும் அது ஸிஹ்ஹத்தான தென்றும் அறியப்பட்டிருக்கிறது. (வல்ஹம்து லில்லா.)

மனுமென்பதை விவரிப்பது.

முஸ்லி மானவர்களில் நின்றும் தஸீபிருடைய இமாம்கள் சொல்லுகிறார்கள், மனுமென்பது மனிதன் ரூஹினால்கண்டு அக்லினால் உத்தேசித்து கொள்வது. ரூஹின் தரிப்பிடம் கல்பின் நடுவிலுள்ள இரத்தபுள்ளி களாயிருக்கும். கல்பின் தரிப்பாடு தலைமூளை சரியான குணமாய்த் தரிப்படுவதாயிருக்கும். ரூஹ் நப்ஸைக்கொண்டு கொழுவியிருக்கிறது. ஒரு மனிதன் நித்திரை செய்தால் அவன் ரூஹ் விளக்கின் சுடர்போல் அல்லது பொழுதின் சுடர்போல் எங்கும் படர்ந்து அதின் ஒளியைக்கொண்டு அல்லாஹுத் தஆலாவின் பிரகாசத்தைக் கொண்டுதானே அல்லாஹுத் தஆலா அறிவிப்பதை அல்லது மனுமுடைய மலக்கு அறிவித்துக் கொடுப்பதை காண்பான். ஆனால் ரூஹ் ஆலமே மலக்கூத்துக்கு அப்புறம்நின்று நபுஸனவில் மீளுகிறது. பொழுதை மேகம் மறைத்துக்கொண்டு அப்புறம் பொழுதைவிட்டு நீங்கினால் எவ்விதமோ அவ்விதம் போலாயிருக்கும. நபுஸ் மூழிப்பாகிறது கொண்டும் ஐயறிவும் அதின் செயலனவில் மீண்டால் அல்லாஹுத் தஆலா அல்லது மனுமுடைய மலக்கு இவனுக்குக் காண்பித்து நினைப்பாக்கிவைத்ததை ரூஹ் ஞாபகப்படுத்திவைக்கும். மனுவில் அறிவிக்கிற மலக்கின்பேர் ஸித்திகூன் யென்றும் ரூஹாயீல் யென்றும் சொல்லப்படுகிறது. அந்த மலக்கின் பாரதூரம் அவர் செவியின் சோணைக்கும், தோளுக்கு மிடையில் 700-வருடத்தின் தூரமாயிருக்கிறது. அவர்தான் மனிதருக்கு பலகோலத்திலும் கோலமாகி வெளஹுல் மஹபூலில் கைறு ஷர்றில் நின்றும் உண்டாயிருக்கின்ற கைபான இல்மை அல்லாஹுத் தஆலாவின் பிரகாசத்தைக்கொண்டு மனிதருக்கு அறிவித்துக் கொடுப்பார்.

அந்த மலக்கு அந்த கைபான இல்மிலுள்ளது. ஏதொன்றும் பிசகிக்கொள்ளாது பரிஷ்காரமாய்த் தெரியும். ஆனதால் அந்த மலக்கு அறிவிப்பது ஹக்கானதாயிருக்கும். மனுமின் தஃபீருடைய உலமாக்களி லொருவர் சொல்லுகிறார்கள், ரூஹின் ஐயறிவு இனிமே லுண்டாவதின்பேரி லறிவிப்பதாலும், ரூஹின் ஐயறிவு ஜடலத்தின் ஐயறிவைக்காண முகமும் வலுப்பமானதும் சிறப் பானது மென்றார்கள்.

இனி மனுமில் ஹக்கானதையும், பாத்திலானதையும் மனும் கண்டபடிக்கு பலிக்கிறகாலங்களையும் அறியவேண்டிய திருப்பதால் அவைகளை இந்த மனுமுடைய பயானின் ஒடுக்கத்தில் சொல்லப் படும். (இன்ஷா அல்லா)

யானையைக் காண்பதின் தஃபீர்.

யானையின் பேரிலேரக் கண்டாலும், அதை உடையதாகக் கண்டாலும், அதைச் சூழ்ந்துக்கொள்ளக் கண்டாலும், அதைக் கொண்டு பின்னையில்லாதவைகள் சிக்கக்கண்டாலும் சுல்தான் தனத்தையும் அடக்கி யாள்கிறதையும், மிகைப்பையும் பெற்றுக் கொள்வான். அல்லது அஜமியான சுல்தானுக்கு இடம் பாடான வனுயிருப்பான். இனி ஒருவன் யானையின் கறியை தின்னக் கண்டால் தின்னக் கதறின்படி சுல்தானில் நின்றும் முதலைப் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் படையில் யானையி லேறக் கண்டால் யானையுடையவர்களின் பேரில் மிகைப்புண்டாம். இனி ஒருவனை யானைப் பிடித்துக்கொள்ள கண்டால் இராஜன் புறத்தால் ஆபத்துண்டாகும். ஈனைவாளிகண்டால் மரணமுண்டாகும். இனி யானையில் பால்கறக்கக்கண்டால் மக்றுதனத்தால் முதலுண்டாம். இனி பலாயுள்ள ஊரைவிட்டும் யானை வெளிப்பட்டுப்போகக் கண்டால் பலாய் நீங்கும், கைறுண்டாம். இனி பெண் பிள்ளை யானையை காணுதல் புகழ்ப்பட்டதில்லை. (வல்லாஹு அஃலம்)

ஹிக்காயத்து.

(மக்ரிபு) தேசத்தின் நிவார்தாத்தில் சில கூட்டத்தில் இராஜா முஸ்லிமானவர்களை வெட்டக் கடலில் யிருந்த கூட்டத்தை

திரட்டினான். அப்போது அவன் மனாமில் யானையிலேறவும், அவன் முன்புக்கு மேளங்களடிபடவும் கண்டதில் அவன் பாதிரிமார்களில் தலைவர்களைக்கூப்பிட்டு அவன் கண்டதை அறிவித்து தஃபீர் கேட்கவும், அவர்கள் சொன்னது நீ நாடியதில் உதவியும், ஜெயமும், பெறுதலுமுண்டுமென்றும், அப்போது இராஜன் அதற்கும் தஃபீ லென்னவென்று கேட்டதில் அவர்கள் சொன்னது யானையாகிறது கரையிலுள்ள மிருகங்களில் மிகவும் வலுப்பத்துடையது, குவ்வத்தாலும் கஹ்றுலும் மிகவுங்கடிசானது, அதில் ஏறுகிறவன் மிகைப்பும் அடக்கியாள்கிறது கொண்டு இடப்பாடக்கி கொள்கிறதுமாகும். மேளங்களடிபடுவது சந்தோஷமும் வெற்றிமாருபமும் கீர்த்தியும் இராஜசனத்திற்கு பிரசங்கமும் இன்னும் இராஜாக்களிடத்தில் சந்தோஷத்திற்கு அடிபடுவதுமாகுமென்று சொன்னார். அப்போது இராஜா மிகவும் ஆச்சரியப்பட்டுக்கொண்டு இவர்களை போகும்படி உத்திரவு செய்துவிட்டு யஹூதி பாதிரிகளை அழைப்பித்து கேட்டதில் உதவியைக்கொண்டும் ஜெயம் பெறுதலைக்கொண்டும் நல்மாருபம் சொன்னதைகேட்டு அவர்களையும் அனுப்பிவிட்டு பிறகு முஸ்லிமாகிய பேர்களுடைய உலமாக்களில் நின்றும் சில கூட்டத்தை அழைப்பித்து அவர்களிலொரு ஷைகிடம் கேட்டதில் அவர்கள் சொன்னதாவது நீ எனக்குக் கார்மானம் தந்தால் நீ கண்டமனாமுக்கு தஃபீர் சொல்லுகிறேன், என்றபோது இராஜன் அமான் கொடுத்து சத்தியஞ்செய்து கொடுத்தான். ஷைகு சொன்னார்கள், நீ நாடிய முஸ்லிமானவர்களை வெட்ட போகிறதில் நலவை பெற்றுக்கொள்ளமாட்டாய். உன்பட்டாளங்களை அனுப்பாதே அவர்கள் திரும்பி வரமாட்டார்கள். நீ அதில் சந்தேகம் வையாதேயென்று சொன்னபோது, இராஜன் இதற்கு தஃபீலென்னவென்று கேட்டான். அப்போது ஷைகுசொன்னார்கள் அதை நான் அல்லாஹுத் தஆலாவுடைய கிதாபில் நின்றும் எடுத்திருக்கிறேனென்று சூறத்தல் பீலை ஓதிக்காட்டி மேளங்களடிப்பட்டதற்கு வழிதாருகிற என்னும் ஆயத்தை ஓதிக்காட்டினார்கள். இதுகளை இராஜன் கேட்டு பயந்து திடுக்கிட்டுச் சொன்னான், நீர் முஸ்லீம்களில் நின்றுமுள்ளவரல்லாதிருந்தால் உம்முடைய சொல்லை நான் ஒப்புக்கொள்ளுவேன். ஆனால் நீர் முஸ்லிமானவர்களை வெட்டப் பொருந்தாமல் சொல்லுகிறீரென்றபோது ஷைகு சொன்னார்கள், நான் சொல்லுகிறதை இனி மேல்

அறிவாயென்று சொல்லிவிட்டு அவர்களுடைய ஜமா அத்துடன் போய் விட்டார்கள்.

பின்பு இராஜன் அவனுடைய சொல்லை யோசித்துக் கொண்டே யிருந்து முஸ்லிமானவர்களை வெட்ட படையை யனுப்ப அவனுடைய ஹிம்மத்தாகி னெல்லாம் பலக்குறைந்து விட்டது. இது பாதிரிமார்களுக்கும் அவனுடைய மந்திரி முதலானவர்களுக்கும் எற்றி அவர்களெல்லோரும் இராஜனிடம் வந்து நீர் நமக்கு விரோதமான முஸ்லிமானவர்களை வெட்டப் பொருந்தாதவனுடைய சொல்லை ஒப்புக்கொள்கிறீர், ஆனதால் எங்களுக்கு உத்திரவு கொடும். நாங்கள் வல்லயங்களைக் கொண்டு துண்டு துண்டாய் தரித்துப் போடுகிறோ மென்று சொன்னார்கள். அப்போது இராஜன் உத்திரவு கொடாமல் விலக்கிப்போட்டான். பின்பு அவர்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து இராஜனுக்கு ஹிம்மத் கொடுத்ததில் இராஜன் அவர்களுடைய சொல்லை ஒப்பி தன் மகனை தலைவனாய் அனுப்பினான். அவர்களெல்லாம் கப்பல்களிலேறி கடலில் போகவே அவர்களை கைறுவான் என்கிற கூட்டத்தாரும் கைரியிலுள்ள பகைவர்களும் ஒன்று சேர்ந்து அவர்களுடன் 3-நாளாக சண்டைசெய்து அவர்களடங்கலையும் கருவறுத்து அவர்கள் கப்பலையும் எடுத்துக்கொண்டார்கள். அவர்களிலொருவனும் மிஞ்சவில்லை. இது செய்தி இராஜனுக்கு எற்றியபோது தக்பீர் சொன்ன ஷைகிடம் வந்து பொருப்புத்தேடி நீங்கள் என்னை குற்றம் பிடியாதேயுங்களென்று அவர்கள் கையை பிடித்து இரகசியமாய் இஸ்லாமாகி ஷைகுக்கு நிருந்த இஹ்சான்கள் செய்து தன்னிட மிருத்திக்கொண்டு அவர்களிடம் குர்ஆன் அடங்கலையும் ஓதிக்கொண்டார்கள். இது செய்தி ஸக்லிய்யா கூட்டத்தாருக்குப் பிரசங்கமாய் விட்டது.

கிர்மானீ றஹிமஹுல்லா சொல்லுகிறார்கள், ஒருவன் பகலில் யானையிலேற கனவுகண்டால் தன்பெண்சாதியை தலாகு சொல்வான்.

புலியைக் காண்பதின் தஃபீர்.

புலியுடன் சண்டைபிடிக்க அல்லது வெட்டக் கண்டால் அவன் பகைவனுடன் சண்டைபிடிப்பான். புலியிலேறி அவன்

காடியபடி திரும்பக்கண்டால் வலுப்பமான சுல்தான் தனத்தை பெற்றுக்கொள்வான். அல்லது பகைவர்களை அடக்கியாள்வான். இனி புலியை முன்னோக்கக் கண்டால் சுல்தானில் நின்றும் அல்லது பகைவனில் நின்றும் பயங்கரமும் திடுக்கமுமுண்டாகும். அவனை தங்கடஞ் செய்யாது. இனி ஒருவன் புலியுடன் கலந்திருக்க அல்லது அதனுடன் புகுத அல்லது அதனுடன் விளையாட அல்லது இவன் வீட்டில் புலி புகுதக்கண்டால் சுல்தானில்நின்றும் பகைவனில் நின்றும் பயங்காமும், திடுக்கமுமுண்டாகும். இனி ஒருவன் புலி இரைச்சியை தின்னக்கண்டால் சுல்தானில் நின்றும் முதலைப் பெற்றுக் கொள்வான். அல்லது இவன் பேரில் சாட்டப்பட்ட மனிதனில் நின்றும் முதலைப் பெற்றுக்கொள்வான். இப்படிப் போலத்தான் அதின உறுப்புகளில் சிலதை தின்னக் கண்டால் குவ்வத்தான மனிதனில் மௌத்தான வனுடைய ஆஸ்தி முதலாயிருக்கும். இனி ஒருவன் புலியை உடையதாகக் கண்டால் அந்த மனிதன் வைத்துவிட்டு மௌத்தான முதலை அனந்திரம் கொள்வான். இனி யாதொருவன் புலியைக்கண்டு அது இவனைக் காணவில்லை, அதைவிட்டும் விரண்டோடக் கண்டால் பயத்தை விட்டும் அச்சந்தீர்வான். இன்னும் இல்மில் பூராயமுண்டாகும். இனி அது இவனை முன்னோக்கவும் இவன் விரண்டோடவும் கண்டால் இராஜன் புறத்தால் அக்ரமுண்டாய் ஹலாக்கைவிட்டும் கலாசு பெறுவான். இனி அது இவனைக் கொல்லாதே அடித்து விழுத்தாட்டக் கண்டால் தாயிமான காய்ச்சலுண்டாம். அல்லது சிறையிலகைப்படுவான். அல்லது ஊனுண்டாம். இனி புலியின் பேரில் பயந்தவனாக ஏறக்கண்டால் பகைவனை அடக்கியாள்வான். இனி புலி மனிதர்கள் பேரில் பாயக்கண்டால் இராஜன் குடிக்கு அநியாயஞ் செய்வான். இனி புலியை மேயக்கண்டால் அநியாயக் காரன் இராஜனை தோழமைப்பிடிப்பான். இனி புலியின் குட்டியை மடியில் வைத்திருக்கக் கண்டால் அவன் பெண்சாதி ஹமலா யிருந்தால் ஆண் பிள்ளை பெறுவாள். இல்லாவிடில் இராஜனுடைய குழந்தையை மடியில் சுமப்பாள். இனி புலி தன்னைக் கொல்லக் கண்டால் இவனடிமையா யிருந்தால் உரிமை பெறுவான். இல்லாவிடில் சுல்தானில் நின்றும் பயமுண்டாகும் இனி புலி இவனை உவக்கக்கண்டால் இவன் கையின்பேரில் புதுமையான கருமங்கள் நடக்கும்.

இனி ஒருவன் பெண்புலியின் தலைக்கறியில் சிலதை தின்னக் கண்டால் அல்லது தலைஅடக்கலையும் தின்னக்கண்டால் அல்லது அதை உடையதாகக் கண்டால் அல்லது அதைப் பொதிந்துக் கொள்ளக் கண்டால் வலுப்பமான சல்தான்தன முண்டாகும். ஒருவன் அதன் பாலைக் குடிக்கக் கண்டால் றிஸ்கையும் கைறையும் பெற்றுக்கொள்வான். பகைவனை மிகைத்துக் கொள்வான்.

இனி ஒருவன் கொடும்புலியுடன் பிணங்கிக்கொள்ள அல்லது அதை வெட்டக்கண்டால் கடிசான பகையுடன் சண்டை பிடிப்பான். இனி ஒருவன் அதின்மேலேறக்கண்டால் சிறப்பையும் சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்வான். பகைவனையும் அடக்கி யாள்வான். அதின் பாலைக் குடிக்கக்கண்டால் அல்லது அதை உடையதாகக் கண்டால் கடிசான விசாரமுண்டாகும். அதன் கறியைத் தோலை மற்ற உறுப்புகளை தின்னக்கண்டால் பகைவனில் நின்றும் முதலைப் பெற்றுக்கொள்வான்.

இனி வேங்கைப் புலியைக்கண்டால் மனிதருடைய தருதியை அறியாத மடத்தனமான பகைவனுமிருக்கும். சிலகால் கள்ளனு மிருப்பான். அதன் பாலைக்குடிக்ககண்டால் தீவிரமாய் கைரைப் பெற்றுக் கொள்வான்.

கறடியைக் காண்பதின் தஃபீர்.

கறடியைக் கனவில் கண்டால் தீங்கின் பேரிலும் பித்னவின் பேரிலும் அறிவிக்கும். சிலகால் சதிமானத்தின்பேரி லறிவிக்கும். சிலகால் சிறை வாருதல் சிறை படுதலின்பேரி லறிவிக்கும். இனி யாதொருவன் காடியின் முதுகில் அவதரிக்கக்கண்டால் தணிவான ஓர் காரியகருத்தின் தனத்தை பெற்றுக்கொள்வான். அதற்கு பாத்திபமல்லாதவனு மிருந்தால் துக்கம்பிடிக்கும். பின் அதைவிட்டும் மீட்சிபெறுவான். இன்னும் சிலகால் அதை காணுதல் சபர்போய் மீண்டு வருகிறதின்பேரி லறிவிக்கும். (வல்லாஹு அஃலம்.)

ஒட்டகையைக் காண்பதின் தஃபீர்.

ஒட்டகையை உடைய தனமாக்கக் கண்டால், தீனில் சலாமத்துண்டாம். இனி ஒட்டகைகளில் குராசானி யாகிய ஒட்டகையைக் கண்டால், சபர்போகுல் சிலகால் விசாரமுண்டாம், சிலகால் அரபியான அல்லது அஜமியான ஓர் பாரமானமனிதனைச் சந்திப்பான். இனி நிக்காஹ்செய்யாதவன் பெண்ஒட்டகையைக் கண்டால் பெண்பிள்ளையைக் காண்பான். நிக்காஹ் செய்தவனு யிருந்தால் சபர்போவான். அல்லது ஒரு வஸ்துவை உடைய தாக்குவான். அல்லது பூமியை அல்லது வீட்டை உடைய தாக்குவான். இனி ஒருவன் ஒட்டகையில் சவாரியாகக்கண்டால் சபர்போவான். இனி ஒருவன் ஒட்டகை தன்பேரில் திரும்பக் கண்டால் விசாரத்தையும், துக்கத்தையும் அல்லது நஸலையும் பெற்றுக்கொள்வான். பின்பு அந்த நஸல் நீங்கிவிடும். இனி ஒருவன் ஒட்டகையை வெட்டக் கண்டால் அல்லது அது இவனுடன் பிணங்கிக்கொள்ளக்கண்டால் பகைவனை வெட்டுவான். இனி ஒட்டகை குராசானியுள்ளதா யிருந்தால் அஜமியான மனிதனைக் காண்பான். இனி ஒருவன் மிருதமான ஒட்டகையை ஓட்டிக்கொண்டு போகக்கண்டால் அல்லது அதுகளை உடையதாகக் கண்டால் மனிதர்களின் பேரில் காரியத் தனத்துடையவனு யிருப்பான்.

இனி ஒருவன் தனக்கு அறியப்படாத ஒட்டகை ஒரு பூமியில், அல்லது ஒரு தலத்தில், அல்லது ஓர் பட்டணத்தில், புகுதக்கண்டால் அவைகளில் பகைவன்புகுதுவான். சிலகால் வெள்ளம், அல்லது வபா, அல்லது நஸல்களுண்டாகும். அந்த ஒட்டகை யிணக்கமானதாயிருந்தால் பகைவன் அல்லது நஸல் அல்லது வபா யிதுகளின் ஒடுக்கம் நலவனவிலும், இணக்கத்தன விலும் ஆயிடும். இனி ஒட்டகை கெட்டதாக பொருத்தக்கேடா யிருந்தால் மேல் சொல்லியதற்கு மாத்திரமுண்டாகும். இனி ஒட்டகையின் கறிகளைக் கண்டால் முதல்களுண்டாகும். ஒரு சொல்படி கறியை தின்னக்கண்டால் நஸலுண்டாகும். இனி ஒட்டகையின் பாலைக்கறக்கக்கண்டால் பெண்பிள்ளையின் நின்றும் ஹலாலான முதல்களை பெற்றுக்கொள்வான். அதின் பின்னும் கறந்தது பாலல்லாமல் இரத்தம் ஜலம்போல்கொத்தரை கறக்கக்

கண்டால் அந்த முதல் ஊருமான தாயிருக்கும். இனி ஒருவன் ஒட்டகையின் பாலை தன்கையால் கறவாமல் குடிக்கக்கண்டால் வலுப்பமான சுல்தான் தனக்குடைய மனிதனில் நின்றும் முதலைப்பெற்றுக்கொள்வான். அந்த ஒட்டகையின் குட்டியையும் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன தன் ஒட்டகை தன்னை விட்டும் புறப்பட்டு போக அல்லது களவு போகக்கண்டால் இவன் பெண்சாதி இவனை விட்டும் பிரிந்திடுவாள். (வல்லாஹு அஃலம்.)

குதிரையைக் காண்பதின் தஃபீர்.

யாராகிலு மொருவன் குதிரையைக் கனவில் கண்டால் ஆண் பிள்ளைக்கு தலைமைத்தனமும், சிறப்பும், சுல்தான் தனமுமுண்டாகும். இனி ஒருவன் குதிரையிலேற அது தாமதமாக நடக்கவும், குதிரையின் உறுப்பு சிறப்பமான தாகவும் கண்டால் சுல்தான் தனத்தையும் சிறப்பையும் பெற்றுக்கொளவான். இப்படிபோல தான் தனக்கு குதிரையுண்டாயிருக்கக்கண்டால் அல்லது குதிரையைப் பிடித்து கட்டிக்கொள்ளக்கண்டால் மேற்சொன்னதுகளைப்பெற்றுக் கொள்வான்.

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், குதிரையைக் கட்டிக்கொள்ளுங்கள். அதன் முதுகுகளாகிறது உங்களுக்கு சிறப்பாயிருக்கும். அதன் வயறுகளாகிறது உங்களுக்குப் புதையலாயிருக்குமென்று திருவுளமானார்கள்.

இனி குதிரைகளின் உறுப்புகளில், அல்லது மேனியில்குறைத்தலை, அல்லது மிருதத்தைக்கண்டால் இவன் கருமத்தில் அதிக குறைத்தலுண்டாகும். இனி ஒருவன் குதிரையில் குறைவுதலைக் கண்டால், அல்லது அதன் கடிவாளத்தில், அல்லது அங்கவடியில் அல்லது அதன்விரிப்பில் இதுகளல்லாதில் குறைவுதலைக்கண்டால், இவன் சுல்தான் தனத்திலும், சிறப்பிலும், மேன்மையிலும் அதன் கதறின்படி குறைத்தலுண்டாகும் குதிரைக்கு நீளமான வாலுண்டாயிருந்தால் அல்லது பருப்பமான வாலுண்டாயிருந்தால் அந்தவாலின் கதறின்படி இவனுக்கு தொடர்ச்சியுண்டாகும். இனி

குதிரைமுடி மிருந்ததாயிருந்தால், அல்லது வால் தரிக்கப்பட்ட தாயிருக்கக்கண்டால் அதன் தொடர்ச்சி சுருக்கமாயிருக்கும். அதன் உறுப்புகளின் ஒவ்வொரு உறுப்படங்களும் இவன் சல்தான் தனத்தில் நின்றும் பணமாயிருக்கும். அந்த உறுப்பின் கதரின்படி ஒருவன் குதிரையை தனக்கு வழிப்படாததாய்க்கண்டால் அல்லது முட்டக்கண்டால் பாவஞ்செய்வான். அந்தகுதிரையின் குவ்வத்து டைய கதறின்படி அமளியான கருமங்களைப் பெற்றுக்கொள்வான். ஒருவன் குதிரையை வானத்திற்கும் பூமிக்குமிடையில் பறக்கக் கண்டால் அல்லது இரண்டு சிறகுகளுண்டா மிருக்கக்கண்டால் தன்பாகிலும், அதிறத்திலும் சிறப்பைப் பெற்றுக்கொள்வான், சிலகால் சபர்போவான். இனி ஒருவன் குதிரையை பட்டணங்களில் அல்லது தெருவிதில் வையாளிபோடக் கண்டால் வெள்ளமும், கடிசான மழைகளுமுண்டாகும். அது விரிப்புகளுடனிருந்தால் சந்தோஷங்களுண்டாகும் அல்லது வருத்தங்களுண்டாகும்.

இனி குதிரையின் நிறம்கருப்பும், வெண்மையும் கலந்தநிறமா யிருந்தால் அவன் தலைமைதனத்திலும், சல்தான் தனத்திலும், சிறப்பிலும் தரிபாடாயிருப்பான். இனி அது கருப்பாயிருந்தால் அதிகளுடன் பொருளையும், சந்தோஷத்தையும் பெற்றுக்கொள் வான். இனி அது செம்மை நிறமாயிருக்கக்கண்டால் தீனில் குவ் வத்தையும், இணக்கத்தையும் பெற்றுக்கொள்வான். இனி குதிரை வெண்மைக்கும் கருப்புக்கும் நடுவேயுள்ள நிறமுடையதாயிருந்தால் பூமியில் பொருத்தக்கேடான கருமத்தைப் பெற்றுக்கொள்வான். வெளுத்த நிறமாயிருக்கிறது கருப்பும் வெண்மையும் கலந்தநிறத் தைப்போலிருக்கும். சிவந்த நிறமாகிறது நிறங்களடங்கலிலும் ஒடுக்கம் புகழப்பட்டதாயிருக்கும். ஒருவன் ஒருமனிதனைக் குதிரையின்பேரிலேற்றிவைக்கக்கண்டால் அதனில் சேர்க்கப்பட்ட கருமத்தனில் அந்த மனிதனுடன் சேருவான். பெண்குதிரை யைகண்டால் பெண்பிள்ளையாயிருக்கும். ஒருவன் குதிரையையுடை யதாக்கண்டால், அல்லது அதில் ஏறக்கண்டால் சிறப்பான பறக் கத்துச் செய்யப்பட்ட பெண்பிள்ளையை பெற்றுக்கொள்வான். குதிரை கருப்பான பெண்குதிரையாயிருந்தால் சீமான் தனமான பெண்பிள்ளையாயிருப்பாள். பங்கிரமாயிருந்தால் அழகானவளா யிருப்பாள். பச்சைநிறமாயிருந்தால் தீனுடையவளாகவும் வாழ் வுடையவளாகவு மிருப்பாள். மகாமிறது அதின் குட்டிகளாயிருக்

கும். குதிரையில் ஹலாக்குகளவுபோல்கொற்ற முண்டாயிருந்தால் தன் பெண்சாதியிலுண்டாகும். அதன் சுறியைத் தின்னக்கண்டால் மூதலும் சிறப்புமுண்டாகும். சாலிஹானபேரையும், அழகான நிக்கையும் பெற்றுக்கொள்வான். இனி குதிரை தனக்கு அறியப் படாததாகவும் தான் உடையதாகா ததாகவும், நல்ல மேனியுடைய தாகவும் தான் ஏராததாகவுமிருந்தால் இவன் தகுதி வலுப்பமான வனாகவும் சிறப்பானவனாகவுமிருப்பான். இவன் அதை ஒருதலத்தில் அல்லது ஒரு வீட்டில் புகுதக்கண்டால், அதில் வலுப்பமான சிறப்பான மனிதன் புகுதுவான். அதை தன் வீட்டைவிட்டும் அல்லது தன் மஹல்லை விட்டுபுறப்படக்கண்டால் அதில் நின்றும் இதுபோல்கொற்றது புறப்பட்டுபோய்விடும். இனி குதிரையின் நடை தாமிதமான ஒற்றைக் குதிரையைக்கண்டால் இவன் தெண்டிப்பும் தன்பேருமாயிருக்கும். தனக்கு அது வழிப்படக் கண்டால் இவன் தொண்டிப்பும் தனக்கு வழிப்பட்டதாய்விடும் இதற்கு மாற்றமாய்க்கண்டால் இவன் தொண்டிப்பும் தனக்கு மாற்றமாயிருக்கும். ஒருவன் அரபியத்தான குதிரையில் ஏறக் கண்டால் இவன் மர்த்தபா குறைந்து இவன்பேர் குறைந்துபோகும். இவன் ஆதத்து எப்பொழுதும் நடைதாமிதமானதின்பேரில் ஏறுதல் வளமையானவனாயிருந்தால் இவன் கீர்த்தி உயர்ந்திடும். இவன் பெயர் மேலாகிவிடும். இதில் பெண்குதிரையைக்கண்டால் அறபிய்யத்தான பெண்குதிரையின் தன்வீலை போலிருக்கும். இப்படிப்போல்தான் அதன் நிறங்களைக்கண்டாலும், ஆகிலும் நடை தாமிதமானது அரபிய்யத்தல்லாத அஜமியத்தான் பெண்பிள்ளை களாயிருக்கும். (அல்லாஹு அஃலம்.)

கழுதையைக் காண்பதின் தஃபீர்.

கழுதையைக் கனவில்கண்டால் தெண்டிப்பும், சீதேவித்தனமும் நல்பேருமுண்டாகும். அதில் ஏதாவது குறைத்தலை அல்லது கூடுதலைக் கண்டால் இவன் சீதேவித்தனத்திலும், தெண்டிப்பிலும் அதுபோலுண்டாம். பெண்கழுதையைக் காண்கிறது ஆண்கழுதை யைக்காண்கிறதுபோலிருக்கும். கைநடக்கலிலும் வரிசையாகவு மிருக்கும். இனி ஒருவன் கழுதையிலேறக்கண்டால் அது தனக்கு

வழிப்பட்டதாகவுமிருந்தால் இவனை அது கைதளவில் மூழிப்பாக்கிலைக்கும். பழங்களையும், நிஸ்குகளையும் சேகரம்பண்ணுகிறதில் வருத்திவிடும். இனி கழுதை கருநிறத்துடையதாயிருந்தால் பொருளையும், இராஜாங்கத்தையும் பெற்றுக்கொள்வான். மற்ற நிறங்களும் மேற்சொன்னபடி குதிரையின் நிறங்களைப்போலிருக்கும். குதிரையில் ஏறுகிறதிலும், கட்டுகிறதிலும், அதை உடையதாக்குகிறதிலும் வித்தியாசமில்லை. இனி கழுதையை ஓடாமல் நிற்கக்கண்டால் வரிசையும், மிகுந்த கைறையும் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் கழுதையிலேறி வீதிவிட்டதில் கீழேவிழக்கண்டால் தானிருக்கிற ஊரைவிட்டும் தாழ்ந்த ஊரிலாகிவிடுவான். சிலகால் மௌனத்தளவில்வரும். ஒருவன் கழுதையின் வளமையிலிறங்கக்கண்டால் பாதொருதங்கடமில்லை. அதனளவில் மீளாததை மறைத்துக்கொண்டால் தானிறங்கினவனால் அதனைவில் மீளாது.

இனி ஒருவன் கழுதையை வெள்ளிக்காசு தங்கக்காசு கொண்டு விலைக்கு வாங்கக்கண்டால் அதைத்தன்கைக்கொண்டு புரட்டினவனுமிருக்கையில் தனக்கு தகதுண்டாகும். அல்லது கைமுன பேச்சுகளை பேசுவான். ஒருவன் விலையை ரொக்கம் கொடுக்கக்கண்டால் திரகங்களைக்காணவில்லை. அதுகளை கைக்கொண்டு புரட்டவுமில்லையானால் கைறைப் பெற்றுக்கொள்வான். ஷாக்றசெய்வான். அந்தவிலையாகிறது அந்த நிலமத்துக்கு ஷாக்றுமிருக்கும். இனி ஒருவன் கழுதையை பார்வைக்குறைத்தலாக அல்லது ஒற்றைக்கண்ணுடையதாகக்கண்டால் இவன் மயீஷத்துடைய கருமத்தில் பிசகுதலுண்டாகும். கழுதையின் மாட்டாங்கித்தனமுண்டாயிருந்தால் இவனுக்கும் அறியாத சில கருமங்களுண்டாகும். ஒருவன் தன் கழுதையைக் கோவேறு கழுதையாக ஆகிவிடக்கண்டால் இவன் தெண்டிப்பும், மயீஷத்தும் வேறொரு மனிதன்பேரில் திரும்பிவிடும். இவன் சபரிலாய் விடுவான். அது குதிரையாயிடக்கண்டால் இவன் மயீஷத்து சுல்தானில்நின்றும் அல்லது சிறப்பான மனிதனில் நின்றுமாயிருக்கும். இனி ஒருவன் தன்கழுதை சுமையைவிட்டும் ஏலாமையாகநின்றுல் அல்லது ஏறுகிறதில் நடையில் ஏலாமையானதாய்க்கண்டால் இவன் தெண்டிப்பு லயீபாயிடும். துனியாவில் இவன் சீதேவித்தனம் சுருக்கமாயிடும். இனி ஒருவன் கழுதைக்கறியைத் தின்னக்கண்டால் அல்லது கறியை வாங்கக்கண்டால் அல்லது கழுதையைத்

தின்ன அதுக்கக்கண்டால் கெடுதலான மூதலைப் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் பெண்கழுதையின் பாலை குடிக்கக்கண்டால் கடினான நோயாளியாயிடுவான். ஒரு சொற்படி அந்த நோயை விட்டும் நீங்கிவிடுவான்.

இனி சோவேறு கழுதையில் ஏறக்கண்டால் இவன் வழக்காளி வங்ஷபதியில்லாத அடிமை ஆடுமேய்ச்சிவனில் பிறந்தவன் போல் கொற்றவனுயிருந்தால் அவனை படக்கியாண்டு மிகைத்து ஜெயம்பெறுவான். இந்தமனுமை பெண்பிள்ளைக்கண்டால் மேற்சொன்னவனுக்கு வாழ்க்கைப்படுவாள். சிலக்கால் கழுதையைக் கண்டால் சபர்போவான். இனி கோவேறு கழுதை பெண் கழுதையாயிருந்து அதின் பேரில் கடிவாளம் அங்கவடிபோல் கொற்றைதைக் கண்டால்நிக்காஹு செய்வான். சிலகால் அவனுக்குத் தலைமைத்தனமும் கீர்த்தியுமுண்டாகும். அதின் கறிகளை தோல் களைக்கண்டால் மூதலுண்டாகும். அதின் பாலை குடிக்கக்கண்டால் கதறின்படிகைறை பெற்றுக்கொள்வான், வருத்தமுண்டாகும். (வல்லாஹு அஃலம்.)

மாட்டைக் காண்பதின் தஃபீர்.

மாட்டை கனவில்கண்டால் அது ஒரு வருஷமாயிருக்கும் சிலகால் பெண் பிள்ளையாயிருக்கும். கருத்தமாட்டைக் கண்டால் அந்த வருஷம் செழிப்புடைய வருஷமாயிருக்கும். கருத்த மாடுகள் ஒரு மித்த கூட்டமாயிருக்கக்கண்டால் அவைகள் கொழுத்திருக்கிற கதறின்படி வருஷங்கள் செழிப்பாயிருக்கும். அவைகள் மெலிந்ததாய்க்கண்டால் வருஷங்கள் பஞ்சமாயிருக்கும். இனி கொழுத்த மாட்டை உடையதாகக்கண்டால் செழிப்பான வருஷமாயிருக்கும். அல்லது இவனிருக்கிறுவே அந்தத் தலத்துடையவர்களுக்கு செழிப்புண்டாகும். மாட்டின் கறிகளைக்கண்டால் அந்த வருஷங்கள் மூதல்களுண்டாகும். இப்படிப்போல்தான் அதின் தோல்களை அதின மலங்களைக்கண்டால் மூதலுண்டாகும். இப்படிப்போல்தான் மற்ற மிருகங்கள் மலங்களைக்கண்டாலும் மூதல்களுண்டாகும். ஆகிலும் அதின் மூருமும் ஊலாலும் அந்த வாடையின் கதறின்படியாயிருக்கும். இப்படிப்போல் தான் வயிற்றுகளில் நின்றும் புறப்

படுகிற வஸ்தடங்களும் அதின் வாடைகளின் விதப்படியிருந்த வஸ்துகளாயிருக்கும். அதில் கையமில்லை. இனி மாட்டின் செய்பாலை பெற்றுக்கொள்ள அல்லது உடையதாகக் கண்டால் முதல்களுண்டாகும். செழிப்பும் வாழ்வுமுண்டாகும். இனி ஒருவன் மாட்டின்பாலை கறந்து குடிக்கக் கண்டால் இவன் பக்கிராயிருந்தால் வாழ்வுடையவனாயிருப்பான். இவன் சீமான் தனத்துடையவனாயிருந்தால் மென்மேலும் தௌலத்துடைய வனாயிருப்பான். இவன் அடிமையாயிருந்தால் உரிமை பெற்றுத் தன்னாச்சியாளை கலியாணம் முடித்துக்கொள்வான். இனி மாட்டை சினையாயிருக்கக்கண்டால் அந்த வருஷம் கைறுகொண்டும் செழிப்பு கொண்டும் ஆதரவு வைக்கப்பட்டதாயிருக்கும்.

காளைமாட்டை கனவில் கண்டால் சுல்தான் வேலைக்காரர்களில் நின்றும் ஒரு வலுப்பமான உத்தியோகத்துடையவனை சந்தித்துக்கொள்வான். அல்லது குவ்வத்துடைய மனிதனை சந்தித்துக் கொள்வான். அந்த காளைமாட்டிற்கு கொம்புண்டாயிருந்தாலப்படி. அதற்கு கொம்பில்லாமலிருக்கக்கண்டால் தாழ்மையான பழிப்பான கிலமத்துகளை உரியப்பட்ட குறைத்தலானவனை சந்தித்துக் கொள்வான். இனி ஒருவன் காளைமாட்டில் ஏறக்கண்டால் அல்லது அதையுடையதாகக்கண்டால் சுல்தானுடைய வேலைகளினின்றும் உத்தியோகத்தைப் பெற்றுக்கொள்வான். அதில் கைறையும்பெற்றுக் கொள்வான். சுல்தானுடைய வேலைக்காரர்களில் நின்றும் அநேக கைறுகளைப் பெற்றுக்கொள்வான். அந்தமாடு தன்வீட்டில் புகுந்து அதைக்கட்டிக் கொள்ளக்கண்டால் தனக்கு முதல்களை கார்மானம் ஆக்கிக்கொள்வான். இவன் கைறு அதிகமாய்விடும். ஒருவன் காளைமாட்டை உடையதாகக் கண்டால் முதல்களின் பேரில் கெட்டிப் பத்திரமாய் தன்கையிற் ஆக்கிக்கொள்வான். இனி காளைமாடு இவனை முட்டக்கண்டால் இவன் வேலையைவிட்டும் எடுபட்டு அந்த மாடு முட்டின கதறின்படி தங்கடத்தை பெற்றுக் கொள்வான். அந்த மாட்டின் கொம்பு ஒடிந்திடக் கண்டால் இவன் வேலைகளில் பொருந்தக்கேடை பெற்றுக் கொள்வான். வேலையைவிட்டும் நீங்கிவிட முடுகி விடுவான். காளைமாட்டின் கொம்பு அவனுக்கு சிறப்பும், முதல்களும் ஆயுதபாணிகளுமுண்டாகும். ஒரு பெண்பிள்ளை காளைமாட்டின் பேரில் ஏறக் கண்டால் அவளுக்கு புருஷனில்லாத வரையில் இந்த ஊவின்படி

ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப் படுவாள். அவளுக்கு புருஷன் மிகவும் தாழ்மையாய் நடப்பான். அவள் மேலாய்விடுவாள். இனி காளை மாட்டின் கறியைக் கண்டால் வேலைக்காரனுக்கு முதலுண்டாகும். அதன் தோலைக் கண்டால் அவன் விடு முதலாயிருக்கும். இனி ஒருவன் காளைமாட்டை அறுத்து கறியை பங்கு வைக்கக்கண்டால் அவன் மௌத்தாய் விடுவான். அந்த காளைமாடு உழவுபோல்கொற்ற வேலையுடைய தல்லாததா யிருந்தால் அந்த மனிதன் அந்த தலத்தில் மௌத்தாகி அவன் முதல்களை பங்கு வைக்கப்படும். இனி ஒருவன் காளைமாட்டை அல்லது அதன் குட்டியை அறுக்கக் கண்டால் ஒரு மனிதனை அடக்கியாண்டு அவன் முதல்களை அநியாயமாய்த் தின்றுபோடுவான். இனி அறியப்படாத காளைமாட்டைக் கண்டால் அதனுடையவனு மில்லாதிருந்து ஒரு தலத்தில் அல்லது ஒரு வீட்டில் புகுதக்கண்டால் அந்த தலத்தில் கலல்கள் வபாக்கள் விசேஷமாகும். அதன் நிறங்கள் விகற்பமா யிருந்தால், அல்லது சிகப்பாயிருந்தால், அல்லது மஞ்சளாயிருந்தால் அவசியமாகவே அத்தலத்தில் கலல் வபாவுண்டாகும். இனி காளைமாடானது கட்டிடங்களை முட்டித் தள்ளக்கண்டால் அத்தலதில் பித்னுக்கள் வெளியாகும்.

இனி பசுவின் கறந்த பாலைக்கண்டால் ஹலாலான முதல்களுண்டாகும். அதன் சப்தத்தைக் கேட்டால் அதபாகிய மனிதர்களா யிருக்கும். அது கடிக்கிறதாய்க் கண்டால் நஷ்டமுண்டாகும். பசுவாவது, காளையாவது இவனை பாயவும் இவன் அதைவிட்டு தப்பாம லகப்பட்டவனாகவும் கண்டால் அவ்வருடத்தில் மௌத்தாவான். அன்னியன் மாட்டை எடுக்கக் கண்டால் அவனுடைய மனைவியை சதிமானஞ் செய்வான். (வல்லாஹு அஃலம்.)

ஆட்டைக் காண்பதின் தஃபீர்.

ஆட்டை கனவில் கண்டால் சுல்தானுடைய வேலைக்காரர்களில் நின்றும் வலுப்பமானவனாகவும், மனிதர்களுக் கிடையில் சிறப்பானவனாகவும், வாழ்வுடையவனாகவும், குவ்வத்தில் சத்ர வீரத்தனத் துடையவனாகவு மிருப்பான். இனி ஒரு ஆட்டைப்

பிடித்துக்கொள்ள, அல்லது அதை உடையதாக்கக் கண்டால் சுல்தான் தனத்தையும், முதல்களையும் பெற்றுக் கொள்வான். வலுப்பமான மனிதர்களையும் படக்கொள்வான். இனி ஒருவன் கறி அல்லாததற்காக ஆட்டை அறுக்கக் கண்டால், அல்லது அதைக் கொல்லக் கண்டால் வலுப்பமாகிய குவ்வத்துடைய மனிதனை ஜெயம் பெறுவான் இனி ஒருவன் ஆட்டை யறுக்கக்கண்டால் தன் முதல்களை யெடுத்து தனக்கும் தன் பொருளுக்கு மிடையில் பிரித்துவிடுவான். அதன் கறியைத்தின்றால் தன் பொருளைத் தின்று போடுவான். இனி ஒருவன் ஆட்டின்மேல் ஏறி தான் நாடிய இடத்தில் திரும்பக்கண்டால் அதில் நின்றும் கைறைப் பெற்றுக் கொள்வான். ஒருவன் அதைத் தன் முதுகின்பேரில் சுமந்துக் கொள்ளக்கண்டால் ஒருமனிதன் சிலவுகளை சுமந்துக் கொள்வான். இனி ஒருவன் தன்பேரில் ஆடேறக்கண்டால் இவன்பேரில் ஒருமனிதன் ஏறி அடக்கியாள்வான். இனி ஒருவனை ஆடு முட்டக்கண்டால் இவனை அடக்கியாளப்படும் இவன் குவ்வத்தும் வைச்சிதம் போய்விடும். இனி ஒருவன் ஆட்டுக் குட்டியை உடையதாகக் கண்டால் மனிதர்களில் சிறப்பாகிய வலுப்பமாகிய பேர்களுக்கு இராஜாவா யிருப்பான். இப்படிப் போல்தான் அவைகளை மேயக் கண்டாலும் ஒருவன் உலுஹிய்யா கொடுக்க ஆட்டை அறுக்கக்கண்டால், அல்லது ஆடல்லாததை உலுஹிய்யாவுக்கு அறுக்கக்கண்டால் அடிமைத்தனம் நீங்கிப்போகும், அல்லது சிறைச்சாலையில் கிடக்கிறவன் மீட்சி பெறுவான், அல்லது நோயாளி சுகமாவான், அல்லது கடனிருபடும், அல்லது மிடிமைக்குப்பின் வாழ்வுண்டாகும். இனி ஒருவன் பள்ளாட்டைப் பெற்றுக்கொள்ள, அல்லது உடையதாகக் கண்டால் சிறப்பான சங்கையான பேருள்ள பெண் பிள்ளையை பெற்றுக்கொள்வான். இனி அதன் கறியைத்தின்று கிறதற்காக அறுக்கக்கண்டால் அதினால் கைறைப் பெற்றுக் கொள்வான். இனி அதின் கறியைதின்ன நாட்ட மிருக்கக் கண்டால் ஒரு பெண்பிள்ளையை நிகாஹு செய்வான். இனி ஒருவன் அதைத்தன் வீட்டை விட்டும் பறக்கக்கண்டால், அல்லது பழுதாய்ப் போகக்கண்டால் அல்லது களவு போகக் கண்டால் தன் பெண்சாதியில் நின்றும் தனக்கெடுதலுண்டாம். ஆட்டின்கொழுப்புகள், கறிகள், தோல்கள், பால்முடிகள், அதின்

வலங்கள் இவைகளடக்கலேயும் பெற்றுக்கொள்ளக் கண்டவனுக்கு மூதல்களும் வாழ்வுமுண்டாகும். இனி ஆட்டின் குட்டியை இவனுக்கு ஹிபது கொடுக்கக்கண்டால் இவனுக்குப் பிள்ளை பிறக்கும்.

இனி ஒருவன் அதன் கறியைத் தின்ன நாடாமலிருக்கக் கண்டால் அவன் பிள்ளை, அல்லது அவன் கூட்டத்தில் சிலர் மௌத்தாய்ப் போவார்கள். அவன் கறியைத் தின்னக்கண்டால் அவன் பிள்ளையின் சபபினுல் மூதல்களைப் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் ஆட்டின்கறியை ஆக்கப்பட்டதாய்த் தின்னக் கண்டால் அவன் செழிப்புகளையும், றிஸ்கையும் பெற்றுக் கொள்வான். இனி ஒருவன் கறியை பச்சையாய்த் தின்னக் கண்டால், அல்லது அதைக்கொண்டு ஒரு மனிதனையடிக்கக் கண்டால் மனிதர்களுக்குப் புறம்பேசுவான். அல்லது மனிதர்களை நாவுகொண்டு தங்கடம் செய்வான். ஒருவன் கடப்பட்ட கறியைத் தின்னக்கண்டால் விசாரம் வருத்தத்துடன் றிஸ்கை பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் தன்வீட்டில், அல்லது தன் மஹலில் தோல் உரிக்கப்பட்ட ஆடு புகுதக்கண்டால் அந்த தலத்தில் ஒரு மனிதன் மௌத்தாவான். ஆட்டின் உறுப்புகளில் சிலதாயிருந்தால் எவனளவில் அதின் உறுப்பை சேர்க்கப் படுகிறதோ அவன் மௌத்தாவான். ஆட்டின் காலை அல்லது அதின் உறுப்பைத் தின்னக்கண்டால் அவன் குடும்பத்தில் சிலர் மௌத்தாவார்கள். ஒருவன் ஆடு மேய்க்கக்கண்டால் மனிதர்களின் பேரில், காரியகருத்தனு யிருப்பான். இனி அறிப்படாத கன்னாவைக் கண்டால் மலக்கல் மௌத்து அல்லாஹில்லாமைக் காண்கிறதாயிருக்கும். இனி ஒருவன் கஸ்ஸாபுகளில் நின்றும் ஒரு கஸ்ஸாபு இடத்தில் வாங்கி தன் வீட்டில் கொண்டுவரக் கண்டால் அந்த உறுப்பை சேர்க்கப்பட்டவனுக்கு மூஸீபத் துண்டாகும். அதின் விலையை கொடுத்தால் மூஸீபத்தைக் கார்க்கப்படும். அதின் விலையை கொடாத வரையில் அந்த மூஸீபத்திலுல் திடுக்கப்படுவான். அதைக் கார்க்கப்படாது. இனி ஒருவன் ஆடாய் புரளக்கண்டால் கைறை பெற்றுக்கொள்வான். இனி ஆட்டின் அகத்திலுள்ள ஈரல், மாங்காய், கொழுப்பு, தாமரைக்காய் இதுபோல் கொற்றதெல்லாம் மூதல்களாயிருக்கும். இனி ஒருவன் இவைகளில் நின்றும் ஒரு வஸ்துவைத் தின்னக்

கண்டால், அல்லது தின்னாமல் உடையதாகக் கண்டால் மீளவும் அதுவும் முதல்களா யிருக்கும். அவைகள் அவிக்கப்பட்டதா யிருந்தாலும் சரிதான், இப்படிப்போலதான் மிருகங்களுடைய உறுப்பு இவைகளிலெல்லாம் மனிதன்உறுப்புகள் வரிசையானதா யிருக்கும். இனி ஆடு ஆடல்லாத மற்றமிருகங்கள் தலையைக் கண்டால் இவன் வாணாள் நீளத்தின்பேரில் அறிவிக்கும். முதல்களின் பேரிலும் மிருதி கைறின்பேரில் அறிவிக்கும். இவைகளில் மனிதர்கள் தலைவரிசையானதா யிருக்கும். செம்மறியாட்டிற்கும் பள்ளாட்டிற்கும் இடையில் தாவீலில் யாதொரு பிசகுமில்லை.

தின்னப்பட்ட ஹைவான்களில் சிலதை காண்பதின் தஃபீர்.

மானை கனவில் காணுதல் அழகிய பெண்ணாகும், ஆதலால் யாதொருவன் ஒரு பெண்மானையுடைய தனம் பெறக் கண்டால் வெள்ளாட்டியை கொள்ளையுஞ் செய்வான், அல்லது ஒரு பெண் கொள்வான். இனி மானை வேட்டையாடி பிடிக்கக் கண்டால் துன்யாவுடைய இன்பங்களைப் பெறுவான். மானை எடுத்துக் கொள்ளக் கண்டால் அந்தரத்தையும், அநேக கைறையும் பெற்றுக் கொள்வான். மானின் பின்னடியில் தொடர்ந்து போகக் கண்டால் குவ்வத்துண்டாம்.

இனி ஒருவன் காட்டுக் கழுதை, அல்லது காளைமாடு, அல்லது ஒட்டகம் இவைகளில் ஏற அல்லது உடையதாகக் கண்டால் அல்லது அதற்கு இடம்பாடா யிருந்தால், அல்லது அதினுடன் புகுந்திருந்தால், அல்லது அதினுடன் கலந்திருந்து வேட்டையாட நாடாதவரையில் தீனில்லாத விரோதமான மனதுடனிருந்து அவனுக்கு இடம்பாடானவனா யிருப்பான். இனி பிணங்கிக் கொள்ளக் கண்டால் இந்த மனிதனுடன் பிணங்கிக் கொள்வான். இதில் மிகைத்துக் கொண்டவன் ஜெயம் பெறுகிற வனாகவிருக்கும். இரண்டு இனமும் வகையும் மாத்திரமா யிருப்பதால் இனி பிணக்கம் ஒரு இனத்துக்கிடையி லிருந்தாலோ மிகைத்துக் கொண்டவன் ஜெயம்பெற மாட்டான். அப்துர்ரஹ்மா னிப்னுர்

றுபைனி அப்துல் மலிகிப்னுமர்வான் றழிமஹுல்லாஹு அலைஹிமாவுக்கும் மூன் இரண்டு பேருக்கு மிடையில் நடந்த சங்கதியில் சொன்னது போல விருக்கும். இனி அந்த மிருகங்களை வேட்டையாடக் கண்டால் மூதல்களையும், கொள்ள வாழ்வுகளையும் பெற்றுக் கொள்வான். அதில் ஆண் பெண்ணுக் கிடையில் வித்தியாசமில்லை. இனி காட்டு மிருகங்களில் பெண் மிருகங்களை வேட்டையாடக் கண்டால் பெண் பிள்ளைகளும், ஆண்பிள்ளைகளும் வெள்ளாட்டிகளுமா யிருக்கும்.

இனி ஒருவன் மானை அறுக்கக் கண்டால் கன்னிதாரமானவளை கற்பழிப்பான். இனி புறடியில் நின்றும் அல்லது உறுப்பின் தலமல்லாததில் நின்றும் அறுக்கக் கண்டால் ஆண்பிள்ளைகளுடன் சேர்வான். பெண்பிள்ளைக ளன்றியே இனி ஒருவன் மானை, அல்லது மாட்டை வேட்டை யாடாமல் வெட்டக் கண்டால் பெண்பிள்ளைகளில் நின்றும் மூதல்களைப் பெற்றுக் கொள்வான் இனி மூதலைக் கண்டால் பெண் பிள்ளையைக் காண்பான். அதினால் யாதொரு நஷ்டம் பிரயோசனமில்லை. இனி தின்னப்பட்ட காட்டு மிருகங்களின் குட்டிகளைக் கண்டால் பிள்ளைகளா யிருக்கும். சிலகால் ஆண்பிள்ளைகளா யிருக்கும். இனி ஒருவன் காட்டின் மிருகங்களை யுடையதாகக் கண்டால், அல்லது அவைகளினின்றும் ஒன்றைப் பெற்றுக் கொண்டு அவைகள் இவனுக்கு வழிப்படாததாகவும், இவன் நாடியபடி அவைகளை செய்யக் கண்டால் மனிதர்களின் பேரில் காரியகர்த்தனா யிருப்பான். இனி அதில் தோல்கள் பால் கொழுப்புப்போற் கொற்ற தடங்களில் சிலதை பெற்றுக் கொண்டவனுக்குக் கொள்ளவாழ் வுண்டாகும்.

இனி முயலைக் கனவில் கண்டால் அழகிய பெண்ணா யிருக்கும். அதை யறுக்கக் கண்டால் நிலையில்லாப் பெண்ணா யிருக்கும். அதன் தசையை சமைத்துத்தின்னக் கண்டால அவனறியா புறத்தில் நின்று இரண மூண்டாகும். அதை வேட்டையாட, அல்லது இரும்பெற, இல்லது கிரயத்திற்கு வாங்கக் கண்டால் திஸ்குண்டாகும். நிகாஹில்லா தவனா யிருந்தால் விவாகமுண்டாகும். அல்லது குழந்தை யுண்டாகும். (வல்லாஹு அஃலம்.)

நாயைக் காண்பதின் தஃபீர்.

நாயுடன் பிணங்கக் கண்டால் தன்னுடைய பந்துக்களில் நின்று மொருவன் பிணங்குவான். இனி காவல் நாயைக் கனவில் கண்டால் மனைவியும் முதலும் பேணுதலா யிருக்கும். தான் நாயாய்விடக் கண்டால் இல்முண்டாம் பறந்துவிடும். இனி நாய் கடிக்கக்கண்டால் பகைவன் புறத்தால் துக்கமுண்டாம். சிலகால் நோவுண்டாம். இனி நாயைக்காணுதல் சிலகால் துன்யாவின்பேரில் மோகம் குப்புற அடித்துவிழுந்து கிடப்பதாயிருக்கும். அல்லது அதாவது யேத்திக்கொள்ளாத பகைவனாயிருந்து கூட்டாளியாய் விடுவான். அவன் தாழ்ந்தவனாகவும் ரோஷம் குறைந்தவனாகவு மிருப்பான். இனியொருவன் தன்பேரில் நாய் ஓலமிடக்கண்டால் ரோஷங் குறைந்தவனில் நின்றும் பொருத்தக்கேடான பேச்சைக் கேட்பான். அதுடன் பிணங்கிக்கொள்ள அல்லது இவனைக் கடிக்கக் கண்டால் பேச்சைவிட அதிகமான பொருத்தக்கேட்டைப் பெற்றுக் கொள்வான். இனி இவனைக் கடித்துப் புடவையைக் கிழிக்கக்கண்டால் இவன் மானபங்கத்தைக் கீறிகிழித்து புடவை யைக் கிழித்தக் கதறின்படி பொருத்தக்கேட்டைப் பெற்றுக் கொள்வான். இனி ஒருவன் நாயின்கறியைத் தின்னக்கண்டால் பகைவனில்நின்றும் முதல்களைப் பெற்றுக்கொண்டு அவனை மிகைத்துக்கொள்வான். இனி நாயைப் பிடிக்கக்கண்டால் அல்லது அதைக்கொண்டு ஒரு வஸ்துவை மிகைக்கக்கண்டால் அது பகைவனல்ல. இவன் கருமத்தில் உதவிதேடுகிற மனிதனாயிருக்கும். இனி பெண் நாயுடைய பாலைக் குடிக்கக்கண்டால் கடிசான பயங்கரங்களுண்டாகும். இனி இதுபோல் வீரப்பல்லையுடைய தடக்கலையும் காணுகிறது அவைகளின் குவ்வத்தில் கதறின் படியுள்ள பகைவர்களாயிருக்கும். (வல்லாஹு அஃலம்.)

குரங்கைக் காண்பதின் தஃபீர்.

குரங்கை கனவில்கண்டால் இவன் மிகைத்துக்கொள்ளுகிற பகைவனாயிருக்கும். இவன் பாவத்தினாலும், கெடுதியினாலும் அல்லாஹுத்தஆலா இவனுக்குக்கொடுத்த நிஃமத்து பேதகமாய்

விடும். இதன் தலையில்ஜவாய் மிருகங்களைப்போலுள்ள தலையிலா யிருக்கும். குரங்கின் கறியை, இரத்தத்தை, ரோமங்கள்போல் கொற்றதுகளைப் பெற்றுக்கொள்ளக்கண்டால் ஹறுமான முதல் களாயிருக்கும். அதின் பாலைக்குடிக்கக்கண்டால் இவன் புத்தி யிலும் முதல்களிலும் தங்கடங்கள் பிடிக்கும். இனி யாதொருவன் குரங்கோடு எதிர்த்துப்போராடி அதை இவன் ஜெயித்துக்கொள்ளக் கண்டால் கவலை படுவான். அது இவனை ஜெயிக்கக்கண்டால் வியாதி திராது. அதன் கறியைக்கண்டாலும் அதுபோலேயாம். அதை நன்கொடை பெறக்கண்டால் பகைவன் மீது வெற்றியுண்டாம். (வல்லாஹு அஃலம்.)

முள்ளம்பன்றியையும், ஓநாயையும் பூனையையும் காண்பதின் தஃபீர்.

முள்ளம்பன்றியை கனவிற்கண்டால் கெட்ட பெண்பிள்ளை யாயிருக்கும். அதன்பாலைக் குடிக்கக்கண்டால் இவனை ஒரு பெண் பிள்ளை மோசஞ் செய்துபோடுவாள். இனி ஆண் முள்ளம்பன்றி யைக்கண்டால் மோசஞ்செய்யப்பட்ட லஃனத்துச் செய்யப்பட்ட பகைவனாயிருக்கும்.

ஓநாயை கனவிற்கண்டால் அநியாயமான சுல்தானாயிருக்கும். அல்லது விரோதமான, பொய்சொல்லுகிற கள்ளனாயிருக்கும். சிலகால் இவனுடன் பொய்யான வழக்கெடுக்கிற வழக்காளியா யிருக்கும். அதன் தலையிலு ஐவாய் மிருகங்கள் தலையைப் போலிருக்கும். ஆகிலும் அதின் பாலைக் குடிக்கக்கண்டால் மிகுந்த கைதுகளைப் பெற்றுக்கொள்வான். விசாரப்பட்டவனா யிருந்தால் அல்லாஹுத் தஆலா இவன் விசாரத்தைத் தீர்ப்பான். மிடிமை யாளியாயிருந்தால் சீமானாக்குவான்.

பூனையை ஒருவன் தன்வீட்டில் அல்லது வேறொருவன் வீட்டில் புகுதக்கண்டால் அந்த வீட்டில் கள்ளன் புகுதுவான். அந்தப்பூனை வீட்டில் ஒருவஸ்துவை யெடுத்து போகக்கண்டால் இவன் வீட்டில் சில வஸ்துக்கள் களவுபோகும். ஒருவன் பூனையை வெட்ட

அல்லது அறுக்கக்கண்டால் ஜெயம் பெறுவான். இனி ஒருவன் பூனையுடன் விளையாடக்கண்டால் தீவிரத்தில் நோயுண்டாகும். இவன் பூனையை மிகைத்துக்கொண்டால் தீவிரமாய் நோய்நீங்கி விடும். இவனை பூனைகடித்திடக்கண்டால் ஈஸல்நீளப்படும். இமாம் முஹம்மதிப்னுசிரீன் றஹிமஹுல்லாஹு ஒரு வருஷம் நோயா யிருப்பானென்று சொல்லுகிறார்கள். காட்டின்பூனை வீட்டில் பழகின பூனையைவிட பலங்கெட்டதாயிருக்கும். இனி கீரிப்பிள்ளை யின் தஃபீரும் பூனையைப்போல யிருக்கும்.

விஷ ஜெந்துக்களைக் காண்பதின் தஃபீர்.

பாம்பை கனவில் கண்டால் பகையை மறைத்துக்கொண்டி ருக்கிற கடிசான பகைவனுயிருக்கும். ஒருவன் பாம்புடன்போர் செய்யக்கண்டால் பகைவனுடன் ஈடுகொடுப்பான். பாம்பைச் சேர்த் துக்கொள்ளக்கண்டால் பகைவனை சேர்த்துக்கொள்வான். இவனை பாம்பு சேர்த்துக்கொண்டால் பகைவன்இவனை சேர்த்துக்கொள் வான். இனி ஒருவன் பாம்புகொத்தக்கண்டால் பகைவனில்நின்றும் பொருத்தக்கேடான கருமத்தை பெற்றுக்கொள்வான். பாம்பைக் கொல்லக்கண்டால் பகைவனைச் சேர்த்துக்கொள்வான். அதை இரண்டு துண்டாகத் தரிக்கக்கண்டால் இவன் பகைவனில்நின்றும் பேர் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் பாம்புக்குக் கால்களுண் டாயிருக்கக்கண்டால் அந்த பகைவன் ஊச்சித்துடையவன் என் றதில் அடையாளமாயிருக்கும். இனி ஒருவன் பாம்பைக்காணுமல் பாம்பினுல் பயப்படக்கண்டால் பகைவனைவிட்டும் அச்சந்தீர்வான் அதைக்கண்டுபயப்பட்டால் பயங்காரந்தொடும், இவனைத்தங்கடஞ் செய்யாது; இனி ஒருவன்துவைக் காணுமல் பயப்படுகிறதடக்கதும் இவனுக்கு அச்சந்தீருதலாயிருக்கும். இவன் அதைக்கண்டால் பயங்காம் விஷயமாகும். இனி ஒருவன் பாம்பு தன் வீட்டில் புகுறக் கண்டால் அல்லது அது தன் வீட்டிலிருக்கக்கண்டால் பெண் பிள்ளைகள் அல்லது இவன் குடும்பத்தார் புறத்தால்நின்றும் முள்ள பகைவனுயிருக்கும். பாம்பு இவன் வீட்டைவிட்டும் புறப்பட்டுப் போகக்கண்டால் தூரத்திலுள்ள பகைவனுயிருக்கும்! இனி இவன்

பின்துவாரம் அல்லது இவன் காதில் அல்லது இவன் வயற்றில் நின்றும் பாம்பு புறப்படக்கண்டால் இவன் குடும்பத்தில்நின்றும் பகைவன் உண்டாய்ப் புறப்படுவான். இனி ஒருவன் பாம்பை பயப்படாமல் உடையதாகக்கண்டால் அது பகைவனல்ல பாம்பின் வளுப்பத்தின் கதறின்படி சில வஸ்துக்களையுடையதாக்கி நிஃமத்துக்களை பெற்றுக்கொள்வான். அந்தப்பாம்பு கருப்பாயிருந்தால் படபண்டாரங்களை ஓட்டுவான். அது வெண்மையாயிருந்தால் இவன் தெண்டிப்பும் சிநேகித்தனமுமாயிருக்கும். இனி ஒருவன் மழுமட்டமான சிறுதலில்லாத மெல்லிய பாம்பையுடையதாகக் கண்டால் இராஜக்கத்தனத்துடைய புதையல்களில் நின்றும் சில புதயல்களையுடையதாக்குவான்.

உடும்பை கனவில்கண்டால் முதல்களை சதிமானம் செய்கிற மனிதனுமிருக்கும். யாதொருவன் அதைத் தின்னக்கண்டால் நன்றுண்டாகும்.

நட்டுவாக்காலி கொட்டக்கண்டால் இவன் பகைவன் இவனை நாவுகொண்டு புறம்பேசுவான். இனி நாட்வாக்காலியைக் கொல்லக் கண்டால் பகைவனை மிகைத்துக்கொள்வான். இனி ஒருவன் நட்டுவாக்காலியை கையில் வைத்து மனிதர்களைக் கொட்டக்கண்டால் மனிதர்களையும் புறம்பேசுவான். இனி நட்டுவாக்காலி கறியைத் தின்னக்கண்டால் பகைவனில்நின்றும் முதல்களைப்பெற்றுக் கொள்வான். இனி தன் வீட்டில் அல்லது தன்விரிப்பில் அல்லது தன்சட்டையில், தன் தப்பட்டியில் நட்டுவாக்காலி புகுதக் கண்டால் இவன் பேச்சைக்கொண்டுபோய் மனிதரிடம் பிரிவுண்டாக்கிவைக்கிற பகைவனுமிருக்கும். இதன் தஃவில் பாம்பின் தஃவிலைப்போலாயிருக்கும்.

குளவிகள் ஈக்கள் போல்கொற்றவைகள் இவன் பேரில் பாயக் கண்டால் சின்னமனிதர்களில்நின்றும் சிலபேச்சுகள் கேட்பான்.

எறும்பை கனவில் காண்கிறது மிகுந்த பறக்கத்துடைய பேரி லறிவிக்கும். அவனைச் சார்ந்தபேர்களுக்குப் பிரயோஜனம் செய்கிறவனுமிருக்கும். அதின் தஃவில் மேற்சொல்லிய படியாயிருக்கும்.

மூட்டையை காண்கிறது தழுமையான பலங்கெட்ட மனிதனுமிருக்கும். இப்படிப்போல்தான் ஈசலுமாகும். ஒருவன் மூட்டையை தன்வீட்டில், அல்லது தன்தலத்தில், அல்லது இன்னொரு தலத்தில் கண்டால் அந்த தலத்துடையவர்கள் அவர்கள் வங்கிஷம் அவர்கள் பிள்ளைகள் அதிகமாகும். இனி தன் மஹல்லைவிட்டும் மூட்டை புறப்படக்கண்டால் அவர்கள் அந்தத் தலத்தைவிட்டும், மௌத்துக்கொண்டு, அல்லது திரும்புதலைக் கொண்டு போய்விடுவார்கள். ஈக்களுமப்படிப் போல்தான். ஆகிலும் மனிதர்களில் அவர்கள் லயீபானவர்களாயிருக்கும்.

இனி வெட்டுக்கிளிகளைக் கனவில் கண்டால் அந்த தலத்தில் படைப் பண்டாரங்களுண்டாவார்கள். அவர்கள் தங்கடம் வெட்டுக்கிளி தங்கடத்தின் கதறின்படி யிருக்கும். இனி ஒருவன் படைப்பண்டாரங்கள் அறியப்பட்ட பூமியில், அல்லது அறியப் பட்ட ஒரு தலத்தில் நடக்கக்கண்டால் அந்த தலத்தில் வெட்டுக் கிளியுண்டாகும்.

இனி பீவண்டு சிலந்திப்போல் கொற்றதுகள், மனிதர்களில் லயீபானவர்களும், அவர்களில் தாழ்ந்தவர்களும் சிறந்த ஸாலிஹாகிய, ஆபிதாகிய பதினித் தனமானவனுகவும், இவன் கருமங் களுக்கு காரியத்தனமானவனுகவும், இபாதத்து தௌபாவைக் கொண்டு புதியதானவனுகவுமிருக்கும்.

இனி எலியை கனவில் கண்டால் கெட்டகுணத்துடைய பனாது செய்கிற பெண்பிள்ளையா யிருக்கும். இனி ஒருவன் அதைப் பிடிக்கக்கண்டால் அப்படிப்போலுள்ள பெண்பிள்ளையா யிருக்கும். இவைகளடங்கலும் மேற்சொல்லிய தவீலின்படியா யிருக்கும்

ஹிக்காயத்து.

ஒரு மனிதன் இமாம் முஹம்மதிப்னு சீரின் றஹிமஹுல்லாஹு இடம் வந்து நான் பாம்பு, கட்டுவாக்காலி யிருக்கிற கூட்டை என் முதுகின்பேரில் வைத்துச் சுமக்கக்கண்டேன் என்று சொன்னர். அப்போது இமாம் சொன்னார்கள், நீ தீங்கான மனிதர்களுடன் பகைத்து அவர்கள் பகையை பெற்றுக்கொள்வாய். அவர்கள் உன்னைச் சேர்த்துக் கொள்வார்களென்றபோது அந்த

மனிதன் சொன்னார், நீங்கள் சொன்னது உண்மைதான் என்னை சுல்தான் அரபிகளிடம் சதகா வாங்கிவரும்படி அனுப்பினார். அவர்களெல்லாம் என்பேரில் பகையாயிருக்கிறார்க ளென்றார்.

இன்னுமொரு மனிதன் இமாம் முஹம்மதிப்னு சிரீன் றஹிமஹுல்லாஹு இடம் வந்து என்வீட்டில் பாம்புண்டாயிருந்து என்கையிலும் என்னிடுப்பிலும் கொட்டி எனக்கு கொம்பலமா யிருக்கிறதென்று சொன்னபோது, இமாம் சொன்னார்கள், உன் வீட்டில் கெடுதலை மறைத்துக் கொண்டிருக்கிறான். குடும்பத்தா ரிருக்கிறது அவர்களால் அநேக கடன்களைப் பெற்றுக்கொள்வாய், என்றபோது, அந்த மனிதன் என் தாயாருடைய மகன் என் தகப்பனுருடைய ஆட்டங்களை எடுத்துக்கொண்டு ஓடி மூன்று நாளாகுதென்று சொன்னான்.

ஒரு மனிதன் ஜஃபர்சாதிகு றலியல்லாஹுத் தஆலா அன்ஹு இடம் வந்து ஒஜீபனம் வைக்கிற பளிங்கிலுள்ள பாத்திரத்தில் எறும்பிருக்கக் கண்டேனென்றபோது ஜஃபர்சாதிக்கு றலியல்லாஹுத் தஆலா அன்ஹு உனக்கும் பெண்சாதி பயமிருக்கிறதா வென்று கேட்டபோது அந்த மனிதன் இருக்கிறதென்று சொன்னார். அப்போது சொன்னார்கள், அந்தப்பிள்ளையை வீட்டை விட்டுத் தூரத்திவிடு, அவனில் கைரில்லை. அப்போது அம்மனிதன் வியாரப்பட்டுக்கொண்டு வீட்டிற்குப்போகவே அவன் பெண்சாதி இதைக்குறித்து கேட்கவே, இமாம் ஜஃபர்சாதிக் றலியல்லாஹுத் தஆலா அன்ஹு சொன்ன தக்வீலை சொன்னபோது, நீர் எதை நாடுகிறீரென்று பெண்சாதி கேட்டபோது, நான் விற்று போட நாடுகிறேனென்று சொல்லவே, அவள் சொன்னாள், நீர் அவனை விற்றால் என்னை தலாகு சொல்லிப்போடு மென்றாள், பின்பு அந்த மனிதன் அந்த பிள்ளையை உஸ்தாது அவர்களுக்கு விற்கவே இவன் பெண்சாதி வீட்டை விட்டும் அந்த பிள்ளை புறமாலே ஓடிப்போய் விட்டான் இதையவன் கூட்டத்தாரறிந்து அவனைதேடி தொடர்ந்து போகவே றூனன் என்கிற பட்டணம் அந்தபயலுடன் ஓடிப்போய் அவனை விலைக்குவாங்கி அவனைக் கலியாணமுடித்துக்கொண்டாள்.

பக்ஷிகளைக் காண்பதின் தஃபீர்.

ஒழுகு தனக்கு வருப்பட்டதாகப் பெற்றுக்கொள்ளக்கண்டால் முதலையும் சுல்தான் தனத்தையும், நன்மைத் தனத்தையும் பெற்றுக்கொள்வான். இனி இவனை கழுகு சுமந்துகொண்டு ஆகாயத்தில் பறக்கக்கண்டால் சுல்தான் தனத்தில் ஏறிய சிறப்பையும் உயர்த்தியையும் பெற்றுக்கொள்வான். இனி இவனை வானத்தில் திசையில் பறக்கக்கண்டால் அவன் சபர்போய் மௌத்தாவான்.

இனி ஞன்காட்டியைக்கண்டால் அநீதமான சுல்தானுவும் மோசஞ்செய்கிற கடிசான அதாபுசெய்கிறவனு யிருக்கும். அதின் தஃபீல் கழுகுவின் தஃபீரைப்போலிருக்கும். இப்படிப்போல்தான் இராஜாளி குருவியும், மற்றும் வேட்டையாடுகிற பறவைகளுடங்களும் மேற் சொன்ன தஃபீரின்படியாயிருக்கும்.

இனி பருந்தைக் காண்கிறது கீர்த்திக் குறைந்த தாழ்மையுடைய குதறத்துள்ள இராஜாவாயிருக்கும்.

இனி ஆந்தையைக்கண்டால் உதவிசெய்யாத லயீமான கள்ளனுயிருக்கும்.

இனி காகத்தைக் கண்டால் தீனில்லாத பொய்சொல்லுகிற பாசிகானவனு யிருக்கும். இப்படிப்போல்தான் பயிற்காகமும் காட்டுக்காகமும். முஹம்மதிப்னு சீரின் றஹிமஹுல்லா சொன்னார்கள், ஒருவன் பகலில் பயிற்பெண்காகத்தைப் பெற்றுக் கொள்ளக்கண்டால் கடிசான நோயாளியாயிருப்பான்.

இனி கற்கொத்தி குருவியைக்கண்டால் சுல்தானுக்கு ஒது மத்துசெய்கிறவனுகவும், சிலவிஷயங்களை அறிவிக்கிறவனுகவுமிருப்பான். இராஜாங்கத்துக்கு தலீலாகவுமிருக்கும். ஒருசொற்படி எழுத்துக்கள் எழுது கிறவனுகவும் பார்வை யுடையவனுகவும் மூஹப்பதுடைய வனுவும் சிலவு செய்கிற கர்மங்களை யறிந்தவனுகவும் கெறுதி யிருப்பான்.

கொக்கைக்கண்டால் பரதேசியான பிள்ளையில்லாத மனிதனுயிருக்கும்.

நிமுழுக்கிப் பக்ஷியைக்கண்டால் பரதேசியான நாட்டுப்புறத் தானாயிருக்கும்.

இனி சாவலைக்கண்டால் அஜமியான மனிதனுயிருக்கும் அல்லது அடிமையாயிருக்கும். ஒரு சொற்படி கூப்பிடுகிற மனிதனு கவும் முஅல்லினுகவுமிருக்கும். மனிதர்கள் இவன் சப்தத்தை எப்பொழுதும் கேட்டுக்கொண் டிருப்பார்கள். முஅல்லின் முஅல்லினல்லாதவனைப்போல்.

இனி கோழியைக் கண்டால் பறக்கத்துச் செய்யப்பட்ட பெண்பிள்ளை யாயிருக்கும். கோழியை மிருதமாய்க் கண்டால் கலியாணத்திற்கு அல்லது சந்தோஷத்திற்கு ஒருமித்துக்கூடுகிற வெள்ளாட்டி பெண்பிள்ளைகளாயிருக்கும்.

பெண்கவுதார்ரியைக் கண்டால் சதிமானஞ் செய்கிறவளாகவும் உறுதிப்பாடு கைறில்லாதவளாகவும் இருக்கும்.

காட்டுப்புறுவைக் கண்டால் விளையாட்டுடைய பெண்பிள்ளை யாகவும் சந்தோஷத்துடையவளாகவும் இருப்பாள்.

கிளியைக் கண்டால் வெள்ளாட்டியாயிருக்கும். அல்லது எத்திமான பிள்ளையாயிருக்கும்.

இனி ஆண்மயிலைக் கண்டால் அஜமியான மனிதனு மிருக்கும் அல்லது முதல்களும் அழகு மாயிருக்கும்.

மாடப்புறுவைக் கண்டால் பெண்பிள்ளை யாயிருக்கும். சில கால் பெண்சாதி அல்லது மகளாயிருக்கும். புறுமிருதமாகக்கண் டால் பிள்ளைகளாயிருக்கும்.

பெண்மயிலைக் கண்டால் அஜமியான அழகான பெண்பிள்ளை யாயிருக்கும்.

இனி மயில் பர்கறையாயிருந்தால் பறக்கத்தில்லாத பெண் பிள்ளையாயிருக்கும்.

காணுக்கோழியைக் கண்டால் பறக்கத்துச் செய்யப்பட்ட பிள்ளையாயிருக்கும்.

தவுட்டுப்புறவைக்கண்டால் தீனில்ஹயாக்குறைந்த பெண் பிள்ளை யாயிருக்கும். இந்த பறவைகளடங்கலுடைய தலீலிலும் ஒன்று போல்சரியாகயிருக்கும். இனி இவைகளில் ஒரு வஸ்துவைத் தின்னக்கண்டால் அல்லது உடையதாகக்கண்டால் இப்படிப் போலுள்ள பெண் பிள்ளையாயிருக்கும் இனி ஒருவன் அதின் சிறகைக்கண்டால், அல்லது அதன் முட்டையை வேட்டையாட, அல்லது கண்ணிவைத்து எடுக்கக்கண்டால் பெண்பிள்ளைக்குச் செய்த குபாடமாயிருக்கும். இனி அதை அம்புக்கொண்டு அல்லது கற்கொண்டெறியக்கண்டால் அந்தப் பெண்பிள்ளையைப் படர் சொல்வான்.

கொண்டைளார்த்தியைக் கண்டால் பறக்கத்துச் செய்யப் பட்ட பயலாயிருக்கும்.

இனி கற்கொத்தி எரிஇறகுருவியைக் கண்டால் சிறுபிள்ளையா யிருக்கும். இனி குருவியைக்கண்டால் வலுப்பமாகிய ஆண்பிள்ளையா யிருக்கும். பெண்குருவியைக்கண்டால் பெண்பிள்ளையாயிருக்கும். ஆகிலும் அதில் சமீபத் திலிருக்கும் குருவி கனதிகமாய்க்கண்டு வேட்டையாடினால் முதல்களும், கொள்ளைவாழ்வும் உண்டாகும். மேற்சொன்ன பறவைகளடங்கலும் அப்படிப்போல்தான், மிருத மாகக்கண்டு வேட்டையாடினால் முதல்களும் கொள்ளை வாழ்வுமா யிருக்கும். இனி ஒருவன் குருவிகள் சப்தங்களைகேட்டால் அவனுக்கு அழகாகிய செய்திகள் வரும்.

இனி வௌவாலைக்கண்டால் ஆபிதாகிய தெண்டிப்புடைய மனிதனாகவும், கைகூற பறக்கத்து மிகுதியானவனாகவு மிருக்கும்.

சிட்டுக்குருவியைக் கண்டால் சபர்மிகுதிசெய்கிற மனிதனா யிருக்கும், சபரில் அழகான கர்மங்களுண்டாகும்.

இனி சாக்குருவியைக் கண்டால் ஆதம் அலைஹிஸ்ஸலாம் பேரிலறிவிக்கும், அவனுக்கு நேர்வழியுண்டாகும்.

தண்ணீர்ப் பறவைகளைக் காண்பதின் தஃபீர்.

தண்ணீர்ப் பறவையைக் கண்டால் இராஜாவுடைய சேவகர்களும், அவனுடைய பணிவிடைக்காரர்களுமாயிருக்கும். இவைகளைக் கரையில் கண்டால் கைறும் செழிப்புமுண்டாகும். அதன் நிஸில் கைறில்லை கைசேதங்களுமுண்டாகும். இனி அறியப் படாத பறவைகளைக்கண்டால் மலாயிக்கத்து களாயிருக்கும்.

இனி அறியப்படாத முட்டையைதின்னக் கண்டால் அவிக்கப்பட்டதாக, அல்லது சுடப்பட்டதாக அல்லது பொரிக்கப்பட்டதாகத்தின்னக்கண்டால் முதல்களும், சாலிஹான நிஸ்குமாயிருக்கும். அதை பச்சையாய்த் தின்னக்கண்டால் ஹறுமான முதலைப் பெற்றுக்கொள்வான். இனி அப்படி அறியப்படாத முட்டையை யுடையதாகக்கண்டால், அல்லது அவனிடம் வரக் கண்டால் அழகுடைய பெண்பிள்ளையாயிருக்கும். இனி முட்டையின் கூடைத்தின்னக்கண்டால் அல்லது அதன்வெள்ளைக் கருவைத் தின்னக் கண்டால் வெட்டப்பட்டவன் முதலைத்தின்பான். அல்லது மௌத்தானவன் முதலைத் தின்பான். சிலகால் கபர்களைத் தோண்டுவான். (வல்லாஹு அஃலம்.)

ஹிக்காயத்து.

இமாம் முஹம்மதிப்னு சிரீன் றஹிமஹுல்லாஹு இடம் ஒரு மனிதன் வந்து நான் மதீனத்துப் பள்ளிவாசல் மனாராவில் வெண்மையாகிய ஒரு புறா இருந்தது. அதை வில்வத்தான் வேட்டையாடிப் பிடித்துக்கொண்டு போகக்கண்டேன் என்று சொன்னபோது. இமாம் சொன்னார்கள், நீ கண்டது உண்மையாயிருந்தால் ஹஜ்ஜாஜு அப்துல்லாஹிப்னு ஐஃபருத்தையாது கல்யாணமுடிப்பாரென்று சொன்னார். கொஞ்சம் நாளைக்குள்ளாக ஹஜ்ஜாஜு கல்யாண முடித்துக்கொண்டார். அப்போது இமாமிடம் கேட்கப்பட்டது, தாங்கள் எவ்விதமாய் அறிந்தீர்களென அப்போது சொன்னார்கள், புறாவாகிறது பெண் பிள்ளையாயிருக்கும், அதின் அழகாகிறது வெண்மையாயிருக்கும். பள்ளிவாசலுக்கு அழகாகிறது மனாராவாயிருக்கும். ஆனதால்

மதீனத்தில் இவனைக்காட்டிலும் அழகானவனும், வங்கிஷத்தில் சிறப்பானவனாகவும், அவனைத்தவிர வேறொருவர் காணப்படவில்லை, வில்வத்தானில் பார்த்தேன். சுல்தானாகவும், மிருந்த அன்னீதத்துடையதாகவு மிருக்கிறது. ஆனதால் சுல்தான்களில் ஹஜ்ஜாஜுப்னு யூசுபைவிட அந்நீதமானவனைக் காணப்படவில்லை. அதற்காக இந்த தஃவீலில் சொன்னேன். இதை கேட்டு அவர்களின் மஜ்லீஸிலிருந்தவர்க ளெல்லாம் மிகவும் ஆச்சரியப் பட்டார்கள்.

இமாம் முஹம்மதிப்னு சீரின் றஹிமஹுல்லாயிடம் ஒரு மனிதன் வந்து நான் ஒரு கொழுத்த பறவை வானத்தில்நின்றும் இறங்கி ஒரு மரத்தில் தங்கி அதின் பூக்களைத் தின்னக்கண்டு பறந்திடக்கண்டேன் என்று சொன்னபோது, இமாமுடையமுகம் பேதகமாய் விட்டது. இது உலமாக்கள் மௌத்தாவார்களென் றறிவிக்கிறது என்று சொன்னார்கள். அந்த வருஷத்தில் ஹசனுல் பஸரீ றலியல்லாஹு அன்ஹு இப்னு சீரின் றலியல்லாஹு அன்ஹு மௌத்தானார்கள்.

உமறப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு மனாமில் ஒரு சாவல் என்னை ஒரு கொத்து, அல்லது இரண்டு கொத்து கொத்தக் கண்டேன் என்று சொன்னபோது, அவர்களிடம் அதற்கு தஃவீ லென்னவென்று கேட்டபோது சொன்னார்கள், என்னை அஜமிய்யில் நின்றும், என்னை ஒருவன் வெட்டிப் போடுவான். அவர்கள் சொல்லிய நாலு நாளைக்குள் அபூலுலூ லூத்தி யென்கிற மல்ஊன் வெட்டிப்போட்டான்.

ஒருமனிதன் இமாம்முஹம்மதிப்னு சீரின் றஹிமஹுல்லாஹு இடம்வந்து ஒருமனிதன் அவன் மனாமில் முட்டையையுடைத்து வெள்ளைக்கருவை யெடுத்துக்கொண்டு மஞ்சட்கருவை வீசிவிடக் கண்டாராம். அதன் மர்த்தபாவைத் தாங்கள் விண்ணப்பஞ் செய்யுங்களென்று கேட்டார். அப்போது இமாம் அந்த மனிதனை என்னிடம் வந்து கேட்கச்சொல்லென்று சொன்னார்கள். அப்போது அந்தமனிதன் என்னிடம் அதின் தஃவீலைச்சொன்னால் நான் அவனிடம் சொல்லுகிறேனென்று சொன்னார். அப்போது இமாம் சொன்னார்கள், அந்த மனிதன்தான் அறியவேண்டு

மென்று மடக்கியும் சொல்லவே, நான்தான் கண்டேனென்று சொன்னார். அப்போது இமாம் சொன்னார்கள், நீதான் கண்டாயென்று அல்லாஹுத் தஆலாவின்பேரில் சத்தியஞ்செய்யென்றவுடனே அந்த மனிதன் நான்கண்டேனென்று சத்தியஞ்செய்யவே இமாம் அவர்களைச்சூழ்ந்து கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து இவன் மௌத்தான பேர்களுடைய கபுரைத்தோண்டி கபன் புடவையைக் களவு செய்கிறவன், இவனை சுல்தானிடம் கொண்டு போய் விடுங்கள் என்று சொல்லவே, உடனே பதறி என் நாயகமே நான் சாகிறவரையும் இனிமேல் இப்படிப்பட்ட வேலை செய்கிறதில்லை, தங்கள் சமூகத்தில் தௌபாச்செய்து மீள்கின்றேன் என்று தௌபாச்செய்து மீண்டார்.

ஒரு மனிதன் இமாம் முஹம்மதிப்னு சிரீனிடம் வந்து சாக்குருவி யென்று சொல்லப்பட்ட பறவையைப் பிடித்து அறுக்க கத்தியை ஹல்கின்பேரில் மூன்றுதரம் வைக்கவும்பறந்து விட்டது. நாலாம் தரத்தில் அறுக்கக் கண்டேனென்றபோது இமாம் நீ கைருன மனாம் கண்டாய், கன்னிதாரமான பெண்ணை மூன்று தரம் ஜிமாவு செய்ததில் குத்ரத்துப் பெறாமல் நாலாம் தரத்தில் குத்ரத்துப் பெற்றாயென்று சொன்னபோது, நீங்கள் உண்மையைச் சொன்னீர்கள். ஐந்திரவாக இவ்விதமாயிருந்தேன் என்று சொன்ன போது, புன்சிரிப்புக் கொண்டு ஒரு சாஅத்துநேரம் தலையைக் கவிழப்போட்டுப் பின் சீர் கிட்டமுடுகும், இன்னும் உன் மனாமில் தக்பீர் ஒன்றிருக்கிறதுவென்று கூப்பிட்டு ஜிமாவுசெய்த நேரத்தில் அவளில்நின்றும்காற்றுப் பிறந்ததாவென்றுகேட்டார்கள். அப்போது அந்த மனிதன் தாங்கள் உண்மையைச் சொன்னீர்களென்று சொல்லிவெட்கித்து எழும்பிப் போய்விட்டார். (வல்லாஹு அஃலம்.)

மச்சம் முதலியவைகளைக் காண்பதின் தஃபீர்.

பெரிய மீன்களை மிருதமாகக்கண்டால் அவைகளை அல்லது அவைகளில் சிலதை பெற்றுக்கொண்டவனுக்கு கொள்ள வாழ்வும் முதல்களுமுண்டாகும். சிறுமீன்களைக்கண்டால் வியாரமும் துக்க

முண்டாகும். ஒருமீன், இரண்டு மீன்களைக்கண்டால் ஒருபெண் பிள்ளை இரண்டு பெண் பிள்ளைகளாயிருக்கும். மீன் கறியை அதின் கொழுப்புபோல் கொற்றைக்கண்டால் அதைத்தின்றவனுக்கு அல்லது அதையுடையதாக்கினவனுக்குக் கொள்ளவாழ்வும் முதல்களுமுண்டாகும். சிலகால் சல்தான் புறத்தில், அல்லது பெண் பிள்ளை புறத்தால், முதல்களுமுண்டாம். இனி உப்புமீனைக்கண்டால் இவன் அடிமையின் அல்லது இவன் காதிம் அல்லது இவன் உடற்பிறந்தான் புறத்தில் வியாரம் துக்கமுண்டாகும். இப்படிக் கண்டவனுக்கு சிறுமீனும் பெருமீனும் சரிதான்.

இனி முதலையைக் கண்டால் குபாடஞ்செய்கிற பகைவனுமிருக்கும். களவுசெய்கிற கள்ளனுமிருக்கும். ' அவனை அவன் தோழனும் பகைவனும், அச்சந்திரமாட்டான். இனி அதின் கறியை எலும்பு தோலிபோல் கொற்றவை இவன் பகைவன் முதல்களாயிருக்கும். இதில் நின்றும் ஒரு வஸ்துவை பெற்றுக்கொள்ளக் கண்டால் பகை வனில் நின்றும் அதின் கதறின்படி முதல்களைப் பெற்றுக்கொள்வான்.

இனி தவளைகளில் ஒரு தவளை அல்லது இரண்டு தவளைக் கண்டால் தெண்டிப்புடைய வணக்கத்துடைய மனிதராயிருக்கும். இனி தவளைக்கூட்டத்தை மிகுதமாகக்கண்டால் அல்லாஹுத் தஆலாவுடைய கூட்டமாகிய அவன் அடியார்களாயிருக்கும். ஒருவன் அதை ஒருவீட்டில் அல்லது ஒருதலத்தில் கண்டால் அல்லாஹுத் தஆலாவுடைய அதாபு அந்த தலத்துடையவர்களுக்கு இறங்கும்.

ஆமையைக்கண்டால் மீளவும் ஆபிதாகிய தெண்டிப்புடைய இல்மு, அமல் மிகுந்த மனிதனுமிருக்கும். ஒரு ஆமையைக் கண்டால் அல்லது அதை உடையதாக்கினால், அல்லது தன் தலத்தில் புகுதுகிறதற்குக்கண்டால் ஆலிமான மனிதனைக்கண்டு அவனுக்கும் முஹப்பத்துண்டாம். இனி அதின் கறியைத் தின்னக் கண்டால் அந்தமனிதனில் நின்றும் சில இல்மை பெற்றுக்கொள் வான். இனி ஒருவன் ஆமையை பாதையில் அல்லது குப்பையில் கண்டால் அந்த தலத்திலறியப்படாத இல்மாயிருக்கும். அதை கார்க்கப்பட்டதாகக்கண்டால் அவ்விடத்தில் சிறப்பாகிய கார்க்கப் பட்ட இல்முமுண்டாகும்.

இனி (ண்டைக் கண்டால்) வலுப்பமான குணத்துடைய மனிதனாகவும் கருமங்களில் உசாவிக்கொள்வது தூரமானவனாகவும், பறகத்துச் செய்யப் படாதவனாகவும் வலுப்பமான வனாகவும் பெருமை புடையவனாகவுமுள்ள மனிதனாகவுமிருப்பான். அதின் தஃவீலும் மேற்சொன்ன தஃவீலின்படியாயிருக்கும். இனி கடலில் ஆதியிலுள்ள மிருகங்களடங்கலும் அதின் படைகோலத்தின் அதின் வன்னிப்பின் கதறின்படியாயிருக்கும். இவைகளடங்கலும் இராஜாக் களுடைய சேவகர்களில் இராஜாக்கள் பதவியின்படி சேர்க்கப்படும் (வல்லாஹு அலைம்.)

தொழிலாளிகளைக் காண்பதின் தஃபீர்.

நிறுக்கிறவனை அல்லது அளக்கிறவனைக் கண்டால் காலியா யிருக்கும். அவர்களிரண்டுபேர்களும் அறியப்படாதவர்களா யிருந் தால் அவர்களிரண்டுபேர்களும் கைபடிக்கக் காணப்பட்டால் காலியாவன். ஹுக்மில் அநீதஞ் செய்கிறவனாயிருக்கும். இனி ஒருவன் இரண்டுபேரையும் கேலிக்கையாய் விளையாடக்கண்டால் காலி அவன் ஹுக்மில் அநியாயஞ் செய்கிறவனாயிருக்கும். இனி ஒருவன் நிறுக்கிறவனாய், அளக்கிறவனாய் ஆயிடக்கண்டால் காலி யாய் விடுவான் அறியப்படாத காலி அல்லாஹுத் தஆலா வாயிருக்கும்.

கதிபைக் கண்டால் தீனில் பகீஹாயிருக்கும். இப்படிப் போல்தான் அத்தர் விற்கிறவனும்.

வட்டக்காரனைக் கண்டால் அவனைக்கொண்டு பிரயோஜனம் பெறாத ஆலிமாயிருக்கும், தன்பாலின் பிரயோஜனமேயொழிய வேறில்லை.

புடவை விற்கிறவனைக்கண்டால் தன்பாலில் கடிசான சங்கட முடையவனாகவும் புலவனாகவும் அல்லது ஹகீமாகவுமிருப்பான்.

மூதல் பிடிக்காரனைக் கண்டால் வலுப்பமான மனிதனாகவும் மனிதருடைய மானபங்கத்தைச் சிறிழிக்கிற புலவனாகவுமிருக்கும்.

தையத்காரனைக் கண்டால் தீனை துன்யாவுக்கு பகரமாய் விட்டுப்போடுவான். அவன் கையின்பேரில் துன்யாவின் கருமங்கள் நிறப்பமாகும்.

தட்டானைக் கண்டால் மனிதர்களுக்கிடையில் பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகளுக்கிடையில் மருகுதலாய் வைக்கிறவன்.

கன்னானைக் கண்டால் சுல்தான் செய்தியை யறிவிக்கிறவன்.

தச்சனைக் கண்டால் மனிதர்களை யடக்கி ஆள்கிறவன்.

கொல்லனைக் கண்டால் இராஜதனத்தின் ஷச்சிதத்துடைய குவ்வத்துடைய மனிதனாயிருக்கும்.

இனி மனிதரை முனிகிறக் கோள்சொல்லுகிறவனைக் கண்டால் கைது ஷர்துகளில் சிலதை துயறுவான்.

வண்ணானைக் கண்டால் மனிதர்களைப் பாவத்தில் கோபமாய் மனிதர்களை பாவத்தைவிட்டு தௌபா அளவில் அழைப்பான்.

பொங்கலோனியைக் கண்டால் றிஸ்கை தேடுவதில் பேச்சுகள் மிகுந்த மனிதனாயிருக்கும். மிகுந்த கைறைப்பெற்றுக்கொள்வான்

கண்ணாய்களில் அறியப்படாதவனைக் கண்டால் மலக்கல் மவுத்தாயிருக்கும். அறியப்பட்டவனா யிருந்தால் துன்யாவை தேடுகிற தின்பேரில் நடப்பானே அப்படிக்கொத்த மனிதனாயிருக்கும்.

கப்பல் கலாசிகளைக்கண்டால் இராஜாக்கள் சுல்தான்களுக்கு மருந்து செய்கிறதைக்கொண்டு உள்விளங்கி அறிகிற மனிதர்களா யிருக்கும்.

இனி பொன், வெள்ளி, செம்பு போல்கொற்றதை உருக்கி வார்க்கிறவனைக்கண்டால் பொய்சொல்லுகிற மனிதனாகவும், சதிமானஞ்செய்கிறவனாகவும் அவன் கருமத்தில் புகழப்படாதவனாகவு மிருப்பான்.

அம்பட்டனை பஞ்சவெட்டுகிறவனைக் கண்டால் எழுதுகிற மனிதனாயிருக்கும்.

கணக்கனைக் கண்டால் ஙாசவனுயிருக்கும்.

பஞ்சவெட்டி விற்கிறவனைக் கண்டால் தூக்குக்கொண்டு பேசுகிற மனிதனுகவும், கைமுன அமல் செய்கிறவனுகவும் நல்லது கெட்டதென்று பிரித்து அறிகிறவனுகவுமிருக்கும்.

திரிக்கை திரிகிறவனைக்கண்டால் குபாடஞ்செய்கிற மனிதனு யிருக்கும். அல்லது சமைக்காரனுயிருக்கும்.

தண்ணீர் புகட்டுகிறவனைக் கண்டால் கூட்டாளிகள் உடன் பிறந்தார்கள், அறிவுள்ளவர்களாவு மிருக்கும்.

விளக்கேற்றுகிறவனைக் கண்டால் புருஷனுக்கும் பெண்சா திக்குமிடையில் அழகான கருமத்தைக்கொண்டு நாடுகிறவன்.

சாயக்காரனைக் கண்டால் பாத்திலில் மிக விச்சையுடையவனு கவும் பொய்சொல்லுகிறவனுக மிருக்கும்.

ஊரை விற்கிறவனைக் கண்டால் மனிதர்களுடைய பேச்சை பார்த்துக் கொள்கிறவனுகவும், ஐயைவிட்டும் தூரமான மனிதனு கவு மிருக்கும்.

நாணயமடிக்கிறவனைக் கண்டால் மனிதர்களுக்கிடையில் விஷயமாகிற வழக்குகளில் விகற்பமான மனிதனுகவு மிருக்கும்.

மூடிதரிகிறவனைக் கண்டால் முதல்கள் மிகுந்த மனிதனுயி ருக்கும், மிகுந்ததங்கடமும் பிரயோஜனமும் செய்கிறவனுயிருக்கும்.

பரிசை செய்கிறவனைக் கண்டால் மனிதர்களைசமர்த்து அவர்களை திருப்பிவைக்கிறவன்.

அறுக்கிறவனை, அல்லது கரிக்கிறவனை, அல்லது பஞ்சுசெய் கிறவனை, அல்லது பொட்டி முடைகிறவனை இவர்களனைவரையும் காண்கிறதின் தவியில் மூடிதரிக்கிறவன் தவிவியைப்போலிருக்கும்

பிள்ளைகளுக்குப் படித்துகொடுக்கிறவனை வழிகேடானவ னுய்க்கண்டால் அவன் கல்தானுயிருக்கும், அல்லது மந்திரியா யிருக்கும். இனி அவனை பள்ளிக்கூடத்திலிருக்கக்கண்டால் அவன் துயாத்து நீனமாகும், தளர்ந்தவயது வரையுமிருப்பான்.

செய்கிறவனைக்கண்டால் சபர்போகிற மனிதனாயிருக்கும்.

கட்டடம் கட்டுகிறவனைக் கண்டால் அவன் கையில் தௌபாச்செய்கிற மனிதனாயிருக்கும்.

மிருகங்களுக்கு மருந்து செய்கிறவனைக்கண்டால் பழிசெய்கிற மனிதனாயிருக்கும்.

நட்சத்திரம் பார்த்து சொல்லுகிற இல்மாளி குறிசொல்லுகிறவன், வஞ்சனை செய்கிறவன் இவர்களைக்கண்டால் பொய்சொல்லுகிற மனிதனாயிருக்கும், ஆகிலும் சல்தானுக்குமூடுகியிருப்பான்.

ஓதிப்பார்க்கிறவன் துஆ எழுதி கொடுக்கிறவனைக்கண்டால் மனிதர்களை அவன்பேச்சின் அழகைக்கொண்டும், நாவின் இன்பங்கொண்டும், மனிதர்களை மோசஞ்செய்கிறவனாயிருக்கும்.

மந்திரிக்கிறவன் அதபு வருத்துகிறவன், அழகாக்கிவைக்கிறவன், மிருகங்களுக்கு வேட்டைப் படித்துக்கொடுக்கிறவன் இவர்களைக்கண்டால் காரியஸ்தராயிருக்கும்.

மீன் விற்கிறவன், தலைவிற்கிறவன் இவர்களைக்கண்டால் இரண்டுபேரும் மனிதர்கள் தலையையுடையதாக்கிறவனா யிருக்கும்.

சிறைச்செய்கிறவனைக்கண்டால் அல்லாஹுத் தஆலாவின் பேரில் பொய்சொல்லுகிறவனா யிருக்கும்.

எண்ணெய்க்காரனைக் கண்டால் அவனுடன் கலந்து இருக்கிறவனுக்கு அழகான மனிதனாயிருக்கும்.

குழி தோண்டுகிறவன் அச்சந்திருதல், அமானத்துடைய ஆண்பிள்ளையாகக்கண்டால் இல்முகளில் ஹிக்மத்துகளில் மூழ்கிற மனிதனாயிருக்கும், அப்படியல்லாதவனாயிருந்தால் தேடிப்படிக்கிறவனாயிருக்கும்.

கபறுகள் பூமியைத்தோண்டினவனை அதில் இவனைத்தன் தலங்களை விட்டு நீங்கக்கண்டால், அல்லது அவனைத்தன் மிருகங்கள் சவட்டி மிதிக்கக்கண்டால் அல்லது அவன்மிம்பர் உடைந்திட்டால் அல்லது இவன் அதில்நின்றும் விழுந்திட்டானேயானால் அல்லது தன் விரிப்பைச் சுருட்டக்கண்டால் அல்லது அவனிருக்கும் தலம்

மாற்றமாகப்பட்டதாக அல்லது தன் தலைபாகை அவிழ்த்துவிடக் கண்டால், அல்லது இவன் தொப்பி கீழே விழுந்துவிடக்கண்டால் அல்லது தன் கை தரிபடக்கண்டால், அல்லது அவன் நாவுதரிப் படக்கண்டால், அவன் பார்வைபோகக்கண்டால் இவைகளடங் கலும் இவனிருக்கிற வேலைகளைவிட்டும் நீங்கப்போகிறதின் பேரிலும் அல்லது மௌத்தின்பேரிலும் மறிவிக்கும். (வல்லாஹு அஃலம்.)

பிரிவுதலான சில வஸ்துகளைக் காண்பதின் தஃபீர்.

ஒளியைக் கண்டால் நேர்வழியாயிருக்கும். இனி இருளைக் கண்டால்வழிகேடாயிருக்கும். இனிபாதையைக்கண்டால்ஹக்கான பாதையாயிருக்கும். அதை விட்டும் சாயக்கண்டால் கெடுதலான தனிலும்; வழிகேடனிலும் சாய்கிறவனுமிருக்கும். இனி பாழ் பூமியை கண்டால் வழிகேடாயிருக்கும் இனி கோட்டையுள் புகுதக்கண்டால் தீனில் காருமானமாயிருக்கும். இனி சுருட்டப் பட்ட கிதாபைக்கண்டால் மறைவுதலான விஷகனமாயிருக்கும். இனி விரிக்கப்பட்ட கிதாபைக்கண்டால் வெளியரங்கமான செய்தி யாயிருக்கும். இனி மூத்திரை வைக்கப்பட்ட கிதாபைக் கண்டால் கருமத்தை திட்டமாக்கி வைக்கிறதாயிருக்கும். ஒரு சொற்படி முத்திரைவைக்கப்பட்ட கிதாபைக்கண்டால் அரந்திரமாயிருக்கும். இனி இல்முகள், பிக்ஹுகள் உள்ள கிதாபைக்கண்டால் ஹிக்மத்து களும், அறிவுகளுமாயிருக்கும். இனி பாடல்களுள்ள கிதாபைக் கண்டால் வழிகேடும் குபாடமும் பொய்களுமாயிருக்கும். இனி குர்ஆன்களைக்கண்டால் ஹிக்மத்துகளைப் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் தன்கையில் குர்ஆனை எழுதக்கண்டால் நிலையுப் முதல்களையும் சேகரம் பெற்றுக்கொள்வான். அது கொண்டு மனிதர்களுக்கு பிரயோஜனஞ்செய்வான். இனி ஒருவன் குர்ஆனை கிழிக்கக்கண்டால் அல்லாஹுத் தஆலா இறக்கின வேதத்தை அல்லத்தட்டுவான். இனி ஒருவன் குர்ஆனின் கடுதாசியைத் தின்னக்கண்டால் அல்லாஹுத் தஆலாவுடைய கிதாபை பரிகாசம் பண்ணுவான். அவன் ஹுக்முகளில் சிலவற்றை இலேசாகக்கண்டு பரிகாசம் பண்ணுவான்.

(ஒருவன்) முழங்கையை, அல்லது முழங்கால், அல்லது தன் புடவை, அல்லது அவன் உறுப்பில் சிலவற்றை இருப்பாகக் கண்டால் இவன் வாழ்நாள் நீளமாகும். இனி ஒருவன் ஒருவனுக்கு அடிமையாகக் கண்டால், அல்லது சிறையில் அகப்பட்டவனாகக் கண்டால் மிட்டுமையும், தழுமையும். இவன் சிறப்பும் போய்விடும். இவன் வியாரமும், துக்கமும் போய்விடும். இனி ஒருவன் தன் உறுப்பில் சிலதை பாம்பாய்விடக்கண்டால் இவன் வாளுல் குறைத் தலாய்விடும். இனி ஒருவன் ஒரு வஸ்துவை இரவலுக்கு வாங்கக் கண்டால் அல்லது இரவலுக்குக் கொடுக்கக்கண்டால் இவனை தொட்டும் தங்கடத்தை தட்டாத பிரயோஜனமுமில்லை. இனி ஒருவன் அடிமையை விற்கக்கண்டால் வியாரம் துக்கத்தைவிட்டும் புறப்படுவான். இனி ஒருவன் அடிமையைவாங்கக்கண்டால் வியாரமும், துக்கமுண்டாகும். இனி வெள்ளாட்டியை வாங்கக் காண்கிறது வித்திறதைக்காண கைமுயிருக்கும். இனி கஸ்தூரியைக் கண்டால் சந்தோஷமும், சமானமுமுண்டாகும். இனி சந்தனக் கட்டையின் வாடையைக்கண்டால் மணமான கீர்த்தியுமுண்டாம். இப்படிப்போல் தான் வாடைமணமான தூபங்களடங்கலும் புகழப் பட்ட தாயிருக்கும். இனி குங்குமத்தைக்கண்டால் சேகரமாகப் பட்ட மணமான முதல்களாயிருக்கும். இனி அதை சாயங் காச்சப்பட்டதாய்க்கண்டால் நோயாயிருக்கும். இனி காவிகொண்டு சாயங்காச்சப் பட்டதும் அப்படிப்போல்தான். இனி குந்துருக் கத்தைக்கண்டால் பறக்கத்துச் செய்யப்பட்ட மனிதனில்நின்றும் பிரயோஜனம் செய்யப்பட்ட பிக்ஹூடைய இல்முபடிப்பான். இனி தேனைக்கண்டால் சேகரித்து வைக்கப்பட்ட முதல்களா யிருக்கும். சிலகால் அசுத்திரமாக்கப்பட்டதாயிருக்கும். இனி நித்திப்பினுல் செய்யப்பட்ட வஸ்துவடங்கலும் ஹல்வாவும், மணமான நிஸ்கும் முதல்களுமுண்டாகும். இனிஹல்வாவைத் தன் கையால் உண்டுபண்ணக்கண்டால் அவன் மிட்டுமை விட்டும் விஸ்தீரணத்தைப் பெற்றுக்கொள்வான். இனி அதைத் தன் கையால் உண்டுபண்ணாமல் வேறொருவன் உண்டுபண்ணக்கண்டால் கொள்ளவாழ்வும், அசுத்திர முதல்களும் பிரயோஜனமுமுண்டாகும். இனி தேனைக்கண்டால் இல்மின் பேரிலும் குறுஆன் பேரிலு மறிவிக்கும். இனி நிகாஹூ செய்யக்கண்டால் நோயடங்கலை விட்டும் சுவாத்தியம் பெறுவான். இனி தேனைத்தின்று அதினின்பத்தைப்

பெற்றுக் கொள்வதும் மண்ணைப் பெற்றுக் கொள்வதும் கண்டால் முதல்களுண்டாகும். சிலகால் இன்பமாகிய பேச்சுகளுண்டாகும். இனி மருந்துகளை பரிமாற்றம்பண்ண குடிக்கக்கண்டால் சரீரசுகம், ஆபியத்து, பறக்கத்துண்டாகும். இனி அபிற்கட்டையைக் கண்டால் வருத்தங்களைவிட்டும், துக்கங்களைவிட்டும் புறப்படுவான், இன்னும் நிர்வாகம் விஸ்தீரணமாயிருக்கும்.

மோகமாக்கப்பட்டவனைக் கண்டால் மாப்பிள்ளை யாயிருக்கும். இனி மாப்பிள்ளையைக்கண்டால் மோகமாக்கப்பட்டவனாயிருக்கும். இனி விளையாடக்கண்டால் துக்கமுண்டாம், துக்கமாகக்கண்டால் விளையாட்டுண்டாகும். இனி விலங்கில் போடக்கண்டால் அவன் மனாமில் கைதின்பேரில் அதன் தலீலில் விகற்பமாக்கப்பட்டதாயிருக்கும். அது ஹகீகத்தில் புடவைகளாயிருக்கும். இனி ஒருவன் விலங்கில் போடப்படக்கண்டால் அவன் மனாமில் கைதின்பேரிலறிவித்தலுண்டாயிருந்தால் அது எதுபோலானால் பள்ளிவாசலில், அல்லது தொழுகையில், அல்லது பீசபீலில் விலங்கு போடப் பட்டதாயிருக்கிறதுபோல் இது தீனில் தரிபாட்டின்பேரிலும் பாவங்களைவிட்டும் விலக்கிக்கொள்ளுகிறதின் பேரிலும் அறிவிக்கும். இனி ஒருவன் ஊரில், அல்லது தன் மஹலில்விலங்கு போடப்படக் கண்டால் கலியாணமுடிப்பான். இனி ஒருவன் ஹால்களில் ஒரு ஹாலிருக்க விலங்கு போடப்படக்கண்டால் அந்த ஹாலுக்கு சேர்ப்பாடானதில் தரிப்பாடாயிருப்பான்.

ஒருவன் தன்காலை விலங்கில் மாட்டப்படக்கண்டால் அல்லது கிணற்றில் அல்லது குழியில் வெட்டப்படக்கண்டால் இவனை குபாடம் செய்யப்பட்ட கருமத்தில் தரிப்பாடாயிருப்பான். இனி அக்கவடி விரிப்புப்போல் கொற்றவைகள் மிருகத்தின்பேரில் வைக்கப் பட்டிருக்கக்கண்டால் அது பெண்பிள்ளையாயிருக்கும். இனி ஷத்ரஞ்சி விளையாடக்கண்டால் பாத்திலான கருமங்களும், பொய்களுமாயிருக்கும், சிலகால் பேச்சுவார்த்தைகளும், தர்க்கங்களுமாயிருக்கும். இப்படிபோல்தான் மனைகிறி விளையாடக்கண்டாலும், இனி கட்டையுருட்டி விளையாடக்கண்டாலும் இரைச்சல்களும், வழக்குகளுமுண்டாகும். இப்படிப்போல் தான் மோதிரம், அக்கரோட்டு. கைகூடுபோட்டு விளையாடக்கண்டால் இரைச்சல்களும், வழக்குகளுமுண்டாகும், அல்லது பெண்பிள்ளையாயிருக்கும்

ஒருவன் இவைகள் உடையக்கண்டால், அல்லது களவுபோகக் கண்டால் இவன் பெண்சாதி, மௌத்தாவாள். இனி குரஆனுடனே கலமிருக்கக்கண்டால் இல்மும், ஹிக்மத்து முண்டாகும். மைகூட்டுடன் உண்டாயிருக்கக்கண்டால் பிள்ளையாயிருக்கும். இனி ஒருமனிதன் தன் மனையில் அவன் கருமங்கள் ஒருமித்ததாகவும் தன்னுட்டம் திரும்பி அவன் தேடப்பட்டதை தன்பாலில் இடம்பாடாக்கக்கண்டால் இவன் ஹால் பேதகத்தின்பேரிலும் இவன் கருமம் குறையுதலின் பேரிலு மறிவிக்கும். (வல்லாஹு அஃலம்.)

ஆயுதபாணிகளைக் காண்பதின் தஃபீர்.

ஆயுதபாணிகளைக்கண்டால் சிறப்பும், மேன்மையும், உத்தியோகங்களையும் அந்த ஆயுதபாணிகள்பலவந்தமும் பிரகாசமாயுமிருக்கிற கதறின்படி பெற்றுக்கொள்வான். இதில் இணக்கமான கருமங்களுண்டானால் இவன் சுல்தான் தனத்தைப்பெற்றுக் கொள்வான். ஒருவன் ஆயுதபாணிகளை அவனில் நின்றும் பிடுங்கிக் கொள்ள, அல்லது இவன்பேரில் அடக்கியாளக்கண்டால், அல்லது அவைகளையெறிய அல்லது ஹிபத்துகொடுக்க, அல்லது விற்க அல்லது இவனில் நின்றும் களவுபோகப்பட, அல்லது ஒடிந்து விட அல்லது பழுதாய்ப்போக, அல்லது இரவல்கொடுக்க இவ்விதங்களாக காண்கின்றதெல்லாம் இவன் மேன்மைத்தனத்தில் குறைத்தலுண்டாகும். ஒருவன் தன்னுடன் வாள் அல்லது வல்லயம், அல்லது வில் இவைபோல் கொற்ற தண்டாயிருக்கக் கண்டால், அல்லது அதுகொண்டு ஒருவனை வெட்டக்கண்டால் சிறப்பும், சுல்தான்தனமுமுண்டாகும். இவைகொண்டு இவனல்லாதவன் வெட்டக்கண்டால் மனிதர்களுக்கிடையில் பிணக்குண்டாம். ஒருவன் ஒரு மனிதனை வாள் கொண்டு வெட்டக்கண்டால் இவன் அந்த மனிதனை சிலபேச்சுகள் பேசுவான். அவனை அம்புக்கொண்டு எறியக்கண்டால் இவன் பேச்சுகள் செல்பிடியாகும். இனி ஒருவனை வல்லயங்கொண்டு குத்தக்கண்டால் குத்தப்பட்டவன் உதவி பெற்றுக்கொள்வான். இனி தண்டாயுதம் போல் கொற்றதைக்கொண்டு அடிக்கக்கண்டால் அடிபட்டவனுக்கு முஸிபத்துஉண்டாகும். காயப்படுத்தக்கண்டால் காயப்படுத்தின

வனில்நின்றும், தக்கடமும், மானபங்கத்தில் குத்றபாடு முண்டாகும். ஒருவன் தலையை, அல்லது கையை, அல்லது காலை, அல்லது சதையைதரிக்கக்கண்டால் தரித்தவனுக்கும், தரிப்பட்ட வனுக்கும் பித்னவுண்டாகும்.

ஒருவனுக்கு உருவப்பட்டவாள் கொடுக்கப்பட்டு தலைக்கு மேலானுயர்த்தி ஒருவரையும் வெட்ட நாடாமலிருக்கக்கண்டால் வலுப்பமான பிரசித்தமான சல்தான்தனத்தைப் பெற்றுக் கொள்வான், அல்லது அழகான பெண்பிள்ளையுண்டாகும். இமாம் கிர்மானீ றஹிமஹுல்லாஹு மாத்திரம் சொல்லுகிறார்கள்:— ஒருவன் வாளை இவ்விதமாகக்கண்டால் இவனுக்கும் பிள்ளை பிறக்கும், அல்லது உடன்பிறந்தான் பிறப்பான், அல்லது இவன் வாளைக் கொடுக்கப்பட்டு அந்தவாள் அதின் உறையில் ஒடிந்திருக்கக் கண்டால் இவன்தாய் வயிற்றிலிருக்கிறபிள்ளை மௌத்தாய்ப் போகும். உறையொடிந்து வாள்சலாமத்தாயிருந்தால் பிள்ளை சலாமத்தாகி தாய்மௌத்தாய்ப்போவாள். வாள் பிடியொடிந்திடக் கண்டால் இவன் தகப்பன், அல்லது இவன் சிற்றப்பன், பெரியப்பன் போல் கொற்றவர்கள் மௌத்தாய்ப்போவார்கள். இப்படிப்போல் தான் வாள்பிடியில் இணக்கமானது பசாதானதுண்டாயிருந்தால் இவர்களிலும் அதுபோலுண்டாகும். ஒருவன் வாளின்தறங்கு ஒடிந்திட, அல்லது கீழே விழக்கண்டால் இவன் தாய் அல்லது இவன் பாட்டியாள் அல்லது இவன் சிரியதாயார் அல்லது பெரிய தயார் இவர்கள்போல் கொற்றவர்கள் மௌத்தாய்ப்போவார்கள். இமாம் ஜஃபருஸ்ஸாதிகு றலியல்லாஹு அன்ஹு சொல்லு கிறார்கள்:—ஒருவன் தன்கையில் உருவப்பட்ட வாளைக்கண்டால் மனிதர்களைப்பேசுவான். அது கொண்டடித்து இரத்தம் ஓடக் கண்டால் அடித்தவனும், அடிப்பட்டவனும், இரத்தத்தை பூசிக் கொள்ளா மலிருக்கக்கண்டால் மனிதர்களைப்பேசுவான. அடிக்கப் பட்டு இரத்தம் ஓடினால் அதுகொண்டு பாவத்துடையவனுயிருப் பான். அல்லது அதின்பேரில் இவனுக்கு அல்லாஹுத் தஆலா வலுப்பமாகிய கூலிகொடுப்பான். இரத்தம் ஒலித்த கதருக்கு, இனி ஒருவனுக்கொருவன் அடித்து ஒலித்த இரத்தத்தை அடித்த வனுக்குப் பூசப்பட்டால் அடிபட்டவன் அடித்தவன் பேரில் சில பேச்சக்கள் பேசுவான், அல்லது அடித்தவன் அடிப்பட்டவனில் நின்றும் ஹறுமான்முதல்களைப்பெற்றுக்கொள்வான். ஒருவன்

வான் கொழிகியிருக்கப்பட்டதை யெடுக்கக்கண்டால் அந்தவாள் பூமியைவிட்டும் உயர்ந்தகதருக்கு காரியகர்த்ததனத்தைப் பெற்றுக் கொள்வான். அந்த காரியகர்த்ததனத்தைப் பொருந்தாதவனாக அதைவிட்டும் நீங்கிவிடுவான். இனி ஒருவன் வாள்கொடுக்கப் பட்டதை தரிக்கக்கண்டால் அவன் காரியகர்த்ததனம் அவனை விட்டும் நீங்கிவிடும். ஒருவன் தன்வாளில் ஓசையுண்டா யிருக்கக் கண்டால் அவன் பேச்சில் அழகுண்டாகாது. அவன் பேச்சை கபூல்செய்தலுமுண்டாகாது. காரியகர்த்ததன முண்டாயிருந்தால் பிரயோஜனம் குறைத்தலாய்விடும். பின்னையிருந்தால் அதின் அழகுக்குறைந்து பிரயோஜனமு மில்லாமல் போய்விடும். வாளின் கூர்மை போய்விடக்கண்டால், அல்லது தரிக்க யேலாமல் மழுங்கிப் போனால் இவனுக்குப் பிரயோஜனங்களுண்டாகாது.

வல்லயம் அதினுடன் வேறே ஆயுதங்கள் உண்டாயிருக்கக் கண்டால் சுல்தான் தனத்தை பெற்றுக்கொள்வான். இதனால் இவன் கருமங்கள் வெகு இடம் செல்பிடியாகும். வல்லயத்துடன் வேறே ஆயுதமில்லை. ஆனால் அதற்கு தரங்குண்டாயிருந்தால் பிள்ளை, அல்லது உடற்பிறந்தானை பெற்றுக்கொள்வான். அதற்கு தரங்கில்லை யானால் அந்த வல்லயமும் அறியபட்டதாயிருந்தால் பெண்மகளை பெற்றுக்கொள்வான். அந்த வல்லயத்தில் கலவு, அல்லது நீக்குண்டாயிருந்தால் அதையுடையவன்பேரிலுண்டாகும்.

ஹிக்காயத்து.

அபூஉமாறதித்தையார் றஹிமஹுல்லாஹு இமாம்முஹம் மதிப்னு சீரின் றஹிமஹுல்லா இடம் வந்து சொன்னார்கள், நான் என் மனையில் என்கையில் வல்லயமுண்டா யிருக்கக்கண்டே னென்றார். அப்போது இமாம் சொன்னார்கள், அந்த வல்லயத்தின் மேல் பிரகாசமுண்டாயிருக்கிறதா? யென்றபோது அபூஉமாற றஹிமஹுல்லாஹு சொன்னார்கள், அதில் பிரகாசத்தை நான் காணவில்லை யென்றார். அப்போது இமாம் சொன்னார்கள், நீ அதின் மேல் வில் பிரகாசத்தைக்கண்டால் உனக்கு ஆண்குழந்தை யுண்டாகும். ஆயினும் உனக்கு மேலைக்கு ஒரு பெண்குழந்தை யுண்டாகும். பின் இமாம் ஒரு ஸாஅத்துநேரம் வாய்மூடியிருந்து பிறகு சொன்னார்கள். உனக்கு வேலைக்கு பன்னிரண்டு பெண்மக்

களுண்டாகும் மென்றார். முஹம்மதிப்னு எஹ்யா சொல்லுகிறார்கள் நான் இந்த மனாமை அபுல்வலீதிடம் போய்ச் சொன்னேன். அப்போது அவர்கள் சிரித்துக்கொண்டு சொன்னார்கள், நான் அந்த பனிரண்டு மக்களில் ஒரு மகனுடைய மகனாயிருக்கும். எனக்கு பதினொன்று சிற்றப்பனும் சிறியதாயாருண்டும். அபீஉமாறதித்தையார் றஹிமஹுல்லாஹு என்னுடைய பாட்டனாராயிருக்குமென்றார்.

ஒருவன் வில்லைகண்டு அதில் நின்றும் நாணை பெடுக்கப்படவில்லையானால் சுல்தான் தனத்தை அல்லது ஆண்பிள்ளையை அல்லது பெண்பிள்ளையை அல்லது உடற்பிறந்தானைப் பெற்றுக்கொள்வான். அந்த வில் உறையுடனிருக்கக்கண்டால் இவன் பெண்சாதி ஆண் குழந்தை பெறுவாள். ஒருவன் தன் வில் ஒடிந்துவிடக்கண்டால் இவன் சுல்தான் தனத்தில, அல்லது இவன் பிள்ளையில் இவன் உடற்பிறந்தானில் முஸீபத்துபிடிக்கும். ஒருவன் வில்லை யெறியக் கண்டால் இவன் சுல்தான் தனத்தில் அதை யெறிந்த தலையின் கதறின்படி முஸீபத்து பிடிக்கும், ஒரு சொற்படி சபர்போய் ஸாலிஹாக மீண்டுவருவான். அந்தவில்லில் நாணை தரிப்படாமலிருந்தால், அப்படி தரிப்பட்டிருக்கக்கண்டால் பைர்போனதலத்தில் தரிப்பட்டிருப்பான், சிலகால் இவன்பைர் கிறப்பமாகும். ஒருவன் குண்டை யெறியக்கண்டால் தீனில் பொருத்தக்கேடான மனிதனை யெறிவான். சிலகால் அவன் அம்பை யெறியகண்டால் ஹக்கான பேச்சுபேசுவான். பாத்திலானது அந்த அம்புசெல்பிடியான கதறுக்குசெல்பிடியாகும். ஒருவன் வில்லைசரிக்கக்கண்டால்சுல்தான் தனத்தை அல்லது உடற்பிறந்தானை, அல்லது பிள்ளையைப்பெற்றுக் கொள்வான், அல்லது இவன் கலியாணம் செய்து ஒரு ஆண் குழந்தையுண்டாகும். வில்லை வம்பாகப் பறிக்கப்படக்கண்டால் இவன்சுல்தான் தனத்தில், அல்லது உடற்பிறந்தானில், அல்லது பிள்ளையில் கருமங்கள் வருத்தமாய்விடும். இனி கத்தி, கட்டாரி ஈட்டி இவைபோல்கொற்ற இரும்பாயுதங்கள் அடங்கலுடைய, மனாம்தஃபீர் ஆயுதபாணிகள் மனாமின் தஃபீர்களைபோலாயிருக்கும். இவைகளில் தனித்த ஆயுதங்களைக்கண்டால் உடற்பிறந்தானை அல்லது பிள்ளையைப் பெற்றுக்கொள்வான். இப்படிப்போல்தான் கோடாலி, வெட்டுகத்திபோல் கொற்றதைக் கண்டாலும். இனி அங்கிகள், தொப்பி, கொடி இவைபோல்கொற்றதைக்கண்டாலும்

பகைவர்களைவிட்டும் கார்மானமும் சுல்தான்தனமும் அச்சர் தீருதலும் துன்யாவில் குவ்வத்தும் மேன்மையுமுண்டாகும். இனி பரிசையுடன்வேறே ஆயுதமுண்டாயிருக்கக்கண்டால் கார்மானமுண்டாகும். பரிசைமாத்திரம் தனித்துக்கண்டால் இவன் இல்முள்ளவனுகவும் தன் உடற்பிறந்தான்மார்களைப் பேணுகிறவனுகவும், அவர்களின் தீங்கனை காத்துக்கொள்கிறவனுகவுமிருப்பான். இனி சாட்டையைக்கண்டால் ஜதகாக்களின் பேரில் அல்லது கொஞ்சம் முதல்களின்பேரில் இதுபோல் கொற்றநின் பேரில் காரியகர்த்த தனமுண்டாகும். (வல்லாஹு அஃலம்.)

பாத்திரங்கள் இயந்திரங்கள் முதலான வைகளைக் காண்பதின் தஃபீர்.

பாத்திரங்களைக்கண்டால் பணிவிடைக்காரரும் அடிமைகளாயிருக்கும். இவைகளில் ஏதாவது உண்டானால்இவர்களிலுண்டாகும். இனி அடுப்பு, செம்புசட்டி, சபரு, விளக்கு இவைகளைக்கண்டால் இவன் வீட்டின் கருமங்களுக்கு காரியகர்த்தராயிருகிறவர்களுக்கு வியாரமும், துக்கமுமுண்டாகும். செம்பினுல் ஈயத்தினுல் உண்டு பண்ணின தட்டம் கெண்டிப்போல்கொற்றவைகளைக்கண்டால் பணிவிடைக்காரன் அடிமைகளுக்கு வியாரமுண்டாகும். இனிகண்ணுடி பார்க்கக்கண்டால் இவன் பெண்சாதி ஹமலாயிருந்தால் இவளைப் போல் ஆண் பிள்ளையைப் பெறுவான். இவன் பெண்சாதி ஹமலில்லாமல் தனக்கு பிள்ளையுமில்லாம லிருந்தால் இவன் வேலையைவிட்டும் அதிகாரத்தைவிட்டும் நீங்கப்பட்டு இவனுக்குப் பகரமாக வேறொருவனை காணப்படும். இனி பெண்பிள்ளை கண்ணுடி பார்க்கக்கண்டால் அவள் ஹமலாயிருந்தால் அவளைப் போல் பெண்பிள்ளைப் பெறுவாள். அவள் ஹமலில்லாதவளாயிருந்தால் இவள் புருஷன் இவளைபோல் பெண்ணைகலியாணஞ் செய்வான். சிறு ஆண்பிள்ளை கண்ணுடிப் பார்க்கக்கண்டால் அவனைப்போலவனுக்கு ஒரு உடற்பிறந்தான் பிறப்படும். சிறு பெண்பிள்ளை கண்ணுடியில் பார்க்கக்கண்டால் அவள்தாய் பெண்குழந்தை பெறுவாள். இனி ஊசியை கண்டால் தன் பெண்சாதி தனக்கு வழிப்படுவாள். ஊசி கொண்டு மனிதர்க

னுடைய புடவைகளைத் தைக்கக்கண்டால் மனிதர்களுக்கு கலீஹத்து சொல்வான், ஒரு சொற்படி இவன் கருமங்கள் இணக்கமாகிறதற்கு சபபாயிருக்கும். ஒருவன் தன் புடவையை, அல்லது அவனல்லாதவன் புடவையை தைக்கக்கண்டால் அல்லது ஊசியில் நூல் போட்டிருக்கக் கண்டால் இவன் கருமங்கள் பொருந்துதலால் இணக்கமாய்விடும். தன்பெண்சாதி புடவையை தைக்கக்கண்டால் இவனில் கைநில்லை. ஊசிபொடிக்கக்கண்டால் இவன் மிடுமையுடையவனும் தலைவிதிகோலமானவனும் விடுவான்.

சிப்பைக்கண்டால் சந்தோஷம் முண்டாகும். ஒருவன் தன் தலையை தாடியை வாரக்கண்டால் அவனைத் தொட்டும் துக்கம், வியாரம், தீவிரமாய் நீங்கிவிடும். ஒரு சொற்படி மிருதமான கைநின் பேரிலறிவிக்கும், அது இல்லாயிருக்கும். தன் பேச்சைகொண்டும், ஏவலைகொண்டும் மற்றும் கருமங்களைக் கொண்டும் பிரயோஜனம் பெறுவது ஊக்கும் செய்கிறவன், பத்வா செய்கிறவன், வைத்தியஞ் செய்கிறவனைப்போல். இனி ஒருவன் வானத்தில் நின்றும் இறங்கின கத்திரி தன் கையி லிருக்கக்கண்டால் இவன் வாழ்நாள் குறைத்தலாய்விடும். அது கொண்டு உரோமங்களைத் தரிக்கக்கண்டால் மிருதமானமுதல்களை சேகரம் பண்ணிக்கொள்வான். இனி பளிங்கிலைக் கண்டால் வீட்டின் சாமான்கள் பளிங்கினுள்ள பாத்திரங்கள், கட்டில்கள் இவைகளுண்டாகும், சிலகால் வெள்ளாட்டி பயல்களுண்டாகும்.

ஹிக்காயத்து.

ஒரு மனிதன் இமாம் முஹம்மதிப்னு சீரின் றலியல்லாஹு அன்ஹு லாஹிடம் வந்து சொன்னார், என் நாயகமே! என் மனுவில் பளிங்கினால் ஒரு பாத்திரம் என் கையிலிருந்து அதில் தண்ணீரி ருந்தது. அந்த பாத்திரம் என் கையில்நின்றும் தவறி கீழே விழக்கண்டேன். அதுவும் என் கையில் குத்ரத்தால் ஆகாயத்தில் கொழுவப்பட்டதா யிருந்ததென்றபோது, இமாம் கேட்டார்கள், உனக்கு ஹமலாகிய பெண்சாதி யிருக்கிறளா வென்றபோது இவன் ஓமென்று சொன்னான். அப்போது இமாம்சொன்னார்கள், அவள் பிள்ளைப் பெற்றவுடன் மௌத்தாய்ப்போவாள். அவள் பிள்ளை அல்லாவுதவியினால் ஹயாத்தாயிருக்கும் என்றார். பின் அவ்விதமாகவே நடந்தது.

ஆபரணாதிகளைக் காண்பதின் தஃபீர்.

இவைகளின் இனங்கள் விகற்பமாயிறதுகொண்டு தஃபீறும் விகற்பமாகும். மொத்தத்தில் இதின் இனங்களை யறிந்தால் அவைகள் பெண்பிள்ளைகளும், பிள்ளைகளும் கித்மத்துகாரர்களுமா யிருக்கும். இன்னுமறியப்படாமல் மிரூசமாயிருந்தால் குர்ஆனும், இல்மும், தஸ்பீஹாவும், திக்றுமாயிருக்கும். ஒருவன் முத்தை எடுக்கக்கண்டால் பெண்பிள்ளை, அல்லது வெள்ளாட்டி, அல்லது பயலைப் பெற்றுக்கொள்வான். ஒருவன் மாணிக்கத்தை பச்சை மரகதத்தை, அல்லது இவைபோல் கொத்துவைகளை யெடுக்கக் கண்டால் பெண்பிள்ளை, அல்லது வெள்ளாட்டி, அல்லது பயலை பெற்றுக் கொள்வான். ஒருவன் தன் பேரில் முத்து மாலை உண்டாயிருக்கக் கண்டால் அல்லாஹுத் தஆலாவுடைய குர்ஆனை ஓதிஹாபிலாவான். அமானத்தும், பேணுதலும், மனிதர்களில் தலைமைத்தனமும் மிகுதியானவனா யிருப்பான். அந்த மாலை மூன்று சரமாக, அல்லது நாலு சரமாக விருந்தால் மிகவும் வருகையுள்ளவனாயிருப்பான். ஒருவன் அந்த மாலையை கழுத்தில் போட ஏலாதவனாய்விட்டால் இவனுக்கு இல்மும் அதிகமாய் அமல் செய்யாமலாய்விடுவான். ஒருவன் தன்காதில் அலுகத்தண்டா யிருக்கக்கண்டால் குர்ஆன் இல்முகளை பாடமிடுவான், அல்லது மனிதர்களில் அழகான இல்மைப்படிப்பான்.

பெண்பிள்ளை அலுகுத்து போட்டிருக்கக்கண்டால் தன்புருஷனும் அவள் பிள்ளைகளுமாயிருக்கும். ஒருவன் தன்வாயில் நின்றும் முத்துதிரக்கண்டால் தன் வாயில்நின்றும் நன்றியுடைய அறிவுடைய கலாம் புறப்படும். குர்ஆன், தஸ்பீஹ் ஓதல் மிகுதி யுடையவனாயிருப்பான். ஒருவன் முத்தை பெண்ணக்கண்டால் அல்லது வாயில் வைக்கக்கண்டால் அல்லாஹுத் தஆலாவுடைய கலாமை இல்மை மறைத்துக்கொண்டிருப்பான். மனிதர்களுக்குப் படித்துக்கொடான். சிலகால் இல்மை படித்து பிரயோஜனம் பெறுறவனாயிருப்பான். முத்துகளை பாதைகளிலும் குப்பைகளிலும் கடைகளிலும் உதிரக்கண்டால் இல்மு ஹிக்மத்துகளை படித்து தகுதியில்லாதவனுக்கு படித்துக்கொடுப்பான். இனி பொன்னினாற் அல்லது வெள்ளியினால் அழுத்தப்பட்ட தாலியைகண்டால் அமானத்து வைக்கப்பட்டவனாயிருப்பான். சிலகால் பூமியில்

விளைச்சலில் நின்றமுள்ள அபூர்வமாகி இரத்தினங்களை மிருதமாகக்கண்டு அதின் எண்ணங்கள் அறியாதவரையில் அபூர்வமாகிய முதல்களைக் கொண்டு பிரயோஜம் பெறுவான்.

கோர்க்கப்பட்ட மணியைக்கண்டால் முதல்களுண்டாகும். சிலகால் குற்றுன் அல்லது பிரயோஜனம்பெறாத இல்முண்டாகும். இதில் கொஞ்சமாகிறது பெண்பிள்ளைகளும் பணிவிடை செய்கிற பெயர்களுமாயிருக்கும். இனி ஆகத்தில் ஆண்பிள்ளைகளணிகிற நகைகளைக்கண்டால் வீனத்தும் அழகுண்டாம். ஆண்பிள்ளையுடைய தகுதி இதின்கண்டிப்பு வன்னிப்பின் கதறின்படியுண்டாகும். அறங்காகொடி அணையக்கண்டால் முதல்களும் சிறப்பும் பெற்றுக் கொள்வான். இவைகொண்டு மனிதரிடம் சிறப்புடையவனாயிருப்பான். சிலகால் இவன் வாழ்நாள் அறைவாசியில் காரியதனத்துடைய வனாயிருப்பான் இதில் இரத்தின முண்டாயிருந்தால் முதல்களில் நின்றும் இவன் குடும்பத்தாருக்கு நாயகமாய்விடுகிற முதல்களை பெற்றுக்கொள்வான். அல்லது இதன் குடும்பத்துக்கு நாயகமான பிள்ளையுண்டாம். சிலகால் இவன் இடுப்பில் அறைங்காகொடி மிருதமாயிருந்தால் மிகவும் பலவந்தமானவனாகவும் கோனவனாகவும் அழகானவனாகவுமிருப்பான். இனி ஒருவன் தன் அறைங்காகொடி சரிப்பட்டுபோக, அல்லது ஒடிந்திட அல்லது கழண்டுவிழ, அதில் ஏதாவதுண்டானால் அந்த குறைத்தல் தன்னிடத்திலுண்டாகும். இனி கிரீடத்தைக் காண்கிறது ஆண்பிள்ளைகளுக்கு சல்தான்தனமும், சிறப்பும், மேலாண்மையும் துன்யாவிலுண்டாகும். ஒருத்தி தன்பேரில் பொன்னால், அல்லது வெள்ளியினால், அல்லது இரத்தினங்களாலுள்ள கிரீடத்தைக்காண்கிறது அவள் புருஷனாயிருக்கும். அவளுக்கு புருஷனில்லாதவரையில் அறபிய்யான, அல்லது அஜமிய்யான புருஷனுக்கு வாழ்க்கைப் படுவாள். அவன் சிறப்புடையனாகவும் வலுப்பமுள்ளவனாகவுமிருப்பான். ஒருவன் தன்கழுத்தில் சவடிப்போட்டிருக்கக்கண்டால் அமானத்தைப் பெற்றுக்கொள்வான். இனி ஆண்பிள்ளையுடைய மோதிரத்தைகாண்கிறது தன் அடிமைத்தனமான வஸ்துக்களாயிருக்கும். தன்மனிதர்களிடத்தில் சிறப்புப் பெறுவானே அப்படிக் கொற்ற முதல்களுமாயிருக்கும். தனக்கு சல்தான்தனமும் சிறப்புமுண்டாகும். இவன் மனுவில் ஏதாவதுண்டானால் இவைகளின்

யிருக்கும். ஒருவன் மனாமில் ஏதாவதுண்டானால் மேற்சொன்ன வைகளைப் பெற்றுக்கொள்வான். சிலகால் மோதிரம் பெண்பிள்ளை யாக அல்லது ஆண் பிள்ளையாக அல்லது மிருகங்களாக, அல்லது இவைகளல்லாததாக யிருக்கும். இவைகள் மனாம் கண்டவனுடைய ஹாலுடைய கதறின்படியாயிருக்கும். அவன் சல்தானாயிருந்தால் இராஜாங்கத்தின் காரிய வற்றை உடையதாக்கிக் கொள்வான். கச்சவடக்காரனா யிருந்தால் தனக்கு லாயிக்கான கருமங்களை உடையதாக்கிக்கொள்வான். இப்படிப்போல் மற்ற மனிதர்களும் அவரவர்கள் நிர்வாகத்தில் காரியதை உடையதாக்கிக்கொள்வார்கள். ஒருவன் தன் மோதிரம் கையைவிட்டு கழன்டு விடக்கண்டால் தான் உடையதாக்கினது தன்னை விட்டும் போய்விடும். மோதிரம் களவுபோக, அல்லது காணாமல் போகக்கண்டால் தன் வஸ்துக்களில் பொருத்தக்கேடான கருமமும் மனிதர்களுடைய கருமங்களில் வருத்தமுமுண்டாகும். மோதிரக்கிண்ணியைக் காண்கெறது வீனத் தும் அழகுமுண்டாகும். மோதிரம் ஒடிந்து கிண்ணி தரிக்கப்பட்டி ருந்தால் தான் உடையதாக்கினதெல்லாம் போய்விடும், தன்கீர்த் தியும் அழகும் மனிதர்களிடம் தரிப்படாயிருக்கும். ஒருசொற்படி மோதிரக்கிண்ணி தன்னுடைய சந்தோஷமான பிள்ளையாயிருக்கும். மோதிரம் பொன்னாலிருந்தால் அவன் உடைதாக்கிறதும் அணி கிறதுமே ஹராமானதாயிருக்கும். மோதிரம் இரும்பினா லிருந்தால் சல்தான் புறத்தால் சிலதை உடையதாக்கிக்கொள்வான். மோதிரம் செம்பினால், அல்லது ஈயத்தினாலிருந்தால் இவன் உடையதாக்கின தெல்லாம் தழுமையானதாகவும் பலக்கேடானதாகவு மாய்விடும். பெண்பிள்ளைகள் நகைகளினால் அதுகுத்து மோதிரம் அல்லாததை ஆண்பிள்ளை அணையக்கண்டால் கைறில்லை. ஒருவன் தன்பேரில் இரண்டு காப்பு உண்டாயிருக்கக் கண்டால் அவனில்கெட்டுமையும் பொருத்தக்கேடான கருமமுமுண்டாகும். இனிஒருவன் தன்பேரில் ஒற்றை சிலங்கை அல்லது இரட்டை சிலங்கைக்கொண்டா யிருக்கக் கண்டால் இவனுக்கு வருத்தமும் பயங்கரமுமுண்டாகும், மறியல் போல்கொற்றதுண்டாகும். இனி கடையம்போடக்கண்டால் தன் உடற்பிறந்தானில் நின்றும் அல்லது தன் கூட்டாளியில்நின்றும் கெட்டுமையும் பொருத்தக்கேடான கருமத்தையும் பெற்றுக்கொள் வான். கடயம் வெள்ளினாலாயிருந்தால் இவைகள் லேசாகி நீவி மாயிய சந்தோஷ முண்டாகும்.

பெண்பிள்ளையின் நகைகளைக்கண்டால் அவளுக்கு அகுழம் ஹீனத்தமுண்டாகும். அவள் ஹால் அழகானதாகவுமிருக்கும். பொன்னால், வெள்ளியினால், இரத்தினங்களினாலிருந்தாலும் சரியே. இனி ஒற்றைச் சிலங்கை அல்லது இரட்டைச்சிலங்கைக்கண்டாளானால் அவள் புருஷனுக்கு அல்லது அவள் உடற்பிறந்தானுக்கு மேற்சொன்னதுண்டாகும். இப்படிப்போல்தான் கிரீடத்தைக் கண்டாலும் ஒரு சொற்படி சல்தானுக்குண்டா யிருக்கும். இனி தங்கக் காசுவகைகள் எண்ணங்கள் அறியப்படாததா யிருந்து காசுக்கான அதிகமாயிருக்கக் கண்டால் பொறுத்தக் கேடான கருமமுண்டாகும். ஒருவன் இதிலொன்றை யெடுக்கக்கண்டால் இவன் மானபங்கத்தில் இவன்பேரில் காயிமகாரமா யிருக்கிறவன் மானபங்கத்திலும் சில பேச்சுண்டாகும். இன்னும் ஹாவிலும், அவேட்கை யுடையவனா யிருப்பான். அதின் எண்ணம் அறியப் பட்டதா யிருந்தால் கருமங்கள் இவன்பேரில் லேசானதாய்விடும். இனி தங்கக்காசு உண்டாயிருந்தால் அல்லது அது ஒன்றைக்கான காலுவரையு மதிகமாகக்கண்டால் அதின் எண்ணப்படி பிள்ளை யுண்டாகும். ஒருவன் தங்கக்காசில் வச்சில்லாம லிருக்கக் கண்டால் பிள்ளையுண்டாகும். ஒருவன் பொன்கட்டி பொன் பாத்திரத்தைக் கண்டால் இவன் மூதல்கள் அழிந்துபோம், அல்லது இவன்பேரில் சல்தான் கோபமாவான்.

வெள்ளிக்காசை காண்கிறது மனிதர்களுடைய இயற்கை யான குணப்பேதகத்தைக் கொண்டு அதன் தலீலும் பேதக மாகும். மனிதர்களில் சிலர் இதைக் கண்டால், அல்லது நித்திரையில் எடுக்கக்கண்டால் அதை விழிப்பில் பெற்றுக் கொள்வான். இன்னும் மனிதர்களில் சிலர் கண்டால், அல்லது எடுத்தால் அழகான றிஸ்கையும், அழகான பேச்சையும், கணக்கில் களினத்தையும் பெற்றுக் கொள்வான். சிலகால் அழகான பேச்சுகள் பேசுவான்.

செம்பு, பித்தளை கலந்த வெள்ளிக்காசைக் கண்டால் தமூமையான பேச்சுகள் வழக்குகளுண்டாகும். வெள்ளிக்காசை பையில் வைத்து இவனிடம் கொடுக்கப்படக் கண்டால் இவனிடம் சிற்றுகப் பிணையம் வைக்கப்பட்டு அதைப் பெற்றுக்கொள்வான். இவன் அந்தப் பையை இவனல்லாதனயில் கொடுக்கக்கண்டால்

அதுபோல் இவன் சிற்றுகப் பிணையம் வைப்பான். ஒரு வெள்ளிக் காசைக்கண்டால் இவனுக்கு பிள்ளையுண்டாகும். அது அதில் நின்றும் பழுதாய்ப்போக அல்லது களவுபோகக் கண்டால் இவன் பிள்ளை மௌத்தாய்ப்போகும். இனி செம்பு சல்லியில் ஒன்றை, அல்லது அதிகத்தைக் கண்டால் தாழ்ந்த பேச்சுகள் பேசுவான். மறியதும் கெடப்பான். அழகான திஸ்கும் தாழ்ந்ததொழிலு முண்டாகும். இனி வெள்ளிக்கட்டியைக் கண்டால் கைறின்பேறி லறிவிக்கும். அதாவது பொன்கட்டியைவிட கைறுன தாயிருக்கும். இதாவது பெண் பிள்ளைகள்பேறி லறிவிக்கும். ஒருவன் பரிமாற்றம் பண்ணாத பொன்கட்டி அல்லது வெள்ளிக் கட்டியை யெடுத்துக் கொள்ளக்கண்டால் அழகாகிய காட்டான் மகளாகிய பெண்பிள்ளையை அல்லது வெள்ளாட்டியை பெற்றுக் கொள்வான். ஒருவன் பொன்கட்டி, அல்லது வெள்ளிக்கட்டியை, அல்லது விளையுர்தலத்தில் எடுக்கக் கண்டால் அந்தத் தலமல்லாததில் பெண்பிள்ளையைப் பெற்றுக்கொள்வான்.

இரும்பு, செம்பு, ஈயக்கட்டி இவைகளைக் கண்டால் அவைகள் பரிமாற்றம் பண்ணப்பட்டதா யிருந்தால் துன்யா வஸ்துக்களில் கைறைப் பெற்றுக்கொள்வான். ஒருவன் பொன்னை அல்லது வெள்ளியை அல்லது இரும்பை உருக்கக் கண்டால் மனிதர்கள் இவனைப்புறம் பேசுவார்கள். அல்லாஹுத் தஆலா எம்மனைவோரையும் முஸீபத்தைவிட்டும் காப்பாற்றி எம்முடைய வருத்தங்கள் சந்தேகங்களை நீக்கிவைப்பானாகவும் ஆமீன்.

ஆடைகளையும் விரிப்புகளையும் காண்பதின் தஃபீர்.

அவைகளில் உயர்வும், தாழ்மையினுல் தஃவீறும் பேதக மாகும். உடைகளில் பட்டின் வகைகளைக் கண்டால் சுல்தானைக் காண்பான். ஹறுமான முதல்களைப் பெற்றுக் கொள்வான். இனி ஒருவன் ஆட்டின முடியால் செய்யப்பட்ட புடவையை அணியக்கண்டால் மிகுந்த முதல்களையும் ஸாலிஹுத்தான துன்யாவையும் பெற்றுக் கொள்வான். இனி ஒட்டகத்தின் முடியாலும்

மற்ற முடிகளால் பருத்தியின் நூலால் செய்யப்பட்ட புடவைகளைக் கண்டால் ஆட்டின் முடியால் செய்யப்பட்ட புடவைக்குத் தாழ்ந்ததா யிருக்கும். இத்தான்போல் பருத்தியின் நூலுக்குத் தாழ்ந்ததாயிருக்கும். பரிவட்டத்தைக் கண்டால் துன்யாவையும், தீனையும் சேகரமாக்கிக் கொள்வான். இனி ஒருவன் சட்டையைக் காண்கிறது மனிதர்களுடைய ஹாலாயிருக்கும். அவன் தீனும் துன்யாவும் அந்தச்சட்டையின் கதறின்படியாயிருக்கும். ஒருவன் பழைய புடவையைக் கண்டால் அந்த மனாமில் நிக்கின்பேரில் அறிவித்தலுண்டா யிருந்தால் இவன் தீவிரமாய் மௌத்தாவான். இனி ஒருவன் புடவையில் ஊத்தையைக் கண்டால் அவன் தீனிலும், துன்யாவிலும் ஸாலிஹல்லாதவனா யிருக்கும். இனி ஒருவன் தலையில் உரோமத்தில் இலத்தில் ஊத்தையைக்கண்டால் வியாரமும், துக்கமும், வருத்தமு முண்டாகும். புடவையில் வெண்மையும் துப்புறவும் உண்டாயிருந்தால் இவன் ஹால் அழகாயிருக்கும். இனி ஒருவன் ஊத்தைபிடித்து கிழிந்த பழைய புடவையை உடுக்கக் கண்டால் மிடிமைத்தனத்திலும், ஹாஜத்திலும், மிகவும் கடிசானவனாயிருப்பான். ஒருவன் வெண்மையான அழுக்குக் கட்டப்பட்ட புடவையை அணியக் கண்டால் அவனுக்குத் துன்யாவின் ஆகாரத்தின் கருமங்களெல்லாம் ஒருமித்திருக்கும், ஒருசொற்படி சல்தானுடைய மேன்மைத் தனத்தையும், அழகான கீர்த்தியு முண்டாகும்.

ஒருவன் தலைப்பாகை வைக்கக் கண்டால் தலையை சூழ்ந்திருக்கிற கதறின்படி காரியத்தன முண்டாகும். தலைப்பாகை பட்டினால் இருந்தால் காரியத்தனத்தினால் தீனுடைய கருமம் துன்யாவிடைய கருமங்களைவிட பனாதுசெய்து போடுவான். அந்த காரியத்தனத்தினால் உண்டாகிய முதல்கள் இவன்பேரில் ஹறாமானதாயிருக்கும். அந்த பருத்தி நூலால் அல்லது ஆட்டு முடியினாலுள்ளதா யிருந்தால், அந்த காரியத்தனம் தீனிலும், துன்யாவிலும் இணக்கமா யிருக்கும். தலைப் பாகையின் நிறங்கள் புடவைகளின் நிறத்துக்குச் சொன்ன தக்வீலைப்போலிருக்கும். இனி ஒருவன் தொப்பியை யணியக்கண்டால் முதல்களினால் அல்லது உடற்பிறந்தானால், அல்லது பிள்ளையினால் அல்லது காவலால், அல்லது அடிமையினால் தன்மையுடையவனா யிருப்பான். இந்த தொப்பியில் ஊத்தை அல்லது ஓட்டைக் கிழித்தலுண்டா

யிருக்கக்கண்டால் இவன் ஊரால் நீங்காயிருக்கும். வியாகூலமும் துக்கமும் கைசேதமு முண்டாகும். இனி ஒரு கையில்லாச் சட்டையை அணியக்கண்டால் சந்தோஷமுண்டாகும்.

உள்போர்வையாக போடப்பட்ட ஜூப்பாவை, அல்லது தப்பட்டி, அல்லது சிறுவால், அல்லது விரிப்பு, அல்லது செருப்பு இவைகளாகிறது தன் பெண்சாதியா யிருக்கும். அவைகளில் ஒரு வஸ்துவை கிழிந்திருக்கக்கண்டால் அல்லது கிழித்துப்போட அல்லது இவன் அதின்பேரில் மிகைத்துக் கொள்ளக்கண்டால் இவன் பெண்சாதி இவனைவிட்டும் தலாகுகொண்டு, அல்லது மௌத்துக் கொண்டு பிரிந்திடுவாள். ஒருவன் தன்னை கைறை விலக்குகிறவனாக கண்டால், அல்லது கள்ளனாகக்கண்டால் தன் பெண்சாதியைத் தலாகு சொல்லுகிறதின் பேரில் ஆரம்பிப்பான் அது சிறப்பமாகாது. சிலகால் அந்தவிரிப்பு சிறுவால் வெள்ளாட்டியாயிருக்கும். இனி ஒருவன் தன் செருப்பு கிழிந்து பாதொன்று மில்லாமல் போய் விட்டால் தன் பெண்சாதி மௌத்தாய்ப் போவான். சிலகால் இரண்டு செருப்பி லொரு செருப்பை கூட்டாளியாக, அல்லது உடற்பிறந்தானா யிருப்பான். ஒருவன் இரண்டு செருப்பில் ஒரு செருப்பு கிழிந்திருக்கக் கண்டால் அல்லது ஒரு செருப்பை கழற்றி மற்றொரு செருப்புடன் நடக்கக் கண்டால் கூட்டாளி அல்லது உடற்பிறந்தான் அல்லது உடற் பிறந்தாள் இவர்களி லொருவரைவிட்டும் பிரிந்திடுவான்.

ஒருவன் பையைக்காண்கிறது இவன் முதல்களை கார்க்கிறதா யிருக்கும். அந்தப்பை சரியானதாகவும் வாடைமணமானதாகவு மிருந்தால் ஸகாத்துக்கு காரியத்தனமானவனா யிருப்பான். தன் முதல்களை ஆபத்துகளைவிட்டும் காத்துக்கொள்வான். இவன் அழகாயிருக்கும் அந்தப்பை கிழிந்ததாக, அல்லது அதில்நின்றும் ஒருவஸ்து பழுதாய்க்கண்டால் ஸகாத்து ஸதகாவை விலக்குவான். தன் முதல்களில் நின்றும், ஸகாத்து ஸதகாவை கொடுக்க மாட்டான். இனி ஒருவன் மோஸாவைக் கண்டால் நிர்வாகமும் தொழிலையும் காத்துக்கொள்ளும். அந்தமோஸா சரியாயிருந்தால் இவன் நிர்வாகம் இணக்கமானதாய் நடந்துவரும். சிலகால் தனக்கு துக்கமும் வியாமூ முண்டாகும். ஒருவன் கிழிந்த புடவையுடுத்தி ஜுப்பா வோதக்கண்டால் இவன் கருமம் தன்

ஹாலில் நிர்வாகத்தில் தொழிலில் பொருந்துதலா யிருக்கும். என்கிலும் புடவையாகிறது ஒரு மனிதனுடைய ஹாலாயிருக்கும். மேற் சொன்னபடிக்கு இவன் பாவத்துடையவனா யிருந்தால் நிர்வாகம் தௌபாவைக்கொண்டும் களவு செய்கிறதைக்கொண்டும் பொருந்தும். ஒருவன் தன் பெண்சாதி புடவையை உடுத்திக் கொண்டு அல்லது வேறொருத்தியுடைய புடவையை உடுத்திக் கொண்டு அவள் தலைமுடியை அணைந்து கொண்டு குத்பா வோதினால், அல்லது அவள் புடவைக்கு ஓட்டுபோடக்கண்டால் அவனைத்தொட்டும் வழக்குப் பேசுவான். அவள்பேரில் தன் கூட்டம் குடும்பத்தாருக்கு வெளியானதை யெல்லாம் வெளியாக்கி வைப்பான். இனி பெண்பிள்ளையுடைய முகம் முடி அவள்புடவை அல்லது அவள் தலைமுடி இவைகளெல்லாம் அவள் புருஷனா யிருக்கும். இவைகளி லேதாவதுண்டானால் அவள் புருஷனில் உண்டாயிருக்கும். இவைகளிலேதாவது குறைத்தல் பழிப்பு, அல்லது அழகு அல்லது வெண்மையுண்டானால் அவள் புருஷன் ஹாலும் அவ்விதமா யிருக்கும்.

ஒருவன் நூல் நூர்க்கக்கண்டால் சபர்போனதாயிருக்கும். ஒருவன் செம்மறியாட்டுமுடி, அல்லது பள்ளாட்டுமுடி, அல்லது ஒட்டகைமுடி இவைகளிலொன்றை அல்லது ஆண்பிள்ளைகள் சொந்தமாய் நூர்க்கிறதுகளி லொன்றை நூர்க்கக்கண்டால் சபர்போய் ஹலாலாகிய வளர்ச்சேரும்படியான முதல்களை சம்பாத்தியம் பண்ணுவான். மிகுந்த கைறையும் பெற்றுக் கொள்வான். இனி பெண்பிள்ளைகள் சொந்தமாய் நூர்க்கிற பருத்தி, சித்தான்போல் கொற்றதா யிருந்தால் அவன் சபர்போய் முதல்களைப் பெற்றுக்கொள்வான். அந்த முதல் மனிதர்களிடத்தில் அழகானதில்லை. பெண்பிள்ளை இப்படிக் கண்டால் அவளைவிட்டும் சபர்போவான், முன்னேக்கி வருவான். அவள் ஹமலாயிருந்து நூர்த்தாளானால் பெண் குழந்தைப்பெறுவாள், அல்லது அவளுக்கு உடற்பிறந்தாள் பிறப்பாள். இனி நூல்நூர்க்கப்படுகிற எந்திரமா யிருந்தால் தன்மகளை கலியாணமுடித்துக் கொடுப்பாள். ஒரு பெண்பிள்ளை ஆண்பிள்ளையுடைய உடுப்பை அணியக்கண்டால் இவள் அவனுக்கு இணக்கமாயிருப்பாள். இனி அது படையினுடைமானமாயிருந்தால் அதின் தலையில் அவள் புருஷனுக்கு அல்லது அவள் காரியகர்த்தனுக்கு உண்டாகும்.

இனி ஒருவன் பெண்பிள்ளையுடைய உடுப்பை அணியக்கண்டால் அவனுக்கு கடினமான பயங்கரமுண்டாகும். பின்பு அல்லாஹுத் தஆலாவினுதவிகொண்டு நீங்கிப்போம். இனி சாயம் காச்சப்பட்ட புடவையைக்கண்டால் அதின் நிறங்களின் பேதகங்களைக்கொண்டு தவீலிலும் பேதகமாகும். இனி ஒருவன் தன்பேரில் விகற்பமாகிய புடவையுண்டாயிருக்கக்கண்டால் தன் நபுஸுக்கு பயங்கரமாகிய பொறுத்தக்கேடான கருமத்தைக் கேட்பான், மனிதர்களிடம் பிரசங்கமானவனுமிருப்பான். வெண்மையானபுடவை யுடுக்கக் கண்டால் இவன் கருமங்களடங்கலும் திருத்தமாய்விடும். மஞ்சள் புடவையை யுடுக்கக்கண்டால் நலனும் வியாரமுமுண்டாகும். மஞ்சள் தன் ஜுப்பாவிலிருந்தால்யாதொரு தங்கடமுமுண்டாகாது. இனி பச்சைப்புடவை அணியக்கண்டால் ஹயாத்துள்ளவனுக்கும், மௌத்தானவனுக்கும் அவன் கருமங்கள் திருத்தமாய் இணக்கமாயிருக்கும். அது சொர்க்கவாசியுடைய உடையாயிருக்கும். சிவப்புப்புடவை அணியக்கண்டால் மனிதர்களிடம் பிரசித்தமாயிருப்பான். கருப்புப்புடவை அணியக்கண்டால் அவன் கருமங்கள் இணக்கமாகவும் திருத்தமாகவுமிருக்கும். முதலும் சுல்தான்தனமுமுண்டாகும். கருப்புப்புடவை யுடுத்தி க்ஷேமமாயிருக்கிறவனுக்கு மேற்படி கருமம் அவசியமுண்டாகும். கருப்பான வஸ்து வடக்கலையும் காண்கிறது சகல வஸ்துவிலும் இணக்கமானதாகவும், புகழப்பட்டதாகவுமிருக்கும். முர்திரிப்பழத்தைத்தவிர அதை காண்கிறதில் கைறில்லை.

விரிப்புகளை விரிக்கக்கண்டால் அந்த விரிப்பின் விஸ்திரணம் திண்ணம், மெல்லினம், கண்டிப்பு இவைகள் விதப்படி இவனுக்கு துன்யா இணக்கமானதா யிருக்கும். விரிப்பு விஸ்திரணமாயிருக்கிறது இவனுக்கு துன்யா விஸ்திரணமாகவும், இணக்கமானதாகவுமிருக்கும். இனி விரிப்பு சிறியதாயிருக்கிறதும் கட்டுமையாயிருக்கிறதும் துன்யாவும் அவ்விதமாகவே இருக்கும். அது திண்ணமாகவும் கெட்டியாகவுமிருக்கிறதும் இவன் வாழ்நாள் நீளமாயிருக்கும். அது மெல்லினமாகவும் பழையதாகவுமிருக்கிறது இதற்கு மாற்றமாயிருக்கும். ஒருவன் திண்ணமான, விஸ்திரணமான புதிதான விரிப்பைக்கண்டால் நீளமான வாழ்நாளையும் விஸ்திரணமான நிஃமத்தையும், பணமான ஹயாத்தையும், ஸாலிஹத்தான துன்யாவையும் பெற்றுக்கொள்வான். ஆகிலும் அவனில் விஸ்திரண

குறைதலுண்டாயிருக்கும். அந்தவிரிப்பு அதிக மெல்லினமுடையதாகவும் விஸ்தீரணமுடையதாகவுமிருந்தால், விஸ்தீரணமான துன்யாவைப்பெற்றுக் கொள்வான், வாழ்நாள் சுருக்கமாயிருக்கும். ஒருவன் விரிப்பை சிறியதாகவும், பழையதாகவும் மெல்லினமாகவுங் கண்டால் இவனில் கைறில்லை. இப்படிப்போல்தான் விரிப்பை சுருட்டப்பட்டதாகக்கண்டாலும் கைறில்லை. இனி கைலேஞ்சியைத் தாலியை, தலைவானியை காண்கிறது இவன் கித்மத்துக்காரனும் ஆள் அடிமைகளும் வெள்ளாட்டிகளுமாயிருக்கும். இவைகளில் ஏதாவது கைறை சர்றைக்கண்டால் இவைகளிலுண்டாகும். இனி மறைப்புகளைக்காண்கிறது அவைகள் புதிதாயிருந்தாலும், பழையதாயிருந்தாலும், அதிகமாயிருந்தாலும், வியாரமும், துக்கமும், உண்டாகும். அதில் கைறில்லை.

மௌத்தை மௌத்தானபேர்களைக் காண்பதின் தஃபீர்.

ஒருவன் மௌத்தாய் அவனை சந்தூகில்வைத்து சமக்கப்பட்டு அவனுடன் அழுகை ஓசை சப்தங்களுண்டாயிருந்தால் அவன் தீனில் பஸாதுண்டாகும். அவனுக்குத் துன்யாவில் சிறப்பும் மேன்மையுண்டாகும். அவனை கபறில் அடக்கஞ் செய்யாமலிருக்கும் காலமெல்லாம் அப்படி கபறில் அடக்கஞ் செய்யக்கண்டால் அவன் தீனில்நலவை ஆதரவுவைக்கப்படாத ஷைத்தான் இவன் பேரில் மிகைத்து பஸாதுண்டாகும். ஷைத்தானுடைய அச்சமூறத்துதலில் இவன் தொடர்ச்சியை இவன் ஜனுஸாவைத் தூக்கி மனிதர்களுடைய கதறின்படியாயிருக்கும். எப்போதும் மனிதர்களை படக்கியாள்வான். ஒருவன் தன்னை மௌத்தாகக்கண்டு அடக்கஞ்செய்கிற கோலம் மௌத்தானபேர்களின் கோலம் அழுகைசப்தம் குளிப்பாட்டுதல், கபனிடுவது, சந்தூகில் வைத்து சமக்குதல்போல் கொற்றவைகளு மில்லாதிருந்தால் இவன் வீட்டில் நின்றும் ஒரு கோணம் இடிந்துவிழும். அல்லது மாத்தடிகள் ஒடிந்திடும். ஒரு சொற்படி அவன் மேனியில் குறைதலுண்டாகும். அவன் பார்வையிலும், குறைவுண்டாகும்.

ஒருவன் தன்னை மௌத்தாகிறதன்றியே கபறில் இறக்கிவைக்கக்கண்டால் இவனைச் சிறைச்சாலையில் போடப்படும் அல்லது இவன் கருமத்தில் வலுப்பமான கிட்டுமைப்பிடிக்கும். ஒருவன்குழித் தோண்டக்கண்டால் அந்த தலத்தில் அல்லது அந்தவூரில் வீடு கட்டுவான். ஒருவன் மௌத்தானவனைக்கண்டு அவனிடம் சில கருமங்களைக் குறித்துக் கேட்டு அவன் இவனுக்குச் செய்தியறிவித்தால் சொன்னதுபோல் யாதொரு அதிகக் குறைவுதலில்லாமலிருக்கும் இவன் ஹால் அழகானதென்று அறிவித்தால் இவன் ஹால் அழகாகவும் இவன் ஆகிறத்தின் கருமம் திருத்தமாகவுமிருக்கும்.

மௌத்தானவன் அறிவிக்கிற கருமங்களடங்கலும் உண்மையானதாயிருக்கும். ஏனென்றால் அவன் பாத்திலான துகளை விட்டும் புறப்பட்டு ஹக்காகிய வீட்டிலிருப்பதால் அவனறிவிக்கிற கருமங்களில் பொய்யில்லை. ஒருவன் மையித்தை அழகான கோலத்தில் அல்லது அந்த மையித்தின்பேரில் வளமையானபுடவை அல்லது பச்சைப் புடவையைக்கண்டால் இன்னும் அவனைச் சந்தோஷமடைந்ததாகவும் கண்டால் அவன் ஹால் ஆகிறத்தில் திருத்தமானதென் றறிவிக்கும் அவனை தலைவிரி கோலமானவனாகவும் பழையபுடவை அணிந்தவனாகவும், சந்தோஷமானவனாகவும், கோபமானவனாகவும் கண்டால் அவன் ஹால் ஆகிறத்திலும் கெடுதலென்றறிவிக்கும். இப்படிப் போல்தான் நோயாளியாய்க் கண்டாலும் பாவங்களைக்கொண்டு தடுக்கப்பட்டவனாயிருப்பான். ஒருவன் ஒரு மையித்தை இரண்டாம்தரம் மௌத்தாகக் கண்டால் அவன்பேரில் சப்தமிட்டு ஊளையிடுவதன்றியே அழப்பட்டால் இவன் குடும்பத்தில் ஒருவன் கலியாணமுடிப்பான். அவனுக்கு சந்தோஷமுண்டாகும். இனி அவன்பேரில் சப்தமிட்டு ஊளையிடுவதுடன் அழப்பட்டால் இவன் பிச்சளத்தில், அல்லது இவன் குடும்பத்திலொருவன் மௌத்தாய்ப் போவான். இனி ஒருவன் மையித்தின் கபுறைத் தோண்டக்கண்டால் அவன் குணத்தில் அவன் தீனில், அல்லது அவன் துன்யாவில் அயரப்படுவான், அந்த மையித்து தனக்கு அறியப்பட்டவனாயிருந்தால்தான். இனி அந்த மையித்து தனக்கு அறியப்படாதவனாயிருந்தால் தனக்கு ஏலாமையான கருமத்தில் தெண்டிப்பான்.

ஹிக்காயத்து

அபூஹனிபா றலியல்லாஹு அன்ஹு கனவில் நபிஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் கபுறைத் தோண்டக்கண்டதில் அவர்கள் உஸ்தாது றலியல்லாஹு அன்ஹு இடம் வந்து அறிவித்தார்கள். அப்போது அபூஹனிபா றலியல்லாஹு அன்ஹு சிறுபிள்ளையாயிருந்து அவர்களிடம் ஓதிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது உஸ்தாது சொன்னார்கள், என்னருமையான பிள்ளையே! உம்முடைய மனம் உண்மையாயிருந்தால் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் குணத்தை தயர்வீர், அவர்கள் ஷரீஅத்து தொடும் ஹதீது ஹுக்முகளை வெளிப்படுத்துவீரென்று சொன்னார்கள். பின்பு அபூஹனிபா றலியல்லாஹு அன்ஹு இவ்விதமாகவே ஆய்விட்டார்கள். அவர்களுக்கு அநேக கீர்த்திக ளெல்லாம் உண்டாய்விட்டது.

67925

மையித்திலின்றும் ஒருவன் துவை யெடுக்கக்காண்கிறது உவப்பாக்கப்பட்டதா யிருக்கும். இனி ஒருவனுக்கு ஒரு மையித்துக்கு துன்யாவின் வஸ்துக்களில் ஒருவஸ்து கொடுக்கக்கண்டால் இவன் ஆதரவுவையாத தலத்திலின்றும் கைறையும், ரிஸ்கையும், பெற்றுக் கொள்வான். இனி ஹயாத்தா யிருக்கிறவன் தன் உடைகளில் ஒரு உடையை மையித்துக்குக் கொடுக்கக்கண்டு அந்த மையித்து எடுத்தணிந்துக் கொண்டால் இவன் மௌத்தாய் அந்த மையித்துடன் சேர்ந்துக்கொள்வான். இனி ஒருவன் ஒரு மையித்தை சுமக்கக்கண்டால் அந்த மையித்து ஜனாஸாவுடைய கோலமில்லாம லிருந்தால் இவன் ஹறாமான முதல்களைச் சுமந்துக் கொள்வான். ஒரு சொற்பம கடனில்லாதவனுடைய சிலவை சுமந்துக்கொள்வான். அந்த மையித்து ஜனாஸா கோலத்தின் பேரி லிருந்தால் சுல்தானைத் தயர்வான். அல்லது அவன் வேலைகளில் நின்று மொருவேலையைச் சுமந்துக்கொள்வான.

ஒரு மையித்து இவன் கழுத்தைக் கட்டக்கண்டால், அல்லது இவனுடன் கலந்து உறவாடி யிருக்கக்கண்டால், அல்லது இவனை வெட்டக்கண்டால், இவன் ஹயாத்து நீடிக்கும். ஒருவன் ஹயாத்தானவன் மௌத்தானவனுடன் அறியப்படாத வீட்டில் புகுதக்கண்டால் இவன் மௌத்தாய் அவனுடன் சேர்ந்துக்

கொள்வான். ஒருவன் தன்வீட்டில் நோயாளியும், மௌத்தானவனும் புகுதக்கண்டால் அவன் நோய் நீளப்படும், சிலகால் மௌத்தாய்ப் போவான். ஒரு மையித்தினுறுப்பு நோயாயிருக்கக் கண்டால் இவன் கபுறில் அந்த உறுப்புடையவனைத் தொட்டும் சுவால் செய்யப்படும். இனி ஒருவன் ஒருமையித்து தன்னில் நின்றும் ரொட்டி, அல்லது மோதிரத்தை எடுக்கக்கண்டால் இவனுக்குப் பிள்ளையிருந்தால் பிள்ளை மௌத்தாய்ப் போகும். முதல்களுண்டாயிருந்தால் அவைகளழிந்துபோகும்.

இன்சானுக் கிடையில் சில செயல்களைக் காண்பதின் தஃபீர்.

ஒருவன் கலியாண முடித்துக் கொடுக்கக் காண்கிறது, பெரிய தனமும், சிறப்பும் சுல்தானிடம் போகிறதும் தன்பாவை இவன் கலியாணமுடித்த பெண்பிள்ளையுடைய கதறின்படி, அல்லது அவனனவில் சேர்க்கப்பட்ட பெண்பிள்ளையின் கதறின்படி பெற்றுக் கொள்வது, இவைகளைப் பெற்றுக் கொள்ளுகிறதாயிருக்கும். இனி ஒருவன் மௌத்தான பெண்பிள்ளையை கலியாணஞ் செய்யக் கண்டால் தனக்கு ஏலாமையான கருமத்தைக் கொண்டும் ஜெயம் பெறுவான். இனி ஒருவன் ஜிமாவன்றியே, அல்லது ஒரு பெண் பிள்ளையை காண்கிறதன்றியே தன் மணி புறப்படக் கண்டால் ஒரு மனிதனைக் கொல்ல பயமாயிருப்பான். இனி ஒருவன் ஒரு மனிதன்பேரில் சலாஞ்சொன்னால் அவனனவில்போய்ப் பெண் பேசுவான். அந்த மனிதன் தனக்கு அல்லது தன்பிள்ளைகளுக்கு அல்லது அவனல்லாதவனுக்கு அறியப்பட்டவனாயிருந்தால் சலாமுக்கு ஜவாபு சொல்லாதவரையில் பெண்கொடுக்கமாட்டான். சிலகால் சலாமைக்கொண்டு துவர்க்கஞ் செய்கிறவன் மற்றொருவன் பெண்ஜாதியைக் கலியாணஞ்செய்வான். அந்த மனிதன் அறியப் படாதவனாயிருந்தால் அயல் பூமியில்போய்க் கலியாண முடிப்பான்.

ஒருவன் தன் பெண்ஜாதியை வேறொருவன் ஜிமாவு செய்யக் கண்டால் பெண்ஜாதியைச் சார்ந்தபேருக்கு க்ஷேமம் வாழ்வுமுண்டாகும். இனி ஒருவன் தன் தாயை, அல்லது தன் உடற்

பிறந்தாலே அல்லது குடல்வாய் ஜனங்களிலொருவரை ஜிமாவு செய்யக்கண்டு அந்த மாதம் வெட்டு ஹறுமாகிய துல்காயிதா, துல்ஹஜ்ஜா, முஹர்றம், றஜபாயிருந்தால் ஹறுமுடைய பூமிக்குப் போவான். இந்த மாதங்களல்லாததில ஜிமாவு செய்யக்கண்டால் தன் குடல்வாய் ஜனங்களைச் சார்ந்து நடப்பான், அவர்களுக்கு உபகாரஞ்செய்வான். இனி ஒருவன் ஒரு வாலிபமாகிய ஆண் பிள்ளையைச் சேர்க்கைசெய்யக் கண்டால், அந்த வாலிபன் தனக்கு அறியப் படாதவனா யிருந்தால் தன்பகையை மிகைத்துக் கொள்வான். அந்த வாலிபன் தனக்கு அறியப்படாதவனாயிருந்து இரண்டு பேருக்குள் பகையில்லாத வரையில் அந்த வாலிபன் இந்த சேர்க்கை செய்த மனிதனில் நின்றும் ஷகறைப் பெற்றுக் கொள்வான். அல்லது இவன் பெயர் கொண்டவன் அல்லது இவனுக்கு உவப்பானவனில்நின்றும் கைறை பெற்றுக்கொள்வான் அவன் தனக்கு அறியப்பட்டவனாயிருந்தால் அவன் ஹாக்கும் செய்வான். அதை துன்யாவுக்குவேண்டித் தேடினவனாக, அல்லது தனக்கு பெயருண்டாகி கருமத்தை சேகரஞ் செய்துக்கொள்வான்.

பெண்பிள்ளைக்கு ஸகருண்டாயிருக்கக்கண்டால் அவள் கர்ப்பக்காரியாயிருந்தால் அவள் வயற்றில் ஆண்பிள்ளையாயிருக்கும். அந்தப்பிள்ளை செருந்தலம் அழகாயிருக்கும். அவள்வீட்டையுடைய பெயர்களுக்கும் நாயகமானவனாயிருப்பான். அவள் ஹமலில்லாதவளாயிருந்து அவளுக்குப் பிள்ளையுண்டாயிருந்தால் அதின்பின் அறவே பிள்ளைபெறமாட்டாள். அவள்பிள்ளைப்பெற்றால் அந்தபிள்ளை புலூகுக்குமுன் மௌத்தாய்ப்போகும். இப்படிப் போல்தான் ஒருபெண்பிள்ளை தனக்கு ஆண்பிள்ளையுடைய தாடியைப் போல் தாடியிருக்கக்கண்டாலும் சிலகால், அந்தமனும் அவள் வீட்டுடைய காரியத்தளவில் திரும்பும், அவளுக்கு பிரசித்தமான கீர்த்தியுண்டாகும். அதகண்டு சிறப்புண்டாகும். ஒருவன் தனக்கு பெண்பிள்ளையுடைய அபத்தைப்போல் அபமுண்டா யிருக்கக் கண்டால் அவனுக்குப் பழிப்புண்டாகும். அந்த அபத்தில் ஜிமாவு செய்யக்கண்டால் செய்தவன் தனக்கு அறியப்பட்டவனாயிருந்தால் செய்தவன் இவனில் நின்றும் தன் ஹாஜத்தைப் பெற்றுக் கொள்வான். அவன் அறியப்படாதவனா யிருந்தால் தமுமைப்பட்டு தூஷிக்கப் பட்டவனாயிருப்பான். இனி ஒருவன் தன்பின் துவாரத்தில் சேர்க்கைச் செய்யக்கண்டால் முதல்களை அசத்திரம்

கொள்வான். சேர்க்கைச் செய்தவனைத்தானறிந்தவனா யிருந்தால் இனி தனக்கு அறியாதவனாயிருந்தால் இவன் வாழ்நாள் நீடித்திருக்கும். அவனை ஆடு, மாடு ஒட்டகம் மற்றமிருகம் சேர்க்கைச் செய்யக்கண்டால் அந்த மிருகம் அவனளவில் சேர்க்கப்பட்டவனில் நின்றும் முதலைப் பெற்றுக்கொள்வான். இனி ஒருவன் தனக்கு அந்த மிருகங்களுடைய கைறைப்போல் கைறுண்டாயிருக்கக் கண்டால் அவன் மிச்சளமிருந்தவனா யிருப்பான். இனி ஒருவன் தனக்கு அறிந்த மிருகத்தை சேர்க்கைச் செய்யக்கண்டால் நலவுக்குத் தகுதியில்லாதவனுக்குத் நலவைச் சேர்த்து வைப்பான். அந்த மிருகம் அறியப்படாததாயிருந்தால் தன்பகையை மிகைத்து அவனைப் பழிப்பாக்கி தூஷித்து ஜெயம்பெறுவான். இப்படிப் போல்தான் ஒரு பறவை, அல்லது காட்டுமிருகத்தை சேர்க்கைச் செய்யக்கண்டாலும்.

ஒருவன் தன்பெண்சாதியை ஹலாகக்கண்டால் வேறொரு பெண்ணைக் கலியாணஞ் செய்வான். தான் ஹலாகக்கண்டால் ஹறாமான கருமத்தைச்செய்வான். தன்னை பெருந்துடக்குடையவனாக்கண்டால் தன்கருமங்களடங்கலும் தன்பேரில் கலக்கமாய் விடும். மணிமிறங்கக்கண்ட மனாமடங்கலும் குழிவாஜிபெயொழிய வேறே நபிலாத்துகளில்லை. அது ஷைத்தானுடைய காறுக் கோட்டியாயிருக்கும்.

ஹிக்காயத்து.

ஒரு மனிதன் இமாம் முஹம்மதிப்னு சிரின் றஹிமஹுல்லா இடம் வந்து நான் ஒரு மனாம்கண்டேன். அதில் நான் துக்கப்பட்டவனா யிருக்கிறேன். தங்களிடம் சொல்ல வெட்கிக்கிறேனென்று சொன்னார். அப்போது இமாம் சொன்னார்கள், கடிதத்தில் எழுதிக் காட்டென்றார். அப்போது கடிதத்தில் எழுதிகாண்பித்தார். என் நாயகமே அறிந்துக்கொள்ளுங்கள். நான் ஊரை விட்டும் புறப்பட்டுபோய் பிரதேசத்தில் மூன்றுமாதமிருந்தேன். அப்போது மனாமில் ஏறுவாகனத்திலேறி என் வீட்டுக்கு வந்ததில் என் பெண்சாதி உறங்குகிறாள். அவளபத்தில் இரண்டுகடாய்கள் பாய்ந்து ஒன்றக்கொன்று இரத்தத்தை போட்டக்கண்டேன். இந்த மனாம் கண்டது முதல் அவளை வெறுத்திட்டேன், அல்லாவின்பேரில் சத்தியமாக உவந்திருக்கிறேனென்றபோது, இமாம்

டிசாய்ப் பார்வையிட்டு சொன்னார்கள், நீ உன் பெண்சாதியை வெறுத்திடாதே. அவள் ஸாலிஹானவளாயிருக்கும். பத்தினி தனத்துடைய துப்புரவானவளா யிருக்கும். அவள் நீ ஊர் வந்துஅவள் மன்விலுக்கு முடிகி வந்துவிட்டா யென்று கேட்டபோது, அவள் அபத்தின் முடியைப் பிடுக்க ஒரு வொழிந்த தலத்திற்கு ஓடிபோன போது அவள் குத்ரத்துப் பெறவில்லை, தந்திரங்கள் செய்ததிலும் முடியவில்லை. முடியைப் பிடுக்க சுண்ணாம்புப் போல் கொற்றதையும் காணவில்லை. நீ அவளிடம் தந்திரமாய் முன்னேற்றி வருவதை பயந்து கத்திரி யெடுத்து முடியை தரித்த போது அபத்தை காயப்படுத்தி விட்டது. ஆனால் நீ அறியவேண்டுமானால் இப்போதே அவளிடம் போய்ப் பார்த்தாயானால் நான் சொன்னதை சரியாய்க் காண்பா யென்று சொன்னார். உடனே தன் பெண்சாதியிடம் போய் முடுகி அவளுடன் சேரமுடுகின போது அவள் இவனை விட்டும் விரண்டு தூரப்போய் அல்லாவின் பேரில் சத்தியமாக நான் உனக்கு இடம்பாடாகித் தருகிறதில்லை. நீ ஏழுமாதமா யென்னிடம் வராமல் வெறுத்திருந்ததைச் சொன்னுமொழிய. அப்போது தான்கண்ட கனவையும், இமாம் சொன்ன தக்லிலையும் அவளிடம் சொன்ன பொழுது அவள் சொன்னாள், இமாம் அல்லாவின் பேரில் சத்தியமாக உண்மைச் சொன்னார்கள் என்று அவன் கையைப் பிடித்து அவளபத்தின் காயத்தில் வைத்துக் காண்பித்த போது அந்த காயத்தில் பஞ்சு வைத்ததாகவும் கண்டபோது அல்லாஹுத ஸுப்ஹானஹுவத் தஆலாவைப் புகழ்ந்துக் கொண்டார்.

ஒருவன் பிள்ளையுண்டா யிருக்கக் கண்டால் இவன் துன்யா விலும் முதல்களிலும் அதிகத்தைக் காண்பான். சிலகால் இவனுக்கு மனிதர்களினின்றும் பயங்கர முண்டாகும். இனி ஒருவன் தன் கனவில் தனக்கு பெண் குழந்தைப் பிறக்கக் கண்டால் நலவையும், சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்வான். ஆண் குழந்தையா யிருந்தால் இவனுக்கு வியாரமும் துக்கமும், வருத்தமு முண்டாகும்; இப்படிப் போல்தான் வெள்ளாட்டியை வாங்கக் கண்டாலும் நலவையும் சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்வான். பயலை வாங்கக் கண்டால் வியாரமும், துக்கமு முண்டாகும். அப்படிப் போல்தான் தன் பெண்சாதி ஆண் குழந்தையைப்

பெறக்கண்டாலும் அல்லது பெண் குழந்தையைப் பெறக் கண்டாலும் மேற்சொல்லிய படியாயிருக்கும். ஒரு சொற்படி ஆண்குழந்தை பெறக்கண்டால் பெண்குழந்தைப் பெறுவாள். பெண்குழந்தை பெறக்கண்டால் ஆண்குழந்தைப் பெறுவாள். ஹமலுடையவளா யிருந்தால் அப்படிப் பெறுவாள். ஒருவன் பால் கொடுக்க, அல்லது பால் குடிக்கக் கண்டால் அவனை மறியல் வீட்டில் போடப்படும். ரஹ்மத்துடைய வாசலை யடைக்கப் பட்டுப்போம்.

இன்சான்களையும், ஹைவான்களையும் மற்றும் உறுப்புகளையும் காண்பதின் தஃபீர்.

தெரிந்த மனிதன் ஒரு வஸ்துவை அவனுக்குக் கொடுக்க அல்லது அவனோடு இவன் பழக்கம்பேசக் கண்டால் அந்த மனிதன் தான் அல்லது அவனுக்கு சிநேகவன் தான் அல்லது அவனுடைய பேரிடப்பட்டவன் தான், இனி தெரியாத மனிதன் வலிபனா யிருக்கக் கண்டால் பகைவனா யிருக்கும், அவன் கிழவனா யிருக்கக் கண்டால் அப்படிக் கண்டது அவனுடைய நல்லதனமும் பெயரும், தான் முயற்சி செய்கிற தெண்டிப்பும் தௌலத்துமா யிருக்கும். இனி அந்த கிழவனுக்கு யாதொரு வஸ்துவை கொடுக்க அல்லது அவனோடு பேசிக்கொள்ளக் கண்டால் அது அவனுடைய நல்லதனமும் தெண்டிப்பும், பெயரும், தௌலத்துமா யிருக்கும். இவையெல்லாம் அந்த கிழவன் இருக்கிற ஹால்களின் படிக்கும் அழகின் படிக்கும் அவருடைய சூரத்தக் கெட்டதா யிருக்கிறதின் படிக்கும், அல்லது நிரப்பம், அல்லது குறைதல், பலவர்தம், பலயீனம் இவைகளின் கதறின்படிக்கு உண்டாகும். இனி அறியாத கிழவியைக்கண்டால் அவளிருக்கிற அழகின் கதறின்படிக்கும் நிறப்பம், கெடுதி கதறின படிக்கும் அவளெப்படி யிருந்தாளோ அதன படிக்கே அந்த வருஷத்தில் பலாபலனுண்டாகும். இனி அறியாத சிறு பெண்பிள்ளையானது இவனோடு பழக்கம் பேசிக் கொள்ள அல்லது ஒரு வஸ்துவை கொடுக்கக் கண்டால், அல்லது

அவன் கழுத்தைக்கட்ட, அல்லது அவனை முத்தமிட அவனை சேர்ந்திருக்க, அல்லது அவனை ஜிமாவு செய்யக்கண்டு மணி மற்றதைக் காணுமலிருந்து அந்தப் பெண் இருக்கிற அழகின் கதறின் படிக்கு இவனிருக்கிற வருஷத்தில் நலவையும், அழகான நிஸ்கையும் பெற்றுக் கொள்வான். இதற்கு மாற்றமா யிருந்தால் அந்த வருஷம் அந்த பெண்ணுடைய ஹாலின் படிக்குத் தானிருக்கும். இனி பிள்ளைபெறுகிற வெள்ளாட்டியை காண்கிறது பயலைக் காண்கிறதைக்கான கைறும் சந்தோஷமும், மகிழ்ச்சியு முண்டாகும். இனி பயலைக் கண்டால் வியாகூலமும், துக்கமும் சலிப்பும் கனமான சிலவுங் கண்டவனுக் குண்டாகும், அல்லது அவனுக்கொரு ஆண் குழந்தை பிறக்கும் இனி அறியாத ஆண் பிள்ளைகளைக் கண்டால் அவர்கள் மலாயிக்கத்துகளா யிருக்கும். இனி தலை மாத்திரம் கண்டால் கண்டவனுக்குத் தலைமைக்காரர் தகப்பன், அல்லது உடற்பிறந்தான், அல்லது நாயன் அல்லது புருஷன் அல்லது சுல்த்தான் இவர்கள் போல் கொற்றவர்களைப் போலே தலையிலொரு அழகு அல்லது கெட்டதொன்றுண்டானால் தலைமைக்காரரில் அது உண்டாகும். இன்னும் தலையைக் கண்டால் மைமுதல்களென்றுஞ் சொல்லப்படும். இனி யாராகிலும் கழுத்தை பறுக்கப்படாமல் தலை பிரிந்து போகக் கண்டால் தலைமைக்காரனை பிரிந்து விடுவான், அல்லது தன்னுடைய மைமுதல்களை யிழந்து விடுவான், அல்லது தன்னுடைய நிர்வாகம் கெட்டுமையாகும். இனி தலைமுடியைக் கண்டால் ஒருவன் முதல்க ளென்றும் அல்லது தலைமைக்காரன் முதல்க ளென்றும் இன்னும் இதல்லாமல் வேறே பலவிதமாகவும் தக்பீர் சொல்லப்படும். இனி யாராகிலுமொருவன் ஹஜ்ஜுடைய நாட்களல்லாததிலு சங்கையான மாதங்களல்லாத திலும் தன்னுடைய தலைமுடியிறக்கக் கண்டால் தன்னுடைய மைமுதல்கள் அல்லது தலைமைக்காரனுடைய முதல்கள் போய் விடும். அல்லது தன்னுடைய வேலையை விட்டும் நீக்கப்படும். இனி பிறங்கினது ஹஜ்ஜுடைய மாதங்களி லிருந்தால் இணக்க மான தா யிருக்கும் சிலகால் ஹஜ்ஜு செய்வான். இனி தன்னுடைய தலைமுடி நீளமாய் கிடக்கக் கண்டால் கண்டவன் ஆயுதங்களை அணிகிறவனு யிருந்தால் குவ்வத்தும், ஷீனத்தும், அழகும் எல்லோருமவனுக்கு பயப்படுத லுண்டாகும். இனி அப்படிக் கண்டவன் ஹாஷிநீக்கினவி லுள்ளவனுயிருந்தால் மனிதர்களை

விலைக்கு வாங்கிப்போடுவான். இனி அப்படிக் கண்டவன் வியாபாரியா யிருந்தால் அவனுடைய முதல்கனதிகமாகும். இனி அப்படிக் கண்டவன் வெள்ளாமை விவசாயக்காரனா யிருந்தால் அது அவனுக் கதிகமாகும். இனி மேற்சொன்னபடி யிருக்கவில்லையானால் மேற்படி முடி நீளமாகவும் விஸ்தீரணமாகவு மிருக்கிற கதறின்படிக்கு வியாகூலமும் துக்கமுமுண்டாகும். ஒட்டேறவும் தன்னுடைய முகத்தின் பேரில் முடியிறங்கிக் கிடக்கக்கண்டால் வியசரமும் துக்கமும் அதிகமாயுண்டாகும். இனி தன்னுடைய முடி கருப்பா யிருக்க அது வெள்ளையா யிருக்கக்கண்டால் மரியாதையும் மனிதர்கள் அவனுக்கு பயப்படுகிறது முண்டாகும். இனி மேற்படி முடி வெள்ளையாயிருக்க, கருப்பாயிருக்கக் கண்டால் தன்னுடையஹால் பேதகமாய்விடும். இனி தன்னுடைய முகத்தையும் தாடியையுங் கண்டால் தலைமையும் மனிதரு மவனுக்குப் பயப்படுவது முண்டாகும். இனி தன்னுடைய தாடி நீளமாயிருக்கக் கண்டால் அவனுடைய தலைமைத்தனத்தில் அதிகமுண்டாகும். இனி தாடி லோகத்தில் வளமையாய் நெடுப்பமாயிருக்கிற கதறக்குமேலாகில் நெடுப்பமாயிருந்தால் நெடுப்பமாயிருக்கிற கதறின்படிக்கு துக்கமும் வியாகூலமும் சலிப்பும் பலாயுமுண்டாகும். இனி யாராகிலு மொருவன் தன்னுடைய தாடியைக் களையக்கண்டால் தன்னுடைய தலைமைத்தனம் போய்விடும். அப்படிப்போல்தான் தாடி முடி விழக்கண்டாலும் அல்லது பிடுங்கப்படக் கண்டாலும், இனி தலை முடியையும் தாடியையு மொன்றுபிருக்கக் கண்டாலும் அல்லது பிடுங்கக்கண்டாலும் அந்த மனுயில் கையின்பேரி லறிவிக்கிற துண்டாயிருந்தால் வருத்தப்பட்டவனா யிருந்தால் அல்லாஹூத் தஆலா அவனைவிட்டும் வருத்தத்தை நீக்கிப்போடுவான். அவன் கடன்காரனாயிருந்தால் அல்லாஹூத் தஆலா அவனுடைய கடனை யிருத்திப்போடுவான். அவன் சுகத்தப்பா யிருந்தால் நாயன் சுகமாக்குவான். இதல்லாமல் அவன் வேறே ஹாலாயிருந்து அப்படிக்கண்டால் அதில் நலமில்லை.

முடிபோல் கொற்றதை சாயங்காச்ச காண்கிறது கார்மானமும், ஐபை மறைக்கிறது முண்டாகும். இனியாராகிலு மொருவன் தன்னுடைய தலையை சாயங் காச்சக் கண்டால் தான் கற்கருத்து வைத்துசெய்கிற ஹாலை நாயனவனைத் தொட்டும் மறைத்து

போடுவான். சாயம் பிடிக்களில்லை யானால் அதை அல்லா அவன் பேரில் மறைக்கமாட்டான்.

தலையிலும், தாடியிலும், உடம்பிலும் எண்ணெய் வளமைப் படி தேய்த்திருக்கக் கண்டால் லீனத்தும் அழகு முண்டாகும். இனி மேற்படி வளமையைக் கடந்து முகத்தில, அல்லது புடவையில் ஓடக்கண்டால் துக்கமவனுக்குப் பிடிக்கும் இனி எண்ணெய் தேய்க்கிறவனுடைய எண்ணெயில் நல்ல வாசமுண்டா யிருந்தால் அழகுடன் அழகான வஸ்துவு முண்டாகும்.

தூபங்கள் போடக் காண்கிறது அமளியுடனும், சங்கடிப் புடனும் அழகான புகழுண்டாகிறதின்பேரி லறிவிக்கும்.

முகத்திலும், உள்ளங்கையிலும் வளமையாய் முடிமுளையாத தலங்களிலும் முடிமுளைக்கக் கண்டால் கடன் அவன்மே லதிகமாய் எறும். சடிசான வருத்தத்தையும், முழக்கத்தையும் பெற்றுக் கொள்வான். இனி மீசை, கம்காடு அபத்தைச் சூழவுள்ள உரோமங்கள் குறைத்தலாய்க் கண்டால் வயதிலும், தீனிலும் அதிகமாயும், சிலகால் ஆனத்து முடிகள் அதிகமாகிறது கடப்பல்லாத அதிகாரத்தின் பேரிலறிவிக்கும். இனி மற்றும் உறுப்புகளிலுள்ள உரோமம் அதிகமாக, அல்லது குறைத்தலாகக் கண்டால் அந்த அதிகமும், குறைதலும் கண்டவனுக்கு முதல்க ளுண்டா யிருந்தால், அல்லது வியாபாரமுண்டா யிருந்தால், அல்லது பயிர்களுண்டா யிருந்தால் இவைகளிலுண்டாகும், ஆகினி மேற்படி உரோமங்கள் அதிகமாகக் கண்டால் இவைகளா யிருக்கும் குறைத்தலாகக் கண்டால் இவைகள் குறைத்தலாகும். இனி தன்னுடைய உரோமம் இலக்கக் கண்டால் தன்னுடைய ஹால் பேதமாகும். ஆகினி சிமானு யிருந்தால் பக்கீரவான், பக்கீரா யிருந்தால் சிமானுவான் வருத்தத்துடையவனு யிருந்தால் வருத்தம் நீங்கும். சுகத்தப்பானவனு யிருந்தால் சுகமாகும். கடனுளியா யிருந்தால் கடன் இறபடும்.

மூத்திரம் பெய்யக் கண்டால் அவன் துன்பப்பட்டவனு யிருந்தால் அல்லாஹுத் தஆலா அவன் துன்பத்தை நீக்கி விடுவான். கடனுளியா யிருந்தால் கடனை யிறுத்தி வைப்பான்.

அவன் முதல்சனுடையவனா யிருந்தால் அவன் முதல்கள் குறைவாகும். அவன் மூத்திரம் மிருதமாகப் பெய்யக் கண்டால் மிருதமான முதல்கள் குறையும். இனி இன்னானுடைய மூளை, அல்லது இன்னானல்லாதனுடைய மூளையைத் தான் தின்னக் கண்டால் தன்னுடைய ஹலாலான முதல்களில் நின்றும் தின்பான். இவனல்லாத மனிதனையாவது அல்லது மிருகத்தையாவது தின்னக் கண்டால் இவனல்லாதவன் சம்பாத்தியம் பண்ணி ஆஸ்தியைத் தின்பான். இனி மனிதர்களுடைய கறியை அவிக்கப்பட்டதாக அல்லது சுடப்பட்டதாக தின்னக் கண்டால் முதல்களுண்டாகும். பச்சையாக தின்னக் கண்டால் அந்த மனிதனை புறம் பேசுவான். இனி ஒருவன் தன் பெண்சாதியை, அல்லது தன் மகனை மௌத்தாகக் கண்டால் அவனைத் தலாகு சொல்லப்படும். அல்லது மௌத்தாய்ப் போவாள். தன் மகனைக் கலியாண முடித்துக் கொடுக்கக் கண்டால், அல்லது தன் காது அதிகமாகவும் நகைகளைக் கொண்டும் இரத்தினத்தைக் கொண்டும் அழுத்தப்பட்டதாகக் கண்டால் தன் பெண்ஜாதி, அல்லது தன் மகளுடைய ஹால் அழகானதா யிருக்கும்.

ஒருவன் தன் கேள்வி குறைந்ததாக, அல்லது அதிகமாக அல்லது போய்விட்டதாகக் கண்டால் தன்னுடைய தீனில் தரிபட்டிருப்பான். ஒருவன் தான் சப்தம் போடக் கண்டால் மனிதர்களிடத்தில் கீர்த்தியுடையவனாகவும், பெருமையுடையவனாகவு மிருப்பான். தன்னுடைய ஓசையுடைய கதறின்படி இராகத்துடைய அழகின்படி தானிருக்கும் பூமியிலும், அதையல்லாததிலும் கீர்த்தியுடையவனா யிருப்பான். இனி ஒருவன் தன் கண்ணில் அல்லது தன் பார்வையில் அதிகத்தை, அல்லது குறைத்தலைக் கண்டால், தன்னுடைய தீனில் தரிப்பட்டிருப்பான். இப்படிப் போலதான் குருடும், கண்ணோக்காடும், மாலைக்கண்ணும் இவைகளெல்லாததையும். இனி ஒருவன் தன் கண்ணில் சுருமா இடக் கண்டால் தன்னுடையதீனை இணக்கமாக்கி வைத்தவனாயிருப்பான். சுருமா யிடுவதைக்கொண்டு அழகை நாடியவனாயிருந்தால் தன்னுடைய தீனில் தான் மற்றவரைக்காண அழகான கருமத்தைக் கொண்டு வருகிறவனாயிருப்பான். சிலவிடத்தில தன் கண்ணைக் காண்கிறது பணத்தின் பேரிலும், பிள்ளைகளின் பேரிலும், உடற்

பிறப்புகளிலும், இராஜாக்களிடமும் தரிப்பாடா யிருக்கிறதையு மறிவிக்கும். இனி ஒருவன் தன் கண்ணினுடைய இமைகளை புருவத்தை அதிகமாக, அல்லது குறைத்தலாக, அல்லது அழகான தாகக் கண்டால் அவன் கோலமழகான தாகவும், அவன் தீனில் அவன் ஹால் அழகான தாயுமிருக்கும். இனி மூக்கைக் காண் கிறதும், நெற்றியைக் காண்கிறதும், சிறப்பும், பெருமைப்படும். இனி மூக்கில் அதிகத்தை அல்லது குறைத்தலைக் கண்டால் சிறப்பிலும் பெருமைப்பாட்டிலும் அதிகத்தையுங் குறைத்தலையும் காண்பான். இனி இரண்டு சென்னியையும், இரண்டு கன்னத் தையும், இரண்டு அலகையும் காண்கிறது தன் நிர்வாகத்திற்குச் சபபாயிருக்கும். இதில் குறைவுதலை அதிகத்தைக் கண்டால் நிர்வாகத்திலும் அதிகத்தையும், குறைவுதலையுங் காண்பான்.

இரண்டு உதட்டை காண்கிறது தனக்குதவி யுண்டாகும். மேலுதட்டைக் காண்கிறது கீழ் உதட்டைக் காண வரிசையா யிருக்கும். இனி ஒருவன் தன் நாவைக்காண்கிறது தன்னுடைய தர்ஜுமாக்காரனாகவும் தன்னைத்தொட்டும் எத்திவைக்கிறவனாவு மிருக்கும். இன்னுமந்த நாவு தனக்கே ஹுஜ்ஜத்தாகவும் அத் தாட்சி யாகவுமிருக்கும். தன் நாவை தரிக்கப்பட்ட தாகவும் கட்டையாக்கப் பட்டதாகவும் குறைத்தலாகவுங் கண்டால் தன் னுடைய வழக்கில் தனக்கு ஹுஜ்ஜத்து பற்றாது போகும். அவனுக்கு வழக்கில்லாதவரையில் தன்னுடைய தீனில் இணக்க மானவனாயிருப்பான். இனி நாவை நீளமானதாகக் கண்டால் வழக்கில் ஹுஜ்ஜத்துக்கொண்டு ஜெயம் பெற்றவனாயிருப்பான். வழக்கில்லாத வரையில் வீண் வேலைகள், கெடுதல், போதக்கேடு மிருந்தவனா யிருப்பான். பெண் பிள்ளை தன் நாவைத்தரிக்கக் கண்டால் புகழப்பட்டவளா யிருப்பாள். பல்லைக் காண்கிறது தன் வீட்டு மனிதர்களும் தன் வீட்டு விரிப்புமாயிருக்கும்

சட்டிப்பல்லை காண்கிறதும் பிள்ளைக்குட்டிகளும் உடற் பிறப்புகளுமா யிருக்கும். தன் பல்லசையக் கண்டால் இவர்களில் சிலருக்கு நோயுண்டாகும். பற்கள் தன்கையில் விழக்கண்டால் அல்லது தன் புடவையில் விழக்கண்டால் தன்ஜேபில் அல்லது தன் வீட்டில் வைக்கக் கண்டால் பிள்ளைகளுக்கு உடற்பிறப்பு

களுக்கு பிரயோஜனம் தேடுகிறவனு யிருப்பான். பற்களில் நோய்ப்பிடித்ததாகக்கண்டால் அவர்களில் சிலருடைய ஜடலத்தில் நோய்ப்பிடிக்கும். தன் பற்களில் நீளத்தை அல்லது அதிகத்தை அல்லது வெண்மையை அல்லது அழகைக்கண்டால் இவர்களின் சிலருக்கு கிலேசத்தண்டாகும். இனி ஒருவன் தன் சிற்றப்பன் பாதி மற்றும் ஜனங்களில் அதிகத்தை குறைத்ததைக் கண்டால் அவ்விதமா யிருக்கும். இனி ஒருவன் வீரப்பல்லைக் கண்டால் தன் வீட்டிலுள்ளவர்களுக்கு நாயகமா யிருப்பான். இனி ஒருவன் தன்முன் பல்லைக்கண்டால் தன்னுடைய மாமனுயிருக்கும். தன் சாச்சியுமாயிருக்கும். மேற் சட்டிப்பல்லாகிறது ஆண்பிள்ளைகளாயிருக்கும். கீழ் சட்டிப்பல் பெண்பிள்ளைகளா யிருக்கும். இவைகளில் நின்றுமொரு பல்விழக்கண்டால் அதைச்சுமந்துக் கொள்ளாமலும் பீண்டுவைக்காமலுமிருந்தால் மேற்சொன்னவர்கள் மௌத்தாய்ப்போவார்கள். தன் பற்களடங்கலும் விழக்கண்டால் தன் வாழ்நாள் நீளமாயிருந்து தன் குடல்வாய் ஜனங்களடங்கலும் மௌத்தாய்ப் போவார்கள். எல்லோருக்கும் கடைசியில் தான மௌத்தாய்ப் போவான்.

ஹிக்காயத்து.

மூமின்களுக்கெல்லாம் இராஜாவாகிய மன்ஸூ ரென்கிறவர் தம்முடைய கனவில் தம்முடைய பற்களெல்லாம் விழக்கண்ட போது தம்முடைய காதிமை கூப்பிட்டு சொன்னார், கனவிற்கு தஃபீர் சொல்லுகிறவரைக் கூட்டிக் கொண்டு வாவென்றார். அப்போதவன் கூப்பிட்டுக் கொண்டுவந்தான். மன்ஸூரென்கிறவர் தாம்கண்டகனவை அவரிடம் சொன்னபோது, அவர் சொன்னார் உம்முடைய குடல்வாய் ஜனங்களடங்கலும் மௌத்தாய்ப்போவார்களென்றுசொன்னார். அப்போதுமன்ஸூர் சொன்னார், அடே கெட்டவனே அல்லாஹுத்தஆலா உன்வாயைமுத்திரைப்போட்டுவாறு கவும்என்றபிறுகேன்று வெருட்டிவிட்டார். அப்புறம் சொன்னார் வேறே நல்ல உள்விளங்கி அறிந்தவனைப் பார்த்து கூட்டிக்கொண்டு வாருங்களென்று சொன்னதில் கூட்டிக்கொண்டு வரப்பட்டது. அவரிடம் மன்ஸூரென்கிறவர் தாங்கண்ட கனவை அறிவித்தார். அப்போதவர் சொன்னார் மூமின்களெல்லாருக்கும் இராஜாவானரே நீர் வெகுகாலத்திற்கு ஹயாத்தாயிருப்பீர். உம்முடைய கூட்டம்

குடும்பத்தாரடக்கலும் மௌனத்தானபின் நீர் மௌனத்தாவீரென்று சொன்னபோது, மன்ஸூரென்கிறவர் சந்தோஷமடைந்து சிரித்துக் கொண்டு சொன்னார், முந்தினவர் சொன்னதும் நீர் சொன்னதும் ஒன்றுதான், ஆகிலும் நீர் சொன்னது ரொம்பவு மழகாயிருக்கிற தென்று சந்தோஷமாய்ப் பதினாயிரம் வெள்ளிக்காசு இனாமா யளித்தார்.

ஒருவன் தன் கழுத்துடைய நீளமதிகமாகக்கண்டால் அமானத் தையும் தீனையும் சுமந்துக்கொள்வான், அதை குறைத்தலாக கட் டையானதாக பலக்கேடானதாகக் கண்டால் அமானத்தையும் தீனையும் சுமந்துக்கொள்ள ஏலாமையாகி விடுவான். மூளையைக் கண்டால் விசுவாசமுடையவனா யிருப்பான். இனி யொருவன் தன் கை தரிபடக்கண்டு அதை யெடுத்துக் கொள்ளாதவரையில் தன் உடற்பிறந்தான் அல்லது தன் கூட்டாளி மௌத்தாய்ப் போவான், அல்லது தன் கூட்டாளி பிரிந்து விடுவான். அதை யெடுத்துக் கொண்டானேயானால் உடற்பிறந்தான், கூட்டாளி, பிள்ளைக்குட்டிகள் முதலானவர்களுக்குப் பிரயோஜனஞ் செய்கிற வனாயிருப்பான், இனி யொருவன் தன்கை தரிப்பட்டவனாகக் கண்டால், அல்லது தன் கைகழுத்துடன் சேகரமாக்கப்பட்டதாய்க் கண்டால் ஹறாமாகிய கருமங்களை விட்டும், பாவங்களைவிட்டுந் தூரப்பட்டவனாயிருப்பான். சுல்தானானவனுடைய கையை தரிக்கக் கண்டால் அவன் அல்லாஹுத் தஆலாவைக் கொண்டு பொய் சத்தியம் பண்ணுவான். ஒருவன் தன்கை நீளமாகக்கண்டால் அவனுடைய மூதலும் கொடையும் செலவுமதிகமாகும். ஒருவன் தன்கையில் பிடியுடைய குவ்வத்தைக்கண்டால் அது அதிகமாகும், குவ்வத்தும் குத்ரத்துமா யிருப்பான். இனி விரல்கள் உடற்பிறந் தான், உடற்பிறந்தானுடைய பிள்ளைகளாயிருக்கும், சிலநேரத்தில் ஐந்து நேரத்துத் தொழுகையாயிருக்கும். இவைகளில் மிகத்தை, அல்லது குறைவுதலைக்கண்டால் உடற்பிறப்புடைய பிள்ளைகளும் தொழுகையிலும் குறைவுதலைக்காண்பான். அந்தமனுமில் இதன் பேரில் அறிவித்தலுண்டாயிருந்தால் இனி நகங்களைக் கண்டால் அவனுக்குக் குதூரத்துண்டாகும், அவன்ஹால் அழகானதா யிருக்கும். இனி யொருவன் தன் நெஞ்சைக்காண்கிறது அவனுக் குப்பொருமையுண்டாகும். நெஞ்சில் கிட்டுமை, அல்லது விஸ்தீ ரணத்தைக்கண்டால் அவன்ஹால் அவ்விதமாகவிருக்கும்.

ஒருவன் தன் மார்பைக்கண்டால் தன்னுடைய மகனாயிருக்கும், அதில் அதிகத்தை, அல்லது குறைவுதலைக்கண்டால் மக்களிலு மதுபோல் காண்பான். இனி யொருவன் தன்வயற்றை சிறியதாய்க் கண்டால் அவனுக்கு முதல்களசிகமாகும். ஒருவன் தன் குடலை, அல்லது ஈரக்குலையை, அல்லது தன் மாங்காயை, அல்லது இவைகளல்லாத வயிற்றிலிருக்கப்பட்ட வஸ்துக்களைத் தின்னக்கண்டால், அல்லது அவைகளை தன் கையா லெடுக்கக்கண்டால், அல்லது தானுவது, வேறே யொருவனுவது அவைகளைச் சுமக்க கண்டால் புதையல்லவைக்கப்பட்ட டணமெடுப்பான். ஒருவன் தன் ஜடலத்தில் நின்றும், அல்லது உறுப்பில் நின்றும் பேன் அல்லது புழு உதிர்ந்து விழக்கண்டால் அல்லது தன்னுடைய ஜடலத்தில் புடவையில் மிருதமாகக்கண்டால் மிருதமாகிய டணத்தையும் அடிமைகளையும் பெற்றுக் கொள்வான். இனி ஒருவன் தன் விலாவெலும்பை அதிகமாக அல்லது குறைந்ததாகக் கண்டால் தன் பெண்சாதியிலும் அது போல் காண்பான். முதுகந்தண்டைக் கண்டால் சிறப்பும் அழகு முண்டாகும், சிலகால் பிள்ளையுண்டாகும். இனி ஒருவன்தன் புஜத்தைக் கண்டால் தன் பெண்சாதியைக் காண்பான். அதில் அதிகத்தை அல்லது குறைந்ததைக் கண்டால் தன் பெண்சதியிலும் அதுபோல்காண்பான். இனியொருவன் தன்ஸகரைத்தரிக்கப்பட்டதாய்க் கண்டால் அவன் பிள்ளை மௌத்தாய்ப்போவான், அல்லது தன் ஸகர் தரிப்பட்டவனுப் மௌத்தாவான், அதை அதிகமானதாக, அல்லது குறைவுதலானதாகக்கண்டால் தன்னிலும் தன் பிள்ளையிலுமது போல் காண்பான். ஒருவன் தனக்கு இரண்டு ஸகர்கள் அல்லது விதைகள் அதிகமாய்க்கண்டால் ஸகருடைய ஈனத்தின் தக்கபடி பிள்ளையுமதிகமாகும், இனி ஒருவன் தன்னிரண்டு ஸகரை அல்லது விதையைக்கண்டால் தன் பெண்மக்களைக் காண்பான். அதில் அதிகத்தை குறைவுதலைக்கண்டால், தன் மக்களிலு மதுபோல் காண்பான். இனியொருவன் தன்னிரண்டு விதையை எடுக்கப்பட்டதாய்க் கண்டால், அல்லது தரிக்கப்பட்டதாய்க்கண்டால், அல்லது விழுந்ததாய்க்கண்டால் தனக்குப் பிள்ளையுண்டாகாது. இனி ஒருவன் இரண்டு தொடைகளைக்கண்டால் தன் கூட்டம் குடும்பத்தாரைக்காண்பான், தன் தொடை தன்னைவிட்டும் பிரிந்துவிடக்கண்டால் தன் கூட்டம் குடும்பத்தாரைவிட்டும் பிரிந்து விடுவான். இனி யொருவன் தன் காலை, அல்லது முட்டிக்காலை

அல்லது செண்டக்காலைக்கண்டால் முதலும் நிர்வாகமும், அதில் விஸ்தீரணமும் சம்பாத்தியமுமுண்டாகும். இனியொருவன் கால் விரலைக்கண்டால் தன் முதலுக்கு லீனத்துண்டாகும். இனி யொருவன் செளவைக்கண்டால் தன் கருமங்கள் கோர்வையுண் டாகும். இனி ஒருவன் தோலைக்கண்டால் தான் மௌத்தாகிற போது பணத்தை வைத்துவிட்டு மௌத்தாவான்.

ஒருவன் உடுமான மூடித்துக்கொண்டு ஊரத்து வெளியாகக் கண்டால் மனிதர்களுக்கு ஊரத்தை வெளியாக்குவான். ஒருவன் தன் புடைவையை உரிந்துபோடக்கண்டால் தான் தேடப்போகிற கருமமுண்டாகாது. ஒருவன் தீனைத் தேடினவனுக புடைவையை உரியக்கண்டால் தீனுடைய கருமத்தை பெற்றுக்கொள்வான். துன்யாவைத் தேடினவனுயிருந்தால் துன்யாவுடைய கருமத்தைப் பெற்றுக்கொள்வான். மனுமிலிவனுடைய ஊரத்து மனிதர்களுக்கு வெளியாகாமலிருந்தால்தான். அப்படி வெளியாகிறதாயிருந்தால் அதில் கைறில்லை.

ஒருவன் கடையில் அல்லது பள்ளிவாசலில் இதல்லாதவிடங் களில் உடுமானத்தை உரிந்திட்டால் மனிதர்களுக்கு வெளியாகா மலும் மனிதர்களொருவரும் குத்துப்பாடு சொல்லாமலு மிருந்தால் இவனுக்கு சந்தோஷமும் பாவங்களைவிட்டும் நிவர்த்தி யுண்டாகும். கடனுண்டா யிருந்தால் கடனிருபடும்.

ஒருவன் தன் கழுத்துத் தரிபட்டு விழக்கண்டால் இவன் அடிமையா யிருந்தால் உரிமைப் பெற்றுக் கொள்வான், நோயாளியா யிருந்தால் சுகம் பெருவான். கடனாளியா யிருந்தால் கடனிருபடும், சிலகால் பைத்துல்லாவில் போய் ஹஜ்ஜு செய்வான். துன்பப் பட்டவனு யிருந்தால் அல்லாஹுத் தஆலா துன்பத்தை நீக்கி விடுவான், பயந்தவனு யிருந்தால் அச்சந்தீர்வான். ஒருவன் தன்னை உதவிச் செய்கிறவனைக் கண்டால் ஒரு கூட்டத்தாருக்கு உதவிச் செய்வான். அவர்கள் கருமங்கள் இவனைக் கொண்டு நிறப்பமாகும். சிலகால் இவன் உடலத்தில் நின்றும் இரத்தம் புறப்படும். அதில் கைறில்லை. சிலகால் இவன் முதலில் ஹுஜூம் கலக்கும். ஒருவன் ஒருவனை அறுக்கக் கண்டால் அவனை அநியாயஞ் செய்வான். அதற்கு ஆதாரமாக அறுக்கிறது அபிப்ராயமாயிருந்தும், இதுபோல்

தின்ன ஹுருமாகிய ஹைவானை பறுத்தால் அந்த ஹைவானுடையவனை அந்நீதஞ் செய்வான். ஒருவனொருவனை வெட்டக் கண்டால் வெட்டப்பட்டவன் வெட்டினவனில் நின்றும் கைறைப் பெற்றுக்கொள்வான். ஒருவனொருவனுடன் மல்கட்டிக் கீழே தூக்கிப் போட்டால் கீழே விழுந்தவன் ஹால் அழகானதாயும் பூமியி லிடம்பாடானதாகவு மிருப்பான். ஒருவன் ஒருவனை ஏசக் கண்டால் ஏசப்பட்டவன் ஹால் அழகானதா யிருக்கும்.

ஹிக்காபத்து.

அப்துல்லா ஹிப்னுஸ்ஸுபைர் றழியல்லாஹு அன்ஹு மனுமில் கண்டார்கள். அவர்களும் அப்துல் மலிகிப்னு மருவான் மல்கட்டி. அப்துல்லாஹி என்கிறவர் அப்துல் மலிகிப்னு மருவானை கீழேபோட்டு நான்கு முளையறைந்து போட்டார். விடிந்து இமாம் முஹம்மதிப்னுசீரின் றஹிமஹுல்லாஹிடத்தில் இக்கருமத்தைக் குறித்து கேட்டு வரும்படி ஒரு ஆளை யனுப்பிவித்தார். மல்கட்டினவர் இன்னுரென்றும் அறிவிக்காதே யென்றார். அந்த இமாமிடத்தில் போய் கேட்டபோது இமாம் சொன்னார்கள், இந்த மனுமுக்குத் தக்ஷீபானவர் அப்துல் மலிகிப்னு மருவானும் அப்துல்லாஹிப்னுஸ்ஸுபைரு மொழிய வேறொருவரு மில்லை யென்று சொன்னபோது, இந்த மனிதன் சொன்னார் அவர்கள் காணவில்லை நான்தான் கண்டேன் என்று சொல்லவே இமாம் சொன்னார்கள், நீ உண்மைச் சொன்னு லொழிய நானறிவிக்கிறே தில்லை என்று சொல்லவே இந்த மனிதன் அப்துல்லாஹிப்னுஸ்ஸுபைரிடம் போய் சொன்னார். அப்போது அப்துல்லாஹிப்னுஸ்ஸுபைர் சொன்னார்கள், நீ போய் நான் கண்டதாய்ச் சொல்லு மென்றார்கள். அப்போதவர் இமாமிடம் வந்து சொன்னபோது இமாம் சொன்னார்கள், அப்துல் மலிகிப்னு மருவானுடைய பிள்ளைக் குட்டிகளுக்குத்தான் கிலாபத்துண்டும், கருமமிவ்விதமாகத் தானிருந்தது.

ஒருவன் மாப்பிள்ளையா யிருக்கக் கண்டு தன் பெண்ஜாதியை யறிவித்து பெயரையும் குறிப்பித்தால் பெண்ஜாதியுடன் தரிபாடா யிருப்பான். அல்லது சுல்தானைப் பிடிப்பான். அல்லது வஸ்துக்களை புடையதாக்குவான். பெண்ஜாதி பெயரைக் குறிப்பிக்காத வரையில்

இவன் மௌதாய்ப் போவான், அல்லது வெட்டுப் படுவான், அல்லது ஷஹீதாய் மௌத்தாவான். ஒருவன் தன்பெண் ஜாதியை தலாகு சொல்லக் கண்டால் தன் இராஜாங்கத்தை விட்டு நீங்கிடுவான். இனி யொருவன் தன் உடலத்தில் நின்றும் காயங்களில்லாமல் இரத்தமோடக் கண்டால், அல்லது இரத்தங்களாக அல்லது ஜலமாக வெளிக்கிற அருவிகளை உடலத்தில் கண்டு அதைக் கொண்டு உடலத்தில் பூசக்கண்டால் இரத்தம், ஜலம் ஒளித்த கதருக்கு ஹறுமாகிய முதல்களைப் பெற்றுக் கொள்வான். இனி உடலத்தில் புடவையில் பூசாதவரையில் தான் தரிபட்டிருக்கிற கருமத்தை விட்டும் புறப்படுவான். ஒருவன் தன் உடலத்தில் நின்றும் காயங்கள், கட்டிகள் புறப்படக் கண்டால் முதல்களைப் பெற்றுக் கொள்வான். உடலத்தி லுண்டாகிய கொழுப்பு, சொம்பலம், வெண்குஷ்டம் கருங்குஷ்டம் இவைகள்போல் கொற்றுபவைகளடங்கலும் மிகுதமாகிய முதல்களை பெற்றுக் கொள்ளுகிறதாயிருக்கும். இனி யொருவனுக்கு பைத்தியம் பிடித்தால் முதல்களுண்டாகும் ஆகிலும் வீணிற் சிலவு செய்வான். கள்ளு போல் கொற்றதை குடிப்பான். மஸ்துண்டானால் அஸ்தானில் நின்றும் முதல் பெற்றுக் கொள்வான். கஞ்சாப்போல் கொற்றதால் மஸ்துண்டானால் அதில் கைறில்லை. இனி யொருவன் உடலத்தின் மெலிவு, பலக்கேடுபோல் கொற்றமுண்டாகக் கண்டால் அதில் கைறில்லை. இனி யொருவன் உடலத்தின் குவ்வத்துண்டாகக் கண்டால் தீனிலும் அவன் கருமங்களடங்கலிலும் குவ்வத்துண்டாகும். ஒருவன் பாரமாகிய சுமையை யெடுக்கக் கண்டால் அவனுக்கு வியாரமும் துக்கமு முண்டாகும். மனிதர்கள் மிருகங்கள் வயற்றில் நின்றும் புறப்படுகிற மலம் போல் கொற்றதாகிறது முண்டாகும். அவைகள் நாற்றமாகிற வாடையுடையதாயிருந்தால் ஹறுமாகிய முதலுண்டாகும். அவைகளின் வாடைகள் சுருக்கமாயிருக்குந் தோறெல்லாம் பாவமும், ஹறுமும் சுருக்கமாகும்.

ஒருவன் தின்னப்படாத வஸ்துவின் மலங்களை கண்டால் ஹறுமாகிய முதல்களைப் பெற்றுக் கொள்வான். ஒருவன் மலங்களை உடலத்தில் பூசிக்கொள்ளக் கண்டால், அல்லது புடவையில்படக் கண்டால், அல்லது அவைகளைவாங்கி பத்திரமாய் வைக்கக் கண்டால் ஹறுமாகிய முதல்களைப் பெற்றுக் கொள்வான்.

ஒருவன் தன் வயற்றில் நின்றும் காற்றுப்பறியக் கண்டால் இவன் முதல்களழிந்துப் போகும். அல்லது தன் நப்ஸைதங்கடஞ் செய்கிற கருமமுண்டாகும். வலமிருகியாய் சேறு, சவறி, மழைகள் வெள்ளங்களைப் போலாய்விட்டால் அதில் அறவே கைறில்லை. சிலகால் கல்தானில் நின்றும் தங்கடந்தொடும். ஒருவன் தன்னில் நின்றும் வளமையில்லாத இரத்தம், புழு, பேன், ஜலம்போல்கொற்ற வஸ்துகளுண்டாகக்கண்டால் அவன் முதல்களைவிட்டும் புறப் படுவான், அல்லது மிடுமையைவிட்டும் புறப்படுவான், ஒருவன் தன்னில் நின்றும் சப்தமுண்டாகிய காற்றுப் புறப்படக் கண்டால் மனிதர்களைச் சிறப்புண்டாகிய பேச்சுகளைப்பேசுவான். ஒருவன் தன்னுடைய பின் துவாரத்தில் நின்றும் இரத்தம் புறப்பட அல்லது ஐடலத்தில் பூசக்கண்டால் முதல்களைப் பெற்றுக்கொள்வான். ஒருவன் துப்பாணி துப்பக்கண்டால் பிறருக்குள்ள பேச்சுகளைப் பேசுவான். ஒருவன் இருமுகிறவனுப்க்கண்டால் மனிதர்தளிடம் முறையிடுவான். ஒருவன் தன்னைப் பிரிந்து போகக்கண்டால் கோபமாய் நாடாத பேச்சுகளைப் பேசுவான், இனி யொருவன் சத்தி வடியக்கண்டால் பாவங்களை விட்டும் தௌபாச் செய்து அல்லா அளவில் மீள்வான், சத்தியின்வாடைசுவைநிறம், அறவருப் பில்லாமலிருந்தால் அல்லாஹுத் தஆலா அளவில்பாவங்களை விட்டும் கலப்பறுதலான தௌபாவாக தௌபாச்செய்து மீள்வான். சத்தியது வருப்பாய் பொருத்தக்கேடான வாடையுடையதாயி ருந்தால் தான் கோபிக்கப்பெறுகிற நீக்கு தன் நப்ஸின் பேரிலுண் டாகும்.

ஒருவன் தன்னை இரத்தம் வாங்கக்கண்டால் அவன்பேரில் சிலஷரத்தை எழுதப்படும், அல்லது அமானத்தை உயர்த்திவைக்கப் படும், இரத்தங்குத்தி வாங்கின ஹஜ்ஜாமைத் தானறியாதவனு யிருந்தால். அவனைத்தான் அறிந்தவனுமிருந்தால் இவன் முதல் களில் நின்றும் சிலதுபோய் விடும். இரத்தங்குத்திவாங்குதல் ழுத்திறுண்டா யிருந்தால் தன் அமானத்தல் குறைந்துபோகும். இனி பொன்னி மூக்குடையக் கண்டால் ஐடலத்தில் சுகம் பெறுவான், சிலகால் முதல்களிலும் தன்மைத்தனத்திலும் சிறப்பும் குறைதலுமுண்டாகும். இனி யொருவன் நரம்புகுத்தி வாங்கக் கண்டால் தன் முதல் தன் கையைவிட்டும் கஸ்தானத்தில் போய்

விடும். இரத்தத்தைத் தட்டையில் பிடித்த ஈலைலாஸியானவன் முதலைப் பெண்பிள்ளையின் பேரில் சிலவுசெய்து போடுவான், ஒரு சொற்படி தன் கப்ஸின் பேரில் சிலவு செய்து போடுவான். இரத்தங்களைக் கொண்டும் மலங்களைக்கொண்டும் ஊடலத்தில் நின்றும் புறப்படுமே அவைகளடங்கலைக்கொண்டும் ஊடலத்தில் பூசினால் ஹலாலல்லாத முதல்களுண்டாகும்.

ஹிக்காயத்து.

முஹம்மதிப்னுசீரின் றஹிமஹுல்லா ஹிடத்தில் ஒருமனிதன் என் தலை சிறைக்கக்கண்டேன் அல்லது நறிக்கக்கண்டேனென்று சொன்னான், அப்போது இமாம்சொன்னார்கள், உன்னுடைய அப்தல் உன்னைவிட்டுப் பிரிந்து உரிமைப்பெற்றுவிடுவான் அல்லது நீ மௌத்தாய்ப் போவாய், அல்லது அவன் மௌத்தாய்ப் போவான் என்று சொல்லி ஐந்தாறு நாட்களுக்குள்ளே அந்த மனிதன் மௌத்தாய்ப்போனான்.

ஒருவன் ஜஃபருஸ்ஸாதிகு றலியல்லாஹுத்தஆலா அன்ஹு விடம்வந்து சொன்னார். ஒரு பெண்பிள்ளை என் தலையையும் தாடியையும் சிறைக்கக்கண்டேனென்றார். அப்போது சொன்னார்கள் அதாகிறது புகழப்படாத மனுவாயிருக்கும். அல்லாஹுத் தஆலா ஸிஃமத்தாக்கிவைத்த அடக்கமும் உன்னைவிட்டும் நீக்கி அதல்லாதது உன்னளவில் வருமென்று சொல்லவும் கொஞ்சநாளையில் இவ்விதமாகவே நேரிட்டது.

பக்தாதில் சில ஜமாஅத்துகள் மனுவுடைய கருமங்களைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களிலொரு மனிதன் சொன்னார், நான் உங்களுக்கு ஒருபுதுமையாகிய விஷயம் அறிவிக்கிறேன், அதாகிறது நானென்னுடைய மனுவில் ஒரு நாசுவன் என்மேல்மீசையையும், தாடியையும் சிறைக்கக்கண்டேன். ஜஃபருஸ்ஸாதிகு றலியல்லாஹுத் தஆலா அன்ஹு இடம் வந்து இந்த மனுவை சொல்லி அதற்கு தஃபீரென்ன வென்று கேட்டேன். அப்போது சொன்னார்கள், நீ தங்கடமாகிய கருமத்தில் திரும்புவாய் உன் தலைமைத்தன்மும் தகுதியும் போய்விடும், கடிசாகிய வேதனைகளைப் பெற்றுக்கொள்வாயென்று. நான் வியாகூலத்தை யனிக்த

வருக வீட்டிலேயே நாலுநாள் வரையிலும் இருந்துவிட்டேன். அப்புறம் வீட்டைவிட்டும் புறப்பட்டுப் பள்ளிவாசலின் கிட்டவரவே என் கூட்டாளியை மறியல் வீட்டைவிட்டும் வெளியில் கொண்டுவந்து அவர்களவனை அடிக்கிறதற்காக அவன் புடவையை உரிகிறார்கள். அப்போது என்னைக்கண்டு கூப்பிட்டான். நான் உடனே லெப்பையென்று கிட்டபோகவே சொன்னான், நீயாகிறவன் என்னை இந்த தங்கடத்தில் வருத்திவிட்டாய். உன்னால் என்னை சிறைச்சாலையில் போடப்பட்டது. ஆனதால் இவர்களில் நின்றும் எடுத்தமுதலை நான் உன்னிடம் தந்தேனல்லவா அதை அவர்களிடம் கொடுத்து என்னைக் கலாசாக்கிவிடு என்றான். அப்போது நான் சொன்னேன், அவூதுபில்லாஹி மினஷ்ஷைத்தானிர்றஜீம், அல்லாவின்பேரில் சத்தியமாக என்னிடம் தரவில்லை. இப்பேர்க்கொத்த சொல்லைச் சொல்லாதென்றேன். அப்போது என்னைப்பார்த்து சொன்னான், பேச்சுகள் அதிகமாய்ப் பேச வேண்டாம். உன்னிடத்தில் புடவைகளில் இன்ன கின்ன தந்தேன். பணத்தில் இன்னின்னதெல்லாம் தந்திருக்கிறேனென்று சொல்லவே, அவர்கள் என்னைப்பிடித்து அவனுடனே என்னையும் சிறைச்சாலையிற்போட்டு அவன் சொன்னதெல்லாம்கண்டேன் என்று வம்புசெய்து சிறைச்சாலையை விட்டும் வெளிப்படுத்தி மூன்றடி அடித்தார்கள். அது பக்தாதில் மஸ்ஹூராய் நான் கள்ளர்களுடன் கூடிகளவுசெய்தவனென்று பிரசங்கமாய் விட்டது. இவ்விதமாய் மறியல் வீட்டி லென்னைப் போடப்பட்டிருந்தது. இராஜாவுக்கு ஒரு பிள்ளை பிறக்கவே மறியல்வீட்டிலுள்ளவர்களடங்கலையும் போகும்படி உத்திரவுசெய்யவே நானும் புறப்பட்டு கலாசானேன். அப்படியல்லாதவரையில் அந்த மறியல் வீட்டில் மௌத்தளவும் கிடப்பேனென்றார்.

ஹிக்காயத்து.

ஒரு மனிதன் முஹம்மதிப்னு சீரின் றஹிமஹுல்லாஹிடம் வந்து சொன்னார், நானென் மனுவில் ஒரு கருத்த நிறத்துடைய குட்டையான பெண்பிள்ளை பேசக்கண்டேனென்றும் அப்போதவர்கள் நீ போய் அவளைக் கலியாணமுடித்துக்கொள் அவள் கருப்பாகிறது பிள்ளைகளும் பணங்களும் அதிகமாகும். அவள் குட்டையாகிறது அவள் வாழ்நாள் சுருக்கமா யிருக்குமென்றார்.

உடனே அந்த மனிதன் போய் அவளைக் கலியாணஞ் செய்துக் கொண்டார். கொஞ்ச காலையில் அவள் மௌத்தாய் அவளின் பணத்தையெல்லாம் அனந்தரக்கொண்டான்.

ஒருமனிதன் முஹம்மதிப்னு சீரின் றஹிமஹுல்லாஹு இடம் வந்து சொன்னான், என் மனுயில் என் பிள்ளையாகிறது என் புறத்தை கருத்தக்கயிறு கொண்டு கட்டக் கண்டேனென்று சொன்னார். அப்போது அந்தப்பிள்ளையாகிறது பறக்கத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். உன்பேரிலுண்டான கடன்களை நீக்கிவிடும். உன்னைவேலை வெட்டிகள் செய்யவிடாமல் உன்கருமங்கள் அடக்குக்கும் அவன்தான் காரியகர்த்தனுமிருந்துன்னை இருப்பில் வைத்து யாதொரு வருத்தமில்லாமல் செலவு முதலானதுகள் தருவானென்றார்கள் அப்போதந்த மனிதன் சொன்னான், என்னுபகமே நீங்கள் என்றார்.

குடிப்புகளையும் பால்களையும் காண்பதின் தஃபீர்.

இனி இன்ன பாலென்றறியாத பாலாகிறது அப்படிக் கண்டால் இஸ்லாமார்க்கமும் கபிதாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சுன்னத்தென்றும் சொல்லப்படும். இனி அதில் மேன்று குடிக்கக்கண்டால் அல்லது அதை யுடையதாக்கிக் கொள்ளக்கண்டால் தன்னுடைய மார்க்கத்தில் கைறையும் இணக்கத்தையும் பெற்றுக்கொள்வான். இனி இன்னபாலென்று அறியப்பட்ட பாலைக் கண்டானானால் அது உறையாமலும், புளிக்காமலுமிருந்தால் ஹலாலான முதலும் அழகான பாயிதாவான ரிஸ்குமுண்டாகும். இனி அது புளித்துப்போய் உறைந்ததாகக்கண்டால் வியாகூலமும், துக்கமும், சஞ்சலமும் நஷ்டமுமுண்டாகும். இனி திரட்டுப்பாலைக்கண்டால் அதையுடையவனுக்கு கைறும் செழிப்பும் நல்லமுதலுமுண்டாகும். அதில் காய்ந்ததைக்காண்கிறதைக் காண பச்சையாய்க் காண்பதுதான் நல்லது. இனி மாட்டுப்பாலும் எருமைப்பாலும் ஒட்டகைப்பாலும் இவைகளைக்காண்பது நன்று யிருக்கும். இனி வெள்ளாட்டுப்பாலையும் செம்மறியாட்டுப் பாலையும்

காண்பது மாட்டுப் பாலைக் காண்பதைவிட தாழ்ந்ததாயிருக்கும். இனி காட்டு ஒட்டகைப் பாலைக்கண்டால் தீனிலிணக்கமுண்டாம். கோவேறுகழுதைப் பாலைக்கண்டால் அதைக்கண்டவனுக்கு அமளியும் வருத்தமுமுண்டாகும் இனி கழுதைப் பாலைக்கண்டால் கடிசான நல்வந்து நீங்கும். இனி மானிடபாலும் தின்னப்பட்ட மற்ற மிருகங்களின் பாலைக் கண்டால் கைருமிணக்கமும் அமான ரிஸ்குமுண்டாகும். இனி குதிரைப்பாலைக் கண்டால் அதைக் குடிக்கக்கண்டவனுக்கு இணக்கமான நல்ல பெயருமுண்டாகும். இனி புலிப்பாலைக் குடிக்கக்கண்டால் சத்துருக்களின் பேரில் ஜெயம் பெறுவான். இனி நாய்ப்பாலைக் குடிக்கக் கண்டால் பகைவனில் நின்றும் கெடும்பும், தந்திரமாய் தங்கடமுமுண்டாகும். இனி வேங்கைப்புலிப் பாலைக் குடிக்கக்கண்டால் பயமும் மிகைத்துக் கொள்ளுகிற பகைவனுமுண்டாவான். இனி குழிநரிப்பாலைக் குடிக்கக்கண்டால் கைறும், சந்தோஷமும், சிமான் தனமுமுண்டாகும். இனி நரிப்பாலை குடிக்கக் கண்டால் சுகமும், வழக்குமுண்டாகும். இனி வென்னீர்பாலை குடிக்கக் கண்டால் பேதகமாகிடும். இனி யாராகிலுமொருவர் யாருக்காவது தன் மார்பிலிருந்து பால் கொடுக்கக் கண்டால், அல்லது யாரிடமாவது பால் குடிக்கக் கண்டால் சிறைச் சாலைக்குட்படுவது கிட்டுமையாகும். அதை பால் குடித்தவன் பெற்றுக்கொள்வான். இனி யாராகிலுமொரு பெண் பிள்ளை தன் மாரில் பால் சாந்தோடக் கண்டால் கைறு முதலும், ரிஸ்கும் அவளுக்குண்டாகும். ஆனால் இவள் இன்னொருவருக்குப் பால்கொடுக்கக் காணப்படாது.

கள்ளு குடிக்கக்கண்டால் யாதொரு வழக்கும், பிணக்குமில்லாமலும் தன்னோடு சண்டையாகிறவனுக்கு ஒரு பேச்சுமில்லாமலிருந்தால் ஹறாமான முதல்களுண்டாகும். அப்படியுண்டாயிருந்தால் சர்முயிருக்கும். இனி சாராயம் குடிக்கக் கண்டால் பிசகுதலாய் பொருத்தக் கேடாக்கப்பட்ட முதல்களுண்டாகும். என்கிலும் அதில் செருப்புத் தொட்டிருக்கிற கதறின் படிக்கு வருத்தத்தைக் கொண்டே யொழிய பெற்றுக்கொள்ள மாட்டான். இனி பொருத்தக் கேடான யாதொன்றும் குடிக்காமல் மந்தாயிருக்கக் கண்டால் அதில் நீ நலவில்லை. இனி யாராகிலுமொருவன் கள்ளை, அல்லது சாராயத்தை யாதொருவருடன் மேற்படி இருவருக்

டையிலும் வஜீபானத்தை வளர்ந்திருக்கும் போது குடிக்கக் கண்டால் தன் நிர்வாகத்தின் கருமத்தில் தரிபாடா யிருந்து மற்றொருவனுடன் வழக்குப் பேசுவான். இனி யாராகிலு மொருவன் கள்ளுவடிக்கக் கண்டால் கல்தான் போல் கொற்றவர்களுக்கு பணிவிடை செய்வான். அவன் கையின் பேரில் தான் வலுப்பமான கருமங்கள் நடக்கும். இனி அறியப்படாத பசுமையான தோட்டத்தில் புகுந்து கள்ளரோடு குடிக்கக் கண்டால் சொர்க்கத்தில் புகுவதைப் பெற்றுக் கொள்வான். அப்படியில்லாம லிருந்தால் தன்யாவிலவனுக்கு பித்து பிடிக்கும். இனி தேன் குடிக்கக் கண்டால் பணமும், நல்ல நிஃமும், கலைகளை விட்டும் சுகமுமுண்டாகும். இனி பழங்களில் நின்று மெடுக்கப்பட்ட சர்பத்துகளை குடிக்கக் கண்டால் அந்தந்த பழங்களின் பிரயோஜனங்களின் மேற்சொன்ன பிரகாரம் அதின் சர்பத்துகளுக்கும் தஃபீர் சொல்லப்படும்.

விருக்ஷங்களையும் அதைச் சார்ந்தவைகளையுங் காண்பதின் தஃபீர்.

மரங்களாகிபவை அடங்கலும் ஆண் பிள்ளைகளா யிருக்கும். அவர்களின் ஹால்கள் அந்தந்த மரங்களின் குணத்திலும், பிரயோஜனத்திலும், வாடைமணமா யிருக்கிறதிலும், இவைபோல் கொற்றவைகளிலும் அந்த மரங்களின் ஹாலு போலா யிருக்கும். இனி யாராகிலு மொருவன் அந்த மரங்களில் நின்றும் பழம், இலை இவைகளில் நின்றும் ஏதாவது பெற்றுக்கொள்ளக் கண்டால் கண்டமரத்தின் கதறின் படிக்குள்ள ஒரு மனிதனில் நின்றும் நிஃமையும் மிருந்த முதல்களையும் பெற்றுக் கொள்வான். இனி இன்னமான தடி உத்திரம் போல் கொற்றதாகிறது நீளின் முனுமிருத்தனமும் முனுபிகான ஆண்பிள்ளைகளுமா யிருக்கும். காய்ந்த விறகும், பச்சை விறகும் அது பெரியதா யிருந்தாலும், அல்லது சிரியதா யிருந்தாலும் தடியுத்திரம் போல்தான் சிறிய கொம்புகளா யிருந்தால் மனிதர்களிடையில் சேரும். தோள் குண்டுனியா யிருக்கும். இனி அவைக் கொம்பாகிறது ஹன்றுதல்

பிடிக்கப்படும் கெட்டியான சிறப்பான மனிதனு மிருக்கும். இனி முள்ளுடைய மரமாகிறது கண்டவனுக்கு சத்துருவருத்தமு முண்டா யிருக்கும். ஆண்பிள்ளைகளா யிருக்கும், முள்ளுமாத்திர மாகிறது மனிதனில் பின்னிக் கொண்டு சொன்னாலும் அவனை வருத்தமாக்கும் கருமமா யிருக்கும். அல்லது அவனில் விஷயமாகும் பயப்பட்ட கருமமா யிருக்கும். இனி முர்மிரித் தோட்டமும், மாதுளமரமும் பெண்பிள்ளையா யிருக்கும். இனி யாராகிலு மொருவன் ஒரு மரத்தை கட்டினவுடனே தழுத்து செழிப்பமாய் விடக் கண்டால் சிறப்பைப் பெற்றுக் கொள்வான். அந்த மரம் எவ்விதமுள்ளதோ அதன் கதறின் படிக்கு அந்த சிறப்பு அவன் தனக்குத்தான் சிலகாலது பெண்பிள்ளையா யிருக்கும். அந்தப் பிள்ளை புலூகைபெற்றதிற மட்டிலும் ஒரு மரம் ஆயிரதிர்ஹ மாக்கிடுமென்கிற மட்டிலுமுள்ள பறக்கத்தாயுள்ள பிள்ளை.

பழங்கள் காய்களைக் காண்பதின் தஃபீறுனது, மாதுளம் பழக் காலத்தில் மாதுளம் பழங்கண்டால் அது இன்பமா யிருந்தால் சேகரிக்கப்பட்ட முதல்களுமா யிருக்கும். சிலகாலதைத் தின்ற வனுக்கு அல்லது அதில் நின்றும் ஏதாகிலும் தின்றவனுக்கு முதல்களில் நின்றும் நிறப்பமான ஒரு கருமமா யிருக்கும். அதாகிறது வந்த வடக்களில் நின்றும் சேகரிக்கிறதின் பேரில் அறிவிக்கும். இனி புளி மாதுளம் பழமாகிறது அதைத்தின்னக் கண்டவனுக்கு துக்கமும் வியாகூலமு முண்டாகும். அப்படிப் போல்தான் புளிப்பான பழமடங்கலும் இனி பனித்தோட்டப் பழமாகிறது அதைக் காண்கிறது ஒரு மனிதனுடைய தொழிலும், அவனுடைய வேலையும், அவனுடைய தெண்டிப்பும், தைரியமுமா யிருக்கும். சுல்தான் அதைத் தின்றால் அது அவனுடைய இராஜாங்கமா யிருக்கும். இனி அதைத் தின்றவன் வியாபாரியா யிருந்தால் அது அவன் வியாபாரம் திறமாயிருக்கும். இனி அதைத் தின்பவன் ஒரு தொழிலுடையவனு யிருந்தால் அது அவனுடைய தொழிலாயிருக்கும். இனி யாராகிலு மொருவன் பனித்தோட்டப் பழத்தில் நின்றும் ஏதாகிலும் பெற்றுக்கொள்ள அல்லது அதைத் தின்ன, அல்லது அதை உடையதாக்கிக் கொள்ளக் கண்டால் அதினுடைய பசமை அதின் இன்பம் அது மிகுதமா அல்லது குறைத்தளா யிருக்கிற கதறின் படிக்கு அவனுடைய அந்த

தைரியத்தினால் தன்யாவுடைய கருமத்தைப் பெற்றுக்கொள்வான். இனி உத்திராக்ஷி பழமாகிறது மிருதமா யிருந்தால் நல்ல முதலா யிருக்கும். இனி அது ஒன்று, அல்லது இரண்டும் அல்லது மூன்றாக யிருந்தால் அது சாலிஹான மக்களாக யிருக்கும். இனி மஞ்சள் உத்திராக்ஷி பழமாகிறது நஷ்டஞ் செய்யாது. இனி சீமை இலந்தங்காய் போல்கொற்ற மஞ்சள் பழமாகிறது கலையாயிருக்கும். ஆனால் அது பசுமையா யிருந்தால் அவனுடைய மனம் லாப மில்லாத நின்றின் பேரிலறிவிக்கும். இனி பசுமைதப்புச பழமா கிறது நின்றாயிருக்கும். இனி ஷெ மஞ்சளித்த பழமாகிறது அதில் நின்றும் எதாகிலும் தின்னக் கண்டவனுக்கு கலையுண்டாகும். இனி வாழைப்பழமாகிறது, அதை யாராகிலுமொருவன் கண்டால் கண்டவனுக்கு முதல் கிடைக்கும், தீனுடையவனுக்கு தீனுண் டாகும். அதில் மஞ்சள்பழம் நஷ்டஞ்செய்யாது. அதில் புளித்ததும் நஷ்டஞ் செய்யாது. அதை அதின் காலமல்லாததில் காண்பதும் நஷ்டஞ் செய்யாது. அதடங்கலும் சேகரமாக்கப்பட்ட கைரு மிருக்கும். இனி சிவந்த முந்திரிப்பழம், வெள்ளை முந்திரிப் பழமுமாகிறது துன்யாவுக்கு உதவியா யிருக்கும். அந்த இரண் டையும் காண்கிறது கைரா யிருக்கும். அதெப்படியெனில், அது அதினுடைய காலத்திலிருந்தால் ஷெ அதின் காலமல்லாததி லிருந்தால் அது கலையாயிருக்கும். சிலகால் அதை எத்தனைப் பழமென்று எண்ணித்தின்ற பழத்தின கணக்கின்படிக்கு அதை எண்ணி தின்றவன் பேரில் செளக்காலடி விஷயமாகும். இன்னும் சிலகால் அப்படிக் கண்டது அவன் சரீரத்தில் சிரங்குபோல் கொத்தது வெளியாகிறதின் பேரிலறிவிக்கும். இனி கருத்த முந்திரிப்பழங்கண்டால் பிரயோஜனஞ் செய்யாது. ஏனென்றால் நூஹு அலைஹிஸ்ஸலாம் கோபத்தில் அவர்கள் மகன்பேரில் பத்துஆ செய்தார்கள். அப்போது தங்கள் கையிலிருந்த முந்திரிப் பழம் கருத்துவிட்டது. ஆனதால் கருத்த முந்திரிப்பழம் காண்பதில் கைறில்லை. இனி யாராகிலும முந்திரிப்பழத்தை ஞவாடக்கண்டால் ஒரு இராஜாவுக்குப் பணிவிடைசெய்வான். அப்படிப்போலதான் ஜைத்தூனெண்ணெய்ப் போல் கொற்றது வடிக்கக்காண்பதும் அதில்நின்றும் எதாகிலும் பெற்றுக்கொள்ளக் காண்பவனுக்கு ·பறக்கத்தும், கைறும், முதல்களும் மிகச்செழிப்பு முண்டாகும் இனி சிவப்பு, அல்லது கருப்புச் சாறுபங்கண்டால்

அதில்னின்றும் ஏதொன்றை பெற்றுக்கொள்ளக் கண்டவனுக்கு முதலும், கைறும், நிஃமும், பிரயோஜனமு முண்டாகும். இனி அத்திக்காய், அத்திப்பழங் கண்டால் நம்முடைய தகப்பனுர் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் சொர்க்கத்தை விட்டும் புறப்படும் போது அத்திமரத்தின் கீழிருந்ததால் துக்கமும், கைசேதமு முண்டாகும். இனி இளனீர், தேங்காய்க்கண்டால் பேச்சும் வழக்கும் வருத்தமும் கடும்பாடுமே கொண்டு பெற்றுக்கொள்ளாத நிஃமாயிருக்கும். இனி பச்சை பாதங்காயும், அல்லது காய்ந்ததுவ கண்டால் தடுக்கப்பட்ட நிஃமின்பேரி லறிவிக்கும். அப்படிப்போல்தான் பிஸ்தக்காயும், இனி புர்றூக்கென்னும் காய்க்கண்டால் இணக்கமான முதலாயிருக்கும்.

இனி ஆசணிப்போல் கொற்ற மரமடக்கலுமாகிறது பிரயோஜனக் குறைத்தலான மனிதனுயிருக்கும்.

இனி வாடைமணமான மரமடக்கலுமாகிறது பல புகழுடைய சிறப்பான மனிதனுயிருக்கும். இனி கெட்டவாடையுடைய மரமடக்கலுமாகிறது வாசங்கெட்ட மனிதனுயிருக்கும்.

வித்துக்களைக் காண்பதின் தஃபீராவது, பச்சைத் தொலி கோதும்பைக் கண்டால் மேற்படி காய்ந்தக் கோதும்பைக், காண்பதைவிட கைறுயிருக்கும். இனி யாருகிலும் பச்சைக் கோதும்பைதான் தின்னக்கண்டால் தன்னுடை மார்க்கத்தில் இணக்கத்தையும் நிஃமையும் பெற்றுக் கொள்வான். இனி காய்ந்த கோதும்பை அல்லது அவிக்கப்பட்டதைத் தின்னக் கண்டால் அதில் நலவில்லை. இனி மணிகோதும்பாகிறது அதைப் பச்சையாய் அல்லது காய்ந்ததாய் அல்லது அவிக்கப்பட்டதா யெப்படித் தின்னக்கண்டாலும் அல்லது அதில்னின்றும் ஏதாவது பெற்றுக்கொண்டாலும் தின்றவனுக்கு அல்லது பெற்றுக் கொண்டவனுக்கு கைறும் தப்புறவான நிஃமா யிருக்கும். தொலிக் கோதும்பைக் காண்பதைக்காண இதைக்காண்பது கைறுயிருக்கும். இனி மாவைக் கண்டால் எந்த மாவாயிருந் தாலும் சரி அது யாதொரு ஜோலியுமில்லாத சேகரமாக்கப்பட்ட முதலாயிருக்கும். வித்துக்களுடைய மாவடக்கலும் அதின் ரொட்டியைக்காண கைறு யிருக்கும். ஏனென்றால் நெருப்பு

அதைக்கொட்டாது. இனி நல்ல துப்புரவான ரொட்டியாகிறது யாதொரு ஜோலியில்லாத முதல்தான். ஆகிலும் அதில்நின்றும் தின்பவனுக்கு அற்ப ஜீவனமாயிருக்கும். இனி குழைத்தமாவாகிறது பிச்சளங்களைக் கண்டவனுக்கு பணங்களுண்டாயிருந்தால் பணங்களும் அதிகமாகிறதின் பேரிலறிவிக்கும். இனி யாராகிலும் மொருவன் குழைத்த மாவை செய்யக் கண்டால் பிச்சளம் பழங்களும் பயிரும் அதிக்கமாகும். ஆகிலும் வருத்தத்திற்கு பின்தான் நிஸ்மை பெற்று கொள்வான். இனி நெல் அரிசி சோறு இவைகளைக் காண்கிறது. வியாரமும் வருத்தமும் கொண்டு சம்பாதிக்கும் முதலாயிருக்கும். இனி எள்ளைக் கண்டால் அதிகமாய்க் கொண்டிருக்கிற பெருப்பமான முதலாயிருக்கும். இனி சோளமிருக்கக் கண்டால் தொழில் கெட்டதாகும். இனி மொச்சைக் கொட்டையைக் கண்டால் நெடுப்பமான துக்கமும், வருத்தமு முண்டாகும். இனி கடலைக்காய், பெரும்பயறு, சிறுபயறுபோல் கொத்தைக் கண்டால் கெட்ட முதல்களுண்டாகும், அதில் வியாகூலமும் துக்கமுமுண்டாகும்.

பயிர்பச்சையைக் கண்டால் கண்டவனுக்குத் தினிலும் தன் யாவிலும் வேண்டியதுண்டாகும். இனி அதில் நடக்கக் கண்டால் அந்த பயிரிருக்கிறதின் படிக்கும் பசமையின் படிக்கும் அவனுக்கு வேண்டியதுண்டாகும். இன்னுஞ் சிலகால் பயிர்களைக் கண்டால் அத்தலத்தில் வியாகூலத்தின் பேரிலொருமிக்கிற மனிதராயிருக்கும். இனி அதை யறுக்கக் கண்டால் அந்த ஜனங்களை இவன் கொன்று போடுவான்.

பூமியில் விதைகள் தூவியிருக்கக் கண்டால் கைகூன செய்கைகளுண்டாகும். இனி அது முளைக்கக்கண்டால் தன்னுடைய செயல்களடங்கலும் அல்லா இடத்தில் கபூல்செய்யப்பட்டவனா யிருப்பான். சிலகால் அதைக் கொண்டவனை தன்யாவில் பிரசித்தமாக்கப்படும். அதனால் சிறப்பும் வலுப்பமும் பெற்றுக் கொள்வான். இன்னுஞ் சிலகால் விதைகளை பூமியில் தூவக்காண்கிறது மக்களாகவும் பிச்சளம்பெறுகிறதின் பேரிலறிவிக்கும். இனிமேற்படி பயிரும் இவ்வளவென்று மட்டுப்படுத்தப்பட்டதாகவும் அதின் இலை வெள்ளரிபீக்கி இவைபோல் கொத்தைதப்போல் பசமையை அறியப்பட்டதாயிருந்தால் இப்படிக்கண்டவன் வியாரத்திலும், துக்கத்திலும் தாழ்மை

பான திண்மைப் பெற்றுக்கொள்வான். சிலகால் அவனுக்கு வியாபாரமும் துக்கமும் சஞ்சலமும் தீவிரமாய்வரும். நின்கு அவனைவிட்டுத் தாமதிக்கும். சஞ்சலமும் வெகுநாளைக்கிருக்கும். அப்படிப் போல் தான் ஈரவெங்காயம் வெந்தயம் கீரைப்போல்கொத்த கீரைவகைகளைக்கண்டால் வியாரமும், துக்கமும், வருத்தமுமுண்டாகும்.

றைஹானின்ல பன்னீர் கிறு செம்புப்போல்கொத்த முகக்கப்பட்ட வஸ்துக்களை அவைகளின் பூண்டுகளை விட்டும் பிரிந்ததாகக் கண்டால் துன்பா அவனைவிட்டும் நீங்கிப்போகும். இனி அவைகளில் மரத்தில்தானே தரிப்பாடாயிருக்கக் கண்டால் அந்தபுஷ்பம் எப்படியிருந்ததோ அந்தப்படிக்கு ஸாலிஹான பிள்ளையாயிருக்கும் அப்படியிருக்க அந்த மரத்தில் நின்றும் ஏதாகிலும் பறித்துக் கொண்டவனுக்கு நல்லதாயிருக்கும். இனி பள்ளிவாசல் வீடுபோல் கொத்த வளமையாக புல்பூண்டு முளையாத விடத்தில் இன்ன பூண்டென்று தெரியாத பூண்டு முளைக்கக்கண்டால் அந்த தலத்தில் சம்பந்தம் பேசி அல்லது வியாபாரமும் போல் கொத்ததில் கூட்டு கூடுகிறது போல் கொத்ததைக் கண்டால் அந்த தலத்திலவர்கள் மீதில் ஒரு மனிதன் வந்து புகுதுவான்.

வைக்கோலைக்கண்டால் பணமும் சீக்கிரமாய்வரும். பொன்னும் ஹாஸிராய் வரும். மனுமில் வைக்கோலைக் காண்கிறதற்கு சையிதினா முஹம்மதிப்னு சீரின் றஹிமஹுல்லாஹு தங்கமென்று சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். சொல்லப்படுகிறது அவர்களுக்கு ஒரு மனிதனுனவர் ஒரு ஒட்டகத்தின்மேல் வைக்கோலேற்றி அந்த ஒட்டகத்தை அவர்களுக்கு கொடுக்கவும் சொன்னார்கள். இந்த ஒட்டகமும், வைக்கோலும் இரவில் மனுமில் எனக்குதத்தியாக் கொடுக்கும் படி வேண்டித்தேனென்றார்.

தோட்டங்களைக் காண்கிறதைக்கொண்டு ஒருவனுடைய பெண்சாதியென்ற தஃபீர் சொல்லப்படும். இனி அந்த தோட்டத்திலிருந்து அதின் பழங்களைத் தின்னக் கண்டால் பணக்காரியாகிய பெண்பிள்ளைகளில் நின்றுஞ் சில முதல்களைப் பெற்றுக்கொள்வான். இனி மேற்படி தோட்டத்திலிருந்து தோன்றி துப்புரவாகக் கண்டால் ஒரு அழகான பெண்பிள்ளையுடன் தன்னுடைய ஹால் அழகாகி கிர்ப்பாக்கியமும் தெளிவாகும். இனி தோட்டத்தில்

வாயல் ஒரு பக்கம் கழண்டு போகக் கண்டால் தன் பெண்சாதியைத்
தலாகு சொல்வான். இனி தெரியாத தோட்டங்களைக் கண்டோ
மென்றால் அவைகள் சொர்க்கமென்று தஃபீர் சொல்லப்படும்.
இனி அந்தத் தோட்டத்தில் தன்னைச் சுறுசுறுப்பாய்க் கண்டால்
சொர்க்கம் புகுவான். இனி பூங்காவனங்களாகிறது அவைகளைக்
கண்டால் இஸ்லாமார்க்கமாயிருக்கும். இனி அதில் நடக்கவும்
அதில் சுறுசுறுப்பாகவுங்கண்டால் அதுவாகிறது அல்லாஹுத்
தஆலாவில் நின்றும் நேர்வழியும் இஸ்லாமில் யிருந்த கைறுமா
யிருக்கும். இன்னுஞ் சிலகால் கண்டவன் துப்புரவாகிய இல்முகளா
யிருக்கும். (வல்லாஹு அஃலம்)

பூமியையு மதிலுள்ள மலை காடு கட்டடங்களையும் காண்பதின் தஃபீர்.

பூமியைக்கண்டால் அதன் தஃபீர் பலமாதிரியாயிருக்கும்.
ஆனதால் பூமியை இவ்வளவென பார்வைக் கெத்தப்பட்டதாக
கண்டால் அது பெண்பிள்ளையென்று சொல்லப்படும். இனி அறியப்
படாத விஸ்தீரண பூமியாயிருந்தால் துனியாவென்று சொல்லப்
படும். இனி அந்த பூமி விஸ்தீரணமாயிருக்கிறதுடன் பசுமை
யாகவும் அதில் அறியப்படாத பயிருமுண்டா யிருக்கக்கண்டால்
இஸ்லாமார்க்கமாயிருக்கும். அப்படிப்போல்தான் காடுகளும். இனி
யாராகிலும் மொருவன் பூமியை தனக்குவிரிப்பாய் விரிக்கப்பட்டிருக்
கக்கண்டால் அவனுடைய ஹயாத்து கைறிலும் கார்மானத்திலும்
நீளப்படும். இனி யாராகிலுமொருவன் பூமியைத்தனக்குச் சுருட்டப்
படக்கண்டால் அவனுடைய ஹயாத்து தீர்ந்துபோய்விட்டது. சில
காலப்படிக்கண்டது இவன் விலாயத்தைப்பெற்றுக் கொள்ள
பாத்திரவானாயிருந்தால் அதைப் பெற்றுக்கொள்ளுகிறதின் பேறி
லறிவிக்கும். இனியாராவது பூமி தன்னோடு பேசிக்கொள்ளக்
கண்டால் கைறையும் துன்யாவில் மனிதர்களுக் கெல்லாம்
புதுமையாகும் கருமத்தையும் பெற்றுக்கொள்வான். அப்படிப்போல்
தான் பழக்கம் பேசாத வஸ்துக்களும் பழக்கம் பேசக்கண்டாலும்.
இனி யாராவது பூமியை தோண்டாமல் தான் அதில் மறைந்து
போகக்கண்டால் துன்யாவைத் தேடுகிறதில் மொத்தாவான். இனி

ஒருவன் குழியில் கிடக்கக் கண்டால் பொருத்தக் கேட்டிலும், சதிமானத்திலும், குற்றத்திலும் விஷயமாவான். இனியாராகிலு மொருவன் பூமி தன்னைச் சுற்றக்கண்டால் அவனுடைய கருமம் தளும்பி அவன் ரிஸ்கைத் தேடுகிறதில் பூமியெல்லாம் சுற்றுவான். இனி யாராகிலும் பாதைத் தெரிந்து நடக்கும் ஒரு மைதான வழியிலிருக்கக்கண்டால் தீனிலும் இஸ்லாமில் செவ்வையாய்த் தெரியப் படுத்தலும் வெகுநாளைக்கிருப்பான். இனி பாதைத்தெரியாத ஒரு மைதான வழியிலிருக்கக்கண்டால் இஸ்லாமில் ஷக்குடையவனா யிருப்பான். இனி ஒரு மைதான வழியிலிருந்து தின்றுக் கொண்டும், குடித்துக்கொண்டு மிருக்கக்கண்டால் தீனிலும், துன்யாவிலும், நிஃமத்தையும் சங்கையும் பெற்றுக்கொள்வான்.

மணலையும், புழுதியையும் அதுபோல் கொற்றைவகளையும் கண்டால் முதலென்று தஃபீர் சொல்லப்படும். இனி யாராகிலு மொருவன் மண்ணையு மதுபோல் கொற்றைவகளையும் தின்னக் கண்டால் சீமானுவான். அநேக முதல்களையும் பெற்றுக்கொள்வான். அப்படிப்போல்தான் அதில் நடக்க அல்லது அதை சுமக்கக் கண்டாலும் முதல்களைச் சம்பாதிக்கிறதில் களைப்பாடுபட்டு அதற்குப்பின் அதை பெற்றுக்கொள்வான். இனி வானத்திற்கும் பூமிக்குமிடையில் புழுதியைக்கண்டால் அது தல்லிமிப்படாத கருமமாயிருக்கும். அப்படிப்போல்தான் ஏறப் பறக்கக்கண்டாலும். இனி யாராகிலுமொருவன் பூமியைத்தோண்டி தின்னக்கண்டானே யானால் குபாடமும், சதிமானமும், ஹீலாவுஞ் செய்து முதலைப் பெற்றுக் கொள்வான். இனி மேற்சொன்னபடிக் கல்லாமல் பூமியைக்காண்கிறது இஸ்லாமார்க்கத்துக்கு மாற்றமாகிய மார்க்கமா யிருக்கும். அப்படிப்போல்தான் சதுப்புநிலத்தை காண்கிறதும். இனி அது இவ்வளவென ஒரு ஹத்தை யொத்ததாகக் கண்டால் நலவில்லாத கெட்ட பெண்பிள்ளையென்று சொல்லப்படும்

ஹிக்காயத்து

பேசிவரப்படுகிறது, நபீ அத்திப்து உம்மைபத்திப்து கலப் ஸையிதுனா அபூபக்ரி ஸிஸ்வித்திகு றலியல்லாஹு அன்ஹு இடம் வந்து றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கலீபாவே, மனுமில் ஈகெருநு பொட்டைக் காட்டில் நல்ல

பசுமையான தலத்திலிருந்துகொண்டு அதில்நின்றும் பயிரில்லாத பஞ்சமான பூமியளவில் செல்லுகிறதுபோலும் உங்களுடைய இரண்டு கைகளையும் உங்களுடைய கழுத்தில் கட்டியிருக்கிறது போலும் உங்களையுங் கண்டேனென்று சொல்லவும், அபூபக்ரினிஸ்ஸித்தீகு றலியல்லாஹு அன்ஹு, அவருக்குச் சொன்னார்கள், உன் மனாமை உண்மையாகவே சொல்லியிருந்தால் இஸ்லாமார்க்கத்தை விட்டும் குபுரானவில் போவாய். என்னைக் கண்டதாவது எனக்கு அநேக காரியங்களைச் சேகரிக்கப்பட்டு என்னுடைய இரண்டு கைகளையும் துன்யாவுடைய கூளத்தை யெடுக்காமல் கட்டப் பட்டிருக்கிறதா யிருக்கு மென்றார்கள். ராவி சொல்லுகிறார், மேற்படி தபீஆ ஸையிதனா உமறுப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹுவின் கிலாபத்துடைய நாட்களில் மதீனத்தைவிட்டும் புறப்பட்டு ரூமுக்குப்போய் கைஸர் ராஜாவிடம் நஸ்ராணியாகிய நஸாராணியாகவே செத்தானென்றார்.

மலைகளையும், மேடுகளையுங் கண்டால் அவைகளைக்கண்ட தகுதியின்படிக்கு ஆண்பிள்ளைகளென்று சொல்லப்படும். அப்படிப் போல்தான் பிரமாண்டமான கற்களைக் கண்டாலும். சிலகால் மலைகளும், மேடுகளும், மேலான தலங்களாயிருக்கும். அதைக் கண்டவன் பெற்றுக்கொள்வான். இனி யாராவது அதின்பேரிலேறக்கண்டால் மேலாம் பதக்கத்தைப் பெற்றுக் கொள்வான். ஆனால் பிரமாண்டமான கல்லைக்கண்டால் இரக்கமில்லாத கோபமும் கடுகடுப்பு முண்டாயிருக்கும் ஆண் பிள்ளைக ளென்று சொல்லப்படும். இனி வளமையா யெறியப்படும் சிறிய கல்லைக் கண்டால் இவனுக்குத் தெரியாமல் பேசப்படும் பேச்சாயிருக்கும். இனி யாராவது தான் மலையின்பேரில் தரிப்படக்கண்டால் தன்னைப் போலுள்ள மனிதனை இவன் மேலிட்டிடுவான். இனி அந்த மலையை யுடையதாக்கிக் கொள்ளக் கண்டால் ஒரு மனிதனில் நின்று மிவன் இடம் பாழாக்கிக் கொள்வான். இனி யாராவது ஒரு மலையை பிடித்துப்போடக் கண்டால் ஒரு மனிதனை இவன் ஹலாக்காக்கிப் போடுவான். இனி யாராகிலு மொருவன் மலையைத் தளைக்க, அல்லது அதைத் தோண்டக்கண்டால் ஒரு மனிதனுக் கிவன் ஹீலாவும் குபாடஞ் செல்வான். இனி மலைமேலேறக் கண்டால் மேன்மையும், வறுப்பமும், சிறப்பையும் பெற்றுக்

கொள்வான். இனி சரிமட்டமான மலையிலேறக் கண்டால் தன்பாவுடைய கருமத்தில் நின்றும் நாடுகிறதில் தேடிக் கொள்கிறதில் வருத்தத்தைப் பெற்றுக் கொள்வான்.

உயர்த்தியடங்களும் புகழப்பட்டதுதான், எவ்விதும் மே யிருந்து மேலேறுகிறவரைக்கும் சரிமட்டமா யிருந்தாலொழிய. அப்படியிருந்தால் வருத்தத்தை தான் பெற்றுக் கொள்வான். ஆனல் முழிப்பில் ஏற்றத்தில் ஏறுகிறதுபோல் ஏறக்கண்டால் சிறப்பையும், மேன்மையும் பெற்றுக்கொள்வான். இது புகழப் பட்ட ஏற்றம். மனுஷிலொருவன் உயரப்போகக் காண்கிறதடங் களும் அவனுடைய மார்க்கத்திலும், தன்பாவிலும் தலைமையிலும் மேன்மையாகிறதா யிருக்கும். மலைகளையும் பொர்துக்களையும் மரங்களையும் ஏறி உதயமாகிப் பார்க்கிற தடங்களும் தானுருக்குச் தானமும் சார்மானமா யிருக்கும். இனி பெருங்கற்களையும், பிரமாண்டமான கற்களையும், மலைகளையும், பிரமாண்டமான கனங் களையும், சாமான்களையும் ஓரிடத்திலிருந்து வேருரு இடத்திற்கு தான் கொண்டுபோகக் கண்டால் அதுபோல்கொற்ற கனமான கருமங்கள்பேரில் மனிதர்களை சமத்தாட்டுகிறதையும் வருத்தங் களையும் நாடுவான்.

கதிகடைகளைக் கண்டால் பலவிதமான முதல்களும் தொழில் களுமாயிருக்கும். இனி வியாபாரமில்லாமல் கிடக்கும் கடையி லிருக்கக் கண்டால் கண்டவன் முங்கிக்கிடக்கும் மிகுதமான பேச்சாயிருக்கும்.

வீட்டை காண்பதின் தஃபீர், பலவிதமாகவும் சொல்லப்படும். இனி அதினுடைய கட்டடமும், கட்டுமானமும் அதையுடையவர் களும் அதையுடைய அதையு மிதற்குமுன் அமல்களில் நின்றும், அவன் கிற்படுத்தியதும் அந்தவீடு எவ்வளவு விஸ்தாரமாகவும், கெட்டுமையாகவும், அலங்காரமாகவும் இதுபோல்கொற்ற விதங்களாக எப்படியிருந்ததோ அப்படித்தான் ஆகிறத்திலும். இனி முன்னறி யப்பட்ட வீடாயிருந்தால் அது தன்பாதான். அதைக்கண்டவ னுடைய ஹால் விஸ்திரணத்திலும், கெட்டுமையிலும், அலங்காரத் திலும், இதைப்போல் கொற்றவைகளிலும் அந்த வீடு எப்படி யிருந்ததோ அப்படித்தா னிருக்கும். இனி யாராகிலு

மொருவன் தானிருந்த வீட்டில் அதைத்தான் உடையதாக்கிக் கொண்டவனாக இருக்கக்கண்டால் அந்த வீடிருந்த விஸ்தீரணத்தின் படிக்கும், அழகின்படிக்கும் துன்யா இவன்பேரில் விஸ்தீரணமாகும். இனி யாராவது தன்னுடைய வீட்டை அதன் கட்டடத்திலதிகமாக இருக்கக்கண்டால் துன்யாவுடைய கருமத்தில் அவனுக்கதிகம் உண்டாகும். இனி யாராவது தன்னுடைய வீடு விழுந்துவிட அல்லது பாழுடையக்கண்டால் அவனுடைய துன்யாவின் கருமம் கெட்ட அமல்களினால் கருபாய்விடும். இனி தன்னுடைய வீட்டை விற்கக்கண்டால்தான் மௌத்தாய்ப்போவான். இனி தன்னுடைய வீட்டை அல்லது வேறு வீட்டை தான கட்டக்கண்டால் துன்யாவில் வேழ்க்கையாவான். அந்த வீட்டின் கதறின்படிக்கு துன்யாவின் பெற்றுக்கொள்வான். இனி வீட்டைத் தனக்கு தெரியாதவிடத்தில் தான் கட்டக்கண்டால் அவனிடத்தில் நல்ல அமல்கள் தரிப்படும். ஆகிரத்திலவனுடைய ஹால் ஸாலிஹானதாயிருக்கும். இனி யாராவது தனக்குத்தெரியாத வீட்டை பிடிக்கக் கண்டால் அதற்குமுன்தான் செய்த கெட்ட அமல்களையும் பாவங்களையும் இடித்துப்போடுவான். இனி தான் இடிக்கிறவீடு தனக்குத் தெரிந்த வீடாயிருந்தால், மூட்டான் தனத்தால் தன்னுடைய துன்யாவுடைய கருமத்தை இடித்துப் போடுவான். இனி தன்னுடைய வீட்டில்கின்றும் ஏதாவது இடிக்கக்கண்டால் அல்லது குறைந்து போகக்கண்டால் அவனுடைய துன்யாவில் குறைந்தலாயிருக்கும். இனி பட்டணத்தில் மேடை, மாளிகைகளைக்கண்டாலும் அதிலேறக்கண்டாலும் கண்டவனுடைய துன்யாவின் மேன்மையும், சிரேஷ்டத்தனத்தையும் பெற்றுக்கொள்வான். இனி கட்டிய சுவரைக் கண்டால் கண்டவனுடைய ஹால் தான், சிலகால் துன்யாவின் பேரிலறிவிக்கும். இனி அதின் பேரில் நின்றும் விழுந்துவிடக் கண்டால் தன்னுடைய ஹாலைவிட்டும் நீங்கிவிடுவான். அல்லது ஹலாக்காய்ப் போவான். இனி நீறுபோட்டு கட்டப்பட்ட தெரியாத வீடாகிறது கப்ருயிருக்கும். இனி அதிலவனைத் தடுக்கப்படக் கண்டால் அது அவனுடையகப்றுதான். இனி தெரியாத வீடாகவும் நீறுகொண்டு கட்டப்படாததாகவு மிருந்தால் பெண்பிள்ளையென்று சொல்லப்படும். இனி யாராவது தனக்குத் தெரியாத வீட்டில் புகுந்து அதற்கு மேலாவில் தான் உயர்ந்து போகக்கண்டால் இவன் ஒரு பெண்ணை கலியாணஞ் செய்து அவளில் நின்றும்

கைறையும், பாயிதாவையும், பெற்றுக்கொள்வான். இனி தெரிந்த வீட்டை தான் உடையதாக்கிக் கொள்ளக்கண்டால் அது அவனுடைய பெண்சாதியா யிருக்கும். சிலகால் அவனுடைய தன் பாவாயிருக்கும். இனி தன்னுடைய வீட்டை கோயிலாகக்கண்டால் மூடமையானவனுவான். இனி இன்னொருவனுடைய வீட்டை கோயிலாகக்கண்டால், அந்த வீட்டையவனில் நின்றும் முதலைப் பெற்றுக்கொள்வான். இனி தான் ஒரு கப்று வெட்டக்கண்டால் வீடு கட்டுவான். இனி ஒரு பட்டணம் அல்லது அதில் சிலது இடிந்துபோகக்கண்டால் அந்த ஊரையுடையவர்களின் மார்க்கம் போய்விடும். சிலகால் அவர்களுடைய துன்யா வருத்தத்தை கொண்டுபோய்விடும். இனி ஏணிகளைப்போல் கொற்ற படியாகிறது யாராகிலுமதில் ஏறக்கண்டால் அவனுடைய துன்யாவில் சதகாச் செய்கிறது கொண்டும், முதலைச் சிலவு செய்வது கொண்டும் ஏறுவான். இனி ஏணிசண்ணும்பால் கட்டப்பட்டதாகவும், அல்லது கொம்பாகவும், அல்லது மரமாகவுமிருந்தால் அதிலேறுவது அந்தப் படி எத்தனையிருந்ததோ அதின் கதறின்படிக்கு அதிலேற கண்டவனுக்கு துன்யாவில் மேன்மையும் ஏற்றமும் அந்த மனுமில் அதின் பேறிலறிவிப்பதுண்டாயிருந்தாலுண்டாகும்.

வீட்டின் வாயலாகிறது அதைக்கண்டால் செவ்வையாய் வீட்டை நிலைப்படுத்திய வனென்று சொல்லப்படும். ஆனதால் வாயலில் உடைவு, அல்லது அதை கழற்றுகிறது, அல்லது ஒரு ஓட்டை அல்லது ஒருபொருத்தக்கேடு, அல்லது உவக்கப்பட்டது, இவைகளைப்போல் கொற்றவை உண்டாயிற்றுனால் அது அந்த வீட்டை நிலைப்படுத்தியவனில் உண்டாகும். இனி வீட்டு நடையின் வாயலாகிறது கண்டவன் பெண்சாதியாயிருக்கும். அப்படிப் போல்தான் மேல்வாசல்படி புருஷனும் கீழ்ப்படி பெண்சாதியும். இனி யாராவது தன்னுடைய வீடு கரிந்துப் போகக்கண்டால் அவனுக்குச் சுல்தானில் நின்றும் அல்லது பேதியினுல் அவனுக்கு ஒரு வருத்தமுண்டாகும். இனிவாயல் கழண்டு போகக்கண்டால் அல்லது கீழேவிழுந்து விடக்கண்டால் வீட்டையுடையவன் மௌத்தாய்ப் போவான். இனி வீட்டின் வாயலைக் கழற்றப்படக்கண்டால், அல்லது அதின்படியைக் கழற்றப்படக்கண்டால் வீட்டையுடையவன் மௌத்தாய்ப்போவான். இனியாராவது தன்னுடைய

வீட்டுவாயல் கழண்டு இன்னுமொன்றைச் சோக்கண்டால் அந்த வீட்டை விற்றுப்போடுவான். அல்லது தன்னுடைய பெண்சாதி இன்னொருவனுக்கு வாழ்க்கைப்படுவாள். இனி யாராவது தன்னுடைய வீட்டு வாயல் விழக்கண்டால் சகத்தப்பாவி சகமாவான்.

வீட்டின் நிலையாகிறது ஆண்பிள்ளையின் மக்களாயிருக்கும். இனி இரண்டு நிலையும், விழுந்து விடக்கண்டால் அவனுக்குப் பெண்மக்களிருவரிருந்தால் மேற்படி இரண்டுபேரும் மௌத்தாய்ப் போவார்கள். இனி அப்படிக்கண்டவனுக்குப் பெண்மக்க ளதிகமாயிருந்தால் அவர்களைக் கலியாணஞ்செய்து கொடுத்து அவனிடத்தை விட்டு மவர்களை வெளிப்படுத்தப்படும். இனி யாராவது வீட்டின் திறக்கப்பட்ட வாயலை தானடைபக்கண்டால் தன்பெண் ஜாதியைத் தலாகு சொல்வான். இனி பூட்டப்பட்ட வாயலைத்திறக்கக்கண்டால் அந்தவாயல் தானறியப்பட்ட வாயலாயிருந்தால் கலியாணஞ் செய்வான். இனி வீடு இதற்கு முன்னறியப்படாததாயிருந்தால் இவன் யாது கருமத்திற்காவது கூப்பிட்டதற்கு ஜவாபு சொல்லப்படும். இனி ஆணியை அல்லது ஒரு மூலையைக் கண்டால் அது ஒரு மனிதனுயிருக்கும். அவனைக்கொண்டு மனிதர்களளவில் சேர்வார்கள். பாலமும் அப்படிப்போல்தான்.

அறிந்துக்கொள். அலைக்கப்படுவதைக் கண்டால் ஆலத்தில் மூலீபத்துண்டாகும். இனியாராவது மலைகளை அலைக்கப்படக் கண்டால் உலமாக்கள் கெட்டுப்போவார்கள். இனி யாராகிலு மொருவன் தன்னைத்தானே அலைக்கப்படக்கண்டால் அதில் நலவுயில்லை. இனி தன்னுடைய வீட்டை அலைக்கப்படக்கண்டால் அதில் வினைவிறங்கும். இனிதன்னுடைய வீட்டில் நின்றும் ஏதாவது இடிந்துபோகக் கண்டால் அதின் தகீபிரை யாரளவில் சேர்க்கப்படுகிறதோ அவர்கள் மௌத்தென்கிறதற்கு அடையாளமாயிருக்கும். (வல்லாஹு அஃலம்.)

மழையைச் சார்ந்தவைகளையும் கப்பலைச்சார்ந்தவைகளையும் காண்பதின் தஃபீர்.

மழை பெய்யக்கண்டால் இரக்ஷிப்பும், றஹ்மத்துண்டாகும். இனிகார்மேகங்கண்டாலும், இனி மேற்படி மேகம் ஒரு தலத்தில் அல்லது ஒரு வீட்டில் அல்லது ஒரு தெருவில் மாத்திரம்தனதாக யிருக்கவும், மற்றுமிடங்களில்லாமல் கண்டால் அல்லது துன்யாவில் ஓரிடத்தில் மாத்திரங்கண்டால் காணப்பட்ட தலத்தில் கவல்களும் நோக்காடுகளு முண்டாகும். சிலகால் அல்லாவுடைய கஹ்றுமாயிருக்கும். இனியொருவன் வானம் செய்யாக, அல்லது தேனாக அல்லது பாலாக ஸைத்தூன் எண்ணெயாக அல்லது இவை போல் கொற்றதால் மழைபெய்யக்கண்டால் கண்ட தலத்தை யுடையவர்களுக்குக் கொள்ள வாழ்வும் கைறும் வானத்தில் நின்றும் அவர்கள் பேரில் நின்றும் இறங்கும், அப்படிப்போல் தான் உவக்கப் படும் மழையடங்கலும்.

ஹிக்காயத்து.

பேசிவரப்படுகிற ஸையிதினு அபூபக்கரினில் ஸித்தீகு றலி யல்லாஹு அன்ஹு இடம் ஒரு மனிதன்வந்து வானத்தில் ஒரு இருட்டில் நின்றும் செய்யாகவும், தேனாகவும் மழைபெய்யக் கண்டேன். அதை யெல்லோரும் சிலர் மிகுதமாகவும், சிலர்கொஞ்ச மாகவும் எடுக்கிறார்களென்றார். அப்போது ஸைதினு அபூபக்கரி னில்ஸித்தீகு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள் இருளா கிறது இஸ்லாமாயிருக்கும். செய்யும் தேனும் அதன் இன்பமா யிருக்கும். உவக்கப்படும் மழையடங்கலும் காண்கிறது புகழப்பட்ட தாயிருக்கும் என்றார்கள்.

ஸைபிதினு ஜிபருஸ்ஸாதிகு றலியல்லாஹு அன்ஹு இடம் ஒரு மனிதன்வந்து இரவும் பகலும் மூங்கக்கண்டேனென்றார். அப்போது சொன்னார்கள், நீ கண்டதை அழுக்கி வைத்ததை என்னதான் சொல்ல! நீ றஹ்மத்தில் மூழ்குவாய் அச்சத்திருக்கிறதை

யும் றிஸ்கில் விஸ்திரணத்தையும் உனக்குக் கொடுக்கப்படுமே என்றார்கள்.

இன்னும்மவர்களிடத்தில் கேட்கப்பட்டது ஒரு மனிதன் தன் தனியில் மழைபெய்யக்கண்டேனென்று சொல்லவும், அவர்கள் சொன்னார்கள், இவன் பாவஞ்செய்யும் மனிதனாயிருக்கும். அவன் பாவம் அவன் பேரிலதிகமாய்விட்டது. அவனுடைய கதா அவனைச் சூழ்ந்துகொண்டதென்று சொன்னார்கள்.

காற்றுடன் இடியாகிறது அதை மனுமில்கண்டால் அநியாயஞ் செய்யும் கெட்டியாகிய சல்தானாயிருக்கும். இனி மின்வெட்ட முசாபிறு கண்டால் பயங்கரமாயிருக்கும். மூகீமானவன் கண்டால் அவேட்கையாயிருக்கும் ஒருசொற்படி மழையன்றியே இடியைக் கண்டால் முகீமுக்கும் முசாபிறுக்கும் பயங்கரத்தின்பேரில் அறிவிக்குமென்றார். இனிமழையுடன் இடியைக்கண்டால் சுகதப்பான வன் சுகமாகிறதின்பேரிலறிவிக்கும். இனிவானத்தில் பச்சைபாயுள்ள வில்விழுந்திருக்கக்கண்டால் பஞ்சத்தைவிட்டும் அச்சந்தீருகிறதின் பேரிலறிவிக்கும். இனிமஞ்சள்வில் கண்டால் [illegible]ல்பிடிக்கிறதின் பேரிலறிவிக்கும் இனிசிகப்பு வில்கண்டால் இரத்தத்தை ஓட்டிக் கொள்ளுகிறதின் பேரிலறிவிக்கும். ஒரு சொற்படி பச்சைவில் கண்டவனுடைய தோழனுக்குக் கலியாணஞ் செய்கிறதின் பேரிலறிவிக்குமென்றும் சொல்லப்படுகிறது. இனிவெள்ளம்வரக் கண்டால் பகைவன் இவன் பேரில் ஆயத்தமாயிருக்கிறதின் பேரிலறிவிக்கும். இனி மழையினால் குளங்கள்கட்டி கிடக்கக்கண்டால் கைறின் பேரிலும் செழுசெழுப்பின் பேரிலும் அறிவிக்கும்.

வெண்மேகங்கண்டால் அதில் இருளும் காற்றும் அமளியில்லாதிருந்தால் ஹிக்மத்தும், இல்மும் றஹமத்துமுண்டாகும். இனி அதில் நடக்க அல்லது உடையதாகக் கண்டால் அல்லது சேகரிக்கக் கண்டாலும் மேலே சொல்லப்பட்டதின் வனுப்பமான கருமத்தைப் பெற்றுக்கொள்வான்

ஜைபிறு இபனுஸாபிது றலியல்லாஹு அன்ஹுவிடம் ஒரு மனிதனிடம் மிருதமாக வெண்மேகமிருக்க அதைத் தின்றவனுக்கக் கண்டவனைத் தொட்டும் கேட்கப்படவும் சொன்னார்கள், இந்த மனிதன் கண்டது நல்லது, அவன் இல்மைக்

கற்றுக் கொள்வான், அவன் சந்ததியில் மேன்மையானவன், பெருமையவனை பொதிந்து கொள்ளும். இதனால் அழகான புகழும், தலைமையும் தகுதியுமுண்டா யிருக்கிறவனும் பெற்றுக் கொள்ளாத தெல்லாம் பெற்றுக் கொள்வானென்றார். இன்னு மவர்களிடம் ஒருவனுக்கு மேகம் குடைபிடும்படிக் கண்டால் எப்படியென்று கேட்கப்படவும் சொன்னார்கள். இந்த மனிதன் சுகத்தப்பா யிருந்தால் சுகமாவான், கடனாளியா யிருந்தால் அல்லாஹுத் தஆலா அவன் கடனை யிருத்திப்போடுவான், அவன் பக்கீரா யிருந்தால் அவனை அல்லாஹுத் தஆலா சீமானாக ஆக்குவான், அநியாயஞ் செய்யப்பட்டவனா யிருந்தால் உதவி செய்யப்படு மென்றார்கள்.

பனிக்கட்டியைக் கண்டால் அதிலொருவிதத்திலும் நலமில்லை. இனி பனித்தண்ணீரை வளமையாகக் காணுமிடத்தில் கண்டால் அந்தத் தலமுடையவர்களுக்குச் செழிசெழிப்பா யிருக்கும். இதற்கு மாற்றமாயிருந்தால் துக்கமும், வியாரமும், வேதனையுமா யிருக்கும். இனி குளிரினால் தண்ணீர் உறைந்திருக்கக் கண்டாலும் துக்கமும், வியாரமும் அதாபுமா யிருக்கும். ஆனால் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் அள்ளினவுடன் மேற்படி தண்ணீர் உறைந்துபோகக் கண்டால் தன்னிடத்தில் தரிப்பாடும் கெட்டியான முதலுமாயிருக்கும்.

கிணற்றைக் கண்டால் அது தன்னுடைய பைமுதலும் அவன் நிர்வாகமுமா யிருக்கும். இனி யாராவது கிணற்றைத் தோண்ட நாடியபின்பு அதைத்தோண்ட சக்திபெறவில்லாமல் கண்டாலவன் நிர்வாகத்தில் வருத்தமுண்டாகும், ஜீவனத்தில் கொஞ்சத்தைத்தான் பெற்றுக் கொள்வான். இனி யாராவது தன் வீட்டில் ஒரு கிணற்றைக் கெட்டியாகவும் உயரமாகவும் கட்டக்கண்டால் தன்னுடைய முதலில் பலவத்தமுண்டாகும். அல்லாஹுத் தஆலா அவனுக்கு யாதொரு வருத்தமன்றியே நல்லமுதல்களைக் கொடுப்பான். இனி யாராவது தன்னுடைய வீட்டிலிருந்து அல்லது அவனுடைய கிணற்றிலிருந்து தண்ணீர் வெளியே போகக்கண்டால் தன்னுடைய முதல் போய்விடும், கொஞ்சமாத்திரம் தரிப்படும். இனி யாராவது பயிர்களுக்குத் தண்ணீர் மொண்டு சும்மாயூற்றக் கண்டால் தனக்குப்

பிரயோஜனமும், நஷ்டமும் செய்யாததில் தன் முதல்களை சிலவு செய்கிறதாயிருக்கும். இனி யாராவது கிணற்றில் தண்ணீர் மொண்டு மனிதர்களுக்கு கொடுக்க, அல்லது அவர்களுக்கு புகட்டக் கண்டால் ரொம்ப வனுப்பமான விதமாக நிர்வாகஞ் செய்வான், பெரிய ஆலிமாகவுமிருப்பான். அவன் முதல்களைக் கொண்டு எத்தீம்களையும், மனிதர்களில் பலங்கெட்டவர்களையும் வளர்ப்பான். இனி யாராவது அதில் நின்றும் தண்ணீர்மொண்டு மாத்தின் மூடுகளில் ஊற்றக்கண்டால் தன்னுடைய முதல்களைக் கொண்டு எத்தீம்களை வளர்ப்பான். இனி யாராவது தண்ணீர் மொண்டு மனிதர்களுக்கு மாத்திரம் புகட்டக்கண்டால் ஹஜ்ஜின் பேரில் சில கௌமுகளுக்கு உதவிசெய்வான். இனி யாராவது தண்ணீர் மொண்டதில் ஒரு நஜீசு அல்லது ஒரு அருவருப்பான வஸ்து புறப்படக்கண்டால் தன்னுடைய நல்ல முதல்களை கெட்ட முதல்களைக் கொண்டு கலப்பான். இனி யாராவது தன்னுடைய தண்ணீர்பட்டை அற்றுப்போகக் கண்டால் தனக்கு அறியப்பட்ட மனிதர்களைவிட்டும் பற்றற்றுப்போகும். சிலகால் கிணற்றைக் காண்பது குபாடம், சதிமானம், வியாகுலம், துக்கத்தின்பேரி லறிவிக்கும். இனி யாராவது கிணற்றில் விழ அல்லது அதில் புகுதக்கண்டால் யூசுபு அலைஹிஸ்ஸலாமுக்கு நடந்ததுபோல் தன்னுடைய தீர்மானம், ஜெயம், சந்தோஷம், உதவி இதுபோல் கொற்றவை பளவிலாயிருக்கும்.

ஆற்றைக்கண்டால் அது பெரியதாகவும் சிறியதாகவுமிருக்கிற கதறின்படிக்கு மனிதனென்று சொல்லப்படும். இனி யாராவது ஆற்றில் புகுந்து அவனுக்குச்சேரும், அமளியும் தொடக்கண்டால் அவைதொட்ட கதறுக்கு அவனுக்கு துக்கமும், வியாரமும், பயமும் பிடிக்கும். அப்படிப்போல்தான் ஆறு சேருமிருந்தாலும். இனி யாராகிலும் ஆறு நல்ல தெளிவாயிருக்க அதில் குடிக்கக் கண்டால் கைறையும் டணமான ஹயாத்தையும் பெற்றுக் கொள்வான். இனி யாராகிலு மொருவன் ஆறு கலங்கியிருக்க அதில்நின்றும் குடிக்கக் கண்டால் குடித்த கதறின்படிக்கு அவனுக்குச் சகத்தப்பும் அந்த மனிதனில் நின்றும் வியாகூலமும், துக்கமும் பிடிக்கும். இனி யாராவது அதில் நின்றும் தண்ணீர் மொள்ளக் கண்டால் மேற்படி ஆறு பெரியதாகவும், சிறியதாகவு மிருக்கிற கதறின்படிக்கு ஒரு மனிதனில் நின்றும் சிலவைகளைப்

பெற்றுக்கொள்வான். இனி ஆற்றில் கல்லை பெறக்கண்டால் ஒரு மனிதனில் நின்றும் நல்லவைகளைப் பெற்றுக்கொள்வான். இனி யாராவது ஆற்றில் அல்லது கடலில் ஒரு அமளியையும் ஒரு தடுமையையும் தனக்கொரு வருத்தத்தையும் காணுமல் குளிக்கக்கண்டால் அல்லது தண்ணீரிலாவது குளிக்கக்கண்டால் வியாரமும், துக்கமும், சலிப்பும் இவைகளெல்லாம் போய் சந்தோஷமும், சுகமுமுண்டாகும். கண்டவன் துக்கப்பட்டவனுக அல்லது ஒருஇக்கட்டில் அகப்பட்டவனுயிருந்தால் அல்லாஹுத் தஆலா அவனைவிட்டும் அதை நீக்கிவைப்பான். சுகத்தப்பானவனு யிருந்தால் அல்லாஹுத் தஆலா அவனை சுகமாக்கி வைப்பான். கடன்காரனுயிருந்தால் அல்லாஹுத் தஆலா அவனைத்தொட்டும் கடனை யிருத்திவைப்பான். பயங்கரத்துடையவனு யிருந்தால் அல்லாஹுத் தஆலா அவனை அச்சந்தீர்த்துவைப்பான். மறியலில் அகப்பட்டவனு யிருந்தால் அவனை அல்லாஹுத் தஆலா கலாஸாக்கி வைப்பான். இனி யாராவது அதை பொருபக்கத்தில் முறிக்கக் கண்டால் நீங்கிப்போகும். வியாரமும், துக்கமும் பயங்கரமுமா யிருக்கும். ஆனுல் அதில் சேரும் களிமண்ணும் தொடர்ச்சியாய் வரும். அலையுமுண்டா யிருக்கக்கண்டால் தான் சேர்ந்து உறவாடியிருக்கும் மனிதனை வேறொருவனளவில் முறிந்துப்போடுவான், அல்லது அவனுக்குப்பின் தரிப்படுவான்.

கடலைக் காண்கிறதாவது, வலுப்பமான இராஜாபேரி லறிவிக்கும். இனி கடலில் யாதொரு சேரும் அமளியான அலையுமில்லாமற் கண்டால் இராஜாங்கமாயிருக்கும். இனி யாராவது கடலில் சேரும் தளும்புதலுமில்லாமலிருக்கக் கடல் தண்ணீரில் நின்றும் குடிக்கக் கண்டால் அவன் குடித்தக் கதறுபடிக்கு இராஜாங்கத்தில் நின்றும் பெற்றுக் கொள்வான். அல்லது அவன் துன்யாவில் நின்றும் நல்ல நிர்வாகத்தைப் பெற்றுக் கொள்வான். இனி யாராவது கடல் கலக்கமாகவும், இருளாகவும், அமளியாகவு மிருக்கக்கண்டால் அவனுக்கு அச்சமும், துக்கமும், வியாகூலமும், வருத்தமும் அவன் கண்ட கதறின்படிக்குப்பிடிக்கும். இனி யாராவது கடல் தெளிவாயிருக்க அதில் தான் தாழ்ந்துப் போகக்கண்டால் இராஜாங்கத்தினுடைய கருமங்களில் மூழ்குவான். ஆனுல் அது கலங்கியிருந்தால் ஹலாக்காகிப்போடும். வருத்தம் அவனுக்குண்டாகும். இனி யாராவது கடல்மேல்நடக்கக்கண்டால்

இராஜாக்களுக்கு மேலாகவும் தன்பாவிலவர்களுக்கு மேலாகவுமாய்விடுவான். தன்னுடைய தலத்தைப் பேதகமாக்கப்படும். (வல்லாஹு அஃலம்.) கப்பல் தோணிபோல் கொற்றவைகளைக் காண்கிறது மிருந்த ஹால்களிலும் ஈடேற்றத்தின்பேரில்தானறிவிக்கும். சிலகால் இராஜாக்களளவில் சேருகிற ஸபபின்பேரிலும் அறிவிக்கும். இன்னுஞ் சிலகால் துக்கம் வியாரத்தின்பேரிலும் அறிவிக்கும். எங்கிலும் அப்படி வந்தாலும் அதை விட்டும் ஈடேற்றம்பெறுகிறது, மூடுகுதலாயிருக்கும். இனி யாராவது கடலில் கப்பலிருக்கக்கண்டால் அந்தக் கப்பல் பெரியதாகவும், சிறியதாகவும், விஸ்தீரணமாகவுமிருக்கிற கதறின்படிக்கு இராஜா, சுல்தான்களிடம் செல்வான். எங்கிலும் அந்த இராஜா, சுல்தானை விட்டும் ஈடேற்றம் ஆவான். இனி யாராவது கப்பலில் தண்ணீரிருக்க தானும் அதில் இருக்கக்கண்டால் அதாகிறது துக்கமும், வியாகூலமுமா யிருக்கும். அல்லது கலை அல்லது அவனை மறியலில் போடுகிறதுண்டாகிறதா யிருக்கும். என்றாலும் அந்த தங்கடங்களைவிட்டும் ஸலாமத்தாவான். இனி யாராவது கப்பலை விட்டும் வெளியே வரக்கண்டால் தீவிரமாக ஈடேற்றமுண்டாகும். இனி யாராவது கப்பலைக் கட்டாந்தரையிற் கண்டால் அது வியாரமும், துக்கமும், வருத்தமும் எங்கிலும் கப்பல்முன்னேக்கி வரக்கண்டால் வருத்தங்களை விட்டும் அவன் புறப்படுகிறது மூடுகுதலாயிருக்கும். இனி யாராவது மனிதனை முக்கிப்போடுகிற சிறு கேணிப்போல் கொற்றைதக் கண்டால் ஆற்றைக் கண்ட தகீபிர் போல்தான். ஆகிலும் நீண்ட ஹயாத்தும் சுபசோபனமாயிருக்கும், அந்தக்கேணி ஒருவனுக்கு சொந்தமா யிருந்தாலும் சரி, அல்லது பொதுவாயிருந்தாலும்சரி. இனி யாராவது தண்ணீர் தண்ணீராக சுழித்துச் சுழித்து தண்ணீரோடக்கண்டால் அது நல்ல ஹயாத்தாயிருக்கும். ஆனால் அது தன்னுடைய வீட்டுச் சுவரில் அல்லது தண்ணீர் கண்கள் ஒலிக்கிற பொறுத்தக்கேடான தலத்தில் ஒலிக்கும். கண்களைத்துப் பாாத்தாய் ஓடும். நல்ல தண்ணீராயிருந்தால் அப்படிக்காண்பது அந்தத் தலமுடையவர்களுக்கு வியாரமும், துக்கமும், சலிப்பும், பயங்காரமும், அழுகைபோல் கொற்றவையின் பேரில் தான் அறிவிக்கும். ஏனென்றால் தண்ணீர் அருவியாவது அதின் தண்ணீர் அதிகப் படுந்தோறெல்லாம் அந்தத் தல முடையவர்களுக்குப் பயங்காரமும்,

அழுகையும், தீர்மானமாகிறபட்டினும் முஸீபத்து வருப்பமாய் விடும். இனி யாராவது தண்ணீர் கலங்கி இருக்கக்கண்டால் மேற்சொன்ன கருமம் ரொம்பகெட்டியாகவும் கடிசாகவுமிருக்கும். இனி யாராவது அதில் நின்றும் தான் குடிக்கக்கண்டால் குடித்த கதறின்படிக்கு வியாரமும், துக்கமும் பிடிக்கும். இனி யாராவது கேணி தண்ணீரில் உளுவுச்செய்ய, அல்லது குளிக்கக்கண்டால் வியாரமும் துக்கம்போல்கொற்றவை நீங்கிப்போகும். கண்டவன் துக்கப்பட்டவனுயிருந்தால் அவனைவிட்டும் அல்லாஹுத் தஆலா துக்கத்தை நீக்கிப்போடுவான். பயந்தவனுயிருந்தால் பயத்தை விட்டும் அச்சந்தீர்வான். கடனாளியாயிருந்தால் அல்லாஹுத் தஆலா அவனுடைய கடனை விருத்திப் போடுவான். பாவத் துடையவனுயிருந்தால் அவனைவிட்டும் அல்லாஹுத் தஆலா தெண்ட குற்றமாக்கிப்போடுவான். சுகத் தப்பானவனுயிருந்தால் அல்லாஹுத் தஆலா அவனைச் சுகமாக்கிவைப்பான். இனி யாராவது தான் துப்புரவாயிருக்க அல்லது ஸபரின் பேரில் அல்லது தலங்களில் தன்னுடனிருக்கும் பாத்திரங்களில் தண்ணீரிருக்கக்கண்டால் அந்தத் தண்ணீர்கள் அவன் தன்னுடைய வயதாயிருக்கும். அதடங்கலையும் குடித்துப் போட்டானேயானால் தன்னுடைய வயதடங்கலும் தீர்ந்து போயிற்று. அதில் கொஞ்சாமாகிலும் பாக்கியாயிருந்தால் பாக்கியிருந்த கதறுக்குத் தன்னுடைய வயதும் பாக்கியாயிருக்கும். இனி யாராவது பலகாரத்தைக்கண்டால் பாத்திரங்களில் தண்ணீரிருந்ததைச் சொல்லப் பட்டபடிக்குத் தானே இதின் தஃபீரும். இனி யாராவது மதுரமான தெளிவான தண்ணீரை அதன் கதறுதான இவ்வளவென்று தானறியாமலும் அது துப்புறவென்கிறதின் பேரிலல்லது ஸபரின் பேரில் அல்லது அது அறியப்படாத தலத்திலில்லாமல் குடிக்கக்கண்டால் அவன் நல்லஹயாத்தையும் தெளிவான ஜீவனத்தையும் பெற்றுக் கொள்வான். ஆனால் தண்ணீர் மதுரமில்லாமலிருக்கக்கண்டால் அவனுடைய ஹயாத்தும், ஜீவனமும் அப்படிதானிருக்கும். இனி அது கலங்கியிருந்தால் அது கலங்கியிருந்த கதறின்படிக்கு அவனுக்குச் சுகத்தப்பு பிடிக்கும். இனி யாராவது பளிங்கு வந்திரம் போல் கொற்றதில் தண்ணீரைக்கண்டால் அதை குடிக்கவில்லையானால் அந்தப் பாத்திரம் பெண்சாதியையும், பாத்திரத்திலிருந்த தண்ணீர் பிள்ளையுமாம். இனி தண்ணீரைத்தான் பயிர் பச்சைக்கு

இறைக்கக்கண்டால் தன் பெண்சாதியைபூர்த்தியாய் ஜிமாவுசெய்வான். கனிமரங்கள் காய் காய்த்திருக்கக்கண்டால், அல்லது இலைகளிருடையதாக யிருக்கக்கண்டால் தன் பெண்சாதியில் நின்றும் ஒரு பிள்ளைபிறக்கப்படும். இனி வேறேயாராவது பயிர் பச்சைக்குத் தண்ணீரிறைக்கக்கண்டால் அதில் கைறில்லை. இனி எண்ணெய், டால், பன்னீர் போல்கொற்ற உலூவுக்கும் குளிக்கிறதற்கும் ஆகாத நீராழும் போல்கொத்றதில் தான் உலூவுச்செய்ய அல்லது குளிக்கக் கண்டால் துன்யாவுடைய கருமத்தில் நின்றும் தீனுடைய கருமத்தில் நின்றும் அப்போது தானிருக்கும் காரியம் சிரப்பமாகாது. அப்படிப்போல்தான் தண்ணீரைக்கொண்டுதான் உலூவுச்செய்தது சிரப்பமாகாமலிருக்கக்கண்டாலும் தன்னுடைய கருமம் சிரப்பமாகாது, என்கிலும் அதைவிட இது லேசுதான் அப்படிப் போல்தான் தன் தொழுகை சிரப்பமாகாமற்கண்டாலும், இனி அவனுடைய உலூவும் அல்லது குழியும் சிரப்பமாகக் கண்டால் பாவதோஷம் வருத்தம் போல் கொற்றவைகளை விட்டும் கலாஸாவான்.

களிமண்ணையும், சேறையுங்கண்டால் அது கனாவின் தொட்ட கதறின்படிக்குத் துக்கமும், வியாகூலமுமுண்டாகும். அப்படி போல் தான் குறித்தத் தண்ணீரைத்தான் பரிமாறக்கண்டாலும், சல்தான் போல் கொற்றவைகளில் நின்றும் இவனுக்கு வியாரமும், துக்கமுமுண்டாகும். சிலகால் நிடுக்கமும் சகத்தப்புமுண்டாகும். தண்ணீர் ரொம்பவும் சூடாகக்கண்டால் துக்கமும், வியாகூலமும் கடிசாயிருக்கும்.

சுடுசெங்கல்லை சுடப்படுகிற கால்வாயிலிருந்து எடுக்கக்கண்டால் சேகரமாக்கப்பட்ட முதல்களைப் பெற்றுக்கொள்வான். இனி ஒரு செங்கல்லை நீக்கப்படக்கண்டால் அந்தவிடத்தில் ஒரு ஆண் பிள்ளையாவது இழக்கப்படும். (வல்லாஹு அஃலம்.)

வெந்நீர்ப்புறை எவ்வளவு சூடாயிருந்ததோ அந்த கதறின் படிக்குப் பெண்பிள்ளைபிறந்தால் வியாகூலமுந் துக்கமுமுண்டாகும். அந்த வெந்நீர்ப்புறையில் தரிப்பட்ட கதறின்படிக்கு ஜல்தியாய் அவைகளெல்லாம் நீங்கிப்போகும். இனி யாராவது வெந்நீர் புறையில்தான் மூத்திரம்பெய்யக்கண்டால் அல்லது சன்னும்பைக்

கொண்டு முடிகளைக்கண்டால் அப்போது வியாகூலம் துக்கப்பட்டவனுமிருந்தால் அல்லது சுகத்தப்பானவனுமிருந்தால் அவையெல்லாம் அவனைவிட்டும் நீங்கிவிடும். அப்படியில்லாமலிருக்கும்போது கண்டால் கெடுதியுண்டாகும்.

ஒரு மனுமில் ஒரு வஸ்து நல்லதில் அறிவிக்கிறதையும், ஒரு வஸ்து கெட்டதின் பேரிலறிவிக்கிறதையுங் கண்டால் அந்த இரண்டிலும் பலமானதைக் கொண்டுதான் தஃபீர் சொல்லப்படும். பலமில்லாததை விடப்படும். எப்படியெனில் வெண்ணீர்ப்புதையைக் கண்டால் வியாரமும் துக்கத்தின் பேரில் தானறிவிக்கும். சுண்ணாம்பைக்கண்டால் அந்த இரண்டையும் போக்கிவிக்கிறதின் பேரிலறிவிக்கும். வெண்ணீர் புதையைக்காண ரொம்பச் சூடானதால் வியாரமும் துக்கமும் போகுமென்றுதான் தஃபீர் சொல்லப்படும்.

திருவை ஒருவனுக்கிருந்து அதில் தான் மாவுதிரிக்கக்கண்டால் கைறை பெற்றுக்கொள்வான், அல்லது தான்வருத்தப்பட்டுறிஸ்கை பெற்றுக்கொள்வான், அல்லது இன்னொருவனுடைய தெண்டிப்பினால் றிஸ்கை பெற்றுக்கொள்வான். சிலகால் படையின்பேரிலறிவிக்கும், அது கருமம் திருவையை காணும்போதுண்டாயிருந்தால் படையின் பேரிலறிவிக்கும். அறிந்துகொள்ள நல்ல காற்றாகவும், வெளிச்சமாகவும் அடிக்கக்கண்டால் நல்லமாராயமும் பறக்கத்துமுண்டாகும். இனி காற்றுச் சுழியாகவும் இருளாகவும் அடிக்கக்கண்டால் வியாரமும் துக்கமுமுண்டாகும். (வல்லாஹு அஃலம்.)

வானம், பொழுது, பிறை, நக்ஷத்திரங்கள், கியாமத்துநாள், சொர்க்கம் நரகம், முதலியவைகளைக் காண்பதின் தஃபீர்.

ஒருவன் தான் வானத்தில் ஏற அல்லது புகுதக்கண்டால் அத்கருமத்தைக்கொண்டு எல்லோரும் இவனுக்குக் ஷாஹிதுசொல்லுகிறதையும், அல்லாஹுத் தஆலாவின் கருமத்தைக் கொண்டு

ஜெயம் பெறுகிறதையும், ஸிறாத்துல் முஸ்தகீம் பாலம் கடக்கிறதையும், துன்யாவில் அநேக சிறப்பும் பெற்றுக்கொள்வான். இனி எருமல் அன்னை வானத்தில் கண்டால் சிலகாலைக்கு துன்யாவில் சிறப்பாயிருக்கிறதின் பேரி லறிவிக்கும்.

பொழுதைக்கண்டால் இராஜாங்கத்தின் பேரிலறிவிக்கும். சில கால் தாய்தகப்பன் மார்களில் ஒருவர் பேரிலறிவிக்கும். இனி ஒருவன் பொழுதுக்குச்சுடரிருக்க அதைப்பிடித்து உடையதாக்கிக் கொள்ளக்கண்டால் அது எவ்வளவு பிரகாசமிருக்கக்கண்டானோ அவ்வளவு கதறுக்கு வலுப்பமாகிய சுல்தான்தனத்தையும் இராஜாக்களைப்பற்றிய வாழ்வும் விஸ்தீரணத்தையும் பெற்றுக்கொள்வான். இனி மேகம்போல் கொற்றலை பொழுதை மறைத்துக்கொள்ளக் கண்டால் இராஜாவுக்கு அல்லது தாய் தகப்பன்களிலொருவருக்கு கலை அல்லது துக்கம்பிடிக்கும். இனி பொழுதில் கிராணம் பிடிக்க பேதமிருக்க குறைதலிருக்கக்கண்டால் இராஜாவில், அல்லது அவரைச்சேர்ந்த மண்டு மனையில் குறைத்தல் உண்டாகும். ஆனால் இராஜா மண்டு மனைகளின்பேரி லறிவிக்கும். இனி பொழுதைக் கண்டவரும் சண்டையாகக்கண்டால் இராஜாவுடன், அல்லது தாய் தந்தையரில் ஒருவருடன் சண்டையாகும். இனி தன் வீட்டில்மாத்திரம் பொழுது உதயமாகக்கண்டால் கலியாணஞ் செய்யாதவனாயிருந்தால் கலியாணஞ்செய்வான், கலியாணஞ்செய் தவனாயிருந்தால் இராஜாக்களின் திசையால் விஸ்தீரணத்தையும் சுல்தான்தனத்தையும் பெற்றுக் கொள்வான்.

ஹிக்காயத்து.

ஸையிதுனா ஐஃபதுல்லாதிரு றலியல்லாஹு அன்ஹு இடம் ஒருவர் வந்து என் சரீரத்தில் பொழுது உதயமாகக்கண்டே னென்று சொல்லவும், வலுப்பமாகிய கருமத்தையும், சிறப்பையும் பெற்றுக் கொள்வாயென்று சொன்னார்கள். வேறொரு மனிதன் வந்து என்காலில் மாத்திரம் பொழுது உதயமாகக்கண்டேனென்று சொல்லவும், கோதும்பு, ஈத்தம்பழம், நவதானியங்கள் உன்காலில் மிதிபடும்படியாக விர்வாகத்தில் அநேகம் பெற்றுக்கொள்வாய், அதில் மிகபிரயோஜனம் பெறுவாயென்றும், அவைகளெல்லாம் இராஜாவின் திசையிலிருந்து உண்டாகுமென்றும் சொன்னார்கள்.

பிறையைக்கண்டதின் தஃபீராகிறது இராஜாவின் மந்திரியென்றும் சிலகால் பெண்சாதியென்றும், அல்லது அழகான பிள்ளையென்றுஞ் சொல்லப்படும். ஆனதால் ஒருவன் பிறையை யுடையதாக்கிக் கொள்ளக் கண்டால் மனிதர்தனத்தை யுடையதாக்கிக்கொள்வான். இனி பிரையில் கிராணம் பிடிக்க, அல்லது சிவப்புண்டாயிருக்க, அல்லது இருளுண்டாயிருக்கக் கண்டால் மந்திரியில்அல்லது பெண்சாதியில், அல்லது பிள்ளையில்குறைதலும் பேதகமுமுண்டாகும். இனிபிறை தன்மடியிலிருக்க அல்லதுகையில் சுமக்கக்கண்டால் பிரயோஜனமுண்டாகும், பிள்ளையைப்பெறுவான். இனி ஒருவன் தன்வீட்டில், அல்லதுவிரிப்பில் பிறை யிருக்கக்கண்டால் அந்த பிரையின் அழகுடைய கதறின்படிக்குள்ள ஷர்த்திலுள்ள பெண்ணாயிருக்கும். ஆனால் கண்டது பெண்பிள்ளையாயிருந்தால் அழகானமாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்படுவாள். இனி ஒருவன் இளம்பிறையை மாசம் தவர்க்கமல்லாததில் உதையமாகக்கண்டால் அவனை முன்னோக்கிவரும் இராஜா அல்லது பிள்ளை, அல்லது மறைந்திருந்தவன் முன்னோக்குகிறது அல்லது புதிதாகிய கருமம் வருகிறது இவைகளின் பேரில் தரிப்படும்.

நக்ஷத்திரங்களைக் காண்பதின் தஃபீராகிறது மனிதர்களில் அஷ்ராபென்ற தஃபீர் சொல்லப்படும். ஆனால் நக்ஷத்திரத்தை சரியாக அல்லது பேதமாகக்கண்டால் அந்த ஊரில் பெரிய மனிதனில் கண்டபடியுண்டாகும். இனி மிற்ரீகைக்கண்டால் இராஜாவின்படைக்கு அதிகாரியின்பேரி லறிவிக்கும். இனி ஜொஹலைக் கண்டால் வேதனையுடையவ னென்றும் சொல்லப்படும். இனி முஷ்தரியைக் கண்டால் முதல்களைத் தங்கரிக்கிறவனென்றும் இராஜாவின் கௌமூகளை பரிசோதிக்கிறவனென்றும் சொல்லப்படும், சிலகால் வலுப்பமாகிய ஆலிமாயிருக்குமென்றுஞ் சொல்லப்படும். இனி ஜொஹறவைக்கண்டால் இராஜாவின் பெண்சாதியின் பேரிலறிவிக்கும். இனி அத்தாரிதைக்கண்டால் இராஜாவின்கும்மந்தா வென்றும் சொல்லப்படும். இனி யாராவது நட்சத்திரங்களை அல்லது அவைகளில் நின்றும் சிலவற்றை யுடையதாக்கிக்கொள்ளக் கண்டால் மேற்சொன்ன விவரத்தின்படிக்கு மனிதர்களில் நின்றும் பெரியவர்களையும் தாழ்ந்தவர்களையும் அந்தந்த நக்ஷத்திரத்தில் நின்றும் உடையதாக்கிக்கொண்ட கதறின்படிக்கு உடையதாக்கிக் கொள்வான். இனி நக்ஷத்திரங்களைப் பேணுகிறதாகக்கண்டால்

மனிதர்களின் கருமத்திற்கு இவன் தலைமையாவான். இனி நக்ஷத்திரத்தை ஒருவன் கண்டால் ஒரு மந்திரியில் நின்றும், அல்லது மனிதர்களில் அஷ்ராபுகளில் நின்றும், சிறப்பைப்பெற்றுக்கொள்வான். சிலகால் கனவும் பொருத்தக்கேட்டிலறிவிக்கும். ஏனென்றால் பிறை சிலகால் குறி சொல்லுகிறவன் பேரிலுமறிவிக்கும். இனி யொருவன் நக்ஷத்திரமடங்கலும் ஒரு விடத்தில் கூடியிருக்கக் கண்டால் மனிதர்களில்அஷ்ராபுகளில் கருமங்களில் இவன் முயற்சிசெய்கிறானென்கிறதின் பேரிலறிவிக்கும். இனி நக்ஷத்திரம் பூமியில் விழக்கண்டால் விழுந்தவிடத்தில் அதாபு இறங்குகிறதின் பேரிலறிவிக்கும். இனி நக்ஷத்திரத்தைக்கையால் எடுக்கக்கண்டால் சிறப்பாகிய பிள்ளை இவனுக்குப் பிறக்கும். இனி வானத்தில்நின்றும் வெள்ளி எரிந்துவிழக்கண்டால் சீமானாயிருந்தால் பகீறாவான், பகீறாயிருந்தால் ஷஹீதாவான். இனி ஒருவன் நக்ஷத்திரம் புறப் காட்டிப் போகக்கண்டால் காடாகிறதலங்களில் உற்பத்தியாகும் நக்ஷத்திரமாகும். இனி தன்னைக்கொண்டு வானம்சுற்றும்படியாய்க் கண்டால் பயணம் போவான்.

ஹிக்காயத்து.

ஸையிதுனா முஹம்மதிப்னு ஸீரீன் றஹிமஹுல்லாஹு ஒஜீ பணித்துக் கொண்டிருக்கும்போது ஒரு பெண்பிள்ளை வந்து நான் ஒரு கனவும் கண்டேனென்று சொல்லவும், அதைச்சொல்லென்று சொன்னார்கள். தாங்கள் பசியாறி தீர்ந்தபிறகு சொல்லுகிறேன் என்று சொன்னாள். பசியாறி தீரவும் அதைசொல்லென்று சொன்னார்கள். பிறை ஸுறையா வென்ற நக்ஷத்திரத்தில் புகுதக்கண்டேன். எனக்குப் புறமே ஒருவர் நின்று ஏ பெண்பிள்ளையே! முஹம்மதிப்னுஸீரீன் றஹிமஹுல்லாஹிடம் போய் சொல்லென்று சொன்னாரென்று பெண்பிள்ளை சொல்லவும் முஹம்மதிப்னு ஸீரீன் றஹிமஹுல்லாஹு தங்கள் கையைப்பிடித்துக் கொண்டு எப்படிக் கண்டாய் நன்றாய்ச் சொல்லென்று சொன்னார்கள். மறுதரம் அந்த பெண்பிள்ளை சொல்லிக்காட்டினாள். அப்போது முஹம்மதிப்னு ஸீரீன் றஹிமஹுல்லாஹு முகமெல்லாம் மஞ்சனித்து தங்கள் வயற்றைப் பிடித்துக் கொண்டெழுந்தார்கள். அவர்களை யவர்கள் உடற்பிறந்தான் உமக்கென்ன முகமெல்லாம் மஞ்சனித்திருக்கிறதே யென்று கேட்கவும், அவர்கள் சொன்னார்கள், எப்படி மஞ்சனித்

காமலிருக்கும். இந்தப் பெண்பிள்ளை ஏழு நாளைக்குப் பிறகு என்னை கபுறில் அடக்கப்படுமென்று சொல்லுகிறாளே என்றார்கள். அந்தப்படிக்கே ஏழாம்நாள் அவர்களை அடக்கப்பட்டது. இன்னுஞ் சொல்லப் பட்டிருக்கிறது, ஸையிதுனா ஜஃபருஸ்ஸாதிகு றலியல்லாஹு அன்ஹு இடம் ஒரு மனிதன்வந்து பிறையை நான் கழுத்தைக் கட்டினவனாகக் கண்டேனென்று சொல்லவும், கலியாணஞ் செய்யாதவனல்லவா வென்று கேட்டார்கள். ஜெந்தா னென்று சொன்னார். அப்போதவர்கள் சொன்னார்கள், அழகான ஒரு பெண்ணை உனக்கு கலியாணஞ் செய்யப்படுமென்று சொன்னார்கள். அவர்போய் வெகுநாளைக்குப் பிறகுவந்து மதீனத்திலுள்ள மிகவுமழகான பெண்ணைக் கலியாணஞ் செய்தேனென்று சொல்லி, என் பெண்ஜாதி மனாம் கண்டதில் நான் பிறையை சுமக்கிறதுபோ லிருக்கக்கண்டதாகச் சொன்னான். அதன் தஃபீர் என்னவென்று கேட்கவும், இப்போதவள் ஹமலாயிருக்கிறாள் மிகவும் அழகான பிள்ளைபெறுவா ளென்று சொன்னார்கள். உடனே அந்த மனிதன் நாயகமே! அல்லாவின் பேரில் சத்தியமாக அவள் ஹமலாயிருக்கிறாளென்று சொன்னார். அவர்கள் சொன்ன படிக்குப் பிள்ளையும் பிறந்தது.

ஸையிதுனா ஷாபியீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாயார் அவர்களை ஹமலாயிருக்கும்போது முஷ்தரீயென்ற நக்ஷத்திரங்கள் முன் துவாரத்திலிருந்து புறப்பட்டு மிஸ்றில்போயிறங்கி சிறிப்பாய்ந்து துண்டு துண்டாயெங்கும் பறந்ததாகக்கண்டு தஃபீர் கேட்டதில், ஒருவர் பிறந்து அவருடைய இல்மும், மத்ஹபும், எங்கும் பறக்கும், மேன்மையான மகாமுடையவரா யிருப்பார் என்று சொன்னபடிக்கு ஷாபியீ இமாம் றலியல்லாஹு அன்ஹுவின் இல்மும், மத்ஹபும் பட்டணங்களையும் சித்தார்களையும் அடைய வளர்ந்துவிட்டது. அவர்கள் மகாமும் உயர்த்தியாய் விட்டது.

யொமத்து நாளாய் விட்டதுபோல் மனாக்கண்டால் அதைக் கண்டவிடத்தில் நீதத்தை விரிவாக்கப்படும். இனி அந்த தலத்துடையவர்கள் அநியாயக்காரரா யிருந்தால் அல்லாஹுத் தஆலா அத்தலத் துடையவர்களை வேதனைசெய்வான். ஆனால்

அந்தத் தலத்துடையவர்கள் அநியாயஞ் செய்யப்பட்டவர்களா யிருந்தால் உதவிசெய்யப்படும். இனி யொருவன் கியாமநாளில் அல்லாஹுத் தஆலாவின் சமூகம் தரிபட்டிருக்குமாப் போலே கண்டால் மிகவும் கடினமான கருமமாகவும், மனாமில் மிகவும் சரியான மனாமாகவு மிருக்கும்.

சொர்க்கத்தில் புகுதக்கண்டால் அந்தப்படி சொர்க்கத்தில் புகுதுவான். இந்த மனாமானது தான்செய்த ஸாலிஹான அமலுக்கு நல்லமாராயம் சொல்லுகிறதா யிருக்கும். இனி சொர்க்கத்தில் பழவர்க்கத்தில் நின்றும் தான் தின்னக்கண்டாலும், அல்லது பிறருக்கு அதை கொடுக்கக்கண்டாலும் நலமும், நன்றியும் அவைகளுக்கு நலமான பேச்சும், தின்றகதறின்படிக்கு உண்டாகும். இனி சொர்க்கத்தின் கனி கிடைத்து யாதொன்றையும் தின்னாம லிருக்கக் கண்டாலும், அல்லது அது கிடைத்து அதைத்தின்னச் சக்தி பெறவில்லையானாலும், தீனில் கைறுவந்து சேரும். அதைக் கொண்டு பிரயோஜனம் பெறமாட்டான். இன்னுஞ் சிலகால் அது பிரயோஜனஞ் செய்யாத இல்மின்பேரி லறிவிக்கும் இனி சொர்க்கத்தின் ஆறு, அருவிபோற் கொற்றவைகளில் நின்றும் குடிக்கக் கண்டாலும, அல்லது அதன் பிடவைகளில் நின்றும் அணியக் கண்டாலும், ஆகிறத்திலும், துன்யாவிலும், நன்றியில் நின்றும் தக்வாவில்நின்றும் தன்மே லெண்ணத்தைப் பெற்றுக் கொள்வான். இனி சொர்க்கத்தின் பூங்காவனங்களையும் ஆறு அருவிகளையும் ஹூருல்ஹீன்களையும் பெற்றுக்கொள்ளக் கண்டால் துன்யாவிலும், ஆகிறத்திலும், தக்வாவையும், நன்றியையும் பெற்றுக் கொள்வான். இன்னும் துன்யாவில் நிஃமத்தையும் தான்கண்ட கதறின்படிக்குப் பெற்றுக்கொள்வான்.

நரகத்தில் புகுதக்கண்டால் பெரும் பாவத்தில் புகுவான். சொர்க்கத்தைக் கண்டதின் தஃபீருக்கு மாற்றத்தின்பேரி லறிவிக்கும். இன்னும் கண்டவன் கெட்டுப்போகிறதின் பேரிலறிவிக்கும். ஆனதால் கண்டவன் தௌபாவைக்கொண்டும் நப்ஸூடன் பிணையில் செய்கிறதை கொண்டும், கைறு செய்கிறதுகொண்டும் தீவிரமாக்கிக்கொள்ளவும். ஆனால் நரகத்தில்நின்றும் யாதொன்றும் கண்டவனை தொடவில்லையானால் கண்டதின் கதறின்படிக்குத் துன்யாவில் துக்கங்களாயிருக்கும்

நன்பாகின் நெருப்பைக்கண்டால் அநேக விதமாக தஃபீர் சொல்லப்படும். இனி ஒருவன் பஞ்சமான பூமியில், அல்லது ஒரு தலத்தில், அல்லது ஒருவீதியில், அல்லது ஒரு வீட்டில் நெருப்பு கொழுந்துவிட்டெரிந்து கொண்டும் இரையுஞ்சப்தம் உண்டாயிருக்க அதன் பிட்டே வந்ததையெல்லாம் தின்னக்கண்டால் அதைக்கண்ட கதறின்படிக்கு அந்தத் தலத்தில் வியாயமுண்டாகும். ஆனால் அது பஞ்சமான பூமியாயில்லாவிடில் வபாபோல் கொற்றதும். அல்லது ஊத்ரிபோல் கொற்றதும், அல்லது மௌத்து அந்தத் தலத்திலுண்டாகும். எவ்விதும் அந்த நெருப்புக்கு எறியுதலும் இரைபுதலும் மில்லாமல் அதில் சிலதைசிலது தின்னவும் சிலதை தின்னுமலிருக்கவுங்கண்டால் அந்த தலத்தில் நோய்களும் முஸீபத்துகளுமுண்டாகும். இனி நெருப்பு வானத்திலிருந்து இறங்கக் கண்டால் பெருங்கடிசாயெ முஸீபத்தாயிருக்கும். ஆனால் அது பாதொன்றையுந் தின்னக்காணவில்லையானால் நஷ்டமன்றி வாயினால் பேச்சின்போரால் சண்டையுண்டாகும். இனி அதற்கு புகையுண்டாயிருந்தால் மேற்சொன்னவைகளில் மிகவும் இலேசாயுண்டாகும். இனி ஒரு தலத்திலிருந்து வானத்திற்கு ஏறக்கண்டால் அந்த தலத்துடையவர்கள் அல்லாஹுத் தஆலாவின் பேரில் பெருமை சொல்லுகிறது கொண்டும் பாவத்தைக்கொண்டும் அல்லாஹுத் தஆலாவுடன் போர்ச்செய்கிறார்கள். இனி தான் தான் அல்லது இன்னொருவன் தான்நெருப்பு நன்றுபெறுகிறதற்காக நன்றுப் மூட்டக்கண்டால் தான் பிரயோஜனம் பெறுமான ஒரு கருமத்தையுண்டாக்கி அதினால் தன்னுடைய மிடிமையைப் போக்கிவிடுவான். இனி கறியை நெருப்பில் சுடக்கண்டால் இவனை மனிதர் புறம் பேசுகிறதைவிட்டும் நீங்கிக்கொள்வான். இனி நெருப்பைக்கொண்டு செம்புசட்டிப் போல் கொற்றதில் ஒஜ்பனம் சமைக்கக்கண்டால் ஒரு வீட்டில் நின்றும் அவனுக்குப் பிரயோஜன முண்டாகும். கருமஞ்சேருமேயானால் அதில் ஒஜ்பனமில்லாதிருந்தால் பேச்சைக்கொண்டு வீட்டை செவ்வையாக்கி வைக்கிறதை ஆசையாக்கி வைக்கும், அல்லது பொருத்தக்கேடான கருமத்தின்பேரில் அவனை சமத்தாட்டிவைக்கும். இனி யாராகிலு மொருவன் நெருப்பு தன் புடவையை அல்லது தன்னுடைய உதப்புகளில் சிலதுகளைக் கடிக்கக்கண்டால் பின்னிட்டு சொல்லப்படும். விவரப்படிக்கு ஒருபை அல்லது புடவையை என்னத்தனகில் சேர்க்கப்படுகிறதோ அந்தப்படிக்கு வந்ததில் அவனுக்கு முஸீபத்து

பிடிக்கும். இனி அவனுக்குத் தொட்ட நெருப்புக்கங்கும் சுடரு முண்டாயிருக்கக்கண்டால் அது அவனுக்குச் சுல்தானுடைய கையின் பேரில் அவனுக்குத்தொடுர் தங்கடமாயிருக்கும். ஆனால் சுடர்மாத்திரம் இல்லாமற்கண்டால் கஸல்களாயிருக்கும். இனி நெருப்பைச் சுடரில்லாமல் தின்னக்கண்டால் அவன் எத்தீம்பிள்ளை யுடைய முதல்களைத் தின்னுகிறவனாயிருக்கும். மேற்படி எத்தீ முடைய முதல்களில் பேச்சும், வருத்தமுமுண்டாகும். இனி நெருப்பின் சுழுதலை ஒருவன் தொடக்கண்டால் அவன் சிநேகிதர் களின் நாவுகளில் அகப்பட்டு அவனையவர்கள் புறம்பேசுவார்கள் இனி நெருப்பைக்கண்டு சுடகடுகடுப்பில்லை வருகிறது அவன் கண்ட மனாமில் கெட்டப்பேச்சு அவனைத் தொட்டுமுண்டாகும். இனி நெருப்புப் பொறி அவன் பேரில் தெறித்துவிழக்கண்டால் கெட்டபொருத்தக் கேடான பேச்சுண்டாகும். ஆனாலது அதிகமாய் அவன்பேரிலு திர்ந்தால் அதாபு பிடிக்கும். இனி யொருவன் தன்கையில் நெருப் பெறியக்கண்டால் அவனுக்குச் சுல்தானில் நின்றும் கெட்டதனம் பிடிக்கும். இனி ஒரு கடையில், அல்லது ஒரு ஷாப்புப்போல் கொத்ததில் நெருப்பு விஷயமாய்க்கண்டால் அதன் சரக்கு உள்ளொன்றும் புறமொன்றுமாக முனாபிகுத்தனமா யிருக்கும். எங்கிலும் அதன் விலை ஹறாமாயிருக்கும். இனி ஒருவீட்டில் விளக்கு நல்லதுலக்கமாய் எறியக்கண்டால் அந்த வீட்டையுடையவர்கள் ஹாலிணக்கமானதா யிருக்கும். இனி அது இலேசானதாயெறியக் கண்டால் அந்த வீட்டில் ஹாலப்படிப்போல் தான். இனி விளக்கு நூர்ந்துபோகக் கண்டால் அப்போது அந்த மனாம் மௌத்தின்பேரி லறிவிக்கும். கருமமுண்டா யிருக்கவில்லையானால் அவனுடைய ஹால்பேதகமாகி அவனுக்குப் பொருத்தக்கேடான கரும மவனுக்குப் பிடிக்கும். இனி மனிதர்களுக்கு வெளிச்சத்திற்காக அல்லது அதுகொண்டு வழிநடக்க நெருப்பு எறியக்கண்டால் அது மனிதர்கள் பிரயோஜனம் பெறும், இல்மும் ஹிக்மத்துமாயிருக்கும். இனி ஒருவன் சாம்பல் அள்ள அல்லது அதைச்சுமக்கக்கண்டால் இல்முகளில் நின்றும் வீணான கருமத்தைச் சேகரஞ் செய்வான். அதைக்கொண்டு மனிதர்களி லொருவரும் பிரயோஜனம் பெற மாட்டார்கள். இனியொருவன் நெருப்பை ஆபுதபாடாக்குகிறான். அது எறியாததாக இருக்கக்கண்டாலும் அதாகிறதுதான் பிரயோஜனம் பெறாத இல்மாயிருக்கும். (வல்லாஹு அஃலம்.)

குர்ஆனின் சூறத்தையோதக் காண்பதின் தஃபீர்.

ஒருவன் முதலாவதாகிய பாத்திஹா ஸூறத்தை யோதக் கண்டால் அல்லது அதில் சிலதை யோதக்கண்டால் பிரயோஜனமுள்ள துஆக்களை ஓதி சந்தோஷமுள்ள பிரயோஜனத்தைப் பெற்றுக்கொள்வான். ஒரு சொற்படி ஓதினவன் ஏழுபெண்களைக் கலியாணஞ் செய்வான். இன்னும் துஆ கபூல்செய்யப்பட்டவனாய் விடுவான். நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் துஆவுக்கு முன்னும் பின்னும் அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் என்றோதினது இதின் பேரிலறிவிக்கிறது.

பகறுவாகிய இரண்டாம் ஸூறத்தை அல்லது அதில் சிலதை ஓதக்கண்டால் அதில் ஹர்பாவது சரி, அல்லது இவன் பேரில் ஓதப்பட்டால் வாழ்நாள் நீளத்தையும், தீனில் இணக்கத்தையுங் கொடுக்கப்படும். சிலகால், அதையோதினவன் ஒரு தலத்தில் நின்றும் மறு தலத்தில் சபர்போவான். அவனுக்கதில் சிறப்பும் பேறு முண்டாகும். ஒரு சொற்படி காலியாயிருந்தால் சிலகாலம் மூடுருதலாய் விடும், இவன் ஆலிமாயிருந்தால் இவன் வாழ்நாள் நீளமாகவும் இவன் ஹால் அழகானதாகவுமிருக்கும்.

ஆலஇம்றான் என்கிற 3-ம் சூறத்தை அல்லது சிலதை யோதக் கண்டால் இவன் குடும்பத்தில் இவன்பேர் கெட்டவனு யிருப்பான். இவன் தளர்ந்தவயதில் இவனுக்கு ரிஸ்கு கொடுக்கப்படும். இவன் சபர் பிருதமானவனுயிருப்பான்.

நிஸா என்கிற 4-ம் ஸூறத்தை யோதக்கண்டாலவனுடன் அவன் வாழ்நாள் கடைசியில் அழகானபெண் பிள்ளையாயிருப்பாள். அவனுடன் துறவாயிருக்கமாட்டாள். இவன்மிகவும் றூஜ்ஜத்துள்ளவனுகவும், பேச்சுகள் மிகவும் கெட்டியாகவும் நாகரீகமுள்ளவனுகவு மிருப்பான்.

மாயிதா என்கிற 5-ம்ஸூறத்தை யோதக்கண்டால் ஓஜி பனக்கொடுக்கிறது கொண்டு கப்ஸா சங்கையாக்கப் பட்டவனு யிருப்பான். ஆகிலும் அவனுடன் வெறுத்திருக்கப்பட்ட மனிதர்களால் அவனுக்குப் பலாய் பிடிக்கும்.

அன்ஆம் என்ற 6-ம் ஸூரத்தை யோதக்கண்டால் நீள பேணுமிறதில் முகம்வைத்தவனாகவும், அழகான நிறமுள்ளவனா கவும் இருப்பான். இவனுக்குத் தன்யாவிலும் ஆகிரத்திலும் பேர் கொடுக்கப்பட்டவனா யிருப்பான்.

அஃராப் என்கிற 7-ம் ஸூரத்தை ஒருவனோதக்கண்டால் இல்மடங்களில் மின்றும் பேர் கொடுக்கப்படும். சிலகால் சபர்போன விடத்தில் மௌத்தாவான்.

அன்பால் என்கிற 8-ம் ஸூறத்தை ஒருவனோதக்கண்டால் சிறப்பும் ஜெயமுள்ளவனாகவும் அவன்தீனில் ஸலாமத்தானவனாகவு மிருப்பான்.

தௌபா என்கிற 9-ம் ஸூரத்தை ஒருவன் மனாமில் ஓதக் கண்டால் ஸாலிஹானவர்களை உவப்பான்.

யூனுஸ் என்கிற 10-ம் ஸூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் அல்லது அதில் சிலதை ஓதக்கண்டால் இவன்பொருளில் சிலதில் முஸீபத்துப் பிடிக்கும். ஒரு சொற்படி அதை யோதினவன் நன் மாராயம் கைதுகளை தங்கரிப்பு பண்ணினவனாயிருப்பான்.

ஹூத் என்கிற 11-ம் ஸூராவை ஒருவன் ஓதக்கண்டால் பகைவர்கள் மிருதமாவார்கள், சபர்போகிறதை தெரிந்துக் கொள்ளு கிறவனாயிருப்பான்:

யூசுபு என்கிற 12-ம் ஸூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் அவன் குடும்பத்தார் அவனுக்குப் பகையாயிருப்பார்கள். அவன் சபரில் அவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்.

றஃது என்கிற 13-ம் ஸூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் அவனுக்கு மிடுமையுண்டாகும். ஒருசொற்படி அவனுக்கு மௌத் தாமுடுகும்.

இபுறாஹீம் என்கிற 14-ம் ஸூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் தஸ்பீஹு செய்கிறவர்கள், தௌபாச் செய்கிறவர்கள் கூட்டத்தி லாயிருப்பான்.

ஹிஜ்ர் என்கிற 15-ம் ஸூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் அவன் குடும்பத்தில் பேணப்பட்டவனாயிருப்பான், இன்னும் மின்

கினா யிருப்பான். இனி இதை யோதுகிறவன் இராஜனாயிருந்தால் அவன்காலம் மூடுகிவிடும். அவன் காலியாயிருந்தால் அவன் நடப்பு அழகாய்விடும். அவன் கச்சைவடக் காரனாயிருந்தால் அவன் குடும்பத்தில் வரிசையானவனா யிருப்பான், அவன் சிறப்புடன் மௌத்தாவான்.

நஹல் என்கிற 16-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவன் றிஸ்கில் பேணப்பட்டவனாகவும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூட்டத்தில் தரிப்பட்டவனாகவு மிருப்பான்.

இஸ்ராயீல் என்கிற 17-ம் சூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் அவனில் சல்தான் தனமும் நடக்கும். சிலகால் சில மனிதர்கள் கபடத்தைவிட்டும் அச்சந் தீர்வான். இன்னுமிவன் பித்னாவை விட்டும் நீங்கினவனாய்ப் பித்னாவை பயப்படுவான்.

கஹ்பு என்கிற 18-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவன் வாழ்நாள் நீளமாகும். சில மனிதர்கள் புறத்தால் இவனுக்குப் பேறுமுண்டாகும்.

மற்யம் என்கிற 19- சூரத்தை ஓதக்கண்டால் மிட்டுமையுண்டாக்கி அல்லாஹுத் தஆலா இவன் மிட்டுமையை நீக்கிவிடுவான்.

தாஹா என்கிற 20-ம் சூரத்தை ஓதக்கண்டால் இரவில் எழுந்து தொழவும், ஞான கருமங்களை செய்யவும், நலவாகியவர்களுடன் உறவாடி இருப்பதுகளையும் உவப்பான்.

அன்பியா என்கிற 21-ம் சூரத்தை ஓதக்கண்டால் மனிதர்களில் அழகான எண்ணத்தை கொடுக்கப்படும்.

ஹஜ்ஜு என்கிற 22-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஹஜ்ஜு உமறுச் செய்வான். இவன் நோயாளியாயிருந்தால் மௌத்தாய்ப் போவான்

முஃமினூன் என்கிற 23-ம் சூரத்தை ஓதக்கண்டால் இரவில் மிருந்தநேரம் விழித்திருந்து இபாதத்து செய்யவும், அல்லாஹுத் தஆலா அளவில் சாலையப்பட்டு தஆ இரக்கிறதின் பேரிலும் உவர்தவனென் றறிவிக்கும். இன்னமவனுக்கு வந்த முஸீபத்தின் பேரிலும் பயப்படுவான்.

நூர் என்கிற 24-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஏவல், விலக்கச் செய்கிறவனாகவும், அல்லாஹுத் தஆலாவுக்கு உவப்புவைக்கிற வனாகவும், அல்லாஹுத் தஆலாவுக்காக கோபமாகிறவனாகவுமா யிருப்பான். இன்னுமவனுக்கு தன்பாவில் செரியுண்டாகும்.

புர்கான் என்கிற 25-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஹக்கான கருமத்தை உவந்து பாத்திலான கருமத்தைப்பொருத்தக் கெடுவான்.

ஷுஅரு என்கிற 26-ம் சூரத்தை ஓதக்கண்டால் அரிதாகிய வருத்தமுண்டாகும். ஒருவன்தலை வருத்தங்கொண்டேயொழிய பெற்றுக்கொள்ளமாட்டான். இன்னும் சபர் மிகுந்து போகிற வனாகவும், பேர்குறைந்தவனாகவு மிருப்பான்.

நமல் என்கிற 27-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஹக்கான கருமத்தையுவப்பான். பாத்திலானதை பொருத்தக் கெடுவான். அவன் கௌமுகளில் மேன்மைத் தனத்தையும், இல்மையும் பெற்றுக் கொள்வான்.

கஸஸ் என்கிற 28-ம் சூரத்தை ஓதக்கண்டால் காட்டில் அல்லது வீட்டில், அல்லது இவன் தொழுகிற இபுலாசில் அல்லாஹுத் தஆலா சில முஸீபத்துகளைக்கொண்டு சோதிப்பான்.

அன்கபூத் என்கிற 29-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவனை ஒருபோதும் முஸீபத்தைக்கொண்டு சோதிக்கிறதில்லையென்று நன்மாருயம் பெற்றுக் கொள்வான்.

ரூம் என்கிற 30-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவன் கல்வியில் முனுபிருத் தனமுண்டாகும். இதை யோதினவன் இராஜனு மிருந்தால் ஆலிமாகி விடுவான். காஜியாயிருந்தால், அல்லது கச்சைவடக்காரனு மிருந்தால் மிகுந்த பிரயோஜனங்களைப் பெறுவான்.

லுக்மான் என்கிற 31-ம் சூரத்தை ஓதக்கண்டால் எழுத்து வேலையும் ஹிக்மத்துகளையும் கொடுக்கப்படும்.

ஸஜ்தா என்கிற 32-ம் சூரத்தை ஓதக்கண்டால் தௌஹீது குவ்வத்தாகவும், எகீன் ஸலாமத்தாகவு மிருப்பான்.

அஹ்ஸாப் என்கிற 33-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவன் குடும்பத்தாரை புகழுகிறவனாகவும், வாள்நாள் ஷேமமானவனாகவும், அவன் கட்டாளிக்கு மிருந்த படஞ் செய்கிறவனாகவும் இருப்பான்.

ஸபா என்கிற 34-ம் சூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் சத்த வீரனாகவும், ஆயுதங்களை சமக்கிறவனாகவு மிருப்பான்.

பாதிர் என்கிற 35-ம் சூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலாவை காண்பான். அல்லாஹுத் தஆலாவுடைய ஒலிமார்களில் நின்றும் ஒரு ஒலியாயிருப்பான்.

யாஸீன் என்கிற 36-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவன் தீன் செல்வையானதா மிருப்பான்.

ஸாப்பாத் என்கிற 37-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஹலாலான நிர்வாகம் கொடுக்கப்படும். இரண்டு ஆண்குழந்தை கொடுக்கப்படும்.

ஸாத என்கிற 38-ம் சூரத்தை ஒருவன் ஓதக்கண்டால் காய்மக்காரனாகவும், பெண்பிள்ளைகளை உவப்புவைக்கிறவனாகவும் அவர்கள் நடத்தைகளை உவப்புவைக்கிறவனாகவு மிருப்பான்.

ஸுமர் என்கிற 39-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவன் பிள்ளையுடைய பிள்ளையை காண்கிறமட்டிலும் ஆயிசுள்ளவனாக மிருப்பான். சிலகால் சபர்போவான். தன் குடும்பத்தனவில் மீளமாட்டான்.

காபிர் என்கிற 40-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஈமான் ஸலாமத்தானவனா மிருப்பான்.

புஸ்ஸிலத் என்கிற 41-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா உத்திரவுகொண்டு ஷரீஅத்தைக்கொண்டு வருகிறவர்களுடைய நேர்வழிக்கு சபபாயிருப்பான்.

ஷூரா என்கிற 42-ம் சூரத்தை ஓதக்கண்டால் இல்மையும் அமலையும் பெற்றுக்கொள்வான்.

ஜுக்ருபு என்கிற 43-ம் சூரத்தை ஓதக்கண்டால் சிலகால் இவன் வருத்தமாயிருப்பான். அவன் ஹால் கெட்டுமையாகிவிடும். இவன் வாழ்நாள் கடைசியில் இவன் பேர் கெட்டுமையாகிவிடும்.

துகான் என்கிற 44-ம் சூரத்தை ஓதக்கண்டால் வம்பர்கள் அடைக்கெத்தியதைவிட்டும் அச்சம் தீர்வான். இன்னும் கபுரின் அதாபைவிட்டும் நரகத்தின் அதாபைவிட்டும் எதேன் லயிபா மிருக்கிறதைவிட்டும் அச்சம் தீர்வான்.

ஜாஸியா என்கிற 45-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஜாஹி நின்கள் கட்டத்தில் கின்னமாயிருப்பான்.

அஹ்காப் என்கிற 46-ம் சூர்த்தை ஓதக்கண்டால் அவன் தாய் தகப்பனை வேதனை செய்கிறவனா யிருப்பான். அவன் வாழ்நாள் கடைசில் அழகான தௌபாவைப் பெற்றுக்கொள்வான்.

முஹம்மது என்கிற 47-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவனிடத்தில் மலக்கல் மௌத்து அழகான சூரத்தில் வருவார்கள்.

பத்ஹு என்கிற 48-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவனை அல்லாஹுத் தஆலா உவப்பான்.

ஹுஜ்ராத் என்கிற 49-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத்த ஆலாவுடைய அப்துகளுடைய கல்புகளுக் கிடையில் மருருதலாக்கப்பட்டவனா யிருப்பான்.

காப் என்கிற 50-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவனில் இல்முண்டாகி இவன் ஊருடையவர்கள் இவனளவில் ஹாஜத் தாவார்கள். இன்னுமிவன் வாழ்நாள் கடைசியில் மூர்த்தினதைவிட அழகானவனாகவும், குவ்வத்தானவனாவே யிருப்பான்.

தாரியாத் என்கிற 51-ம் சூரத்தை ஓதக்கண்டால் தவசத் தானியங்களை நாடியமட்டும் பெற்றுக்கொள்வான். சிலகால் மத்ஹ புடையவர்க ளுடக்களுடன் சாப்தலானவனா யிருப்பான்.

தூர் என்கிற 52-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவன் தீனை அல்லாஹுத் தஆலா பொருந்திக் கொள்வான்.

நஜ்மி என்கிற 53-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவனுக்குப் பிள்ளைகள் கொடுக்கப்பட்டு அவைகளெல்லாம் அல்லாஹுத்தஆலா பொருத்தத்தளவில் மௌத்தாய்ப் போகும், இன்னும் இவன் இல்முடையவனாகவும் பேறுதனுடைய வனாகவும் இருப்பான்.

கமர் என்கிற 54-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவன் வஞ்சகத்தைவிட்டும் ஈடேற்றம் பெறுவான். அல்லாஹுத் தஆலாவின் உதவியினால் இவனை யாதொரு தக்கடஞ் செய்யாது.

றஹ்மான் என்கிற 55-ம் சூறத்தை ஓதக்கண்டால் துன்யாவில் நிஃமத்தையும், ஆகிறத்தில் றஹ்மத்தையும் பெற்றுக் கொள்வான்.

வாகிஆ என்கிற 56-ம் சூறத்தை ஓதக்கண்டால் கைதுகளை விதும் இபாதத்துகளைவிதும் மூர்தினவனுமிருப்பான்.

ஹதீது என்கிற 57-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவன் நடத்தைப் புகழப்பட்டதாகவும், தீன் இணக்கமானவனாகவு மிருப்பான்.

முஜாதிலா என்கிற 58-ம் சூறத்தை ஓதக்கண்டால் வழி கெட்டவர்களுடன் தர்க்கஞ் செய்து அவர்களை மிகைத்துக் கொள்வான்.

ஹஷ்று என்கிற 59-ம் சூறத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா அவனை பொருந்தினவனாய்க் கபுறைவிட்டும் எழுப்புவான். இன்னுமிவன் பகைவர்களை ஹலாக்காக்கிப் போடுவான்.

மும்தஹினா என்கிற 60-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவனுக்கு முஸீபத்துண்டாய் அதைவிட்டும் இவனை கார்க்கப்படும்.

ஸப்பு என்கிற 61-ம் சூறத்தை ஓதக்கண்டால் ஓதினவன் ஷஹீதாய் மௌத்தாவான்.

ஜும்ஆ என்கிற 62-ம் சூறத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா துன்யாவுடைய கைறையும் ஆகிறத்துடைய கைறையும் அவனுக்குக் கொடுப்பான்.

முனாபிகூன் என்கிற 63-ம் சூரத்தை ஓதக்கண்டால் முனாபிகுதனத்தை விட்டும் நீங்கிவிடுவான்.

தகாபுனி என்கிற 64-ம் சூரத்தை ஓதக்கண்டால் நேர்வழியின் பேரிலும், தீனின்பேரிலும், ஈமானின்பேரிலும் தரிப்பாடாயிருப்பான்.

தலாகு என்கிற 65-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவனுக்கும் அவன் பெண்சாதிக்கு மிடையில் பிணக்குண்டாகும், பிரித்தலுண்டாகும். ஆகிலும் அவன் மஹறை கொடுத்துவிடுவான்.

தஹ்ரீம் என்கிற 66-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஹறுமானதுகளை செய்கிறதை விட்டும் காக்கப்படும்.

மலிகு என்கிற 67-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவனுக்குத் துன்யாவின் கைறையும் ஆகிறத்தின் கைறையும் கொடுப்பான். இன்னுமிவன் வஸ்துக்களை யுடையதாக்கிறதிலும் கைறுத்துகளும் அதிகமாகும்.

கலம் என்கிற 68-ம் சூரத்தை ஓதக்கண்டால் உதவியும் ஜெயம் பெறுதலும் உண்டாகும். இன்னும் தீர்ப்புகள் செய்வான்.

ஹக்கா என்கிற 69-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவன் ஹக்கின் பேரில் தரிப்பாடாயிருப்பதுடன் இவன்பேரில் அடிகள் வெட்டுகளுண்டாகும்.

மஆரிஜ் என்கிற 70-ம் சூரத்தை ஓதக்கண்டால் அச்சந்தீர்வனாகவும், குவ்வத்துடையவனாகவும், உதவிசெய்யப்பட்டவனாகவுமிருப்பான்.

நூஹ் என்கிற 71-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஏவல்விலக்கல் செய்கிற கூட்டத்திலுள்ளவனா யிருப்பான்.

ஜின்னு என்கிற 72-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஜின்னுகளை விட்டும் பேணப்பட்டவனா யிருப்பான்.

முதம்மிலு என்கிற 73-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவன் கடத்தையைப் . புகழப்படும். இன்னும் பெருமையுடையவனாகவு மிருப்பான்.

முத்தஸ்ஸிறு என்கிற 74-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவன் நிஸ்கில் நின்றும் கெட்டுமையாய் அல்லாஹுத் தஆலா அந்த கெட்டுமையை நீக்கிவிடுவான்.

கியாமா என்கிற 75-ம் சூறத்தை ஓதக்கண்டால் சத்தியம் பண்ணுதலை தவிர்ந்து ஒருகாலமும் சத்தியம் பண்ணமாட்டான்.

தஹ்று என்கிற 76-ம் சூறத்தை ஓதக்கண்டால் சகாவத் தனமிலும் ஷுக்று செய்கிறதனமிலும் நல்லுதவி கட்டளைக் கொடுக்கப்படும்.

முர்சலாத் என்கிற 77-ம் சூறத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவன்பேரில் றிஸ்கை விஸ்தீரணமாக்கி விடுவான். இவன் பகைவர்களை இவனைவிட்டும் கார்க்கப்படும்.

நபா என்கிற 78-ம் சூறத்தை ஓதக்கண்டால் வியாரங்கள், துக்கங்கள் அடங்கலையும் இவன் கல்பைவிட்டும் நீக்கப்படும். இவன் கருமம் வலுப்பமாய்விடும். இவன் கீர்த்தி அழகாய்விடும்.

நாஸிஆத் என்கிற 79-ம் சூறத்தை ஓதக்கண்டால் மீளவும் இவன் கல்பைவிட்டும் துக்கவியாரங்களை நீக்கப்படும்.

அபஸ என்கிற 80-ம் சூறத்தை ஓதக்கண்டால் ஸதகா சகாத் பிருதமாய்க் கொடுப்பான்.

தக்வீர் என்கிற 81-ம் சூறத்தை ஓதக்கண்டால் மஷ்றிகு தேசத்தில் சபர் பிருதமாய்ப் போவான். அந்த சபரில் ஜயம்பெறுவான்.

இன்பிதார் என்கிற 82-ம் சூறத்தை ஓதக்கண்டால் அவனுக்கு சல்தான்கள் முடுகி இவனை சங்கிப்பார்கள்.

ததிபிபு என்கிற 83-ம் சூறத்தை ஓதக்கண்டால் வார்த்தைப் பாட்டை நிறைவேத்துதலும், நீதம் செய்கிறவனு மிருப்பான்.

இன்ஷிகாக் என்கிற 84-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவனுக்குப் பிச்சைகள் அதிகப்படும்.

புரூஜு என்கிற 85-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா அவன் துக்கங்களை நீக்கி, இல்மின் வகைகளைக்கொண்டு சங்கையாக்கி வைப்பான்.

தாரிகு என்கிற 86-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா அவனுக்கு ஸிக்ரு, தஸ்பீஹ் மிகுதமாகிறதை உவப்பாக்கி வைப்பான்.

அஃலா என்கிற 87-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவனுக்கு அவன் கருமங்கள் இலேசாய்விடும்.

காஷியா என்கிற 88-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவன் தகுதி உயர்த்தியாகி இவன் இல்மு தேசங்களில் பறந்துவிடும்.

பஜ்று என்கிற 89-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவனுக்குக் களரியும் அழகுமுண்டாம்.

பலத் என்கிற 90-ம் சூரத்தை ஓதக்கண்டால் ஒஜீபனங்கள் கொடுக்கிற தனவிலும் எத்தீம்களுக்கு சங்கையாக்கி வைக்கிற தனவிலும், ஏழைகளுக்கு உபகாரஞ் செய்கிறதனவிலும் நல்லுதவி கொடுக்கப்படும்.

ஷம்ஷு என்கிற 91-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா அவனுக்குக் கூர்மையாகிய பஹ்மையும் சகல வஸ்துவிலும் யோசனை கொடுக்கப்படும்.

லைல் என்கிற 92-ம் சூரத்தை ஓதக்கண்டால் அவன் ஐபு வெளியாகிறதை விட்டும் காக்கப்படும்.

ளுஹா என்கிற 93-ம் சூரத்தை ஓதக்கண்டால் எத்தீம்களையும், மிஸ்கீன்களையும் சங்கையாக்கி வைப்பான்.

இன்ஷிறாஹ் என்கிற 94-ம் சூரத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவன் கல்பை இஸ்லாமனவில் விரிவாக்கி கருமங்களடங்கலையும் இலேசாக்கி இவனை வியாரங்கள், துக்கங்களை விட்டும் நீக்கிவிடுவான்.

தீனி என்கிற 95-ம் சூறத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவன் ஹாஜத்துகளை தீவிரமாய் நிறைவேற்றி இவன் தின்கையும் இலேசாக்கிவிடுவான்.

அலக் என்கிற 96-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவன் வாழ்நாள் நீளமாகவும், இவன் சகுதி உயர்த்தியானவனாகவு மிருப்பான்.

கதறு என்கிற 97-ம் சூறத்தை ஓதக்கண்டால் கைருடையவனாகவும், அழகான ஹாருடையவனாகவும் இருப்பான்.

பையினது என்கிற 98-ம் சூறத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவன் கையின்பேரில் ஸாலிஹான பெயர்களை நேர்வழியாக்கி வைப்பான்.

ஸல்ஸலா என்கிற 99-ம் சூறத்தை ஓதக்கண்டால் இவனைக் கொண்டு காபிர்கள் ஹால்களை தடுமாறும்படி வைத்துவிடுவான்.

ஆதியாத் என்கிற 100-ம் சூறத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா அவனைப் பலவத்தமான குதிரைகளைக் கொண்டு பிரயோஜனம் பெறுதலைக் கொடுப்பான்.

காரிஅது என்கிற 101-ம் சூறத்தை ஓதக்கண்டால் அல்லாஹுத் தஆலா அவனை இபாதத்தைக் கொண்டும், தக்வாவைக் கொண்டும் சங்கையாக்கி வைப்பான்.

தகாதுர் என்கிற 102-ம் சூறத்தை ஓதக்கண்டால் அவன் முதல்களெடுக்கலையும் விட்டும் முதல்களை வெறுத்து ஸாஹிதாய் விடுவான்.

அஸ்றி என்கிற 103-ம் சூறத்தை ஓதக்கண்டால் ஸபரா கிலும் நல்லுதவி கொடுக்கப்பட்டவனாகவும், ஹக்கின்பேரில் உதவி செய்யப்பட்டவனாகவு மிருப்பான்.

ஹுமஸத என்கிற 104-ம் சூறத்தை ஓதக்கண்டால் முதல்களைச் சேகரம்பண்ணி கலவானவைகளின் பேரில் சிலவு செய்கிறவனா யிருப்பான்.

பீலு என்கிற 105-ம் சூரத்தை ஓதக்கண்டால் பகைவர்களின் பேரில் உதவிபெற்றவனும், இஸ்லாமென்னும் நிரவுகோல் இவன் கையின்பேரில் நடக்கிறவனுமு முள்ளவனு மிருப்பான்.

குறைஷு என்கிற 106-ம் சூரத்தை ஓதக்கண்டால் மிஸ்கீன்களுக்கு ஜீவனங் கொடுப்பான். அல்லாஹுத் தஆலா முஃமின்களுடைய கல்பை இவன் கையின்பேரில் மறுகுதலாக்கி வைப்பான்.

மாஊன் என்கிற 107-ம் சூரத்தை ஓதக்கண்டால் இவன் விரோதிகளைவிட்டு மிகைத்துக் கொள்வான்.

கௌஸர் என்கிற 108-ம் சூரத்தை ஓதக்கண்டால் துன்யாவிலும், ஆகிறத்திலும் இவன் கைது மிகுதியுள்ளவனு மிருப்பான்.

காபிறூன் என்கிற 109-ம் சூரத்தை ஓதக்கண்டால் காபிர்களுடன் சண்டைசெய்வதில் கெலுவுபெறுவான்.

நஸ்ர் என்கிற 110-ம் சூரத்தை ஓதக்கண்டால் தன்னுடைய சத்துருக்களின் பேரில் கேடாக அல்லாஹுத் தஆலா இவனுக்கு உதவிசெய்வான், அப்படி ஓதினவனுடைய அஜல் முடுகிவிட்டதென்று அறிவிக்கும். ஏனென்றால் நம்முடைய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் வபாத்தாக அடுத்தமையா யிறங்கின சூரத்தாயிருக்கும்.

ஹிக்காயத்து.

ஒரு மனிதன் ஸையிதனு இமாமிப்னுசிரீன் றஹிமஹுல்லாஹு இடம் வந்து, நான் சூரத்துநஸ்ரை ஓதுகிறதுபோல் கண்டேனென்றார், அப்போது இமாம் சொன்னார்கள், வஸிய்யத்து சொல்வதைப்பற்றி படித்துக் கொள்ளுங்கள். உன்னுடைய அஜல் முடுகிவிட்டதென்றார்கள். அந்த மனிதன் அது ஏன் அப்படியென்று கேட்டார். அப்போது இமாம் சொன்னார்கள், அந்த சூரத்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு, எல்லாவற்றிற்கும் கடைசியா யிறங்கின சூரத்தாதலால் அப்படிச் சொன்னேன் என்றார்கள்.

லஹப் என்கிற 111-ம் ஸூறத்தை ஓதக்கண்டால் ஓதினவன் தன்னுட்டத்தைப் பெற்றுக் கொள்வான். தன்னுடைய பெலமும், கீர்த்தியும் மேலாகி வலுப்பமாகும். தன்னுடைய தௌஹீது பலமாகும், பிச்சனக் குறைவுதலாகும், கிர்வாகம் மணமாகும்.

இக்லாஸ் என்கிற 112-ம் ஸூறத்தை ஓதக்கண்டால் அவனுக்குத் தௌபாவைக் கொடுக்கப்படும். அவனுக்குப் பின்னை ஜீவித்திருக்காது. ஆனால் தப்ஸீருடைய உலமாக்களிலொருவர் சொல்லுகிறார்கள், யாராகிலு மொருவன் ஸூறத்துல் இக்லாஸை ஓதக்கண்டால் அவன் அல்லாஹுத் தஆலாவை தௌஹீதாக்கி வைக்கிறதின் பேரிலும், அப்படிக் கண்டவனுடைய குடும்பத்தா ரெல்லாரையும் அடக்கிப் போட்டு தனித்து கடைசியில் மௌத்தாகும் படியான நீடித்த ஹயாத்துடைய பிள்ளையை அவனுக்குக் கொடுக்கப் படுகிறதின் பேரிலும் அறிவிக்கும் என்றார்கள்.

பலக் என்கிற 113-ம் ஸூறத்தை ஓதக்கண்டால் அவனுக்குத் தீங்கடக்கலையும் கார்க்கப்படும்.

நாஸ் என்கிற 114-ம் ஸூறத்தை ஓதக்கண்டால் பலாய் முஸீபத் தடக்கலைவிட்டும் அவனைக் கார்க்கப்படும். (இன்ஷா அல்லாஹுத் தஆலா.)

மலாயிக்கத்து நபிமார் ஸாலிஹானவர்கள், உலமாக்கள், கஃபா, பாங்குச் சொல்வது, தொழுவது, ஹஜ்ஜு செய்வது இவைபோல் கொற்ற வைகளைக் காண்பதின் தஃபீர்.

(வாரிது) அபூபக்கிரின் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், மலாயிக்கத்துகளைச் சார்ந்த குணமாகவும், நல்மாறுபம் சொன்னவர்களாகவும், கண்டால் சிறப்பு, குவ்வத்து நன்மாறுபம்

அபியாயத்துக்குப் பின் உதவி, சகத்தப்பிற்குப் பின் சுகம், பயத்திற்குப் பின் அச்சந்தீர்தல், சிமான்தனம், சந்தோஷம் இவைகள்போல் கொற்றவைகளின் பேரிலும் அவர்களை அரச தோஷத்தின் பேரில் கண்டால் அரசதோஷத்திலு மறிவிக்கும். எப்படியெனில், ஜிப்ரீல் மீக்காயில் அலைஹிஸ்ஸலாமுடன் தர்க்கம் சண்டை செய்யக்கண்டால் கண்டவனுக்கு வேதனையுண்டாகும். என்றதுபோல், இனி ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் இடமிருந்து ஒஜீபனமெடுக்கக் கண்டால் கண்டவன் சொர்க்கவாதியாவான். ஜிப்ரீலை வியாரதுக்க முடையவர்களாகக் கண்டால் கண்டவனுக்கு வியாரமும், துக்கமும் பிடிக்கும். இனி மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமை தக்வாவுடையவன் கண்டால் இருபதியிலும் தன் மேலெண்ணத்தைப் பெற்றுக் கொள்வான். தக்வாயல்லாதவன் கண்டால் அல்லாஹூத் தஆலாவை பயந்து தக்வாச்செய்து தௌபாச் செய்யவும். இனி மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமை ஓரிடத்தில் அல்லது ஒரு ஊரில் கண்டால் அத்தலத்தில் வருஷ மழைப்பெய்யும், தானியம் விலை களிறக்கிப்போகும். அவர்களோடுப் பேசி இவனுக்கு ஏதாவது ஒரு வஸ்து கொடுக்கக்கண்டால் நிஃமத்தும், சந்தோஷமும் பெற்றுக்கொள்வான். இனி இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாமை சலித்தவர்களாக ஸூருதவும் அதை இவன் மாத்திரம் தனியே கேட்கக்கண்டால் கண்டவன் மௌத்தாவான். கண்டவனிருந்த தலமுடையவர்களும் அந்த ஊதலைக் கேட்டதாக இவன் எண்ணக்கண்டால் அத்தலத்தில் பலயிடத்திலும் மௌத்து விஜயமாகும். ஒரு சொற்படிக்கு அத்தலத்தில் அபியாயம் உண்டான பின் நியாயம் உண்டாகுமெனவும் அக்கோணத்திலுள்ள வம்பர் ஹலாக்காவார்களென்றும் சொல்லப்படுகிறது. இனி மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமை சந்தோஷமாகக் கண்டால் பிணியில் மௌத்தில் மௌத்தாவான். கோபமாகக்கண்டால் தௌப்பாச் செய்யாமல் மௌத்தாவான், மலக்கல் மௌத்து இவனைக்கீழே அடித்து தள்ளி இவன் கீழே விழக்கண்டால் மௌத்தாவான். அப்படி தள்ளினதி லிவன் கீழே விழாவிட்டால் மௌத்துக்கு முடிகிறன். அல்லாஹூத் தஆலா அதைவிட்டும் ஈடேற்றமாக்கி வைத்தானென்றும் சொல்லப்படும். ஒரு சொல்லின்படிக்கு மலக்கல் மௌத்தைக் கண்டவனுக்கு வாழ்நாள் நீளமாகு மென்றும் சொல்லப்படுகிறது.

இனி வேறே எந்த மலக்காவது கல்மாராயம் சொல்லக்கண்டால் அந்தப் படிக்கும் அச்சம் பூட்டும் படிக்கும் கண்டால் அந்த படிக்கும், இனி மலாயிக்கத்து தட்டங்களில் கனிவர்க்கம் தங்கள் கைகளிலிருக்கக்கண்டால் பிஸபில்மௌத்தில்மௌத்தாவான். இனி ஒரு மலக்கு தன் வீட்டில் புகுதக்கண்டால் கள்ளன் தன் வீட்டில் புகுதுகிறதை பயந்து கொள்ளவும். இனி ஒரு மலக்கு இவனிடம் ஒரு ஆயுதம் வாங்கக்கண்டால் இவனுடைய வீரதத்துவம் போய் விடும். சிலகால் தன்மனைவியை தலாக்கு சொல்லிப்போடுவான். இனி மலாயிக்கத்துகளை ஓரிடத்திற்கண்டு பயப்பட்டால் அத்தலத்தில் பித்னாவும் கோளும், சண்டையுமுண்டாகும். இனி மலாயிக்கத்தை படைக்களத்திற்கண்டால் கண்டவன் ஜெயம் பெறுவான். இனி மலாயிக்கத்து இவனிடம் ருகூவுஸுஜூது செய்யக்கண்டால் தன்மேலெண்ணத்தையும், மேன்மையையும் பெற்றுக்கொள்வான். இவன் பேரும் கீர்த்தியும் அதிகமாகும், இனி இவன் ஒரு மலக்கை அடித்து கீழே தள்ளக்கண்டால் இவனுக்கு தாழ்மையுண்டாகும். ஒரு மலக்கும் மற்றொரு மலக்கும் சண்டை செய்யும்படிக்கு சகத்தப்பானவன் கண்டால் மௌத்தாவான். இனி வானமிருந்து மலாயிக்கத்து தங்கள் கோலப்படிக்கு இறங்கக்கண்டால் ஹக்குடையவர்களுக்கு சிறப்பும் பாத்துலுடையவர்களுக்கு பங்கமும் உண்டாகும். மலாயிக்கத்தை பெண்கள் ஸூரத்தில் கண்டால் அல்லா பேரில் கண்டவன் பொய்ச்சொல்லுகிறவன். இனி மலாயிக்கத்துடன் இவன் பறந்து வானத்திலேறி அப்புறம் பூமியில் வராமலிருக்கக்கண்டால் துன்யாவில் அநேகம் சிறப்பைப் பெற்று, பின்பு பிஸபில் மௌத்தாக மௌத்தாவான். இனி மலாயிகத்தனவில் இவன் கோட்டமாய் பார்க்கக்கண்டால் துன்யாவில் முஸீபத்து பிடிக்கும். இனி மலாயிக்கத்து இவனை லஃனத்து செய்யக்கண்டால் இவன் தீன் கனமென்கிறதின் பேரிலும் இன்னும் மலாயிக்கத்து அட்டாளி சத்தமிடக்கண்டால் இவன் வீடு முதலானது கறுப்பென்கிறதின் பேரிலு மதிக்கும். இனி ஒரு ஊர் அல்லது ஒரு தலம் போல் கொற்றதில் மலாயிக்கத்து ஒரு கூட்டமிறங்கக்கண்டால் அத்தலத்தில் ஒரு ஆலிம், அல்லது ஒரு பெரியார் மௌத்தாவார்கள், அல்லது அநியாயஞ் செய்யப்பட்டவனைக் கொல்லப்படும், அல்லது ஒரு வீடு இடிந்து சில ஜனங்கள் பேரில் விழும். இனி அல்லாவுடைய

கிதாபை ஓதென்று ஒரு மலக்கு சொல்லக்கண்டால் நல்லவனா யிருந்தால் சிறப்புப் பெறுவான். அப்படி இல்லாவிடில் அல்லாஹ்வைப் பயந்து தௌபாச் செய்யவும் இனி இவ்வளவென குறிப்பு தெரியாத பறவைகள் பறக்கக்காண்பது மலாயிக்கத்துகளென்றும் சொல்லப்படும். இனி மலாயிக்கத்து ஒரு தலத்தில் கூடும்படிக் காண்பது அநியாயஞ் செய்தவர்களுக்கு வேதனையும், அநியாயஞ் செய்யப் பட்டவர்களுக்கு உதவியுமா யிருக்கும். இனி கிறாமன் காதிபீன் யென்ற மலக்கை நல்லவன் கண்டால் துன்யாவிலும், ஆகிறத்திலும் சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்வான். ஒடுக்கத்தின் பேரிலும் நலமாயிருக்கும். கெட்டவன் கண்டால் தௌபாச் செய்யவும்.

தன்பீகு இல்முடையவர்களி லொருவர் சொல்லுகிறார்கள் மலக்கைக் கிழவனாகக் கண்டால் சென்றகாலத்தின் பேரிலும் வாலிபக் கோலமாகக் கண்டால் நடக்குங் காலத்தின்பேரிலும், குழந்தை ரூபத்தில் கண்டால் வருங்காலத்தின் பேரிலும் அறிவிக்கும். தான் ஒரு மலக்காக ஆய்விடக் கண்டால் வருத்தமா யிருந்தால் லேசாயும் அடிமையா யிருந்தால் உரிமையும் சிறப்படையவனா யிருந்தால் தலைமையும் பெற்றுக் கொள்வான். இப்படிக் கண்டவன் சுகத்தப்பானவனா யிருந்தால் மௌத்தாவான். இனி மலாயிக்கத்து இவனுக்கு சலாம் சொல்லக் கண்டால் அல்லாஹுத் தஆலா இவனுடைய ஹயாத்திலேயே அகப்பார்வை கொடுத்து கைதுகொண்டு இவனுக்கு முத்திரை போடுவான். ஆமீன்.

(பஸல்) எங்கள் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை மனாமில் காண்பதை விவரிப்பது, நபிநாயகம் திருவுளமா யிருக்கிறார்கள், யாராகிலும் மனாமில் என்னைக் கண்டால் மேலைக்கு என்னை முழிப்பிலும் காண்பான். ஷைத்தான் என் கோலங்கொண்டு வரமாட்டா னென்றும் இன்னுமொரு றிவாயத்தில் என்னைக் கண்டால் திட்டமாக ஹக்கைத்தான் கண்டா னென்றும், இன்னும் என்னைக் கண்டவன் நரகம் புகுதா னென்றும், இப்படி அநேகம் ஹதீது வந்திருப்பதில் அந்த ஹதீது மஃனாவில் உலமாக்கள் விகற்பமாகி இப்னுஸீரீன் றஹிமஹுல்லாஹு போல் கொற்றவர்கள் சொல்லுகிறார்கள், நபிநாயகத்தை அவர்கள் ஹயாத்தி லெந்த ரூபத்திலிருந்து வபாத்தானார்களோ அந்த ரூபத்தி

கண்டதானால் சரியென்றும், அப்படிக் காணாதது சரியில்லை யென்றும், இப்படி அநேகம் இலாபுண்டாயிருந்தாலும், சஹீஹான சொல்லாகிறது நபிநாயகத்தை எந்தஹாலில் கண்டாலும் பாத்திலில்லை, ஹக்கானதா யிருக்கும். அவர்களின் வன்னிப் பில்லாத சூரத்தில் காணப் பட்டாலுஞ்சரி, ஹக்கானதா யிருக்கும், சக்கில்லை. நபிநாயகத்தின் வாலிபத் தனம், கெட்டித்தனமும் நடுவயது மூதியவயது இந்த வயதுகளிலவர்கள் சூரத்துக ளெவ்விதமா யிருந்ததோ அவ்விதமாய் காணப்பட்டதற்கு தஃபீர்பார்க்க வேண்டியதில்லை. அதற்கு விகற்பமா யிருந்தால் தஃபீர்பார்க்கவேண்டும். நபிநாயகம் சிக்கலெடப்பட்ட கண்ணாடி போல் இருப்பதால் எவ்விதமாக நல்லதாய் கண்டாலும் கெட்டதாய் கண்டாலும் கண்டவனுடைய ஹால் நல்லது, கெட்டது என்கிறதின்பேரில் அறிவிக்குமே அல்லாமல் நல்லதால் நபிநாயகத்தின் ஸாத்து நல்லதென்றும், கெட்டதால் கெட்டதென்றுமில்லை. அந்த சிறப்பான ஸாத்து எப்போதும் இவ்விதமென நபியாலும், மலாயிக்கத்தாலும், அவுலியாக்களாலும் எத்தக்கூடாத பரிபூரணமான ஹகீகத்தும், அழகுடைய இந்த அடிமையை பரிபூரணமான ஓயாத கிருபையால் ஆளாக்கிய வலுப்பமான ஸாத்தாயிருக்கும். இந்தப் படியாக இப்னு அபீஜம்ரவைத்தொட்டும் இப்னு ஹஜருல் ஹைதமீ ஷறஹுஷமாயிலித்திர் மதியில் பேசி வருகிறார்கள். ஷைத்தான் அல்லாஹுத் தஆலாவைக்கொண்டும், அவன் திஷ்டாந்தங்களைக் கொண்டும், நபிமாரைக்கொண்டும் மலாயிகத்துமார்களைக்கொண்டும் கோலங்கொண்டுவர ஏலாததால் மற்றும் நபிமார் சூரத்தைக் கொண்டும், ஷைத்தான் கோலங்கொண்டும் வரமாட்டான். ஆகையால் யாராகிலும் நபிநாயகத்தைக் கண்டால் தன்ஹால் லேசானவனு யிருப்பான். துக்கப்பட்டவனுயிருந்தால் சந்தோஷமாவான். சிறைச் சாலை போடப்பட்டவனுயிருந்தால் அதை விட்டும் வெளியாவான். பஞ்சமான அல்லது சரக்குகள் விலையேறிய தலத்தில் நபிநாயகத்தைக்கண்டால் பஞ்சத்தை யவர்களை விட்டும் நீக்கப்பட்டு விலையு மிறங்கிப்போகும். அத்தலத்தையுடையவர்கள் அக்கிரமஞ் செய்யப் பட்டவர்களா யிருந்தால் உதவியுண்டாகும். பயந்தவர்களா யிருந்தால் அச்சந்தீர்வார்கள். இனி ஹதீதில் வந்தபடிக்குள்ள வன்னிப்புபடிக்கு வன்னிப்பு செய்ய தெரியாத வன்னிப்பின்படிக்கு நபிநாயகத்தை காண்பது கண்டவனுடைய ஒடுக்கத்துப்பேர்

தீனிலும் துன்யாவிலும் அழகாகு மென்று நல்மாருப மாயிருக்கும். உன்னுடைய தாத்தின் கதருபடிக்கும் உன்னுடைய கல்பெனும் கண்ணாடி தெளிவாயிருக்கிற கதரின்படிக்கும் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை காண்பதுதான் உனக்கு இறங்கும். இனி நபிநாயகம் இவனை முன்னோக்கினவராயும் அல்லது இவனுக்கு எதும்படித்துக் கொடுக்கவும் அல்லது தொழுகையில் இமாமத்துச் செய்யவும் அல்லது பாதையில் முந்தினவர்களாயும், அல்லது அழகான வஸ்துவை இவனுக்கு ஓஜீபனமாகிவிக்க அழகான உடையிவனுக்கு உடுத்தாட்ட, அல்லது இவனுக்கு வார்த்தைப் பாடுசெய்ய அல்லது கைக்கொண்டு நீதம் செய்கிற வனுயிருந்தால் நல்லதைக் கொண்டும் ஏவிக் கெட்டதைவிட்டும் விலகுவான். கண்டவன் ஆலிமாயிருந்தால் அறிந்ததைக் கொண்டு அமல் செய்வான், வணக்கவாளியாயிருந்தால் கருமத்துடையவர்களின் தலத்தில் சேர்வான், பாவியாயிருந்தால் தௌபாச்செய்து அல்லா அளவில் மீள்வான், காபிர்கண்டால் நேர்வழிப் பெறுவான். சிலகால் ஓதல் படிப்பு, அந்தரங்கள், துப்பறவு பரிகாரம் செய்வது போல்கொற்ற தன் நாட்டத்திலுள்ள தன் நாட்டத்தைப் பெற்றுக் கொள்வான். இனிகண்டவன் பயந்தவனுயிருந்தால் அச்சந்தீர்வான். நபிநாயகத்தை கண்டவனுக்கு நல்மாருபமும் உண்மையான சொல்லும் வார்த்தைப்பாடு நிறைவேறுகிறது ஹஜ்ஜை வெளியாகி நடந்தாகும். ஆனால் கண்டவன் வழிக்கேட்டின் பேரிலும் பித்அத்தின் பேரிலும் இருந்து நபிநாயகம் இவனைவிட்டும் பிரகனித்துப்போகக்கண்டால் அல்லாவை பயந்து தௌபாச்செய்யவும். அப்படிக்கண்டால் தன் கூட்டத்தாருக்கிடையில் பகையும், கெடும்பும் கோபமுண்டாகும், சிலகால் கண்டவன் தன் கூட்டத்தாரை பிரிந்து தன் குடிப்பதியை விட்டு மறுயிடம்போவான். சிலகால் தாய் தகப்பன் புறத்தால் எத்தீம்தனம் பிடிக்கும். இனி நபிநாயகத்தை பெண்பிள்ளைகள் கண்டால் வனுப்பமான மருத்தபாவை எத்திக் கொள்வாள். சிலகால் அவளை சில தங்கடங்களினல் சோதிக்கப்பட்டு ஸாலிஹான பிள்ளைகளைக் கொடுக்கப்படும். அவள் பணக்காரியாயிருந்தால் நலவில் சிலவு செய்வாள். நபிநாயகத்தை காணுவது நோவினை பேரிலும் ஸபூர் செய்கிறதின் பேரிலும் அறிவிக்கும். இனி கடன் காரன் கண்டால் கடன் தீரும். நசலாளி கண்டால் ஷிஹத்தாகும், ஹஜ்ஜு செய்யாதவன் கண்டால் ஹஜ்ஜு

செய்வான், பஞ்சமான பூமியில் நல்லக்கோலமாகக் கண்டால் செழிப்பாகும். அதற்கு மாத்தமாகக்கண்டால் அத்தலத்துடையவர்கள் மார்க்கம்பலயீனமாகி பிறகு அத்து வெளியாகிறதின்பேரி லறிவிக்கும். நபிநாயகத்தை உவப்புவைத்து ரகசியமாக அவர்கள் இரத்தத்தை இவன் குடிக்கக்கண்டால் பீஸபீல் ஷஹீதாவான். பஹுஷியமாக குடிக்கக்கண்டால் நபிநாயகத்தின் கூட்டங் குடும்பத்தாரை வெட்டக்கண்டவனுக்கு உதவி செய்கிறவனாக யிருக்கும். இனி நபிநாயகத்தை ஏறினவர்களாகக் கண்டால் கண்டவன் ஏறினவனாக ஸியாரத்துச் செய்வான். நடந்தவர்களாக கண்டால் நடந்தவனாக ஸியாரத்து செய்வான், இனி நபிநாயகம் சிரிக்கக் கண்டால் இவன் கருமம் அக்காலத்தில் சுல்தான கருமமும் நல்ல செவ்வையாய்த் தரிப்படும். இனி நபிநாயகம் மௌத்தாகக் கண்டால் குடும்பத்தில் பெரியோர்கள் மௌத்தாவார்கள். இனி நபிநாயகத்தின் ஜனாஸாவை மாத்திரங்கண்டால் அவர்கள் கண்டதலத்தில் பெறும் முஸீபத்து பிடிக்கும். ஜனாஸா அடக்கப்படமட்டிலும் இவன் ஆயுதபாடாகக் கண்டால் கண்டவன் பித் அத்தளவில் சாய்ந்திருக்கிறான். இனி நபிநாயகத்தின் கபுறை ஸியாரத்து செய்யக்கண்டால் அநேக மூதல்களைப் பெற்றுக்கொள்வான். இனி கண்டவன் நபிநாயகத்தின் பிச்சையில்லாதவனாய் இருக்க நபிநாயகத்தின் பிள்ளையாக தன்னைக் கண்டால் தன்னுடைய ஈமானும், எகீனும் கலப்பறுகலாயிருக்கிறதின் பேரி லறிவிக்கும். இனி தன்பாவின் வஸ்துகளிலேதாவது நபிநாயகம் கொடுக்கக் கண்டால் கைறைப் பெற்றுக்கொள்வான். இனி யாராகிலும் தானே நபிநாயகத்தின் ஸரத்தாகிவிட, அல்லது அவர்களின் உடையை அணியக்கண்டால் அல்லது அவர்களின் மூத்திரை, அல்லது அவர்களின் சக்தி கொடுக்கப்படக்கண்டால் கண்டவன் இராஜாங்கத்தை நாடினவனாயிருந்தால் அதைப் பெற்றுக் கொள்வான். பூமியிலுள்ளோர்களெல்லாம் வழிப்படுவார்கள். இப்படிக்கண்டவன் சிறப்பு பெறுவான். இல்மை தேடுகிறவனாயிருந்தால் அதில் நின்றும் தன் நாட்டத்தைப் பெற்றுக் கொள்வான். பக்கீரா யிருந்தால் சீமானாவான். கலியாணம் செய்யாதவனா யிருந்தால் கலியாணம் செய்வான். பிள்ளை யுண்டானவன் அல்லது அவன் புருஷன் நபிநாயகத்தைக் கண்டால் ஹமலான பிள்ளை ஆண்பிள்ளை பெறுவான். இனி தான் நபிநாயகத்துக்கு தகப்ப

ஞுகக்கண்டால் கண்டவன் ஈமானும் எகீனும் பசாதாய்விடும். (நவூதுபில்லாஹி மின்ஹா) இனி நபிநாயகத்தை ஒரு மனிதன் கண்ட பறக்கத்து அவன் தனக்குமாத்திரம் தனதாகாது எங்கிலும் முஸ்லிமானவர்க ளடங்கலையும் அடையவலையும். இனி நபிநாயகத்தின் கம்பிருட்டியி லொருவர் தனக்கு தாயாயிருக்கக் கண்டால் ஈமான் அதிகமாகும். இனி நபிநாயகத்தின்பின் நடக்கக் கண்டால் அவர்கள் சுன்னத்தான கருமங்களை துடர்ந்தவன். இனி நபிநாயகம் இவன் பெண்சாதியை பார்க்கக் கண்டால் அவன் ஹக்கை இருக்கும்படி ஏவினதாயிருக்கும். இனி நபிநாயகத்துடனேயிருந்து உண்ணவும், தின்னவுங்கண்டால் தன் முதலின் ஸக்காத்தை யிருக்கும்படி ஏவினதாயிருக்கும். இனி நபிநாயகம் தனியாக தின்னக்கண்டால் கண்டவன் ஸதகா கொடாமல் விலகுகிறான். ஸதகா கொடுக்கும்படி ஏவினதாயிருக்கும். இனி நபிநாயகஞ் செருப்பில்லாமல் நடக்கக்கண்டால் கண்டவனை இமாம் ஜமா அத்துடன் தொழுகும்படி ஏவியதாயிருக்கும். இனி தன் இரத்தம் நபிநாயகத்தின் இரத்தத்துடன் கலக்கக்கண்டால் ஒரு செப்பிதுடன் சம்பந்தஞ் செய்வான். அல்லது உலமாக்களோடு சம்பந்தஞ் செய்வான். நபிநாயகம் ஏதுவஸ்துவாகிலும் கொடுக்கக்கண்டால் இல்மைபெற்று ஹக்கை துடர்ந்து நடப்பான். இனி நபிநாயகம் குத்பா ஓதக்கண்டால் நல்லதைக் கொண்டு ஏவி கெட்டதை விட்டும் விலகுவான். பாங்குச் சொல்லக் கண்டல் அத்தலத்தில் செழு செழுப்பு உண்டாகும். நபிநாயகத்தை அவர்கள் தங்கள் பள்ளிவாசலிலும் ஹறமிலும் அறியப்பட்ட அவர்கள் தலத்திலும் கண்டால் இல்லத்தையும் குவ்வத்தையும் பெற்றுக்கொள்வான்.

இன்னும் மற்றும் நபிமார்களைக்கண்ட இன் தஃபீர் மலாயிகத்துகளைக்கண்ட தஃபீரு போலேயா யிருக்கும் ஆகிலும் மலாயிக்கத்து ஹாலிறுனதாகக் கண்டால் நன்மாறுயத்தின் பேரில் அறிவிக்குமல்லவா? அது மாத்திரம் அன்பியாக்களைக் கண்டால் அறிவிக்காது.

அபூஸாஈது ரலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், நபிமார் தங்கள் நல்ல ஹாலிலும் அழகிய கோலத்திலுங் கண்டால் கண்டவனுக்கு நன்மாறுயமா யிருக்கும். அதற்கு மாத்திரமாகக்

கண்டால் கண்டவனுடைய ஹால்கெட்டு முஸீபத்து பிடித்ததின் பேரிலறிவிக்கும். ஆயினும் அதைவிட்டும் ஈடேற்றம் பெறுவான். இனி நபிமாரிலொருவரைதான் வெட்டக்கண்டால் அமானிதத்தை சதிமானஞ்செய்து அருதிமானத்தையும் முறித்துப்போடுவான். இப்பொழுது சொன்னதெல்லாம் மொத்தமாக. இனி அதின் விபரமாவது, நமது தகப்பனாராகிய ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கோலப்படிக்கண்டால் வலுப்பமான விலாயத்துக்கு தகுதிவானு யிருந்தால் அதை பெற்றுக்கொள்வான். இனி அவர்களைக்கண்டு அவர்களுடன் பேசிக்கொள்ளக் கண்டால் இல்மை பெற்றுக் கொள்வான். (ஒரு கீல்)ஆதம் அலைஹிஸ் ஸலாமைக் கண்டவன் ஒரு பகைவன் சொல்லிலுல் மருண்டு சில காலத்திற்குப்பின் அந்த மருஷியை விட்டுத் தெளிவான் என்றும் சொல்லப்படும். இனி ஆதமை நிறம் பேதமாகக் கண்டால் ஒரு தலமிருந்து மறுத்தலம்போய் அப்புறம் மூந்தின தலத்தைக்காண கைலூன தலமனவில் போறதின்பேரி லறிவிக்கும்;

இனி ஷீது அலைஹிஸ்ஸலாமைக் கண்டால் பணம், பிள்ளைக் குட்டி நல்ல நிறப்பமாக இதுகளையும் பெற்றுக்கொள்வான். இனி இதுரீஸ் அலைஹிஸ்ஸலாமைக் கண்டால் மார்க்கத்தில் பேறுதலா யிருப்பதைக்கொண்டு இவனை சங்கைபாக்கப்பட்டு ஒடுக்கத்து மூத்திரை கைமுக்கப்படும். இனி நூஹு அலைஹிஸ்ஸலாமைக் கண்டால் வாழ்நாள் நெடுப்பமாகிய பகைவர்களினுல் பலாய் அதிகமாகும். அப்புறமிவன்தான் மிகைப்பான். அல்லாஹுத் தஆலாவை அதிகமாய் ஷுக்குருச் செய்வான். ஒரு தாழ்மையான பெண்ணைக் கலியாணஞ்செய்து அவளிவனுக்கு சில பிள்ளைகள் பெறுவாள். இனி ஹூது அலைஹிஸ்ஸலாமைக் கண்டால் விரோதிக ளிவன்பேரில் மடத்தனஞ்செய்து இவனை அபாயஞ் செய்கிறதின் பேரில் காட்டுவார்கள், பின்பு இவன் தான் ஜெயிப்பான்.

இனி ஸாலிஹு அலைஹிஸ்ஸலாமைக்கண்டாலும் அப்படிப் போல்தான். இனி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாமைக்கண்டால் ஹஜ்ஜு செய்வான். (ஒரு கீல்) அபாயமான இராஜாவின் புறத் தாலிவனுக்கு கடிசான முஸீபத்து உண்டாகி பின்பு அல்லாஹுத் தஆலாவின் உதவியவனுக்குண்டாகும். ஹிக்மத்தும் சாலிஹான

பெண்சாதியும் கொடுக்கப்படும் என்று. இன்னமொரு கீலில் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை காண்பது தகப்பன் கோவிலை செய்கிறதின் பேரிலறிவிக்குமென்றும் வருகிறது.

ஹிக்காயத்து.

சம்மாக்கிப்னு ஹர்புகபு, இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் என்னை அவர்கள் கையால்தடவி புருத்து ஆற்றுக்குவந்து அதில் மூழ்கும், அல்லாஹுத் தஆலா உம்முடைய பார்வையை மீள்விப்பான் என்று சொல்லும் படிகண்டு மூழித்து அந்தப்படிச் செய்தார்கள். அல்லாஹுத் தஆலா அவர்களுக்குப் பார்வையை மீள்வித்தான்.

இனி இஸ்ஹாகு அலைஹிஸ்ஸலாமை அவர்கள் நல்லஹாலாகக்கண்டாத் கண்டவனின் பேரியோர்களிலும் அன்ன சற்றத்தாரிலும் இவனுக்கு சில வருத்தம் பிடிக்கும். அப்புறம் அல்லாஹுத் தஆலா அதை நீக்கி இவனுக்கு மிகவும் சிறப்பையும், மரியாதையும் நல்மாலுயமுங் கொடுப்பான். இவன் பிச்சனதில் இராஜாக்களும் தலைமைக்காரரும் வலிஹானவர்களும் மிகுதமாவார்கள். இஸ்ஹாகு அலைஹிஸ்ஸலாமை உடைய ஹால்பேதமானவர்களாகக்கண்டால் பார்வைப்போய்விடும். (நஊதுபில்லாஹி.)

இனி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமைக்கண்டால் உச்சிதத்தையும் நாகரீகத்தையும் கொடுக்கப்படும். ஒருகீலில் கண்டவன் பள்ளிவாசல் கட்டுவான், அல்லது கெட்ட உதவியாயிருப்பான் என்றும், இன்னும் ஒரு கீலி லவர்களைக்கண்டால் அவனுடைய தகப்பன் புறத்தால் வருத்தம் பிடித்து பின்பு அல்லாஹுத் தஆலா லேசாக்குவானென்றும் வருகிறது. இனி யாராகிலும் யஃகூபு அலைஹிஸ்ஸலாமைக்கண்டால் தன் மக்களில் ஒருவர் புறத்தால் வலுப்பமான சலிப்புண்டாகி பின்பு நீங்கும், தான் உகந்ததும் கிடைக்கும். இனி யூசுபு அலைஹிஸ்ஸலாம் அவர்களைக்கண்டால் கண்டவனுக்கு அநியாயமுஞ் சிறைச்சாலையில் போடுவதும் தன் அன்ன சற்றத்தாரில் நின்றும் விருப்பமுமுண்டாகும். அதற்குப்பின் இராஜாங்கத்தை கொடுக்கப்படும். விரோதிகளெல்லாமிவனுக்கு அடிபணிந்து பணிவிடைசெய்வார்கள். தஃபீரில் உடற்பிறந்தான் பகையனென்றும் சொல்லப்படும். இப்படிக்கண்டவன் மிகுந்த தைகாவுடையவனென்பதற்கு தலீலாயிருக்கும்.

பெரியோர்களில் ஒருவருக்கு யூசுபு அலைஹிஸ்ஸலாம் தங்களை ஒத்றமோஜாவை கொடுக்கும்படி கண்டு முழிக்கவும் தஃபீர் சொல்லுகிற இல்மாளியாய்விட்டார்கள்.

இபுறுஹிமிப்னு அப்துல்லாஹில் கிர்மானீ அவர்கள் யூசுபு அலைஹிஸ்ஸலாமைக்கண்டு அல்லாஹுத் தஆலா தங்களுக்குப் படித்து தந்ததில் எனக்குப் படித்து தாருங்களென கேட்கவும் அவர்கள் சட்டையை அவர்களுக்குப் போட்டார்கள். உடனே முழிக்கவும் அவர்கள் தஃபீர் சொல்லுகிற இல்மாளியாய்விட்டார்கள். இது போல் இப்னு சிரின் றஹிமஹுல்லாஹு அவர்களைத் தொட்டும் ஹிக்காயத்தும் வருகிறது.

இனி யூஷஉ அலைஹிஸ்ஸலாம் அவர்களைக்கண்டால் கண்டவன் கிட்டுமைப்போல் சொற்றதை வருத்துகிற கருமத்தில் சரித்திரமாவான். பின்பு அதைவிட்டும் அல்லாஹுத் தஆலா சலாமத்தாக்குவான். இந்தமனும் கண்டவனுக்கும் சதிமானஞ் செய்யும் தானமாகவும் தன் கவுமுகளுக்குமிடையில் சில கொடுக்கல்வாங்கலுண்டாயிருக்கிறதின் பேரிலும் அறிவிக்கும். இனி யஃகூபு அலைஹிஸ்ஸலாமை ருடி சிலு சிலுத்தவனாகக்கண்டால் கண்டவன் பார்வைப் போய்விடும். வேறே ஹாலாகக்கண்டால் தன் கௌமுகள் அநியாயம் செய்வார்கள். பின்பு இவன் அவர்களை அடக்கியாள்வான். சிலநால் அப்படிக்கண்டவனுக்கு பெண்மக்கள் உண்டாயிருக்கிறதின் பேரில் அறிவிக்கும். இனி மூஸா ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் இவர்கள் 2-பேரையும் அல்லது இரண்டில் ஒருவரைக்கண்டால் கண்டவன் கையால் வன்பனுள அநியாயக்காரன் ஹலாக்காவான். கண்டவன் படை செய்ய நாடியிருக்கும்போது கண்டால் ஜெயமடைவான்.

இனி அய்யூபு அலைஹிஸ்ஸலாமைக்கண்டால் தன்னிலும் தன் பணம் காசு பிள்ளை குட்டி கூட்டத்தாரில் முஸீபத்தால் சோதிக்கப்பட்டுப் பின்பு அதற்கு இரட்டிப்பாக செழு செழுப்பு சமானம் சந்தோஷங்கொண்டு, றஹ்மான் அதற்குப்பகரங்கொடுப்பான். இனி தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களைக்கண்டால் சுல்தான் தனத்தையும் குவ்வத்தையும் இராஜாங்கத்தையும் பெற்றுக் கொள்வான். இனி சுலைமான் அலைஹிஸ்ஸலாமைக் கண்டால் இராஜாங்கத்தையும் இல்மையும் விளக்கத்தையும கொடுக்கப்படும்.

ஆனால் அவர்களை மின்பரில், அல்லது கட்டிலில் மையித்தாகக் கண்டால் கலீபா, அல்லது இராஜா, அல்லது தலைமைக்காரன் மௌத்தானச் செய்தி சிலகாலத்துக்குப்பிறகு தெரியும். இன்னு மொருசொல் அவர்களைக்கண்டவனுக்கு நல்லவனும் பகைவனும் வழிப்படுவான். சபர் மிருதமாய்ச் செய்வானென்று. இனி சகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டவனுக்கு முதிய வயதான பின் பிள்ளைகொடுக்கப்படும். இனி எஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டவனுக்கு பத்தினிதனத்தையும் தக்வாவையும் கார்மானத்தையும் அக்காலத்திலிவனைப்போல் ஒருவருமில்லை என்கிற பட்டமுங் கொடுக்கப்படும், இனி ஈசா அலைஹிஸ்ஸலாமைக்கண்டால் கண்டவன் எல்லோருக்கும் பிரயோஜனஞ் செய்கிறவன். பறக்கத்தானவன். நலவுஞ் சபரும் அதிகமானவன், வயித்தியப் படிப்பு மற்றும் இல்முகளைக்கொண்டு இவனை சங்கைபாக்கப்படும். ஹசனு புனு அலிறலியல்லாஹு அன்ஹுமா, ஈசா அலைஹிஸ்ஸலாமைக் கண்டு மோதிரத்தில் எந்தப்பெயர் கொத்தவேண்டுமென்று கேட்டதற்கு 'லாயிலாஹ இல்லல்லாஹுல் ஹக்குல் முபீன்' என்று கொத்திப்போடும். வியாகூலமும் துக்கமும் அடங்கலும் போக்கிவிடுமென்றார்கள். இனி பெண்பிள்ளை ஹமலாயிருக்கும் போது ஈசா அலைஹிஸ்ஸலாமைக் கண்டால் ஆண் குழந்தை பெறுவாள். மறியம் அலைஹிஸ்ஸலாமை ஆண்பிள்ளைக்கண்டால் தலைமையும மனிதரில் மிகுந்த பதவியும் பெற்றுக்கொள்வான். அவர்களை பெண்பிள்ளை ஹமலாயிருக்கும் போது கண்டாலும் பூராயமான ஆண் குழந்தை பெறுவாள். அவள் படுதூர் சொல்லப்பட்டவளா யிருந்தால் அதைவிட்டும் நீக்கப்படும். இனி மறியம் அலைஹிஸ்ஸலாமுக்கு தான் ஸுஜூது செய்யக்கண்டால் இராஜாக்களுடன் பேசி உறவாடியிருப்பான்.

இனி தானியால் ஹகீம், அவர்களைக் கண்டால் பூர்த்தியான பேரையும் தஃபீருடைய இல்மையும் கொடுக்கப்படும். ஒருவனுக்கு சில நஷ்டமுண்டாகி பின்பு இவன் தான் ஜெயித்துக் கொள்வான். ஒரு கிலின்பம இராஜாவாகவும், அல்லது மந்திரியாகவுமிருப்பான். இனி கிளுறு அலைஹிஸ்ஸலாமைக் கண்டால் பஞ்சத்துக்குப் பின் செழிப்பையும், பயங்கரத்துக்குப் பின் அச்சந்தீர்தலையும் பெற்றுக் கொள்வான் இனி யாராகிலும் நபிமார்களில் ஒருவர் தன்னை அடிக்கக் கண்டால துன்யாவில நீன் துன்யாவின் கருமத்தில்

நின்றும் தன் மேலெண்ணத்தை பெற்றுக் கொள்வான். இனி யாராகிலும் தானே நபிமாரில்நின்றும் ஒரு நபியாகிவிடக் கண்டால் எந்த நபியாகிவிடக் கண்டானோ அந்த நபியுடைய ஹாலும் வருத்தமும் எவ்விதமா யிருந்ததோ அவ்விதமாக இவனுக்கு முண்டாகி கடைசியில் ஜெயம்பெறுவான். கல்குகளை அல்லாஹுத் தஆலாவின் பாதையி லழைக்கிறவனாகி விடுவான்.

பஸல்.

அஸ்ஹாபிகள், தாபியீன்கள் மற்றும் ஸாலிஹானவர்களைக் காண்பதை விவரிப்பது :—இவர்களில் ஒருவரை அல்லது அவர்களெல்லோரையும் ஹயாத்தானவர்களாகக் கண்டால் கண்டவன் தீனிலும் தன் குடும்பத்தாரிலும் மிகவும் குவ்வத்துடையவன் மிகவும் மேன்மையும் தகுதியும் பெற்றுக் கொள்வான் தன் கருமமும் மிகவும் மேலாகு மென்றதின்பேரி லறிவிக்கும். ஆனால் தானே அவர்களி லொருவராகி விடக்கண்டால் சில சங்கடம் பிடித்து அப்புறம் ஜெயம்பெறுவான். இனி அவர்களை பல தடவையாகக் கண்டால் தன்னிருபாகம் ஸலமாகி சரியாகி நடக்கும். அபூபக்கரிப்னு ஸித்தீகு றலியல்லாஹு அன்ஹுவை ஹயாத்தாக இருக்கக் கண்டால் அல்லாஹுத் தஆலாவின் அடியார்கள்பேரில் கிருபை உருக்கமா யிருக்கிறது கொண்டு சங்கையாக்கப்படும். உமறு றலியல்லாஹு அன்ஹுவைக் கண்டால் தீனில் பலத்தைக் கொண்டும் சொல்லின் நீதத்தைக் கொண்டும் தன்னை கீழ்வுள்ளவர்களில் நின்றும் நல்ல நடத்தையைக் கொண்டும் சங்கையாக்கப்படும். உதுமான் றலியல்லாஹு அன்ஹுவை ஹயாத்தா யிருக்கக் கண்டால் ஒழுக்கத்தையும் பறக்காத்தையும் கொடுக்கப்படும். ஹசதுகாரர் அதிகமாவார்கள். அலி றலியல்லாஹு அன்ஹுவை ஹயாத்தா யிருக்கக்கண்டால் இல்மைக் கொண்டும் சங்கையாக்கப் படும். சத்த வீரத்தையும் துன்யா வெறுக்குதலையும் கொடுக்கப்படும்.

இனி ஒரு தலத்தில் ஒதுமெறவர்கள் ஒருமித்து இருக்கக் கண்டால் அத்தலத்தில் சுல்தான்கள், வியாபாரிகள், உலமாக்கள் போல் கொற்ற தவுலத்துடையவர்கள் ஒருமித்துச் சேர்வார்கள். இனி ஸாலிஹானவர்களில் ஒருவரை ஒரு ஊரில் ஹயாத்தா

யிருக்கக் கண்டால் அந்த ஊருடையவர்கள் செழிப்பையும், சந்தோஷத்தையும், நீதத்தையும் பெற்றுக் கொள்வார்கள்.

பஸல்.

அல்லாஹுத் தஆலாவின் அர்ஷை கிதாபுகளில் வருகிற வர்ணிப்புபடிக்குக் கண்டால் எல்லா ஹாலிலும் கைருயிருக்கும். ஒரு கௌலின்படி அர்ஷைக் கண்டால் பெரிய இராஜாவைக் கொண்டும் தஃபீர் சொல்லப்படும். அர்ஷு சிங்காரிக்கப்பட்டதாகக்கண்டால் கண்டவன் ஏஹுப்பமான ஒரு மனிதனை தோழமை பிடிப்பான். அவனால் இவனுக்குச் சிறப்பும், தலைமைத்தனமும் உண்டாகும். இனி அர்ஷை பலபல வர்ணங்களால் சிங்காரிக்கப் பட்டதாகக் கண்டால் வரிசையும், அறிவுமுடைய தலைமைக்காரரைக் கொண்டு அவன் சேர்ந்திருப்பான், தகுதியும் மேலாகும். இனி அர்ஷை அழகில்லாத கோலத்தின்படிக்குக் கண்டவன் விஷயத்தில் குறைத்தலாகவும் அஷணிப்பாகவு மிருக்கும். இனி அர்ஷை யாதொரு வருத்தமில்லாமல் நெடுநேரமாக பார்க்கக் கண்டால் தன்னுடைய சல்தான்தனத்தில் நெடுங்கால மிருப்பான்.

பஸல்.

அல்லாஹுத் தஆலாவின் குருசைக் கண்டால் இல்முண்டாகும். இன்னுஞ் சிலர் சொல்லுகிறார்கள், குருசைக் கண்டால் ஆலிமான, காமிலான மனிதனைக் காண்பானென்றும் தஃபீர் சொல்லப் படுமென்று ஜாபிருல் மக்ரிபி சொல்லுகிறார்கள். குருசைக்கண்டால் அல்லாஹுத் தஆலாவுக்கு வழிப்பட்ட இமாம், அல்லது காமிலான தக்வாவுடன் துன்யாவை வெறுத்தவர், அல்லது நீதமுடைய இராஜா, அல்லது ஞானக்கமுடைய ஆலிமென்றும் தஃபீர் சொல்லப் படுமென்றும், இனி குருசை ஒளிவாக நிறப்பப்பட்டு மிகவும் அலங்கிருதமாகக் கண்டால் கண்டவன் மிகவும் ஹைபத்தையும், வாலிஹுதனத்தையு முடையவனாக யிருப்பான். இனி குருசை உலமாக்களி லொருவர் கண்டால் மற்றவர்கள் காணுகிறதைவிட மிகவும் ஏற்றமாயிருக்கும். அப்படிக் கண்டவராவில் நீதமான சல்தான்புறத்தால், அல்லது அமலுடைய ஆலிம் புறத்தால் கைறு சேரும், முதல் அதிகமாகும். ஆனால் குருசை அழகான கோலமில்லாமற்கண்டால் உலமாக்கள், ஹாகிமாக்

னுடைய கருமம் குறைத்த லுண்டாகிறதின் பேரிலறிவிக்கும். மொத்தத்தில் குருசைக் காண்கிறதில் ஷறஹுக்கு விரோதமில்லாத கருமமுண்டா யிருந்தால் கண்டவனுக்கு எப்போதும் சைறு தான். விரோதமா யிருந்தால் கண்டவனுக்குத் தீனிலும் துன்யாவிலும் கைறில்லை.

இனி லௌஹுல் மஹ்பூலைக் கண்டால் சொல் கபூல் செய்யப் பட்ட மூஃமினுன, ஆலிமான மனிதனென்றும் தஃபீர் சொல்லப் படும். அப்படிக்கண்டால் அல்லாஹுத் தஆலாவின் பாதையில் செலவு செய்கிற இணக்கமாக்கி வைக்கிற மனிதனென்றும் சொல்லப் படும். இனி கிர்மானீ சொல்லுகிறார்கள், அதைக் கண்டவனுக்கு இல்மும், குர்ஆனும், ஹிக்மத்தும் உண்டாகுமென்று தஃபீர் சொல்லப்படுமென்று. அதைச் சிறியதாகவும், தூஷணிப்பாகவும் கண்டால் கண்டவன் ஹால் கெட்டதாகுமென்றும், ஜாபிருல் மகரிபி சொல்லுகிறார்கள். இனி தன்னுடைய பெயர் லௌஹுல் மஹ்பூலு பலகையில் எழுதப்பட்டிருக்கக் கண்டால் தன் அஜல் முடுகிவிடும். இனி அதில் எந்த வஸ்துவாவது எழுதப்பட்டிருக்கக்கண்டால், அந்த வஸ்து தானே உண்டாக்கப்பட்டதா யிருக்கும். இனி குழந்தைகள் ஓதப்படிக்கப்பட்ட பலகைகளைக் கண்டால் தலைமையும், பிள்ளையும், நேர்வழியும், தன் கருமமும் செல்பிடியாகிறதும் உண்டாகிற தென்றும் கண்டவன் ஆலிமென்றும் தஃபீர் சொல்லப்படுமென்று ஐஃபருஸ் ஸாதிகு றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள்.

பஸல்.

அல்லாஹுத் தஆலாவின் குத்ரத்துடைய கலம் லௌஹுல் மஹ்பூலில் யெழுதப்பட்டபடியே உண்டாகும். ஆனால் எழுத்தை கொண்டு என்ன எழுத்து என்று விளக்கமில்லாதிருந்தால் கண்டவன் அல்லாஹுத் தஆலாவின் கல்குகளில் பிக்ரிட்டவனும் இருக்கிறான் என்று தஃபீர் சொல்லப்படும். கலமில் யாதொரு குறைவான கருமம் உண்டாகாம லிருக்கக்கண்டால் நலம். குறைவானது உண்டாயிருந்தால் கண்டவனுக்கு தான் நாடின கருமங்கிட்டாது இனி எழுதுகிற மற்ற கலங்களைக்கண்டால் பலமாதிரியாய் தஃபீர் சொல்லப்படும். ஒருவன் தன் கையில்

கலமிருக்கக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவனுக்கு வரிசையான ஆலிமாகிய பிள்ளையைக் கொடுப்பான். ஒரு கௌலின்படி இவனுக்கு வழிப்பாடும் இல்மும் உண்டாகுமென்று. இனி கலமால் எழுதக்கண்டால் தன்னுடைய ஹால் நல்லதாயிருக்கும். தன் ஹாஜத்தும் நிறைவேறும். இனி அதில் யாதொரு அய்பு இருக்கக் கண்டால் மேற் சொல்லியதற்கு மாற்றமா யிருக்கும். இனி கலங்கொண்டு எழுதுகிறதில் எழுதின எழுத்து விழாமலிருந்தால் கண்டவன் உத்தியோகஸ்தனு யிருந்தால் அவ்வுத்தியோகத்தைவிட்டு நீக்கப்படும். ஒரு சொற்படி அவன் கருமம் செல்லிடியாகாதென்று. இனி பெரியோர்களில் ஒருவர் தங்கள் கையில் நாலு கலமிருக்கக்கண்டு தஃபீர் கேட்டதற்கு நாலுவளீபா என்று சொல்லப்பட்டது. அப்படியே உண்டாயிற்று. இனி தன் கையில் சில கலங்கள் இருக்கக்கண்டால் எந்த ஹாலிலும் அது கைகூயிருக்கும். இனி கலம் சிசி முடியக்கண்டால் தன் கருமத்தில் உதவியுண்டாகும். சீவுதற்கு வருத்தப்பட்டு சீவி முடியாதிருந்தால் உதவியுண்டாகாது. இனி இன்னமையென்று அறியாமையினால் கலங்கொண்டு நெடுப்பமாய் எழுதக்கண்டால் கண்டவன் கெட்டவேலை செய்வான். இனி கலம்ஒடிய அல்லது பழுதாய் போகக்கண்டால் கைறில்லை. இனி எழுதப்படிக்கத் தெரியாதவன் கலங்கொண்டு எழுதக்கண்டதிலும் கைறில்லை.

பவல்.

சித்ரத்துல்முந்தஹாவை அதில் இலைகளெல்லாம் தரிப்பாட யிருக்கக்கண்டால் அக்காலத்திலும் அத்தலத்திலும் பிரபுக்கள் அதிகமாகிறதின்பேரி லறிவிக்கும். இனி அதில் இலைகளெல்லாம் அல்லது சிலது விழுந்திருக்கக் கண்டால் மரணமுண்டாகும் இனி அந்த இலையில் மஞ்சனிப்பான குறிக்கப்பட்ட பேருண்ட யிருந்தால் அந்த பேருடையவனுடைய அஜல் முடுகிவிட்டது அந்த இலை விழுந்திடக்கண்டால் பேருடையவன் வயது முடிந்து விட்டது. இனி அது இலை யில்லாமல் காலியாக காண்பது கைறில்லை. சிலகால் இந்த மனும்கண்டவன் கனவு யிடரில் நின்றும் யாது கருமத்தின்பேரி லிருந்தானே அந்தக்கருமம் தீர்மானமாய் விட்டதென்கிறதின்பேரி லறிவிக்கும். (வல்லாஹு அஃலம்.)

கஃபதுல்லாவைக் கண்டால் தஃபீருகிறது மூஸ்லிமானவர்களுக்கு முன்னிலையானவரென்றும் தஃபீர் சொல்லப்படும். ஆனதால் கஃபாவை அதிகமானதாகவும் அல்லது குறைத்தலானதாகவும் அல்லது யாதுவிதத்திற் கண்டாலும் அந்தப்படி மூஸ்லிமானவர்களுக்கு முன்னிலையானவரிலுண்டாகும். இன்னுஞ் சிலகால் கஃபாவைக்காண்கிறது அச்சந்தீர்கிறதின்பேரிலறிவிக்கும். ஆனதால் மக்கம் அல்லாத மற்றும்ஊரில்கஃபாவைக்கண்டால் அந்த ஊர் உடையவர்களுக்கு அச்சந்தீர்க்கிறதின்பேரிலறிவிக்கும் இனி கஃபாவைக் கொண்டு அதை தவாபு செய்து ஏதாகிலும் ஒருவனுக்குச் செய்யக்கண்டால் கண்டவன் தீனில் இணக்கமுண்டாகும். இனி யார்கிலும் கஃபாவைக் கண்டால் நீங்காமல் உதவியிலும் மேன்மையிலும், கல்தான தனத்திலுமா யிருப்பான். இனி யாராகிலும் கஃபாவைத் தன் முதுகுபுறமே இருக்கக்கண்டால் அல்லது கஃபாவுக்கு மேலே தொழக்கண்டால் இஸ்லாமைத் தன் முதுகுக்குப் புறமேயெடுத்து யெறிந்திட்டானென்று தஃபீர் சொல்லப்படும்.

ஹிக்காயத்து.

ஒருமனிதன் செய்யிதுனா ஸஃதுப்னுல் முஸைய்யிபு றலியல்லாஹு இடம் வந்து நான் கஃபாவுக்குமேல் தொழுகக் கண்டேனென்று சொல்லவும், அப்போது அவர்கள் சொன்னார்கள், நீ அல்லாவை பயந்துகொள், நிட்சயமாக தீனைவிட்டும் புறப்பட்டவனாக உன்னைக் காணுகிறேனென்று சொன்னார்கள். உடனே அந்த மனிதன் நாயகமே! இரண்டு மாதமாக கதரிய்யாக் கூட்டத்தாரின் சொல்லை தொடர்ந்திருந்தேன். இப்போது தங்கள் கையைப்பிடித்து தௌபாச் செய்கிறேனென்று சொல்லி தௌபாச் செய்தார்கள்.

பஸல்.

யாராகிலும் கஃபாவை முன்னோக்கி ருக்கூவு, சுஜூது முதலானதெல்லாம் கிரமமாக தொழுகண்டால் அல்லாஹுத் தஆலாவுடைய நேர்வழியின் பேரிலும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சுன்னத்தின் பேரிலும் தரிப்பட்டிருக்கிறான் என்று தஃபீர் சொல்லப்படும். ஆனால். தொழுகையில் ஏதாகிலும் குறைத்தலாகக் கண்டால் அவ்வளவுக்கு அவன் தீனில்

குறைதலாயிருக்கும். இனி கஃபா இன்னப்பக்கமென்று அறியாமல் தட்டழியக்கண்டால் அவன் தீனில் தட்டழிவும், வழிக்கேடும் உண்டாயிருக்கும். இனி தொழுகையில் ஏதாகிலும் அதிகப்படுத்தி தொழக்கண்டால் இஸ்லாமுடைய ருகுன்களில் குத்தபாடு சொன்னவனாக இருக்கும். அல்லது ஷக்குவைத்தவனா யிருக்கும். மஷ்ரிகை பார்த்து தொழக்கண்டால் கதரிய்யா கூட்டத்தார் சொல்லில் விஷயமாக யிருக்கிறானென்றும் தஃபீர் சொல்லப்படும். மக்ரிபு திசையைப்பார்த்துத் தொழக்கண்டால் ஜபரிய்யா கூட்டத்தார் சொல்லில் விஷயமாகயிருக்கிறானென்றும் சொல்லப்படும். அப்படிப் போல்தான். ஒருவன் தன்னை எஹூதியாக அல்லது நஸாறாவாக அல்லது மஜூசியா ஆய்விடக்கண்டால் அவர்களுடைய நோவினை தீவிரமாகும். அவர்களுக்கு இவன் உகந்தவனாயிருப்பான். இனி ஒருவன் புத்தை வணங்கக்கண்டால் அவன் அல்லாஹூத் தஆலாவின் பேரில் பொய்சத்தியஞ் சொல்லி பாத்திலானதை சொல்லுகிறவனா யிருக்கும், சிலகால் கள்ளுக்குடிக்கிறதின் பேரிலும் அல்லது பாவஞ் செய்கிறதின் பேரிலும் கேமமாயிருக்கிறதின் பேரிலா யிருக்கும். இனி அவன் வணங்குகிற புத்து வெள்ளியாயிருக்கக்கண்டால் பாபத்தைக் கொண்டு மூடினவன் அல்லது, ஒரு பெண் பிள்ளையைக் கொண்டு பாபத்திலானதை சொல்லுகிறவன். அந்த புத்து பொன்னாக இருக்கக்கண்டால் தனக்குப் பொருத்தக்கேடான கோபமாக்கிவைக்கும் கருமத்தைக் காண்பான். அந்தப்புத்து மரத்தினாலிருக்கக் கண்டால் அவனுடைய தீனில் கெட்ட மனிதனளவில் மூடுகுவான். அது இரும்பு அல்லது செம்பு அல்லது பித்தளையாயிருக்கக் கண்டால் துன்யாவைத் தேடுவான். இனி ஒருவன் நெருப்பை வணங்கக்கண்டால் தன்னுடைய தீனில் ஷைத்தானை காண்பான். அந்த நெருப்பு எரியக்கண்டால் ஹறுமான முதலைத் தேடுவான். இனி ஒருவன் மனிதர்களுக்கு கிப்லாவை முன்னோக்கி இமாமத்து செய்யக்கண்டால் சில கூட்டத்தாரின் கருமத்திற்கு தான் தலைமையாகி அவர்களுக்கிடையில் நீதம் செய்வான். இனி கிபுலாவை முன்னோக்காமல் இமாமத்து செய்யக் கண்டால் தன்னுடைய தலைமைத் தனத்தில் ஜனங்களை அநியாயஞ் செய்வான்.

பவல்.

ஹஜ்ஜுடைய மாதங்களில் பாங்குச் சொல்லக் கண்டால் சில நாள் சந்தானமிருந்து தீனுக்கு வெளிச்சம் உண்டாகும். ஹஜ்ஜு

டைய மாதம் அல்லாததில் பாங்குச் சொல்லக் கண்டால் அல்லது இட்டுமையான வக்தடங்கலிலும் ஸமான் அடங்கலிலும் பாங்குச் சொல்லக் கண்டால் அவனுடைய விஷயங்களும் சரியனதாயிருக்கும் என மனிதர்களில் வெளியாகும். இனி பள்ளிவாசல் மனரு இடிந்து விழக்கண்டால் அந்த தலத்துடையவர் தீனில் விதர்ப்பமாவார்கள். இனி பாங்குச்சொல்லி நிறப்பமாகாமல் கண்டால் நலமானவர்களின் நின்றும் ஸாலிஹானவர்களின் நின்றுமாயிருப்பான். இனி நிறப்பமாகாமல் கண்டது ஹஜ்ஜுடையதாயிருந்தால் ஹஜ்ஜுக்குப் போவான், அதை நிறப்பமாக்கிவையான். இனி ஹஜ்ஜுடைய மாதமில்லாததில் நிறப்பமில்லாமல் பாங்கு சொல்லக்கண்டால், ஏதாகிலும் இவன் களவுசெய்வான். இதை பிரஸ்தாபமாக்கப்படும். இனி பள்ளிவாசல் கட்டக்கண்டால் நலவின்பேரிலும் கலியாணஞ் செய்வதுபோத் கொத்ததின்பேரிலும் அறிவிக்கும். ஜமாஅத்துடன் மருகுதலாயிருப்பான். இனி ஒருவன் தான் அறியாதச் சொல்லால் பாங்குச் சொல்லக் கண்டதாக சொன்னால் சொன்னவன் கள்ளன். இனிதான் தம்பல் போட்டு ஒருவர் 'எர்ஹம் கல்லாஹு' என்று சொல்லக்கண்டால் ஹஜ்ஜைக் கொண்டும், உம்றுவைக் கொண்டும், நல்மானுயமாயிருக்கும். இனி ஹஜ்ஜுடைய மாதத்தில் தலைமுடி சிறக்கக்கண்டால் ஹஜ்ஜுச் செய்வான். ஆனால் ஹஜ்ஜுடைய மாதமல்லாததில் தலைமுடி சிறக்கக்கண்டால், தன் பைமுதலுமில்லாமல் போய்விடும். இதைச் சார்ந்த விபரம் பின்னால்வரும். இனி குதபா ஓத வலிஞ சொல்ல தகுதியானவன் மின்பரில் ஏறி குத்துபா ஓதக்கண்டால் வலுப்பமாகிய சுல்தான் தனத்தையும், சிறப்பையும் பெற்றுக்கொள்வான். அதற்கு தகாதவன் கண்டால் ஏழுவில் போடப்படுவான்.

ஹிக்காயத்து.

செய்யிதனு முஹம்மது இபுனு சிரி றஹிமஹுல்லாஹு இடம் ஒருவர் வந்து நான் பாங்கு சொல்லக் கண்டேனென்று சொல்லவும் அதற்கு உன்கையை தரிக்கப்படுமென்றுஞ் சொன்னார்கள். அந்த மனிதன் இருக்கும்போது வேறொருவர் வந்து நான் பாங்குச் சொல்லக் கண்டேனென்று சொல்லவும், நீ ஹஜ்ஜு செய்வாயென்று சொன்னார்கள். அப்போது இரண்டுபேர் கண்டதும் ஒரு விதமாயிருக்க, அவர்களுக்கு ஒரு விதமும், இவர்களுக்கு

ஒரு விதமுமாக என் தஃபீர் சொன்னீர்களென்று அவ்விடம் இருந்தபேர்கள் அவர்களிடம் கேட்டதற்கு, மூர்தினவரை நீங்களுடைய அடையாள மிருக்கும்படிக் கண்டேன். அதினாலப்படிச் சொன்னேன். 2-வது வந்தவரில் கைதுடைய அடையாள மிருக்கக்கண்டேன். ஆனதால் அப்படிச் சொன்னேன் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன படிக்குத்தான் ஆயிற்று. இனி சிலகால் பாங்குசொல்லக் காண்பது எல்லோருக்கும் ஒரு கருமத்தைப் பிரஸ்தாபஞ் செய்கிறதின்பேரி லறிவிக்கும். இனி முன்ஹனைப் பார்த்து குர்ஆன் ஓதக்கண்டால் இல்மையும், ஹிக்மத்தையும் பெற்றுக் கொள்வான். அப்படிப் போல்தான் குர்ஆனை ஓதக்கண்டாலும் ஹக்கான பேச்சை சொல்வான்.

அல்லாஹுத் தஆலாவை காண்பதின் தஃபீர்.

அல்லாஹுத் தஆலாவை காணுகிறது நல்ல கல்பாகவும் கெட்ட கல்பாகவும் இருக்கிற விதர்ப்பப்படிக்கு காக்ஷியும் விதர்ப் படுமாகும். இனி அல்லாஹுத் தஆலாவை ஏதொரு ஒப்புவமை ஏதொரு கைபியத்தும் இல்லாமல் அவன் தகுதி வனுப்பத்தால் கண்டால் கைறின்பேரி லறிவிக்கும். துன்யாவி லவனுக்கு நல்மாறுபமாகவும் ஆகிறத்தில் தன் தீன் சலாமத்தாகவும் இருக்கும். இனி ஒப்புவமை கைபியத்துபடிக்கு கண்டவன் கல்பு கெட்டதா யிருக்கும். மேலும் அல்லாஹுத் தஆலா இவனோடு பேசிக் கொள்ள காணுகிறதா யிருந்தால் மிகவும் கெட்ட கல்பாயிருக்கும். இனி ஒப்புவமை கைபியத்து இல்லாமல் ஹக்குத் தஆலாவை சகத்தப்பானவன் கண்டால் மௌத்தாவான், வழிகெட்டவன் நேர்வழி பெறுவான். இனி ஹக்குத் தஆலாவை ஏதொரு ஒப்புவமை இல்லாமல் பேசிக்கொள்ளக் கண்டால் கண்டவன் நூதனஞ் செய்கிறதின்பேரி லறிவிக்கும். அப்படிப் பேசக் காண்பது அச்சம்தீருதல், மேலெண்ணம் பெற்றுக்கொள்வதின் பேரில் சிலகால் அறிவிக்கும். இனி ஹக்குத் தஆலாவை காணாமல் அதன் பேச்சை மாத்திரம் கேட்டால் கண்டவனுடைய பதவி

மேன்மையா யிருக்கும். மேலும் கண்டவர் வஹி அறிவிக்கப் பட்டவரா யிருந்தால் பதவி மிகவும் மேன்மையாகும். ஆனால் ஒரு திரைக்கப்பா லிருந்து பேசக்கண்டால் சிலகால் கண்டவன் வழிகேட்டின் பேரிலும் பித்அத்தின் பேரிலு மிருப்பதி லறிவிக்கும். சிலகால் கண்ட கதறின்படிக்கு பதவியை பெற்றுக் கொள்வான். அப்படிக் கண்டவரிடம் அல்லாஹுத் தஆலாவின் தூதுவந்தால் மிகவும் மேன்மையை பெற்றுக் கொள்வான். அல்லாஹுத் தஆலாவை ஒரே மட்டிட்ட ரூபத்தில் கண்டால் அந்த மனுமியத் துக்கு தக்பீர் இல்லாத மனுமாயிருக்கும். அல்லாஹுத் தஆலாவை ஒரு தலத்தில் ரூபத்தாக்கப் பட்டவனாகக் கண்டால் கண்டவன் அல்லாஹுத் தஆலா பேரில் பொய் சொல்லுகிறவனா யிருக்கும், அல்லது ஹக்குத் தஆலாவுக்கு லாயிக்காகாதப் பேச்சை அவனளவில் சேர்க்கிறவனா யிருக்கும். இனி யாராகிலும் ஹக்குத் தஆலாவைக் கண்டுபேசி அவனளவில் பார்க்கவும் சக்திபெற்றவனாகக்கண்டால் அல்லாஹுத் தஆலா றஹ்மத்துச்செய்து நிஃமத்தையும் சிறப்பமாகக் கொடுப்பான். அல்லாஹுத் தஆலாவைப் பார்க்கக்கண்டால் ஆகிறத்திலும் காண்பான். அல்லாஹுத் தஆலா தன்பேரிலிறங்க அல்லது தன்னிடம் தொழுகக் கண்டால் றஹ்மத்தைக் கொண்டும் ஜெயம்பெற்ற பிஸைல் மௌத்தைத் தேடினவனாக யிருந்தால் அதையும் பெற்றுக்கொள்வான், துன்யா ஆகிறத்தின் கருணத்தில் நின்றும் தான் மேலெண்ணம் வைத்ததையும் பெற்றுக் கொள்வான். இனி அல்லாஹுத் தஆலா இவனோடு கழுத்தைக்கட்டி மினக இவன் உதட்டை முத்தமிடக் கண்டால் தான் தேடிய கூலியையும் அமலின் கூலியில் நின்றும் தான் அவேழ்க்கை யானதையும் பெற்றுக் கொள்வான். இனி துன்யாவின் வஸ்துவில் ஒன்றை அல்லாஹுத் தஆலா இவனுக்கு கொடுக்கக் கண்டால் இவனுக்கு பலாயும் ஈலையும் பிடிக்கும். அதனால் இவனுக்கு கூலியும் வருப்பமும், ஜவாபும் ஸிக்கும் இரட்டிப்பாகும். இனி அல்லாஹுத் தஆலா பிழை பொறுக்கிறது கொண்டு சொர்க்கத்தில் புகுதவிக்கிறது கொண்டு அல்லது இதுபோல் கொற்றதுகொண்டு வார்த்தைப்பாடு செய்யும்படிக் கண்டால் அல்லாஹுத் தஆலா அவனில் முன்னேக்கிறதை நீங்காமல் பயந்துக் கொண்டிருப்பான் என்கிறதின்பேரி லறிவிக்கும். வார்த்தைப்பாடு அல்லாஹுத் தஆலா செய்தபடிக்கு கிடைக்கும்.

இனி அல்லாஹுத் தஆலாவைக் கொண்டு அவனளவில் பார்க்க சக்தி பெறவில்லையானால் அல்லது அல்லாஹுத் தஆலாவின் அருவை குருவை அல்லாவன்றியே கண்டால் தனக்கு கைருனதை முற்படுத்திவைப்பான். இனி அல்லாஹுத் தஆலாவைக் கண்டு பேசி அவனைப் பார்க்கவும் சக்திபெற்றால் அல்லது அல்லாஹுத் தஆலாவை அவன் அர்ஷு குருஷின்பேரில் கண்டால் கைறையும் அதிக அறிவையும் பெற்றுக்கொள்வான். இனி அல்லாஹுத் தஆலா இவனைத்தேட இவன் அல்லாஹுத் தஆலாவை விட்டும் விரண்டோடக் கண்டால் இவன் ஆபிதாய் நந்தால் வணக்கத்தை விட்டிடுவான். இவனுக்குத் தாய் தகப்பனிருந்தால் அவர்களை வருத்தஞ் செய்வான். கண்டவன் அடிமையாயிருந்தால் எஜமானுக்கு மாறுசெய்து ஒளிப்பான். இனி அல்லாஹுத் தஆலாவுக்கும் இவனுக்கு மிடையில் பர்தாயிருக்கக் கண்டால் கண்டவன் பாவதோசஞ் செய்வான். இனி அல்லாஹுத் தஆலாவை கோபமாகவும் கடுகடுப்பாகவும் அல்லது தன் ஒளிவை சமக்க ஏலாதவனாகவும், அல்லது அல்லாஹுத் தஆலாவை கண்ட போது நிடுக்கமிட, அல்லது கமூத்தைக்கட்ட தௌபா பிழை பொறுக்க இதுபோல் கொற்றதில் அல்லாவிடம் கேட்கக்கண்டால் பாவதோஷம் பித்அத்து அமலியான கருமங்களின் பேரில் அறிவிக்கும். இனி அல்லாஹுத் தஆலாவுக்கு இவன் விஷகனம் அறிவிக்கக் கண்டால் குர்ஆன் மிகுதமாயோதுவான். அல்லாஹுத் தஆலா இவனுக்கு விஷகனம் அறிவித்து அந்தப் பேச்சை இவன் விளங்கிக்கொள்ளக் கண்டால் கல்தான் ஹுக்கிமுடைய பேச்சும் விளங்கமாட்டான். இனி அல்லாஹுத் தஆலா இவன் நிலைமை நடவி பறக்கத்துச் செய்வானென்று சொல்லக் கண்டால் அல்லாஹுத் தஆலா இவனைக்கருமத்தைக்கொண்டு தனதாக்கி முடிருதலாக்கிக் கொள்வான். ஆயினும் இவன் மௌத்தாமிற வரைக்கும் இவனை விட்டுப் பலாய் முஸீபத்து நீங்காது. இனி அல்லாஹுத் தஆலா தாய் தகப்பனுர் உடற்பிறப்பு குடல்வாய்ஜனம் உவப்பானவர்கள் ஞாத்திக்கண்டால் அல்லாஹுத் தஆலா இவனுக்குக்கிருபை, பறக்கத்துச்செய்வான். இனி கூலி வலுப்பமாகிறதற்காக இவன் இடமத்தில் பலாய் முஸீபத்து பிடிக்கும். அல்லாஹுத் தஆலா கோபமில்லாமல் ஒரு இடத்தில் வரக்கண்டால் அத்தலத்தில் கைறு அதிகமாகும்.

கோபமாக அல்லது இருளாக வரக்கண்டால் அத்தலம் பாழாகி அத்தல முடையவர்கள் ஹலாக்காகி அத்தலத்தில் பலாய் முஸீபத்து வபா இறங்கும். இனி அல்லாஹுத் தஆலாவை இவன் ஏசித் திட்டும்படிக்குக் கண்டால் இவன் அல்லாஹுத் தஆலா கொடுத்த நிஃமத்துக்கு மாறுசெய்து அல்லாஹுத் தஆலா இவனுக்குக் கட்டளை யிட்டு பங்குவைத்த றிஸ்கை பொருந்தாதவனாகவு மிருக்கும். இனி அல்லாஹுத் தஆலா சமுகம் தரிப்பட்டு அல்லாஹுத் தஆலாவைப் பார்த்து அவனோடு பேசக்கண்டவன் ஸாலிஹானவனா யிருந்தால் மிகவும் நல்லது. அப்படி யில்லாதவரையிற் கண்டவன் அல்லாஹுத் தஆலாவை பயந்துக்கொள்ளவும். அல்லாஹுத் தஆலா ஒருவடை அணையக் கண்டால் துக்கம் பிடிக்கும். இவனுக்கு அல்லாஹுத் தஆலா தன் பேரின் அல்லது வேறே பேரினால் பேர் வைக்கக்கண்டால் இவன் கருமம் மேலாகும். சத்துராதிகளையும் மிகைத்துக் கொள்வான். இனி அல்லாஹுத் தஆலா கோபமாகக் கண்டால் தாய் தகப்பனார் கோபத்தின் பேரில் அறிவிக்கும். இனி தாய் தகப்பன் பேரில் கோபமாகக்கண்டால் அல்லாஹுத் தஆலாபேரி லறிவிக்கும். இனி அல்லாஹுத் தஆலா கோபமாகக்கண்டால் உயர்ந்த தலத்திலிருந்து விழுவான். உயர்ந்த சுவர் மலை வானம் போல் கொற்றதில் இருந்து விழக் கண்டால் அல்லாஹுத் தஆலாவின் கோபத்தின் பேரில் அறிவிக்கும். இனி ஒருசூரத்து போல் கொற்றதை அல்லாவென்று சொல்லப்பட்டு இவனும் அதற்கு ஸுஜூது செய்யக்கண்டால் ஹக்கு என்றும் எண்ணமாக பாத்திலின் பேரில் சிக்கிக் கெடக்கிறான் என்கிறதின் பேரி லறிவிக்கும். இனி இவன்தானே ஹக்குத் தஆலாவாக ஆயிடக் கண்டால் திட்டமாக நேர்வழிப் பெற்றுக்கொண்டான். (ஆமீன்.)

பஹல் மனாமில் ஹக்கானதும் பாத்திலானதும் விவரிப்பது.

ஹக்கான மனாம் 5-விதமுண்டும்:—1-வது வெட்டவெளிச்சமாக உண்மையான மனாம். இந்த மனாம் மலக்கு அறிவிக்காமல் ஹக்குத் தஆலா தானே அறிவிப்பது ஈகோயகம் மக்கத்தைப்

பிடிக்க கனவும் கண்டுபிடித்தது போலும், இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாம் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமை அறுக்கக் கண்டது போலும் இதற்கு பிசகத்ததென்றும் சொல்லப்படும். 2-மலக்கு அறிவியாமல் அல்லாஹுத் தஆலா தானே நல்லதைக்கொண்டு சுபசோபனஞ் சொல்வது கெட்டதைக்கொண்டு அச்சம் பூட்டுவது இந்த °-கனவும் அல்லாஹுத் தஆலாவை அறிவிப்பது, ஹக்குத் தஆலாவை நபிமாரை முஸ்லீமான தாய்தகப்பன்மாரை கனவில் கண்டாலும் இந்தப் பகுதியிலுள்ளதாயிருக்கும், 3-வது கனவுமுடைய வித்திகள் என்றமலக்கு அல்லாஹுத் தஆலா உம்முல் கித்தாபில் நின்றும் அறிவித்து ஒவ்வொரு வஸ்துகளுக்கும் இன்ன இன்ன ஹிக்மத்தான, விளக்கமான, உவமையான உவமையாக்கிவிக்கும்படி உதிப்பாக்கி வைத்தபடிக்கு அறிவிக்கிறதாயிருக்கும், 4-ரூஹின் புறத்திலுள்ள, அதெப்படியெனில், ஒருமனிதன் மலாயிக்கத்துகளில் நின்றும் ஒருமலக்கு இவனைப்பார்த்து உன் பெண்சாதி உன் தோழன் இன்னானுடைய கையால் உனக்கு நஞ்சூட்ட நாடுகிறுனென்றுச் சொல்லக்கண்டால் அந்தத் தோழன் இவன் பெண்சாதியை சிறுசெய்கிறுனென்று தஃபீராயிற்று. 5-வது அத்தாட்சியால் விஷ்றஹத்தாகிற கனவும், அந்த கனவின்பேரில் அத்தாட்சி பிகைப் பாக்கி ஷர்ரை கைருகவும் கைரை ஷர்ருகவும் ஆக்கப்படும். எப்படியெனில், பள்ளிவாசலில் தன்பூரடிக்கண்டது போல் கண் கெட்டதை விட்டும் அல்லாஹுத் தஆலா அளவில் தௌபாச் செய்து மீள்வான். இவன்பேரும் பிரபல்யமும் எங்கும் பறக்கும். இது ஷர்ருனதை கைருக்கி வைப்பதற்கு உவமை. இனி கைருனதை ஷர்ருக்கிவைக்க உவமை. எப்படியெனில் குளிக்கிற வெந்நீர் புதையைப் போல்கொற்ற உர்யானு சித்திற இடம்போல் கொற்றதில் குர்ஆன் ஓதக்கண்டால், அல்லது அதுகொண்டு கூத்துக்கும் மாளிக் கேளிக்கையாடக் கண்டால் கெட்ட கருமத்தில் இவனைப் பிரசங்கமாக்கப்படும். இனி பாத்திலான கனவும் 7-வகையுண்டு. அதில் 1-வது தன் நப்ஸுர், ஹிம்மத்தும் ஆதாவு வைப்பதும் ஒன்றுக்கொன்று தாக்கலில்லாத விஷயங்களைக் காண்பதுபோல். 2-வது குளியை வருத்திவிக்கும். காருக்கோட்டியைப் போல். 3-வது ஷைத்தான் பயமாக்கி வைக்கிறது அமளியாக்கிவிக்கிறது. இது இவனை நங்கடஞ் செய்யாது. 4-வது ஷைத்தான் வருத்தமாக்கி வைப்பதுபோல் முனிவிலும், தின்னிலும்,

வஞ்சனைச்செய்வார்கள். மனுமில் அறிவிப்பது 5-வது ஷைத்தான் மனுவில் அறிவிக்கிற பாத்திலான கருமங்கள். அதை மனுமென்று எண்ணக்கூடாது. 6-வது சரீரத்திலுள்ள தக்சவாக் குணங்கள் சரியில்லாமல் விதர்ப்பமாகிக் கலக்கமாயிருக்கும் போது அந்த குணங்களின் காரணத்தால் காணுகிற மனுங்கள். 7-வது இருபது வருஷத்திற்கு முன்கண்ட மனு பின்படி கண்ட மனுமும் ஆக இந்த ஏழு மனுமும் பாத்திலான மனும். இதற்குதஃபீர் கிடையாது.

மனும் காணும் காலங்களின் தஃபீர்.

குளிர்காலங்களிலும், வேனல்காலங்களிலும் கண்ட மனும் மிகவும் பலஹீனமானது. மாரிகாலத்திலும், வேனலிலும், குளிர் இல்லாத நடுத்தரமான காலங்களில் கண்டமனும் மிகவும் உண்மையானது. அதிலும் பழங்கள் பழுக்கிற காலத்தில் கண்டமனும் மிகவும் உண்மையானது. பழங்கள் விழுகிற, அல்லது கொய்கிற காலத்தில் காண்பது மிகவும் பலஹீனமானது. இனிமாதங்களில் சபரிலும் ஷவ்வாலிலும் தவிர மற்ற 10-மாதங்களிலும் காணுவது மிகுதம் நல்லது. கெட்டது மிகவும் சுருக்கம். ஸபரிலும், ஷவ்வாலிலும் காணுவது கெட்டது அதிகம். நல்லது காண்பது சுருக்கம். இனி நாளில் புதன்கிழமை தவிரமற்ற நாள்களில் காணுவதெல்லாம் நல்லதாக அறிவிக்கும். நேரங்களில் பகல்நேரம் காணுவது இரவில் காண்பதைக் காணமிகவும் திரமானது. வக்துக்களில் ஸஹருடைய வக்திலும் மதியத்திற்கு கொஞ்சமுந்தியும் காணுவது உண்மையானது. ஆனால் பொழுது உதிக்கும்போதும் அடையும்போதும் உச்சிமத்தியத்திலும் கண்டமனுமுக்கும் தஃபீர் கிடையாது. இனி கிப்லாவை முன்னோக்கி வலதுபக்கம் நித்திரை செய்யும்போது கண்டால் அல்லாஹுத் தஆலாவின் புறத்திலுள்ள தானதால் உண்மையான மனும் அதிலும் துப்புரவாக உளூவு, அல்லது தயம்மம் உடன் நித்திரை செய்தால் ரூஹு, இபாதத்து செய்யும். ஆனதால் கண்டமனும் மிகவும் உண்மையானது. இனி இடதுபக்கம் அல்லது முதுகின்பேரில் மல்லார்ந்து படுத்து நித்திரைசெய்யும் போதுகண்டால் ரூஹின் புறத்தால் உள்ளதானும் சில மனும்

ஸிஹ்ஹத்தாகும். சிலது ஸிஹ்ஹத்தாகாது. இனி கவிர்ந்து வயிற்றின் புறமாக படுத்து நித்திரை செய்யும்போது காணுவது விருதாவானதாயிருக்கும்.

பஸல்.

மனாம் கண்டபடிக்கு பலிக்கிற காலத்தை விபரிப்பது. இரவின் துவக்கத்தில் காண்பது 20-வருஷத்திற்கு பிறகு பலிக்கும். இரவின் துவக்கத்தில் ¼-பங்குபோக முக்கால் வாசியின் துவக்கத்தில் கண்டால் கண்டதற்கு 15-வருடம் என்றும், இரவில் அரைவாசியில் காண்பது கண்டதற்கு 10-வருடம் என்றும், இரவில் முக்கால் வாசியில் காண்பது 5-வருடமென்றும் இந்தபடிக்கு இரவின் 30-நாழிகையும் 20-வருடத்திற்கு சவு பிரித்து பார்க்க, ஒரு வருடத்திற்கு ஒன்னரை 1½-நாழிகையானால் கடைசி விடிய 1½-நாழிகை இருக்கும்போது கண்ட மனாம் ஒரு வருடத்தில் பலிக்குமென்றும் ஆனது. இனி ஸுபுஹு ஆனபின் அதின் துவக்கத்தில் கண்ட மனாம் ஒருமாதத்தில் பலிக்கும். பகல் குறைய குறைய மாதமும் குறையும். பகல் 30-நாழிகையும் மாதம் 30-நாளைக்கும் சவுபிரித்து பார்த்ததில் ஒரு நாளைக்கு ஒரு நாழிகை ஆயிற்று. அந்தப்படிக்கு முக்கால் பகலின் துவக்கத்தில் கண்டாலும் முக்கால் மாதமும் அரைப்பகலின் துவக்கத்தில் கண்டால் அரைமாதத்திலும் முக்கால் பகல் சென்றபின் கண்டால் காலுமாதத்திலும் 30-நாழிகையில் கண்டால் ஒருநாளிலும் கண்டது பலிக்கும். அந்தந்த நாளிலும் இந்தப்படிக்கு பொரு ஒழுங்குப்படிக்கு பிரித்துப் பார்த்துக் கொள்ளவும். அந்தப்படிக்கு பார்த்தால் கண்ட மனாம் உடனே பலிக்கிறதும் உண்டும். அறியவும். கிர்மானீ சொல்லுகிறார்கள், மிகவும் ஸஹீஹான மனாம் என்கிறது யாதொரு குணமில்லாமல் நல்ல நீதி நித்திரை செய்யும்போது கண்ட மனாம்தானென்றார்கள். ஆனால் அலிறலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள், ஒரு மனிதன் ஒரு வஸ்துவைக்கண்டால் உண்டாகிறது சிலது பலிக்காமலும் போகின்ற கருத்தாவது செய்யிதுனா உமரிப்னுல்கத்தாபு றலியல்லாஹு அன்ஹு சொன்னதுபோலவே ஒருவன் நித்திரை செய்தால், அவன் றூஹை வானத்தளவிம் உயர்த்தப்படுகிறது அந்த றூஹு வானத்தளவில் சேர முன்காண்பது பலியாது. வானத்தளவில் சேர்ந்தபின் காண்பது பலிக்குமென்று சொன்னார்கள்.

தன்பீஹ்.

அறிந்துகொள், மனுஷன் பொய் சொல்லுவது மனுமை பசாதாக்கி அதை அதின் அஜலைவிட்டும் திருப்பிவிடும். ஹதீது நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் மனுஷில் பொய் சொல்லுகிறதை விட்டும் கடினமான விலக்காக விலக்கியிருக்கிறார்கள். இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள், ஒருவன் என் பேரில் மனமூறன்டாக பொய் சொன்னால் அவனுக்குத் நகம் நரகமா யிருக்குமென்றும் இன்னுமொருவன் அவன் நபியின் பேரில் அல்லது அவன் தாய் தகப்பன் பேரில் அல்லது அவன் உஸ்ப்பானவன் பேரில் பொய்சொன்னால் சொர்க்கத்தில் வாடையை யேற்றிக்கொள்ளமாட்டான் என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். மூன்றுபேரை யோமத்து நாளையில் கடினமான அதாபு செய்யப்படும். அதில் மூன்றினவன் அவன் மனுஷில் பொய் சொல்லுகிறவன். இவனை இரண்டு கோதும்பை முடியும்படி கொடுத்து அடிக்கிறவரையும் அதாபு செய்யப்படும். இவனால் முடிய ஏலாது. இரண்டாவதானவன் சிலை செய்கிறவன். அதற்கு றாஹூ விடும்படி சொல்லி றாஹூவிடுகிறவரையும் அதாபு செய்யப்படும். அவனால் றாஹூவிட ஏலாது. இன்னுமொருவன் சில மனிதர்களுக்கு இமாமத்து செய்வான் அவர்களெல்லாம் இவனை பொருத்தக்கெட்டவர்களா யிருக்கையில் என்று.

இனி மனுஷ் கண்டவன் தஃபீர் கேட்கவேண்டிய விபரம் பயங்கரம் நிடுக்கம் அமளியைப்போல் கொற்ற ஷைத்தான் காரு கோட்டியாக்கிவைக்கிற மனுஷ் கண்டால் உடனே எழும்பி இடது பக்கத்தில் திரும்பிக்கொண்டு மூன்றுதரம் 'அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர்றஜீம்' என்று சொல்லப்படுகிறதானால் வலது பக்கத்தில் படுத்துக்கொள்வான். அந்த மனுமை ஒருவருக்கு மறிவிப்பாமல் மறைத்துக்கொள்வான்; அப்படி வெளியாகினால் பித்தனசமிமானம் போல் கொற்றதனவில் வருத்திவிடும். ஆனால் பாவத்தை விட்டும் விலக்கிறதும் உஷார்தப்பாயிருக்கிறதின் பேரில் உணர்வை வருத்துகிறதும் ஹலாக்காக்கிபோடுகிற அமல்களைவிட்டும் நிரட்டுகிறது போல்கொற்ற ஷைத்தானுடைய புறத்தானுள்ள தல்லாததால் இது போற்கொற்றவைகளைச் சொல்லிக்காட்டுவான். அப்படிக் கொற்ற மனுமையும் மற்றும் மனுஷ்களையும் மனுஷில்

தஃபீர் அறிந்த ஆலிம், அல்லது தனக்கு நல்ல உபதேசம் சொல்லுகிறவர் அல்லது தன் கூட்டத்தாரில் நின்றும் நல்ல புத்திபோதனையுடையவரிடம் தான் சொல்லிக்காட்டவேண்டும். தஃபீர் அறியாதவன் சத்துராதி, ஹஸதுக்காரன் கொடுப்புக்காரன் இவர்களிடம் சொல்லக்கூடாது. இன்னும் பாலிகாகாதவன் பெண்பிள்ளையிடத்திலும் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் கனவும் சொல்லக் கேட்டவன் எப்படிச்சொன்னானோ அப்படி ஆகிப்போகும் என்றும், மிருந்தவர்கள் இவனுக்கு அவர்கள் விரோதக்காரராயும் தெரியாத மூட்டாளாயும் இருப்பதால் சொல்லக்கூடாது. மேலும் காணாததை கண்டேனென்று பொய்சொன்னால் லஃனத்து உண்டாகிறதந்தவிர யோமகாளில் அதாபும் செய்யப்படும். துன்யாவிலும் அதின் கெடுதி இவனுக்கே வந்து சம்பவிக்கும். சகலத்திலும் உண்மையானவன் கனவும்தான் உண்மையாயிருக்கும். ஆனால் தான் பொய்சொல்வான், பிறர்பொய்சொல்லப் பொருந்தாதவன் கனவும் சிலது பொய்யாயிருக்கும், மற்றது நிஜமாயிருக்கும். தானும்பொய் சொல்லுகிறான், பிறத்தியார் பொய்சொல்லுகிறதையும் பொருந்துகிறவனுடைய கனவுகளும் பொய்தான். காபிர், முனாபிகு, பாஸிகு, பொய்சொல்லுகிற குழந்தை இவர்கள் போற் கொற்றவர்கள் கனவும் சில சமயம் துருஸ்தாகும். பொய் சொல்லாத குழந்தை கண்டகனவும் சரியானது. மய்யத்தும் மிருகங்களும் கனவில் பேசக்கண்டால் உண்மை. கல் சுவடு பேசுவது மப்படி தான்.

(தன்பீகு) தனக்கு லாயிக்காகாத நல்லகனவும், அல்லது கெட்டகனவும் கண்டால், அல்லது அப்பேர்க் கொற்றவனைக்காணப் பட்டால் கண்டவன், அல்லது, காணப்பட்டவனுடைய அன்னைச் சுற்றத்தாரில் அவன் போற் கொற்றவர்களில் அதற்கு லாயிக்கானவர்களுக்குண்டாகுமென்று தஃபீர் சொல்லப்படும். அதெப்படியெனில், அபுஜஹ்லுடைய மகன் முஷ்ரிகா மௌத்தானபின் அவன் சொர்க்கத்திலிருக்கும்படியாக நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கனவுகண்டு, இதாபுப்னு உசைது றலியல்லாஹு அன்ஹு அவனைப்போல் இருந்ததால் சொர்க்கத்தில் இதாபுப்னு உசைது றலியல்லாஹு அன்ஹுவை கண்டதாக தஃபீர் சொன்னது. இது போல் மற்றதையும் பார்த்துக் கொள்ளவும்.

பசல்.

தஃபீர் சொல்லுகிறவன் குர்ஆன், ஹதீது அந்தந்த பாஷையின் நடப்பதான உவமானம் சொல்லவும், பிரஸ்தாபமான வைத்து கவி இதுகளின் பொருள்களை நீக்க விளங்கி அறிந்தவனு மிருக்க வேண்டும். இனிகாலம், நேரம் கோலம் விதர்ப்பமாகிறது கொண்டு அதற்கு தகுந்தபடி தஃபீரையும், மனிதர்களின் தகுதிகளையும் அறிந்தவனு மிருக்கவேண்டும். இனி குர்ஆனைக் கொண்டு தஃபீர் சொல்வது அல்லாஹு தஆலா நூஹையும் அவருடன் கப்பலில் ஏறினவர்களையும் ஈடேற்றமாக்கி விட்டோ மென்று குர்ஆனில் திருவுளமானது போலே. ஆனதால் கப்பல் தோணிபோற்கொற்றதில் ஏறக்கண்டவனுக்கு ஈடேற்றத்தைக் கொண்டும், குர்ஆனில் பெண் பிள்ளைகளை முட்டையைப்போ லென்று வந்திருப்பதால் முட்டையைக் கண்டவனுக்குப் பெண் பிள்ளையென்றும் கல்லை கல்புபோலென்றும், மீனை மணமான கனி யென்றும் இதுபோல் குர்ஆனில் எந்தந்த வஸ்துவைப்பற்றி எதெதற்கு உவமைச் சொல்லப்படுகிறதோ அந்தந்த வஸ்துவைக் கொண்டும் தஃபீர் சொல்லப்படும்.

ஹதீது.

எந்தந்த வஸ்துவை எந்தந்த வஸ்துவுக்கு உவமைச்சொல்லப் பட்டிருக்கிறதோ அந்தந்த வஸ்துவைக்கொண்டவனுக்குத் தஃபீர் சொல்லுவான். எப்படியெனில் காகத்தைப்பாஸிகென்று வந்திருப் பதால் காகத்தைக்கண்டால் பாஸிகானவனென்றும், எலியை பாஸிகானவளென்றும் வந்திருப்பதால், பாஸிகானவளென்றும் தஃபீர் சொல்லப்படும். இனி லோகத்திலுள்ள உவமான வார்த் தையைக்கொண்டு தஃபீர் சொல்லுவது குடையாளிகை கெடுப் பமானவனென்று சொல்வதால் கைகெடுப்பமாகக்கண்டால் குடை யாளியென்றும் கோளுருண்டுனி சொல்லுகிறவனுக்கு விறகு சேகரிக்கிறவனென்றும் சொல்வதால் அப்படிச்சேகரிக்கக் கண்ட வனுக்கு கோள்சொல்லுகிறவனென்றும் எந்தெந்த உவமானம் எதெதற்கு சொல்லப்படுகிறதோ அந்தந்த வஸ்துவைக் கண்ட வனுக்கு அந்தந்த உவமையைக் கொண்டு தஃபீர் சொல்லப்படும். இனி நாமத்தைக்கொண்டு தஃபீர் சொல்வது பலுது என்றது

வரிஸை. அந்தப் பேருடையவனைக் கண்டால் வரிஸையென்று தஃபீர் சொல்லப்படும். இந்தப்படியே மற்றதையும் பார்த்துக் கொள்ளவும். இனி மனாமை கொண்டு தஃபீர் சொல்வது எப்படியெனில், தரிப்பாடில்லாத பூப்போற்கொற்றதைக்கண்டால் கொஞ்சம் நாளிருக்குமென்றும், தரிப்பாடான ஆணிமரம் போற்கொற்றதைக் கண்டால் தரிப்பாடாயிருக்குமென்றும் தஃபீர் சொல்லப்படும். இனி கண்டதற்கு மாற்றமாகக் கண்டால் தஃபீர் சொல்வது எப்படியெனில், சப்தம் முழக்கமில்லாமல் அழக் கண்டால் சந்தோஷமென்றும், சந்தோஷம் சிரிப்புக்கண்டால் துக்கமென்றும், மல்கட்டி தோற்றப்போகக் கண்டால் மிகைப்பாவென்றும் ஹஜ்ஜாமத்துச் செய்யக்கண்டால் பத்திரம் எழுதிக் கொடுப்பானென்றும், பத்திரம் எழுதிக்கொடுக்கக் கண்டவன் ஹஜ்ஜாமத்து செய்வானென்பது இதுபோல் பார்த்துக்கொள்ளவும்.

(இஃலம்) அறிந்துகொள், மனாம் ஓரேவிதமாக யிருக்க அவரவர்களின் தஃபீர் விகற்பமாகும். நல்லவர்களுக்கு விலக்கு போடக்கண்டால் ஷர்ரும் பஸாதும் இல்லாமையாய்விடும். கெட்டவன் கண்டால் பாவம் அதிகமாகி நரகம் புகுதுவான்.

(இஃலம்) அறிந்துகொள், மனாம் ஓரேவிதமா யிருப்பதுடன் வக்து விதர்ப்பமாயிறது கொண்டு தஃபீர் விதர்ப்பமாகும். எப்படியெனில் இரவில் யானை ஏறக்கண்டால் பிரயோஜனமான வலுப்பமான கருமம் பெற்றுக்கொள்வான். இனி பகலில் யானைமே லேறக்கண்டால் பெண்ஜாதியை தலாகு சொல்வான்.

(பஸ்லு) மனாமுடைய அஸ்லு ஜின்சென்றும் இன்ன இனமென்றும் ஜின்பென்றும் இன்ன வகையென்றும் தபயென்றும் இன்ன குணமென்றும் மற்றது அததற்குத் தக்கபடி தஃபீர் சொல்லவேண்டும். எப்படியெனில் ஜின்ஸாயிறது மரம், மிருகம், பக்ஷி இதுகளைக் கண்டால் ஆண்பிள்ளைகளென்றும் தஃபீர் சொல்லப்படும். ஸின்பாயிறது ஈத்தமரம் அரபுதேசத்தில் அதிகமானதால் அதைக் கண்டால் அறபி ஆண்பிள்ளையென்றும், தென்னைமரம் அறபுதேசத்தில் இல்லாததாலும் மற்றதேசத்தில் அதிகமானதால் அதைக்கண்டால் அஜமி ஆண்பிள்ளையென்றும் தஃபீர் சொல்லப்படும். தப்உயிறது அந்தந்த வஸ்துவின்

குணத்தை அறிந்து சொல்வது எப்படியெனில், சத்தமாம் கைறும் சிறப்பும் அதிகமானதால் கைரையும், சிறப்பையும் அதிகமானவனென்றும், தென்னைமரங் கண்டால் கொடுக்கல் வாங்கலில் சதிமானமும், வழக்கும், மனவருத்தமும் உண்டாகும் மனிதனென்றும் சொல்லப்படும். இனி பறவையைக் கண்டால் பைருளியான ஆண்பிள்ளையென்றும், அது மயிலாயிருந்தால் மூதலும், அழகும், ஜனமுடைய அஜமி ராஜாவென்றும், காகங் கண்டால் பாவிகானவனென்றும் தஃபீர் சொல்லப்படும்.

(தன்பீகுன்) ஒரு வஸ்துவைக்கண்டால் அந்த வஸ்து எந்த இடத்தில் அதிகமாயிருக்கிறதோ அந்த இடத்திலுள்ள ஆண்பிள்ளையென்றும், இன்ன இனம், இன்னவகை, இன்ன குணமென்று திட்டமாக அறிந்து சொல்லவேண்டும். மேற்சொன்னதெல்லாம் தஃபீர்களைப் பாருமால் குர்ஆன் ஹதீது அந்தந்தப் பாஷை தீர்க்கமாய் விளங்கி சொல்லுகிறவர்களுக்கு பொசெடுத்து சொல்லும் காயிதாவாக யிருக்கும்.

(பாயிதா) தஃபீரின் பாயிதா சுத்தமாக அறியாதவன் அல்லது அறிந்தவனுக்குத் தஃபீர்சொல்ல பிசகிக் கொண்டால் மனும் கண்டவனைச் சனிக்கிழமை உதயத்தில் யார்கண்ணில் முழிப்பானோ அவன் பேரைக்கேட்டு சொல்லும்படிச் சொல்வான். அப்படிக் கேட்டுச்சொன்னால் அந்தப்பேர் நபிமார் வலிஹானவர்கள் பேரைப்போல் நல்ல பேராயிருந்தால் கண்டமனும் நல்லதென்றும், அப்படி அல்லாவிட்டால் கெட்டதென்றும் சொல்லவும்.

இன்னுமொரு சுருக்கமானது, தஃபீர் கேட்கிறவனுடைய பேரை அப்ஜது கணக்காக்கி மொத்தஞ் சேர்த்து பத்து பத்தாகக் கழித்து 1-மிஞ்சினால் கண்டவன் ஹால் அழகாகும். 2-மிஞ்சினால் பைர் போவான். 3-மிஞ்சினால் மூஹப்பத் துண்டாகும். 4-மிஞ்சினால் சஷத்திரத்தைக் கணக்கறிந்தவனும் சோறுமாய்விடுவான். 5-மிஞ்சினால் தன்வீரில் அநேக கட்டத்தார்ள்க புகுதுவார்கள். 6-மிஞ்சினால் தனக்கு வலுப்பமான சங்கையான கருமமுண்டாகும். 7-மிஞ்சினால் மிருகம், அவ்வாய்மிருகம் அவைகளைச் சந்திப்பான். 8-மிஞ்சினால் ஆபத்துகளை விட்டும் தன்னைத்தானே பேணிக் கொள்ளவும். 9-மிஞ்சினால் லாவ்வத்து ஜமா அத்துக்காரர்களுக்

இடையில் பஸாதும், பித்னவும் உண்டாகும். 10-மிஞ்சினல் துல்ஹஜ்ஜா பத்திலும், ஆஷூறா ஜும்ஆ போற் கொற்றதில் தவாபு உண்டாகிறதின் பேரில் அறிவிக்கும்.

(தன்பீஹு) குற்ஆன் ஹதீது, உவமை இதுகளில் இஷாறு வாகவும் உவமையாகவும் சொல்லப்பட்டதுகளை கண்டால் தக்பீர் சொல்லுகிறதில் பரிஷ்காரமாய்ச் சொல்லுவதின் தக்பீர் ஒரு சமயம் கெட்டதாயிருந்தால் இரகசியமாய் இணக்கமாய்ச் சொல்ல வேண்டும். இன்னும் தக்பீர் கேட்கிறவனுடைய வாயிலிருந்து துவர்க்கமாய்ப் புறப்படுகிற எழுத்தைக் கொண்டு தக்பீர் சொல்லவும். எப்படியெனில் சீன் புறப்பட்டால் ஸலாமத் தென்றும், கே புறப்பட்டால் கைறென்றும், இந்தப்படிக்கு அந்தந்த ஹர்புகளைப்பார்த்துச் சொல்லும்படிக்கு கிதாபுகளில் வருகிறது. வல்ஹம்து லில்லா வஸல்லல்லாஹுத் தஆலா வஸல்லம வபாறக் அலா கைறி கல்கிஹி ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

மஆனியின் பயான் முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

வைத்திய சுருக்கம்.

பெண்களுக்குக் கருத்தரித்தது முதல் பேறுகாலம் வரைக்கும் பிண்டத்தின் நிலைமைகளும், வியாதிகளும், அதற்குத்தக்க அவிழ்தங்களையும் பேசும் பயான்.

கருத்தரித்தபின் கருப்பையின் நிலைமை.

பெண்டுகளுக்குக் கருத்தரித்து 4-மாதம் வரையில் இடைக் குழியில் தானே கருப்பை அடங்கியிருக்கும். பிறகு மர்ஸ்தான எலும்பிற்கு மேலாகவரும், ஸ்திரீயின் தேகம் உணக்கலாயிருந்தால் அது விரல்களுக்கு அகப்படும். 5-ம் மாதம் மேற்படி எலும்பிற்கும் நாபிக்கும் மத்தியஸ்தானம் வரையில் வரும். அப்போது அடிவயிர் பலக்கும். 6-ம் மாதம் தொப்புளுக்கு நேராய்வரும். அப்போது தொப்புள் பிதுக்கும். 7-ம் மாதம் தொப்புளுக்கும் ஈரல் குழிக்கும் மத்தியமாய் வரும். 8-ம் மாதம் ஈரல்குழி வரையில் உயர்ந்து வயற்றை நிரப்பிக்கொள்ளும். குடலானது கருப்பாசயத்திற்கு மேலும் பின்புறமாகவு மிருக்கும். 9-ம் மாதம் கருப்பையானது வளர்ந்திருந்த போதிலும் வயற்று. சதைகள் தளர்ச்சியாகிறபடியால் அது கொஞ்சம் தாழ்ந்துவிடும். கருப்பாசயம் விர்த்தியடைவதில் கருப்பையின் கழுத்து ரூபத்தில் விகாரப்படும். கருப்பையின் வாயும் ரூபபேதமடைந்து அதை விரிக்கக்கூடுமான தாகும். கருப்பையின் கழுத்திலிருக்கிற துவாரம் வினித்த பதார்த்தத்தால் அடைந்திருக்கும். . முதல் மூன்று மாதம் வரையில் கருப்பையின் வாய் யதாஸ்தானத்தை விட்டு

கொஞ்சச் தாழ்ந்த முன்னுக்கு வந்திருக்கும். ஆனால் கருப்பையானது இடைக்குழியை விட்டும் மேலுக்குப் போகப் போகப் பின்னிட்டுவிடும். ஐந்தாம் மாதம் கழுத்து குறைய ஆரம்பித்து ஆறாம் மாதம் கால்பங்கும் ஏழாம் மாதம் அரைபங்கும் எட்டாம் மாதம் முக்கால்பங்கும் ஒன்பதாம் மாதம் முழுமையும் குறைந்துவிடும்.

நஞ்சினுடைய விபரம்.

கருவானது கருக்குழியில் வரும்போது இரண்டு சவ்வுகளால் ஏற்பட்ட ஒரு பைக்குள்ளிருக்கும். அந்த சவ்வானது கோழி முட்டைக்குள்ளிருக்கிற சவ்வைப்போற் கொற்றது. அந்தப்பையில் ஜலமுண்டு, அதற்கு உதயஜலமென்றும் பெயர் சொல்லப்படும். அந்த ஜலத்தில் கரு மிதைத்துக் கொண்டிருக்கும். மேற்கூறிய சவ்வானது கருப்பையோடு அணைந்திருக்கிற ஸ்தானத்தில் மேற்படி சவ்வில் இருந்தே நஞ்சமாகும், அல்லது மாயை உண்டாகின்றது. இது பஞ்சுபோல் மிருதுவாய் இரத்த நரம்புகளால் ஏற்பட்டு கருப்பாசயத்திற்கு உட்புறத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும். நஞ்சானது கருவிற்குப் புப்பிசத்திற்குச் சமானம், நஞ்சிலிருக்கிற நரம்புகளின் கொஞ்சம் கருப்பையின் நரம்புகளுக்கு மத்தியமாய்ச் சென்று இரத்தத்தைக் கரிக்கின்றது. நஞ்சு ஒட்டிக்கொண் டிருக்கிற ஸ்தானம் ஒருவருக்கொருவர் மாறுபடும். பிறவைத்திற்கு முன்னதாய் ஸைப்ரேனுவால் இந்த இடத்தைத் தெரிந்துக் கொள்ளலாம். இடது பக்கமாய் ஒட்டிக்கொண்டிருப்பது வழக்கம். நஞ்சிற்கு அநேக வியாதிகள் சம்பவிக்கும். அவைகளால் பிண்டம் பின்னப்படுவதுமுண்டு.

நாபிக்கொடியுடைய விபரம்.

நாபிக்கொடி, நஞ்சக்கொடி அல்லது தொப்புள் கொடியானது சிசுவின் நாபிக்கும் நஞ்சிற்கும் சம்பந்தப்பட்டிருக்கும். இது நஞ்சின் மத்தியில் ஒட்டிக்கொண் டிருப்பதுமுண்டு. சாதாரணமாய் யாவருக்கும் 18-அங்குல நீளமிருப்பது வழக்கம். ஆனால் சிலருக்கு வித்தியாசப்படும். யாவருக்கும் 12-அங்குலத்திற்குக் குறைந்தும் 64-அங்குலத்திற்கு அதிகமாயுமிராது. சிசு ஜனித்து சுமார்

20-நிமிஷம் சென்றபிறகு அதிலிருக்கிற நாடிகளை நின்றுவிடும். தொப்புள் கொடியை துண்டித்தபிறகு அது ஐந்தாறுநாளில் உலர்ந்து விழுந்துவிடும். நாபிக்கொடியானது கருவிலுள் சவ்வின் மையிக்குள் குழந்தையின் சிரசுமேலாக தொங்கிக் கொண்டிருக்கும், சிலவேளை சிசுவின் கழுத்தை சுற்றிக்கொண் டிருப்பதுமுண்டு.

உதபஜலத்துடைய விபரம்.

உதபஜலம், அல்லது பனிநீர் என்று சொல்லப்படுமானது கருவிருட்புற சவ்வில்நின்றும் பிறக்கின்றது. அதில் ஜலமும் உப்புகளுமுண்டு. குறைந்த மாதங்களில உப்புகள் அதிகமாக இருக்கும். பனிநீரினளவு சிலருக்கு குறைந்தும் சிலருக்கு அதிகமாகவுமிருக்கும்; சுமார் 13-பலம் இடையிருப்பது வழக்கம். இதின் உபயோகம் கருவளர்த்தி ஆரம்பத்தில் சிசுவின் போஜனைக்கு ஆதாரமாகின்றது, உஷ்ணத்தை சமரசப் படுத்துகின்றது, குழந்தைக்கு அடி முதலியவைகள் படாமல் தடுக்கின்றது. இன்னும் முக்கிய உபயோகம் என்னவெனில் பிரசவக்காலத்தில் சவ்வுகளை முன்னுக்குத்தள்ளி பைபோல் ஏற்பட்டு கர்ப்பாசையின் வாயை விசாலப் படுத்துகின்றது. அதை பனிக்குடம் என்றும் ஸ்திரீகள் சொல்வார்கள்.

கருத்தரித்த 1-ம் மாதம் கருவின் நிலைமை.

கிரீடிப்பதில் தரித்த கருவானது சிலநாள் சென்றபிறகு கருப் பாசையில் வந்திறங்கும். பிண்டப்பைக்குள் உருண்ட அணு ஒன்று காணப்படும். அது சுருண்டு ரூபங்களேற்படாமலிருக்கும். கெர்ப் பந்தரித்த முதல்மாதம், கடைசியில் கருவானது இன்றுஜமூங்காக் கருப்பையின் சம்பந்தமாகிய ஓர்வித சவ்வின் மேற்பாகத்தில் ஓர் சிறியகொடியினால் சம்பந்திக்கப் பட்டிருக்கும். தலை முதலிய அவயவங்கள் எளிதில் கண்டுபிடிக்கக் கூடாததாயிருக்கும். நீர்ப்பையும் கல்லீரலுமாத்திரம் கொஞ்சம் பெரியதாயிருக்கும். வாயானது ஒரு பள்ளமான கேத்தாய் தோற்றப்படும். கண்கள் இரண்டும் இரண்டு கருப்புப் புள்ளிகள்போல் தோற்றப்படும். கருவின் நீளம் சுமார் அரைஅங்குல முள்ளதாயிருக்கும். இக்காலத்தில் தாய்க்கு வலிகண்டதானால் இதின் கீழ்கண்ட முறையைச்செய்து உபயோகித்தால் வலி நிற்கும்.

கெர்ப ஸ்திரிக்கு 1-ம் மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

தாமரைபூ, சந்தனம், விலாமிச்சவேர் வகைக்கு விராகனிடை (2) எடுத்து பசம்பால் விட்டரைத்து பாக்களவு விகிதம் பசம் பாலில் கொடுத்தால் வருகிற வலிதீரும்.

கருதரித்த 2-ம் மாதம் கருவின் நிலைமை.

இரண்டாவது மாதத்தில் கருவானது சற்று வளர்ந்து தலை தோற்றப்படும், கழுத்துகாணக்கூடாததாயும் முகத்தில் பஞ்சேந்திரியங்கள் குறிப்பிடக் கூடியதாயும், கைகால் முதலிய அவயவங்கள் தெளிவாகும். ஐந்தாவது வாரத்தில் தொப்புளானது ஒருபட்டாணி கடலை பிரமாணம் தொப்புள் கொடி தெளிவாகவும், நரம்புகள் இரத்த குழல்களுடன் சேர்க்கப்பட்டு மிருக்கும். தொப்புள் கொடியினுடைய இரண்டு இரத்த குழல்களும் நரம்புகளும் தொப் புளிலிருந்து குழந்தையினுடைய குடலித்துச்செல்லும். நஞ்சுக் கொடிவளர ஆரம்பிக்கும். இருதயமும் ஆண் பெண் குறிகளும் தோற்றப்படும். இரண்டாவது மாதம் கடைசியில் பிண்டமானது சுமார் ஒன்றையங்குல நீளமுள்ளதாயிருக்கும். இன்னுளில் தாயிக்கு காணும் கெர்பவலிக்கு இதின் கீழ்கண்ட முறைப்படி செய்து அருந்த சுகம் தரும்.

2-ம் மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

தக்கோலம் தாமரைப்பூவும் வகைக்கு விருகனிடை 5-சேர்த்து பசம்பால்விட்டு அரைத்து பாக்களவு விகிதம் பசம்பாலில் கலக்கிக் கொடுக்க வலிதீரும்.

கருதரித்த 3-ம் மாதம் கருவின் நிலைமை.

மூன்றாவது மாதக்கடைசியில் அவயவங்கள் பிரத்தியேகமாக பிரிக்கப்பட்டு தெரியும். ஜனனேந்திரியங்களை காணப்படும், ஈரல், கல்லீரல், மண்ணீரல், இறப்பை, குடல் முதலிய அவயவங்கள் உற்பத்தியாகும். இருதயத்தினுடைய அறைகள் பிரிக்கப் பட்டிருக்கும். கண் இரப்பைகள் வாய் மூக்கு முதலிய துவாரங்கள் மூடப்பட்டிருக்கும். நாசியும், காதும் காணப்படும். பிண்டம் சுமார்

இரண்டரை அங்குல நீளமாயிருக்கும். இன்னாளில் கெர்பவலிக் கண்டொனால் இதன் கீழ்கண்ட அவிழ்தத்தை பாகப்படுத்தி கொடுததால் வலிதீரும்.

3-ம் மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

வெண்தாமரைப்பூ, செக்கழனீர் கிழங்கும் வகைக்கு விராகனிடை 2-சேர்த்து பசுவின்பால் விட்டரைத்து பாக்களவு பசுவின் பாலில் கலக்கி கொடுத்துவர வலிதீர்ந்து சுகந்தரும்.

கருதரித்த 4-ம் மாதம் கருவின் நிலைமை.

நான்காமாதக் கடைசியில் ஆண் பெண் சித்தியாசம் நன்றாய்க் கண்டறியலாம். வாய், ஆசன முதலியன திறக்கப்படும், நகங்களும் சற்றுத்தோற்றப்படும், பித்தப்பை உண்டாகி மேல்குடலில் மலமுமிருக்கும், சுமார் ஐந்தரை அங்குல நீளமும், இரண்டரை பலம் நிறையுமுள்ளதாய் இருக்கும். இன்னாளில் தாயிக்கு கெர்பவலியுண்டானால் கீழ்கண்டமுறை செய்யவும்.

4-ம் மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

நைதாகிழங்கும், கொச்சிவேரும் வகைக்கு விராகனிடை 3-சேர்த்து பசுவின்பால் விட்டரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கி கொடுக்க வலிதீரும்.

கருதரித்த 5-ம் மாதம் கருவின் நிலைமை.

ஐந்தாம் மாத்தில் கடைசியில் தோல் மிருதுவாயிருக்கும். நகமும் ரோமமும் நன்றாய் தோற்றப்படும். தலை இருதயம் இவை பெரியதாயிருக்கும், பித்தப்பையும் நன்றாய் யிருக்கும், மூளையினுடைய வெண்மை நிறமாகிய வஸ்துகள் தோற்றப்படும், சுமார் ஆறு அங்குல நீளமும், 5-பலம் நிறையுள்ளதாயு மிருக்கும். இம் மாதத்தில் சூஷா உகப்படும், தாயாருக்கு கருவின் அசைவு தோற்றப்படும், இம்மாதத்தில் முடிவில் பிண்டம் உறுப்புகளெல்லாம் பூரணமடையும். அன்னாளில் தாயாருக்கு கெர்ப்பவலியுண்டானால் இதின் கீழ்கண்ட முறைகளை செய்ய சுகந்தரும்.

5-ம்மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

அம்பர்பூவும், விலாமிச்சவேரு வகைக்கு விராகனிடை 3-சேர்த்து பசுவின்பால் விட்டரைத்து பாக்களவு விகிதம் பசும்பாலில் கலக்கி சாப்பிட்டுவர வலிதீரும்.

கருத்தரித்த 6-ம்மாதம் கருவின் நிலைமை.

ஆறும் மாதத்தில் கல்லீரல் பெரியதாயும், சிகப்பாயும் தோற்றும். பித்தப்பையில் கொஞ்சம் ஜலமிருக்கும், பெருங்குடலில் மலமிருக்கும், ரோமம் தெளிவாயிருக்கும், கண் இரப்பைகள் மூடியிருக்கும், மேல்தோலில் வெள்ளைபாஷி அடைந்தது போல் இருக்கும், சுமார் 9-அங்குல நீளமும், 13-பலம் நிறையுள்ளதாயிருக்கும். இன்னாளில் காணும் கெர்பவலிக்கு இதின் கீழ்கண்ட அவிழ்தங்களை உபயோகித்தால் வலிதீர்த்து சுகந்தரும்.

6-ம்மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

திப்பிலி, நிருட்கஷி, கைதர்கிழங்கு வகைக்கு விராகனிடை 2-சேர்த்து பசும்பாலில் விட்டரைத்து பாக்களவு பசுவின்பாலில் கலக்கி சாப்பிட்டுவர வலிதீரும்.

கருதரித்த 7-ம்மாதம் கருவின் நிலைமை.

ஏழாம் மாதம் கடைசியில் மூளையானது அழுத்தமாகவும், சிகப்பாகவும் நகங்கள் தெளிவாகவும், பித்தப்பையில் பித்தநீரும் குண்டிக்காய்கள் கெட்டியாகவும், பீசங்கள் இறங்கியும், சுமார் 18-அங்குல நீளமும், 40-பலம் நிறையுமுள்ளதாயும் இருக்கும். இன்னாளில் தாயாருக்கு கெர்பவலியுண்டானால் இதின் கீழ்கண்ட முறையைச் செய்யவும்.

7-ம்மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

விலாமிச்சவேர், சந்தனம், தக்கோலம் வகைக்கு விராகனிடை 1-சேர்த்து பசுவின்பால் விட்டரைத்து பாக்களவு பசுவின்பாலில் கலக்கிக் கொடுத்தால் வலிதீரும்.

கருதரித்த 8-ம்மாதம் பிண்டத்தின் நிலைமை.

எட்டாம் மாதம் கடைசியில் மூளையில் ஒருவிதமான வரிகள் அல்லது ரேகைகள் காணப்படும். தோல் வெண்பாசு படர்ந்தது போலும் விரல்களின் நுனியில் நகங்கள் கெட்டியாகவும், பீசங்கள் மூன்னிலும் சற்று கீழிறங்கியும் சுமார் 15-அங்குல நீளமும் 58-பலம் நிறையுள்ளதா யிருக்கும். இன்னாளில் தாயாருக்கு செர்பவலியுண்டானல் இதின் கீழ்கண்ட அவிழ் தங்களை பாகப் படுத்தி அருந்திவர வலி தீர்ந்து சுகந்தரும்.

8 ம்மாதம் காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

தாமரைப்பூ, நைதர்கிழங்கு வகைக்கு விழுகனிடை 2-சேர்த்து பசுவின்பால் விட்டரைத்து பசுவின்பாலில் கலந்து கொடுத்துவர வலி தீரும்.

கருதரித்த 9-ம்மாதம் பிண்டத்தின் நிலைமை.

ஒன்பதாம் மாதத்தில் அல்லது பிள்ளைபெறும் மாதத்தில் மூளையானது வெள்ளையாகவும், சாம்பல் வர்ணமாகவும் தோற்றும், வரிகள் தெளிவாய் தெரியும். நகங்கள் வெண்மையாகவும் விரல்களுக்குமேல் நீண்டதாகவும் இருக்கும். தோல்முழுவதும் சிகப்பாகவும் பாசிபடர்ந்து பீசம் அடிக்கிறங்கியும் மலம் ஆசனத்திலும் தொப்புள் கொடியானது தலைக்கும், பாதங்களுக்கும் மத்தியிலுமிருக்கும். சுமார் 18-முதல் 20-அங்குலம் நீளமாயும் 80-முதல் 100-பலம் நிறையுள்ளதாயிருக்கும். இன்னாளில் தாயாருக்கு செர்பவலிகண்டால் இதின் கீழ்கண்ட முறைகளைசெய்து அருந்திவருவதால் வலி நீங்கி சுகந்தரும்.

9-ம்மாதம காணும் கெர்பவலிக்கு நிவர்த்தி.

அரசம் பட்டை, மருதம் பட்டை வகைக்கு விழுகனிடை 3-சேர்த்து பசும்பாலில் அரைத்து பாக்களவு பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்க வலிதீரும்.

கெர்பஸ்திரிக்கு காணும் துவாலேக்கு நிவர்த்தி

கைதர்கிழங்கு, அதிமதுரம், சந்தனம் வெள்ளிலோத்திரம் இவைகள் வகைக்கு விழுதனிடை ¼-சேர்த்து ஜலம் விட்டரைத்து மூன்று பங்குசெய்து ஒருபங்கு விதம் பச்சரிசி கழுனீரில் கலக்கி காலையில் 3-நாள் கொடுக்க குணமாகும்.

துவாலேயால் காணும் தாகமூர்ச்சைக்கு நிவர்த்தி

அரசங்கொழுந்து, ஆலங்கொழுந்து, மாவிலிங்கொழுந்து, அத்திவிலிங்கொழுந்து இவைகள் வகைக்கு அவுன்ஸ் 1-சேர்த்து ஒருபாத்திரத்தில் ஒருபடி ஜலத்தை வார்த்து அதில் பொடித்து போட்டு அரைபடியாக வத்தக்காய்ச்சி இறக்கி வடித்து கால்சேர் விகிதம் கொடுக்க தாகமும் மூர்ச்சையும் நீங்கி சுத்தமாகும்.

கெர்பஸ்திரிகளின் ஜுரத்திற்கு நிவர்த்தி

சித்தாமுட்டிவேர், பேருமுட்டிவேர், சீந்திர்கொடி, திப்பிலி, சுக்கு சிலவேம்பு இவைகள் வகைக்கு விழுதனிடை 1-படி ஜலத்தில் பொடித்துப்போட்டு ¼-படியாக வற்றக்காய்ச்சி கஷாயத்தில் கால் சேர் விகிதம் நாளொன்றிற்கு இரண்டு தடவை கொடுத்துவர குணமாகும்.

கெர்பவதிகளுக்குண்டாகும் காலை வாந்திக்கு நிவர்த்தி.

கெர்ப்பவதிகளுக்குண்டாகும் காலை வாந்தியானது பெரும் பாலும் கெர்பம் தரித்த 2-மாதம் முதற்கொண்டு 3-மாசம் கடைசி வரையில் இருப்பது வழக்கம். ஆனால் சிலருக்கு பிரசவகாலம் வரையில் இருப்பதுமுண்டு. இதற்கு பரிகாரம்.

நிவர்த்தி சாத்தியமில்லை. அதை கவனியாமல் கண்டதை கொடுத்து ஸ்திரீயை துன்பப்படுத்தாமலிருப்பது நன்று.

கெர்பவதிகளுக்குண்டாகும் இருமலுக்கு நிவர்த்தி

கெர்ப்பவதிகளுக்குண்டாகும் இருமலானது நாள் வண்ணத் திருக்கிற இரத்தத்திலிருந்து உண்டாகிற ஓர்வித ஆவியினுள்

உண்டாகின்றது. இருமல் அதிகப்படுவதினுல் கருவி ஏதேனும் நீக்குண்டாகும்.

(அதற்கு நிவர்த்தி) வருபேதிகளிலொன்றைக் கொடுத்து வருவாய் மலத்தைகழித்து கொண்டபின் இந்த கசகசா ஷர்பத்தை சாப்பிடவும்.

கசகசா ஷர்பத்து நிவர்த்தி

தேவையான கசகசாவை எடுத்து அதற்கு நாலிலொருபங்கு பேரீத்தங்காய் சேர்த்தெடுத்து கம்பளியில் மூடிந்து அவற்றில் நான்குபங்கு ஜலத்திற்விட்டு அடுப்பேற்றி சக்தியிறங்கக் காய்ச்சி இறக்கி நன்றாய்ப் பிசைந்து வடிகட்டி பின்னும் காய்ச்ச ஆடைபடியும். அவ்வாடை மூறியும் சமயத்தில் அதற்கு சமானமான சர்க்கரை சேர்த்து காய்ச்சி பதத்தி லிறக்கிக்கொண்டு வேளைக்கு பலம் 1-சாப்பிட்டுவரவும். இருமல்தீரும், பிறகு மூளைக்கு வலுவைக்கொடுக்கும். பதார்த்தங்களையும் முக்கியமாய் உபயோகித்து வரவேண்டும்.

கெர்பவதிகளுக்குண்டாகும் மலபந்தத்திற்கு நிவர்த்தி.

கெர்பவதிகளுக்குண்டாகும் மலபந்தமானது கருப்பை கீழிறங்கி ஆசனமானது நெருக்குண்டு போவதினுல் உண்டாகின்றது. இது பிரசவத்தின் பின் தானே நீங்கிவிடும். ஆனுல் அதிக நோம் இல்லாமலிருப்பதினுலும் அடிக்கடி படுத்திருப்பதினுலும் நன்மை உண்டு. மலபந்தம் அதிகமாயிருந்தால் இதின் கீழ்கண்ட முறைப்படி செய்து அருந்தவும்.

(நிவர்த்தி) நிலாவிரை, ரோஜாப்பூ முதலியவைகளின் கஷாயம் பன்னீரில் சமானமான சர்க்கரைவிட்டு காய்ச்சி ஷர்பத்து ளை இனங்கள் நிலாவிரை தவைபல், சரக்கொன்றை வாழைப்பழம் அத்திப்பழம் முதலியவைகளிலொன்றை கொடுத்துவர மலம் தாராளமாய்போகும்.

கெர்பவதிகளுக்குண்டாகும் பேதி நிவர்த்தி.

கெர்பவதிகளுக்குண்டாகும் பேதியானது பெருந்திண்டி அபக்குவப்போஜனம், அசுத்தஜலம், துர்வாசனை, அக்காரணம் பயம் அதிக உஷ்ணத்தில் சஞ்சரிப்பு ஆகியவைகளால் காணும். வசந்தகாலத்தில் காணுகிற பேதிக்கு உஷ்ணமே காரணமாகும் இதில் பேதியோடு குமட்டல், வாய்நாற்றம் வயிற்றிரைச்சல், வயிற்று கழிச்சல்; புளியேப்பம் முக்கல் முதலிய குணங்களுண்டாகும்.

(இதற்குநிவர்த்தி) வாழைக்கச்சல், வாழைப்பூ, அத்திப்பிஞ்சி, மாங்கொட்டை பருப்பு, வெந்தியம் முதலியவைகளை பக்குவப் படுத்தி கொடுத்துவரவேண்டும். அதற்கு வசப்படாவிட்டால் மாசிக்காய் நெல்லிமுள்ளி, தான்றிக்காய், மாதுளம் ஓடு, கடுக் காய்ப்பூ ஆகிய இவைகளை சமானமாய் சூரணித்து வேளைக்கு அரை விருகனிடை தயிர், நெய், தேன் இவற்றில் கொடுத்து வரவும்.

கெர்பவதிகளுக்குண்டாகும் நீர்பை தளர்ச்சி நிவர்த்தி.

கருப்பையானது நீர்பையை அழுத்துவதினுல் கர்ப்பிணிகளுக்கு நீர் பை, தளர்ச்சி உண்டாகின்றது. இப்படிப்பட்டவர்களுக்கு அடிக்கடி நீரிறங்கும், நீரை அடக்கிக் கொள்ள ஏலாது. அப்படி ஒரு வேளை அடக்கின போதிலும் கெடுதிமேலிடும். இதற்கு நிவர்த்தி, பாலரிசிகஞ்சி இஞ்பகோல்விரை ஊரவைத்த நீர் ஆளிவிரை கஞ்சி சுண்ணும்பு தெளிவுடன் பால் சமானமாய்ச் சேர்த்து முதலியவைகளைக் கொடுக்கவும், வசப்படும்.

கெர்பவதிகளுக்குண்டாகும் நீர்கட்டுக்கு நிவர்த்தி

உடனே வென்னீர் ஸ்நானம் செய்விக்க நீரிறங்கும். இன்னும் அரைபடி வென்னீரில் பச்சை கீழாநெல்லிக்காய், அருகன் வேர் துத்தியிலை, வெள்ளரிவிரை இவை வகைக்கு பலம் 3-போட்டு 2, 3-மணிநேரம் ஊரவைத்து பிசைந்து வடிகட்டிக்கொண்டு கால் ஆழாக்கில் 4-குன்றி இடை பொரித்த வெங்காரம் சேர்த்து கொடுக்கவும். வெங்காரத்தைக் கொடுப்பதில் அதிக கவனம் வேண்டும், அது குருவாகத்தக்க மருந்து.

மனிதர்களுக்கு வரும் வியாதிகள் அனைத்திற்கும் அவிழ்தமுறைகளை பேசும் பிரிவு.

நேத்திர ரோகங்களின் குணம்.

கண் சிவந்து உரித்திவலிக்கும், பீளைச்சாடும், நீர்வடியும், பார்வை மந்தமாயிருக்கும்.

நிவர்த்தி.

கடல்நுரையும், கற்கண்டும் ஓர்நிறையாய்த் தேனில் உரைத்துக் கண்ணிலிட தீரும். அதில் கேளாவிட்டால் இந்துப்பு, மரமஞ்சள் மனோசிலை, திரிகடுகு இவைகளைச் சமானமாய் பசுவின் பால் விட்டரைத்து தயிறச்செய்து மேற்படி பாலில் உரைத்து கண்ணிலிட தீரும். அதிலும் மாறாவிட்டால் இந்துப்பு, சதகுப்பை, சங்கு, மனோசிலை, கடல்நுரை, மிளகு, செங்கற்பொடி இவைகளை ஓளவாய் எலுமிச்சம்பழத்தில் அரைத்து தயிறசெய்து பசுவின் நெய்யில் உரைத்துப்போடவும்.

கண்ணில் நீர்வடிதலுக்கு.

வெள்ளைசாரளை வேளை தேனிலுரைத்து விழியிற் போடவும் தீரும்.

கண்வலிக்கு.

கரியுப்பை பொரித்து பொட்டணங்கட்டி நீராகார ஜலத்திற் றுவைத்து இரண்டு நாழிகைக் கொருவிசை நேரத்தில் பிழியகண் வலி உடனே மாறும்.

கண்சிவப்பு கடுப்பிற்கு.

தேத்தான்விரை, கடுக்காய்த்தோல், புளியம்விரை தோல் இவைகளை மைபோல் பொடித்து வஸ்திரத்திற்கட்டி முலைபாலில் ஊறவைத்து பின்நேரத்தில் பிழிந்துவர உடனே சிவப்பு மாறி கடுப்பு நிற்கும்.

கண்ணில் பூவிழுந்தால்.

மொசுமொசுக்கை இரசமும், நற்சீரகமும், ஓர்நிறையாய் முலைப்பால் விட்டிடித்து கண்ணிற்பிழிய மாறும்.

வேறு.

உத்தமதாளி, செஞ்சில், முருக்கை இவைகளின் பூவும் வெள்ளைச்சாறடை கொழுந்தும், சருன்ளியும், சீரகமும்வகைக்கு விராகனிடை கால்வீதம் முலைப்பால்விட்டரைத்து கண்ணிற்பிழிய மாறும்.

வேறு.

சிறுகளாவேர், கடுக்காய், இந்துப்பு, பழம்புளி இவைகளை ஓர் நிறையாய் முலைப்பால்விட்டு இடித்து வெளுத்ததுணியில் முடிந்து, நாளொன்றிற்கு மூன்று விசை மூன்று நாள் பிழிந்துவர பூமாறி சுகமாகும்.

பூ வெள்ளெழுத்திற்கு.

பீதரோகணி, நற்பவளம், சாறடைவேர் இவைகளைச் சமனமாய்த் தண்ணீரில் அரைத்துக் தயிறச்செய்து முலைப்பாலில் உரைத்துக் கண்ணிற்போட பூமாறும். தண்ணீரில் உரைத்துப் போட்டு வர வெள்ளெழுத்து மாறி சுகந்தரும்.

கண்ணில் சதை வளர்த்திக்கு

சருள்ளியும், குருஞ்சாவும், ஓர்நிறையாய் சிதைத்து மூன்று நாள் சீலையிற்கட்டி நேத்திரத்திற் பிழிந்துவர நீங்கும்.

கண்ரோகங்களுக்கு மை.

சிறுக்கீரை, பொன்னுக்கண்ணி, வேலிபருத்தி, கரிப்பான் மூவிலைபின்னி, பாடவிரை, துளசி, தூதுவளை புளியாரை, விஷ்ணுகாந்தி இவைகளின் சாறுகளை புதுசட்டித்தூரில் பத்துதடவை பூசி உலரவைத்து பின்பு மேற்படி சாறுகளில் துணியை நனைத்து உலர்த்தி நெய்விட்டு தீபங்கொளுத்தி மேற்படி சட்டித்தூரில் மைபற்ற வைத்து எடுத்துக்கொண்டு துத்தம், துருசு குன்றிப் பிரமாணஞ் சேர்த்து ஆவின் வெண்ணெயாலரைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர சகல கண்ரோகங்களும் நீங்கும்.

கண்ரோகங்களுக்கு தைலம்.

வெட்டிவேர், விலாமிச்சம்வேர், மூத்தக்காசு, நன்னாரிவேர் நெல்லமுள்ளி, மரமஞ்சள், சந்தனம், மகிழமலர் வகைக்கு பலம் 1, இவைகளை இடித்து பதக்குத்தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி அதில் பச்சைக்கோளம், நன்னாரி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கோஷ்டம், சந்தனம், இலுப்பமலர், சதக்குப்பை, குங்குமமலர், சடாமாஞ்சில், வெள்ளைக்குங்கிலியம், மனோமலர், புனுகு, கைதர்கிழங்கு, கடுகுசெவியம், தான்றிக்காய், அஞ்சனக்கல், அதிவிடயம், அதிமதூரம், சண்பகமலர், மஞ்சிட்டி வகைக்கு கழஞ்சி 1, இவைகளை அரைத்துப்போட்டு அதுடன் நல்லெண்ணெய் நாழி விட்டு பதமாய்க்காச்சி பிறத்து முழுகிவர தலைமயக்கம், உடம்பெரிவு, மதிமயக்கம், கண்திமிலம், பெரிய படலகாசம், இழிகண்பூ, சதைவளர்தி, நீலகாசம் முதலான அநேகரோகங்கள் நீங்கும்.

காதில் சீமாரலிக்கு அவிழ்தம்.

சத்திசாரணைக்கிழங்கு, ஊளாவேர், நெல்லிவேர், கையாந்தகரை, செருப்பு நெருஞ்சில் இவைகளை ஓர் நிறைபாய்கட்டி, வேப்பெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி விட்டடைக்கத் தீரும்.

வேறு.

பெருங்காயம், உள்ளி, வசம்பு இவைகளை ஓர் நிறைபாய் சிதைத்து வேப்பெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி காதில்விட தீரும்.

வேறு.

இஞ்சி, எருக்குகள்ளி, முருங்கை துளசி, திருநீற்றுப் பச்சை, மிதிபாகல், கருவாழைக்கிழங்கு இவைகளின்சாறு வகைக்கு நாழிவீதம் நல்லெண்ணெய் நாழிகால், ஒன்றாய்க்கலந்து காச்சி காதில்விட்டுவர சீழ்நின்று சுகந்தரும், நாள் தவறாமல் விட்டுவரவும்.

காதிரைச்சலுக்கு நிவர்த்தி.

தைவேளைச்சாறும், நல்லெண்ணெயும் ஓரளவாய்க்காய்ச்சிக் காதிலடைக்கத் தீரும்.

காதிரைச்சல் வலிக்கு நிவர்த்தி.

முசுமுசுக்கை இலையும், வெள்ளுள்ளியும் சிதைத்துக்காதில் பிழிய இரைச்சல் நின்று வலி தீரும்.

காதினுள்ளிருந்து புழுவிழுதலுக்கு நிவர்த்தி.

செப்பு நெருஞ்சி, பேய்பீர்க்கம்வேர், கருஞ்சீரகம், வசம்பு இவைகளை ஓர் நிறைபாய் வேப்பெண்ணெயிற் போட்டு காய்ச்சி வடித்து காதிலடைத்தாலும், அல்லது ஆடு தீண்டாபாளையை சிதைத்து காதில் பிழிந்தாலும், அல்லது முருக்கிலை சாறும் நல்லெண்ணெயும் ஓரளவாய்க் கலந்து காதி லடைக்க புழு செத்து விழும்.

காது மந்தத்திற்கு நிவர்த்தி

கள்ளிபை வாட்டி பிழிந்தசாறு, நல்லெண்ணெ, வெள்ளுள்ளிச்சாறு, ஆவின்பால் வகைக்குப்படி 1, ஒன்றாய்க் கலந்து அதில் முருங்கைவேர், வசம்பு வகைக்கு களஞ்சி 1, அரைத்து போட்டு காய்ச்சி வடித்து 29-நாள் விட்டடைக்க மாறும்.

வேறு.

மையார்தகரை, நாயுருவி, சங்கு, தூதுளை, வேலிப்பருத்தி இவைகளினிலையும், எருக்கம்பூவும் ஓர் நிறைபாய் தட்டியரைத்து 10-நாள் காலையில் சிரசில் அப்பிவைத்திருந்து மாலையில் ஸ்நானஞ் செய்துவர தீரும்.

வேறு.

வெள்ளுள்ளி, தாளகம், முள்ளங்கி கிழங்கு இவைகளை ஓர் நிறைபாய்த் தட்டி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதிலடைத்துவர தீரும்.

சிரசில் நீரேற்ற மண்டையிடிக்கு.

அறத்தை, சதகுப்பை, திரிகடுகு வகைக்கு விழுகனிடை 8-அரைத்து அரைப்படி கொச்சிச்சாற்றில் கலக்கி முறித்து வடிகட்டி உள்ளுக்குச் சாப்பிட்டு அறத்தையை பொடித்து

நாசியில் நசிய மிட்டு, மிளகு ஒரு ரூபாயிடை, சாம்பிராணி அரை ரூபாயிடை கடுகு, புழுங்கலரிசி வகைக்குக் கால்ரூபாயிடை இவைகள் முலைபால் விட்டு மைபோலரைத்து நெற்றியில் பத்துப் போட தீரும்.

மேற்படி வியாதிக்கு ஆவி.

லேப்பிர்க்கு, நொச்சி, உத்தாமணி, பேப்பிர்க்கு, தும்பை இவைகளின் இலை, எருக்கன் பழுப்பு, சிறுக்கீரைவேர் இவைகளை ஓர் நிறையாய் இடித்து தண்ணீரில் போட்டு வேகவைத்திறக்கி தலையில் முக்காடிட்டு மூடி ஆவிபிடித்து, ஆவியடங்கியதின் பின் ஒரு செங்கல்லை பழுக்கக்காச்சி அதில்போட்டு மறுபடியும், முன்போல் ஆவிபிடித்தால் தேகம் வேர்த்து தலைபாரம் நீங்கும்.

தலைமண்டைவலி, கபாலவாய்வு, கபாலவலி, தலைக்குத்து முதலானவைகளுக்கு தைலம் நிவர்த்தி.

மலைவேம்பு, சவ்வரிசி, ஆதண்டை, கருநொச்சி இவைகளின் சார்வகைக்கு, நாழி அரைக்கால், நல்லெண்ணை நாழி1, இதை ஒன்றுப் கலந்து அதில் கருஞ்சீரகம் வால்மிளகு, ஒரு தலைவெள்ளைப்பூண்டு, வகைக்கு பலம் 1-அரைத்துப்போட்டு காய்ச்சி இறத்து முழுகிவர தீரும்.

வேறு.

ஆவின்பால், கரிப்பான்சார், இளநீர், நல்லெண்ணை வகைக்கு படி 1மிளகு பலம் 2-சந்தனம் பலம் 1அதிமதுரம்பலம் ½-இவைகளை ஆவின்பாலில் அரைத்துப்போட்டு காச்சி முழுகிவரதீரும்.

வேறு.

பொடுதலைச்சார், ஆவின்பால், நல்லெண்ணைவகைக்கு படி 1-சேர்த்து கலந்து அதில் மிளகு பலம் 2-அரைத்துப் போட்டு பதமாய் காச்சி வடித்து ஸ்நானம் செய்துவர தீரும்.

வேறு.

4-பலம் பச்சைக்கொடி, வேலிப்பட்டையை குமரிச்சாரில் அரைத்து நருபடி நல்லெண்ணையிற் போட்டு சிவக்கக்காய்ச்சி, ஸ்நானம் செய்துவர தீரும்.

வேறு.

நல்லெண்ணெ படி 1-அதிமதுரம், சுக்கு, வசம்பு வகைக்கு பலம் 2- சிதைத்துப் போட்டு சிவக்கக்காய்ச்சி முழுகிவர தீரும், சுகந்தரும்.

சகல பீனிசத்திற்கும் தைலம் நிவர்த்தி.

மரிச்சாலை, அவுரி, கஞ்சா, பொன்னாங்கனி, வெற்றிலை, முசு முசுக்கை, ஆயிர்பட்டை, எலுமிச்சம்பழம், குறட்டைப்பழம் அத்திப்பட்டை இவைகளின் சார் ஆவின்பாலில் வகைக்குபடி. 1- ஆதண்டைச்சார் பிச்சிலைச்சார் நல்லெண்ணெ வகைக்கு பலம் 2, இவைகளை ஒன்றாய் கலந்ததில் கருஞ்சீரகம், கடுகுரோகணி, கஸ்தூரிமஞ்சள், தான்றிக்காய், அதிவிடயம், அறத்தை சுக்கு கோஷ்டம் சதகுப்பை, குருசானி ஓமம், சிறுநாகப்பூ, தாளிச்சபத்திரி, திப்பிலி மூலம், சித்திரமூலமும், பெறுங்காயம், நெல்லிமுள்ளி, பிச்சிவேர்பட்டை, மிளகறணைபட்டை அருஞ்சிப்பட்டை, சித்தாய் நெல்லிவேர் வகைக்கு களஞ்சி 1, இவைகளை எலிமிச்சம் பழம் சாற்றில் அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்துச்சூட்டுடன் அதிலொருபிடி முருங்கைப்பூவைபோட்டு வைத்துக்கொண்டு தலை முழுகிவர வாதப்பீனிசம், பித்தப்பீனிசம், நீர்பீனிசம், இரத்தப் பீனிசம், சிழ்பீனிசம் முதலான சகல பீனிசமும் தீரும்.

சகல தந்த ரோகங்களுக்கும் நிவர்த்தி.

அறப்பொடி பலம் 1-கடுக்காய், தான்றிக்காய் மாசிக்காய் சீனிக்காரம் கொடுக்காய்புளி, துருசு, காசிக்கட்டி வகைக்கு விராகனிடை 8-இவைகளைப் பொடித்து எலுமிஞ்சம்பழம் சாற்றில் கால் ஆழாக்கு இதில் போட்டுக்கிண்டி சூரியபுடம் வைத்து அப்பால் ஷெ சாற்றில் மைபோலரைத்து உலர்த்தி பொடித்து பல்விளக்கி வந்தால் சகல தந்த ரோகங்களும் தீரும்.

வேறு.

கொம்பரக்கு, சீனிக்காரம் துருசு மாசிக்காய் வகைக்கு விராகனிடை 1-கடுக்காய், தான்றிக்காய், அறப்பொடிவகைக்கு விராக

னிடை 8- இவைகளைப் பொடித்து 5- எலுமிச்சம்பழம் சாற்றில் கலந்து சூரியபுடம் வைத்துலர்த்தி பொடித்து பல்விளக்கிவர பல் ரோகங்களும் தீரும்

பல்களில் சீழ் இரத்தம் கண்டால் நிவர்த்தி.

புழுக்களிசிலை, கோவைப்பிஞ்சுச்சாற்றில் 8-தரம் பொருமப வைத்து உலர்த்தி நல்லெண்ணெயில் பிசரி வாயிலொதுக்கிக் கொள்ள கல்லீரல், சீழ் இரத்தம்காணுதல் நிற்கும் சுகந்தரும்.

பல்களில் காணும் பூச்சிக்கு நிவர்த்தி.

கண்டங்கத்திரியின் பழத்தை உப்பிக்காந்தலில் சுட்டு பாகமிலைச் சாற்றுலரைத்து நல்லெண்ணெயிற் போட்டு சூரியபுடம் வைத்து பல்லில் தடவிவந்தால் பல்பூச்சி செத்து பல்குடைச்சல் தீர்ந்து சுகமாகும்.

வயிற்று வலிக்கு நிவர்த்தி.

ஒருபடி பிறண்டையை குருக நறுக்கி சிதைத்து சட்டியில் போட்டு வறுத்து, நாழி தண்ணீரும் அரைபடி மோரும்விட்டு இப்பிலி, வெள்ளுள்ளி வகைக்கு கிருகனிடை 5-தட்டிப்போட்டு ஒரு சிறக்கையாய் வற்றவைத்துக் கொடுக்க வயிற்றுவலி நிற்கும்.

வேறு.

முருங்கை களர்ச்சி, சிவன்வேம்பு, மூக்கரைச்சாரணை, கொடிவேலி இவைகளின் வேர், பட்டை, வெள்ளுள்ளி, பெருங்காயம் வகைக்கு கிருகனிடை 2-படி தண்ணீரில்போட்டு கால்படியாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்கு அரைகால்படி விகிதம் காலை மாலை இரண்டு வேளையுங்கொடுக்க தீரும்.

வேறு.

அரைபடி ஆவின்நெய்யில் 6-பலம் சீனியைப்போட்டுக்கிண்டி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் சாப்பிட்டுவர தீரும். இம்மருந்துகளுக்கெல்லாம் இச்சாபத்தியம் வாய்வு பதார்த்தங்களை நீக்கிக்கொள்ளவும்.

சகல குன்ம ரோகங்களுக்கும் நிவர்த்தி.

பெருங்காயம், கணர்பருப்பு, வெள்ளுள்ளி, சுக்கு இவைகளை ஓர் நிரையாய் வெதுப்பி மெழுகுபோலரைத்து வேளை ஒன்றிற்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் கொள்ள தீரும்.

வேறு.

ஒரு தோலா வேப்பிலையை புதுசட்டியில் போட்டு எரித்து நீறுக்கி திரிகடி பிரமாணம் தேனில் 8-நாள்கொள்ள தீரும்.

வேறு.

கால்படி உப்பில் வெற்றிலை, முருங்கை ஊமத்து இவைகளின் சார், வெள்ளாட்டுபால் வகைக்கு படி கால்விட்டு கருகவறுத்துப் பொடித்து அதற்கு சரியிடை சத்திசாரணைவேர் சூரணம்கூட்டி திரிகடி பிரமாணம் மண்டலம் கொள்ள தீரும்.

வேறு.

சத்திசாரணைவேர் பலம் 15-சதாவேரிக்கிழங்கு, ஆயிர்பட்டை, சித்திரமூலம், வெள்ளைப்பூண்டு, முருங்கைப்பட்டை சித்தாமணக்கின் வேர், ஓமம் இந்துப்பு நவாச்சாரம், சவுக்காரம், காயம், திரிபலை ஆனைத்திப்பிலி, சந்திசாரணை வேர்பட்டை, கொத்தமல்லி வகைக்கு பலம் 2-அரைத்துப்போட்டு நெய் படி1-விட்டு காச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒருவராண்டிவீதம் சாப்பிட்டுவர சகல குன்மமும் தீரும்

தோள் கடுப்பிற்கு நிவர்த்தி.

சிறுபூளைவேர் பலம் 1-சுக்கு, மிளகு, மஞ்சள், வெள்ளுள்ளி வகைக்கு விறுகனிடை 1-இவைகளை குண்டுமணி சாரிலாவது வேலி நீரிலாவது இளகலா யரைத்து அபக்கரண்டியில் கொதிக்கவைத்து 4-வேளை பத்துப்போட்டு பிறப்பங்கிழங்கு மிளகு பாலைப்பட்டை சுக்கு அறத்தைவகைக்கு விறுகனிடை 6-வீதம் இடித்து அறுபாகமாய் பங்கிட்டு நாளொன்றிற்கு ஒருபங்கை இரண்டுபடி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாக வற்றவைத்து ஆறுபொழுது புளி புகைதள்ளி சாப்பிட்டுவர தோள்கடுப்பு நீர்த்து சௌக்கியந்தரும்.

நெஞ்சுகுத்து விலாகுத்துக்கு நிவர்த்தி.

ஐந்துபலம் இஞ்சியை தட்டி சார்பிழிந்து, முறித்து அதில் ஒன்னேகால்பலம் வெள்ளைப் பூண்டை சிதைத்து துணியில் முடிந்து சார் பிழிந்து சாப்பிடவும். இதில் தீராவிட்டால் உப்பிலா நிலை ஒருபிடி சுக்கு மிளகு இவைவகைக்கு விராகனிடை 2- சிதைத்து ஒருபடி தண்ணீரில்போட்டு அரைக்கால்படியாய் வற்ற வைத்து அதில் அரைக்கால்பலம் வெள்ளுள்ளியை சிதைத்து பிழிந்த சாற்றை விரவிச்சூட்டுடன் சாப்பிடவும் இப்படி 6- பொழுது சாப்பிட தீரும். பத்தியம் இச்சாபத்தியம்.

நரம்பு பிடிப்பிற்கு நிவர்த்தி.

நண்டு கொழுப்பையும் விளக்கெண்ணெயும் ஓர்நிறையாய்கலந்து காய்ச்சி நரம்பு பிடிப்பில் பூசி வழித்துவிட நரம்புசுளுக்குதீரும்.

அலகுப்பூட்டுக்கு நிவர்த்தி.

முருங்கப்பட்டை, வசம்பு, வெள்ளைப்பூண்டு பெருங்காயம் இவைகளை தைவேளைச்சார் விட்டு சிதைத்து, துணியில் முடிந்து நாசியில் நசியம் இடப்போகும்.

உள்ளங்கால் குற்றிற்கு நிவர்த்தி.

நல்ல அபினை குளிர்ந்த தண்ணீரில் அரைப்பித்து உள்ளங் காலில் தடவி சூடுபிடிக்க தேய்த்துவர குத்துநீர் தங்கல் மாறும்.

பித்தவெறிக்கு நிவர்த்தி.

இஞ்சிசாறும் கழுதைப்பாலும் ஓரே நிரையாய் கலந்து வேளை ஒன்றிற்கு கால்படி விகிதம் பத்துநாள் கொடுத்து ஆதள் இலையும் முத்தெருகன் செவியும் ஓரே நிறைபாய் வருஷத்து காடி நீர் விட்டு இடித்து உச்சி தொடுத்து பாதம்மட்டிலும் உடலாதி யந்தமும் பூசிவைத்து மாலையில் நீராடிவர நீங்கும்.

வேறு.

கோழிமுட்டை 40-உரித்து ஓடும் சவ்வும் நீக்கி பிதுரி உப்புக்குள் புதைத்துவைத்து மறுதினம் முதல்தட்வை ஒன்றுக்கு

ஒரு முட்டை விதம் எடுத்து உப்பை உதிர்த்து சாப்பிட்டு ஒரு ஜாமத்திற்கு பின்பு தண்ணீர் குடிக்கவும், இந்தப்படி ஆறு நாள் சாப்பிட புத்தி தெளியும்.

வேறு.

ஆவின்பால், எலுமிச்சம்பழம்சார், முலைப்பால், ஆவிநீர், முசுமுசுக்கைசார் வகைக்கு படி 4-நல்லெண்ணை படி 1-அதிமதுரம், கோஷ்டம், ஏலம், வாய்விளக்கம், சீரகம், சந்தனம், வகைக்கு பலம் 1-கோவையிலை சாறுவாட்டிப்போட்டு சிரசில் தேய்த்து 100-குடம் ஜலம்விட்டு மோரும், சோறும்கொடுக்கவும், இப்படி ஒரு மண்டலம்செய்தவா பித்தமிரங்கி புத்திதெளிந்து சுபாவமிலை அறியலாம்.

வேறு.

உப்பு, மிளகு எருக்கன் பருப்பு, தும்பை, கருக்குவெற்றிலை இவைகளை தட்டி நாசியில் நசியமிட்டாலும், அல்லது இலுப்பை அரப்பையும், சிக்காயும் வெற்றிலையும் கட்டி நாசியிலும் கண்ணிலும் பிழிந்தாலும் பித்தமிரங்கி புத்திதெளிந்து சுபாவமாகும்.

பித்த மயக்கத்திற்கு நிவர்த்தி.

காயுருவி அரிசியை கழுதைப்பாலில் அரைத்து கொடுக்க தீரும்.

இருமலுக்கு லேகியம் நிவர்த்தி.

திப்பிலி பலம் 25-இடித்து இரண்டரைபடி ஜலத்தில் யொழமிட்டு எட்டுக்கொருபங்கால் இரக்கி கற்கண்டு இரண்டரைபலம் சுக்கு கடுக்காய் அக்கிராகாரம் அரத்தை ஓமம் சீரகம் தனியா வெட்பாலரிசி செண்பகப்பூ கோஷ்டம் வகைக்கு பலம் 1-தேன் உரி பலம் நால் நெய் ஆழாக்கு ஷை கஷாயத்தில் சகலமும்விட்டு லேகியமாய் கிண்டி கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட சிலேர்பணம் வாதம் இருமல் வாய்வு உப்புசம் இவைகள் தீரும்.

வேறு.

மிளகு பலம். 1-பசுவெண்ணை பலம் 1-சீனக்கற்கண்டு பலம் 1-சூரணித்து ஒரு சட்டியை அடுப்பில் வைத்து நெய்யை ஊற்றி

உருகினவுடன் மிளகு சூரணம்போட்டு சிவந்துவருமளவும் எரி லேகியமாக்கி வைத்துக் கொண்டு களர்ச்சிக்காய் விதம் சாப்பிட்டு வர இருமல் தீரும். இச்சாபத்தியம்.

சகல ஜுரங்களை ஜெயிக்கும் கியாழம்.

சண்டுபரங்கி, முத்தக்காசு, பற்பாடகப், பூனைக்காஞ்சொறி, சுக்கு, நிலவேம்பு கோஷ்டம் திப்பிலி கண்டங்கத்திரி சிந்தற்கொடி ஆடாதோடை சுக்கு இவைகளை சமனிடையாய் இடித்து ஒருபடி ஜலம்விட்டு ஆழாக்காக சுண்டக்காச்சி காலைமாலை குடித்து வந்தால் சகல ஜுரங்களும் நாசமாகும்.

பித்த ஜுரத்திற்கு கியாழம்.

நிராகைஷ, கடுக்காய் பற்பாடகம் மூத்தக்காசு கடுகுரோகணி கொன்னைப்புளி இவைகளைச் சமனிடையாய் இடித்து கியாழம் வைத்துக் குடித்தால் பிதற்றல் மூர்ச்சைபிரமை தாகம் சோகை நாவரட்சி முதலானதும் ஜுரமும் போகும்.

விஷ ஜுரத்திற்கு நிவர்த்தி

கோரைக்கிழங்கு நெல்லிவற்றல் சீந்தற்கொடி சுக்கு கண்டங்கத்திரிவேர் இவைகளை சமனிடையாய் இடித்து கியாழஞ் செய்து அதில் மூன்றுவிரற்கட்டை திப்பிலி சூரணமும் தேனும் கலந்து உட்கொண்டால் விஷஜுரங்கள் நீங்கும்.

பழைய ஜுரங்களுக்கு நிவர்த்தி.

இலவங்கப்பட்டை பாகம் 1, நாககேசரம் 2, ஏலக்காய் 4, மிளகு 8, திப்பிலி 16, சுக்கு 32, அமுக்கிறங்கிழங்கு 64-ஆக இக்கணக்குப்படி இம்மருந்துகளை யெடுத்திடித்து சூரணித்து அச்சூரணத்திற்குச் சமனிடையாய் சர்க்கரையைக் கலந்து மூன்றுவிரற்கடை பிரமாணம் வெந்நீரால் உட்கொண்டால் கபம், பித்தப்பாண்டு, குன்மம், பழையஜுரங்கள், மூலவியாதி, அரோசிகம் அஜீரணம், பெருமூச்சு, சுவாசகாசம், விக்கல் குன்மரோகம், மார்நோய் பாரிசவாதம், முதலிய வியாதிகள் நீங்கும்.

சகல மூலரோகங்களுக்கும் நிவர்த்தி.

கொடிவேலி, மினாதலை, கொளுஞ்சி, சரக்கொன்றை மா இவைகளின் வேர்ப்பட்டை, முத்தக்காசு, கடுக்காய்கடுக்காய்ப்பூ, புளியாரை சித்தரத்தை, குங்குமப்பூ, ஜாதிக்காய், பிரண்டை இவையெல்லாம் உலர்த்திச் சூரணித்து அதற்கு நிகர் சீனிகூட்டி ஒரு மண்டலங் கொள்ள தீரும்.

வேறு.

காட்டுக்கருணை, கரிக்கருணை, பிரண்டை, கொடிவேலி, எருக்கு புளியமடல்மருள் இவைகளின் கிழங்கு வகைக்கு பலம் ஒன்று வுலர்த்திச் சூரணஞ்செய்து தேனில் பாக்களவு இரு வேளையும் 7-நாள் கொடுக்க உள்மூலம், புறமூலம், சீழ்மூலம், இரத்தமூலம் முதலானதுந் தீரும்.

வேறு.

கடம்புகோச்சி, பருத்திக்கள்ளி இவைகளின் இலைகள் சமானமாய் எடுத்திடித்து 4-படி ஜலத்திற்போட்டு மூடிசீலை மண்செய்து மேல்சட்டியில் தவாரமிட்டு தணியிலுலடைத்து அடுப்பேற்றி பால் தண்ணீர் வற்றினதின் பேரில் கீழிறக்கி தவாரத்தின் அடைப்பை யெடுத்து அதன் வழியாய்வரும் ஆவியை பவனவாயிற் பிடிக்க சகலமூலமும் தீரும். இவைகளுக்கெல்லாம் காரமான பதார்த்தங்களைச் சேர்க்லாகாது.

மூலமுளைக்கு நிவர்த்தி.

ஆகாச தாமரையிலையை உலர்த்தி பொடித்து வடிக்கட்டின தூளும், கருங்குருவை அரிசிமாவும் ஒன்றாகக்கலந்து பிட்டவித்து நல்லெண்ணெய்விட்டுப் பிசைந்து உள்ளுக்குக் கொடுத்து, மாதுளங் கொழுந்தை காடியிலவித்து அபானத்தின் மூலம் முளையில் வைத்துக்கட்ட வேர் அற்றுவிழும்.

வேறு.

வட்டதத்தி இலையை தண்ணீர்விட்டு நன்றாய்ப் பிசைந்து அதில் நல்லெண்ணெயாவது, ஆவின் நெய்யாவதுவிட்டு கலக்கி 3-நாள் கொடுக்க வேர் அற்றுவிழும்.

வேறு.

எருமைத்தயிரில் நீர் பூலாயிலையை அரைத்து கலக்கி 6-நாள் கொடுக்க மூலமுளை கரைந்து விழும்.

ஆசனக்கடுப்பிற்கு நிவர்த்தி.

கால்படி பசுவின்பாலில் 8-எலும்பிச்சம் பழம் பிழிந்து குச்சியினால் கடைவதுபோல் சிலுப்பி தெளியவைத்தால் மேலே தெளிவான ஜலம் நிற்கும் அதை இறுத்து குடித்தால் உடனே ஆசனக்கடுப்பு நின்று சுகமாக்கிவைக்கும்.

மலம் சிக்கலுக்கு.

துத்தியிலை, சிறுபயறு, வெங்காயம் சமமாக யெடுத்து சேர்த்துச் சமைத்து சாப்பிடவும் குணமாம்.

மலம் உதயமாக.

சரக்கொன்றைப்பூவு, புளி, சர்க்கரை, உப்பு, மிளகாய் கூட்டி துவயல் செய்து சாப்பிட மலம் உதயமாகும்.

வயிர்கடுப்பிற்கு நிவர்த்தி.

ஆலம்விழுதை எருமைத்தயிரில் அரைத்து எலுமிச்சம்பழம் ரசம் பலம் 1-கூட்டி பிசைந்து சாப்பிட நீங்கும்.

வாய் வேக்காட்டிற்கு நிவர்த்தி.

பருதனி இலையை யொழுஞ்செய்து வாய்கொப்பளிக்க நீங்கும்.

வேறு.

அகத்திக்கீரை கொழுந்தைப்பறித்து வாய் கொண்டமட்டும் காலையில் மென்றுதின்றால் தீரும். நடர்பிடி 3-நாள்.

வேறு.

மணக்கத்தாளி இலையை சிறுபயறு போட்டு சமைத்துச் சாப்பிடவும் தீரும்.

வேறு.

விளாயிலை, செம்பருத்தியிலை, வில்வயிலை, துத்தியிலை, கீழா நெல்லியிலை, வெந்தியம், வெங்காயம் இதுகளை ஒவ்வொரு பிடி யெடுத்து உரலில் இடித்து அரைபடி ஜலத்தில் யொழுமிட்டு கால்படியாகவிறக்கி கொப்பளிக்கவும்.

கை, கால் குடைச்சலுக்கு நிவர்த்தி.

பூமிச்சர்க்கரைக் கிழங்கை நல்லஜலத்தில் அரைத்து பூசி வரவுந்தீரும்.

வேறு.

மருதனிப்பூவை நல்லெண்ணெயிற் காய்ச்சி பூசியும் வரலாம். அல்லது நல்லெண்ணெ, எருக்கன்பால், புளியிலைரசம் சொச்சிரசம் வெள்ளாட்டுப்பால் வகைக்கு சேர் அரை, அபினி தோலா அரை இவைகளை ஒன்றாக்கி காய்ச்சி வடித்து 3-நாள் தடவிவர தீரும்.

வெட்டுகாய உதிரபெருக்கு நிற்பதற்கு.

மாசிக்காயை சுட்டு அதின் சாம்பலை தனமாய்வைத்தழுத்த உதிரப்பெருக்கு நிற்கும்.

வெட்டுகாயம் அடிகள் றணங்களுக்கு

பேன்கொட்டை ஒன்று ரசக்கற்பூரம் பலம் அரை, ஏலரிசி பலம் கால் இவைகளைச் சேர்த்து தேங்காயெண்ணெயில் அரைத்து கலக்கி வெயிலில்வைத்தெடுத்து சீலையில் தடவிபோடவும் தீரும்.

சொரிசிறங்குக்கு நிவர்த்தி

அரைப்படி நல்லெண்ணெயில் செந்தாமரைப்பூவின் இதழ்களை போட்டு பூமிப்புடமாக 20-நாள் புதைத்துவைத்துப் பிறகெடுத்து தேகத்திற் பூசிவர மேகதிணர்கள், சொறிசிரங்கு, தினவு, படைகள் தீரும், தேகம் சுத்தியாகும். அவயவங்களுக்கு வலுவாம்.

சிரங்கிற்கு நிவர்த்தி

நீரடிமுத்தின் பருப்பை தயிரில் ஊறவைத்து எலுமிச்சம் பழச் சாறு, அல்லது காடிவார்த்தரைத்து உடம்பிற் பூசிக்கொண்டால் உலர்ந்துவிடும். பிறகு சாணைத்தேய்த்துக் குளிக்கச் சொரிசிரங்கு முதலியதனைத்தும் தீர்ந்து சுகந்தரும்.

சிறுவர் வயிற்றுப்பூச்சி வெளியாக

பூவரசம் கிரையை அரைத்து பால் நெய் சர்க்கரைச் சேர்த்து லேகியமாகக் கிளரி களர்ச்சிக்காய் பிரமாணம் குழந்தைகளுக்குக் கொடுக்கப் பூச்சி வெளிப்படும்.

பெரியவர்களுக்கு வயிற்றுப்பூச்சி வெளியாக

நெல்லில் வேகித்தெடுத்த தேங்காயுடன், ஏலரிசி, பலம் 1-தோல்சீக்பெ பூவாசம் கிரை பலம் 1-இரண்டும் கூட்டியரைத்து களர்ச்சிகாய் பிரமாணமெடுத்து சர்க்கரையில் வைத்து சாப்பிட கிருமிகள் வெளியாகும்.

புண்களில் அல்லது ரணங்களில் கிருமிகள் வெளியாக

அசரைபென்னும் பீனி? அரைத்துக்கட்டினுல் கிருமிகள்விழும் அல்லது மும்பிற் குருர்தை அரைத்துக்கட்டினுலும் விழும் அல்லது கர்பூரத்தை ஏறக்கன்பாலால் அரைத்து கடலி குதிரை லத்திபை புகைக்காட்டினுலும் அல்லது கண்டுவேலிகளிலுள்ள களிமண்ணை பூசிவைத்தாலும் கிருமிகள் ரணத்தைவிட்டும் வெளியாய்விடும். பிறகு வேப்பம் பட்டை யொழுத்தால் கழுவிவரவேண்டியது.

பேதிக்கு அவிழ்தம்

சந்திரமல்லிவேர் என்னும் பேதிமுழக்கு கிராகனிடை 1-திராக்ஷி உப்பு கிருகனிடை 8-கூட்டி ஒரு கிருகனிடை கொடுக்கவும் பேதியாகும்.

வேறு

அதிமதுரம் கிராகனிடை 82-திராக்ஷி உப்பு கிராகனிடை 8-யொழும் வடித்துக்கொடுக்க பேதியாகும்.

வேறு

கிலாவிரை கிராகனிடை 4-தனியாகிராகனிடை 1-யொழும் வடித்து திராக்ஷிப்பூவு கிராகனிடை அரை கூட்டிக்கொடுக்க பேதியாகும்.

பசிதீபனமுண்டாக

ஓமம் பலம் 1-குருசாணி ஓமம்பலம் 1-ராகடுகு பலம் 1-தூள் செய்து ஒன்னரைபலம் பனவெல்லத்தில் பிசைந்து புக்கை ரொட்டை பிரமாணம் புசிக்கவும்.

கருந்தேமலுக்கு நிவர்த்தி

மருதோன்றி யிலையுடன் சவுக்காரஞ்சேர்த்து அரைத்துப் பூசிவரகரிக்தேமல், படைகள், நரம்பிழுப்பு, கால்நோய் முதலான வியாதிகள் நீங்கும்.

வெளுத்த மயிர் கருக்க

கோட்டைகரந்தை செடியானது பூபெடுப்பதற்கு முன் சமூலமும் பிடுங்கிவந்து அதற்கு சமனிடை கையார்ந்தகரை சமூல முஞ் சேர்த்து நிழலிலுலர்த்தி சூரணஞ்செய்து தேன், அல்லது நெய்யிற் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டுவர வெளுத்தமயிர் கறுத்துப்போகும், சிவகரந்தைக்கு அதிலும் அதிக குணமுண்டு.

மயிர் கருக்க

ஆத்து நிலாவிரைபச்சையாய்க் கொண்டுவந்து அத்துடன் மருக்தோன்றியிலை சமனாகச்சேர்த்து பூசிவர மயிர்கருத்துவரும்.

பேன் சாகிறதற்கு மருந்து

படிகாரத்தை பொடித்து மைபோல் வஸ்திரகாயஞ்செய்து ஜலத்தில் கரைத்து தலையில் தேய்த்து ஒருஜாமம்சென்று ஸ்நானம் செய்துவர பேன் யீர் முதலானதும் சாகும்.

நோய்வராதிருக்க அவிழ்த முறைகள்

அதிமதுரச் சூரணம், சோம்புச் சூரணம், வெள்ளைச்சர்க்கரை வகைக்கு விராகனிடை 1, சித்திரமூலசூரணம் விராகனிடை அரை இவையாவும் ஒன்றுப்கலந்து 2-பாகமாக்கி காலையில் ஒரு பங்கும், மாலையில் ஒரு பங்கும் சாப்பிடவேண்டியது. இதே பிரகாரம் சித்திரைமாதம் முதல்தேதி முதல் ஆடிமாதம் கடைசிவரை சாப் பிட்டு அப்பியாசப்படுத்தினவர்களுக்கு அல்லாஹு தஆலாவின் உதவியினால் யாதொரு நோயும் வராது. கண் தெளிவுண்டாகும். தீராத தலைவலி, ஒரு தலைக்குத்து ஜுரம் முதலான அநேகவியாதிகள் நீங்கும். பரிக்ஷித்துப்பாருங்கள், பரிக்ஷித்தவர்களே பலனடை வார்கள். இதைச் சாப்பிட்டு வருகிறவர்கள் வாரத்திற்கு ஒரு நாள்

சருவிலி பிஞ்சம், ரோஜாப்பூவும் சமனிடைபோட்டு இடித்துப் பனங்கற்கண்டு போட்டுக் காப்பிச்செய்து சாப்பிட்டுவர வேண்டியது. (இன்ஷா அல்லாஹு தஆலா, வியாதிகளை அற்றுப் போகச் செய்யும்.)

மனிதர்களுக்கு அந்தந்த உறுப்புகளில் வலுவை கொடுக்கப்பட்ட பதார்த்தங்களின் பயான்.

தலைமூளைக்கு வலுவைகொடுக்கும் பதார்த்தங்கள்.

அம்பர், கஸ்தூரி, முத்து, செல்லிக்காய், தான்றிக்காய், அம்ருத்பழம், சேப்புபழம் ரோஜாப்பூ, பன்னீர் நாரத்தன் பழம், புர்துப்பருப்பு, கோரைக்கிழங்கு, இஞ்சி, ஜடாமாஞ்சில், அகில் கட்டை, லவங்கம், வாய்விளங்கம், குந்திரிக்கம், சரைவிரை, சந்தனம, பாதம்பருப்பு, பக்ஷிகளிறைச்சி, ஆட்டுத்தலைமூளை, வெள்ளாட்டுப் பால் இவைகளெல்லாம் தலைமூளைக்கு வலுவைக் கொடுக்கும். தலைமூளை பலயீனப்பட்டவர்களுக்கு ஷெ மருந்துகளை தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்கலாம்.

இருதயத்திற்கு வலுவைக்கொடுக்கும் பதார்த்தங்கள்.

முத்து, பவழம், கர்பூரம், கொத்தமல்லி, ரோஜாப்பூ, நாரத் தன்பழம, செந்தாமரைப்பூ, கெம்பு, வெள்ளி, பொன், கடுக்காய், கோரைக்கிழங்கு, பெருலவுங்கப்பட்டை, ஜடாமாஞ்சில் ஷாக்குல் மிஸ்ரீ, அகில்கட்டை, அம்பர் ஏலக்காய், சிறுலவங்கப்பட்டை, குங்குமப்பூ, தாம்பூலம், காஜூப்ப, சீமைஅத்திப்பழம், கஸ்தூரி, தாளிச்சபத்திரி, லவங்கம், பிஸ்தாப்பருப்பு, தாழம்பூ, அருகு, அம்ருத்பழம், மாதுளம்பழம், கோராப்பட்டு, செல்லிக்காய்கொடி மாதுளபழம் மேல்தோடு, எலுமிச்சமொக்கு, புளிசேப்புப்பழம், சந்தனம், மூங்கிலுப்பு இவை முதலானதுகளாம். இவைகளைத் தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்கலாம்.

ஈரலுக்கு வலுவைக்கொடுக்கின்ற பதார்த்தங்கள்.

கோரைக்கிழங்கு, லவங்கப்பட்டை, பிஸ்தாக்கொட்டை ஜாதிக்காய், கிச்சிலிக்கிழங்கு, ரூம்முஸ்தகி, ஏலக்காய், அகில்கட்டை திராக்ஷிப்பழம், ரோஜாப்பூ, மாதளம்பழம், மழைத்தண்ணீர் இவை முதலான வஸ்துக்களாம். இவைகளைத் தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்கலாம்.

தீனி பைக்கு வலுவைக்கொடுக்கும் பதார்த்தங்கள்.

நெல்லிக்காய், மாதுளம்விரை, தான்றிக்காயின் மேல்தோல், மூங்கிலுப்பு, ரோஜாப்பூ, கடுக்காய்முறப்பா, மிளகு, ஒட்டகைபால் நவ்வல்பழம், கொடிமாதளம்பழத்தின் மேல்தோல், ஜாதிக்காய் சிறுலவங்கப்பட்டை, கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, லவங்கம், ஏலக்காய், குக்கிரிக்கம், ரூம்முஸ்தகி, புதினு, அகில்கட்டை பெட்டைக்கோழி இவைமுதலானவைகளாம். இவைகளைத்தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்கலாம்.

தீபனத்திற்கு வலுவைக்கொடுக்கின்ற பதார்த்தங்கள்.

எலுமிச்சம்பழச்சார், அதின் தோல், மிளகு, சிசஞ்சபீன் பைர்ச்சல், காடி, ரூமிமுஸ்தகி, கருஞ்சீரகம், இந்துப்பு, ஏலக்காய், ஒட்டகைப்பால், சுத்தஜலம் இவை முதலானவைகளைத் தனித்தாவது சேர்த்தாவது உபயோகித்தால் தீபனத்திற்கு வலுவைக் கொடுக்கும்.

பற்களுக்கு வலுவைக்கொடுக்கும் பதார்த்தங்கள்.

தாது, மாதுளம்பூ, படிகாரம், மான்கொம்பு, சட்டகரி, தாணைப்பொடி, கடுக்காய்த்தோல், பாக்கு, அக்கராகாரம், சீரகம், பன்னீர், கோரைக்கிழங்கு, மாசிக்காய், ரூமிமுஸ்தகி, குர்துருக்கம், ஏலம், மிளகு, அன்னபேதி, மூங்கிலுப்பு, சேராங்கொட்டை, எலும்புசட்டக்கரி, சந்தனம், வெள்ளைக்குங்கிலிகம், அன்னுச்சிபூ, மஞ்சன்பலக்கரை, பூமிச்சக்கரைக்கிழங்கு, முத்து, மகிழம்பட்டை காட்டுவாழைவிதை கடல்நுரை, புளியங்கொட்டை, வால்வேத்திரப் பழம், கொருக்கைவேர், பவழக்கொடி முதலிய பதார்த்தங்களாம். இவைகளை தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்கலாம்.

பற்களுக்கு வலுவைகுறைக்கும் பதார்த்தங்கள்

ஒட்டகைப்பால், முள்ளங்கிக்கிழங்கு, பனிக்கட்டி, பொட்டுப்பு ஜலம், புளித்தபதார்த்தங்கள் அதிகசூடான பதார்த்தங்களை சாப்பிட்டு அல்லது குடித்தவுடன் குளிர்ந்தஜலத்தை குடிக்குதல் மிகவும் குளிர்ச்சியான பதார்த்தங்கள் முதலியவைகளை புசிப்பதால் பற்களுக்குப் பலவீனத்தை உண்டாக்கி வலுவைக்குறைத்து விடும்.

கண்ஒளிவை அதிகப்படுத்தும் பதார்த்தங்கள்.

நெல்லிக்காய், மஞ்சள், கடுக்காய்த்தோல், பாதம்பருப்பு பெருஞ்சீரகம், முத்துசிப்பி, சுட்டசாம்பல், கோராப்பட்டு, சுட்ட கரி, அஞ்சனக்கல், சஹர்பா, பொன், வெள்ளி மிளகு, கஸ்தூரி, குங்குமப்பூ, முத்துப்பஸ்பம் முதலியபதார்த்தங்கள் கண்ஒளிவை அதிகப்படுத்தும். இம்மருந்துகளை தங்கக்கம்பியாலும், காரியக் கம்பியாலும் கண்ணில் இடவேண்டும்.

கண்ஒளிவை குறைக்கும் பதார்த்தங்கள்.

கர்விசக்கிரை, காசினிசல்லாதகீரை, மசூரிப்பருப்பு கந்தனா வெள்ளைப்பூண்டு இவைகளை அதிகமாய் தின்று வருவதிலும் ஸ்திரீ போகம் அதிகமாய்ச் செய்து வருவதும் கண்ஒளிவை குறைத்து விடும்.

தாதுவிர்த்தியை அதிகப்படுத்தும் பதார்த்தங்கள்.

சிகப்பு முள்ளங்கிக்கிழங்கு, வெங்காயம், வெள்ளாட்டுப்பால், பசுவின்பால், பசுவின்நெய், பால்சாதம், பேரீச்சங்காய், பாதம் பருப்பு, பிஸ்தாப்பருப்பு, சாலாமிஸ்ரீ, ஸகாகுல்மிஸ்ரீ, கருஞ்சீரகம் நெருஞ்சிப்பழம், தோல்போக்கிய எள்ளு, சர்தாஜ்பழம், கிலப் பனங்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, அக்ரகாரம், ரூம்மூஸ் தகீ, இலவங்கப்பட்டை, திப்பிலி, கசகசா, இஞ்சி, சுக்கு, கிச்சிலிக்கிழங்கு, மொச்சக்கொட்டை, கார்போகஅரிசி, இரும்பு சிட்டம், சகங்கூர்மீன், ஒரு வருஷத்திற்கு மேற்படாத கொழுத்த சாவலின் இறச்சி, காடை, கௌதாரி, புதிதான நல்ல தண்ணீர், மீன்கள், கோழிமுட்டை, ஊர்க்குருவியின் தலைமூளை, அதினதசை முதலான வஸ்துக்களெல்லாம் சுக்கிலத்தை பெருக்கிவைக்கின்ற வஸ்துகளாம். இம்மருந்துகளை தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்கலாம். இது கொண்டு தாது விர்த்தியுண்டாகும்.

போகசக்தியை குறைக்கும் பதார்த்தங்கள்.

கற்பூரம், குருசாணி, ஓமம், சீரகம், கொள்ளு, எலுமிச்சம் பழம், புளிப்புவஸ்துகள், சதாப்பிலை, சதாப்புவிரை, புளிப்பு மாதுளம்பழம், பேரிமுழக்கு இஸ்பகோல்விரை புதினாவிலை கம்பளி பூச்சிச் செடிவிரை, பேரிக்காய், லெட்டிஸ், காசினிவிரை காடிஜலம் முதலானவை களெல்லாம் காமவெறிக் கொண்ட பெண்களுக்கு விந்துவிலேவு அதிகரித்து அடிக்கடி நற்செயலாய் இந்திரியம் ஸ்கலிதமாகிற பேர்களுக்கும் ஷை மருந்துகளை தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்க மிகவும் பிரயோஜனஞ்செய்யும்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திரங்காணும் ருதுக அக்கிரமத்திற்கு கிரமப்படுத்தும் பதார்த்தங்கள்.

பொட்டுப்பு, வெங்காரம், வெட்டிவேர், ஆடுதீண்டாபாளை, சித்திரமூலம் எள்ளு, பெருலவங்கப்பட்டை, சிறுலவங்கப்பட்டை, வாய்விளங்கம், கோஷ்டம் வால்மிளகு பெருங்காயம் கோரைக் கிழங்கு ஜடாமாஞ்சில் மிளகு சீரகம் கருஞ்சீரகம் சதாப்பிலை, சதாப்புவிரை காட்டுப்புதினா குர்துருக்கும் மூளாம்பரம் கரிய பவளம் குங்குமப்பூ வாலேந்திரபோளம் சீமை சாமந்திப்பூ அசாருன் மூர்திருக்கன் செவிபாசிபாவுரான் குதிரைவாலி கடுரோகணி ஓமம் முதலியவையெல்லாம் ருதுகஷ்டமுதலிய ரோகங்களுக்கும் தனித்தாவது சேர்த்தாவது உபயோகித்தால் மிகவும் பிரயோஜனஞ் செய்யும்.

வியர்வையை பிறப்பிக்கின்ற பதார்த்தங்கள்.

நன்னாரிவேர் வல்லாரை கோரைக்கிழங்கு பற்பாடகம் பேய்ப்புடல் மூக்காவேளை கிலாவிளா விஷ்ணுகாந்தி வெட்டிவேர் கற்பூரவல்லி முருங்கைவேர் பேமாட்டி வசம்பு துளசி வல்லாரை எருக்கன்வேர்பட்டை முதலியவைகளெல்லாம் ஜுரம் அதிமூத்திரம் சருமரோக முதலியவைகளுக்கு மேற்படி மருந்துகளை தனித்தாவது சேர்த்தாவது உபயோகிக்கலாம்.

நாள்பட்ட ரோகங்களை படிபடியாய் நீக்கி சரீரத்தை சுகஸ்திதிக்கு கொண்டுவருகிற பதார்த்தங்கள்

நன்னாரிவேர் வல்லாரை யானைக்கற்றாழைவேர் ஆகாசகருடன் கிழங்கு கரிசலாங்கண்ணி சீரடிமுத்து பறங்கிச்சக்கை அம்பர் கௌதபான் மருதோன்றி பொன்னாவரை சால்முருகு முதலிய வைகளை தனித்தாவது சேர்த்தாவது உபயோகித்து வருவதால் மிகவும் சுகந்தரும்.

தலைமயிர் வளர்த்திக்கு எண்ணெய்

கையாந்தகரைசார் படி அரை பொன்னாங்கண்ணிசார் படி அரை நல்லெண்ணெய் படி ஒன்றுசேர்த்து மருதோன்றியிலை கிரி இலை மாதளம்பட்டை இவைகளை வகைக்குபலம் 6-கர்சக்கட்டி பூச்சியிலை பூலாங்கிழங்கு விலாமிச்சம்வேர் கார்போக அரிசி வகைக்கு பலம் 9-இவைகளை அரைத்துப்போட்டு காய்ச்சி தலைமுழுகி வருவதோடு காலை மாலை தலையில் தடவி சீப்பிட்டு சீவிவர அபரிமிதமாய் மயிர் கருத்து வளரும். சொண்டு மயிருதிர்தல் பிளவுபடுதல் முதலனதும் நீங்கும்.

வேறு

கருப்பு பூலாம்பழத்தின் இடைக்கு இரட்டிப்பு முற்றின தேங்காய்திருகலை கலந்து ஒருமண்பாண்டத்தில் இட்டு அதன் வாய்க்கு ஒரு ஓடுமூடி சீலைமண்செய்து வெய்யலில்புதைத்து ஒருமாதமட்டிலும் வைத்தெடுத்து முன்சொன்ன பழத்தின் இடைக்கிரட்டிப்பு தேங்காய் திருகலுக்குச் சமனிடை நல்லெண்ணெய் கலந்து வேண்டுமான பரிமளவர்க்கஞ் சேர்த்து காய்ச்சிநீர்வண்டின பதத்திலிறக்கி வைத்துக்கொண்டு தலையில் தடவிவருவதோடு ஸ்நானமுஞ் செய்து வருவதால் மயிர் கருத்து நீண்டு பிளவுபடாமல் வளரும்.

கூந்தலுக்கு பரிமளப்புகை-

பேராத்தை சாம்பிராணி அகர்கட்டை கௌசா தேவதாரம் கிரந்தகரம், கார்போகம், ஜடாமாஞ்சி, கெதியரிசிப்பால் வகைக்கு பலம் 1-நல்ல கெப்பு சந்தனக் கட்டை பலம் 9-

இவைகளைச் சூரணித்துக்கொண்டு கரிநெருப்பில் போட்டு அதில் வரும் புகையைக் கூந்தலில் பிடிக்க எப்பொழுதும் விடாத சுகமாக வாசனை வீசும்.

வேறு.

வெண்ணெக்குங்கிலிகம், சாம்பிராணி, பேராத்தை, தேவடாரு, ஜாதிக்காய், சிமைக்கிச்சிலிக்கிழங்கு இவைகளை வகைக்கு பலம் 1, நல்ல சந்தனக்கட்டை பலம் 8, இவைகளைச் சூரணித்து அதில் நல்ல நாட்டுச் சர்க்கரை பலம் 8, கூட்டி முன் போல் புகையிட கூந்தலில் பரிமளம் அதிகமாகும்.

கூந்தலுக்கு பரிமள சம்பங்கி தைலம்.

வெள்ளெள்ளை கழுவி உலர்த்தி ஒரு பெரிய பாண்டத்தில் 1-படி எள்ளை பரப்பி அதின்மேல் அன்று பறித்துக் காம்புநீர் இவை நீக்கிய சம்பங்கி புஷ்பம் 1-படி கொட்டிப் பரப்பவும். இவ்விதம் அகப்படும் புஷ்பத்திற்கு தக்கபடி பரப்பி மறுநாள் எடுத்துவிட்டு, வேறு புஷ்பம் பரப்பவேண்டும். இவ்விதம் 7-முதல் 10-12-தடவை அடிக்கடி அப்படிச்செய்ய எள்ளில் மேற்படி புஷ்பத்தின் வாசனை ஏறிவிடும். இதனடியில் அடிக்கடி எள்ளைக் காத்தாறவிடவேண்டும். பிறகு எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டியெடுத்து எண்ணெயை யெடுத்து மூகர்ந்து பார்த்தால் சம்பங்கி எண்ணெயாகும். மேற்படி புண்ணுக்கில் நல்லெண்ணெ விட்டு 2, 3-தரம் செக்கிலாட்டியெடுக்க 2-தரமும் 3-தரமும ஆட்டிய எண்ணெ அந்த சம்பங்கி எண்ணெயின் வாசனையே உண்டாகும். மல்லிகை, முல்லை, மகிழம்பு முதலிய எண்ணெ செய்யும் முறையும் இது போலாம்.

வேறு.

எண்ணெ எடுக்கவேண்டிய புஷ்பங்களை காம்பு அரும்பு தூசி நீர் முதலியவை நீக்கி சுத்தஞ்செய்து நாலுபங்கு கழுவி ஆட்டிய நல்லெண்ணெ ஐந்து பங்கில் போட்டு மூடி பூக்களின் நிறமாறிய பின் நன்றாய்ப் பிசைந்து பிழிந்தெடுத்துவிட வேண்டும். அப்போது புஷ்பங்களின் வாசனை எண்ணெயில் இறங்கியிருக்கும்

பிறகு அந்த எண்ணெயில் 3-பங்கு புஷ்பமும் அதன்பின் 2-பங்கு புஷ்பமும் கடைசியில் 1-பங்கு புஷ்பமும் போட்டு முன்போல் பிசைந்துவிட எப்போதும்நீங்காத நல்மணக்கமழும் வாசனையாகும்.

தாம்பூலத்திற்கு பரிமளக் கூட்டு.

ஜாதிக்காய், எலுமிச்சம்பழம், துளசி, வால்மிளகு, சுக்கு, ஏலக்காய், சித்திரத்தை, லவங்கப்பட்டை, பாக்கு, தாளிச்சபத்திரி இவைகளை வகைக்கு விராகனிடை 1, இவைகளைச் சேர்த்து பன்னீரிலரைத்து கடைசியில் கொஞ்சம் வினாம்பிசின் கூட்டி அரைத்து தேத்தாங்கொட்டை பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்தி தாம்பூலம் அருந்தும்போது மற்ற காலங்களிலும் வாயி லடக்கிவர வாயிலுள்ள துர்நாற்றம் நீங்கி நல்ல வாசனையுண்டாகும்.

தேகவஜீகரப் பூச்சு.

பாதம்பருப்பையும், பச்சை பயறையும் பன்னீர் வார்த் தரைத்து அதில் சம்பங்கி எண்ணெய்விட்டு மத்தித்து வேண்டுமான குங்குமப்பூவும், பச்சைக்கற்பூரமும் சேர்த்து சரீரத்தில் பூசி ஒரு நாழிகை கழித்து தேய்த்துருட்டிவிட்டு வெந்நீரில் முழுகிவர தேகம் மினு மினுப்பேறி வாசனையுண்டாகும்.

கத்தாழை வீச்சத்திற்கு வாசனை பரிமளம்

ஜடாமாஞ்சி, வாய்விளங்கம், கஸ்தூரிமஞ்சள், கசகசா, கார்போகஅரிசி, பச்சிலை, சந்தனம், செச்சிலிக்கிழங்கு, கோரைக் கிழங்கு இவைகளை சமபாக சூரணித்து ஸ்நானஞ் செய்யும்போது அச்சூரணத்தில் எந்தவாசனை தைலத்தையாவது வார்த்துப் பிசைந்து திரேகத்தில் பூசி ஸ்நானஞ் செய்துவர கத்தாழை நாற்றம் முதலிய துர்நாற்றம் நீங்கி திரேகம் வாசனையாயிருக்கும்.

பிஸ்மில்லா ஹிர்றஹுமா னிர்றஹீம்.

கண்டாவிழ்தபரணி.

—(❋)—

வியாதிகட்கு மூலிகைப் பிரயோகம்,

கொடிவேலி வேர்ப்பட்டையை அரைத்து ஒருகொட்டைப் பாக்களவு அரைக்காற்படி ஆவின் பாலிலாவது, வெள்ளாட்டு பாலிலாவது வியாதியின் வலிமைக்குத் தக்கதாய் ஒருமண்டலம் அரை மண்டலங்கொள்ள சுரம் வெட்டை அரையாப்பு, வாயு, குலைகட்டு, குலைப்பிடிப்பு, வெடிகுலை, மேனியிற் கரடுமுரடாய்க் கட்டுங்குலை, உள்மூலம் கர்ப்பதை அழுக்குச்சிரந்தி யோனியைத் தின்னுஞ்சிரந்தி, செஞ்சிரந்தி, கருஞ்சிரந்தி, அரிசிரந்தி, கருப்புவாயு தீரும், மேனி பொன்போலாகும். புளிதள்ளவும் பாலும் அன்னமுமாய் பத்தியங் கொள்ளவும்.

ஒருபடி ஆவின்பாலில் ஒருபலங் கொடிவேலிவேரை சப்பத் தட்டிப்போட்டு பாலைச் சிவக்கக்காய்ச்சி உறைக்குத்தி வைத்திருந்து மறுநாட் கடைந்து வெண்ணெய் எடுத்து அந்த வெண்ணெயையும் மோரையும் அன்னத்துடன் புசித்து அந்தமோரைத்தானே தாகத்துக்குக் குடிக்கவும். மூலமுளை வேரோடே அழுகிவிழுந்து விடும். இந்தப்படி மூன்றுமுறை செய்யவும். நோயாளனுடைய தேகஸ்திதிக்குத் தக்கபடி மேற்படி வேரின் அளவைக்குறைத்துக் கொள்ளவும். மேற்படி வேரை வெள்ளாட்டின் பாலிற்கொள்ள சிலவிஷம் விஷத்தாலுண்டாகும் வியாதிகள் தீரும்.

சஞ்சீவி மூலிகையென்ற நீலிவேர்ப்பட்டையை அரைத்துக் கொட்டைபாக்களவு ஆவின் பாலிலாவது, வெள்ளாட்டுப்பாலிலாவது கொள்ள விஷஜெந்துக்களின் கடிவிஷமும் நஞ்சுப்பொருள் விஷமும் சப்பான்வகைகளும் தீரும், நரைதிரை மாறும்.

ஷை வேருடன் மிளகு சித்தரத்தை சேர்த்துக் கஷாயஞ் செய்து மூன்றுநாள் கொள்ள எண்ணைச் சிக்கலாலுண்டாகும் நீர் தோஷம் சுரம் வெப்பு நெஞ்சுச்சளி நீங்கும். புளிதள்ளவும்.

ஷை இலையை அரைத்து கொட்டைப்பாக்களவு அரைக்காற் படி வெள்ளாட்டுப்பாலிற் மூன்றுநாள்கொடுக்க மஞ்சட்காமாலை தீரும். புளிதள்ளவும்.

ஷை இலையை அரைத்து சிரங்கிற் பூசிவைத்திருந்து மாலையில் ஸ்நானஞ் செய்துவர தீரும்.

மகாமூலிகையென்ற ஆகாசக்கருடன் கிழங்கை அரைத்துக் கொட்டைபாக்களவு ஆவின் பாலிற்கொள்ள நரைதிரைமாறும், மேனி பொன்போல் ஒளிவுண்டாகும், காலன் ஓடியொளிப்பான். சர்வ நோய்களும் நீங்காத விஷகடி நோய்களும் விஷமும் நீங்கும். புளிதள்ளிபாலும் அன்னமுமாப் ஆகாரங்கொள்ளவும்.

அப்பைக் கிழங்கு கொட்டைபாக் களவாய் ஆவின்பாலிற் கொள்ள மூலைக்குத்து கடிவிஷம் கரப்பான் வியாதிகள் தீரும். புளிபதார்த்தந் தள்ளவும்.

வராகி மூலமென்ற நிலப்பனங்கிழங்கை ஆவின்பாலிற் கொள்ள விந்துகட்டும், தாதுண்டாகும், ஆண்மைமீறும், தேக மிருகும், தேகம் பொன்போற் பிரகாசிக்கும், சகல வியாதியுந்தீரும். சித்தர் தரிசனமுண்டாகும்.

ஷை கிழங்கை மேனிச்சாற்றுள் அரைத்து நல்லெண்ணெயிற் காச்சி பல்வலிக்கும் பாகத்தில் தடவ பல்வலி நீங்கும். அதிலிருக்கும் புழுக்கள் சாகும்.

ஷை கிழங்கும் பூசிசக்கரைக்கிழங்கும் பூனைக்காலி, விதையும் சமன்றாக்கி ஆவின் பாலிற்கொள்ள கோசம் பூரித்து விம்மும்.

பங்கம்பாலையென்ற ஆடுதீண்டா மூலிகைவேரை அரைத்துக் கொட்டைப்பாக்களவு வெள்ளாட்டுப்பாலிற் கலக்கிக்கொடுக்க சகல விஷங்களும் புண், பிளவைசிரங்கு, வங்கு, பலகரப்பான், குஷ்டம் தீரும். சித்தர் தரிசனமுண்டாகும்.

ஷை மூலிகை சமூலத்தையும் கருங்குருவை நெல்லுடன் அவித்து அவல் இடித்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி அவல் வீதம் ஒரு மண்டலங்கொள்ள சிரங்கு, சொரிகுஷ்டம், தழுதணைவங்கு, வண்டுகடி, நாணைகடி, செய்யான்கடி, பூரான்கடி விஷங்களும், பதகிரி வெள்ளைப் புள்ளி கரப்பானும் தீரும். பாலும் மிளகுந்தேய்த்து ஸ்நானஞ்செய்து வரவும். மூன்று மாதம்வரை நல்லெண்ணைப் புணர்ச்சியை நீக்கவும்.

ஷை மூலிகை சமூலம்பிடித்துப் பிழிந்தசாறு வெள்ளாட்டுப் பால் வெள்ளாட்டு நெய் வகைக்குப்படி 1, ஒன்றாய்க் கலந்து அதில் கால் பலம் மிளகு அரைத்துப் போட்டுக் காய்ச்சி தேய்த்து ஸ்நானம் செய்து வரவும். ஷை வியாதிகள் தீரும். வேப்பம் வித்து எண்ணையில் ஷை மூலிகைசமூலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ் செய்துவர ஷை வியாதிகள் தீரும்.

தாமரைக் கிழங்கை ஆவின்பாலிற்கொள்ள மேகம், வெட்டை கிரிச்சிரம் தீரும். தேககாந்தியும், கண்ணொளிவும், குளிர்ச்சியும் உண்டாகும்.

ஷை மணிப் பருப்பை பொடித்து மூலைப்பாலிற் கலந்து கொடுக்க விக்கல், காவரக்ஷி தீரும்.

ஷை கிழங்கை ஆவின்பால் விட்டரைத்து நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ் செய்துவர கண்ணுக்குக் குளிர்ச்சியும் ஒளிவுமுண்டாகும்.

குண்டலாதி மூலமென்ற சங்கம் வேரை பாலிற்கொள்ள வண்டுகடி, குஷ்டம், தழுதணை, சொரி, தேமல், கிரந்தி, வெட்டை, குலை, செக்கரப்பான், கருங்கருப்பான், சிறுசிரங்கு, பெருஞ் சிரங்கு தீரும். தேககாந்தியும் உண்டாகும்.

ஷை வேர்ப்பட்டை பலம் ஒன்று, மிளகு பலம் அரை, ஆவின்பால் விட்டரைத்து உடம்பிற் தேய்த்து ஸ்நானஞ் செய்துவர ஷை வியாதிகள் தீரும்.

ஷை சேர்ப்பட்டைத்தூள் பலம் ஒன்று, மிளகுத்தூள் பலம் அரை, சர்க்கரை பலம் ஒன்று இவைகளைக் கூட்டித் திரிகடிப்பிரமாணஞ் சாப்பிட்டுவர ஷை வியாதிகள் தீரும்.

நன்னாரி வேரை அரைத்துக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் ஆவின்பாலில் இருபது நாள் கொள்ள மூலக்கொதிப்பு, அஸ்தி காங்கை, மேகச்சூடு, மேகவெட்டை, நீர்கடுப்பு, நீர் இத்துவிழுதல், மூத்திரக் கிரிச்சரம் பதினெட்டும், சில்லரை விஷஜெந்துக்களின் கடி விஷங்கள் உள்வாட்சியினுற் காணும் இருமல், தாபசோபம் நீங்கும். இந்த மூலிகையை நாள்படச் சாப்பிட்டு வந்தால் நரைதிரை மாறும்.

ஷை வேர் சீரகம் மல்லி சமன் சூரணித்து சர்க்கரை கலந்து சாப்பிட்டுவர ஷை வியாதிகள் தீரும்.

அமுதவல்லி ஆகாசக் கருடனென்ற பொற்சீந்தில் வேரை அரைத்துக் கொட்டைப் பாக்களவாய் ஆவின்பாலிற் சாப்பிட்டு வர சகல மேகங்களும், சகல விஷகடிகளும், ஜுரம், தோஷம், கபாலச்சூடு, வெட்டை நீங்கும். இந்த மூலத்தை நாள்படச் சாப்பிட்டு வந்தால் அவமிருத்து விலகும். தேகம் பொன் போலாகும்.

ஷை தண்டின்மாவும், வில்வப்பூவும், கோரோஜனையும் சமன் கலந்து திரிகடிப் பிரமாணம் எருமை மோரில் கொண்டுவர மேகம், நீரிழிவு நீங்கும்.

மாவிழி யென்ற பூமி சர்க்கரைக் கிழங்கைப் பாலிற் கொள்ள பாண்டு விஷபாகவீக்கம், மூத்திரக்கிரிச்சரம், மேகம், வெட்டை தீரும். காமம் மிகும், நாதங்கட்டும், நாவில் அமுதமூறும்.

ஷை கிழங்கை பாலில் அவித்துக் காயவைத்து தூள்செய்து உளுந்து வறுத்துப் பொடித்தமாவும், எள்ளுப் பொரியும் சமன் கலந்து திரிகடிப் பிரமாணஞ் சாப்பிட்டுவர தேகபலமுண்டாகும். நாதங்கட்டும்.

பனைக்கோவை, பெருங்கோவை யென்ற குட்டை மூலத்தை பாவித்கொள்ள நரைதிரை மாறும்.

நல்லெண்ணெய் ஷை பழச்சாறு வகைக்குப் படிகால், மிளகு கருஞ்சீரகம் சித்தரத்தை சாம்பிராணி வகைக்கு விராகனிடை ஒன்று, பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சித் தலைமுழுகிவர பீனிசம் தீரும், செம்பட்டை மயிர் கருக்கும்.

மூத்தகாசு யென்ற கோரைக் கிழங்கை பாலித் கொள்ள கற்றுழை நாற்றம், பித்தத்தா லுண்டாகும் வீக்கம், சத்தி, ஜுரம், நாவரட்சி, தாபசோபம் நீங்கும்.

ஷை கிழங்கு மல்லி பேய்புடல் சுக்குசித்தாத்தை ஓர் அளவாய் சிதைத்து கஷாயஞ் செய்து சாப்பிட பித்தஜுரம் நீங்கும்.

பழுபாகல் மூலத்தை பாலித் கொள்ள பல விஷங்கள் குஷ்டம் தழுதணை தொழுதணை கிருமி நீங்கும். அக்கிழங்கை நாள்பட பத்தியமாய்ச் சாப்பிட்டு வந்தால் தேகம் பலக்கும்.

தலைகுடி யென்றதலை சுருளி மூலத்தைப் பாலித் கொள்ள அரவுகடி விஷம் சில்லரை விஷங்கள் விஷகரப்பான் குஷ்டங்குலை சொறி சிரங்கு தீரும். தேகபல முண்டாகும். விஷம் அமுத மாகும்.

திசைகருடனென்ற கட்டுக் கொடி மூலத்தைப் பாலித் கொள்ள விஷம் குஷ்டம் தீரும், விந்து கட்டும். உடலிறுகும், ஆண்மைப்பல முண்டாகும், பேதிக்கட்டும். ஷை இலை தண்ணீரைக் கட்டும், நீரழிவைப் போக்கும்.

மலைதாங்கி யென்ற பொன் முசுட்டை மூலத்தைப் பாலித் கொள்ள விந்து கட்டும், குஷ்டம் வாயுகடி கடிவிஷம் மலக்கழிச்சல் நீங்கும். ஷை இலை தண்ணீரைக் கட்டும், அதிக மூத்திரத்தைச் சுருக்கும்.

இந்த இலை ஷை கட்டுக்கொடி இலை, ஆவாரைக் கொழுந்து இம்மூன்றையும் அரைத்துக்கொட்டைப் பாக்களவாய்ச் சாப்பிட்டு வர நீரிழிவு பெருநோய் அடிக்கடி இறங்குவதைச் சுருக்கும். ஷை இலையைத் தண்ணீரில் ஊரவைத்து அந்தத் தண்ணீரைச் சாப்பிட்டுவர அதிகதாகம் நீங்கும். காய்க் கொட்டான் மூலத்தை பாலித் கொள்ள வண்டுகடி செய்தி பூச்சிக்கடி மற்ற சில்லரைவிஷ

ஜெர்தக்களின் கடிவிஷம், பெருவிஷகடி, ரெக்தி, பலவகை, கரப்பான், வங்கு, சொரி, கருங்குஷ்டம், புண், புரை, வீக்கம் தீரும்.

பிராய் மூலத்தைப் பாலித் கொள்ள பதினெட்டு வகை வண்டு கடி, வெண்குஷ்டம், கருங்குஷ்டம், விரியன்கடி, விஷத்தா லுண்டாகும் குஷ்டம் நீங்கும், சிராய்போல் உடலில் எழும்பும் கா கரப்பு நீங்கும்.

ஷை மரத்தின் பாலை பச்சைக்கடலை மாவில் பிரட்டிக் கடலை பிரமாணம் உருண்டை செய்து சாப்பிட்டுவர ஈரதம் கட்டும்.

ஆயில் மூலத்தைப் பாலித் கொள்ள அண்டவாதமுலை அரை யாப்பு ரெக்தி பலகரப்பான் குஷ்டம் சில விஷம் தீரும்.

வெள்ளெருக்கின் மூலத்தைப் பாலித் கொள்ள ரெக்தி குஷ்டம் விஷக்கன் வண்டுகடி செய்யான்கடி அரணபுள்ளி வண்டுகடி மரவெட்டைகடி குறைநோய் தீரும்.

வேலிப்பருத்தி சமூலத்தைப் பாலித் கொள்ள கடிவிஷம் கரப்பான் வெட்டை பலவகை ரெக்திமுலை மருந்தீடு கைகால் பிடிப்பு வாய்வு தீரும்.

வெள்ளருகு சமூலத்தைப் பாலித் கொள்ள சில்லரை விஷம் சிரங்கு சொரி குஷ்டம் ரெக்தி வெட்டை வெடிமுலை காமாலை விஷ கரப்பான் வீக்கம் தீரும்.

ஷை மூலிகை சமூலத்தையும் தண்ணீரில் வேகவைத்து வெப்பத்துடன் வாயில் விட்டுக் கொப்பளிக்க பல்வலி தீரும்.

சிவன் வேம்பு மூலத்தை பாலித் கொள்ள தீராத சிலவிஷம் காலித்காலும் பிளப்பு, குஷ்டம், கரப்பான் வகைகள் வாய்வு தீரும்.

ஷை மூலிகை சமூலத்தை உலர்த்திச் சூரணஞ் செய்து சர்க்கரைக் கலந்து திரிகடிப் பிரமாணம் மண்டலம் கொள்ள குஷ்டம்

பதினெட்டும் பாதத்திலுண்டாகும் விரிவு மேல்தடிப்பு படர்தாமரை அரிப்பு தேகத்தில் முள்ளுகொண்டு குத்துவதுபோல் குத்துதல் திமிர் தலைநோய் தீரும்.

அறுபது வருஷஞ்சென்ற வேம்பின் வேர்பட்டை கொழுந்து பூ பிஞ்சு இவைகளை ஓர் நிறைபாய் உலர்த்தி யிடித்து திரிகடிப் பிரமாணம் ஒருமண்டலம் ஆவின்பால் நெய் தேனிற்கொள்ள சகல நோய்களும் தீரும், தேகமிறுகும், நரைதிரை மாறும்.

ஷை நூலில் வாழைப்பழத்தை புதைத்து நாற்பதாம் நாள் எடுக்க காயாயிருக்கும். அதைத்தின்ன தேகம் கற்றூணாகும், கிழவன் வாலிபனாவான், தேகம் ஒருபோதும் தளராது.

செக்கத்தாரி (கருஞ்சூரை செஞ்சூரை) மூலத்தை பாலிற் கொள்ள கரப்பான் கிரந்தி செவ்வாப்புக்கட்டி செங்கரப்பான் கொல்லிக்கரப்பான் முதலான கரப்பான்களும் பலவிஷங்களுந் தீரும் ஷை பட்டையை அரைத்து உடம்பிற்பூச ஷை வியாதிகள் தீரும்.

சித்தாமணக் கிலைச்சாறு வேப்பெண்ணெய்சமன் கலந்துபச மாய்க்காய்ச்சி வடித்து ஒருமண்டலம் புளிதள்ளிச் சாப்பிட கருங் குஷ்டம், வெண்குஷ்டம், சொரிக்குஷ்டம், கிரந்தி, தழுதணை குறைநோய், பெருவியாதி, திமிர், கிரந்திப்புண் தீரும். ஆமணக் கெண்ணெய் பல ஔஷதங்களுக்கு ஆவதுமன்றி உடலிலுள்ள வெப்பையும், மூலச்சூட்டையும் நீக்கி உடலை வளர்க்கும். ஷை யெண்ணெய் கற்றாழைச்சோற்றின் நீர், ஈருள்ளிச்சாறு, எலுமிச் சம்பழச்சாறு வகைக்கு படி மாகாணி, ஒன்றாய்க்கலந்து அதில் ஒரு விராகனிடை வெந்தியத்தைப் பொடித்துப்போட்டு சாப்பிட பிரயோஜனமாகும் மலக்கட்டுந் தீரும்.

ஷை யெண்ணெயில் கதலிவாழைப்பழம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், ஏலம், கிராம்பு ஜாதிக்காய் ஜாபத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, கற்கண்டு இவைகளைப் பொடித்துப்போட்டு ரவியில் வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குக் கொடுத்துவர கணைசூரி, மாந்தம், கரப்பான் தீரும், மேனி பருக்கும், பளபளப்புண்டாகும்.

மூக்கரைச்சாரணைவேரை ஆவின் பாலிற்கொள்ள ஒரு மண்டலத்தில் நரைதிரை மாறும், உடலிறுகும், பகலில் நக்ஷத்திரம் கண்ணுக்குத் தோன்றும், குன்மம் எட்டுந்தீரும்.

நிலவாகைச் சமூலத்தை இடித்து தூள்செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப் பிரமாணம் ஆவின்நெய்யிற்கொள்ள உடம்புபூரிக்கும், தேனிற்கொள்ள உடம்பு வற்றும், சிற்றாமணக்கெண்ணெயிற்கொள்ள எலிகடி விஷம் சில்லறை விஷகடியும், ஏப்பமும், வெந்நீரிற்கொள்ள கிரிமியும், பசுவின் மோரிற்கொள்ள செரியாமையும், எருமைமோரில் எலிக்கடி விஷமும், எருமைச்சாணிப்பாலில் பாண்டும், எருமைப்பாலில் பெண்கள் மசக்கையும் தீரும்.

பாகலிலைச்சாற்றில்கொள்ள உடலில் தடிக்கும், செய்யான் விஷமும் மேனிச்சாற்றில் தேள்விஷமும் ஆலம்பழுப்புச் சாற்றில் பெருச்சாளி கடிவிஷமும், வேம்பாடம்பட்டைச் சாற்றில் செவ்வட்டைகடியும், செம்மறியாட்டு நீரில் அரணைகடியும், விழிச்சாற்றில் விரியன்கடியும், தேசிபழச்சாற்றில் சர்வவிஷமும் பாகலிலைச்சாற்றில் கட்டுவக்காலி விஷமும் அவுரியிலைச்சாற்றில் அரணை, வண்டுகடி, புடையன், குத்து, தவளை, குரங்கு, நாய், பூனை, பேய்நாய், பேய்நரி, இவைகளின் விஷமும், கையாந்தகரை கண்டங்கத்திரிச் சாற்றில் ஈளை க்ஷயமும், கொடிக்கள்ளிச்சாற்றில் மாந்தஜ்வரமும், குளிர்ஜ்வரமும், நல்லெண்ணெயில் விக்கலும், வெள்ளாட்டு நீரில் குஷ்டம், சோகை காமாலையும், பசுவின் நீரில்கொள்ள சோதி, சிறங்கு உளைவு; பெருவயிறு, மகோதரம் நீராமையும் நீங்கும். புளி புகையிலை தள்ளவும்.

வெப்பாலை மூலத்தை பாலிற்கொள்ள குஷ்டம், சிலவிஷம் சரப்பான் வண்டுகடி முதலிய வியாதிகள் தீரும்.

குளப்பாலை மூலத்தை பாலிற்கொள்ள எலிகடி விஷம் விஷ சரப்பான், உடல்சரப்பு, கால்சரப்பு, சர்வ விஷக்கடி வீக்கம் பருபடுவன் தீரும்.

முத்தருகஞ்செவி மூலத்தைப் பாலிற் கொள்ள முகவசிய முண்டாம்; சிரியமூலி பருத்துவிம்மும், கரப்பான் சிலவிஷம் சிலந்தி பருபிளவை புண் தீரும்.

ஆதளை மூலத்தை ஆவின் பாலிற் கொள்ள 18-வகை எலி கடி விஷம் நீங்கும், பாலைக்கொப்பளிக்க வாய்வேக்காடு வெட்டை தீரும்.

பூவரசமூலத்தை பாலிற்கொள்ள சொரி சிரங்கு, கரப்பான், விஷகரப்பான் வீக்கம் சிலவிஷம் தீரும்.

அறுகுமூலத்தைப் பாலிற்கொள்ள சகல விஷமும் தீரும், தேகபலமுண்டாகும், நரைதிரை மாறும், நரம்புகள் இறுகும், மூலச்சூடு வெட்டை நீர்க்கடுப்பு நீங்கும்.

ஷை மூலத்துடன் மிளகு, சீரகம், அதிமதுரம், மாதளம்பூ இவைகளைக் கஷாயஞ்செய்து அதில் ஆவின்வெண்ணெய்ப் போட்டுக் குடிக்க, ஷை வியாதிகள் தீரும்

அழுக்கிராக்கிழங்கை பாலிற்கொள்ள விந்துகட்டும்; மேனி காந்தியாகும்; தேகத்திலுள்ள துர்நீர்; கபம்குலை, கரப்பான், பாண்டு வெம்பு, வெட்டை; வீக்கம்; கட்டி; பித்தக் கிறுகிறுப்பு நீங்கும்.

ஷை வேரை பாலில் அவித்துச் சுத்தி செய்து இடித்த தூள் விராகனிடை 6½-இலவங்கம் விராகனிடை 1-சிறுநாகப்பூ விராகனிடை 2-மிளகு விராகனிடை 8-திப்பிலி விராகனிடை 11-இவைகளைச் சூரணித்து ஒன்றுப்கலந்து சரிஎடை சர்க்கரைச்சேர்த்துத் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர க்ஷயம், இரும்பல், புகைச்சல், அரோசிகம், ஏதிருஷ்டம் தீரும்.

மான்கிழங்கை பாலிற்கொள்ள மூலம், கரப்பான், புண், சிலந்தி, வண்டுகடி, தாதுநஷ்டம் தீரும்.

ஷை மரவை வாட்டிப்பிழிந்து சிசுக்களுக்குக் கொடுக்க நெஞ்சிற் கபக்கட்டு, கரப்பான், செங்கிரந்தி, கருங்கிரந்தி தீரும்.

சரக்கொன்றை மூலத்தைப் பாவித்கொள்ள வண்டுகடி, குஷ்டம், சொரி, தேமல் விஷநீர், வாதருணை, வாதகரப்பான் தீரும்.

ஷை பூவையும், கொழுந்தையும் அரைத்து பாவித்கொள்ள பிரமியம், வெட்டை, காமாலை, பாண்டு, பித்தம், விஷபாக வீக்கம் தீரும்.

ஷை பூவை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து உடம்பிற் தேய்த்துக் குளித்துவர சொரி, கரப்பான், தேமல் பற்றுத்தீரும்.

ஆவரைப் பஞ்சாங்கத்தை பாலில் 1-மண்டலம் கொள்ள நீரழிவு, பிரமேகம், ஆண்குறி எறிவு தீரும்.

ஷை பஞ்சாங்கத்தையும் வெந்தயத்தையும் சிவக்க வதக்கிக் கஷாயஞ் செய்து அதில் கோரோசனையை உரைத்துக் கொடுக்க இரத்தக் கடுப்புத் தீரும்.

ஷை வேர்ப்பட்டை கல்வத்திப்பட்டை மருதம்பட்டை சரக்கொன்றைப்பட்டை இவைகளைக் கஷாயஞ் செய்து அதில் கல் மதத்தை உரைத்துச் சாப்பிட நீரழிவு தீரும்.

காட்டாமணக்கு மூலத்தைப் பாவித்கொள்ள குஷ்டம், பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், வயிற்றுக்கட்டி, பெருவயிறு தீரும். ஷை முத்தப்பருப்பைப் பாவித்கொடுக்க விரேசன மாகும். கொடிகள்ளி மூலத்தைப் பாவித்கொள்ள சோகை, பாண்டு விஷபாகம் வீக்கம், கெண்டை, மகோதரம், வயிற்றுச் சூலை, கரப்பான், எலிகடி விஷம் தீரும். ஷை இளங்கொழுந்தைப் பிட்டவித்துப் பிழிந்தசார் அரைக்கால்படியில் கொஞ்ச மிளகுதூள் போட்டுக்கொடுக்க ஷை வியாதிகள் தீரும். பத்தியம் மோர் அன்னம் சாப்பிடவும், விரோசனமாகும்.

மிளகு ஷை கொழுந்து வெள்ளெருக்கம்பூ இம்மூன்றையும் வகைக்கு ஒரு விராகனிடை வீதம் சிதைத்துக்கொடுக்க குளிர் ஜூரம், சாம் தீரும். மேற்படி மருந்துகளுடன் ஒரு களர்ச்சிப் பருப்புச் சேர்த்துக்கொடுக்க அண்டவாய்வு தீரும்.

மாவிலிங்க மூலத்தைப் பாவித்துக்கொள்ள ஜுரம், வெட்டை, சூலை சரோணிதக்கட்டு, மந்தவாய்வு, குன்மம், அரையாப்பு, கண்டமாலை, புண்புரைகள், பிளவை, வீக்கம், வாதம், ஜன்னி, சூச்சை, கல்லடைப்பு, விஷகடி, நீங்கும்.

ஷை பட்டை, மூங்கிலிலை, சித்தரத்தை, சுக்கு, அரிசித் திப்பிலி, சதகுப்பை, கொடிவேலிவேர் இவைகளை ஓர் நிறையாய்ச் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு அரைக்கால்படியாய் வற்ற வைத்து வேளை ஒன்றுக்கு மாகாணிப்படி விதம் பனங்கருப்புக் கட்டி கூட்டி மூன்றுநாள் கொடுக்க பிரசவகாலத்தில் தடைப்பட்டிருக்கும் சூதகத்தை உடைத்துவிடும்.

உகாய் மூலத்தைப் பாவித்துக்கொள்ள பலவகை வாய்வுகள், சூலை வாதம், குன்மம், கழலை, கட்டி, கண்டமாலை, அரையாப்பு, பிளவை, துடைவாழை, விப்புருதி, வெட்டை, ஜன்னிதோஷம் தீரும். ஷை இலை கழச்சிப் பருப்புக்கு அண்டவாய்வு தீரும்.

புரசு மூலத்தைப் பாவித்துக்கொள்ள எலிவிஷம், குன்மம், வாயு, வாதம் நீங்கும்.

மேற்படி விரையை எருமைச்சாணிக்குள் புதைத்துக் காலையில் இரண்டு விரையை தோல்நீக்கி அரைத்து ஆவின்பாலில் கொடுக்க வயற்றிலுள்ள பெருங்கிருமிகள் விழும். அவைகளிலு அஞ்சு டாகும் வயிற்றுவலி நீங்கும்.

மேற்படி விரையை எலுமிச்சம்பழச்சாற்றில் உரைத்துப்போட பத்து நீங்கும்.

சடைத்தரட்டி மூலத்தைப் பாவித்துக்கொள்ள புடைசொற்தி, சூலை, அரையாப்பு, கண்டமாலை, கரப்பான், வாய்வு, சில்லரை விஷம் நீங்கும்.

மேற்படி இலைச்சாரும், நல்லெண்ணெயும் கலந்து வேளை ஒன்றுக்கு மாகாணிப்படி விதம் மூன்றுநாள் புளிதள்ளிச் சாப்பிட இரத்தவெட்டை தீரும்.

கடுக்காய் மூலத்தைப் பாலிற் கொள்ள கரப்பான், குஷ்டம் சிலவிஷம், சிரந்தி, வங்கு தீரும்.

பெருவகை மூலத்தைப் பாலிற் கொள்ள சூலைப்பிடிப்பு, வீக்கம், சில்லரை விஷம், சிரந்தி, கரப்பான் தீரும்.

உசில் மூலத்தை பாலிற் கொள்ள சிலவிஷங்கள், மேகப்புண் சிரந்தி, வண்டுகடி, குஷ்டம், கைகால் பிடிப்பு, சூலை தீரும்.

வக்கணத்தி மூலத்தைப் பாலிற் கொள்ள சிரந்தி, மேகம், கரப்பான், சில்விஷம், வண்டுகடி தீரும்.

அவிசமூலத்தைப் பாலிற் கொள்ள சகலவிஷம், சுவாச காசம், மந்தாரகாசம், வயிற்றுக் கிருமிகள், கரப்பான், சிரந்தி தீரும்.

செப்க்கோட்டான் மூலத்தைப் பாலிற் கொள்ள சகல விஷகடிகள், கரப்பான், சிரந்தி, மேகம், சூலைப்புண் தீரும்.

நவ்வல் மூலத்தைப் பாலிற் கொள்ள பெரும்பாடு, வெட்டை, மேகம், கழிச்சல், சிராணி தீரும். ஷை பழரசம் மேக நீரழிவைக் கேட்கும்.

அரச மூலத்தை பாலிற்கொண்டாலும் அந்த மரப்பட்டையை அரிசியுடன் இடித்து மாவு செய்து களிக்கிண்டி தின்றாலும் பெரும் பாடு தீரும்.

ஆலின் விழுதையும் ஷை விரையையும் பாலிற் கொள்ள பாலில்லாத பெண்களுக்குப் பாலுண்டாகும், வெட்டை, மேகம், உடல் எரிவு, கார்தல் தீரும்.

ஆலம் விரையையும், அரசன் விரையையும், பாலில் கொள்ள இரத்தம் கக்கல் நீங்கும்.

சந்தண மூலத்தைப் பாலிற் கொள்ள மேகம் பிரமியம் தீரும், அழகுண்டாகும். ஷை வேரைக் கஷாயஞ் செய்து கற்கண்டு போட்டு சாப்பிட ஷை வியாதிகள் நீங்கும்.

தேவதார மூலத்தைப் பாலிற் கொள்ள பீனிசம், பழைய சுரம், நீரேற்றம் தீரும்.

அசில் மூலத்தைப் பாலிற் கொள்ள வாந்தி, அரோசிகம், சுரம் தீரும், இதன் புகையால் ஷை வியாதிகள் நீங்கும்.

சிறுகொன்னை மூலத்தைப் பாலிற் கொள்ள கண்ணோய், உஷ்ணம், உள்மூலம் தீரும், தேகபலமும் அழகுமுண்டாகும்.

சரக்கொன்னை மூலத்தைப் பாலிற் கொள்ள ஆனைச்சொறி, இருமிப்புடை, அரிப்புப்புடை தீரும்.

மைக்கொன்னை மூலத்தைப் பாலிற் கொள்ள குடல்வாதம் சூலைமேகம் தீரும்.

பிரமிய சமூலத்தைப் பாலிற் கொள்ள பிரந்தி, சூலை, மேகம், வெட்டை, குஷ்டம், விக்கம், க்ஷயம் நீங்கும். பாடவல்லமை புண்டாகும் நரைதிரை மாறும்.

வல்லாரை சமூலத்தைப் பாலிற் கொள்ள மருந்தீடு ச[illegible] காசம், இருமல், சலி, கைகாலி அண்டாரும் ஊரல் [illegible] நெடுநாள் கொள்ள நரைதிரை மாறும்.

பொன்னுங்கண்ணி யென்ற பொடுப்பை சமூலத்[illegible] கொள்ள உடற்குளிரும், பகலில் நக்ஷத்திரங்கள் [illegible] தோன்றும்.

கீழ்க்காய்நெல்லி சமூலத்தை பாலிற் கொள்ள சோகை, காமாலை, பாண்டு, உடல்வெளுப்பு, வாதபித்தரோகம் நீங்கும் இரத்தம் மிகும் கண்குளிரும் காயசித்தியாம்.

கருக்குருவைக் காடியில் ஷை சமூலச் சூரணத்தை நாள்பட பத்தியமாய்ச் சாப்பிட்டு வந்தால் நரைதிரை நீங்கி வாலிப வயதுண்டாகும் உடலழியாது.

பொற்றலை கரிப்பான் சமூலத்தைப் பாலிற் கொள்ள இருமல் காசம், பாண்டு, சோகை, காமாலை கரப்பான் தீரும் ஷை மூலிகையை நாள்பட உண்டு வந்தால் நரைதிரை மாறும்.

ஷை சமூலம் அயக்கிட்டம், கடுக்காய், மிளகு சமனிடையாய் கஷாயஞ் செய்து சப்பிட பாண்டு, சோகை, காமாலை தீரும்.

செங்கழுநீர் கிழங்கைப் பாலிற் கொள்ள உடற்குளிரும், விந்துவும் நாள்படச் சாப்பிட்டால் தேகத்தில் நோயுண்டாகாது.

பற்பாடகச் சமூலத்தைப் பாலிற் கொள்ள வெட்டை, மேக எரிவு, காந்தல், அஸ்திகாங்கை, வாய்வு, பித்தம் தீரும்.

சதைபொட்டி இலையைப் பாலிற் கொள்ள ஷை வியாதிகள் தீரும், சிராசெங்கழுநீர் மூலத்துக்கும் ஷை வியாதிகள் தீரும்.

விஷ்ணுகரந்தை சமூலத்தைப் பாலிற் கொள்ள சுரம், மேகம், க்ஷயம், காயம், இருமல், ஈளை, விஷங்கள், வாதம், பித்தம் தீரும். கண்ணுக்கு ஒளிவு முண்டாகும்.

ஷை சமூலச் சாற்றில் சித்தரத்தையை சேர்த்துக் கலக்கிச் சடவைத்து சாப்பிட மேற்படி வியாதிகள் தீரும்.

கண்ணீர் விட்டான் கிழங்கைப் பாலிற் கொள்ள விந்துவும், ...பிரமியம், நீர்எரிவு, காந்தல், கரப்பான், வரட்சி தீரும்.

...த்தன் வேரும் அதின் வித்தும் வகைக்கு விராகனிடை 1 ... அரைத்து ஆவின் பாலிற் கலக்கி காலையில் மூன்றுநாள் ...விகடி விஷமும், பேய்நாய், பேய்நரி கடிவிஷமும் குளிர் ...முர் தீரும்.

கற்றாழைச் சோறும் ஆவின் பாலும் கலந்து உண்ண விந்துக் கட்டும், சொறி, குஷ்டம், சோகை காமாலை தீரும். மூலச்சூடு தணியும் கண்குளிரும்.

மருத மூலத்தைப் பாலிற் கொள்ள நீரழிவு, பிரமேகம், மயக்கம், தாகம், சுரதாபம், குஷ்டம், கிருமி, வயிற்றுவலி, வரட்டிருமல் நீங்கும்.

வேங்கை மூலத்தை பாலிற் கொள்ள குத்திருமல், இருமல், ஈளை, உளமாந்தை, புண், சீழ்வடிதல், மலக்கட்டு நீங்கும் கண்ணுக்கு ஒளிவுண்டாகும்.

வன்னிமா மூலத்தை பாலிற் கொள்ள வாதம், ஜன்னிதோஷம், நாய்க்கடிவிஷம், பேயம், சொறி நீங்கும்.

இருவாட்சி மூலத்தைப் பாவித்கொள்ள கண்ணுக்கு ஒளிவும் தேகத்திற்கு அழகுமுண்டாகும். வலி, மூர்ச்சை தீரும்.

காட்டாத்தி மூலத்தைப் பாவித்கொள்ள அதிசாரம், மந்தம், காசம், விஷம் தீரும்.

பெருங்குமிழ் மூலத்தைப் பாவித்கொள்ள மேகஎரிவு, சக்கிலக்கடுப்பு, பித்தஜுரம், வாதஜுரம், திரிதோஷம் நீங்கும்.

கடலிரஞ்சி மூலத்தைப் பாவித்கொள்ள மதுமேகம், மேகவாய்வு, மேகவாதநீர், பித்தநீர், கபநீர், தொந்தநீர், மேகஜுரம், பேதி, சிதகடுப்பு, பிரமேகம் தீரும்.

பூதவிருக்ஷ மூலத்தைப் பாவித்கொள்ள பலவிஷகடிகள் வாதரோகங்கள், ஐன்னி தீரும்.

வாகை மூலத்தைப் பாவித்கொள்ள பெருவிஷம், சிறுவிஷகடி, அனல், ரணம், வாதவரட்சி, தாகஜுரம், நாக்கு அச்சரம் தீரும்.

வருவாலை மூலத்தைப் பாவித்கொள்ள ரணம், ஜுரம், வாய்வு கிருமி, கபம் தீரும்.

ஷெடி மூலத்தைப் பாவித்கொள்ள நீர்கடுப்பு, எரிவு, வெள்விழுதல், மேகம் தீரும், விக்னுறும்.

வினாமூலத்தைப் பாவித்கொள்ள காசசுவாசம், அரோசிபம், தாகம், பித்தம் நீங்கும்.

கருநெல்லி மூலத்தைப் பாவித்கொள்ள ஐன்னி, வாதம், தயக்கம் தேகக்கடுப்புத் தீரும். நாட்படக்கொள்ள காயசித்தியம்.

மலைவேம்பின் மூலத்தைப் பாவித்கொள்ள மலட்டுக்கிருமி, ரத்தகுன்மம், உடலில் ஓடிவோடிக் குத்துகின்ற வாய்வு தீரும்.

சர்க்கரைவேம்பின் மூலத்தைப் பாவித்கொள்ள காயசித்தியுண்டாம். சக்கிலைசோணித சித்தியுண்டாம் கபரோகம் நீங்கும்.

கோங்கிலவின் பூவைப் பாவித்கொள்ள நரைதிரைமாறும். கோடிபவிபாதிலன் தீரும். மேனி பொன்போலாகும்.

நெல்லிக்காயைப் பாவித்கொள்ள பித்தம், அனல், கபம், பீனிசம், வாய்நீரூறல், வாந்தி, மயக்கம், வெட்டைப்பிரமேகம், மலக்கட்டு நீங்கும். சாட்படக்கொண்டால் நரைதிரை மாறும்.

மேற்படி இலையை காடிவிட்டிடித்துப் பிழிந்தசாறு அரைக் கால்படிகொள்ள நன்றுப்பிரயோசனமாகும். பித்தநீர் கீழ்நோக்கும்.

எட்டிவித்தைப் பாவித்கொள்ள தேள், நட்டுவாக்காலி விஷமும், மற்ற விஷங்களும் தீரும். குஷ்டம், கைசருப்பு, வாதம், தாருகஷ்டம் நீங்கும், பித்தம் அதிகரிக்கும். சிலந்தி இரத்தக்கட்டி நீர்கட்டி புண்புடைகளில் மேற்படிவித்தை அரைத்துபூச தீரும்.

கடம்பு விரையைப் பாவித்கொள்ள விஷகடிநோய். குஷ்டம், இருமல், இளைப்பு, எலிகடிவிஷம். சிரசிலுள்ள நீர்வாதம் தீரும்.

மேற்படி விரையை வெந்நீரில் அரைத்துக்கொடுக்க மலஜல அடைப்பு வயிற்றுப்பொருமல் நீங்கும்.

அரசம்வித்தைப் பாவித்கொள்ள மேகம், நீர்கடுப்பு தீரும். …ண்களுக்குக் கர்ப்பமுண்டாகும்.

… அத்திவிரையைப் பாவித்கொள்ள நீர்கடுப்பு மூத்திரகிருச்சரம் …மபுருக்கி, தசையுருக்கி, மூலக்கொதிப்பு, விந்திலுள்ளதோஷம் ரத்த பித்தகாசம் நீங்கும்.

கல்லத்திவித்தைப் பாவித்கொள்ள மேகம், வெட்டை, விந்திலுள்ள தோஷம் நீங்கும்.

தேத்தாவிதையைப் பாவித்கொள்ள பித்தகாசம், க்ஷயம், சளை இருமல், மேகம், பிரமியம், உந்திப்புண், கிருச்சரம், கண்ணெரிவு, தேகக்கடுப்பு நீங்கும். தீமணமுண்டாம்.

நத்தைச்சூரி வித்தைப் பாவித்கொள்ள விந்துகட்டிடும் தேக பலமுண்டாகும்.

மாங்கொட்டைப் பருப்பை பாவித்கொள்ள சீதம். ரத்தக் கடுப்பு, மூலக்கொதிப்புத் தீரும்.

ஷை பருப்பு கருவேப்பிலை கண்டைவத்தல் இவைகளைப் பொடித்து பசுவின் வெண்ணெயிலாவது தயிரிலாவது கொள்ள ஷை வியாதிகள் தீரும்.

புளியவித்தின் மேல்தோலைப் பாவித்கொள்ள சக்கிலமேகம் இதிசாரம் உக்திப்புண் நீர்க்கடுப்பு வெட்டை தீரும்.

மிழவித்தை பாவித் கொள்ள தாதுவிர்த்தி யுண்டாம். வெப்பு விஷம் மலக்கட்டு நீங்கும்.

தில்லைவித்தைப் பாவித்கொள்ள சிறுவிஷம் பெருவிஷம் திமிர்வாய்வு கபம் குஷ்டம் தீரும்.

ஆளிவித்தைப் பாவித்கொள்ள வீக்கம் வாந்தி வலி வாய்வு நரம்புக்குத்தல் அழலை அரோசியம் ஒக்காளம் விரைவாதம் நீங்கும். ஷை விரையை முலைப்பால் விட்டரைத்து வெண்ணெயில் மத்தித்து சிலந்தி வீக்கத்தில் பூச வற்றும்.

முருங்கைவித்தைப் பாவித்கொள்ள விந்துகட்டும்.

பூனைக்காலி வித்தைப் பாவித்கொள்ள விந்துகட்டும், ரத்த கழிச்சல், கரப்பான் தீரும்.

உருத்திராக்ஷத்தை முலைப் பாவித்கொள்ள தாகம் திரி தோஷம் விக்கல் பித்தம் தீரும்.

மாதுளம் வித்தைப் பாவித்கொள்ள மேகக்கடுப்பு சுக்கில தோஷம் நீங்கும், விந்துகட்டும்.

கொட்டை முந்திரிப்பருப்பை பாவித்கொள்ள இந்திரிய புஷ்டி யுண்டாம். ஷை பருப்பு பாதம்பருப்பு இருப்பவல் 'இம் மூன்றையும் சமமாய் பால்விட்டரைத்துக் கற்கண்டு சீனி செய் தேன்விட்டு லேகியம் செய்து சாப்பிட்டுவர விந்தூறும், போகம் மிகும்.

பாதம்பருப்பை பாவித்கொள்ள போகம் மிகும். ஷை தைலத்தால் கண்படலம் தீரும்.

கழல்காய்வித்துப் பருப்பை பாவித்கொள்ள அண்டவாதம் பக்கசூலை குன்மவாய்வு தீரும். ஷ பருப்பும் தேங்காயுந்தின்ன மேற்படி வியாதிகள் தீரும். மேற்படி பருப்பும் வெள்ளுகாயிலையும் அரைத்துத்தின்ன மேற்படி வியாதிகள் தீரும். மேற்படி பருப்பை முட்டையில் பொரித்துத் தின்ன மேற்படி வியாதிகள் தீரும்.

நெருஞ்சிக்காயைப் பாவித்கொள்ள வெட்டை எரும்புருக்கி நீர்கட்டு சதையடைப்பு நீர்சுருக்கு நீங்கும்.

சவ்வரிசியைப் பாவித்கொள்ள அஸ்திமேகம் சீழ்மேகம் ரத்தமேகம் தீரும். தாது விர்த்தியாகும்.

மூங்கில்வித்தை பாவித்கொள்ள ரத்தபித்தம் ஜுரம் கண் னோய் தீரும்.

திப்பிலி அரிசியைப் பாவித்கொள்ள சிலேத்துமம் கபம் வயிறு உப்புசம் மேகம் வாதஜுரம் கபஜுரம் தீரும். தாது விர்த்தியுண்டாகும்.

சாரப்பருப்பு லாலாமிஸ்ரி இவைகளை தனித்தனி பாவித் கொள்ள விந்துகட்டும், வெள்ளைவிழுதல் நீரடைப்பு நீங்கும்.

அத்திவிரையை பாவித்கொள்ள கைகாலிற் படருகிற கருமேகம் குஷ்டம் வெப்பு அகலும்.

நீர்முள்ளிவித்தைப் பாவித்கொள்ள மேகம் அதிசாரம் நீர் வீக்கம் இளைப்பு இருமல் தீரும். விந்துூறும், ரத்தவிருத்தியாகும்

வைத்திய சுருக்கம் முற்றிற்று.

ஜவாஹிருல் பவாயித் முற்றுப்பெற்றது.

67925

எங்களது சொந்த பிரசுரங்களுள் சில:—

நஸீஹத்துல் ஹாதிது வபத்ஹுல் மஜீது ரூ.	6	4	0
நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம் ...	6	4	0
சீறாப்புராணம் பாட்டு	3	12	0
சீறாப்புராணம் மூலமும் உரையும் முதற்பாகம்	5	0	0
மஜ்மூஅ முஃஜிஸாதே நபவில் ...	1	14	0
சீறத்துல் பாறூக்	2	8	0
பத்ஹுல் மிஸர்	2	8	0
பைதுல் முகத்திஸின் யுத்த சரித்திரம்	2	8	0
தர்க்குல் ஜன்னு	3	0	0
தன்பீஹுல் ஃகாபிலீன்	1	8	0
பத்ஹுர் ரஹ்மான் பில்பிக்ஹின் நுஃமான்	2	0	0
மஜ்மூஅ சூறத்துல் குர்ஆன் (முக்கியமான 40 சூராக்கள் தமிழிலும் அரபியிலும்)	2	8	0
மின்ஹாஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமதி மின்ஹாஜில் ஆபிதீன் ...	2	8	0
மிப்தாஹுஸ்ஸலாஹ் பீ பியானின்னிகாஹ்	3	0	0
மிப்தாஹுல் ஃபுதூஹாதி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ் ஸுல்தானி ...	1	14	0
நூருல் முஃமினீன் 1 முதல் 4-வது பாகம்	4	6	0
ஷை 5-வது பாகம் முதல் 8-வது பாகம்	4	6	0
ஷை 9-வது பாகம் முதல் 12-வது பாகம்	4	6	0
ஷை 1 முதல் 12 பாகம் வரை ...	11	4	0
கதீஜா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	4	0
பாத்திமா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	4	0
ஆயிஷா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	9	0
ஷை 3 நாயகிகளின் சரித்திரங்கள் சேர்ந்தது	3	12	0

கிடைக்குமிடம்:—

ஹாஜீ M. A. ஷாகுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 70, ஜானிரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

பிரசுராலயம்:—

194, [illegible] தெரு, [illegible] 11. [illegible]